310

ஸ்ரீ:

மாறனலங்காரம்

மூலமும் உரையும்.

[இரண்டாம்பதிப்பு.]

இவை

மதுரைத் தமிழ்ச்சங்கத்துச்

"செந்தமிழ்" பத்திராசிரியர்

திரு. நாராயணையங்காரால்

பரிசோதிக்கப்பெற்றன.

செந்தமிழ்ப்பிரசுரம்—கஎ.

தமிழ்ச்சங்கமுத்திராசாலை,

மதுரை.

1929.

ஸ்ரீ:

பதிப்புரை.

செய்யுட்கின்றியமையாத குணாலங்காரங்களையும் சொற்பொருளணிகளையும் விரித் தினிதியாக்கப்பெற்றதும், இற்றைக்குப் பதினான்கு வருடங்கட்குமுன் செந்தமிழ்ப்பிரசுரமாக முதன்முறை வெளியிடப்பட்டதுமான மாறனலங்காரம், முதற்பதிப்புப்பிரதிகள் முழுதும் செலவாய் விட்டமையாலும், மதுரைத்தமிழ்ச்சங்கத்தாரால் பண்டிதபரீக்ஷைக்கும் சென்னைச் சருவகலாசங்கத்தாரால் வித்வான் பரீக்ஷைக்கும் பாடமாக வைக்கப்பட்டிருத்தலாலும் இடையிடையே சிற்சில திருத்தங்களுடன் இதுபொழுது இரண்டாமுறை பதிக்கப்பட்டிருக்கிறது. இந்நூலின் பெருமை நூலாசிரியர் வரலாறு முதலிய பலவும் அடுத்துச் சேர்க்கப்பட்டிருக்கும் இதன் முதற்பதிப்பின் முகவுரை முதலியவற்றால் விளங்கும். இதன் முதற்பதிப்புக்குதவியாயிருந்த செந்தமிழுதவிப் பத்திராதிபர் திரு. கி. இராமாநுஜையங்கார் இப்பதிப்புக்கும் புரூப் முதலிய பார்த்துத் திருத்தங்கள் செய்தற்கு மிகவும் உதவிபுரிந்தமை பாராட்டற்பாலது.

இங்ஙனம்,

திரு. நாராயணையங்கார்,

செந்தமிழ்ப்பத்திராதிபர்.

ஸ்ரீ:

இப்புத்தகத்திலடங்கியவை.

௧.	பதிப்புரை	
௨.	முகவுரை	இ
௩.	மாறனலங்காரவரலாறு	௬
௪.	விஷயசூசிகைமுதலியவற்றினகராதி	௨௩
௫.	மேற்கோள்விளக்கம்	௫0
௬.	மாறனலங்காரம், மூலமும் உரையும்.	௧-௫௨௫
	1. தற்சிறப்புப்பாயிரம்....	
	2. பாயிரவுரை	௧
	3. பொதுவியலுரை	௪௬
	4. பொருளணியியலுரை	௧0௬
	5. சொல்லணியியலுரை	௩௭௭
	6. எச்சவியலுரை	௫0௪
௭.	சித்திரபத்திரங்கள்—௧௭	
௮.	சூத்திரமுதற்குறிப்பகராதி	௧
௯.	உதாரணச்செய்யுண்முதற்குறிப்பகராதி..	௫
௧0.	பிழைதிருத்தம்	௧௫

ஸ்ரீ:

முகவுரை.

அலங்காரமென்பது அணி, அழகு, வனப்பு என்னும் பெயர்களை யுடையதாய்த் தன் முதற்பொருளைக்காண்போரை யுவப்புடையராக்கு மியல்புடைமையே. அது "உருவின்மிக்கதோருடம்பது பெறுதலுமரிதே" என்று சிறப்பிக்குமாறு இருதிணைப்பொருள்களினும் ஏற்றபெற்றியமை வதுபோலவே அப்பொருள்களையுணர்த்தும் சொற்றொடர்த்தொகுதி களினு மமையத்தகுவதாம். அவ்வமைதியே இங்கு அலங்காரமென்று எடுத்துக்கொள்ளப்பட்டது. சொற்றொடர்கள் உலகநடை செய்யுணடை யென இருவகைப்படும். அவற்றுட் செய்யுணடையானது, பாஷையைச் சிறப்பிக்கவல்லதாய்ச் சுருங்கிய இனிசொற்களால் விரிந்தபொருளை வெளியிடுகின்றமையாற் பயில்வார்க்குமனத்தளர்ச்சிவாராது கிளர்ச்சியும் அகமகிழ்ச்சியுமுண்டாக்கவேண்டி அலங்காரங்கள் அந்நடைக்கு மிகச் சிறந்தனவாகக்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆதலால் அலங்காரமுடைய பாடல்களே கற்றோராலும் மற்றோராலும் புகழப்படுகின்றன; அஃதில் லாதபாடல்களே யெல்லாராலும் இகழப்படுகின்றன.

இங்ஙனமிருப்பதுபற்றியே "பலசொல்லாற்பொருட்கிடனாகவுணர் வினின், வல்லோ ரணிபெறச்செய்வன செய்யுள்" எனச் செய்யுட்கின்றி யமையாத சொற்பொருள்யாப்போடொப்பவே, அலங்காரங்களும் வேண்டு மென்று நியமிக்கப்பட்டிருக்கின்றன. அவை குணம்பற்றியும் பொருள் பற்றியும் சொற்பற்றியும் பலதிறமாகப் பகுக்கப்பட்டுத் தொன்று தொட்டே பழையதமிழிலக்கியங்களுள்ளும் மிகப் பயிலப்பெற்றுள்ளன. இங்ஙனம் கண்கூடாகக் காணப்படும் அலங்காரங்களை இலக்கணவகையா லுணர்த்தும் நூற்பகுதி ஆதியில், தமிழி லில்லையென்றும், பிற்காலத்தில் வடமொழியிலிருந் தலங்காரவியல் வந்ததென்றுஞ் சிலர் சொல்லுகிறார்கள்.

பிறபாஷைகளிலில்லாத எண்ணிறந்த பலவேறுவகையான பாடல்களையும் பிரபந்தங்களையு முடையதாய்ச் செய்யுணடையிற் சிறந்துவிளங்குந் தமிழ்மொழிக்கண்ணே செய்யுளுக்கின்றியமையாத பொருள்யாப்பிலக்கணங்கள் பிறிதொருபாஷையிலிருந்து கொள்ளப்பெறாது தமிழுக்குரியவாய்த் தனியே சுயமாயிருக்கும்பொழுது அவற்றோடொத்த அணியிலக்கணப்பகுதிமட்டு மந்நியபாஷையிலிருந்துவந்ததாகச்சொல்லுவ தநாதரிக்கத்தக்கதே.

அன்றியும், திருவெங்கையுலாவில்,

> "............................மல்லலுறச்
> சந்திபொருத்தித்தகுஞ்சீர்கெடாதடுக்கிப்
> புந்திமகிழப்புதவணித்தா—முந்தையோர்
> செய்யுள்போற்செய்ததிருக்கோயில்"

என்றதனுல், மனமகிழ்ந் ததிசயிக்கவல்ல சிறந்த அலங்காரங்களைப் பழமையானபாசுரங்களே யுடையனவென்றும், அப்பாசுரங்கள் தெய்வசாந்நித்தியம்பெறுதற்கு அலங்காரங்கள் உறுப்பாயமைந்துள்ளனவென்றும், ஆதலா லவை தேவாலயத்துக் குவமிக்கத்தக்கனவென்றும், நூன்முறையே செவ்விதிற்செய்யப்பட்டகோயில்போல்விளங்குவதாற் பாசுரங்கள் செய்யுளெனப்படுமென்றும் ஆலங்காரிகசார்வபௌமரான சிவப்பிரகாசமுனிவரு மபிப்பிராயந்தந்துபோந்தனர்.

இதனுல், கோயிலுள் நூன்முறையானமைக்குங் குணாலங்காரம் (வடிவழகு) போலச் செய்யுளுள்ளும் நூன்முறையானமைக்குங் குணாலங்காரங்களுண்டென்றும், கோயிலுள், தெய்வபிம்பம் தீபஜாலம் உத்ஸவ பரிகாரமுதலியவற்றானமைக்கும் பொருளழகுபோலச் செய்யுளுள்ளும் உவமை உருவகமுதலிய பொருள்வகையானமைக்கும் அர்த்தாலங்காரங்களுண்டென்றும், கோயிலுள் வர்ணவிசேஷங்களாலமைக்கும் சித்திரகலாபங்கள்போலச் செய்யுளுள்ளும் வர்ண (அக்ஷர) விசேஷங்களாலமைக்கும் சப்தாலங்காரங்களுண்டென்றும், கோயிலுள் ஓரோவழி நிகழ்ந்தபடிவரையும்விகிருதரூபங்கள்போலச் செய்யுளுள்ளும் ஓரோவழி நிகழ்ந்தபடிவரையும் தோஷாலங்காரங்களுமுண்டென்றுங் குறிக்கப்படுகின்றன. இவையெல்லாம் முந்தையோர்செய்யுளிற் பல இடங்களிலுங் காணப்படுதலா லவற்றிற் கிலக்கணமில்லாதிருந்ததென்று கொள்வது

பொருந்துவதன்று. ஆதலால், ஆதியிற் செய்யுளிலக்கணமாக அகத்தியராற்செய்யப்பட்டதொரு செய்யுளியல் தனியாயிருந்ததுபோல அலங்கார லக்ஷணமான அணியியல் என்னும் நூலொன்று தனியாயிருந்திருக்க வேண்டுமென்று தோன்றுகின்றது.

காலக்கிரமத்திற்றோன்றும் ஒவ்வொருவழி நூலும்முதனூலிலிருந்த முறையேகூறாது சிலபகுதியைத் தொகுத்தும், சிலபகுதியைவிரித்தும், சிலபகுதியை வேறுபடுத்தியும், சிலபகுதியை யொழித்தும், வேறுசில பகுதியைப் புதிதாகச்சேர்த்தும் செய்யப்படுவ தியல்பாதலால், தொல்காப்பியத்தைக்கொண்டு அகத்தியமுதலியமுதனூல்களில் அணியிலக்கணமுறை இவ்வாறிருந்ததென் றறியமுடியாதிருக்கிறது. நன்னூலில் ஓரதிகாரம் அணியிலக்கணஞ்சொல்லப்பட்டிருந்ததாகப் பழையவுரையொன்றால் ஊகிக்கப்படுகிறது. அதுவும் இதுகாறு மகப்படாமையாலதன்முறையும் விளங்கவில்லை. ஆயினும் பல்காப்பியத்தும் புலப்படும் அணிவகைபலவுந் தொல்காப்பியத்தும் பலபடியாகச்சொல்லப்பட்டுள்ளன. அவை, உவமவியலால் உவமவகையும், மெய்ப்பாட்டியலாற் சுவையணிவகையும் வெளிப்படையாக விரித்துரைக்கப்பட்டன.

ஒழிந்தன ஒருசில உத்திவகையினும், ஒருசில பொருள்கோள் வகையினும், வேறுசில வனப்புவகையினும், மற்றுஞ்சில வண்ணவகையினும், பின்னுஞ்சில குறிப்புவகையினும், பிறவும்பல சொன்முடிபிலக்கணங்களினும் அமைந்துகிடக்கின்றன. ஆயினு மிவற்றைப் பிறநூன் முடிந்தது தானுடம்படுதலென்னு முத்திபற்றித் தனியேவிதந்தோதாது உவமையொன்றேகூறி யொழித்தனர்போலும்.

மத்தியகாலத்தமிழ்ப்பயிற்சி வடமொழிப்பயிற்சியுடன்கூடியிருந்தமையால், பொருள்பற்றியுணரத்தகும் அணியிலக்கணங்களை எளிதின் வடமொழியிற்பயிலத் தமிழணியிய லருகியதுபோலும். இதற்கு இக்காலத்து ஆங்கிலக்கணிதமுறைப்பயிற்சியாற் றமிழ்க்கணிதமுறைப் பயிற்சி யருகியிருப்பது திருட்டாந்தமாகும்.

வடமொழிப்பயிற்சிகுன்றிய பிற்காலத்து, தொல்காப்பியத்துட் சொல்லப்பட்ட சில பழையதமிழிலக்கணங்களையே சந்தி, காரகம், தத்திதம், தாது, கிரியாபதம் என வடமொழிமுறைதழுவிவரைந்தது போல, அணியிலக்கணமும், வீரசோழியமுடையாரால் ஓரதிகாரமாகத்

துறைகளின்பெயரெழுதற் கிடம்விட்டும் மேற்கோள்களிற் சிலவற்றிற்கு ஆகாரங்காட்டியும் பலவற்றிற்கு அவை காட்டாமலும் பிரதிகளெல்லாம் ஒரேபடியா யெழுதப்பட்டிருந்தன. பிழைபாடில்லாத பெரும்பாகங்களைப் பிரதிகளிலுள்ளவாறெழுதியும், சொன்முடிபு, பிரதீகம் இவையில்லாத இடங்களில் அவற்றையமைத்தும் சில முக்கியமானபிழைகளைத் திருத்தியும், திணை துறைகளின் பெயரெழுதாத இடங்களிற் புள்ளியொற்றியும் ஒருவா றச்சிடப்பட்டிருக்கிறது.

குளகவகையுள், கலாபம் அல்லது கலாபகம் என்றுவழங்கத்தகும் பெயரை மூலத்துள்ளும் உரையுள்ளும் எல்லாப்பிரதிகளிலும் காபாலிக மென்றெழுதியிருந்தமையால் எழுத்துநிலைமாறி விகாரப்பட்டிருக்கலா மென்றெண்ணி யிருந்தபடியே பதிப்பிக்கப்பட்டிருக்கிறது.

அன்றியும், ஓரிடத்தெடுத்துக்காட்டிய இலக்கணமேற்கோளைப் பின்னும் பல இடங்களிற் காட்டியும், விரிக்கவேண்டாதசிலவிஷயங்களைச் சில இடத்து விரித்தும், விரிக்கவேண்டியவிஷயங்களை ஒரோவழி விரியாதுவிடுத்தும், எழுதியிருக்குமவைகளும் இருந்தபடியே பதிக்கப் பட்டிருக்கின்றன.

ஆயினும், முதலில் தற்சிறப்புப்பாயிரமென்று காட்டப்பட்டிருக்கும் ரு-பாடல்களில், ச-ஆம்பாட்டின்முன் அவையடக்கமென்றும், ரு-ஆம் பாட்டின்முன் பனுவல்வாழ்த்தென்றும் எழுதிக்கொள்ளவேண்டும். இவற்றுள், "ஆக்கமுறக்காக்க" என்னும் முதலையுடையபாட்டு அதிக பாடமாயிருக்கிறது.

இந்நூலின் மூலசூத்திரங்களைப்பற்றி,

"பதிகம்பொதுவெழுபத்தொன் றிருபத்தொன்
றதிகபொருணூற்றிருபத்தைந்தா—முதுசொல்
லணியியலைம்பத்துநாலாதரவாமெச்சங்
கணியிருபத்தெட்டாகுங்காண்"

என ஒரு தொகைச்செய்யுள் இரண்டுபிரதிகளில்மட்டுங் காணப்பட்டது. அவற்றுள் ஒன்று மூலசூத்திரங்கள்மாத்திரம் எழுதியபாகமா யுள்ளது.

இச்செய்யுளிற் காட்டிய தொகைகள் பதிகத்திற்கும், சொல்லணியியலுக்கும் பொருந்தவில்லை. மூலப்பிரதியில், சொல்லணியியலிற் சித்திரகவிகளைத்தொகுத்துக்கூறியசூத்திரத்தில் " இருபானாறும் " என்ற உம்மையாற்றழுவிய மாத்திரைச்சுருக்கமுதலிய ஆறினுக்கும் மூலசூத்திரங்கள் ஆறு காட்டப்பட்டிருக்கின்றன. அவை உரைப்பிரதிகளிற் காணப்படாமையாலும், உம்மையாற்றழுவியதா யுரையிற் காணப்படுதலாலும் உரையெழுதியபின்பு செய்துசேர்த்திருக்கவேண்டுமென்றும், இச்சூத்திரங்களையும் மூலத்துடன்கூட்டிப் "பதிகம்பொது" வென்னும் வெண்பா, பின்பு பாடப்பட்டிருக்கவேண்டுமென்றுந் தோன்றுகின்றது. ஆதலால் அவை அவ்வவ்விடங்களிற் சேர்க்கப்பெறாது கீழ்க்குறிப்பிற் காட்டப்பட்டுள்ளன. அவ்வாறையுஞ்சேர்த்து " மூதுசொல்லணியியலைம்பத்துநா" லென்றும், பாயிரச்சூத்திரம் அறுபத்துநாலொடு, பாயிரவுரையிலும், பொதுவியலின்முதற்சூத்திரவுரையிலும் இந்நூலாசிரியர் கூறியதாக மேற்கோள்காட்டிய "போற்புறவிழுமிய," "கடவுள்வணக்கமும்," "உட்கோள்கண்ணழிப்பு," "கருத்துரைசூத்திரம்," "தொகுத்தசொற்றேறும்," "ஒலிகெழுசொற்பொருள்," "மறுதுறும்யாப்பின்" என்னும் முதற்குறிப்புடைய சூத்திரங்களேழையுங் கூட்டிப் பதிகமெழுபத்தொன்றென்றும் எண்ணினர்போலும்.

சக்கரபெந்தமுதலிய சித்திராலங்காரங்களுக்கு மூலத்தாலும் உரையாலும் நன்குவிளங்காத சித்திரபத்திரங்கள் ஒருவாறு புதிதாகச்செய்து இறுதியிற் சேர்க்கப்பட்டிருக்கின்றன. சதுரங்கபெந்தத்தின்கதிவிவரமொன்றும் உரையிற்சொல்லப்படாமையாலும் விளங்காமையாலும், அதற்குச் சித்திரபத்திர மமைக்கப்படவில்லை. சூத்திரம், உதாரணம் முதலியவற்றினிருப்பிடங்காணுமாறு முதற்குறிப்பகராதிகளும், விஷயசூசிகைமுதலியவு மெழுதிச் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இது முதற்பதிப்பாதலால் எனக்குத்தெரியாது தவறியிருக்கும் பிழைகளைச் சுத்தப்பிரதிவைத்திருக்கும் பண்டிதசிரோமணிகள் கண்டு எனக்குத் தெரிவிப்பார்களாயின், அவைகளை மறுபதிப்பிற் றிருத்திக் கொள்ளவும், அவர்களுக்கு நன்றிபாராட்டவும் உபகாரமாயிருக்குமென்பது யாரும் அறியத்தக்கது.

இப்புத்தகம் அச்சிட்டுவெளிவரும்படிக்குப் பிரதிகளளித்துதவிய மஹோபகாரிகளான ஆழ்வார்திருநகரித் தாயவலந்தீர்த்தான்கவிராயர் குடும்பத்தார்க்கும்; மஹாமஹோபாத்தியாயர் ப்ரும்மஸ்ரீ உ. வே. சாமிநாதையரவர்களுக்கும், புதுக்கோட்டை மஹாராஜாகாலேஜ் பிரின்ஸிபாலாயிருந்த ஸ்ரீமத்-எஸ். இராதாகிருஷ்ணையர், B.A , F.M.U., அவர்களுக்கும், பரங்கிப்பேட்டை ப. அ. இலக்குமணப்பிள்ளையவர்கள் குடும்பத்தினர்க்கும் தமிழ்ச்சங்கத்தாரும், தமிழபிமானிகளும் நன்றிபாராட்டக்கடமைப்பட்டிருக்கிறார்கள்.

இந்நூற் பரிசோதனவிஷயமாகவும், அச்சிடும்விஷயமாகவும் சுருசுருப்பாயும் ஜாக்கிரதையாயுமிருந்து பிரதிகளையொப்புநோக்கியும், எழுதியும், பிழைதிருத்தியும், மேற்கோள்களைப் பிறநூல்களினின்று இடங்கண்டு தேடியெடுத்துக்கொடுத்தும், பிரதிகளிலில்லாத சித்திர பத்திரங்களை இவ்வாறிருக்கவேண்டுமென்று ஊகித்தெழுதிக்கொடுத்தும், உதவிபுரிந்துவந்த பத்திராதிபருதவி ராமாநுஜஐயங்காரதுவேலைத்திறமை பாராட்டற்பாலது.

இந்நூலையச்சிடுதற்குரியனென் றெளியேனைமதித்துத் தமிழுலகுக்குக் குற்றேவல்புரியும் பெருவாழ்வுகொடுத்த மதுரைத்தமிழ்ச்சங்கத்தார்க்கு நன்றிபாராட்டக்கடமைப்பட்டிருக்கிறேன்.

அலங்காரசாஸ்திரநிபுணர்களால் ஆராயத்தக்க இந்நூலை யளியேனும் அச்சிட்டுதவுமாறு அறிவாற்றலையளித்துத் தலைக்கட்டிய ஸர்வேசுவரன்றிருவருளைச் சிந்தித்து வந்தித்து வாழ்த்துவேனாக.

திரு. நாராயணையங்கார்,
செந்தமிழ்ப்பத்திராதிபர்.

ஸ்ரீ:

மாறனலங்கார வரலாறு.

அலங்காரமென்பது செய்யுளுக்கு அழகுசெய்யும் லக்ஷணங்களைக் கூறும் சாஸ்திரம். இவ்வலங்காரசாஸ்திரத்தை வடமொழியாளர் மிகவும் விரும்பிக் கற்பர். இந்தச் சாஸ்திரத்தின்பெருமை அக்நிபுராணத்திற் பேசப்பட்டுள்ளது. வாமநஸூத்திரம், காவ்யாதர்சம், ஸரஸ்வதீகண்டாபரணம், காவ்யப்ரகாசம், அலங்காரஸர்வஸ்வம், ரஸமஞ்சரி, ஸாஹித்ய தர்ப்பணம், ப்ரதாபருத்ரீயம், அலங்காரகௌஸ்துபம், சந்திராலோகம், குவலயானந்தம், சடவைரிவைபவதிவாகரம் (இது நம்மாழ்வார்விஷயமான வடமொழி மாறனலங்காரம்) முதலிய நூற்றுக்கணக்கான வடமொழிநூல்கள் அலங்காரத்தைப்பற்றிச்சொல்பவைகள். தமிழில் முதன்முதல் அணியைப்பற்றித்தெரிவிக்கும்நூல் தொல்காப்பியம். தொல்காப்பியர்கூறுவது உவமை ஒன்றுதான். அவர் அகத்திணையியலில் ஏனையுவமம் உள்ளுறையுவம மிவைகளை விளக்கி உவமவியலில் உவமத்தைத் தொழில், பயன், வடிவு, வண்ணம் எனப் பிரித்து விரித்தெழுதியிருக்கிறார். தொல்காப்பியர்காலத்து உவமையொன்றே, அணியாகக் கருதப்பட்டது. பிற்காலத்தார் அதிலிருந்து பல அணிகள் கற்பித்துக்கொண்டனர். நச்சினார்க்கினியரும் உவமமொன்றனையே அணியாகக் கருதினர். இவர் தம் காலத்திற் பல அணிவிகற்பவேறுபாடுகளுடன் வெளிவந்த ஒரு அணிநூலைத் தமது தொல்காப்பியவுரையிற் குறைகூறுகின்றனர். இவர் உவமவிகற்பங்களுக்கு எடுத்துக்காட்டிய உதாரணச்செய்யுள்கள்சில, தண்டியலங்காரவுரையில் வேற்றுமையணி, தற்குறிப்பேற்றவணிமுதலியவைகளுக் குதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றன. நிரனிறை, சமம் முதலியவற்றை உவமத்தின்விகற்பமாகவே கொண்டார் நச்சினார்க்கினியர். இப்படி உவமமே பலவணிகளினுற்பத்திக்குங் காரணமாயிருந்தது என்பதை வடமொழியாளரும் சம்மதிக்கின்றனர், அப்பையதீக்ஷிதர் தாமெழுதிய சித்திரமீமாம்ஸையென்னுங் கிரந்தத்தில் இவ்விஷயத்தை ஒப்புக்கொண்டிருக்கிறார். அச்சுலோகம் வருமாறு:—

“உபமைகா ஶைலூஷீ ஸம்ப்ராப்தா சித்ரபூமிகாபேதாந் ।
ரஞ்ஜயதி காவ்யரங்கே ந்ருத்யந்தீ தத்விதாம் சேத: ॥”

இதன் மொழிபெயர்ப்பு,

“உவமையென்னுந்தவலருங்கூத்தி
பல்வகைக்கோலம்பாங்குறப்புனைந்து
காப்பியவரங்கிற்கவினுறத்தோன்றி
யாப்பறிபுலவரிதய
நீப்பறுமகிழ்ச்சிபூப்பநடிக்குமே” என்பதாம்.

இவ்வணியிலக்கணமானது தொல்காப்பியத்திற் பொருளதிகாரத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. அக்காலத்தில், தமிழிலக்கணம் எழுத்து, சொல், பொருள் என மூன்றுபாகமாகத்தான் பிரிக்கப்பட்டிருந்தது. “எழுத்துஞ்சொல்லும்பொருளுநாடிச், செந்தமிழியற்கைசிவணியநிலத்தொடு, முந்துநூல்கண்டுமுறைப்படவெண்ணி” என்னும் தொல்காப்பியப் பனம்பாரர்பாயிரத்தால், தொல்காப்பியத்திற்குமுதனூலும் இப்பாகுபாடேகொண்டிருந்ததெனத் தெரிகிறது. இறையனாரகப்பொருளுரையை யுற்றுநோக்கும்போது, ‘யாப்பு’, தனியுறுப்பாகக் கருதப்பட்டு, தமிழிலக்கணம் நான்குபிரிவாகக்கருதப்பட்டதென்று தோன்றுகிறது. அதன்பின்புதான் ‘அணி’ தனியுறுப்பாகக்கொள்ளப்பட்டு, தமிழிலக்கணம், எழுத்து சொல் பொருள் யாப்பு அணியென ஐந்து பிரிவுடையதாக வகுக்கப்பட்டது. இவ்வைந்திலக்கணமும் ஒருங்கே கூறும்நூல்கள் வீரசோழியம், இலக்கணவிளக்கம், தொன்னூல்விளக்கம், முத்துவீரியம் என்பனவாம். இவை ஒவ்வொன்றிலும் அந்தந்தக்கிரமத்தில் அணியிலக்கணம் கூறப்பட்டுள்ளது. வீரசோழிய அணிகளுக்கு முதனூல் ஆசார்யதண்டியியற்றிய வடமொழிக் காவ்யாதர்சம். இலக்கணவிளக்கமுதலிய மற்ற இலக்கணங்களின் அணியிலக்கணங்களுக்கு முதனூல், தமிழ்த் தண்டியலங்காரமும் அதன் உரைகளுமாம்.

தனியாய் அணியிலக்கணமாத்திரங்கூறும் நூல்கள் அணியியல் அல்லது அணிநூல், தண்டியலங்காரம், மாறனலங்காரம் என்பன. இவற்றுள் அணிநூலைப்பற்றி விசாரிப்போம். யாப்பருங்கலவிருத்தியில் “உருவகமாதிவிரவியலீறுவரும்.........அலங்காரமென்பது அணியியலாதலின்” என்று கூறியிருப்பது தண்டியலங்காரஅணிமுறைவைப்

புக்குப் பொருத்தமில்லாததால் வேறு அணிநூலைக் குறித்ததாகவேண்டும். நேமிநாதவிருத்தியில், "புனையுறுசெய்யுட்பொருளையொருவழி, வினைநின்றுவிளக்கினது விளக்கேனப்படுமே" "முதலிடைகடையென மூவகையான" என்பன அணியியல் ஆகலின்" என்றுள்ளது. இதில் இரண்டுசூத்திரத்தாற் குறித்த விளக்கணி தமிழ்த்தண்டியலங்காரத்தில், தீபகமென்றபெயரால் ஒரேசூத்திரத்திற் கூறப்பட்டிருக்கிறது. ஆதலால் இவ்விருத்திகாரர்குறித்த அணியியல் என்னும்நூல் தண்டியலங்காரத்தினும் வேறாகவேண்டும். நச்சினார்க்கினியர் தொல்காப்பியவுரையில் "இனி இவ்வோத்தினிற்கூறுகின்ற உவமங்களுட் சிலவற்றையும் சொல்லதிகாரத்தினுள்ளும் செய்யுளியலுள்ளுஞ் சொல்லுகின்ற சில பொருள்களையும் வாங்கிக்கொண்டு மற்றவை செய்யுட்கண்ணே அணியாமென இக்காலத்தாசிரியர் நூல்செய்தாருமுளர்" எனக்கூறி அவ்வணிநூலுக்குந் தமது சம்மதமின்மையையும் தெரிவிக்கிறார். இவ்வாக்கியத்திலுள்ள விஷயம் வடமொழியிலிருந்து பெயர்த்த தண்டியலங்காரத்தைக் குறிக்காது வேறு அணிநூலையே குறித்ததாகவேண்டும். பரிமேலழகர் பக்ஷாந்தரமாய்க்கூறும் நுவலாநுவற்சி, ஒட்டு என்னும் பரியாயப்பெயர்கள் முறையே வீரசோழியத்திலும் தண்டியலங்காரத்திலும் காணப்பட்டபோதிலும் அவர் தன்மதமாகக்கூறிய பிறிதுமொழிதல் என்பது அணிநூலுட்கண்டதாகவிருந்தாலுமிருக்கலாம். இப்படியே வீரசோழியம், தண்டியலங்காரங்களுட்காணப்படாத சில அணிகளின்பரியாயப்பெயர் இவருரையிற் காணப்படுகின்றன. இன்னோரன்ன காரணங்களால், தண்டியலங்காரத்தினும் வேறாய அணிநூல் அல்லது அணியியலென்ற நூலொன்று இருந்து விழுந்திருக்கவேண்டுமென்றேற்படுகிறது.

ஆனால், தண்டியலங்காரத்திற்கே அணியியலென்னும்பெயர் இருந்திருக்கிறது. அணியியலென்றபெயருடன் அடியார்க்குநல்லாரும் மாறனலங்காரவுரையாசிரியரும் (மா-அ-சூத் 25-ன் கீழ்) எடுத்துக்காட்டியிருக்கிறமுறையே சூத்திரம் இரண்டு மொன்றும் தண்டியலங்காரத்துட் காணப்படுகின்றன. இத் தண்டியலங்காரச்சூத்திரங்கள் அணியியலென்னும்நூலிலிருந்து முன்னோர்மொழியாக எடுத்துத் தண்டியலங்காரத்துட் சேர்க்கப்பட்டிருக்கலாமென்று கருதுவதற்கு இடங்கொடுக்கின்றன.

இனி, 'மாறனலங்காரம்' என்பதைப்பற்றி விசாரிப்போம். மாறன் என்பது பாண்டியனைக்குறிக்கிற பழம் பொதுப்பெயர்களுள் ஒன்று; இங்கு ஆழ்வார்களுட்சிறந்த நம்மாழ்வாரைக் குறிக்கிறது. இவர் பாண்டியாது அரசாட்சிக்குட்பட்ட பொருநையாற்றின் அடைகரையாகிய திருவழுதிவளநாட்டுக்குரிய சிற்றரசர். மாறன், காரிமாறன், சடகோபன், திருவழுதிவளநாடன், பொருநற் (தாம்ரபர்ணி) சேர்ப்பன், பொருநற்சங்கணித்துறைவன், மகிழ்மாலைமார்பினன் முதலானபெயர்கள் இயல்பாயும், காரணம்பற்றியும் இவருக்கு வழங்கிவந்தனவென்று திருவாய்மொழியால் தெரிகிறது. இவர் பிறந்தபொழுதேதொடங்கித் திருமாலினிடத்துவிசேஷபக்தியுடையாராய் உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும்வெற்றிலையு மெல்லாங் கண்ணனேயென் றத்யவஸித்துத் ததேகத்யானபராயிருந்து நான்குவேதங்களையும் திருவிருத்தம் திருவாசிரியம் பெரியதிருவந்தாதி திருவாய்மொழி என்னும் நான்கு தமிழ்ப்பிரபந்தங்களாக லோகோஜ்ஜீவநார்த்தமாக வெளியிட்டருளினர். இவரை அக்காலத்திலிருந்த மதுரகவிமுதலான ப்ராஹ்மணசிரேஷ்டர்களும் பிற்காலத்துவந்த நாதமுனி, யாமுநாசார்யர், ராமாநுஜர் முதலான ப்ராஹ்மணசிரேஷ்டர்களும் ஆசார்யராகமதித்து நேரிலும் விக்ரகரூபமாயெழுந்தருளப்பண்ணியும் ஆழ்வார்களுட் டலைமையானவராய்க்கொண்டு ஆராதித்துவந்தனர். வடநாட்டிலும் துளஸீதாசர்முதலானோரால், பாராட்டிப் பூசிக்கப்பட்டார் இவ்வாழ்வாரெனின், இவரைப்பற்றி நாம் அதிகமாயெழுதவேண்டியதில்லை. இந்நூலாசிரியர் இவ்வாழ்வாரிடத்து ஏழாட்காலும்பழிப்பிலாத் தொண்டுபூண்டு மறந்தும் புறந்தொழாதவழிசத்துட்பிறந்த வைணவமதாபிமானமுள்ளவரானபடியினாலே, தண்டியலங்காரமுதலிய நூல்கள் அரசர்முதலியவர்களைப்பற்றிக்கூறி லௌகிக திருஷ்டாந்தங்களுடையனவாயிருப்பதுகொண்டு, தாமிந்த அலங்கார நூலையியற்றி இதை ஆழ்வார்க்குச் சமர்ப்பித்து உதாரணங்களை ஆழ்வார்விஷயமாகவும் திவ்யதேசத்து எம்பெருமான்கள்விஷயமாகவும் வைஷ்ணவபரமாய்ச் செய்து சேர்த்தருளிக் 'காரிதந்தருள்கலைக்கடலியற் பெயர்புனைந்து' (மா-அலங். பா) 'திருமகிழ்ப்பரமதேசிகன்பெயரால்' (மா-அகப்) இந்நூலை வெளியிட்டருளினர். ஆகவே மகிழ்மாறன் அல்லது நம்மாழ்வாரை நாயகனாகக்கொண்ட அலங்காரசாஸ்திரமாகுமிது.

வடமொழியிலும் நம்மாழ்வார்விஷயமான ஒரு அலங்காரசாஸ்திரம் 'சடவைரிவைபவதிவாகரம்' என்ற பெயருடன் குவலயாநந்தத்தை யநுசரித்ததாய் விளங்குகிறது. கூடியசீக்கிரம் அச்சில்வரும். இத் தமிழணிநூல், பாயிர இலக்கணத்தை முதலிற் பெற்று, அது தவிரப் பொதுவியல், பொருளணியியல், சொல்லணியியல், எச்சவியல் என நான்குபகுப்புடையதாயிருக்கிறது.

இந்நூற் பொதுப்பாயிரத்துள் "வெள்ளையினகவலின் விளம்பலு மரபே" என்றபடி இந்நூலாசிரியர் பொதுவியலைமாத்திரம் வெண்பாவா லமைத்திருக்கிறார். அகவலின்வெள்ளையினறைக வென்று முந்துநூல் விதித்தமையுளவாகவும், விதியாது நீக்கிய கட்டளைக்கலித்துறை ஆசிரியவிருத்தமென்னும் பாவினத்தாற் பின் பிலக்கணநூல்செய்தோர் இலக்கணங்களைக்கூறியதுபோலவும், சிலப்பதிகாரத்திற் சிலகாதைகள் பாவினங்களாற் பாடியதுபோலவும் இவரும் முதலியலை வெண்பாவாலும் மற்றவற்றை நூற்பாவாலும் கூறினர்.

தண்டியலங்காரத்தில் மேற்கூறிய நான்கியலுக்கும் சேர்ந்த சூத்திரங்கள் 125 தான். தண்டியலங்கார உதாரணச்செய்யுள்களிலும் மாறனலங்கார உதாரணச்செய்யுள்கள் மிகவு மதிகம். ஆகவே தண்டியலங்காரத்தினும் மாறனலங்காரம் மிக்க விரிவுடையது. தண்டியலங்காரம் காவ்யாதர்சத்தைப் பின்பற்றின மொழிபெயர்ப்பு. மாறனலங்காரம், தொல்காப்பிய முதலியவற்றின்கருத்துக்களையும், "முதுமொழித்தண்டி முதனூலணியையும், புதுமொழிப்புலவர்புணர்த்தியலணியையும், தனது நுண்ணுணர்வாற்றருபலவணியையும், மனுதுறத்தொகுத்தும்வகுத்தும் விரித்தும், சதுர்பெறவிரண்டிடந்தழீஇயசார்பெனலாய்" விளங்குகிறது. ஆயினும், இது தண்டியலங்காரத்தின் வழிநூலாகும். இதனுரையில் வடமொழித்தண்டியாசிரியரை யபூர்வமா யோரோரிடத்தும், தமிழ்த் தண்டியாசிரியரை அடிக்கடி பலஇடங்களிலும் சுட்டியிருக்கிறார். இந் நூலாசிரியர் சிலஇடங்களிற் சிலநியாயம்பற்றிச் சிறிது வேறுபடுவது முண்டு. எடுத்துரைப்பிற் பெருகுமாதலால் 84-ம் சூத்திரவுரை முதலியஇடங்களிற் கண்டுகொள்க.

தண்டியலங்காரத்துட்கூறிய பொருளணிகளின்றொகை 35. இந் நூலுட்கூறிய அணிகளின்றொகை 64. இந்நூலார், தண்டியாசிரியர்

கூறிய நுட்பமென்னுமலங்காரம் பரிகரத்துளடங்குதலா லதைக் குறைத்தார். சொல்லிலக்கணத்திலும் பொருளியலிலும் புறத்திணையியலிலுங் கூறியுள்ளவும் மற்ற அணிநூல்களுட் கூறப்படாதனவுமாகிய பூட்டுவில், இறைச்சிப்பொருள்கோள், பொருண்மொழியென்னும் மூன்றையும் செய்யுட்கணிசெய்தலால் அணியுட்சேர்த்துமிருத்தார். வகைமுதலடுக்கு, இணையெதுகை, உபாயம், உறுசுவை, புகழ்வதினிகழ்த லென்னுமைந்தும் அழகெய்துவதாயிருத்தலின், இலக்கியங்கண்டதற் கிலக்கணமியம்புதலா யிவற்றையு மிருத்தார். தண்டியாசிரியர் உவமவிரியுட்சேர்த்தும், ஏனையாசிரியர் வேறுவேறாகப்புணர்த்துமிருக்கிற ஐயம்,தெரிதருதேற்றம், பொதுநீங்குவமைஎன்பவற்றுள்ஐயத்தையும்,தெரிதருதேற்றத்தையும், ஏனையாசிரியர்மதமுடன்பட்டுப் பிறிதோரணியாக்கியும், பொதுநீங்குவமையைத் தண்டியாசிரியர்மதம்பற்றி யுவமையுட்புணர்த்தும், தன்கோட் கூறலென்னுமுத்தியானும், தன்குறியிடுதலென்னுமுத்தியானும், பின்னுேன்வேண்டும்விகற்பங்கூறிமுடிக்கும் வழிநூலிலக்கணம்பற்றியும் இவ்வாறெல்லாம் முடித்தார். இவ்வாறு சூக்குமமாய்க் காணப்படும் வேறுபாடுகளுக்கெல்லாம் மேற்கண்டபடியே கொள்ளவேண்டும்.

தண்டியாசிரியர் ஒரேசூத்திரத்திற் பன்னிரண்டுசித்திரகவிகளுக்குப் பெயர்மாத்திரங்கூறிச்செல்ல, இந்நூலார் முப்பத்திரண்டுசித்திரகவிகள்கூறி அவற்றுக்கு இலக்கணமுங் கூறிச்செல்கிறார். 'தேவா' 'மாதவனே' 'தண்மதி' 'சேடுறு' என்றுதொடங்குகிற சக்கரபெந்தச்செய்யுள்களில் 'திருமலை', 'தேன்குருகூர்', 'வடமலையப்பன்', 'சீராமராமசெயம்', 'தருமமேகைதரும்' என்பவைகளும் இரதபெந்தத்தில் 'நாராயணுயநம', என்பதும், காதைகரப்பிற் 'கோல்லான்புலாலைமறுத்தானை' என்னுங் குறளும் அழகாயமைக்கப்பட்டுள்ளன.

தண்டியலங்காரவாசிரியர் தாமே மூலமும் உதாரணமுங் காட்டினாற் போல, இந்நூலாசிரியர் தாமே உதாரணச்செய்யுள்களும் செய்தமைத்தாரென்று தோன்றுகிறது. "இந்நூலாசிரியர் இவ்வுதாரணம் யாண்டுப் பெற்றாரோவெனின்" என்று உரையில்வருவதுகொண்டும் பிற ஆதாரங் கொண்டு மிவ்வாறு ஊகிக்கவேண்டியதாயிருக்கிறது. இந்நூலிற் பரிபாடல், கலித்தொகை, பத்துப்பாட்டு, புறநானூறு, குறுந்தொகை, அகநானூறு, குறள், நாலடி, சிந்தாமணி, சிலப்பதிகாரம், வெண்பா

மாலை, யாப்பருங்கலம், திருவாய்மொழி முதலிய பழைய நூல்களிலிருந்து மேற்கோள்காட்டப்பட்டுள்ளன. இந்நூலாசிரியர்செய்தருளிய திருக்குருகா மான்மியம், நம்பெருமாள்மும்மணிக்கோவை, மாறன்கிளவிமணி மாலை, இந்நூலுரையாசிரியர்செய்தருளியதாக நினைக்கப்படுகிற மாறன் பாப்பாவினம் முதலிய வைணவநூல்களிலிருந்தும் அடிக்கடி மேற் கோள்கள் காட்டப்பட்டிருக்கின்றன. திருப்பதிக்கலம்பகம் என்னும் நூலிலிருந்தும் மேற்கோள் காட்டப்பட்டிருக்கிறது. அந்நூலைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை. மற்றைய உதாரணச்செய்யுள்களெல்லாம் நம் மாழ்வார்விஷயமாகவும், திவ்யதேசத்து எம்பெருமான்கள்விஷயமாகவும் வெண்பாமுதலிய பாப்பாவினங்களிற் பெரும்பாலும் அகப்பொருட் டுறைகளமையப்பெற்றனவாய் நூலாசிரியாற் செய்யப்பெற்றுச் சேர்க் கப்பட்டுள்ளன. இவ்வுதாரணங்களெல்லாம் கற்பனைக்களஞ்சியமாய்ச் சொற்சுவைபொருட்சுவை நிரம்பி அழகாயிருக்கின்றன. பெரும்பாலும் உதாரணச்செய்யுள்களுக்குத் திணையும் துறையும் கூறப்பட்டிருக்கின் றன. சில உதாரணங்களுக்குப் பொழிப்புரையும், சிலவுதாரணங்களுக் குக் குறிப்புரையும் கூறப்பட்டுள்ளன. நன்னூலின் ஆரம்பத்துட் கூறியிருப்பதுபோல இந்நூலிலும் ஆரம்பத்திற் பொதுப்பாயிரத்திலக்க ணம் மிக விரிவாயும் தெளிவாயுங் கூறப்பட்டிருக்கிறது.

இத் தமிழணிநூலின்பொருளடக்கத்தையும் பெருமையையும் பின்வரும் நூற்பாவானும், வெண்பாவானும் ஒருவா றறிந்துகொள்க.

"ஆறெனத்தொகைவகையினில்விரித்தவற்றைத்
தேறமெய்பெறுநான்கெனத்தெரிசெய்யுளும்
பாகமோர்மூன்றும்பயில்குணம்பத்து
மாகவெண்ணுன்கிரட்டியபொருளணியு
மடிமொழியெழுத்தினடுக்கினவாக
முடிவுறவகுத்தமூவகைமடக்கு
மூவினப்பாடன்முதலாமுறைமையின்
மேவினவிருபானுறன்மேலாறெண
விழுமியமிறைக்கவிவிரித்தபின்னெஞ்சிய
வழுவமூவமைதியுமிவையெனவகுத்து
மொழிந்தவைம்மூன்றுடன்மூற்று
தொழிந்தவுங்கோடலொள்ளியோர்கடனே"

"வாய்ந்ததிருப்பதிநூற்றெட்டினையும்வாழ்த்தியே
யாய்ந்ததமிழ்மாறனணியெனப்பேர்—தோய்ந்துளதாற்
காண்டகுசீர்மற்றோரணியுங்கவின்புணர்க்க
வேண்டுமோவீங்கிதற்குமேல்"

சுமார் நூறுவருஷங்களுக்குமுன் 'கர்னல் மெக்கன்ஸி' துரையவர்களால் மிக்க திரவியச்செலவுசெய்துசேர்க்கப்பெற்று இப்போது துரைத்தனத்தாரிடமிருக்கும் சென்னை இராஜாங்கப்புத்தகசாலையில் இந்நூலின் காகிதக்கையெழுத்துப்பிரதியொன்றிருப்பது, சில பெரியோர்களுக்குத் தெரிந்தவிஷயம். கிரந்தமந்தணகூடம் (Tamil Museum) என்றபெயர் வைத்துக்கொண்டு அநேக சாஸ்திரங்களைவெளியிடப்போவதாய் முன்னுக்குவந்த S. சாமுவேல்பிள்ளை என்பவர், சுமார் 55-வருஷத்துக்குமுன், தாமச்சிட்ட 'தொல்காப்பிய நன்னூல் ஐககண்ட்ய'புஸ்தகத்தில் இந்நூலைப்பற்றிப் பிரஸ்தாபித்துள்ளார். மகா-ா-ா-ஸ்ரீ சூரியநாராயண சாஸ்திரியாரவர்களும், மகா-ா-ா-ஸ்ரீ செல்வக்கேசவராயமுதலியாரவர்களும் தாங்களியற்றிய தமிழ்ப்பாஷைவிஷயமான நூல்களில் இந்நூலைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். சென்னையில்வசித்த வைணவவித்வான்களாகிய மகா-ா-ா-ஸ்ரீ இராஜகோபாலபிள்ளையவர்கள்முதலியோர் இந்நூலை அச்சிட எண்ணிப் பொருண்முட்டுப்பாட்டால் நின்றுவிட்டனர். முதன் முதல்வெளியான செந்தமிழ்ப்பகுதியினின்று, காலஞ்சென்ற ஸ்ரீமாந். பாண்டித்துரைத்தேவரவர்களும், முன்பு செந்தமிழ்ப்பத்திராசிரியராயிருந்த ஸ்ரீ உ. வே. ரா. இராகவையங்காரவர்களும் இந்நூலை அச்சிடுவதைச் சங்கத்தின்முதனோக்கங்களுளொன்றாகக் கொண்டிருந்தனரென்பது தெரிகிறது. எக் காரணங்களாலோ அவர்கள் எண்ணம் நிறைவேறவில்லை. இத்தகைய அரியநூல்களை யச்சிட்டுத் தமிழகத்திற் குபகரித்துவரும் தமிழ்ச்சங்கத்தார்க்குத் தமிழபிமானிகள் நன்றிசெலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

நூலாசிரியர்.

பெயர்:—இவ் வரியபெரியநூலை இயற்றியவர் திருக்குருகைப் பெருமாள்கவிராயர். திருக்குருகைப்பெருமாள் என்றால், திருக்குருகையென்னும் ஆழ்வார்திருநகரிக்குத் தலைவரான நம்மாழ்வார் என்று பொருள். "திருக்குருகைப்பெருமாள்தன் திருவடிகள்வாழியே" என்பது அஷ்டகஜம் அப்பிள்ளை அருளிச்செய்த நம்மாழ்வார்விஷயமான

வாழித்திருநாமம். இந்நூலாசிரியர் நம்மாழ்வாருடைய ஆஸ்தானகவிராயராதலால் அவருக்குத் திருக்குருகைப்பெருமாள்கவிராயரென்று பெயராயிற்று. இவருக்குச் 'சடையன்' என்னும் இயற்பெயருமுண்டு. 'சடகோபன்' என்பது சடையன் எனத் திரிந்ததுபோலும்.

தகப்பனார்:—இவருடைய தகப்பனார்பெயரும் 'திருக்குருகைப் பெருமாள்கவிராயர்' என்பதேயாம்.

ஜாதி:—வேளாளர். 'சீரகத்தார்வணிகன்' என்று பாயிரத்திலிருப்பதைநோக்க வேளாளரும் ஒருவகை வைசியவகுப்பிற்சேர்ந்தவரென்பது வெளியாகின்றது. ஆழ்வார்திருநகரிக்கோயிற் சத்தாவரண உத்ஸவங்களிற்படிக்கவேண்டிய 'திருப்பணிமாலை' படிப்பவருக்கு ஏற்பட்ட சுதந்தரங்களைத்தெரிவிக்கும் கோயிற்கணக்கில் திருக்குருகைப் பெருமாள்கவிராயர் என்றிருக்கிறது. அந்தச்சுதந்தரங்களை இப்போது வத்தராயிருப்பு ஆழ்வாரப்பபிள்ளை என்பவர் பெற்றுவருகிறதுகொண்டு இந்நூலாசிரியர் இவரின் முன்னோராயிருக்கலாமென்று சிலர் நினைக்கின்றனர். ஆழ்வாரப்பபிள்ளையின்பந்துவாகிய அமிர்தகவிராயரின்வம்சத்தில் 'திருக்குருகைப்பெருமாள்கவிராயர்'கள் சிலரிருந்திருக்கின்றனர். சென்னை ராஜாங்கக்கையெழுத்துப்புத்தகசாலையிலுள்ள திருவரங்கத்தந்தாதியின் பழையவுரையெழுதிவைத்தவர் திருக்குருகைப்பெருமாள் கவிராயர். இவர் இந்நூலாசிரியரல்லர். இவர் 'மாறன்கோவை' இயற்றிய வேங்கடத்துறைவான்கவிராயர் வம்சத்தவராயிருக்கவேண்டும். இப்பெயரினர் 'O.K.S.' என்ற நவீனக்குறியால்வழங்கப்படுகிற திருநெல்வேலிஜில்லா வைணவவேளாளவகுப்பைச்சேர்ந்தவரென்று தெரிகிறது.

ஊர்:—திருக்குருகூர் என்னும் ஆழ்வார்திருநகரி. இவற்றிற்குப் பிரமாணம்:—

"பெருநிலம்புகழ்திருக்குருகைப்பெருமா
னருள்குருகூர்வருமணகன்செழுந்தேன்
மருக்கமழ்சீரகத்தார்வணிகன்புகழ்த்
திருக்குருகைப்பெருமாள்கவிராயன்
அருட்குணத்துடன்வளர்சடையன்
பொருட்டொடர்வெம்புணர்புலமையோனே"
(மாறனலங்காரப்பாயிரம்)

"குருகையம்பதித்திருக்குருகைப்பெருமாள்
பொருவில்பேரன் புடன்புரந்தருள்புதல்வன்
மருக்கமழ்சிரகத்தார்வணிகேசன்
திருக்குருகைப்பெருமாள்கவிராசன்
அருட்குணத்தவர்புகழ்சடையன்
பொருட்டொடர்நவம்புணர்புலமையோனே"
(மாறனகப்பொருட்பாயிரம்)

"இருக்குமுதற்பனுவலினுலியற்றமிழ்தேர்நாவீறனென்னுமேன்மை
யருட்புயலைப்புகழ்புலமைத்திருக்குருகைப்பெருமாள்பேரன்புகூருந்
தருக்குலவும்பொழிற்குருகாபுரிவணிகன்சடையனிறைதத்தமிழாற்சாற்றித்
திருக்குருகைப்பெருமாள்வண்கவிராசனெனப்புனைபேர்சிறந்ததொன்றே"
(திருக்குருகாமான்மியப்பதிகம்)

முதலியன.

மதம்:—வைணவம். இவர், 'மணவாளமாமுனி' முதலிய தென்கலை ஆசார்யசிரேஷ்டர்களை அலங்கார நூலின்மத்தியில் வணங்கியிருப்பதாலும், ஸ்ரீநிவாசஜீயர் என்னும் தென்கலை ஆசார்யபுருஷாது சிஷ்யராதலாலும், தென்கலைவகுப்பைச்சேர்ந்தவர்.

ஞானாசிரியர்:—இந் நூலாசிரியருக்குப் பஞ்சஸம்ஸ்காரமென்னும் தீக்ஷைமுதலியசெய்து வைத்த ஞானாசிரியர் 'ஸ்ரீநிவாஸஜீயர்' என்பது 'சிற்குணச் சீநிவாதனின் னருளா, னற்பொருண் மூன்றையும் நலனுற வுணர்வோன்' என்னும் மாறனலங்காரப்பாயிரத்தாலும், 'சிற்குணத் திருமலைச்சீநிவாதன், பொற்புடைத்திருவடிபோற்றியபுனிதன்' என்னும் மாறனகப்பொருட்பாயிரத்தாலும் தெரிகிறது. அன்றியும், மாறனலங்காரத்துள்ளே இவ் வாசிரியரைச் சில இடங்களில் வாழ்த்தியிருக்கிறார். அச்செய்யுள்கள்வருமாறு:—

"முத்திக்கவனேமுதற்காரணனென்றும்
பத்திவிடாதேபயிலென்றுஞ்—சத்தியமாய்ச்
செல்வத்திருப்பதிவாழ்சீநிவாதன்பகர்ந்த
சொல்வித்தகமேதுணிந்து"
(காபாலிகாந்தியகுளகம். குரவன்வாழ்த்து)

"முப்புரிநூன்மார்பினுன்முக்கோல்கைக்கொண்டோன்
பொய்ப்புலனைவென்றபொறையுடையான்—மெய்ப்பொருளைச்
சேவிக்குநண்ணுணர்வான்சீநிவாதன்றமியே
னுவிக்கருள்புரிந்தாள்வான்" (திணை: வாகை. துறை: தாபதவாகை)

இவ்வாசிரியர், ஸ்ரீமணவாளமாமுநிகளின் ஆசிரியர் திருவாய்மொழிப்பிள்ளையால் ஸ்தாபிக்கப்பெற்ற திருநகரி உடையவர் (ராமாநுஜர்) ஸந்நிதி எம்பெருமானார்ஜீயர்மடாதீநபரம்பரையில் 8 (?) வது ஸ்வாமியாக எழுந்தருளியிருந்தவர்; திருப்பதிமடத்திலிருந் தெழுந்தருளியவர். (மேற்குறித்த பிரமாணங்களைநோக்குக) இவர் திருப்பதியிலிருந்தெழுந்தருளும்போது கொண்டுவந்த ஸ்ரீநிவாஸன்படத்திற்கு நாளிதுவரை நித்தியபூஜையும் உத்ஸவமும் நடத்திவருகிறார்கள். இந்தஜீயர், தாம் வீற்றிருந்தமடத்தைச்சார்ந்த உடையவர்ஸந்நிதியை ஜீர்ணோத்தாரணஞ் செய்தாரென்பது, பின்வரும் ஆழ்வார்திருநகரித்திருப்பணிமாலைச் செய்யுளால் விளங்கும்.

"இவர்ந்தபூதூரெதிராசன்கோயிலை
யுவந்தனைத்தழகுங்கண்டுலகினோங்கினன்
சிவந்தபங்கயமுகன்சீநிவாசமா
தவன்றிரிகோற்கோன்மாதவர்கிரீடமே"

சென்னை ராஜாங்கக்கையெழுத்துப்புத்தகசாலைப் புத்தக அட்டவணையில் இவரை ஸ்ரீநிவாஸாசார்யர் என்றெழுதியிருக்கிறது. இந்த ஜீயர்சுவாமி, உபயவேதாந்தப்ரவர்த்தகராய்த் திக்குவிஜயம்செய்து வாக்மியாயிருந்தாரென்றுசொல்லப்படுகிறது.

இந்நூலாசிரியர்செய்த வேறுநூல்கள்:—1. மாறனகப்பொருளும் அதன் உதாரணம் நூற்றெட்டுத்திருப்பதிக்கோவையும். 2. திருக்குருகாமான்மியம். 3. நம்பெருமாள்மும்மணிக்கோவை. 4. மாறன்கிளவிமணிமாலை முதலியன. இவற்றில் முன்னையதைத்தவிர மற்றைய நூல்களெல்லாம் மாறனலங்காரத்தில் உதாரணமாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.*

காலம்:—இந்நூலால் இவர்காலம் இன்னதென்றுதெரியாமற்போனபோதிலும், இவர்செய்த மற்றொருநூலாகிய திருக்குருகாமான்மியம் அரங்கேற்றியகாலம் அதிற் குறிக்கப்பட்டிருப்பதால் அதிலிருந்து இவர்கால மின்னதென் றேற்படுகிறது. அச்செய்யுள் வருமாறு:—

---

* மாறனலங்காரத்தில் கூசஎ-ம் பக்கம் கௌடச்சமநிலைக்கு உதாரணமாகக் காட்டப்பட்ட 'பனிப்பிறை' என்னும் முதற்குறிப்புள்ள 95-ம்பாட்டு, ஷை திருப்பதிக்கோவையில் உ0அ-ம்பாடலாகச் சிறிது பாடபேதத்துடன் காணப்படுவது ஆராயத்தக்கது [பதிப்பாசிரியர்].

"அறந்திகழாண்டவையேழநூற்றிருபான்மூன்றி
லணிகிளர்கார்த்திகைமாதமெட்டில்வாழ்வு
சிறந்திடுதிங்களினுத்தரத்திலேகா
தெசியின்மகாமுகூர்த்தந்திருந்தமுற்றத்
துறந்தவரெண்மகிழ்மாறர்திருமுன்னுதிச்
சுருதியுடன்மிருதியுஞ்சொற்றமிழின்வாய்மை
பிறந்தபெருங்காப்பியமுந்தெரிந்தோர்கேட்கும்
பெற்றியுடனரங்கேற்றப்பெற்றதன்றே"

இதிற் குறிப்பிட்டுள்ள வருஷம் கொல்லம் ஆண்டு. கொல்லமாண்டு 723-வது எனவே, இப்போது 1090 நடப்பதால், 365 வருஷங்களுக்கு முன் இவர் இருந்தாரென்றேற்படுகிறது. குருகாமான்மியத்திலிருந்து இந்நூலுக்கு உதாரணமெடுத்திருப்பதால் இந்நூல் பின்னாற்செய்யப் பெற்றதென்றுவைத்துக்கொள்வோம். ஆகவே ஏறக்குறைய 360-வருஷங்களுக்குமுன் இந்நூலியற்றப்பெற்றதென்பது ஏற்புடைத்தாகும். ஜீயர்காலம் நிர்ணயிக்கப்புகுமிடத்தும் இக்காலவரையறை சரியாயேற்படுகிறது. உரையாசிரியர்காலமும் இதுவேயாகும். இதுபற்றியேதான் 'செந்தமிழில்' இரண்டுமூன்றிடங்களில், உரையாசிரியராகிய இரத்திந கவிராயர் பிரஸ்தாபம்வருமிடத்து ஸ்ரீ·உ. வே. இராகவையங்காரவர்கள் '350-வருஷங்களுக்குமுன்னிருந்த' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இவர்பெருமை:—இவர் பாலியத்திலேயே நிகண்டு, இலக்கணம், இராமாயணம், சங்கநூல்கள், பழையவுரைகள் இவற்றை ஐயந்திரிபறக் கற்றுச் சிறந்தவித்வானாகிய தமது தகப்பனாரிடம் கற்றுவல்லுநராய், மாணாக்கர்க்குப் பாடமோதியும், பழையநூல்களைத் தேடித் தொகுத்து வைத்துக் 'கல்விக்களஞ்சிய'மென்றேற்படுத்தியும், பொருட்டொடர் நவம்புணர்புலமையோன் (மா·அக & அல) என்றபடி புதுவகையான பெருங்காப்பியம் சிறுகாப்பியமுதலான நூல்களியற்றியும், தங்காலத்து வித்வான்களுடன் வாதஞ்செய்தும், அரசாற் சன்மானிக்கப்பெற்றும் தமிழை விருத்திசெய்து சிறந்த வீரவைணவப்புலவராய்வீற்றிருந்தார். இவர்விஷயமாய் அபியுக்தருளிய பின்வருஞ்செய்யுளையும் நோக்குக.

"நேற்றுப்பிறந்துவரும்பாவியானநிலாநெருப்புக்
காற்றும்படிதொங்கறந்திலனையருட்கூடற்சங்கர்
தோற்றும்படிசொன்னசொன்னூற்பத்தொன்பதையம்பதென்று
சாற்றுந்திருக்குருகைப்பெருமாணஞ்சடைக்கட்டியே"

இந்நூ லுரையாசிரியர்.

இந்நூலுக்குச் சிறந்த விருத்தியுரையருளிச்செய்தவர் தென்றிருப்பேரைப்பதியிற்பிறந்த காரிரத்நகவிராயர் என்பவரே. தென்றிருப்பேரையென்னும் பாடல்பெற்ற திவ்யதேசம் ஆழ்வார்திருநகரிக்குக் கிழக்கே மூன்றுமைல்தூரத்துள்ளது. இவர், திருக்குருகைப் பெருமாள்கவிராயர் அநேகமாணாக்கர்க்குப் பாடமோதிக்கொண்டு சிறந்த வித்வானாயிருப்பதைக் கேள்வியுற்று அவரிடம் படிக்க ஆழ்வார் திருநகரிக்குவந்தார். அவரிடம் கல்விகற்றுச் சிறந்தவித்வானானார். செந்தமிழ்ப்பத்திரிகையில் இவரைக் குறிக்கநேரும்போதெல்லாம் இவர் பெயரை இரத்திநகவிராயரென்றே குறித்திருக்கிறது. ஆனால் உற்று நோக்கும்போது இவரது இயற்பெயர் 'காரிரத்நகவிராய' ரென்பதென்று தெரிகிறது. 'காரிரத்நம்' என்பது ஆழ்வார்திருநாமம். காரிராசன்பெற்ற இரத்திநம்போன்ற புதல்வன் என்பது இதன்பொருள். 'காரிதந்தருள்கலைக்கடலிபற்பெயர்புணைந்து' (மா. அல) 'காரிமாறன் சடகோபன்' (திருவாய்) 'காரி..................ரத்நம்' (மாறன்கோவை) முதலியவற்றையும் நோக்குக. இவருரை மிகவுஞ்சிறந்ததோருரை. இவ்வுரையின்றேல் இந்நூலின்பெருமை வெளிப்படாது. சங்கநூல்கள் பிற சான்றோர்நூல்கள் முதலியவற்றிலிருந்து மேற்கோள்காட்டியிருக்கிறார். சில உதாரணச்செய்யுள்களிலுள்ள உள்ளுறையுவமம், ஏனையுவமம், இறைச்சிப்பொருள்முதலியவற்றை அழகாய்விளக்குகிறார். சில உதாரணச்செய்யுளுக்குக் குறிப்புரையும் சிலவற்றிற்குப் பொழிப்புரையும் கூறுகிறார். இவர் வேண்டுமிடங்களில் தண்டிமதம், தொல்காப்பியர்போன்ற பிறநூலாரின்கருத்து முதலியவற்றையெடுத்துக் கூறித் தக்கசமாதானங் கூறுகிறார். உதாரணச்செய்யுள்களைச் சூத்திரப்பொருளோடு அழகாய்ப் பொருத்திக்காட்டியிருக்கிறார். இவர்காலம் முன்னேகூறப்பட்டது. இவர்செய்த வேறுநூல்கள்:—தொல்காப்பிய நுண்பொருண்மாலை, பரிமேலழகருரைநுண்பொருண்மாலை (இது செந்தமிழில் வெளிவந்துளது), ஆசிரியர்செய்த நம்பெருமாள்மும்மணிக்கோவைக்கு விருத்தியுரை, மாறன்பாப்பாவினம் முதலியன.

இவருக்குக் கோயிலில் 'வாகனமாலை'படிப்பதற்காக அக்காலத்தரசன் சிறந்த மானியங்கள்விட்டிருந்தான். அவற்றை இன்னமும் இவர்

சந்ததியார் அனுபவித்துவருகிறார்கள். இவரைப்போலவே இவர்வமிசத்தோரும் சிறந்தவித்வான்களாயும் வைணவர்களாயுமிருந்து தமிழையபிவிருத்தி செய்தார்கள். மகா-ள-ள-ஸ்ரீ தாமோதரம்பிள்ளையவர்கள், ப்ரஹ்மஸ்ரீ மஹாமஹோபாத்யாய சாமிநாதையரவர்கள், ஸ்ரீ-உ வே. ரா. இராகவையங்காரவர்கள் முதலியோருக்கு அரும்பெறற்றமிழ்நூல்களருளியகுடும்பம் இதுவே. இக்குடும்பத்தினர் ஏடுகளே திருக்கோவையாருரையாசிரியர் பேராசிரியரென்றும், அச்சிட்ட தொல்காப்பியச் செய்யுளியலுரைமுதலியவை பேராசிரியரது; நச்சினார்க்கினியரதன்றென்றும், பரிபாடலுரையாசிரியர் பரிமேலழகர் என்றும் அறியுமாறு அருமையான பலவிஷயங்களைத் தெரிவித்தன. இக்குடும்பத்தார் காப்பாற்றிவைத்த ஏடுகளின்பெருமை ப்ரஹ்மஸ்ரீ வே. சாமிநாதையரவர்கள் ஸ்ரீ-உ வே. இராகவையங்காரவர்கள் முதலியோருக்கே தெரியும். இவ்வமிசத்தவர் வைணவபரமாய் எத்துணையோ தமிழ்நூல்கள்செய்திருக்கிறார்கள். தமிழுரைசெய்திருக்கிறார்கள். வடமலையப்ப அரசரின் ஸமஸ்தானவித்வான் சிறியகாரிரத்நகவிராயர் இவ்வம்சத்தவர். சாபாநுக்ரகசக்தியுடன் கவிபாடத்தகுந்தபுலவர் இவ்வம்சத்திலநேகரிருந்திருக்கின்றனர். குமரகுருபரசுவாமிகள்வம்சபரம்பரையோரில் ஆழ்வார்திருநகரிக்கிளையினர் அநேகர் இவ்வம்சத்தாரிடம் பாடங்கேட்டிருக்கிறார்களென்றுதெரிகிறது. இம்மாறனலங்கார உரையாசிரியர்விஷயமான சிறப்புப்பாயிரச்செய்யுளையெடுத்துக்காட்டி இதனுடன் நிறுத்துகிறேன்.

தருகாளமேகங்கவிராயராயன்சடையனன்பாற்
குருகாபுரேசர்புனையலங்காரங்குவலயத்தே
கருகாதசெஞ்சொலுரைவிரித்தான்கற்பகாடவிபோல்
வருகாரிரத்நகவிராயன்பேரைவரோதயனே.

A. M. சடகோபராமாநுஜாசார்யன்,

(நேஷநல்ஹைஸ்கூல்தமிழ்ப்பண்டிதர்,

திருச்சிராப்பள்ளி.)

25—5—1913.

ஸ்ரீ:

விஷயசூசிகைமுதலியவற்றின் அகராதி.

[எண்—பக்க எண்.]

அக்காரச்சுதகத்திலோர்பேதம், ரு0உ.

அக்காரச்சுதகம், சாஎஉ.

அக்காரவருத்தனை, சாஎங.

அகத்தியம், அ.

அகத்தியன், உஉ.

அகத்தி விறைச்சிப்பொருள் மிகுதியும் தலைவன்கொடுமைகூறுமிடத் தும், சிறுபான்மை எனை யுவப்பினும்வரு மென்பது, உஎக.

அகாக்குற்றுயிர்மடக்கு, சாசாஉ.

அகாம் - அந்தணரிருக்கை, சஉசா.

அகன் றணைவுகூறல், சாருஎ.

அச்சத்தைச்சார்ந்தபெருமிதம், ககூரு.

அச்சத்தைச்சார்ந்தமருட்கை, ங0அ, ங0கூ.

அச்சம் நால்வகைத்தென்பது, ங0உ.

அச்சுதன் - அழிவிலாதான், ருஉ0.

அசங்கதியலங்காரம், ஙகங.

அசங்கதியலங்காரம் சிலேடையுடன் விரவியும்வரு மென்பது, ஙகச.

அசைவுப்பொருள்பற்றிவந்த அழுகை, ங0ங.

அட்டபுயகரம் - ஒருதிருப்பதி, ஙஅக.

அடம்பு, சாஉஅ.

அடலெடுத்துரைத்தல், ங0க.

அடிதோறுமீரிடத்துவரும்மூவகைமடக்கு, சா0ங-சாஙஉ.

அடிமுதன்மடக்குப்பதினைந்து, ஙஅ0-ஙஅஎ.

அடியார்க்குநல்லார், ஙகக.

அடியிடைமடக்குப்பதினைந்து, ஙஅஎ-ஙகூஎ.

அடியிறுதிமடக்குப்பதினைந்து, ஙகூஎ-சா0ங.

அடைபொதுவாய்ப்பொருள்வேறுபட்டுப்பண்புநிலைக்களனாகத்தோன்றிய ஓட்டு, உகக.

அடையடுத்துவந்தஉவமவுருவகம், சஅஎ.

அடைவிபரீதப்பட்டுப் பொருள்வேறுபட்டது, உகங.

அணங்குபற்றியநடுக்கம், ங0உ.

அணிபெறுஞ்செய்யுளின் பெயரும் முறையுந்தொகையும், ருக, ருஉ, ருங.

அணியியல், ககூ.

அணியென்னுப்பெயர்க்காரணம் ச0சா.

அணைந்தவழியூடல், ககூகூ, உ0உ.

அத்தச்சிலேடை, ஙகூசா.

அத்தச்சிலேடையுவமை, கசாச.

அத்தம்-பொன்மலை, சாஙஎ.

அத்திகிரி, எச, ககஎ, கருஎ, உசாஉ, ஙகஎ, ஙஉஉ, சஉச, சாரு0, சாருஉ, சாகூசா, சாசாஎ.

அத்தியூர், உஅஅ.

அதிகவலங்காரம், உஎரு.

அதிசயம் இடம் சினை காலமென்பவற்றோடும்வருமென்பது, உஙசா.

அதிசயவலங்காரத்தின் கூறுபாடு, உஙச.

அதிசயவலங்காரம், உஙச.

அதிசயவுவமை, ககூ0.

அந்தாதிமடக்கு, சாருசா, சருஎ.

அந்தாதியுவமை, கருக.

அந்தாமம்-பரமபதம், ஙஉரு.

அநியமவுவமை, கசாச, கசாரு.

அநேகாங்கவுருவகம், கஅஉ.

அபநுதி, சிலேடையினும் விரவிவருமென்பது, ஙசா0.

அபநுதியலங்காரம், ஙஙகூ.

அபநுதியுருவகம், கஅஎ.

அபேதத்தைப் பேதமாக்கிய சிலேடைவாய்பாட்டான்வந்தஅற்புதவுவமை, கஅகூ.

அம்பொன்மணிக்கூடம், உகூக, ஙசாக.

அம்மனைமடக்கில் முதலடியுஞ் சிறுபான்மை சிலேடைவாய்பாட்டான் வருமென்பது, சடுஅ.
அம்மனைமடக்கு சடுஎ, சடுஅ.
அம்மனைமடக்குக்கு யாப்பு கலித்தாழிசையென்பது, சடுஎ
அம்மனைமடக்கு நிந்தாத்துதி துதிதுதியென விரண்டுவகைப்படுமென்பது, சடுஎ, சடுஅ.
அம்மனைமடக்கு, பொருளணியுஞ்சொல்லணியுங்கூடியதென்பது, சடுஅ.
அமைவு-நிறைவு, உநு.
அயல்படவிஞுதல், உகூச.
அயற்காரணவிபாவனை, நஉ0.
அயுத்தவேது, உகூஅ.
அயோத்தி, நசக, சகக.
அர்ச்சாவதாரம், உகூக, சஉக.
அரவவென்றி, உடுஅ.
அரிமேயவிண்ணகர், உஅஎ.
அருகர், நடுகூ.
அருகன்-உடையவன், சச0.
அருத்தி-விருப்பம், சடு0.
அருமைகூறல், சகக.
அருமைகேட்டழிதல், கஉ0.
அருமையுரைத்தல், கசஎ.
அருளொடுநீங்கல், நஉடு.
அலம்வரல், உடுந.
அலரறிவுறுத்திவரைவுகடாதல், நகூக.
அவ்விடத்தேகல், கஉக.
அவயவங்கூறல், கசச, நஎஉ, சசஉ.
அவயவவுருவகம், கஅந.
அவயவவுவமை, கசக, கசஎ.
அவயவியுருவகம், சஅந.
அவயவியுவமை, கசஎ.
அவள்குறிப்பறிதல், உகூச.
அவிருத்தவுருவகம், கஅ0.
அவிரோதச்சிலேடை, உடுந.
அவிழ்த்தல்-ஒழுக்குதல், சகூக.
அழகுபத்து, க0.
அழிவுபாட்டின்மை, உகூசு.
அழுங்க நான்குவகைப்படுமென்பது, ந0ந.
அற்புதவலங்காரம், உந0.
அற்புதவுவமை, கசுடு, சநஎ.
அறக்களவழி, கஎஅ.
அறல்-கலியாணம், உதகம், சநஅ.
அறியாதுடம்படல், கசு.
அறியாதுடம்படல் வழிநூலாசிரியர்க்குமுரித்தென்பது, கசு.
அறியாள்போறல், நகூசு.
அறியாள்போன்றவனினைவுகேட்டல், ககந.
அறிவன்வாகை, உசஅ, உடுடு, உகூந, சநச, டு0ந.
அறிவுநாடல், உகூச, நநந.
அறுமுறைவாழ்த்தினது பெயரும் முறையுந் தொகையும், நசுடு.
அறுமுறைவாழ்த்தினுண் முனிவனை வாழ்த்தல், கஎக.
அறுமுறைவாழ்த்து, உடுஅ, நகசு, நசுஅ.
அறுவகைமலைவமைதி, டுஉ0-டுஉந.
அறை-பாறை, உஎஉ.
அன்பில், நகூடு, ச0உ, ச0ச.
'அன்புறதகுந......பொழுதே'யென்பதனுல் வேறுபடவந்த இறைச்சிப் பொருள், உஎஉ.
அன்னவாழ்த்து, ககச.
அனுமன் இலங்கையைத்தகித்தஞான்று இராவணன்முதலியோர்எழுநாள் விசும்பிலிருந்தனரென்பது, சகடு.
அனுமன் ஐந்திரவியாகரணங்கற்றவனென்பது, கஅசு, கஅஎ.
ஆகமமலைவமைதி, டுஉந.
ஆகமமலைவு, டுஉ0
ஆகாரநெட்டுயிர்முற்றுமடக்கு, சகூந.
ஆகுபெயராற்சொற்றொடர்வந் தந்தாதியாவதற்குச் செய்யுள், எடு.
ஆசியலங்காரம், நசுச.
ஆசிரியராகாதாரிலக்கணம், உடு
ஆசிரியரிலக்கணம், உந.
ஆட்சிபற்றியசொல்லெச்சம், ந0.
ஆடல்-வென்றி, உடுஅ.
ஆடேப்பொருட்டன்மை, ககக.
ஆடேமக்கட்டன்மை, ககந.
ஆண்-தலைமை, சச0.
ஆண்டாள், உஉஅ, நசுந.
ஆண்பாற்கூற்றுக்கைக்கிளை, உசுஉ, உஎஅ.
ஆணைகூறல், கஎ.
ஆதாரங்கூறல், கசுக.
ஆதனூர், சகஉ.

ஆயவெள்ளம்வழிபடக்கண்டிது மாயமோவென்றல், ௧௯௦.
ஆர் - தேரினதுருளிற்செறிக்கப்பட்ட கதிர், ௪௭௭.
ஆர்வமொழியலங்காரம், ௩௨௨.
ஆல்-வெள்ளம், ௪௪௬, ௪௫௩.
ஆவின்பால் பித்தத்தைத்தீர்க்குமென்பது, ௨௦௯.
ஆழ்வாரெழுந்தருளியிருக்கிற திருப்புளி உறங்காதென்பது, ௧௧௪.
ஆற்றாதுபுலம்பல், ௩௦௩.
ஆற்றாமைகூறல், ௩௫௬.
ஆற்றாமைகூறிச் செலவழுங்குவித்தல், ௨௯௭, ௪௩௨.
ஆற்றுநீர்ப்பொருள்கோள், ௪௨.
ஆற்றெழுக்குமுதலியவற்றையும் ஒரு சாராசிரியர் உத்தியுளமைத்தாரென்பது, ௨௦.
ஆறாரச்சக்கரம், ௪௭௯.
இக்கு-வைத்ததேன், ௧௯௩.
இகழ்ச்சிவிலக்கு, ௩௩௪, ௩௩௫.
இசைபற்றியபெருமிதம், ௩௦௧, ௩௦௨.
இட்டிடை, ௩௮௧.
இடக்காரகவேது, ௨௮௯.
இடக்குறைவிசேடம், ௨௮௪, ௨௮௫.
இடஞாபகவேது, ௨௯௩.
இடத்தன்மை, ௧௧௬.
இடத்துய்த்துநீங்கல், ௩௧௦.
இடந்தலை, ௫௮, ௮௮, ௧௦௨, ௧௩௧, ௧௩௯, ௧௪௬, ௧௪௭, ௧௫௫, ௧௬௬, ௧௮௩, ௧௮௪, ௨௨௦, ௨௩௯, ௨௪௭, ௩௧௦, ௩௭௨, ௪௪௯.
இடமணித்துக்கூறிவற்புறுத்தல், ௮௭, ௯௪, ௫௧௪.
இடமலைவமைதி, ௫௨௧.
இடமலைவு, ௫௧௬, ௫௧௭.
இடமிகுதி, ௩௬௯.
இடவதிசயம், ௨௩௬.
இடனிலக்களனாகியவொட்டு, ௨௦௯.
இடைநிலைக்குணத்தீபகம், ௨௫௯.
இடைநிலைச்சாதித்தீபகம், ௨௫௯.
இடைநிலைத்தொழிற்றீபகம், ௨௫௮.
இடைநிலைப்பொருட்டீபகம், ௨௬௦.
இடையிணைவிரனிறை, ௨௬௮.
இடையினப்பாட்டு, ௪௯௯.
இடையொடுகடைமடக்குப்பதினைந்து ௪௨௩—௪௩௨.
இடைவிட்டமடக்கும் இடைவிட்டும் விடாதும்வரும்மடக்கும் தனித்தனி நூற்றைந்தாமென்பது, ௪௪௩.
இடைவிட்டும்விடாதும்வந் திடையுமிறுதியும் நாலடியும் முற்றும்மடக்கிய மடக்கு, ௪௪௫.
இடைவிட்டுவந்த அடிமுதன்முற்றுமடக்கு, ௪௪௩.
இடைவிட்டுவந்தஇடைமுற்றுமடக்கு, ௪௪௪.
இடைவிட்டுவந்த கடைமுற்றுமடக்கு, ௪௪௪.
இடைவிடாமடக்குநூற்றைந்து, ௩௮௦-௪௪௩.
இடைவினாதல், ௩௯௨, ௪௦௪.
இணைமடக்கு ௪௫௮, ௪௫௯.
இணைமுரண்முதலாகிய எழுவிகற்பமும் முறையேவந்த விரோதவலங்காரம், ௨௮௧.
இணையெதுகையலங்காரம், ௨௭௭.
இதழ்குவிந்தவோட்டியம், ௪௭௦
இதழ்குவிந்தும் இதழியைந்தும்வந்த ஒட்டியம், ௪௭௧
இதழியைந்தஒட்டியம், ௪௭௦.
இந்திரனார், ௧௩௭, ௩௪௯, ௩௮௭.
இந்நூலாசிரியர்கூறிய பரியாயவலங்காரத்துக்கும்தண்டியாசிரியர்கூறிய பரியாய அலங்காரத்துக்கும் உள்ள வேற்றுமை, ௩௧௦.
இந்நூலாசிரியர் தம் ஞானாசிரியரை வாழ்த்தியபாடல்கள், ௨௧௩.
இந்நூலாசிரியரின்ஞானாசிரியரிவரென்பது, ௧.
இந்நூலின்நான்கியலினையும், பொதுவியல், பொருளணியியல், சொல்லணியியல், எச்சவியலென வழங்க வேண்டுமென்பது, ௪௫.
இந்நூலின்முதனூல் தண்டியலங்காரமென்பது, ௫௯.
இந்நூலுக்குத் தொல்காப்பியம் முதனூலென்பது, ௨௭௧.
இந்நூலுடையார்க்கு நிகழ்காலமின்றென்பார்கூற்று உடன்பாடன்றென்பது, ௩௩௦.

இயல்பிடங்கூறல், ௮௭, ௧௩௦, ௧௩௮, ௧௪௨, ௧௫௬, ௧௬௧, ௧௭௪, ௧௯௦, ௨௬௭, ௨௬௯, ௨௭௮, ௨௮௧, ௪௧௬, ௪௩௪, ௪௪௩, ௪௮௦.
இயல்பு விபாவனை, ௩௨௦.
இயற்கை, ௫௭, ௧௦௩, ௧௨௯, ௧௪௫, ௧௫௭, ௧௯௨, ௧௬௩, ௧௮௯, ௧௯௦, ௨௧௯, ௨௨௨, ௨௨௯, ௨௩௦, ௨௪௦, ௨௪௭, ௨௬௨, ௨௯௯, ௩௦௭, ௩௧௩, ௩௧௯, ௩௩௬, ௩௮௧, ௩௯௫, ௪௨௭, ௪௪௧, ௫௧௪.
இயன்மொழிவாழ்த்து, ௧௬௬.
இயைபிலுருவகம், ௧௭௬.
இயைபுருவகம், ௧௭௫.
இயைபெடுத்துரைத்தல், ௪௨௦.
இரங்கல்விலக்கு, ௩௩௭.
இரட்டுறமொழிதல், ௧௭.
இரட்டுறல்-சிலேடை, ௪௯௫.
இரட்டையுவமை, ௧௫௪.
இரண்டாஞ்சமுச்சயம், ௩௫௭.
இரண்டெழுத்தான்வந்தமடக்கு, ௪௬௪.
இரண்டொத்தகுறைவுவமை, ௧௨௪.
இரதபெந்தம், ௪௮௫, ௪௮௬.
இரந்துபின்னிற்றல், ௧௫௭.
இரவிற்குறிக்கிடங்கூறல், ௯௪௯.
இரவினீடுபெருவரல், ௩௦௩.
இரவுக்குறி, ௯௪, ௧௨௦, ௩௨௨, ௩௪௯, ௩௬௯, ௪௨௬, ௪௪௪, ௪௫௨.
இரவுவரவுணர்த்தல், ௯௪.
இராமன் வனவாசஞ்செய்தபொழுது இலக்குமணன் ஆகாரமின்றி அவனுடன்சென்றனனென்பது, ௨௫௯.
இராமாநுஜமுனி, ௧௫௧, ௨௨௪, ௩௪௪, ௩௫௬, ௩௬௩, ௪௯௬.
இராமாநுஜாசிரியரைவர் ௨௨௯; ௨௨௫.
இருபொருட்சிலேடையினமடக்கு, ௪௫௯.
இருபொருள்வேற்றுமைச்சமம், ௨௧௯, ௨௨௦.
இருமையினியம்பல், ௩௧௯.
இருவர்நினைவு மொருவழியுணர்தல், ௩௯௪.
இருவருமுளவழி யவன்வரவுணர்தல், ௯௫, ௨௯௪, ௩௩௩.
இல்பொருளுவமை, ௧௩௯.
இல்வாழ்க்கை, ௩௫௩.
இல்லைவகுதல், ௧௯௭.
இல்லாண்முல்லை, ௨௮௪.
இலக்கியங்கண்டதற் கிலக்கணங் கூறல், ௧௫௫, ௧௫௬, ௧௫௯.
இலங்கை எழுகோட்டையையுடைய தென்பது, ௪௦௭.
இலஞ்சி-கொப்பூழ்,வகுளமாலை ௨௫௩
இலேசவலங்காரம், ௩௧௧, ௩௧௨.
இவர்தல்-பாத்தல், ௩௫௨.
இழிபுநிலைக்களன், ௧௧௯.
இழைத்தல்-திரட்டிவைத்தல், ௨௪௫.
இளங்கோவடிகள், ௭௯, ௧௫௯.
இளம்பூரணர், ௧௮, ௨௧.
இளிவரல் - பிறராலிகழப்பட்டெளியனாதல், ௩௦௪.
இளிவரல்நான்குவகைப்படுமென்பது, ௩௦௫.
இளிவரல்பற்றிவந்தஅழுகை, ௩௦௪.
இறடி-கருந்தினை, ௨௭௧.
இறந்ததுகாத்தல், ௧௪, ௧௯௪.
இறந்தவினைவிலக்கு, ௩௩௦.
இறப்பமகிமையும் இறப்ப அணுமையுந் தன்கட்டோன்றினமை பொருளாக வந்த வியப்பு, ௩௦௭.
இறும்பூது-ஆச்சரியம், ௪௯௯.
இறை-முன்கை, ௪௫௭.
இறைச்சிப்பொருளலங்காரம், ௨௭௦.
இறைச்சிப்பொருளலங்காரம் கருப்பொருள்களை நிலைக்களனாகப்பெற்றுவருமென்பது தொல்காப்பியர்க்கும் உடன்பாடென்பது, ௨௭௧.
"இறைச்சியிற்பிறக்கும்.......தெரியுமோர்க்கே" என்னுஞ் சூத்திரத்தான் வந்த இறைச்சிப்பொருளலங்காரம், ௨௭௩.
இன்சொலுவமை, ௧௪௩.
இன்பமாதல், துன்பமாதல் ஒருவர்பால் இருவயிற்றோன்று மிரண்டாஞ்சமுச்சயமொன்றுண்டென்பது, ௩௫௬.
இன்பமுதலிய குணலங்காரங்களின் இலக்கணம், ௮௩, ௮௪, ௮௫.
இன்பமுந் துன்பமும் இருவயிற் பலவாய்ப்பிறந்த சமுச்சயம், ௩௫௬.
இன்பமுந்துன்பமும் இருவயிற்பிறந்தனவாகக்கூறுவதும் சமுச்சயமாமென்பது, ௩௫௧.

இன்மை ஐந்துவகைப்படுமென்பது, உகூரு.
இன்மையினின்மை, உகூசு.
இன்னலெய்தல், ஙOங.
ஈகை-பொன், சஙஉ.
ஈரொற்றுடனிலையாய ஒப்பில்போலி, உஙங.
உடக்கம்பு — நாணிற்செறிந்தபாணம், உருகூ.
உடன்படல்விலக்கு, ஙஙரு.
உடன்போக்கு, கூக, கூங, கOரு, கஉO, கசO, கசஎ, கசஅ, கருஉ, கசுக, கஅஎ, உOசு, ஙOக, ஙஅசு, ஙகூஎ, சOகூ, சகக, சககூ, சஉஎ, சஙக, சருங.
உண்மகிழ்ந்துரைத்தல், உகூக, ஙOஅ.
உத்தி - உரை, ஙகரு.
உத்தி - வடமொழிச்சிதைவென்பதும், சூத்திரத்தின்பாற்கிடப்பதோர் பொருள்வேறுபாடு காட்டுவதென்பதும், கக.
உத்திமுப்பத்திரண்டு, கO, கக.
உதாத்தத்துக்கும் அதிசயத்திற்கும் வேற்றுமை, ஙருஎ.
உதாத்தம் மிகுதி என்பன ஒருபொருட்கிளவிகள் என்பது, ஙருஎ,
உதாத்தவலங்காரத்தின்வகை, ஙருஎ.
உதாத்தவலங்காரம், ஙருஎ.
உதாத்தவலங்காரம் பொருண்முதலிய வல்லாத பிறவற்றோடும்வரு மென்பது, ஙசுச.
உபாயவலங்காரம், உஅஉ, உஅங.
உபாயவிலக்கு, ஙஙசு.
உய்த்தலில்பொருண்மை, கOச.
உய்த்துக்கொண்டுணர்தல், கஅ.
உயர்ச்சிவேற்றுமை, உஉO.
உயர்திணையிடத்துத்தற்குறிப்பேற்றம் உஙஉ.
உயர்வு-வருத்தம், சசஅ.
உயிரிலஃறிணைத்தன்மை. கசரு.
உயிருளதாகியயங்காவஃறிணைத் தன்மை, கசச.
உயிருளதாகியயங்குமஃறிணைத்தன்மை, கசச.
உருத்திரம் நான்குவகைத்தென்பது, ஙOரு,
உருவகம் பிறவலங்காரங்களோடும் விரவுமென்பது, கஅச, கஅரு.
உருவகமும் உவமையும் என்னுமிரண்டின்புறனடை, கஅஅ.
உருவகவகை, கஎங.
உருவகவலங்காரம், கஎக.
உருவகவழுவமைதி, கஎங,
உருவகவாய்பாட்டால்வந்த அற்புதவலங்காரம், உஙO.
உருவகவாய்பாட்டால்வந்தஉடனிலைச்சிலேடை, உசO.
உருவகவிரி பதினாறு, கஎச, கஎரு.
உருவகவுருவகம், கஎகூ.
உருவகவுவமை, கசுO.
உருவுவமம், சகக
உரை,நான்குவகைப்படுமென்பது,ருO.
உரைமுறைவைப்பு, கஉ.
உரையிற்கோடல், ககக.
உல்லேகத்திற்கொருபுறனடை,உகரு.
உல்லேகம் விஞவினும்வருமென்பது, உகரு.
உல்லேகவலங்காரம், உகரு.
உலகம்-மக்கள், நிலம், ஒழுக்கம், ருகரு.
உலகம்யாவையு மென்னுஞ் சிறப்புப்பாயிரஞ்செய்தார் இந்நூற் குரைசெய்த திருமேனியிரத்தினகவிராயரென்பது, ஙஅ.
உலகமலைவமைதி, ருஉக.
உலகமலைவு, ருகரு.
உலகியலுரைத்தல், சருங.
உலகின்மேல்வைத்துரைத்தல், சுக, அசு, ககூக.
உலாப்போந்துபள்ளியிடத்தானைதலைவனுடனாடியதலைவிநிலைமை யுழையருரைத்தல், ஙகங.
உவகை நான்குவகைப்படுமென்பது, ஙOஎ.
உவமவிரி, கஙசு,கஙஎ.
உவமவிரியினெறிபு, கருங.
உவமவுருபுகள், கசுக, கஎO, கஎக.
உவமவுருபுபுணர்ந்ததற்குறிப்பேற்றம், உஙங,
உவமவுருபும்பண்புந்தொக்கதொகையுவமை, கஙO.
உவமவேதுத்தொக்கதொகையுவமை, கஉகூ,

உவமானப்பொருட்டீபகம், உசுக.
உவமானப்பொருட்பின்வருநிலை, உருசு
உவமேயமும்உவமவுருபுந்தொக்கதொகையுருவகம், கஅஅ, கஅகூ.
உவமைக்கும் உருவகத்திற்கும் எய்தியதோரையமறுத்துணர்த்தல், கஎஉ,
உவமையலங்காரம் பிறவலங்காரங்களோடுங் கூடிவருமென்பது, கசு0.
உவமையின்பொதுவிலக்கணம், ககஅ, கஉஉ.
உவமையினதுயர்ச்சியாற்பொருட்குயர்ச்சியாமென்பது, கஉக.
உவமையும்உருவகவுருபும்மாட்டேறில்லாதுவந்தவுருவகம், கஎஅ.
உவமையுருவகம், கஅஎ.
உவமையுருவகமென்னுது உருவகவுவமையென்பதே பொருத்தமென்பது கசு0.
உவமையுளோர்பேதம், ககூ0
உவமைவழு, கசுஅ, கசுகூ.
உவர் - கடல், ஙசக.
உவா - நிறைவு, சஎக.
உழபுலவஞ்சி, உஙச, உஅகூ.
உழிஞை, சு0க, ஙஉங.
உழையரியர்பழித்தல், ககூஅ.
உழையருரைத்தல், ங0சு.
உள்ளதனின்மை, உகூரு.
உள்ளியதுணர்த்தல் கஉ.
உள்ளுறுத்தல்-உள்ளேகுறித்தல் ககூச.
உள்ளுறையுவமத்தின் பொதுவிலக்கணம், ககூங.
உள்ளுறையுவமத்துக்கும் ஒட்டலங்காரத்துக்கும் வேற்றுமை, உகங, உகச.
உள்ளுறையுவமந்தான் வினையுவமம் என்றுகூறும்படி உவமையும் உவமிக்கப்படும்பொருளுமாய்நின்று உள்ளுறையுவமத்தினைத்தருங்கருப்பொருட்குச் சிறப்புக்கொடுத்தது, உ0ச.
உள்ளுறையுவமம், ககூஉ.
உள்ளுறையுவமம் உவமப்போலியென்றும் பெயர்பெறுமென்பது, ககூங.
உளர்தல்-குடைதல், உசச, ஙஉஉ, சகூக
உற்றதுரைத்தல், கசசு, உருக, சச0.
உறுசுவையலங்காரத்தை வடநூலார் சாரமென்பரென்பது, ஙருச.
உறுசுவையலங்காரம், ஙருச.
உறுப்புக்குறைவிசேடம், உஅரு.
உறுப்புவமம், கககூ.
உறை-கவிசனை, கஅங.
உறையூர், கசசு, கஅரு, கஅஎ, ஙஅங, ஙஅஅ, ச0உ. ச0எ, ச0அ.
ஊர்தரல் - மிகுதல், ஙருங
ஊரகம், ஙஙஎ.
எட்டாரச்சக்கரபெந்தம், சஅ0, சஅக.
எடுத்துக்காட்டுவமை, கஉரு.
எதிகள் - சந்நியாசிகள், ஙசச.
எதிர்மறுத்துரைத்தல் குற்றமாமென்பது, க0.
எதிர்வினைவிலக்கு, ஙங0.
எதிரதுபோற்றல், கரு, உக, கககூ.
எய்தியதுவிலக்கிப்பிறிதுவிதிவகுத்தல் உத்திவிசேடமாமென்பது, ககூ, உ0.
எருமையின்பால் பித்தத்தைத்தீராதென்பது, உ0கூ.
எவ்வுள், சு0க, கருரு, கஅஅ, ங0ச, சஎஉ.
எழுகூற்றிருக்கை, சகூச. சகூகூ.
எழுத்துநிரனிறை, உசுஎ.
எழுதவரிதென்றல், ககூக.
எழுவகைமடக்கின்தானமும்எண்ணும் ஙஎஅ-ஙஅ0.
எள்ளற்பொருள்பற்றிவந்தநகை, ங0சு.
என்று - எண்ணிடைச்சொல், ககூ.
என்றுமின்மை, உகூசு.
ஏகதேசவுருவகம், கஎசு, கஎஎ, ககூக, உகூஅ.
ஏகவுவமை, கசகூ.
ஏகாங்கவுருவகம், கஅக, கஅஉ.
ஏகாவளியலங்காரம், ஙஉசு, ஙஉஎ.
ஏதி - ஆயுதம், உசுங.
ஏதுக்காட்டிவருத்தந்தணித்தல், உகூஉ.
ஏதுநுதலியமுதுமொழியுவமை, கருஅ.
ஏதுவலங்காரம், உஅசு.
ஏதுவலங்காரம், காரகம், ஞாபகம், என இருவகைப்படுமென்பது, உஅசு.
ஏதுவிலக்கு, ஙஙஅ.
ஏதுவுருவகம், கஅசு, கஅஎ.
ஏதுவுவமை, கசுசு.
ஏமவெருமை, அக, அஉ.
ஏழாநரகம், கசு.
ஏனல் - செந்தினை, உஎக.
ஐந்திணை, எங.

ஐந்திரவியாகரணம், கஅஎ.
ஐந்துபொருட் சிலேடையிணைமடக்கு, சசுக.
ஐயவதிசயம், உஙரு, உஙசு.
ஐயவிலக்கு, ஙஙசு.
ஐயவேது, உகூஅ, உகூகூ.
ஐயனரிதனர், எஅ.
ஐயனரிதனர் வெண்பாமாலை வழிநூலென்பது, எஅ.
ஐயாண்டிலாயினும்எழாண்டிலாயினும் கல்விகற்கத்தொடங்கவேண்டு மென்பது, உஎ.
ஐயுறல், கூரு, உஉகூ, சஉஎ.
ஒட்டலங்காரத்தின்கூறுபாடு, உ0எ.
ஒட்டலங்காரத்தின்பரியாயப்பெயர்கள், உ0அ.
ஒட்டலங்காரம், உ0எ.
ஒட்டு, உள்ளுறையுவமம்முதலிய அலங்காரங்களைத் தண்டியாசிரியர்கூறிய விதமும் இந்நூலாசிரியர்கூறியவிதமும், உகச.
ஒடித்தல் - முரித்தல், உசுஎ.
ஒத்ததுவென்றதென்றல், கருஎ.
ஒப்புமைக்கூட்டத்தின்பாகுபாடு, உகஎ
ஒப்புமைக்கூட்டம், உகசு.
ஒப்புமைக்கூட்டவுவமை, கசுசு.
ஒப்பொடுபுணர்ந்தவுவமத்தானுஞ் சார்பிஞனும்வந்த பிசியுவமை, கருஅ.
ஒருசூத்திரத்தினுட்பலவுத்திவருமென்பது, உ0.
ஒருசெய்யுளகத்து நாலந்தாதியும்வந்ததற்குதாரணம், எரு.
ஒருதலை - நிச்சயம், சகூச, சகூகூ.
ஒருபொருட்கடைநிலையிடத்தீபகம், உசுக.
ஒருபொருட்கொன்றுபலசூழ்இய பலபொருளுவமை, சஉ.
ஒருபொருள்வேற்றுமைச்சமம், உககூ.
ஒருபொருளுயர்ச்சி, உஉ0.
ஒருபொருளுருவகம், கஎஅ.
ஒருபொருளுவமை, கஙஅ.
ஒருவகையடைதல், ஙகஎ.
ஒருவயிற்போலி, கஙகூ.
ஒருவர்பலகவர்ப்பாயுரைத்தவுல்லேகம் உகரு.
ஒருவழித்தணத்தல்கருச,ஙஅரு,சருஎ
ஒருவினைச்சிலேடை, உசக
ஒழுக்கிசை, கூசு,
ஒற்றுப்பெயர்த்தல், ரு0க
ஒற்றைக்கிளவி யிரட்டைவழித்தாய் வந்தவுவமை, கருரு.
ஒன்றினமுடித்தல், கஅ.
ஒன்றினமுடித்த றன்னினமுடித்தல், ருஉரு
ஒன்றினென்றின்மை, உகூரு.
ஒன்றுபலசூழ்இய பலபொருளுவமை, கஙஎ.
ஒன்றொத்தகுறைவுவமை, கஉச.
ஓட்டியநிரோட்டியம், சஎச, சஎஉ.
ஓட்டியம், சஎ0.
ஓத்திலக்கணம், எ.
ஓதம் - திரை, சருக.
ஓதற்பிரிதல், ஙங0, ஙஙச, சஉரு.
ஓதி, உசக, சஉச.
ஓதிமப்பெடையோடேயுரைத்தல், கருச.
ஓம்படை, சுஉ, கச0, உ0கூ, உகக, உகஉ, உஉசு, உரு0, உசுச, உகூசு, ங00, ங0கூ, ஙஅஎ, சகச, சஉஉ, சசச.
ஓரவடிக்கண் இணைமுரண், உஎகூ, உஅ0.
ஓரிடத்துவருமடக்கு நாற்பத்தைந்து, ஙஅ0-ச0ங-
ஓரெழுத்தடிமுதன்முற்றுமடக்குசசுஉ
ஓரெழுத்துமடக்கு, சசுக.
ககாமெய்வருக்கப்பாட்டு, சசுங.
ககரவருக்கமுற்றுமோனை, அஎ.
கங்குற்கிரங்கல், உஙஎ.
கங்கை, ரு0எ, ருககூ.
கங்கைக்கரைக்கண்டம், உசகூ.
கச்சி, கருஎ, சருகூ, சசுசு, சசுஎ.
கட்டமையொழுக்கத்துக் கண்ணுமை, ஙசஅ.
கட்டுரை - அழகியவுரை, சசகூ.
கடகபெந்தம், ரு0ங.
கடம்-பாத்திரம், மதம், கடன்கோடல், உசரு.
கடலொடுவாவுகேட்டல், சசுஉ.
கடவுள்வாழ்த்து, சுங, சுரு, சுசு, சுகூ, எ0, எரு, அகூ, க0உ, ககக, கஉ0, கஙகூ, கச0, கசுஎ, கஅக, உகங, உகரு,

௨௧௬, ௨௨௧, ௨௨௭, ௨௩0, ௨௩௬, ௨௩௮, ௨௪௯, ௨௫௩, ௨௫௮, ௨௬0, ௨௬௧, ௨௬௨, ௨௬௩, ௨௬௪, ௨௬௫, ௨௬௬, ௨௬௮, ௨௮௪, ௨௮௫, ௨௮௮, ௨௯௮, ௩0௭, ௩௧௫, ௩௧௯, ௩௨0, ௩௨௨, ௩௨௮, ௩௩0, ௩௩௧, ௩௩௨, ௩௩௮, ௩௪0, ௩௪௧, ௩௪௪, ௩௫௯, ௩௬0, ௩௬௮, ௩௮0, ௩௮௨, ௩௮௩, ௩௮௪, ௩௮௫, ௩௮௬, ௩௮௭, ௩௯௭, ௩௯௮, ௩௯௯, ௪00, ௪0௧, ௪0௨, ௪0௪, ௪0௬, ௪0௭, ௪௧௩, ௪௧௬, ௪௨0, ௪௨௧, ௪௨௩, ௪௨௪, ௪௩0, ௪௩௧, ௪௩௩, ௪௩௬, ௪௪0, ௪௪௪, ௪௪௭, ௪௫௧, ௪௫௩, ௪௫௭, ௪௫௮, ௪௬௩, ௪௬௮, ௪௭0, ௪௭௧, ௪௭௨, ௪௭௮, ௪௮0, ௪௮௨, ௪௮௪, ௪௮௫, ௪௮௬, ௪௯0, ௪௯௨, ௪௯௩, ௫0௩, ௫௧௨.

கடுஞ்சொல்விலக்கு, ௩௩௪.

கடைநிலைக்குணத்தீபகம், ௨௬0.

கடைநிலைச்சாதித்தீபகம், ௨௯0.

கடைநிலைத்தொழிற்றீபகம், ௨௬0.

கடைநிலைப்பொருட்டீபகம், ௨௬௧.

கண்டுகண்சிவத்தல், ௩0௬,

கண்டுகைசோர்தல், ௧௩0, ௨௨௧, ௨௫௭, ௨௫௯, ௨௮0, ௩௧௬, ௩௩௯, ௩௮௨, ௩௮௩, ௪௪0, ௪௪௪, ௪௪௮, ௪௬௫, ௪௬௬, ௪௭௯, ௪௮௩.

கண்ணங்குடி, ௩௩௭.

கண்ணயப்புரைத்தல், ௧௧௫, ௧௮௫, ௧௮௬, ௨௫௬,

கண்ணிற்கும் அம்பிற்குஞ் சிலேடை, ௧௮௫.

கண்ணிற்கும் மானுக்குஞ் சிலேடை, ௧௮௬.

கண்படைநிலை, ௬௭.

கண்படைவாழ்த்து, ௧௨௩.

கணிவன்முல்லை, ௩௪௬.

கதி-நடை, ௩௮௯,

கம் - சிரம், ௨௫0.

கம்பலை, ௨௪௪,

கமலம் - தண்ணீர், ௩௨௨.

கயாகரநிகண்டு, ௨௨.

காந்துறைசெய்யுள், ௪௮௭, ௪௮௮.

கருத்தறிந்தழுதகண்ணீர் துடைத்தல், ௧௮௩.

கருத்தறிவித்தல், ௩௯0.

கருத்தாகாரகவேதது, ௨௮௭.

கருமக்காரகவேதது, ௨௮௮, ௨௮௯.

கருவிக்காரகவேதது, ௨௮௭, ௨௮௮, ௨௯௧.

கல்விச்செல்வமிகுதி, ௩௬௩.

கல்விபற்றியபெருமிதம், ௪௨, ௩00.

கலன்கண்டுகளித்தல், ௨௮௮.

கலித்தொகை, ௭௩.

கலித்தொகைப்பாலைக்கலி, ௨0௬.

கலித்-மருதக்கலி, ௨0௫.

கலித்தொகையுள் விரிகதிர்மண்டில மென்னும் மருதக்கலிச்செய்யுள் சிறப்பென்றவுள்ளுறையாமென்பது, ௨0௫.

கலை - வித்தை, ௫௧௧.

கலைமலைவமைதி, ௫௨௨.

கலைமலைவு, ௫௧௮, ௫௧௯.

கவர்படுபொருண்மொழிவழு, ௫0௮.

கவர்படுபொருண்மொழி வழுவமைதி, ௫0௯.

கவிக்காசன் - திருவடி ௩௪௧.

கவிசனை - உறைவிசேடம், ௧௮௩.

கழற்றெதிர்மறுத்தல், ௪௮௪.

கள் - தேன், ௪௫௯,

களங்கடியப்படுவாரிவரென்பது, ௩௩.

களவழிநாற்பது, ௭௩.

களிற்றிடையுதவிக்கறத்தொடுநிற்றல், ௧௫௯.

கற்பிக்கப்படாதாரிவரென்பது, ௩0-௩௨

கற்பிக்கப்படுவோரிவரென்பது, ௨௮.

கற்புமிகுதி, ௩௬0, ௩௬௧.

கறையடி - உரல்போன்றஅடி, ௨௭௨.

கன்னவாசலிற்கரிக்கலம் ௪௩௬, ௪௩௭.

கன்னி, ௫0௭.

கா - சோலை, ௪௬௨.

காஞ்சி, ௩௧௭, ௩௨௩, ௪௩௫.

காஞ்சியைச்சார்ந்தபொதுவியல், ௪00.

காட்சி, ௨௪0.

காண்டிகையினிலக்கணம், ௮.

காதலுவமைக்குநிலைக்களன், ௧௧௯.

காதற்சிறப்புணர்தல், ௩௭0.

காதற்சிறப்புரைத்தல், ௧௪௬.

காதைகரப்பு, ௪௮௮, ௪௮௯.

காந்தன் - அழகன், ௨௬௬.

காந்திமிகுதி, ௩௬0.

காப்பியஇலக்கணம், ௭௬.
காபாலிகாந்தியகுளகம், ௬௮.
காமம் - விருப்பம், ௫௦௬.
காமமிக்ககழிபடர்கிளவி, ௪௪௪, ௪௫௨.
கார்நாற்பது, ௭௩.
காரகஞாபகங்களுக் கோர் புறனடை, ௨௯௨.
காரகம், (ஒருதிருப்பதி) ௩௦௪.
காரகம் - செய்விப்பது, ௨௯௨.
காரகவேதுவிற்கும் வினைகூடாதே வதுக்கள்கூடாதென்பது, ௨௯௪.
காரகவேதுவின்விரி, ௨௮௬, ௨௮௭.
காரகவேதுவைப்பிறிதொருவகையான் வகுத்துணர்த்தல், ௨௯௭.
காரணகாரியம்ஒருங்குநிகழேது, ௨௯௭.
காரணகாரியமயக்கம், ௧௪௯, ௧௬௪.
காரணகாரியவிலக்கு, ௩௩௨, ௩௩௩.
௪௭௮	தடுமாறுதொழிற்பெயர்க்	...	வேற்றுமைம.	௧௨.
௪௭௯	தெளிவினையுஞ்	...	இடை.	௧௩.

பொருளதிகாரம்.

௧௦	எதிர்மறுத்துணர்த்தினித்திறத்தவு		மரபி.	௧௦௯.
௧௨	தூக்கியல்வகையேயாங்கெண	...	செய்.	௮௭.
௧௩, ௪௯	வேண்டியகல்வியாண்டுமூன்	...	கற்பி.	௪௭.
௧௪	மாத்திரையளவு	...	செய்.	௨.
,,	வழியெனப்படுவ	...	மரபி.	௯௫.
௧௫	வழியினெறியேநால்வகைத்	...	,,	௯௬.
,,	தொகுத்தல்விரித்தல்	...	,,	௯௭.
,,	சூத்திரத்திற்பொருளன்றியும்	...	,,	௧௦௩.
௧௮, ௫௯	அகன்றுபொருள்கிடப்பினு	...	செய்.	௨௧௧.
௨௧	எழுநிலத்தெழுந்தசெய்யுட்	...	,,	௧௬௫.
,,	அவைதாம், நூலினுன	...	,,	௧௬௬.
,,	பாட்டுரைநூலே	...	,,	௭௯.
௪௪	சொல்லொடுங்குறிப்பொடு	...	,,	௨௦௭.
௪௭	ஈற்றயலடியேயாசிரிய	...	,,	௬௮.
௫௨	மருட்பாவேனையிருசா	...	,,	௮௫.
,,	பரிபாடல்லேதொகைநிலை	...	,,	௧௨௦.
௫௬	ஒன்றேவேறேயென்	...	களவி.	௨.
,,	முதலொடுபுணர்ந்தயாழோர்	...	,,	௧௫.
௬௦	மாட்டுமெச்சமுநாட்டலின்றி	...	செய்.	௨௧௨.
௬௪, ௧௫௩, ௩௪௪	அமரர்கண்முடியுமறுவகை	...	புறத்தி.	௨௬.
• ௧௦௫	முடுகுவண்ண, மடியிறந்தோடிய	...	செய்.	௨௩௪.
௧௦௯, ௧௪௩	தடுமாறுவமங்கடிவரை	...	உவம.	௩௫.
௧௦௯, ௧௨௪	ஓரீஇக்கூறலுமரீஇய	...	,,	௩௩.
௧௧௦	சீர்கூனுதல்நேரடிக்	...	செய்.	௪௯.
௧௧௩	அறுவகைப்பட்டபார்ப்பனப்	...	புறத்தி.	௨௦.
,,	பொறியுணர்வெல்லாம்		,, சூ.	௨௦. (நச்சினார்க்கினியருரை)
,,	நிறுத்தியமனத்தினை	...	,,	
,,	மனத்தினையொருவழி	...	,,	
௧௧௪, ௨௫௯	பாலறிமரபிற்பொருநர்	...	புறத்தி.	௨௦.
௧௧௯	அரிமாவன்னவணங்குடைத்	...	உவம. சூ. ௩.	உரை.
,,	பாவையன்ன	...	,, ௪.	,,
,,	அரவுநுங்குமதியி	...	,, ௫.	,,
௧௨௦	கலங்கவிழ்ந்தநாய்கன்	...	,, ௧௧.	,,
௧௨௧	அவாப்போலகன்ற	...	,, ௧௦.	,,
௧௨௨	வினைபயமெய்யுரு	...	,, ௧.	
,,	விரவியும்வருஉமரபின	...	,, ௨.	
,,	உயர்ந்ததன்மேற்றே	...	,, ௩.	

கஉஉ	சிறப்பேநலனேகாதல்	...	உவம.	௬.
,,	கிழக்கிடும்பொரு	...	,,	ரு.
,,	முதலுஞ்சினையுமென்	...	,,	௬.
,,	பெருமையுஞ்சிறுமையுஞ்	...	,,	௪0.
,,	பெருமையுஞ்சிறுமையுமெய்ப்	...	,,	௪௯.
கஉ௩	நாலிரண்டாகும்பாலு	...	,,	க௮.
க௩௩	சுட்டிக்கூறாவுவம	...	,,	எ.
௪௩௬	உவமத்தன்மையுமுரித்தென	...	,,	௩௪.
௪௪௧	பொருளேயுவமஞ்செய்தனர்	...	,,	௯.
கரு0	தன்வயிற்கரத்தலுமவன்வயின்	...	பொரு.	கக.
,,	இவ்விடத்திம்மொழியிவரிவர்க்	...	செய்.	உ0௮.
கருஉ	அடுக்கியதோற்றம்விடுத்தல்	...	உவம.	௬௬.
,,	மதியத்தன்னவாண்முகம்	...	,, சூ-௩௬. உரை.	
கரு௪	இரட்டைக்கிளவி	...	,,	உஉ.
கரு௮	நுண்மையுஞ்சுருக்கமு	...	செய்.	கஎ௮.
,,	உழுதவுழுத்தஞ்செய்	...	,, சூ-கஎ௮ உரை.	
,,	ஒப்பொடுபுணர்ந்தவுவமத்தானுந்	...	,,	கஎஎ.
கஎக	அன்னவாங்கமானவிறப்ப	...	உவம.	கஉ.
,,	அன்னவெனகிளவிபிறவொடுஞ்	...	,,	க௩.
,,	என்னவிழையப்புல்லப்பொருவ	...	,,	க௪.
,,	கடுப்பவேய்ப்பமருளப்	...	,,	கரு.
,,	போலமறுப்பவொப்பக்காய்த்த	...	,,	க௬.
,,	தத்தமரபிற்றோன்றுமன்	...	,,	கஎ.
க௯௩	கிழவிசொல்லினவளறி	...	,,	உ௬.
,,	கிழவோற்காயினுரனொடு	...	,,	உஎ.
,,	கிழவோட்குவமமீரிடத்	...	,,	உ௯.
,,	கிழவோற்காயினிடன்	...	,,	௩0.
,,	தோழியுஞ்செவிலியும்	...	,,	௩க.
க௯௪	இசைதிரிந்திசைப்பினு	...	பொரு.	க.
உ0௪	உள்ளுறையுவமமேனை	...	அகத்.	௪௬.
உ0ரு, உக௪	உடனுறையுவமஞ்சுட்டு	...	பொரு.	௪௮.
உஎக	இறைச்சிதானே	...	,,	௩ரு.
உஎஉ	அன்புறுதகுந	...	,,	௩எ.
உஎ௩	இறைச்சியிற்பிறக்கும்	...	,,	௩௬.
உஎ௯	செவ்விவாய்த்தசெம்பாட்டீரத்து	...	செய்.	௯ரு, உரை.
௩00	கல்விதறுகண்ணிசைமை	...	மெய்ப்.	௯.
,,	வெண்பாட்டீற்றடிமுச்சீர்த்	...	செய்.	எஉ.
௩0உ	அணங்கேவிலங்கேகள்வர்	...	மெய்ப்.	௮.
௩0௩	இளிவேயிழவேயசைவே	...	,,	ரு.
௩0ரு	மூப்பேபிணியேவருத்த	...	,,	௬.
,,	உறுப்பறைகுடிகோ	...	,,	௪0.
௩0௬	வெறுப்பின்வந்தவெகுளி	...	,,	,,
,,	எள்ளலிளமைபேதைமை	...	,,	௪.
௩0எ	புதுமைபெருமை	...	,,	எ.
,,	செல்வம்புலனேபுணர்வு	...	,,	கக.
௩0௯	செஞ்சாந்துபூசினுஞ்	...	,,	கஉ, உரை.

௩௧௨	ஊடொடுதோற்றமுமுரித்தென ...	புறத்தி.	௩௦.
௩௧௮	கட்டமையொழுக்கத்துக் ...	,,	௨௧ (அடி. ௧௮)
௩௨௩	நிகர்த்துமேல்வந்தவேந்த ...	,,	௨௪ (அடி. ௧௪)
௩௪௭, ௩௯௩	மாத்திரைமுதலாவடிநிலை ...	செய்.	௧௦௪.
௩௬௬	உருட்டுவண்ணமாகந் ...	,,	௨௩௩.
௩௬௮	வழங்கியன்மருங்கின் ...	புறத்.	௨௭.
௪௧௧	பாலதாணையின் ...	களவி.	௨.
௪௫௧	வான்வரிவேங்கை ...	,,	௧௬. உரை.
௫௨௧	நாடகவழக்கினு ...	அகத்.	௫௩.

௧௫. நம்பெருமாள்மும்மணிக்கோவை.

௭௪	நாவலன்பின்போந்த ...
,,	பூந்தரளுஞியராய ...
,,	மலைமுழைவைகலும் ...
,	வேண்டுவதிங்கின்றெமக்கு ...
,,	என்றுலினியிதன்மேல் ...
௧௯௭	குவளையுங்குமுதமும் ...
௧௯௮	இனியதெள்ளமிர்தா ...
௧௯௯	நீர்நிலைமுற்றிய ...
௨௦௩	விசும்புதூர்த்தெழு ...
௩௫௮	ஏழுறமன்னுபி ...

௧௬. நன்னூற்காண்டிகை.

௨	ஆயிரமுகத்தாலகன்றதாயினு ...	சிறப்புப்.		௮.
௧௩	உயிர்மெய்யாய்த ...	எழுத்.	எழுத்தி.	௫.
,,	உயிர்மெய்யிரட்டுநூற்றெட்டு ...	,,	,,	௬.
௨௦	ஆற்றொழுக்கரிமாநோக்கந் ...	பொதுப்பா.		௧௯.
௩௨	அன்னமாவே ...	,,		௩௮.
௩௪	எத்திறனுசானுவக்குமத்திற ...	,,		௪௬.
,,	ஆசானுரைத்ததமைவாக் ...	,,		௪௪.
,,	அவ்வினையாளரொடு ...	,,		௪௫.
௩௮	தோன்றுதோற்றித் ...	சிறப்புப்.		௬.
௩௬	என்பவும்பிறவும், வினையின் ...	எழுத்.	பதம்.	௪௩.
,,	பவ்வமூவிடத்தைம்பா ...	,,	,,	௧௭.
,,	மூன்றுறுநபெண் ...	,,	உயிரீற்.	௨௬.
,,	ணனவல்லினம்வரட்டறவும் ...	,,	மெய்யீற்.	௬.
,,	வேற்றுமைமப்போய் ...	,,	,,	௧௭.
௪௦	ஆவியரழவிறுதி ...	,,	உயிரீற்.	௧௧.
,,	இஈஐவழியவ்வு ...	,,	,,	௧௨.
,,	ஏனையுயிர்வழிவவ்வு ...	,,	,,	,,
,,	அல்வழிஆஐமுன்னராயின் ...	,,	,,	௨௬.
௪௫	சுட்டுநீளின் ...	,,	,,	௧௩.
௧௬௬, ௩௦௮	அன்றியின்றியென் ...	,,	,,	௨௩.

௪௭௯ இசைகெடின்மொழிமுத ... எழுத். எழுத்தி. ௩௬.
௫௧௩ ளவேற்றுமையிற்றடவு ... ,, மெய்யீற். ௨௪.
௫௨௫ முன்னோர்நூலின் ... பொதுப்பா. ௭.
௧௯ பெயர்வினையும்மைசொற் ... சொல். பொதுவி. ௯.
௪௩ உருபும்வினையுமெதிர்மறுத் ... ,, ,, ௩.
௪௫ ஆறனொருமைக் ... ,, பெயரி. ௪௩.
௫௨, ௧0௭, ௧௩௭ என்றுமெனவு ... ,, இடை. ௧0.
௪௧௧ ஆண்பெண்பலவென ... ,, பெயரி. ௫.
,, ஒன்றேபலவென் ... ,, ,, ௬.
௧௩0 உவமவுருபில ... ,, பொதுவி. ௧௫.
௧௩௨ செய்யுமெனெச்சவீற் ... ,, வினை. ௨௨.
௨௮௯, ௨௯0 ஒருமொழியொழிதன்னினங் ... ,, பொதுவி. ௭.
௫0௫ ஒருபொருட்பன்மொழி ... ,, ,, ௪௭.
௫0௬ அசைநிலைபொருணிலை ... ,, ,, ௪௪.

௧௭. நாலடியார்.

௧௫௬ கடையாயார்நட்பிற் ... ௨௧௬.

௧௮. பத்துப்பாட்டு.

௧௧௯ முரசமுழங்குதானை ... பொருநா-அடி. ௫௪.
௧௩௪ உலகமுவப்பவலனேர்புதிரிதரு ... திருமுரு. ,, ௧.
௧௫௨ ஈர்ந்துநிலந்தோயுமிரும்பிடித் ... சிறுபா. ,, ௧௯.
௧௫௫ பொன்காண்கட்டளைகடுப்பச் ... பெரும்பா. ,, ௨௨0.

௧௯. பரிபாடல்.

௧௩௨ ஐயவிரைமாண்பகழி ... பா-௧0. அடி-௯௭.

௨0. புறநானூறு.

௧௧௯, ௧௨௧, ௧௨௫ மாரியன்னவண்மைத் ... ௧௩௩, (அடி-௬.)
,, ஓவத்தன்ன ... ௨௫௧.
௧௩௬ பாரிபாரியென்றுபலவேத்தி ... ௧0௭.

௨௧. புறப்பொருள்வெண்பாமாலை.

௪௨ ஒலிகடல்வையகத்து ... வாகைப். கொளு. ௩௪.
௧௭௮ அஞ்சுவருதானை ... ,, மறக்களவழி.
௧௯௨ மன்னர்மடங்கல் ... பாடாண். பாடாண்.

௨௨. மூதுரை.

௫௧௪	அட்டாலும்பால்சுவையிற்	...	௪.

௨௩. யாப்பருங்கலக்காரிகை.

௬௫	இயற்சீர்வெண்டளையான்வரும்	... செய்யு	௧. உரை.	
,,	வெண்சீர்வெண்டளையான்வரும்	... ,,	,,	,,
௬௬	வெண்சீரொன்றலுமியற்சீர்	... ,,	,,	,,
௬௭	சிறுநுதற்பேரமர்க்கட்	... உறுப்பி.	௧.	
௪௫௧	அந்தடிநீண்டிசைப்பிற்	... செய்யு.	௧௩.	

௨௪. யாப்பருங்கலவிருத்தி.

௧௨0	மகிழ்வார்க்குமல்லார்க்குந்	...	அ௪. உரை.

௨௫. இந்நூலாசிரியர்செய்தவை.

௨	பொற்புறவிழுமிய
௪௬	கடவுள்வணக்கமுங்
௫0	உட்கோள்கண்ணழிப்
,,	கருத்துரைசூத்திரத்
,,	தொகுத்தசொற்றொறுஞ்
,,	ஒலிகெழுசொற்பொருள்
,,	மறுத்துறும்யாப்பின்

ஏனைய சில விளங்காதனவு முள.

ஸ்ரீ:

மாறனலங்காரம்.

தற்சிறப்புப்பாயிரம்.

தேனாருமகிழ்த்தொடையனுமௌலியுந்
திருக்கிளர்குழைக்காதுங்
கானாருமலர்த்திருமுகச்சோதியுங்
கயிரவத்துவர்வாயு
மோனமாகியவடிவமுமார்பமு
முத்திரைத்திருக்கையு
ஞானதேசிகன்சரணதாமரையுமென்
னயனம்விட்டகலவே. (க)

பூமாதுமன்னும்புகழ்க்குருகூர்வாழ்புலவர்
கோமானியற்பெயராற்கூறுமணிப் — பாமாலைக்
காரணனுஞ்செஞ்சொலலங்காரன்சோலைமலைக்
காரணனுநாரணனேகாப்பு. (உ)

ஆக்கமுறக்காக்கபுகழ்மாறனலங்காரத்தைப்
பூக்கமலத்தாண்மெய்புளகமெழ — நோக்குங்
குழகனெழிற்சோலைமலைக்கொற்றவனுஞ்சங்கத்
தழகனருண்மாலலங்காரன். (ஙு)

அழுக்காறிலாரயழுக்கறுக்குங்கல்வி
யொழுக்காருலகத்துளரா — விழுக்கிலா
மூற்பனுவல்கண்டுரைத்தேன்மொய்பிழாய்புன்மொழியு
நற்பனுவலாமெனவேநான். (ச)

வாய்ந்ததிருப்பதிநூற்றெட்டினையும்வாழ்த்தியே
யாய்ந்ததமிழ்மாறனணியெனப்பேர் — தோய்ந்துளதாற்
காண்டகுசீர்மற்றோரணியுங்கவின்புணர்க்க
வேண்டுமேயீங்கிதற்குமேல். (ரு)

திருக்குருகைப்பெருமாள்கவிராய
னருட்குணத்துடன்வளர்சடையன்
பொருட்டொடர்நவம்புணர்புலமையோனே.

என்பது பாயிரம்:—எந்நூலுரைப்பினுமந்நூற்குப் பாயிரமுரைத்தே நூலுரைக்கவென்பது மரபு. என்னை? "ஆயிரமுகத்தாலகன்றதாயினும், பாயிரமில்லது பனுவலன்றே." என முன்னோர்கூறிய முறைமையானும், இந்நூலுடையாரும் "பொற்புறவிழுமியபொருள்பல புணர்க்கினுந், தற்சிறப்புளதேதந்திரமென்ப." என்பதனானுமுணர்க. இப் பாயிரத்துக்குப்பொருண் மேற்காட்டுதும்.

1. புறவுரைமுகவுரைபுனைந்துரைதந்துரை
பதிகநூன்முகமணிந்துரைபாயிரம்.

(இதன்பொருள்) இவையேழும் பாயிரத்திற்குக் காரணப்பெயராமென்றவாறு. (க)

2. புறவுரையேயதுகேட்டென்னைபயனெனின்
மாயிருஞாலத்தவர்மதித்தமைத்த
பாயிரமில்லாப்பனுவல்கேட்கிற்
காணக்கடலிடைக்கலனிரில்கலத்தரின்
மாணாக்கன்றன்மதிபெரிதிடர்ப்படும்.

(என்னுதலிற்றோவெனின்) பாயிரமில்லாப்பனுவல்கேட்போன் மதியிடர்ப்படுதற் குவமையுணர்த்து தனுதலிற்று.

(இதன்பொருள்) முந்து நூல்செய்தற்காசிரியர் மனத்தினுள்ட் கொண்டுவிதித்ததாம் பாயிரமில்லாத நூல்கேட்பானாகிற் கேட்ட மாணாக்கன்மதி முன்புகண்டறியாத கடலிடத்து மீகாமனில்லா வங்கத்திற் செல்பவர் மதிபோல மிகவுமயக்கமெய்துமென்றவாறு; என்பதாற் பாயிரங் கேட்டல் பயனுடைத்தாயிற்று. (உ)

3. பொதுச்சிறப்பெனவதுபகலிருவகைத்தே.

(என்) பாயிரத்தினதுகூறுபாடுணர்த்திற்று.

(இ-ள்) பாயிரமென்ன வொன்றாய்நின்றவது பொதுவுஞ் சிறப்பு மென முந்துநூல் கூறியதா மிரண்டுகூறுபாடுடைத்தென்றவாறு. (௩)

4. அவற்றுள்,

போக்கறுபனுவலுட்புகல்பொருளல்லா
தாக்கமுற்றனைத்தினுமமைவது பொதுவே.

(எ-ன்) முறையானே பொதுப்பாயிரத்தியல்புணர்-ற்று.

(இ-ள்) அவ்விரண்டனுட் புலவராற் கூறப்பட்ட குற்றமற்ற நூல்களுட் கூறப்படும்பொருளல்லாத புறப்பொருளாயெல்லா நூன் முகத்து மின்றியமையா தாக்கம்பெற்றமைவது பொதுப்பாயிரமா மென்றவாறு. அமைதல் வெளிப்படாது மறைந்துமறைந்து நடத்தல். எல்லா நூன்முகத்தும் பொதுவாக மறைந்துநடத்தலிற் பொதுவெனக் காரணப்பெயராயிற்று. (௪)

5. அதுவே,

நுண்ணூ னுவல்வோ னுவல்வதனியற்கை
கொள்வோன்குறிப்பிற்கொள்கடன்றன்னொடுந்
தெள்ளிதினைந்தெனச்செப்பினர்புலவர்.

(எ-ன்) பொதுப்பாயிரத்தின் கூறுபாடுணர்-ற்று.

(இ-ள்) அப்பொதுப்பாயிரம் நுண்ணியநூலின்மரபும், நுவல் வோன்மரபும், நூல்நுவல்வதன்மரபும், கொள்வோன்மரபும், அம்மாணாக் கனுள்ளக்குறிப்பினாற் கொள்வதன்மரபுதன்னொடு மைந்தென்று தெள் ளியதாய்க்கூறினர் முந்துநூலாசிரியரென்றவாறு. ஏகாரமீற்றசை. தெள் ளிதினைந்தெனச் செப்பினரென்று சிறப்பித்தவதனால் "ஈரிரண்டென்ப பொதுவின்றொகையே" என்போர் சுருங்கக்கூறிய நோக்கமேநீக்கி யைந் தென்போர் நோக்கமே யுட்கொண்டாரென்பதாயிற்று. (௫)

6. அவற்றுள்,

உத்தமநூன்மரபுணர்த்துங்காலை
முத்திறத்தொன்றாய்ப்பாயிரமுதலுபு
நாற்பொருளைனுறநவில்வனவாகிச்

சூத்திரமோத்துப்படலமென்றுரைபெறு
முறுப்புடைப்பிண்டத்தொடுமமைந்தஃகாக்
காண்டிகைவிருத்தியிற்காட்சிதந்தீரைங்
குற்றமொன்றின்றிக்குழகொடுமெண்ணான்
குத்தியிற்சிறந்ததென்றுரைத்தனர்புலவர்.

(எ-ன்) வைத்தமுறையானே நூன்மரபுணர்-ற்று.

(இ-ள்) அங்ஙனங்கூறப்பட்ட வைந்தனுள்ளு முத்தமநூலின திலக்கணத்தை யறிவிக்குமிடத்து முத்திறத்தொன்றென்பதுமுதலாக வெண்ணான்குத்திபீருகப் பன்னிரண்டுகூற்றதாய்ச் சிறந்ததென்று மேனாட்கற்றுவல்லோருரைத்தனரென்றவாறு. எனவே, இந்நூலுடையார்க்குமங்ஙனமுரைப்பதே கருத்தென்பதாயிற்று. பிண்டத்தொடு மமைந்தெனவே மகாபிண்டமு மொன்றுளதாகப் பன்மூன்றுண்டென வுணர்க. இவை பன்மூன்றும் மேற்காட்டும் வகைச்சூத்திரங்களா லுணர்க. (கூ)

7. முத்திறத்தொன்றென்பனமுதல்வழிசார்பே.

(எ-ன்) தொகைச்சூத்திரத்தினுண் முதலே நூல்கண் மூன்று கூற்றினுளொன்றுமென்று ரவையிவையென் றவற்றின் பெயரு முறை யுந் தொகையுமுணர்-ற்று.

(இ-ள்) நூல்கண்மூன்றுகூற்றினுளொன்றென்பன முதனூல் வழிநூல் சார்புநூலென மூன்றுகூற்றனவாமென்றவாறு. நூலென்ப தனை யதிகாரமுறையான் மூன்றினும்விரித்துரைக்க. (எ)

8. முதல்வனிற்சிறந்தது முதனூலாகும்.

(எ-ன்) முறையானே முதனூலாமாறுணர்-ற்று.

(இ-ள்) முதல்வனுன்மொழிவதா யழிவிலாதே சிறப்பெய்தியது முந்து நூலாமென்றவாறு. அன்றியும் முதல்வன் றனதில்லாளுக்குரைத் ததாய்ச்சிறப்பெய்திவருவதெனினுமாம். அதற்கு அரி அயன் அரன் எனுமிவர் பூமிதேவி காயத்திரி உமாதேவி என்பவர்க்குரைத்ததாய் எனக்கூறுக. இன்னும் அவ்விலேசானே இல்லென்பதனையுவமவுரு

பாக்கி முதல்வனைப்போலப் பழமைத்தா யழிவில்லாதே சிறப்பெய்தி வருவதெனினுமாம். அது சுருதியேயாம். (அ)

9. விழுமியமுதனூல்விதித்தவற்றினொடும்
பழுதறச்சான்றோர்படைத்தவுந்தழீஇ
வழுவின்றாய்வரல்வழிநூலாகும்.

(எ-ன்) வழிநூலாமாறுணர்-ற்று.

(இ-ள்) முக்கியமான முதனூல்கூறிய விலக்கணங்களோடுங் குற்றமறக்கற்றுவல்லோரால் விதித்து வழங்கிவருமிலக்கணங்களோடும் பொருந்தி முறைவழுவுதலின்றிப் புலவராலமைக்கப்பட்டுவருவது வழிநூலாமென்றவாறு. வழி-பின். (கூ)

10. இவ்வகைப்பனுவலோடொத்திழுக்கின்றாய்ச்
செவ்விதிற்சிறிது திரிவதுசார்பே.

(எ-ன்) சார்புநூலாமாறுணர்-ற்று.

(இ-ள்) இங்ஙனமிரண்டுதிறத்தவாகப் பகுத்துக்கூறப்பட்டநூல்களிரண்டோடுமொருதன்மைத்தாகவொத்து அவற்றோடு மூன்றாவதோர் புலவ னிலக்கணமிழுக்கா தழகிதாகச் சிறிது வேறுபட விரிப்பது சார்புநூலாமென்றவாறு. இம் மூன்றனுளொன்றாய்வருவது நூலென்றறிக. (கய)

11. அதன்வழிநடைபெறுமது நால்வகைத்தே.

(எ-ன்) வழிநூ லினைத்தெனவுணர்-ற்று.

(இ-ள்) இறந்ததுபோற்ற லென்னுமுத்தியான், முதல்வனிற் சிறந்த முதனூலின்வழியொழுகலாறுடைய வழிநூலானது நால்வகைப் படுமென்றவாறு. அதை முன்னர்க்காட்டுதும். (கக)

12. தொகுத்தலும்விரித்தலுந்தொகைவகைவிரியிற்
பகுத்தலுமொழிபெயர்த்தலுமெனும்பான்மைய.

(எ-ன்) மேற்காட்டப்படுமென்ற நால்வகையாப்பிற்கும் பெயருமுறையுந் தொகையுமுணர்-ற்று.

(இ-ள்) முதனூலாசிரியன் விரித்துச்செய்ததனைத் தொகுத்துச் செய்தலுந் தொகுத்துச்செய்ததனை விரித்துச்செய்தலு மிருவகையையுந் தொகைவகைவிரியாகப் பகுத்துச்செய்தலும் வடமொழியைத் தமிழ் மொழியாகப்பெயர்த்துச்செய்தலுமெனப் பெரியோராற்கூறப்படும் பான்மையையுடைய அந்நால்வகையுமென்றவாறு. (கஉ)

13. பாயிரமுன்பின்பகர்நெறியினிலுறும்.

(எ-ன்) தொகைச்சூத்திரத்துட் பாயிரமுதலுபுவென்று ரவை யிரண்டு முணருமாறுணர்-ற்று.

(இ-ள்) பொதுவுஞ்சிறப்புமெனக் கூறிய பாயிரங்களினிலக் கணங்க ளிந்நூன்முகத்து முன்னரும் பின்னருங் கூறு மிருவகைச்சூத் திரங்களா னறியப்பெறு மென்றவாறு. எனவே வேறெடுத்துக் கூறப் படுவதில்லை யென்பதாம். (கங)

14. அறம்பொருளின்பம்வீடவைபகர்நாற்பொருள்.

(எ-ன்) நாற்பொருணலனுறநவில்வனவாகியென்று ரவையிவை யென்பதுணர்-ற்று.

(இ-ள்) அந்நூல்கள் பகருநாற்பொருள் அறனும் பொருளு மின்பமும் வீடுபேறுமாமென்றவாறு. (கச)

15. நூலினொருபொருணுதலியதொன்றாய்ச்
சில்வகையெழுத்திற்செறிந்திடும்யாப்பாய்ப்
பலதிறப்பயன்றெரிவுடையதோர்பண்பாய்ப்
படிமக்கலத்துட்படுநிழல்பொருவ
வொண்மைபுநுண்மைபுமுறுவதுசூத்திரம்.

(எ-ன்) நூல்கட்கங்கமாகிய சூத்திரங்களினிலக்கணமுணர்-ற்று.

(இ-ள்) மேற்றொகுத்தன்முதலாய் நால்வகையாப்பிற்றும் நூலினு ளொருபொருளைக் குறித்ததொன்றாகிச் சில்வகையெழுத்தினு லகல் வின்றியடங்கியயாப்பா யுரைக்குங்காற் பலவகைத்தாய பொருள்க ளெல்லாந் தன்னகத்தடக்கி யாராயப்படுவதோர் பண்புடைத்தாகி யாடி

சிறிதாயினும் அகன்றபொருள்களின்வடிவை யகத்தடக்கியறிவித்தாற் போல நுண்ணியபொருண்மையோடு விளக்கமுமுடைத்தாய் மிகுவது சூத்திரமாமென்றவாறு. (கரு)

16. அதுவே,
மாட்டுறுப்பரிமாநோக்கந்தவளைப்
பாய்த்தாற்றொழுக்குப்பருந்தின்வீழ்வொடு
நிரனிறைவிளக்கெனும்பொருள்கோணிலைத்தே.

(எ-ன்) சூத்திரங்களின்பொருள்கோணிலையுணர்-ற்று.

(இ-ள்) அச்சூத்திரம் மாட்டுறுப்புமுதலாகத் தீபகமீறாகக் கூறப்பட்ட வேழு பொருள்கோணிலையை யுடைத்தென்றவாறு. நிலைமை யுடைத்தென்றதனு லொழிந்தபொருள்கோளான்வருவனவுங்கொள்க. ()

17. ஓத்தெனப்படுவதோரினப்பொருளைக்
கோத்தொருநெறிபடக்கூறுவதாகும்.

(எ-ன்) இஃதோத்திலக்கணமுணர்-ற்று.

(இ-ள்) மேலோத்தெனக்கூறப்பட்டது ஓரினமாகியபொருள் களையிதற்கிஃதியைபுடைத்தென்ன நேரினமணிகளை வடத்திற்கோத்தாற் போல அடைவிலேசேர்த்தோரியலாகியநடைபெறக் கூறுவதாமென்ற வாறு. அது வேற்றுமையோத்து, வேற்றுமைமயங்கியல், விளிமா பெனமுறையே வேற்றுமையாயினும் வேறுவேறியலாக்கி யொரோரின மாகவுரைத்தவாற்றானுணர்க, (கள)

18. படலமென்பது பன்னெறிப்பொருளாற்
புடைபடவிரவியபொதுமொழித்தொடர்பே.

(எ-ன்) படலமென்பதனிலக்கணமுணர்-ற்று,

(இ-ள்) படலமென்றுகூறப்படுவது பலவேறு நடைபெற்று வரு பொருளா விடம்பெற்றுவிரவிய பொதுமொழித்தாய்வருந் தொடர் புடைத்தாமென்றவாறு. (கஅ)

19. அவையொருமூன்றுமடக்குதல்பிண்டம்.

(எ-ன்) பிண்டமாமாறுணர்-ற்று.

(இ-ள்) மேற்கூறிய சூத்திர மோத்துப் படல மென்னுமூன்றுறுப்பையு மகத்தடக்குவது பிண்டமாமென்றவாறு. அம்மூன்றினையு முறுப்பெனவே பிண்டமென்ப துறுப்புடையவயவியென்பதுபெற்றும். அவையாவன: தொல்காப்பியமென்பது பிண்டம். அதனுள் எழுத்ததிகாரம் சொல்லதிகாரம் பொருளதிகாரம் என்பன படலம். ஒழிந்தவிரண்டும் ஒத்தும் சூத்திரமுமாம். (கசு)

20. மிகத்தெளிவுடையவகத்தியமதுபோன்
முத்தமிழுட்கொளுமூன்றுபிண்டமுமுறுப்
பொத்தொருங்குட்கொளலுறின்மகாபிண்டம்.

(எ-ன்) மகாபிண்டமாமாறுணர்-ற்று.

(இ-ள்) மிகவுமுந்துநூல்களையாராய்ந்து தெளிந்த கேள்வியையுடைய அகத்தியனாற்கூறப்பட்ட வகத்தியமென்னு நூல்போல இயற்றமிழ் இசைத்தமிழ் நாடகத்தமிழ் என்னு மூன்று பிண்டத்தினையுந் தனக்குறுப்பாகப் பொருந்தும்படி முழுதுமுட்கொண் டொருநூலாக நிற்றல்பொருந்தின் மகாபிண்டமாமென்றவாறு. (உ0)

21. உற்றதுபதப்பொருளுதாரணமூன்றுடன்
கற்றவர்வினாவிடைகாட்டுதல்காண்டிகை.

(எ-ன்) வைத்தமுறையானே காண்டிகையாமாறுணர்-ற்று.

(இ-ள்) நூல்களைக்கற்றுணர்ந்த வாசிரியர் சூத்திரத்துட்கூறக் கருதியதுணர்த்தலுஞ் சூத்திரத்துட்சொற்றெறும் பொருளுணர்த்தலு மதற்குதாரணமுணர்த்தலு மென்னுமிம்மூன்றுடன் கடாவுங் கடாயதற் கெதிர்மொழியுங் காட்டுதல் காண்டிகையாமென்றவாறு. வினாவல்-கடாவல், விடை-அதற்கெதிர்மொழி. (உக)

22. ஒன்றியசூத்திரத்துட்பொருளன்றியு
மின்றியமையாதனைபுணர்த்திசைத்தனைர்

துறுப்புடனிருதிறத் துரையிடனாகமெய்ந்
நிறுத்தியதொன்றெனநிகழ்த்து தல்விருத்தி.

(எ-ன்) முறையானேவிருத்தியாமாறுணர்-ற்று.

(இ-ள்) புலவனாற்கூறக்கருதிய பொருளினைக் கூறுதற்குப்பொருந்திய சூத்திரத்துட் சொல்லோடும்பொருளன்றி யெஞ்சிநின்றவற்றையு மிவ்விடத்திற்கிஃதின்றியமையாதென்பனவற்றையு மவ்விடத்திற் கொணர்ந்துபொருத்திச் சொல்லப்பட்ட காண்டிகையுறுப்பாகியவைந் தோடுங்கூட்டி யதற்குத் தன்னூலிடனாகவும், பிறநூலிடனாகவு மூன்மை நிலைநிறுத்தப்படுவதொன்றாய் நடத்துதல் விருத்தியாமென்றவாறு. உறுப்பைந்தாவன. கருத்துமுதல் விடையீறாகக்கூறியவைந் தென்றறிக. இருதிறத்துரையிடனாகவென்பது தன்னூல் பிறநூலென்னுமிரண்டிடனாகவென்றறிக. (உஉ)

23. பொருளிலகூறன்மருணிலைத்தாத
வின்னாச்சொற்பெறல்வெளிறுபட்டிழிதன்
மொழிந்ததைமொழிதன்முரண்கொளமொழிதல்
குறைபடக்கூறன்மிகைபடவிளம்பல்
சந்தவின்பந்தழுவுதலின்மை
யெதிர்மறுத்துணர்த்தலென்றிவையுளப்படக்
கூறினரீரைங்குற்றநூற்கே.

(எ-ன்) மேலதிகாரப்பட்டமுறையேயீரைங்குற்றமுமுணர்-ற்று.

(இ-ள்) பொருளிலகூறலென்பது முன்னும் பின்னும் வருகின்ற பொருண்மைக்கொப்பின்றிப் பயனில்லாதன கூறல். மருணிலைத்தாதலென்பது கேட்போர்க்குப் பொருள்விளங்காமன் மருளுதற்கிடனாதல். இன்னாச்சொற்பெறலென்பது கேட்போர்க்கின்னாபாப்பிற்றாயிருத்தல். வெளிறுபட்டிழிதலென்பது குறிப்புமொழிசிறிதுமின்றி வெளிப்படக் கூறல். மொழிந்ததைமொழிதலென்பது ஒருகாற்கூறியதனைப்பின்னுங் கூறல். முரண்கொளமொழிதலென்பது முதலே கூறியபொருளோடு மாறுகொள்ளுமாறுபின்னர்க்கூறல் குறைபடக்கூறலென்பது முதலே யதிகரித்தபொருள்களுட்சிலவற்றைக்கூறாதொழிதல். மிகைபடவிளம்பு

லென்பது அதிகரித்தபொருளன்றிப் பிறபொருளுங்கூறல். சந்தவின்பந் தழுவுதலின்மையென்பது எடுத்த யாப்பிற்கிணங்குமோசையின்றிக் கூறுதல். எதிர்மறுத்துணர்த்தலென்பது எதிர்மறுத்துணர்த்தலுங் குற்றமாமென்றவாறு. அஃதாவது பாவஞ்செய்தானிரயம்புகுமெனக் கருதிக்கூறுவான் தவஞ்செய்தான் சுவர்க்கம்புகுமென்றல். இவ்வாறு கூறிற் சுவர்க்கம்புகுமென்னும் பொருடோன்றி நிரயம்புகுமென்னும் பொருடோன்றாமையிற் குற்றமாயிற்று. என்னை? "எதிர்மறுத்துணரினித்திறத்தவுமவையே" என்னுமாபியற்சூத்திரத்தானுணர்க. (உ௩)

24. அழகெனத்தருவதரிறபாடி
ணகலாநடைத்தாயாழமதுடைத்தாய்ப்
பொருள்புலப்பாட்டிற்பொருணலஞ்சொன்னல
னோசையினிமையோடியம்பயத்த
லுலகமலையாமையுதாரணம்புணர்த்த
லவிறுதொறும்புதுவதுவாய்நயனளிப்பதி
னீரைந்தாமெனவியம்பினர்புலவர்.

(எ-ன்) ஈரைந்தழகுமுணர்-ற்று.

(இ-ள்) நூலுக்கழகெனும்படிக்குத் தருவது குற்றமற வாராயிற் சூத்திரஞ்சில்வகையெழுத்தாற்செறிந் திறப்பவகலாதநடைத்தா யாழ்ந்த பொருளுடைத்தா யிலக்கணவான்களுக்குப் பொருள் புலப்படுவதாய்ப் பொருணலனுஞ் சொன்னலனு மோசையினிமையுமுடைத்தாய்க் கற்றோர்க்குப் பயன்றருவதா யுலகத்தோடு மாறுபடுதலின்றியுதாரணம் புணர்ப்பதாய்க் கற்குந்தொறும் புதுவதா யின்பமளிப்பதோடு மீரைந்தென்றுகூறினர் புலவரென்றவாறு. (உச)

25. உள்ளுறுத்தமைத்தவுத்திவகையுணர்த்தி
னுள்ளியதுணர்த்தலுரைமுறைவைப்பே
தொகைபெறநாட்டல்வகைபெறக்காட்டல்
விரிந்தவையிவையெனவிழுமிதிற்கூட்டல்
தொகுத்தமொழியின்வகுத்தனகோடன்
மொழிந்துமொழிந்ததன்றலைதடுமாற்றே

புலபொருட்கேற்பினல்லவைகோடன்
மொழிந்தபொருளோடொன்றவைத்தன்
மொழிந்தனமென்றன்மொழிவாமென்ற
லிறந்ததுகாத்தலெதிரதுபோற்றன்
மொழியாததனைமுட்டின்றிமுடித்தல்
வந்ததுகொண்டுவாராததுமுடித்தல்
வாராததுகொண்டுவந்ததுமுடித்தல்
பிறன்கோட்கூறறன்கோட்கூறல்
பிறனுடம்பட்டதுதானுடம்படுத
லறியாதுடன்படலாணைகூற
றன்குறியிடுதறந்துகொணர்ந்துரைத்தன்
மறுதலைசிதைத்துத்தன்றுணிபுரைத்தன்
மாட்டெறிந்தொழிதலிரட்டுறமொழித
லொன்றினமுடித்தறன்னினமுடித்தன்
மாட்டுறுப்பினவாமனக்கொளக்கூற
லுய்த்துக்கொண்டுணர்தலினுரனுடையனவாய்த்
தீபகவகையாற்சிறப்புறக்கூறல்
சொல்லினெச்சஞ்சொல்லியாங்குணர்த்தலென்
றமைத்ததினகப்படவமையாதனவுஞ்
சுருங்கக்கூறியதொடர்பினைநாடி
யொருங்கமைத்துணர்த்துதலுரவோர்கடனே.

(எ-ன்) மேலதிகாரம்பாரித்த பன்னிரண்டினு ளிறுதிநின்ற தந்திரவுத்தியாமாறுணர்-ற்று.

(இ-ள்) உள்ளியதுணர்த்தன் முதலாகச் சொல்லினெச்சஞ் சொல்லியாங்குணர்த்தலீறாகச்சொல்லப்பட்ட முப்பத்திரண்டு மத்தன் மையபிறவுந் தந்திரவுத்திகளாம். அவற்றையு மிதனுட்கூறியதாகப்பிறர்க் குணர்த்துத லறிவுடையோர்க்கு முறைமையாமென்றவாறு. தந்திர மெனினு நூலெனினுமொக்குமென்றவாறு. உத்தியென்பது வடமொழிச் சிதைவு. அஃதாவது சூத்திரத்தின்பாற் கிடப்பதோர் பொருள் வேறுபாடுகாட்டுவது. உள்ளுறு................புணர்த்தினென்பது முந்துநூல்செய்த ஆசிரியர் நூற் கின்றியமையாச்சிறப்பென்பதாகக்

கருதியமைக்கப்பட்ட தந்திரவுத்தியினது கூறுபாடுணர்த்தினென்ற வாறு.

உள்ளியதுணர்த்தலென்பது சூத்திரத்திற்சொற்றசொற்குக்கூறிய வடைவே பொருளுணர்த்துவதன்றி யிதன்கருத் திஃதெனவுணர்த்தல். அஃதாவது எழுத்தெனப்படுப என்னுஞ்சூத்திரத்தினுள் எழுத்தினைத் தென்றறிவித்தலை நுதலிற்றென்றல்.

உரைமுறைவைப் பென்பது நூலுண் முன்னம் பலபொருளை யதிகரித்தவழிப் பின்னுமவற்றை யம்முறையேவிரித்தல். அஃதாவது உயர்திணை யஃறிணையென வதிகரித்து ஆடூஉவறிசொன் மகடூஉவறி சொல் என்னுஞ்சூத்திரங்களா னிறுத்தமுறைபிறழா துயர்திணையை முற்கூறல். இன்னுமிதனானே ஒரு சூத்திரத்திலே கருதின பொருளை வைத்து வருகின்ற சூத்திரத்துளோதாததன் காரியமாயின வழியதனைச் சூத்திரந்தோறுங் கொணர்ந்துரைத்தலுமாம். அஃதாவது எழாவ துயிர்மயங்கியலில் "அகரவிறுதிப்பெயர்நிலைமுன்ன" ரென்னுஞ் சூத்திரத்திற் கசதபத் தோன்றினெனக்கூறி, வினையெஞ்சுகிளவியுமென்னுஞ் சூத்திரத்திற் கூறிற்றிலரேனும் அதிகாரமுறைமையினால் வல்லெழுத்து வரும்வழி யெனவுரைத்தல்.

தொகைபெறநாட்டலென்பது வகைபெறக்கூறல் வேண்டுமாயினு மதனைத் தொகுத்துக்கூறல். அஃதாவது "அகாமுதனகரவிறுவாய் முப்பஃதென்ப" என்றாற்போல்வன. இன்னும் பலசூத்திரத்தாற்கூறிய பொருளை யித்துணையுங்கூறப்பட்ட திஃதெனக் கூறலுமாம். அஃதா வது "தூக்கியல்வகையேயாங்கெனமொழிப" என்பதனாற்கொள்க.

வகைபெறக்காட்டலென்பது தொகைபெறக்கூறியவற்றை வகை பெறக்கூறல். அஃதாவது "அகாமுதனகாவிறுவாய்முப்பஃதென்ப" எனத்தொகுத்தவற்றை அ இ உ எ ஒ என்றும் ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ என்றும் வகுத்தல். அன்றியும் "ஔகாரவிறுவாய்ப், பன்னீ ரெழுத்து முயிரெனமொழிப" "னகாரவிறுவாய்ப், பதினெண்ணெ ழுத்துமெய்யென்மொழிப" என்பனவுமாம்.

விரிந்தவையிவையெனவிழுமிதிற்கூட்டலென்பது, தொகுத்தும் வகுத்துங்காட்டியவற்றை யிறப்பவிரியாமல் விழுமியவாக விரித்து முடித்தல். அஃதாவது "உயிர்மெய்யாய்தமுயிரளபொற்றள, பஃகிய இ உ ஐ ஔ மஃகான், றனிநிலைபத்துஞ்சார்பெழுத்தாகும்" என்னு மதனுட் சார்பெழுத்தெனத் தொகையாலொன்றும் வகையாற்பத்து மாகியவற்றை "உயிர்மெய்யிரட்டுநூற்றெட்டு" என்னுஞ்சூத்திரத்தான் "ஒன்றேழிமுந்நூற்றெழுபானென்ப" என விரித்ததன்மேலும் உயிர் மெய்க்குறில் உயிர்மெய்ந்நெடில் உயிர்மெய்யகரமெனவும் வல்லினம் மெல் லினம் இடையினம் எனவும் இறப்பவிரியாமல் விழுமிதாய்க்கூட்டல்.

தொகுத்த.......கோடலென்பது "நெட்டெழுத்திம்பரும்........... வல்லாறார்ந்தே" என்னுஞ்சூத்திரத்தாற் பிறிதுமோர்பொருள் வகுத் துக் காட்டல். அஃதாவது "குற்றியலுகரமுறைப்பெயர்.............. முதலும்" என்னுஞ் சூத்திரத்தான் மொழிமுதற் குற்றுகரமுங்கோடல். சொல்லின்முடிவி னப்பொருண்முடித்த லென்பது மது.

மூந்துமொழிந்ததன்றலைதடுமாற்றே யென்பது முற்படவதிகரித்த பொருளை யம்முறையிற்கூறாது முறைபிறழக்கூறுதல். அதனை யங்ஙனங் கூறுங்கால் ஒருபயனோக்கிக் கூறல்வேண்டும். அது புள்ளிமயங்கியலுள் "ஞகாரையொற்றிய" என்ற சூத்திரத்தினுள் ஞகாரவீறுகூறி யதன் பின்னர் ணகாரவீறுகூறாதே வருஞ்சூத்திரத்தினுள் "நகாரவிறுதியுமத னோரற்றே" என முடிபொப்புமைநோக்கிக் கூறியதாற் கண்டுகொள்க.

பலபொருட்....கோடலென்பது ஒருவகைப்பொருள் பலபொருட் கேற்குமாயினு மவற்றுணல்லதனைக்கோடல். அஃதாவது மெய்ப்பாட் டியலுள் அகத்திற்குரியவாகப் புகுமுகம்புரிதன்முதலாகக் கையற வுரைத்தலீறாகக் கூறிய அறுநான்குமெய்ப்பாடும் அகத்தினும் இரு வகைக் கைகோளுள்ளுங் களவினுள் முறையேவந்து கற்பினுள்ளும் முறையே வரப்பெறுமையி னவைகளவிற்கே யுரித்தென விதந்துகூறலா னறிக. அன்றியும் ஒருசூத்திரம் பலபொருட்கேற்குமாயினு மதற் குணல்லதனைப் பொருளாகக்கோடலுமாம். அஃதாவது "வேண்டிய கல்வியாண்டுமூன்றிறவாது" என்பதற்குக் கல்விவேண்டிய ஆண்டிற

வாறு அக் கல்வியெல்லா மூன்றுபாதத்தைக் கடவாதென்றதனுலறிக. அன்றி ஓதற்பிரிதற் காண்டுமூன்றென்பது பொருந்தாது. அன்றியும் "இலனென்னுமெவ்வமுரையாமையீதல், குலனுடையான்கண்ணேயுள" என்பதனுட் பலபொருடோன்றியவிடத்து முதலேகண்ட விரண்டு கிரிகையுமன்றி யிரப்போனின்னு மொருவர்பால் யானென்று மில னென்னு மானபங்கங்கூறும விரக்கப்படுவோ னீகையெனப் பொருள் கோடலுமாம்.

மொழிந்தபொருளோடொன்றவைத்த லென்பது சூத்திரத்துப் பொருள் பலபடத்தோன்றுமாயினு முற்பட்ட சூத்திரயாப்பிற்கேற்பப் பொருளுரைத்தல். அஃதாவது "இலனென்னுமெவ்வமுரையாமை" என்னுங் குறளுக்கு முன்னருந்திக்கேற்பக்கூறியபொருளன்றி "நல்லா றெனினுங்கொளறீதுமேலுலக, மில்லெனினுமீதலேநன்று" என்னு மேலிற்குறளிற் பொருள்கட்கொன்ற வும்மையைவிரித்து இலனென்னு மெவ்வமுரையாமையு மீகையுங் குலனுடையான்கண்ணேயுள எனவுரைத் தல் கொள்க.

மொழிந்தனமென்றலென்பது பலபொருள்களையும் அதிகரித்த வற்றுட் சிலபொருளை மேற்கூறப்பட்டனவென்றல். "அஃதாவது மாத் திரைவகையுமெழுத்தியல்வகையு, மேற்கிளந்தன்ன" வென்றதனுற் கொள்க.

மொழிவாமென்றலென்பது சிலபொருளைக்கூறி யவற்றுள் ஒன்றனை யின்னவிடத்துக் கூறுவாமென்றல். அஃதாவது "குற்றியலிகரநிற்றல் வேண்டும்" என்ற சூத்திரத்தில் ஒருமொழிக்குற்றியலிகரங்கூறி அதன் பின்னர் இருமொழிக்கண்ணுங் குற்றியலிகரம் வருமென்பதற்கு "புணரியனிலையிடைக்குறுகலுமுரித்தே" என்னுஞ்சூத்திரத்தின் "உணரக் கூறின்முன்னர்த்தோன்று" மெனக்குற்றியலுகரப்புணரியலுள்ளே கூறப் படுமென்றதனுலுணர்க.

இறந்ததுகாத்தலென்பது மேற்கூறப்பட்ட சூத்திரத்தாற் கூறப் படாதபொருளைப் பின்வருஞ்சூத்திரத்தானமைத்தலாம். அஃதாவது முதனூலுக்குச் சூத்திரங்கூறியபின்னர் "வழியெனப்படுவததன்வழித் தாகும்" என்று வழிநூற்குக்கூறிய சூத்திரத்தில் வழிநூலானுபயன்

கூறாது மேல்வருஞ் சூத்திரங்களாயவவற்றின்கண் "வழியினெறியே நால்வகைத்தாகும்" என்றபின்னர் அதனாலாயபய னதனிற்கூறாது தொகுத்தல் விரித்தல் என்னுஞ்சூத்திரத்தா லதனாலாயபயன் கூறல் இறந்ததுகாத்த லாயிற்று.

எதிரதுபோற்றலென்பது முன்புகூறிய சூத்திரத்தானே மேல் வருஞ் சூத்திரப்பொருளையும் பாதுகாத்தமைத்தல். அஃதாவது நூன் மரபினுள் "உட்பெறுபுள்ளியுருவாகும்மே" எனப்பகாரத்தோடு மகாரத் திடை வரிவடிவிற்கிலக்கணங்கூறப்புகுந்து மேல்வருஞ்சூத்திரத்தின் "மெய்யினியற்கைபுள்ளியொடுநிலையல்" என்றதனால் மெய்களிற்கூடிப் புறத்திற் பெறும்புள்ளியோ டுள்ளாற்பெறும்புள்ளியும் மகாரத்திற்கு வரிவடிவாமெனக் கோடல் எதிரது போற்றலாயவாறு காண்க. "அற்புதஞ்சிலேடை" யென்னும் பொருளணியியற்சூத்திரமுமிது.

மொழியாததனைமுட்டின்றிமுடித்தலென்பது சூத்திரத்தின் கண்ணேயெடுத்தோதாதபொருளை முட்டுப்படாம லுரையினான் முடித் தல். அஃதாவது "அரையளவுகுறுகன்மகரமுடைத்தே, யிசையிட னருகுந்தெரியுங்காலை" என்பதனாற்கொள்க. என்னை? அரையளவாகிய வெல்லையிற்குறுகிக் கான்மாத்திரையவாதலை மகரமெய்யுடைத் தஃதி யாண்டோவெனின் வேறோரெழுத்தின தோசையின் கண்ணதுதான் சிறுபான்மைபவாகிவரு மாராயுங்காலத்தென்பதனாலாயிற்று. என்னை? கான்மாத்திரையென்பது சூத்திரத்தின் கண்ணவாய்ச்சொல்லி முடியா ததனை யுரையினான் முட்டின்றி முடித்தலானெனக்கொள்க. இக் கருத்தி னானே "சூத்திரத்திற்பொருளன்றியும்யாப்புற, வின்றியமையாதியைப வையெல்லா, மொன்றவுரைப்பதுரையெனப்படுமே" யென்றோதுவா ராயிற்று.

வந்ததுகொண்டுவாராததுமுடித்தல் என்பதும், வாராதது கொண்டுவந்ததுமுடித்தலென்பதுமான ஒருங்கெண்ணப்பட்டவிரண்டிற் கும் ஓரோவொன்றாகப்பகுத்து இலக்கணங்கூறியவிரண்டனுள் பின் னர்க்கூறிய சூத்திரத்தினுள் வந்ததனைக்கொண்டு முன்னர்க்கூறியசூத்தி ரத்துள் வருமிலக்கணத்திற்கு வாராததனைக்கூட்டிமுடித்தலும், முன் னர்க்கூறிய சூத்திரத்தினுள் வாராததனைக்கொண்டு பின்னர்க்கூறிய

சூத்திரத்துள்வரூமிலக்கணத்திற்கு வந்ததனைக்கூட்டி முடித்தலுமாம். அவையாவன: "கூறியவுறுப்பிற்சிலகுறைந்தியலினும், வேறுபாடின்றெனவிளம்பினர்புலவர்" எனவும், "அறமுதனான்கினுங்குறைபாடுடையது, காப்பியமென்றுகருதப்படுமே" எனவும் பொதுவியலுட் கூறிய சூத்திரங்களானுணர்க. என்னை? அறமுதனான்கினுங்குறைபாடுடையது காப்பியமெனவே, பின்னர்க்கூறிய சூத்திரத்தினுள்வந்தது கொண்டு அறமுதனான்குமொழித் தல்லாதவுறுப்பிற்குறைவதே பெருங் காப்பியமென்று முடித்தலானுங், கூறியவுறுப்பிற் சிலகுறைந்தியலினு மெனவே முன்னர்க்கூறியசூத்திரத்தினுள்வாராத அறமுதனான்கின் ஒன்றும் பலவுங்குறைபாடுடையது முறுப்பிற் சில குறைதலுங் காப்பிய மென்று வாராததனைக்கொண்டு வந்ததனோடு முடித்தலானுமென அடைவே கண்டுகொள்க. இவை தம்மிற்றுமாறுடினுமிழுக்காது.

பிறன்கோட்கூறலென்பது பிறநூலாசிரியன்கொண்ட கோட்பாட்டைக்கூறுதல். அஃதாவது "வேற்றுமைதானேயேழெனமொழிப" என்றல். எனவே, தன் கோட்பாடன்றென்பதாயிற்று.

தன்கோட்கூறலென்பது பிறநூலாசிரியன் கூறியவாறு கூறாது தன் கோட்பாட்டாற்கூறுதல். அஃதாவது "விளிகொள்வதன்கண் விளியோடெட்டே" என்றல்.

பிறனுடம்பட்டது தானுடம்படுத லென்பது பிறநூலாசிரியனுடம்பட்டதற்குத் தானுமுடம்படல். அஃதாவது இரண்டாம்வேற்றுமை செயப்படுபொருட்கண்வருமென்றார்பாணினியார் அஃதிவர்க்குமுடம்பாடு என்றல். அஃது இயற்றப்படுவதும் வேறுபடுக்கப்படுவதும் எய்தப்படுவதுமாம். அதற்குதாரணம்—எயிலையிழைத்தான், மறத்தைக் குறைத்தான், நூலைக்கற்கும் என அடைவேகாண்க.

அறியாதுடம்படல் என்பது தானறியாதவற்றைப் பிறபெரியோர் கூறியவாற்றானுடம்படல். அஃதாவது ஏழாநரகத்தின்தன்மைத்தெனச் சான்றோர்கூறியவழித் தனக்கது புலப்படாததாயினுந் தானதற்குடம்படல். இது வழிநூலாசிரியர்க்குமுரித்து.

ஆணைகூறலென்பது ஒருபொருளைக் கூறும்வழி யேதுவினாற் கூற லன்றித் தன்னாணையாற்கூறல். அது வேற்றுமை யேழெனப் பாணினி யார்கூறியவழி அவர் விளியை முதல்வேற்றுமையிலடக்கினார். அதற்குந் திரிபுகூறாதே யதனையெட்டாம்வேற்றுமை யென்றலும் ஆண்டுக் கடாவப் படாமை.

தன்குறியிடுத லென்பது உலகின்கண் வழக்கின்றி யாசிரியன்றன் குறியிடல். அஃதாவது உயர்திணை அஃறிணையென்பன.

தந்துகொணர்ந்துரைத்த லென்பது முன்னாராயினும் பின்னாரா யினு நின்ற சூத்திரச்சொல்லை யிடைநின்றசூத்திரத்திற் கொணர்ந்து புணர்த்துரைத்தல். அஃதாவது "நெட்டெழுத்திம்பருந்தொடர்மொழி யீற்றும், குற்றியலுகரம்வல்லாறூர்ந்தே" என்பதனில் முன்னின்ற சூத் திரத்தில் நிற்றல்வேண்டுமென்றசொல்லைக் கொணர்ந்து புணர்த் துரைத்தல்.

மறுதலைசிதைத்துத்தன்றுணிபுரைத்த லென்பது நெட்டெழுத் தேழளபெடையென்பன குற்றெழுத்தின் விகாரமென்பாரை மறுத்தது. அது அஅஅ என நின்றதல்லவென அவர் மறுதலையைச் சிதைத்து வேறோரெழுத்தென்று கூறல்.

மாட்டெறிந்தொழித லென்பது முன் னொருபொருட்கிலக்கணங் கூறிப் பின்னர்வருவது மதுபோலுமென்றல். அஃதாவது வுழாவ துயிர்மயங்கியலில் "உகரவிறுதியகரவியற்றே" என்றல்.

இரட்டுறமொழித லென்பது ஒருவகையானின்ற தொடர்ச்சொல் லாதல் ஒருசொல்லாதல் ஒரு செய்யுளகத்துப் பலபொருளைமொழிவதா மென்றவாறு. அஃதாவது "வந்தவாவென்னையெனவாட்கண்மடவாய் கேள், சிந்தைநலிகின்றதிருநீர்க்குமரியாட, வந்திலதனுயபயனென்னை மொழிகென்றாண், முந்திநலிகின்றமுதுமுப்பொழியுமென்றான்" என்ப தனாலறிக. என்னை? திருநீர்க்குமரியாடவெனவே அழகிய நீர்மையை யுடைய கன்னியாகிய நின்னைப் புணரவந்தேனென்பதனை மறைத்தன னாகவும், பொலிந்த தீர்த்தநீராகிய குமரியாற்றை யாடவந்தேனென

வெளிப்படையாகவுஞ் செம்மொழியாக விரட்டுறமொழிதலானும், அதனா லாய பயன்யாதென அக்காலத் திம்மூப்பு நீங்குமென அத்தச்சிலேடை யாகவுங் கொள்ளக்கிடந்தமையானு மெனக்கொள்க.

ஒன்றினமுடித்த லென்பது ஒன்றற்கிலக்கணங்கூறியவிடத்துக் கூறாது தொக்குநின்ற ஒழிபிற்கு மதுதானே விதியாகமுடித்தல். அஃதாவது "புள்ளியீற்றுமுன் னுயிர்தனித்தியலாது, மெய்யொடுஞ் சிவணுமவ்வியல்கெடுத்தே" என்னுஞ் சூத்திரத்தா னுணர்க. என்னை? இயல்பல்லாத புள்ளிமுன் னுயிர்வந்தாலும் அவ்விதி கொள்கவென முடித்தல். உதாரணம்:—ஆலடை, ஆலாடை எனவும், அதனை எனவும், நாடுரி எனவும் வரும்.

தன்னினமுடித்த லென்பது ஒருவகையுட்சிலவற்றிற் கிலக்கணங் கூறியவிடத்துச் சொல்லாதொழிந்தனவாய்த்தொக்கதற்கும் ஆட்சியுங் காரணமும்பற்றி யச்சூத்திரத்தினிடத் ததற்கும் வேறோரிலக்கணங் கூறிமுடித்தல். அஃதாவது "அ இ உ அம்மூன்றுஞ்சுட்டு" என்னுஞ் சூத்திரத்தா னுணர்க. என்னை? குற்றெழுத்தென்றவற்றுண் மூன்றனைச் சுட்டென்னுங் குறியவென்று கூறியவிடத்து எகரமும் வினாப்பொரு ளுணர்த்துமென முடித்தல்.

மாட்டுறுப்பினவாமனக்கொளக் கூறலென்பது ஒரு சூத்திரத்துப் பொருள்கொள்ளுங்கா லகன்று பொருள்கிடப்பனவும், அணுகிக்கிடப் பனவுமான விருவகையையும் பொருண்முடியுமாற்றாற் கொணர்ந்துரைப் பச்செய்தல். என்னை? "அகன்று பொருள்கிடப்பினும் மாட்டென மொழிப பாட்டியல் வழக்கின்" என்றாராகலின். மனக்கொளவென்பது கேட்டோர் மனத்துட் கொளவென்பதாம். இதற்குச் சூத்திரம் "வடவேங்கடந்தென்குமரி .... படிமையோனே" என்பதெனக்கொள்க. அதற் கிளம்பூரணருரையன்றி நச்சினார்க்கினியா ரெழுதின வுரையைக் கண்டுகொள்க. அவற்றை யீண்டுரைப்பிற் பெருகும்.

உய்த்துக்கொண்டுணர்த லென்பது ஒரு சூத்திரத்தா னொன்றற் கிலக்கணங்கூறியவழி யதற்குப்பொருந்தாமையுளதாகத் தோன்றின் அதனையு மதற்குப் பொருந்தினவழியாகக் கூட்டுதல். அஃதாவது

ஏழாவ தியிர்மயங்கியலிற் "பனியெனவருஉங்காலவேற்றுமைக், கத்து மின்னுஞ் சாரியையாகும்" என்பதன்கண்ணுணர்க. என்னை? பனியத்துக்கொண்டான், பனியின்கட்சென்றான், பனியிற்சென்றான் என வரும். அவற்றுள் இன்பெற்றுழி முன்னர்க்கூறிய நாழிக்காயம், உரியக்காயம் என்பதுபோல வல்லெழுத்து மிகாது வீழ்க்க என்பதற்குப் பொருந்த வுய்த்துணர்தல்.

தீபகவகையாற் சிறப்புறக்கூறலென்பது குணந் தொழில் சாதி பொருள் என்னு நான்கனுள் ஒன்றைக்குறித்தவொருசெல் செய்யுளிடத்து முதலிடைகடையென்னு மூன்றிடத்தினுள் ஓரிடத்தாகி யாதியினின்ற தந்தத்தளவுமோடவும் இடைநின்றது முன்னும்பின்னு மோடவும், இறுதிநின்ற திடையு முதலு மோடவுங் கவினபெறக்கூறுதல். என்னை? "குணந் தொழில் சாதி பொருள்குறித்தொருசொல், லொருவயினின்றும் பலவயிற்பொருடரிற், றீபகச்செய்யுண்மூவிடத்தியலும்" என்பது அணியியலாகலினுணர்க. அவற்றிற்கெல்லா முதாரண மீண்டுரைப்பிற் பெருகும்.

சொல்லினெச்சஞ்சொல்லியாங்குணர்த்த லென்பது "பெயர்வினையும்மைசொற்பிரிப்பெனவொழியிசை, யெதிர்மறையிசையெனுஞ்சொல் லொழிபொன்பது" மென்னுஞ் சொல்லெச்சங்களைக்கண்டு ஆங்காங்குச் சொல்லியவாற்றாற் பொருள்கோடலாம். அன்றியும் தொல்காப்பியர் நோக்கம்பற்றிப் பிரிநிலை முதலாகச்சொல்லப்பட்டவெனினுமாம். அவற்றிற்கெல்லா முதாரண மீண்டுரைப்பிற் பெருகும். அவையும் வந்துழிக் கண்டுகொள்க.

"என், றமைத்ததினகப்படவமையாதனவுஞ், சுருங்கக்கூறிய தொடர்பினைநாடி, யொருங்கமைத்துணர்த்து தலுரவோர்கடனே" என்பது, (என்றென்பது - எண்ணிடைச்சொல்.) ஆதலா லிங்ஙனங்கூறிய முப்பத்திரண்டாக அமைத்ததி னமையாதனவாமவற்றையுஞ் சுருங்கக் கூறலென்னு மழகுநோக்கியும், முன்னோர் தந்திரவுத்தி முப்பத்திரண்டெனக்கொண்ட வரையறை யிகவாமைக்கூறியதாகவுநோக்கி யிதனகத் தமைந்தனவாகவுணர்த்து தல் அறிவுடையோர்க்கு முறைமை யென்றவாறு. அமையாதனவாவன பலவுள. அவற்றுள்ளுஞ் சில வருமாறு. வேண்டாதுகூறிவேண்டியதுமுடித்தல், எய்திபதுவிலக்கிப் பிறிதுவிதி

வகுத்தல், பொருளிடையிடுதல் என்பன. அவையாவன:– "ஏனையுயிரே யுயர்திணைமருங்கிற், றம்வினைகொள்ளாவென்மனார்புலவர்" என்னுஞ் சூத்திரத்தானும், "அளபெடைமிகூஉமிகரவிறுபெய, ரியற்கையவாகுஞ் செயற்கையவென்ப" என்னுஞ்சூத்திரத்தானும், "ஒருமைசுட்டியபெயர் நிலைக்கிளவி, பன்மைக்காகுமிட னுமாருண்டே" என்னுஞ் சூத்திரத்தானு முணர்க.

இவற்றுள் முன்னைய விரண்டும் விளிமரபு. மற்றையது எச்சவியல். அவற்றொடும் "ஆற்றொழுக்கரிமாநோக்கந்தவளைப், பாய்த்துப்பருந் தின்வீழ்ச்சிநிரனிறை" யென்பனவு மொருசாராசிரிய ருத்தியுளமைத்தா ரெனக் குறித்ததாம். அன்றியும், ஒன்றற்கிலக்கணங்கூறும்வழி யொருசூத்திரத்துட் பலவுத்திவருவனவு முளவென்னுநோக்கத்தாற் கூறியதூஉமாம். அதற்குதாரணம்:—"எல்லாமொழிக்குமுயிர்வரு வழியே, யுடம்படுமெய்யி னுருவுகொளல்வரையார்" என்பதனானுமுணர்க. என்னை? மூவகைப்பட்டமொழிக்கு முயிர்முதன்மொழிவருமிடத்து இடை யுடம்படுமெய்யாகிய வடிவுகோடல் நீக்காரென்புழி யுடம்படுமெய் யென்றாலல தவை யிவையெனக் கூறா ரவற்றை யுரையிற்கோடலென்று மவை யகரமும், வகரமும் எனவும், அவற்றுள் இ ஈ ஐ வழியவ்வும் அல்லனவருவழி வகரமும் வரும் எனக்கோடலானும் ஒன்றினமுடித்த லென்னுமுத்தியான் விகாரப்பட்ட மொழிக்கண்ணு முடம்படுமெய் கொள்ளப்படுமெனக்கூறியதற் குதாரணம் மாவடி, ஆயிருதிணையெனவும் இரண்டுத்திவந்தவாற்றானறிக. தந்திரவுத்திமுற்றும். (௨௫)

26. அடிவரையுளவாயடிவரையிலவாம்
பாட்டினும்பாவின்றெழுகிளவியினுங்
காட்டியவெழுநிலத்தனவாய்க்கழறிய
பொருளொடுகலந்துபுரைதீரொலிசெறிந்
தெண்ணத்தகைசாலீராறடிநிமிர்
பண்ணத்தியினும்பயில்வனவாகும்.

(எ-ன்) இதுவும் அந்நூலிற்கோரொழிபுகூறுதனுதலிற்று.

(இ-ள்) குறளடிமுதலாய வைவகையடியானும் வரையறையுள வாம்பாட்டினும், அடிவரையறையிலவாம் பாட்டினும் பாவின்றி

பொழுகலாறுடைய பலசொற்றொடராலுங் கற்றோர்காட்டப்பட்ட வெழுநிலத்தெழுந்த செய்புணடைத்தாயும் அவற்றுட்பாட்டிற்குக் கூறிய பொருளோடுங்கூடிக் குற்றமற்ற ஓசைசெறியப்பட்டுப் புலவரானெண்ணும்படிக்குத் தலைமைசான்ற பன்னிரண்டெனலாய நாற்சீரடியின் மிகுந்துங் குறைந்தும் வரும் பாவினத்தோடும் பயில்வனவாம் நூல்களென்றவாறு. எழுநிலமாவன:—பாட்டும், நூலும், உரையும், பிசியும், முதுமொழியும், மந்திரமும், குறிப்புமொழியும். அவற்றுள் அடிவரையுளபாட்டாவன:—வெண்பா, ஆசிரியம், கலி, வஞ்சி, மருட்பா, பரிபாடல் என்பன. அடிவரையிலவாவன:—நூல், உரை, பிசி, முதுமொழி, மந்திரம், குறிப்புமொழி யெனக்கொள்க என்னை? "எழுநிலத்தெழுந்த செய்யுட்டெரியி, னடிவரையில்லனவாறெனமொழிப" எனவும், "அவைதாம், நூலினான உரையினான, நொடியொடு புணர்ந்த பிசியினான, வேதுநுதலியமுதுமொழியான, மறைமொழிகிளந்தமந்திரத்தான, கூற்றிடைவைத்த குறிப்பினான" என்பவற்றானுமுணர்க. அன்றியும் இவற்றிற்கு முன்னர்ப் பாட்டுரைநூலேயென்னுஞ் சூத்திரத்தானுமுணர்க. எழுநிலத்தெழுந்தவென்பது வரையறைப் பண்புப்பெயர். பண்ணத்தியென்பது பாவினம். பண்ணைத்தோற்றுவிக்கையாற் பண்ணத்தியென்று பெயராயிற்று. இவை இளம்பூரணர் முதலாயினொருசாராசிரியர் நோக்கம். நச்சினார்க்கினியர் நோக்கமுமுணர்ந்துகொள்க. (உசா)

27\. விதியாச்செய்புளின்மிகுத்திலக்கணமு
மதியானுரைத்ததும்வழங்கன்ஞாபகமா
விரிந்தநூல்களுள்வேறுவேறினமாய்த்
தெரிந்தவியல்களைச்செம்மையிற்றமிதுமி
வெள்ளையினகவலின் விளம்பலுமாபே.

(எ-ன்) இதுவும் அந்நூற்குக் கூறிக் கூறுத வொழி பெதிரது போற்றலென்னுமுத்தியாற் கூறுதனுதலிற்று.

(இ-ள்) இங்ஙனங் கூறப்பட்ட விலக்கணநூல்களை அகவலின் வெள்ளையி னறைகவென்று முந்துநூல் விதித்தமையுளவாகவும், விதியாதுநீக்கிய கட்டளைக்கலித்துறை, ஆசிரியவிருத்தமென்னும் பாவினத்தாற் பின் பிலக்கணநூல்செய்தோ ரிலக்கணங்களைக்கூறியதுங் கற்றோரா

லெடுக்கப்பட் டிலக்கின்கண்ணே வழங்குதன்ஞாபகமாக விரிந்த நூல்க ளுள்ளும் பலவேறினமாக வாராய்ந்து பிரிக்கப்படும் பலவியல்களுள்ளு மோரியலை முதலே வெண்பாவிற்கூறி, யதன்பின்னர்வரு மேனையியல் களை யகவலானு மழகிதாய்த் தமிதமிகூறுவது மரபாமென்றவாறு. அவை யாப்பருங்கலக்காரிகை, கயாகரநிகண்டு, சூடாமணிநிகண்டெனக். இலக்கணமு மென்றவும்மை யெச்சவும்மையாதலாற் கதைதொடர்ந்த விலக்கியங்களுள்ளும் வேறுவேறு பாவாகத் தமிதமிகூறலு மரபென்ற வாறு. அவை சிலப்பதிகாரத்துள் மங்கலவாழ்த்துக்காதை மயங்கிசைக் கொச்சகக்கலியினும், அந்திமாலைச் சிறப்புச்செய்காதை, இந்திரவிழவூ ரெடுத்தகாதை, கடலாடுகாதை இவை நிலைமண்டிலவாசிரியத்தும், கனாத்திறமுரைத்தகாதை கலிவெண்பாவிலும் வந்தவாறுகாண்க. ஒழிந் தனவு மிவ்வாறுவந்தமை யாங்காங்குக் காண்க. (உஎ)

28. இருவகைநூன்மரபிவையெனமொழிப

(எ-ன்) இதுவும் அந்நூலினைத் தொகைவகைவிரிப்படுத்தி யொழிபுகூறுதனுதலிற்று.

(இ-ள்) நூலெனத் தொகையானொன்றாய்நின்றவது இலக்கண விலக்கியமென வகையானிரண்டாம். நூலினது விரியின்மரபிவை யெனக்கூறுவர் அகத்தியன் முதலிய தொல்லாசிரியரென்றவாறு. நூன் மரபு முற்றும். (உஅ)

29. புரப்போன்மரபினைப்புகலுங்காலைக்
குலனுங்குணனுங்குரவரைப்பேணு
நலனுங்கடவுளைநயத்தலுங்கருணையும்
புலனவித்தொழுகலும்பொறையுந்தோற்றமு
முலகியலறிந்துயிர்க்குறுதிகோடலுங்
கற்றவர்காமுறவாழ்தலுங்காந்தியு
மதிநிகர்கல்வியுங்கதிர்நிகர்வனவாம்
வாய்மையுந்தூய்மையும்வழுவுதலின்றாய்
வாடாக்கற்பகமணமலிபொற்பூக்
கோடாச்செங்கேற்கொற்றவனிதியறை
வான்சுவைமருந்தாயிரவாய்ச்சேடனிற்

கற்றனயாவுங்கழகத் துதவும்
பெற்றியன்மறந் தும்பிறன்பழிகூறான்
சதிருடையேனெனத்தற்புகழ்ந்தறியான்
முதுமொழியிலக்கணவிலக்கியமுறையே
புதுமொழிபுணர்க்கும்புலமையோனே.

(எ-ன்) வைத்தமுறையானே நுவல்வோன்றன்மையுணர்-ற்று.

(இ-ள்) நுவல்வோன் - நூனுவல்வோன், எனவே ஆசிரியனும். நூனுவல்வோனிலக்கணத்தைக் கூறுமிடத்துக் குலமுதல் தூய்மை யீறாகவெண்ணப்பட்ட பதினுலினுள்ளு மொன்றும் வழுவுதலிலனு மாகிக், கற்பகமணமலிபொற்பூமுதலிய மூன்றனையுஞ் சேடனையுமொப்ப வனுமாகிக், கற்றனகழகத்துதவும்பெற்றி, பிறன்பழிகூறாமை, தற் புகழாமை மூன்று முடையனுமாகி, முந்துநூல்கூறியபடியே யிலக்கண விலக்கியமிரண்டும் புதுமொழியாகப் புணர்க்கும் புலமையுமுடையோனு மென்றவாறு. முதுமொழி-முந்துநூல். கற்பகமணமலி பொற்பூமுதலிய மூன்றுஞ், சேடனு மூவவையாதற்கேது முறையே மேற்காட்டுதும். இது பொழிப்புரை. ஒழிந்தவகல முரையிற் கொள்க. (உகூ)

30. ஆய்ந்தமைவுடையகல்வியுங்கவியும்
வாய்ந்ததற்குவமைமணமலிபொற்பூ.

(எ-ன்) முறையே மேற்காட்டுதுமென்ற நான்கனுள் மணமலி பொற்பூவை யொத்ததற்கேதுவுணர்—ற்று.

(இ-ள்) வாடாதபொற்பூ முந்துநூல்களை யாராய்ந்தமைவுடைய கல்வியுங் கவியுமெய்தியதற் குவமையாமென்றவாறு. வாடாக்கற்பக மென்பது சூத்திரத்திலையாலோவெனின், தந்துகொணர்ந்துரைத்த லென்னுமுத்தியாற் கூறப்பட்டது. அமைவு—நிறைவு. பொற்பூ—கல்வி. மணம்—கவியெனக்கொள்க. (௩0)

31. அறன்றருபலபொருளான்றமைவுடைமையும்
பிறர்நிதியறையிற்பெருகியசெல்வமு
மளப்பருந்தன்மையுமவரவர்தாங்கினங்
கொளக்குறைவில்லதுகொற்றவனிதியறை,

(எ-ன்) கொற்றவனிதியறையொத்தற் கேதுவுணர்-ற்று.

(இ-ள்) அறத்திஞலுண்டாக்கப்பட்ட பலபொருள்களுநிறைவெய்து தலும், பிறர்நிதியறையினும்பெருகிய செல்வவளனு, மொருவராலளத் தற்கரிய பெற்றியும், வறியோர்தாமே தினமும்வேண்டுவன தினமுங் கொள்ளாநிற்கக் குறைவில்லாமையுஞ் செங்கோற்கொற்றவனிதியறைக் குண்டாய குறியென்றவாறு. எனவே, இவனுளத்து அறமுதலிய நாற் பொருளாங்கல்விநிறைவுடைமை பிற ராராய்வின் மேம்பட்டகல்விநிறை வுடைமை யெனவும், இவன் கல்விநிறைவுடைமை யளத்தற்கரியதென்ப தூஉம், பிறரிவனிடத்து வித்தையைக் கொள்ளக்கொள்ளக் குறையா தென்பதூஉ முய்த்துவமைகொள்ள நின்றமையுணர்க. இவை குறிப் புவமை. (௩௧)

32. உண்ணத்தெவிட்டாவுரிசையுமஃகா
வண்மையுந்தண்மையும்பயப்பதுமருந்தே.

(எ-ன்) வான்சுவைமருந்தொத்தற் கேதுவுணர்-ற்று.

(இ-ள்) அமிர்தமானது தன்னையுண்பவ ருண்ணவுண்ணத் தெ விட்டாவினிமையும், வற்றுவளமையும், குளிர்ச்சியும் பயப்பதாமென்ற வாறு. எனவே, அவன் கல்வியுங் கவியுங் கேட்போர் செவியாலுட் கொள்ள வுவட்டாதென்பது மக்கல்விகவி கொள்வார்கொள்ளுந்தோறுங் குறைவின்றி நிறைவெய்துந்தன்மையாயிருக்குமென்பது முவமையா லுய்த்துக்கொள்ளநின்றவா றுணர்க. அலங்கார மிதுவு மது. (௩௨)

33. பாயிரந்தோய்ந்து பருப்பொருளின்றி
நுண்பொருள்பயக்குநூல்பலவாங்காங்
குலப்பின்மாணுக்கர்க்கோர்புகன்மயர்வறச்
செலச்சொலற்குவமையாயிரவாய்ச்சேடன்.

(எ-ன்) ஆயிரவாய்ச்சேட னுவமையென்பதற் கேதுவுணர்-ற்று.

(இ-ள்) சிறப்புப்பாயிரத்தோடுங்கூடிப் பருப்பொருளின்றி நுண்ணியபொருள்களைக் கூறுவனவாம் பல நூற்பொருள்களைக் குறை வில்லாத மாணுக்கர்பலர்க்கு மொருகாலத் தொருங் கிருமரச் செலச்

சொல்லுதற் காயிரவாய்ச்சேட னுவமையா மென்றவாறு. இவர் கற்கப் படுவோர். (௩௩)

34. மடியழுக்காறுவஞ்சகம்வெகுளி
யுணராததைபுணர்ந்ததின்மேற்கோட
றம்மைப்புகழ்வதிற்றுன்பிறரிகழ்தல்
கற்றவர்புனைந்தகவியினுட்சார்ந்த
குற்றமொன்றுளதேற்குணனமைத்தறியான்
செவ்வியின்மலர்ந் து நாறுச்செம்மலர்
வெவ்விடவரவுதன்வாய்க்கொள்விழுமணி
பொதுமகள்பாற்கொளப்பொருந்தியபோகஞ்
சிறியவன்றன்பாற்செறிதருபொருளெனுங்
கல்வியனுரியனுங்கடனிலனே.

(எ-ன்) கற்கப்படாதோர்குண முணர்-ற்று.

(இ-ள்) மடிமுதலாகக் கூறப்பட்ட நான்கும் கல்லாமைமேற் கொண்டொழுகலுந் தம்மைப்புகழ்வதோடும் பிறர் குற்றமற்ற கல்வி யையுங் கவியையு மிகழ்தலுங் கற்றோராற்புணர்க்கப்பட்ட செய்யுட்கண் ணுஞ்சார்ந்தகுற்றஞ் சிறிதுளவாமெனி லதனைக் குணனாகவமையாதது முடையனாகி யவற்றோடு நாறுச்செம்மலர் முதலிய நான்கும் போலுங் கல்வியையுடையவ னுரியனுங்கடனில னென்றவாறு. கடன் – முறை. நாறுச்செம்மலர்முதலிய நான்குமொப்பென்பதற்கேது மேற்காட்டுதும். தம்மையென்னும்பன்மை யிழிபின்கண் மயங்கிற்று. (௩௪)

35. பல்காற்சொல்லியுந்தெற்றெனப்புயன்கொள
நல்காவாக்கது நாறுமலரே.

(எ-ன்) நாறுச்செம்மல ரொப்பென்பதற் கேதுவுணர்-ற்று.

(இ-ள்) ஒருசெய்யுளுக்குப்பொருள் பலகாற்கூறியுங் கோட்போ ருள்ளத்துத் துணிவுறச் செலச்சொல்லாவாக்கிற்குப் பருவத்து மலர்ந் தும் பரிமளமெய்தாத மல ருவமையாமென்றவாறு. பருவத்தின் மலர்ந்து பரிமளமெய்தாத மலர் - முருக்கமலர். (௩௫)

36. உருமெனிற்கோடலல்ல துவந்துகொள்
பருதியின்றுரும்பாம்பின் வாய்மணியே.

(எ-ன்) பாம்பின்வாய்மணி யொப்பென்பதற் கேதுவுணர்-ற்று.

(இ-ள்) பாம்பின்வாய்மணி பாம்பு தானேயுருக்குமெனிற்கொள்வ தல்லது இப்பொழுது வேண்டுமென விரும்பினோர் விரும்பினபடியே யக்காலத்திற் கொள்ளும்பகுதி யில்லையாமென்றவாறு. எனவே, அதுபோ லவ்வாசிரியரிடத்திற் கல்வியு மவர்தாமேதரிற்கொள்வதல்லது கற்கவிரும்புமாணக்கர்க்கு விரும்பியகாலத்து விரும்பினபடியே கொள்ளும் பகுதியின்றென்ப தூய்த்துணாநின்றவாறுகாண்க. (௩௬)

37. பொருளளவையில்வரும்பொதுமகணலனே.

(எ-ன்) பொதுமகளிடத்துநல மொப்பென்பதற் கேதுவுணர்-ற்று.

(இ-ள்) பொருட்பரத்தையரிடத் துண்டானநலன் புமான்கள் கொடுத்த பொருளினதளவெவ்வள வவ்வளவைக்கொப்ப வெய்துமென்ற வாறு. எனவே, அவ்வின்பம்போல வவ்வாசிரியனிடத்துண்டான கல்வியு மாணாக்கர்கொடுத்த பொருளளவைக்கொப்பக் கொள்ளப்படுமென வுய்த்துணாநின்றவாறுகாண்க. (௩௭)

38. அறத்தமர்பசித்துழந்தலமாவுலகிற்
பிறர்க்குணவெதிர்செலும்பேதைகைப்பொருளே.

(எ-ன்) சிறியவன்பாற் செறிதருபொரு ளொப்பென்பதற்கேது வுணர்-ற்று.

(இ-ள்) பேதையரிடத்துண்டானபெரும்பொரு ளின்பதுன்பத் திற்குரியரா யுதவுந் தமராயுள்ளார் மிகவும்பசித்துத் துன்பமுற்று மறுக்கமெய்தவும் அவர்க்குதவாது துன்பமுறுகாலத்துச் சிறிது முதவுதலில்லாத வேதிலாருண்ணும்படிக் கவர்பசிக் கவர்கேட்குமுன் னெதிர்கொள்ளுமென்றவாறு. எனவே, அப்பொருள்போல வவ் வாசிரியரிடத்துக்கல்வியுந் தம்மை வழிபடு மாணாக்கர்க்கெய்தாது வழி படாமாணாக்கர்க் கெய்துவதொன்றுமென வுய்த்துணாநின்றவாறு

காண்க. இவை மூன்றுசூத்திரமுங் குறிப்புவமை. இவர் கற்கப் படாதோர். (௩அ)

39\. புரத்தலினியல்பேபுகலுங்காலை
யதற்கமையாண்டின்மாணாக்கனையெதிருபு
கடவுளைவாழ்த்திக்காலமுமிடனுந்
திடனறக்குறித்து மங்கலத்திசைநோக்கி
யிருந்தனக்கிவையியல்பென்னவுள்ளுறுத்தித்
திருந்தியசிந்தையிற்செம்முகமலர்ந்து
நுவலத்தகுநூனுதலியதிறத்தினைத்
தவலருஞ்சிறப்பிற்றன்முதற்கொளுத்திப்
பொழிப்பாதியவாய்ப்புகன்றவாய்மையின்
விடத்தகுவெகுளியின்விரைவிலனாகி
நாளுநாளுநவின்றுநவின்று
மஞ்சிறைப்பறவையினணைந்துறத்தழுவியும்
வெஞ்சிறைப்படுபுனன்மீன்போனோக்கியு
மகன்றனனுமெனினுமைபோன்றுன்னியும்
புனிற்றாவெனவவன்புலந்தனின்முன்னியுங்
கொளத்தகுமுணர்வின்குறியறிந்தனனாத்
தானெனலாக்கியதன்மைகண்டுலகம்
வேட்டைவாளியின்விழுமியனெனமனக்
கோட்டமொன்றின்றிக்கொடுக்குமதென்ப.

(எ-ன்) நூனுவல்வத னியல்புணர்-ற்று.

(இ-ள்) நூனுவல்வத னிலக்கணத்தைக் கூறுமிடத்துக் கல்வி தொடங்க நூலமைத்தவையாண் டேழாண்டென்னும் பருவத்தினற் காலத்தோடு மதி திதி முதலிய நாற்காலமுங் கழகமுந் திடனாகக் குறித்துக் குணதிசை வடதிசையென்னு மங்கலத்திசைகளைநோக்கி யிருந்து வழிபடுகடவுளை வாழ்த்தி வித்தைகொள்ளுமிடத்தியல்பு நினக் கிவையென வவன்கருத்துறப்படுத்தித் தன்னோடொன்றியசிந்தையொடு முகமலர்ந்து முதலே கூறத்தகு நூல்கருதிய கூறுபாட்டைக் கெடுத லில்லாத சிறப்புவிதியாற் கருத்துறப்படுத்தி விடத்தகும் வெகுளிபோல விரைவுமிலனாகிக் கொளத்தகுமுணர்வின் குறியையறிந்து பொழிப்பகல

நட்ப மென்னு மூனைநடையா ளுருநாளும் நவிலுந்தோறு நவிலுந் தோறும் பறவைபோலணைத்துத்தழுவியு மீன்போனோக்கியும் விட்டு நீங்கியகாலத்தும் ஆமைபோன் றுளத்தானினைந்து மீன்றணிமைப் போதினி லாபோ லவனிருக்கும் புலத்துச் சென்றுந் தானென்றுஞ் சொல்லப்படுவதாகிய பெற்றிமையைக்கண்டு பெரியோர் வேட்டைவாளி யின் விழுமியனென்று கூறும்படிக் கழுக்காறின்றிக் கொடுப்பதாமென்ற வாறு. இச்சூத்திரத்திற்கிங்ஙன மாட்டுறுப்பாகப்புணர்த்த லிந் நூலாசிரியர்கருத்தென்றுணர்க. (ஙக)

40. ஆரியன்றிருமகனையுறல்கடிந்த
கூரியமுதன்மைமாணுக்கன்குலமகன்
றன்மகன்மன்மகன்மந்திரத்தலைவ
னன்மகனிருநிதிநனிதமிபுரப்போ
னருத்தியின்வழிபடுபவனுரைநுழைந்துகொள்
கருத்தினனிவர்கள்கற்கப்படுவோர்.

(எ-ன்) இனிக்கொள்வோர் கற்பிக்கப்படுவோருங் கற்பிக்கப்படா தோருமென விருவகையர். அவருள்ளுங் கற்பிக்கப்படுவோரெண்மர். அவ ரிவரென்பதுணர்-ற்று.

எண்மருட் கூரியமுதன்மைமாணுக்கனுவான்-தன்னொடு மொருங்கு கற்ற வொருபுடைமாணுக்கருட்சேட்டன். இருநிதிநனிதமிபுரப்போன்-பிறமாணுக்கர்க்குப் பங்கென்னாது தனியே கொடுப்போன். (சo)

41. பளிங்குடனேதிமம்பாவைகொண்மூவெனத்
தெளிந்தநுண்ணுணர்வுறுந்தெள்ளியோரே.

(எ-ன்) அவர்தன்மையுணர்-ற்று.

(இ-ள்) இதற்குரை வேண்டுவதில்லை. இவைநாலு மவர்க்குவமை யாதற் கேது மேற்காட்டுதும். (சக)

42. அழுக்கின்றுதலடுத்தவைதனதாக்
கோடலென்றிரண்டும்பளிங்கின்குணமே.

(எ-ன்) பளிங் கவர்குணத்திற் குவமையாதற் கேதுவுணர்-ற்று.

(இ-ள்) நின்மலமாய் விளங்குதலுடன் அடுத்த பொருள்களின் குணங்களைத் தனதுகுணமாகக் கொண்டிருத்த லென்னுமிரண்டும் பளிங்கின்குணமா மென்றவாறு. எனவே, அதுபோலக் களங்கமற்று விளங்கிய நுண்ணுணர்வா லாசிரியன்கொடுத்த பலவேறுவகைப்பட்ட கல்விகளையெல்லா மூணர்விலூட்டிக் கற்றகல்வியைப் புறத்தே தோற்றுவிப்பனென் றுவமை யுய்த்துணாநின்றவாறு காண்க. (சஉ)

43. நீர்தெரித்தமிர்து ணுநீர்மையிஞேஹிம
மோரிருபான்மைக்குவமையதாகும்.

(எ-ன்) அன்னம் அவாறிவிற் குவமையாதற் கேதுவுணர்-ற்று.

(இ-ள்) பாலையும் புனலையுங் கலந்துவைத்தாற் புனலை நீக்கிப் பாலைப்பருகுந்தன்மை யிரண்டினு லோதிம மவரிடத்துண்டானவோ ரிரண்டுபகுதிக் குவமையாமென்றவாறு. எனவே, அதுபோல வவரும் பலவேறுவகைப்பட்ட கல்வியுள் அசாரத்தை நீக்கிச் சாரமானகல்வியை யுட்கொள்வரென் றுவமையுய்த்துணாநின்றவாறுகாண்க. (சங)

44. பகிரதிமுதலியபன்னதியுட்புக
வுகுதலின்றுய்த்தன்னுட்கொளுமுவாவே.

(எ-ன்) பாவை யுவமையென்பதற் கேதுவுணர்-ற்று.

(இ-ள்) கடல், கங்கைமுதலாகிய பல நதிகளுந் தன்னுட்புகா நிற்பவு மவற்றைப் புறத்தே கக்குதலின்றித் தன்னகத் தடக்கிக்கொள்ளு மென்றவாறு. எனவே, அக்கடல்போல வவருணர்வும் ஆசிரியன் அறிவிக்க வுட்கொண்ட வெல்லாக்கல்வியையும் புறத்தே தப்பவிடா துட்கொள்ளுமென் றுவமை யுய்த்துணாநின்றவாறு காண்க. (சச)

45. படிந்துவாறுத்துணப்படுபுனல்யாண்டும்
படர்ந்துபஃறுளியிற்பயன்றருமுகிலே.

(எ-ன்) கொண்மூ வுவமையென்பதற் கேது வுணர்-ற்று.

(இ-ள்) மேகஞ் சமுத்திரத்திற்படிந்து உவாறுத்துண்டு விளைவெய்தியபுனலை யுலகமெங்கு மாங்காங்குச்சென்று பலதுளியாகப் பெய்

துலகத்திற்குப் பயனுமென்றவாறு. உலகம் சொல்லெச்சம். எனவே, அதுபோல அவர் தம்மாசிரியனிடத்து அதிகரிக்கப்பட்ட வவற்றுள் அசாரநீக்கிச் சாரமுட்கொண்டு பரிபாலிக்கப்பட்ட தம்மிடத்துக் கல்வியையு முலகின்கண் வரைதலின்றி யாவர்மாட்டுங்கொடுப்பரென வுவமையுய்த்துணாநின்றவாறு காண்க. இவை நான்கிற்குங் குறிப்புவமை முன்புபோலக்கொள்க. (௪௫)

இனிக் கற்பிக்கப்படாதோ ரொருபன்மூவர். அவர்தாம்,

46. காமுகன்களியன்கடுஞ்சொலன்சினத்தன்
மடியன்றடுமாறுளத்தன்மறவியன்
றுயில்வோன்பிணக்கன்சோரன்பொய்யன்
மாணவன்பிணியின்மரீஇயவனிவர்க்குநற்
றுனமதாயினுஞ்சாற்றுர் நூலே.

(எ-ன்) கற்பிக்கப்படாதோர்க்கு வரையறைகூறுதனுதலிற்று.

(இ-ள்) காமுகன்முதலாகப் பிணியின்மரீஇயவ னீறாகப் பதின்மூன்றுபெயர்க்குங் கல்வியீத னற்றுனமென்று நூல்கள் கூறிற்றுயினுஞ் சான்றோர் பெருநூ லுணர்த்தாரென்றவாறு. பெருநூலென்ப தாட்சி பற்றியசொல்லெச்சம். இவர் தன்மையாவன:— (௪௬)

47. ஆடுபந்துருசுவாளந்தறிமுகவை
கோடின்றுங்குளனெனுங்குறியோரே.

(எ-ன்) கற்பிக்கப்படாதோர்க் குவமை யுணர்-ற்று.

(இ-ள்) ஆடும் பந்துருசுவரு மொருபதார்த்தத்தை யளந்தறி முகவையுங் கரையில்லாதவேரியு மூவமையா மிலக்கணத்தை யுடையாமென்றவாறு. இவைநான்கு முவமையாதற் கேது மேற்காட்டுதும். (௪௭)

48. ஓரிடத்துருகுளகமைத்தறவுண்ணு
தவணவணிறைவற்றலமருமாடே.

(எ-ன்) ஆடுவமையாதற் கேது வுணர்-ற்று.

(இ-ள்) ஆடு நுகரிடத்து மிகுதியாகவுண்டான குழையை நிறைய வுண்ணாது சிறிதருந்தியதனாற் பசியடங்கா தாங்காங்குத் தெருமந்து திரியுமென்றவாறு. எனவே, அதுபோல வவரு மொருசா ராசாரிய னிடத்துக் கற்கத்துடங்கிய முக்கியமான வொருநூலையாயினு மவ னிடத்துத் தெற்றென முற்றக்கல்லாது பலநூல்களையும் பலரிடத்துங் கற்கத்தொடங்கிச் சிறிதுசிறிது கற்றுக் கல்விமுற்றா துழல்வரொன் றுவமையுய்த்துணரநின்றவாறு காண்க. (சஅ)

49. எற்றியபந்தினையெதிர்செலவிடுத்தொரு
பற்றறநிற்பது சுவரின்பண்பே.

(எ-ன்) பந்துறுசுவ ரொப்பென்பதற் கேதுவுணர்-ற்று.

(இ-ள்) ஒருவர் கையாலெற்றியபந்தினைத் தன்மெய்யிற்பரிசித் ததனை யெற்றியவரெதிர்செலவிடுத்துத் தானப்பந்தோடு பரிசித் திருக்கும்பற்றின்றி நிற்பது சுவரின்குணமாமென்றவாறு. எனவே, அதுபோ லவரு மாசாரியன் றமது மனத்திலே பற்றவுரைக்கப்பட்ட கல்வியையு மனப்பற்றின்றி வறியமனதாயிருப்பரொன் றுவமை யுய்த் துணரநின்றவாறு காண்க. (சகூ)

50. அளந்தகத்தடக்கியபொருள்களையாங்கவண்
முற்றப்புறத்துகன்முகவையின்குணமே.

(எ-ன்) முகவை யொப்பென்பதற் கேது வுணர்-ற்று.

(இ-ள்) அளந்தறிவதாகிய பதார்த்தங்களை யொருவர்பெய்யத் தன்னகத் தடக்கியபொருள்களை முழுதும் புறத்தே யுகுவது முக வையின்குணமா மென்றவாறு. முகவை நாழிமுதலியனவாம். முற்ற வும், புறத்துகலும் என்பனவாய்த் தொக்கவும்மை யெச்சவும்மை யாதலாற் சில பொருள்களா யகத்தடக்கப்பட்டவற்று ளொருங்காற்சிறி துள்ளே பற்றுவனவு முளவென்றாயிற்று. அவை எள் பயறு உழுந்து நெல் அரிசி முதலியனவன்றிப் பால் தயிர் நெய் முதலியவாம். எனவே, அவரிடத்துஞ் சிறி தாசாரியனுரைத்தவற்றுட் பற்றுவ துளதென் றுவமை யுய்த்துணரநின்றவாறு காண்க. (ரு0)

51. பயஞ்சிறிதடக்கலிற்பயனிரம்பாதாங்
கொழும்புனல்புகுந்தகோடின்றுங்குளனே.

(எ-ன்) கோடின்றுங்குள னுவமையாதற் கேது வுணர்-ற்று.

(இ-ள்) கோடின்றுங்குள மாரியாற்பெய்யப்பட்டுப் புகுந்தபுனலைப் புறம்போகவிட்டுச் சிறிது புனலடக்குவதா லுண்பார்க்கும் போகங்கொள்வார்க்கும் பயனிரம்பாவாமென்றவாறு. எனவே, அதுபோ லவருந் தம்மிடத் தாசாரிய னளிக்கப்பட்ட கல்வியை முற்றப்பற்று துணர்வு சிறிதாகலின், புறம்போகவிட்டுக் கல்வியிற்சிறியரெனப்பட்டாராய்த் தமக்கும் பிறர்க்கு மினிமைப்பயனிரம்பாத புன்புலவராவரென் றுவமை யுய்த்துணாநின்றவாறு காண்க. இவை நான்கு சூத்திரத்தானு முன்பு போலக் குறிப்புவமைகொள்க. இவ்விருவர்க்கும் "அன்னங்கிளியே நன்னிறநெய்யரி, யானையானேறென்றிவைபோலக், கூறிக்கொள்பகுண னுடையோரே" எனவும், "அன்னமாவேமண்ணொடுகிளியே, யில்லிக்குடமாடெருமைநெய்யரி, யன்னர்தலையிடைகடைமாணாக்கர்" எனவும் முன்னோர் கூறிய சூத்திரங்களானு முவமை யுய்த்துணர்ந்துகொள்க. (௫க)

52. குரங்கெறிவிளங்காய்கொள்பவர்போல்வார்
பழம்பகைமறைத்துப்பணிபவராகிக்
கூடாவொழுக்கிற்கொள்பவர்கல்விச்
சால்பிலராகித்தலைமைவந்தடுத்தோர்
காந்தங்கொருவரைக்கற்கவிட்டுணர்வான்
வருபவர்தமக்கும்வழங்கார்றாலே.

(எ-ன்) இதுவுங் கற்பிக்கப்படாதோருட் கூறுதொழிந்தோரை யுணர்-ற்று.

(இ-ள்) கொள்வதற்கரிய விளங்கனியை யுண்ணவிரும்பி, அவ் விளவி லிருக்குங் குரங்கைக் கற்கொண்டெறிந்து அக்குரங்கெறியும் விளங்கனியைக் கொள்பவரைப்போல வுபாயத்தாற் கல்விகோடற்கு வருவார்க்கும், பழம்பகையைத் தோன்றுது மறைத்ததற்குக் கூடா வொழுக்கத்தினோடும் புறத்துற்ற நட்பினராகியும் நிலத்தில் வீழ்ந்து

பணிதன்முதலியனசெய்து முபாயமாகக் கல்விகோடற்கு வருவார்க்கும், கல்வியாற் பூரணமிலராயும் அறிவிலாதாராற் சிறப்பெய்தினோர் பிற சான்றோருழை யுடையார்முன் னில்லார்போ லேக்கற்றும் வெளிப்பட வந்துநின்று கல்லாது மாண்பிறந்தமானத்தாற் பிறரை யவரிடத்துக் கரந்துவிட்டவரேவலால் வருவார்க்கும் சான்றோர் நூற்பொருள் வழங்காரென்றவாறு. வழங்குதல் வித்தைகொடுத்தல். நூல்-ஆகுபெயர். அவை இலக்கண விலக்கியம் (௫௨)

இனிக் களங்கடியப்படுவார் பலர். அவ ரிவரெனல்;

53. ஆசாரமில்லாரழுக்காறுள்ளார்நகுவார்
கூசாதுமற்றொன்றுகூறுவார்—தேசிகன்சொற்
கற்றொன்றுறாதார்கழகத்துறிலிருந்தா
ரெற்றென்றுரையாதிரார்.

என்பதனா லுணர்க. எற்றென்பது கையாற்புடைத்தலுங் காலா லுதைத்தலுமாம். (௫௩)

இனிக் கோடன்மரபு வருமாறு:—

54. கொள்வோன்கொள்கடன்கூறுங்காலைக்
கடையாமத்திடையெழுந்துளகடன்கழித்
தாரியன்மாளிகைவாயில்சென்றெய்திக்
காலமுமிடனுங்கருதுபுநின்றாங்
கெவனெவனோக்கினனவனுளனாகி
வணக்கமுமொடுக்கமும்வாய்ந்தயனிற்ப
வருகவென்றழைத்தலுமருகுசென்றிறைஞ்சலு
மருத்தியினிருத்தியென்றறைதலுமிருந்தாங்
குரையெனவுரைத்துரைத்தானுறத்தோய்தாப்
பொழிப்பேயகலநுட்பமெச்சமெனப்
பழிப்பின்றாமுரைபகர்தலுந்தெற்றென
வுணர்ந்தபின்பொழிகெனவொழிதலுமவன்றிறத்
தோவாதுதவுவதொல்லும்வகையா
னேவாதியற்றியவின்பமெய்தியபின்
பகலினுமிரவினும்பயின்றுபின்முன்ன

ரகலாளுகியவன்பினளுதலுங்
துயில்வுழித்தைவருந்துணைத்தாளிணைத்துறந்
தொல்லையிற்றுயின்றெழுந்தொழுகுதலன்றே.

இவற்ருனுணர்க. இதற் குரை வேண்டுவதில்லை. "எத்திறனுசானுவக்கு மத்திற, மறத்திற்றிரியாப்படர்ச்சிவழிபாடே" என்பதுங் கூட்டி யுணர்க. (௫௪)

55. கேட்டவைகேட்டவைநிரந்தரம்பாடம்
போற்றலினேட்டிற்றுனேபொறித்தலு
முரைநுழைந்துணர்ந்தவொண்பொருளையுள்ளுறுத்தலு
மயலற்றெருபுடைபயின்மாணுக்கரி
னையமெய்தியதையமகற்றலு
மெய்யுணர்வினிலுறப்பிறர்க்கவைவிளம்பலு
மெய்தியதிழவாததற்கிலக்கணமே.

(எ-ன்) கற்றகல்வி யிழவாததற் குபாயமுணர்-ற்று.

இதன்பொருள் வெளிப்படை. இதனுள் உரைநுழைதலென்பது உரைமுகத்து நுண்ணிதா யாசிரியன்காட்டக்கண்ட அரும்பதங்களை மனத்தான் மறவாது தரித்தல். இவ்வாறுகோடல் மாணக்கன் முற்ற வுணர்ந்தானுமாறு. " ஆசானுரைத்ததமைவரக்கொளினுங்-காற்கூறல் லதுபற்றிலனுகும்," "அவ்வினையாளரொடுபயில்வகையொருகால்-செவ் விதினுரைப்பவவ்விருகாலு-மையறுபுலமை மாண்புநனி யுடைத்தே" என்னுஞ் சூத்திரங்களானு முணர்க. (௫௫)

56. தோய்ந்தவையன்றியுந்தோயாதவற்றை
யாய்ந்தெழுகாலத்ததன்பயனெனலாய்
விழுமியதிறத்தினுள்விழுமியதொன்றுஞ்
சொல்லொடுசொல்லிணைத்தொடுத்தலுந்தொலையாக்
கல்வியிற்பயிறலுங்கடனுகும்மே.

(எ-ன்) முன்னர் நூனுவல்வோனுகிய வாசிரியன் வாடாக்கற்பக மணமலிபொற்பூப்போல வாய்ந்தமைவுடைய கல்வியுங் கவியுமுடைய

னுதல்வேண்டுமென்று ரவ்வாரியன்போல மாணாக்கனுங் கல்வியுங் கவியு முடையனாதற் குபாய முணர்-ற்று.

(இ-ள்) கற்றநூலன்றிக் கல்லாதவற்றையு மாராயுங்காலத்துக் கல்வியாலாய விழுமிய கூறுபாட்டையுடைய கலை பலவற்றுள்ளும் விழுமிய பயனென் றுலகங்கூறப்படுவதாஞ் சத்தங்களைத்தொடுத்துச் சாதிப்பதூஉம் தொலையாக் கல்வியுடன் சாதித்துவருவதூஉ முறையா மென்றவாறு. (ருசு)

57\. பாவினையொலிபெறப்படனஞ்செய்திடு
நாவினனாகிநாற்கவிப்புலவோர்
புதுமொழிபுணர்ப்புழிப்பொறிப்பவனாகியு
மனப்படுமொருபொருண்மதித்தவரொருமொழி
யெடுத்ததற்கியைபுறவெதிரெதிர்பன்மொழி
தொடுப்பதும்பெயர்வினைகோப்புணப்பிறிதடி
தொடுப்பதுந்தொடைபலதொடர்ந்தொருபாவாய்
முடிப்பதுங்குறிக்கொளன்முதற்காரணமே.

(எ-ன்) சத்தஞ்சாதித்தற்கு முதற்காரண முணர்-ற்று.

(இ-ள்) புலவர்பலரும் பாடிய பாப் பாவினங்களை யவ்வவபாவிற் கமைத்த வொலிமுறையே படனஞ்செய்திடும் வாக்கினனாகியும், அந் நாற்கவிப்புலவர் புதுமொழிபுணர்ப்புழி யவர்க்குப் பட்டோலைபொறிப் பவனாகியும், ஒருபொருளைக்குறித் தவர் முதலே யோர்சொல்லையெடுத்தலு மதன்மேற் பன்மொழி யவ்வடிக்குப் பொருந்தக் கொளுவுதலும், அதன் மேற் பலவடியையுந் தொடுத்தலும், அடிதொடர்ந்தா லொருதொடையி னுதல் பலதொடையினுதல் ஒருபாவாக்கிப் பெயராதல் வினையாதல் கோப்புண முற்றமுடிப்பது முதலாயினவற்றை மனத்துட்குறிக்கொள லுஞ் சத்தந்தொடுத்தற்கு முதற்காரணமா மென்றவாறு. ஒழிந்த வகல முரையிற்கொள்க. (ருஎ)

58\. சொற்பொருளணிநலன்றேயாதாயினு
மடியாதெடுத்தடிமடக்குதலின்று
யாப்பினதுறப்பிழுக்காதிறுதியில்வினை
கோப்புணமுடித்தலதன்முதற்குறியே.

(எ-ன்) இதுவும் அச் சத்தஞ்சாநித்தற்கு முதற்குறி யுணர்-ற்று. குறியாவ திலக்கணம். உறுப்பு - எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை யென்னு மாறுறுப்பும். நலனென்பது கேட்டோர்க் கின்பங் கொடுத்தல். தோயாதது-கூடாதது. ஒழிந்த அகல முறை யிற்கொள்க. (௫௮)

59. அருமணிநிரல்வைத்தன்னசொன்னல
னெளியதனுட்சிறந்தன்னபொருணல
னழகதற்காங்கமைந்தன்னவணிநல
னுரனுடைப்பழம்பாட்டுணர்வுழியுணர்ந்தோர்
வரனுடைப்பாட்டுணர்வாய்மையின்வருமே.

(எ-ன்) அங்ஙன முன்னர்க்கூறிய முதற்குறியும் குறிக்கொள் பவன்கூறுஞ் சத்தங்களினிடத்துச் சொன்னலனும் பொருணலனு மவ் விரண்டினாலுமான வணிநலனு மெய்துதற் குபாய முணர்-ற்று.

உரனுடைப்பழம்பாட்டென்பன சங்கச்செய்யுள். ஒழிந்த அகல முறையிற்கொள்க. (௫௯)

பொதுப்பாயிர முற்றும்.

சிறப்புப்பாயிரம்.

இனிச் சிறப்புப்பாயிரமாவது பதினொருவகைத்தாம். அவை வருமாறு.

60. எல்லைவழிநுதலியபொருள்யாப்பே
நூற்பெயர்நுவல்வோன்பெயர்காரணம்பயன்
காலங்கேட்போர்களனெனப்பதினொரு
பால்புணர்த்துரைப்பதுசிறப்புப்பாயிரம்.

(எ-ன்) சிறப்புப்பாயிரத்தினது கூறுபாடுணர்-ற்று.

(இ-ள்) எல்லையும், வழியும், நுதலியபொருளும், யாப்பும், நூற் பெயரும், நூனுவல்வோன்பெயரும், காரணமும், பயனும், காலமும், கேட்போரும், களனும் என்னும் பதினொருபகுதியாகச் சேர்த்துக் கூறுவது சிறப்புப்பாயிரமா மென்றவாறு.

புணர்த்துரைப்பதென்ற விதப்பினால், நூல்செய்தோன் வழிபடு தெய்வத்தினையும், தெய்வமென்பதும் ஒன் றுளதென் றுண்மையுணர்த் திய அவனது ஞானசாரியனையும், அவன்றந்தையையும், குலத்தினையும்

பதியினையும், அப்பாயிரத்துட் கூறுவதும் வரலாற்றுமுறைமையினான் மரபெனக்கொள்க. எனவே பதினொன்றென்ப துட்கோள். (௬0)

இனிச் சிறப்புப்பாயிரத்தினதிலக்கணஞ் செப்புமாறு:—

61. சிறப்பினதியல்பேதெரியினூனுதலிய
திறப்படுபொருளைத்தன்னகத்தடக்கி
யகவலின்வெள்ளையினறைவதொன்றாகும்.

(எ-ன்) சிறப்புப்பாயிரத்தி னிலக்கண முணர்-ற்று.

(இ-ள்) சிறப்புப்பாயிரத்திலக்கணத்தையாராயுமிடத்துப் புலவனானுரைக்கப்படும் நூனுதலியபொருளையெல்லாங் குறிப்புரையானன்றி வெளிப்படையாக அடக்குவாய்செய்து ஆசிரியத்தானுதல் வெண்பாவானுதல் கூறத்தகுவதொன்று மென்றவாறு. சிறப்பென்றதீண் டொன்றற்குரியதென்பதாம். (௬௧)

62. கலைகள்யாவையுங்கற்றுரைதெளிந்து
துலைநாச்சமனிற்றுணிநிலைபுரியும்
வாய்மையும்பிறர்க்கவைமயர்வறவளிக்குந்
தூய்மையுஞ்சான்றநுணையிலனெனினு
மொல்காப்பதினெண்ணுறுப்புடைநாற்பொருட்
பல்காப்பியம்பழிப்பறநவம்புணர்க்கவு
முத்தமிழ்க்கல்வியுமுத்தமவாக்கின்
வித்தகக்கவிதையும்வேண்டினனாகினுந்
தற்புகழ்தலும்பிறன்றன்னையிகழ்தலும்
பொற்பலவாகும்புலனுடையோர்க்கே.

(எ-ன்) நூல்செய்தான் பாயிரஞ்செய்வானல்ல னென்பதுணர்-ற்று.

(இ-ள்) இலக்கண இலக்கியங்களை முற்றப் பாடம்போற்றி யுரையைச் சந்தயமறத் தெளிந்து துலைநாப்போன்றும் துலாக்கோற்சமன் போன்று மையமுற்றபொருளை யையமறக் கேட்டோர்க்குணர்த்து

மொப்பிலாதானு மெனினும் எழுத்தாதிய வைந்திலக்கணங்களையும் பதினெட்டுறுப்போடு நாற்பொருள் பயப்பதாய பெருங்காப்பியங் களையுங் குற்றமறப் புதிதாய்ப் பாடல்சான்றவனு மெனினுந் தன்னைப் புகழ்தலும் பிறனொருவனை யிகழ்தலு முணர்வுடையோர்க் கழகல்ல வென்றவாறு. இன்னும், "தோன்றாதோற்றித் துறைபலமுடிப்பினுந் தான்றற்புகழ்தறகுதியன்றே" என்பதனானுங் கொள்க. (சுஉ)

63. பன்னருஞ்சிறப்புப்பாயிரம்பகர்வோர்
தன்னுயிர்பேணுஞ்சதிராசிரிய
னொருபுடைகற்றவுயர்மாணாக்கன்
றன்னொடுகற்றதலைமாணாக்க
னுரைகாரணனெனுமுரானுடையோரே.

(எ-ன்) பாயிரஞ் செய்தற்குரியோரை யுணர்-ற்று.

(இ-ள்.) கூறுதற்கரிய சிறப்புப்பாயிரங் கூறுதற்குரியோரின் நால்வருளொருவராமென்பது.

அந்நால்வருள்ளு மிப்பாயிரஞ்செய்தாரிந்நூற் குரைசெய்த திருமேனி யிரத்தினகவிராயனென்றுணர்க. நூலாசிரியர்க்கு மாணாக்கனென் பதனுமாம். (சுங)

'உலகம்யாவையும்...................புலமையோனே'.

(எ-ன்) அலங்காரத்தினது பெருந்தன்மையு மிந்நூற்குச் சிறப்புப் பாயிரமு முணர்-ற்று.

உலகம்யாவையு மென்பது முதல் வடவேங்கட மென்னு மத்துணையு மொருதொடர். இதனுள், உலகமென்பது "மூன்றுதலையிட்ட மூப்பதிற் றெழுத்தி, னிரண்டுதலையிட்டமுதலா......................மெய்யேயுயிரென் றாயீரியல" என்பதனால் உயிர்முதன் மெய்யீற்றுமொழியாயிற்று.

உலகம் யாவையு மென்பது "உயிரிறுசொன்முன்னுயிர்வருவழியு, முயிரிறுசொன்முன்மெய்வருவழியும்.........................மென், றாயீரியல புணர்நிலைச்சுட்டே" என்பதனானும், "அவற்றுள், நிறுத்தசொல்லினீறா கெழுத்தொடு, குறித்துவருகிளவிமுதலெழுத்தியையப், பெயரொடு

பெயரைப் புணர்க்குங்காலு.........................மூன்றேதிரிபிடனொன்றே யியல்பென, வாங்கந்நான்கேமொழிபுணரியல்பே" என்பதனாலும் இவை உயிர்முதன் மெய்யீற்றுமொழி நிற்ப மெய்ம்முதன் மெய்யீற்றுமொழி வருமொழியாய்ப் பெயரொடுபெயரைப் புணர்ப்பதாய் "வேற்றுமைமப்போய் வலிமெலியுறழ்வு, மல்வழியுயிரிடைவரினியல்பும்முள" என்பதனால் அல்வழிக்கண் ணிலைமொழியீற்று மகரம் வருமொழி முதல் யகரத்தோடு புணர்ந் தியல்பாயது.

யாவையுமுறு வென்பது "புள்ளியில்லாவெல்லாமெய்யும், ... ஆயீரியலவுயிர்த்தலாறே" என்பதனால் அல்வழிக் கண் ணேனையுயிரோ டுருவுதிரிந்துயிர்த்தது. இது எட்டிறந்த பல வகையுட்கூட்டம்.

உறுபய னென்பது "மூன்றுறுருபெண்வினைத்தொகைசுட்டீ, றுகுமுகரமுன்னரியல்பாம்" என்பதனால் வினைத்தொகை வாய்பாட்டு முற்றுகரத்தின்மேல் வருபகர மியல்பாயது.

பயன்விளையென்பது "ஊனவல்லினம்வரட்டறவும்பிறவரி, னியல்பு மாகும்வேற்றுமைக்" கென்பதனால் வேற்றுமைப்புணர்ச்சிக்கண் ணிடை யினம்வர னகார மியல்பாயது.

விளைப்பானென்பது "பெயரெச்ச வினையெச்ச வாய்பாடுகளும் பொருண்முடியுமாறறிந்து பகுதி விகுதியாக்கி யிடைநிலையும் வேண் டுழித் தந்துமுடிக்க" வென்பதனால் விளைக்கவேண்டி யென்னும் பொருண்மைதோன்ற விளையென்னும் பகுதியை முதல்வைத்து அதன் மே "லென்பவும்பிறவும், வினையின்விகுதி" யென்பவற்றால் பானென் னும் விகுதியை நிறுவிப் "பவ்வமூவிடத்தைம்பாலெதிர்பொழு, திசை வினையிடைநிலை" என்பதனாற் பகரவிடைநிலையை மிகுத்து முடிக்க

விளைப்பானல கென்பது "புள்ளியீற்றுமுன் னுயிர்தனித்தியலாது, மெய்யொடுஞ்சிவணுமவ்வியல்கெடுத்தே" என்பதனால் னகரவொற்றியல் பாய்நிற்க வதன்மேல் அகரமேறி முடிந்தது, இதுவுங் கூட்டம்.

அலகிலென்பது "குற்றியலுகாரமுமற்றெனமொழிப" என்பதனால் நிலைமொழியீற்றுக் குற்றியலுகரம் புள்ளியீறுபோல வருமொழிமுத லிகரவுயிரேற இடங்கொடுத்தது. இம்மாட்டேற் றொருபுடைச்சேற லென்றுணர்க. அன்றிக் குற்றியலுகர மழிந்ததெனிற் பொருள் வேறு படும். அஃ துரையன்றென்க. இது குறைவுங் கூட்டமு முடனொன் றியது. கருவி-அகக்கருவி. என்னை? நிலைமொழியீற்றுகரம் வரு மொழிமுத லிகரமேற இடங்கொடுத்தலா லென்றுணர்க.

அலகில்சோதியென்பது "அல்வழியெல்லாமுறழெனமொழிப" என்றாராகலின் லகாரம் அல்வழிக்கண் வல்லினம்வா வியல்பாயது.

சோதியணி யென்பது "இ ஈ ஐ வழியவ்வு" மென்பதனால் யகர வுடம்படுமெய் பெற்றது. இது புறப்புறச் செய்கை.

அணிகிள ரென்பது "அல்வழி இ ஐ முன்னராயி, னியல்பு மிகலும் விகற்பமுமாகும்" என்பதனால் இகரவீற்று வருமொழி முதல் வல்லினம் அல்வழிக்கண் ணியல்பாயது.

கிளர்திரு வென்பது "ஆவியரழவிறுதிமுன்னிலைவினை, யேவன் முன்வல்லினமியல்" பென்பதனால் வினைத்தொகைவாய்பாடு மேவல் வினைபோறலின் அல்வழிக்கண் ரகாரமுன் வல்லின மியல்பாயது.

திருவுரு வென்பது "ஏனையுயிர்வழிவவ்வு" மென்பதனால் வகர வுடம்படுமெய் பெற்றது. செய்கை - இதுவும் புறப்புறச்செய்கை.

இனி உலகம் என்பது பலபொருள்குறித்த ஒருசொல்லாயினு மீண்டுச் சிறப்புடையுயிர்கண்மே னின்றது.

உலகம் யாவையு மென்பது "பெயரினாகியதொகையுமாருளவே" என்பதனாலும், "காலமுலகமுயிரேயுடம்பே, பால்பிரிந்திசையா வுயர் திணைமேன" என்பதனாலும் ஆபல என்பதுபோலப் பிறிதோர்பயனோக் காது உயிர்களோ டமைந்து ஆகிய வென்னும் பண்புத்தொகைவாய் பாட்டோடும் எல்லாமென்னு மஃறிணைப் பன்மைமுற்றுப் பெயர்ப் பயனிலைகொண்டது. யாவையு மென்னும் பயனிலை தானே யெழுவா யுருபாகி மிகுந்த வென்னும் வினைத்தொகை முதனிலையாய்த் தன்னெச்ச மான ஆதியமென்னும் பெயரோடும் வினையெச்சவாய்பா டேற்றது,

அலகில் சோதியென எண்ணையுணர்த்தும்பெயரோடும்புணர்ந் தாகிய வென்னும் பண்புத்தொகைவாய்பாட்டான் வினையெதிர்மறுத்த பெயரெச்சவினைக்குறிப்பு, தன்னெச்சமாகிய சோதியென்னும் பெயரொடு முடிந்தது. "கோளில்பொறியில்", "கோட்டமில்கட்டுரை" என்பனவுமிது.

சோதியணிகிளர்திருவுரு வென்பது உவமைத்தொகை, உம்மைத்தொகை, வினைத்தொகையொற்றுமைநயம்பெற்று மூன்றாவதன்றொகைப் புறத் தும்மைத்தொகையுமுற் றன்மொழித்தொகைப் பெயர்ப்பயனிலை கொண்டது.

உறுபய னென்பது உரிச்சொல்லடையோடுங் கூடிய பண்புப்பெயரெனினுமாம்; 'நள்ளிருட்கிடந்தேன்' என்பதுபோலும். உறுபயன்-முத்தி. அணி-கௌத்துவமணி. இவை ஆகுபெயர்; என்னை? "அவைதாம், தத்தம்பொருள்வயிற் றம்மொடுசிவணலும்" என்பதனா லறிக. இனி, "எல்லாத்தொகையுமொருசொன்னடைய" என்பதனால் இம்முதலீரடியுள் உலகம் யாவையு மென்பது இருமொழித்தொடர்த்தொகைச் சொல். உலகம்யாவையு மென்பதுமுதல் திருவுருவென்ப தீறாயின பன்மொழித்தொடர்த் தொகைச்சொல். அவற்றுள்ளும் அலகில் சோதி யணிகிளர்திருவுரு வென்பன அறுவகைத்தொகையு மோரள வடிக்கண்ணே யொருங்குதொக்கன. என்னை? அலகிலவாகிய சோதிகளி னொளியைப்போலு மொளியையுடைய வணியையுந் தழையாநின்ற திருவோடுங்கூடிய திருமேனியையுமுடையானெனத் தொகைதொடர்ந்து நிகழ்ந்தமையா னெனக் கொள்க. அன்றியும், விளப்பானென்பதனை யெடுத்தலோசையால் வினைப்பெயராக்கி யிருபெயரொட்டுப்பண்புத் தொகைவாய்ப்பாட்டான் உறுபயன் விளப்பானாகிய திருவுருவெனினுமாம். வினைப்பெயர் முற்றாய்ப் பெயர்ப்பெயரேபோல வுருபேற்றலி னெனக் கொள்க. இவ்விரண்டிற்கும் விளப்பான்றிருவுருக் குடிபுகு வடவேங்கட மெனவும், விளப்பானாகிய திருவுருக் குடிபுகும் வடவேங்கடமெனவும் முறையே தொடர்ப்படுத்து முடிக்க. இச்செய்யுட்குப் புலவீர்கா ளென்னுந் தோன்றாவெழுவாயை முதலேவிரித் துரைநடையொட்டுக. இவை யிரண்டுமன்றி விளப்பான் என்பதனைப் பகுத்து

லோசையால் விளைப்பதமாக்கி, உயிர்களெல்லா முத்தியை விளைக்கப் படுவா னென்றவ னலகில்சோதி யணிகிளர்திருவுருவெனத் தன்னெச்ச மான பெயர்கொண்ட முற்றுக்கூதல் இச் சிறப்புப்பாயிரஞ் செய்தார் கருத்து. இம் முற்றிற்கு அதன்பின்னர் அவன் என்னுஞ் சுட்டுப் பெய ரெஞ்சியதாக விரித்து மேல்வரும் உணர்வுயிரென்பவற்றோடும் புணர்த்து அவன்குடிபுகும் வடவேங்கடமென முடிக்க.

இம் முதலீரடிக்கு மித் துணையும் எழுத்துச்சந்திமுடிவுஞ் சொன் முடிவும் விரித்தனம். இங்ஙனம் வகுத்தவற்றுள் இம்முற்றிற்குப் பொருள்கோள் - ஆற்றுநீர். பொருள் - புறப்புறம். திணை - வாகை. துறை - அருளொடு நீங்கல். என்னை? "ஒலிகடல்வையகத்து, நலிவு கண்டுநயப்பவிதந்தன்று" என்னும் வெண்பாமாலையுள் வாகைத்திணையு ளிறுதிச்சூத்திரத்தா னுணர்க. யாப்பு - குறள்வெண்செந்துறை. அலங் காரம் - ஒருபொருட் கொன்றுபலகுழீஇய பல்பொருளுவமை. மெய்ப் பாடு - கல்விபற்றிய பெருமிதம். பயன் - ஆதலான் முத்திவேண்டுகில் இக்காயமிருக்கப்பெற்றபொழுதே இந்திரியங்களையடக்கி, மண் பெண் பொன் என்னும் பற்றினைவிட்டு, மனோ வாக்குக் காயங்களா லவனைச் சிந்தித்தும் வாழ்த்தியும் வணங்குமின்; பேரின்பம்பெறலாம் என்பதாம்.

இப்பாயிரச்செய்யுண்முதலீரடியையு மிங்ஙனம் பிரித்துச் சொல் லணிக்கட்காட்டிய பிறிதுபடுபாட்டாக்கியதும் பஞ்சாதிகாரவிலக்கண நடைதழீஇய ஒருவகை விரித்துரைகாட்டுதற் கெனக் கொள்க. இனி ஏனையடிகட்கெல்லாம் இவ்வாறு விரித்துரைப்பி னுரைபெருகுமாதலான் அவற்றிற் கிவற்றிற் சுருங்கக்கூறுவதையுங் கற்றபெற்றி நற்குணனுடை யோர் தெற்றென முற்ற வுய்த்துணர்க.

உணர்வுயிர்.......................கவின்பதிநின்று மென்பது அவன் ஆயுவும், ஞானமும்போலத் தன்னுடன் அளவளா யுத்தமராகிய நித்தர் கூட்டம் விட்டுநீங்காத அழகிய சுவணமயமாம் அந்தாமத்தின்கண்ணு மவ்வுருநிலைபெற்றிருப்பதோடும் என்றவாறு. உணர்வுயிர்-உம்மைத் தொகை. கணமகலாத வென்பதற்குக் கணப்பொழுதும் விட்டுநீங்காத வெனினுமாம். என்னை? "ஒருபொரு ளிருசொற் பிரிவில வரையார்" என்றாகலின், நித்தர் - அநந்த கெருட சேனபதிமுதலியோர், அக

லாதபொற்கவின்பதி என்பது "உருபும்வினையுமெதிர்மறுத்துரைப் பினுந், திரியாதத்தமீற்றுருபினென்ப" என்பதனால் எச்சப்பெயர் திரி பின்றி முடிந்தது.

உரவுநீர்வளைத்தவொன்பானுள்...........................வடவேங்கட மென்பது கடல்சூழ்ந்த பூமியினிடத்துக் கண்டமொன்பதினுள்ளுந் தென்றிசைக்கட் பாதகண்டத்துள் அந்தாமமாகிய அப் பழம்பதி பூலோகவைகுண்டமானதென் றுயர்ந்தோர் கூறும்படிக்குக் குடிகொண் டுறையும் விசும்பைத் தொடவுயர்ந்த சோலையையுடைய வடக்கின்கண் வேங்கடமு மென்றவாறு. உரவுநீர் வளைத்த வொன்பானென்பது அடிப்பட்டபெய ரெஞ்சாது முதனின்றுதொடர்ந்த பெயரெச்சவாய்பாடு தன்னெச்சமான பெயர்கொண்டுமுற்றியது. அடிப்பட்டபெயரெஞ்சிய தாவது உண்டசாத்தன் என்பதற்கு அமுதுண்டசாத்தன் என்றும், உண்டவமுதென்பதற்குச் சாத்தனுண்ட வமுதென்றும் முதலே நின்ற பெயராகிய அமிர்துஞ் சாத்தனும் எஞ்சிநிற்பது. அஃ தீண்டு யாண்டு விரிந்ததெனின்? உரவுநீர் அடிப்பட்டபெயர்; வளைத்த வென்பது பெயரெச்சவாய்பாடு; ஒன்பான் என்றது தன்னெச்சமானபெயர். ஆதலால் உரவுநீர்வளைத்த என முதலே எஞ்சாது விரிந்தமை காண்க. இவை வினையெச்சத்திற்குமுள. அவையும் இம்முறையே காண்க. உரவு நீர்-போக்குவரவுநீர். ஒன்பானுள் என்பது "ஒன்றுமுதலாகப் பத்தூர்ந்துவரூஉ, மெல்லாவெண்ணுஞ்சொல்லுங்காலை, யானிடைவரினு மானமில்லை, யஃதென்கிளவியாவயிற்கெடுமே, யுய்தல்வேண்டும்பஃகான் மெய்யே" என்றாராகலின், அஃதென்னுஞ் சொற் கெட்டுப் பகரமெய்நிற்ப வுருபுபுணர்ச்சிக்கண் ணிடை ஆன்சாரியை பெற்றது. ஒன்பானுட் டெண்புல என்பது எட்டிறந்த பலவகையுட் டிரிந்ததன்றிரிபு. கண் டத்துள் என்பது "மஃகான்புள்ளிமுன்னத்தேசாரியை" என்பதனால் அத்துச்சாரியை பெற்று, "அத்தேவற்றேயாயிருமொழிமே, லொற்று மெய்கெடுதறெற்றென்றற்றே" என்பதனான் மகரங்கெட்டு "அத்தின கரமகாரமுனையில்லை" என்பதனால் அத்துச்சாரியை அகரங் கெட்டது. அப்பழம்பதி என்பது "வினையெஞ்சுகிளவியு...........................சுட்டி

னிறுதியு, மாங்கவென் னுமுரையசைக்கிளவியு, ஞாங்கர்க்கிளந்தவல் லெழுத்துமிருமே" என்பதனாற் பகாமிக்கது. வடவேங்கடம்வேற்றுமைத் தொகை.

இதன் பொழிப்புரை புலவீர்காள் உயிர்கண்முழுதும் பெறுதற் கரிய முத்தியை விளைக்கப்படுவான் எண்ணிறந்த பலகோடியவா மிள ஞாயிறுபோன் றொளியையுடைய கௌத்துவமணியையுந் தழையா நின்ற திருவோடுங்கூடிய திருமேனியையு முடையான் அவனாயுவும், ஞானமும்போலத் தன்னொடு மளவளாய வுத்தமமாகிய நித்தர்கூட்டந் தனது காந்தியையுங் கருணையையுங்கண்டுங் கருத்துட்கொண்டும் விட்டு நீங்கா தழகிய சுவணமயமாகிய அந்தாமத்தின்கண்ணும், அகிலபூரண னாகி நிலைபெற்றிருப்பதோடும் கடல் சூழ்ந்த பூமியின்கண்ணவாங் கண்ட மொன்ப தென்றவற்றுள்ளும் பரதனாற்பெயர்பெற்ற கண்டத்தினுட் பழம்பதி பூலோக வைகுண்டமானதென வுயர்ந்தோர்கூறும்படிக்குக் குடிகொண்டுறையும் வடக்கின்கண் வேங்கடமும் என்பதாம். அவன் குடிகொண்டுறையும் வடக்கின்கண் வேங்கடமும் எனக் கூட்டுக. அற்றேல் விளைப்பான்...........திருவுரு என்பது முதலாய வவற்றினிடையிடை பிற பல சொற்றொடர்ந்தவாறென்னையெனின், நன்று சொன்னாய்! "தத்தமெச்சமொடுசிவணுங்குறிப்பி, னெச்சொல்லாயினுமிடைநிலைவரை யார்" என்பதனா லிடையிடையேற்பன அடைச்சொல்லாய்வந்தன. அஃ தாக இங்ஙனந்தொடர்ந்த வவற்றி னிடையிடை பெறுதற்கரியவென் பது முதலாய சொற்கள் கூட்டியுரைத்த வுரைநடை யாதோவெனின், "சொல்லொடுங்குறிப்பொடுமுடிவுகொளியற்கை, புல்லிய கிளவியெச்ச மாகும்" என்றாராகலின், கூட்டியுரைக்கப்பட்டது. ஆனாற் சொல்லெச் சங்களேயன்றிக் குறிப்பெச்சமு மிதனுள்ளு முளவோவெனின், உள. அஃ தியாண்டுக்குறித்ததெனின், பரமவைகுண்டத்திருப்பவன் அவ னனைத்துலகத்துயிர்கடோறும் அந்தரியாமியாயிருப்பதோடுங் கைம்மா றின்றியு மிவ்வுலகத்துயிர்கள் பெறுதற்கரிய முத்தியை யெளிதின் விளைப்பவனாகிப் பரதகண்டத்துட் பழம்பதியெனக்குடிபுகுந்துறையும் வடவேங்கடமெனவே அவன் பரமகிருபையிருந்தபடியோவெனவும், பரமவைகுண்டத்தினுந் திருமாமணிமண்டபத்தினும் நித்தர் முத்த ரொடுங்கூடிய திருவோலக்கத்திற் குறைவின்றி யிருப்பதோடும், வட வேங்கடத்தினுந் தெய்வத்திருமேனியோடுந் தொண்டக்குழாங்கள்

கைதொழக் குடிபுகுந்துநின்ற தென்ன அகடிதகெடித சாமர்த்திய குணமோ வெனவு மீரிடத்துங் குறிப்பெஞ்சிநின்றதெனக் கொள்க. மெய்ப்பாடு—மருட்கையைச்சார்ந்த பெருமிதம். இவ் வுரைநடையுட் பொழிப்புரை தலைதடுமாறியும், பொழிப் பகல நுட்ப மெச்ச மென்னும் நால்வகையுரைநடையும் நிகழ்ந்தமையுங் காண்க.

தெண்டிரை..................ஆயிடை என்பது தெளிந்த திரையார வாரிக்குந் தெற்கின்கட் குமரியும் எல்லையாகவுடையதென்று கூறப் படுவனவாம் அவற்றி னடுவிருந்து என்றவாறு. ஆயிடை என்பது "நீடவருதல்செய்யுளுளுரித்தே" என்பதனாலும், "சுட்டு, நீளின்யகாரமுந் தோன்றுதனெறியே" என்பதனாலும் யகாரவுடம்படுமெய் தோன்றியது.

அமிழ்தினும்..................மதிக்கும் என்பது தேவர்பானமாகிய வமிர்தினும் பெருத்தசுவையுடைத்தாம் எழுத்துச் சொற் பொருளென மூன்றுதன்மைத்தாகிய தமிழை யாராயாநிற்கும் அறிவின்றன்மையை யுடைய பெரியார் நன்குமதிக்கும் என்றவாறு.

முதுமொழித்தெண்டி...........புணர்த்தியலணியையும் என்பது மூன்றுநூல்களையாராயுந் தெண்டியாசிரியர் கூறப்பட்ட முதனூலணிக ளோடுந் தினமு நவமான பாடலேபாடும் புலவராற்கூறப்பட்டனவா யுலகின்கண்ணே வழங்குவனவா மணிகள் பலவற்றையும் என்றவாறு.

தனது நுண்ணுணர்.......................விரித்தும் என்பது தனது நுண்ணிய வறிவுகாரணமாகக் கண்டளித்த பலவணிகளையுங் கற்றோர் மனத்துட்கொள்ளத் தொகுத்தும், தொகுத்ததனை வகுத்தும், வகுத்த வற்றை விரித்தும் என்பதாம். தனது, மனது என்பன "ஆற னொருமைக்கதுவுமாதுவும்" என்பதனால் அதுவென்னு மாறனுருபு ஒருமையிடத்து ஆது ஆயிற்று.

பொதுவியல்........................எச்சவியலென வென்பது பொது வியல், பொருளணியியல், சொல்லணியியல், எச்சவியலென்று கூறும் படிக்கு என்றவாறு. இவற்றுள், இயல் என்பதனை நான்கினுங்கூட்டி அணி என்பதனைப் பொருண்முத லிரண்டினுங் கூட்டியுரைக்க.

சதுர்பெற................சார்பெனலாய் என்பது நால்வகைபெற்றுச் செய்யுளிடம் வழக்கிடமென்னு மீரிடந்தழுவின சார்புநூலென்பதாக வென்றவாறு.

காரிதந்தருள்......................உரைத்தனன் என்பது அந்நூற்குக் காரியா ருலகின்மன்னுயிர்க ளீடேறப் பெற்றருள்செய்த நூற்கடவி ளியற்பெயரால் மாறனலங்கார மென வத் திருநாமத்தினை யவ்வணிக் கணியாகவே யலங்கரித்து ஞானசாரியர் குழீஇயதாம் அவையின்கண் ணரங்கேற்றினன் என்றவாறு.

சிற்குணச் சீநிவாசன்....................உணர்வோன் என்பது அவன் யாரெனில், சாத்துவிககுணத்தையுடைய சீநிவாதனென்னும் ஞானு சாரிய னினியகருணையால் நன்பொருளாகிய சித் தசித் தீச்சுரமென்னும் மூன்றினையும் உணர்த்தும் ஞான நூல்களை நாடோறும் பேரானந்த மிகும்படி யாராய்வோன் என்றவாறு. "வேண்டியகல்வியாண்டுமூன் றிறவா" தென்பதனுல் உணர்வோனென நிகழ்வு மெதிர்வும் பெறக் கூறினு ரென்றறிக.

பெருநிலம்.................வருமனகன் என்பது பெரியவுலகினிடத் துயர்ந்தோர் கீர்த்திக்குந் திருக்குருகைப்பெருமாள் பெற்றருளும் அழுக் கற்றவன்; புண்ணியன். என்றவாறு.

செழுந்தேன், மருக்கமழ்சீரகத்தார் வணிகன் என்பது வளமையை யுடைய தேனினது பரிமளம் பரிமளிக்குஞ் சீரகத்தார்புனைந்த வணிகர் குலத்துள்ளான் என்றவாறு.

புகழ்த் திருக்குருகைப்பெருமாள்கவிராயன் என்பது கீர்த்தியை யுடைய திருக்குருகைப்பெருமாள்கவிராயனென்னுஞ் சிறப்புப்பெயரை யுடையோன் என்றவாறு.

அருட்குணத்துடன்வளர்சடையன் என்பது கருணைக்குணத் துடன் வளராநின்ற சடையன் என்னு மியற்பெயருடையோன் என்ப தாம்.

பொருட்டொடர் நவம்புணர் புலமையோன் என்பது பெருங் காப்பியம் புதிதாகப் பாடல்சான்ற அறிவின்றன்மையையுடையோன் என்றவாறு. ஏகார மீற்றசை.

வடக்கின்கண் வேங்கடமுந் தெற்கின்கட் குமரியுமென்னக் கூறப் படுவனவா மவற்றினடுவிருந்து தமிழை யாராயு முணர்வுடையோர் நன்குமதிக்குந் தெண்டிமுதனூலணியொடும் புலவர் புணர்த்துவழங்கு மணியையுந் தனது நுண்ணுணர்வாற் கண்டளித்த பலவணியையுங் கற்றோர்மனத்துட்கொளத் தொகுத்தும் வகுத்தும் விரித்தும் நால்வகை யியலா னீரிடம்பொருந்தின சார்புநூலென்பதாகவும், அந்நூற்குக் காரி யார்பெற்றருள் கலைக்கடலியற்பெயரை யணியாகப் புனைந் தாரியர்குழீஇய வவையின்கண் ணரங்கேற்றினன்; அவன் யாரெனிற் சிற்குணச் சீநிவாதனின்னருளால் நற்பொருண் மூன்றையு மாராய்வோன் திருக் குருகைப்பெருமாள்கவிராயன் சடையன் பொருட்டொடர்நவம்புணர் புலமையோ னென்க.

அஃதாக முன்னர்ச் சிறப்புப்பாயிரம் பதினொருவகைப்படுமெனக் கூறிய வப்பதினொன்றும் இப்பாயிரத்துட்பெற்றவா றெங்ஙனேயோ வெனின்? வடவேங்கடந் தென்குமரியெனவே எல்லையும், முதனூலணி யொடு மெனவே வழியும் நுதலிய பொருளும், தனது நுண்ணுணர்வாற் றருபல வணியையு மெனவே காரணமும், பயனும், பொதுவியல் பொருள்சொல் லணியெச்ச வியலென வெனவே யாப்பும், காரிபெற்றருள் கலைக்கடலியற்பெயர்புனைந் தெனவே நூற்பெயரும், ஆரியர் துவன்ற வவைக்களத்துரைத்தன னெனவே கேட்டோரும், களனும், திருக்குரு கைப்பெருமாள்கவிராயன் சடையனெனவே நூல்செய்தோன்பெயரும், காலமும் ஆகப் பதினொன்றும் இப்பாயிரத்துள்ளே பெற்றவாறு காண்க. அன்றியும், நூல்செய்தோன் வழிபடுதெய்வமும் தெய்வத்து ளிதுவே பரத்துவமென்ன வறிவித்த ஞானாசிரியனும், நூல்செய்தோன்பிதாவும், குலனும், பதியும் கூட்டிப் பதினாறென்னுமவையும் இப்பாயிரத்துட் பெற்றவாறு காண்க.

இஃது திருபத்தாறடியான் வந்த நேரிசையாசிரியப்பா. என்னை? "ஈற் றயலடியே யாசிரியமருங்கிற், றோற்றமுச்சீர்த்தாகுமென்ப" என்றாராக

வின். இவ்வாசிரியப்பா முதலீரடியையுங் குறள்வெண்செந்துறை யாக்குதலாற் சொல்லணியுட் சித்திரப்பாவினுட் பிறிதுபடுபாட்டாயது.

64. பாவிற்கணிபோற்பனுவற்றெளிவுணர்ந்தோர்
நாவிற்குவாய்மைபோனாணனுந்—தேவிற்கு
வாய்ந்தவருள்போலவாய்ந்ததேநூலகத்தா
யேய்ந்தபொருட்பாயிரம்.

(எ-ன்) சிறப்புப்பாயிரத்தினது சிறப்பிற் குவமையுணர்-ற்று.

இதனுள், வாய்மை - சத்தியவசனம். கற்றகல்வியைப் பிறர்க்குச் செலச்சொல்லுதலுமாம். நூலகத்தா யேய்ந்தபொருட்பாயிரம் என்பதனாற் சிறப்புப்பாயிரம். நூலகத்தா யேய்ந்தபொருள் புலவன்கூறிய வவ்வவநூலுக்குச் சிறந்தபொருள்களா மெனவுணர்க. (௬௪)

பாயிரவுரை முற்றும்.

தருகாளமேகங்கவிராயராயன்சடையனன்பாற்
குருகாபுரேசர்புனையலங்காரங்குவலயத்தே
கருகாதசெஞ்சொலுரைவிரித்தான்கற்பகாடவிபோல்
வருகாரிரத்னகவிராயன்பேரவரோதயனே.

ஸ்ரீ:

மாறனலங்காரம்.

முதலாவது

பொதுவியலுரை.

65. திருப்பாவையென்னத்திருந்தியற்பாத்தந்த
திருப்பாவைவில்லிபுத்தூர்ச்செல்வி—யருட்பார்வை
வாய்ந்ததனாற்செய்யுள்வழக்கென்றிரண்டிடத்தா
லாய்ந்துரைப்பல்செய்யுளணி.

என்பது சூத்திரம். இவ் வதிகார மென்னுதலிய வெடுத்துக்கொள்ளப் பட்டதோவெனின், அதிகார நுதலியதூஉ முன்னர்க்கூறிப்போந்த சிறப்புப்பாயிரத்தானே யுணரப்படும். என்னை? "தனாது நுண்ணுணர் வாற்றருபலவணியையும்" என்பதனானுணர்க. ஆயின், இவ் வணி யதிகாரத்து ளணியிலக்கண மெனைவகையோத்தினானுணர்த்தினாரோ வெனின், இனைவகைடோத்தினா னுணர்த்தினா ரென்பதூஉம் அச்சிறப்புப் பாயிரத்தானே விளங்கும். என்னை? "பொதுவியல்பொருள்சொல்லணி யெச்சவியலென" எனக் கூறியதனானுணர்க. அஃதாக, இவ் வதிகாரத்தின் முதற்கணோத்தினைப் பொதுவிய லென்ற தென்னையெனின், அணி பெறுஞ் செய்யுள்கட்கும், பொதுவான வொருசாரணிக்கும் பொது விலக்கண முணர்த்தினமையாற் பொதுவியலென்னும் பெயர்த்தாயிற்று. இவ்வோத்தினு ளிச்சூத்திர மென்னுதலிற்றோவெனின், ஒருசாராசிரியர் வேண்டுஞ் சிறப்புப்பாயிரமுணர்—ற்று. என்னை? "தெய்வவணக்கமுஞ் செயப்படுபொருளு, மெய்தவுரைப்பதற்சிறப்பாகும்." என முன்னை யோர்கூறிய முறையானும், "கடவுள்வணக்கமுங்கருதியபொருளுந், திட னுறப்புகல்வதுஞ்சிறப்பென்றாகும்." என இந் நூலுடையாருங் கூறிய முறையானு முணர்க. உம்மை இறந்தது தழீஇயிற்று. அன்னவாறுத

விச்சூத்திரத்திற்குப் பொருளுரைப்பவே விளங்கும். ஆனா லிச் சூத்திரச் சொற்பொருள் யாதோவெனின், அப் பொருளுரை நான்குவகைப்படும்; கருத்துரைத்தலும், கண்ணழித்துரைத்தலும், பொழிப்புத்திரட்டலும், அகலங்கூறலும் என. என்னை ? "உட்கோள்கண்ணழிப்புடன்பொழிப் பகலஞ், சுட்டிக்கூறல்சூத்திரச்சொற்குரை" எனவரும். அவற்றுள்ளும், கருத்துரைத்தலாவது சூத்திரத்தி னுட்கோளுரைத்தல். என்னை ? "கருத்துரைசூத்திரத்துட்கோள்கழறல்" எனவும், கண்ணழித் துரைத்தலாவது சூத்திரத்திற் சொற்றொறுஞ் சொற்பொருளுரைத்தல். என்னை ? "தொகுத்தசொற்றொறுஞ்சொற்பொருளுணர்த்த, லடுத்த கண்ணழிப்பென்பர்கற்றவரே" எனவும், பொழிப்புத்திரட்டலாவது சூத்திரத்திற் பொருளையெல்லாந் தொகுத்துரைத்தல். என்னை ? "ஒலி கெழுசொற்பொருள்களைத்தொகுத்தொருங்கே, பொலிவுறத்திரட்டி யுரைப்பதுபொழிப்பே" எனவும், அகலமாவது சூத்திரத்திற் பொருளைச் செம்மைசெய்தற்குக் கடாவும் விடையு முள்ளுறுத்தி விரித்தல். என்னை? "மறுதாறும்யாப்பின்மரீஇயசொற்பொருளை, வினாவினும்விடையினும் விழுப்பொருளாக்கி, யகற்றுப்விரித்துரைப்பதுவேயகலம்" எனவும் இந் நூலுடையார் கூறிய சூத்திரங்களானு முணர்க.

இவ்வகையெல்லா மிச்சூத்திரத்தினுட் பெறுமுறை யெங்ஙனேயோ வெனின், "திருப்பாவை...............யருட்பார்வைவாய்ந்தனு" லெனவே கடவுள்வணக்கஞ் சொன்னவாறு. "செய்யுளணி" யெனவே அதிகாரத்துட் கருதியது சொன்னவாறு. அதிகாரம்—முறைமை. இதனாற் கருத்துரை முற்கூறப்பட்டது.

இனிக் கண்ணழித்துரைக்குமாறு:—திருப்பாவையென்ன வென்பது அழகையுடைய நோன்பென்று சொல்லுவதாக என்றவாறு. திருந்தியற் பாத்தந்த வென்பது நிரம்பிய இலக்கணத்தையுடைய பாட்டை யுலக மீடேறப் பாடித்தந்த என்றவாறு. திருப்பாவை வில்லிபுத்தூர்ச்செல்வி யென்பது திருப்பாவையென்னும் திருநாமத்தையுடைய ஸ்ரீவில்லி புத்தூர்த் திருவுடையாள் என்றவாறு. அருட்பார்வை வாய்ந்ததனு லென்பது அவளது கருணையோடுங் கூடிய திருக்கண்ணோக்கம் எனக்கே புலித்ததனால் என்றவாறு. செய்யுள் வழக்கென் றிரண்டிடத்தா லென்

பது செய்யுளென்றும், வழக்கென்றுஞ் சொல்லப்பட்ட இரண்டிடங்களானு மென்றவாறு. ஆய்ந்துரைப்பல் செய்யுளணி யென்பது (செய்யுளணி யாய்ந்துரைப்பலெனப் பாடமாற்றி) முன்னோர்கூறிய செய்யுளிடனாகத் தோன்று மணியிலக்கணங்களை யாராய்ந்து கூறுவ லென்றவாறு.

அணியென்ப தீண் டணியிலக்கணங்களை. செய்யுட் கழகு கொடுத்தலின் அணியென்றாயிற்று.

இனிப் பொழிப்புத்திரட்டுமாறு:— அழகையுடைய நோன்பென்று சொல்லுவதாக நிரம்பிய இலக்கணத்தையுடைய பாட்டை யுலக மீடேறப் பாடித்தந்த திருப்பாவையென்னுந் திருநாமத்தையுடைய ஸ்ரீவில்லிபுத்தூர்த் திருவுடையாளது பாவைக் கருணையோடுங் கூடிய திருக்கண்ணோக்கஞ் சிறிது மறிவிலனு மெனக்கே பலித்ததனாற் செய்யுளென்றும் வழக்கென்றுங் கூறிய விரண்டிடங்களானு முன்னோர்கூறிய செய்யுளிடனாகத் தோன்று மணியிலக்கணங்களை யாராய்ந்து கூறுவ லென்றவாறு.

இனி, அகலமாவது விரித்துரையாதலால் இதற்கும் விரித்துரை யீண்டுக்கூறின் உரைபெருகுமாதலா லதனை யுள்ளிருந்தாய்த் துணர்ந்துகொள்க. அஃதாகுக; முன்னோர்கூறிய இலக்கணநூல்களெல்லா வகையோத்தினு னுணர்த்தினரெனினு முற்று மொருங்குவினாற் கூறவும், இந்நூலுடையார் பொதுவியலொன்றையும் வெண்பாவாற்கூறி யேனையியல்கண் மூன்றினையும் ஆசிரியத்தாற்கூறிய தென்னையோவெனின், நன்றுசொனனாய்! இக் கடாவிற்கு, எதிரதுபோற்றலென்னு மூத்தியாற் பாயிரத்துள், "விதியாச்செய்யுளின்மிகுத்திலக்கணமு, மதியாலுரைத்தது மழங்கன்ஞாபகமா" எனக்கூறிய சூத்திரத்தா னுணர்க. (க)

66. வெண்பாவகவல்விரிகலிப்பாவஞ்சிப்பா
பண்பார்மருட்பாபரிபாட—லொண்பா
வினமென்றுலித்திரண்டாறீராறவாய்ச்சென்
றனமூந்து நூல்கற்றது.

(எ-ன்) முன்னர்ச் செய்யுளிடனாகத் தோன்று மணியிலக்கண முரைப்பலென்றார்; செய்யுளுணர்ந்தே அணி யுணரப்படுமாகலான், அணிபெறுஞ்செய்யுளின் பெயரும், முறையும், தொகையு முணர்—ற்று.

(இ-ள்) செய்யுளெனத் தொகையா ஞென்றாய்நின்ற அது, வெண்பா அகவல் என வகைவரையறை யிரண்டாய் அவற்றின் மாபு மிக்க கலி, வஞ்சி, மருட்பா, பரிபாடல் என நான்கிஞேடும் விரிவரை யறை யாறாய்ச் செப்பல், அகவல், துள்ளல், தூங்கல் என்ற வோசை யுடைத்தாய் விரியொடுநின்ற வாறனுள் வெண்பா முதலாய நான்கென்னு மொள்ளிய பா இன மெனப் பன்னிரண்டாய் மூந்து நூல் கூறப்பட்டு நிகழ்ந்தன வென்றவாறு.

என்றென்பது எண்ணிடைச்சொல். அதனைப் பா, பாவின மென்னு மெல்லாவற்றினும் பிரித் தேற்றுக. என்னை? "என்று மெனவு மொடுவு மொரோவழி, நின்றும் பிரிந்தெண் பொருடொறு நேரும்" என்ப வாகலின். அது "வினைபகையென் றிரண்டி னெச்ச" மென்பதுபோலக் கொள்க. இரண்டாறீராறென்பன நிரனிறை. ஆயென்ப திறுதிவிளக்கா யீண் டாக்கததினைக் காட்டியது. ஒலித்தாயென்ப துடைமைவினைக் குறிப்பு. "மருட்பாவேனையிருசாரல்லது, தானிது வென்னுந்தனிநிலை யின்றே" என்பதனுல் அதற்குச் செப்பலும் அகவலுங் கொள்க. "பரி பாடல்லேதொகைநிலைவிரிபி, னிதுபாவென்னுமியனெறியின்றிப், பொது வாய்நிற்றற்குமுரித்தெனமொழிப" என்பதனுல் அதற்கு முழுது மிசையாய்க்கொள்க இப்பெயர் பெயர்; இம்முறை முறை; இத்தொகை தொகை எனக்கொள்க. இவற்றுள் வெண்பா முதல்வைத்தது தலை தடுமாற்றமெனினு யாம். ஆயின் முதலே யணியிலக்கணங் கூறுவ லெனப்புகுந் தீண்டுச் செய்யுளிலக்கணங்கூறிய முறையான் மற்றென்று விரித்தலென்னுங் குற்றமாமெனின், ஆகாது. என்னை? எழுத் தசை சீர் தளை யடி தொடை யென்னு மாறுறுப்பினதிலக்கணங்களைக் கூறி யவற்றுனுப் பாவினைத் தளையானும், அடியானும், தொடையானும், ஓசையானும், பொருளானும் வேறுபட்டமைகூறி யினங்களையு மவ் வகையே கூறு திவ ரீண்டைக்கே வேண்டுஞ் செய்யுட்களது தொகை வகைமாத்திரமே கூறினமையா னெனக் கொள்க. (௨)

67. ஆற்றலணிக்கண்ணவை முத்தகங்குளகந்

தோற்றுந்தொகையேதொடர்நிலையென் —றேற்புடைய

வென்றமவற்றுளெழுவாய்தனிநின்று
சென்றுபொருண்முற்றுந்திடன்.

(எ-ன்) இதுவும் அங்ஙனம் விரிந்தபாக்க ளணிபெறுதற்பொருட்டுச் சிறப்பிலக்கணத்தா லவற்றிற்கு மீட்டு மொருவகைப் பெயருமுறையுந் தொகையு முணர்-ற்று.

(இ-ள்) வகையினும் விரியினுங்கூடி யிரண்டா றீராறென்னுஞ் செய்யுட்களாகிய வவை பெருமையுடைய வணியிலக்கணங்களிடத்து முத்தகம், குளகம், தொகைநிலை, தொடர்நிலையெனச் செய்யு ணான்காகப் பொருளொழுக்கத்தாற் றொகைபெற்று எக்காலத்திற்கும் பொருந்துதலுடையனவாம். அந் நான்கனுள் ஆதியாகிய முத்தகச்செய்யு ளொன்றாக நின்று திடனுகச்சென்று புலவன் குறிக்கப்பட்ட பொருளைப் பயந்து முற்றுப்பெறு மென்றவாறு. இவற்றுள் முத்தகம், குளகம் என்பன வடமொழிப்பெயர். ஏனையவிரண்டுந் தமிழ்மொழிப்பெயர். அவை யங்ஙனமாமாறு மே லறியப்பெறும். நிலையென்பதனை யிரண்டிடத்துங் கூட்டியுரைக்க. ஆற்றல்-பெருமை. தோற்றுதல்-உண்டாதல். சென்றென்பதனுற் செய்யுளின்கண் ணிகழ்ந்த சொற்பொருளொடு முற்றாது எஞ்சிநின்ற சொல்லேயாயினும் பொருளேயாயினும் கொணர்ந்து முற்றுவிக்க முற்றுமென்பதூஉங் கொள்க. எழுவாயென்ப தீண் டிடத்தானாகிய ஆகுபெயர். இச்சூத்திரப் பொருள்கோள் மொழிமாற்றெனக் கொள்க.

இனி முத்தகச்செய்யுட் குதாரணம் வருமாறு:—

பொன்னகர்புகுந்தயாணர்ப்புத்தமிர்தம்
பின்னொருநிலத்துப்பிறிதொருபடிவத்
தொருபகலுறைவதன்றெனவுலகுரைசெய
வருள்புரிகடவுளாணையின்வேட்டமுற்
றிகல்புரிவிலங்கினினந்தொலைத்ததற்பி
னகநகர்புரப்பேனயர்வுயிர்த்தற்குப்
பொலந்தகட்டுருளிப்புரவியூர்தியின்
வலம்பயில்பாகன்வரவுநீ இப்புறநகர்த்
தண்ணிழனுடினன்சார்வுழிமனனே

பெண்ணியல்பெருக்கியப்போமிர்தெதிர்தலும்
யாவதிவ்வுருவென விடைவிடாதுயவலுங்
காவகத்திஃதொருகவினிலைக்களனென்
றுண்ணிகழுழுவலன்புடனின்றாட்டக்
கண்ணயந்தனவாய்க்காமுறக்காண்டொறும்
புகுமுகம்புரிதலிற்புணர்ச்சிமேற்கொளத்
தொகுபதிஞென்றுந்தொடர்பிற்றோற்றி
யொளியுமூறுமுரிசையும்வாசமுங்
களியதாய்மிழற்றோசையுமைம்பொறி
யேககாலத்திலவிதழொன்றினுண்
டாகயாவருமணுகாதமைநலன்
வண்டுழாநெகிழ்ந்துமணமலிசெவ்வித்
தண்டுழாயரங்கன்றடந்துறைப்பொன்னித்
திரைவரன்றெறிநித்திலத்திரணிலவெழும்
விரைமலர்பரப்பிமெல்லணைவிரிபுன்னையி
னேந்தெழிற்சினைகவியெழினியுள்
வாய்ந்தருண்மறையார்மனக்கொள்பவரே. (1)

என்பது இயற்கைப்புணர்ச்சி புணர்ந்தவழித் தலைமகளிவனெக் குலத்தான்கொல்! எவ்விடத்தான்கொல்! இன்னுமிப்புணர்ச்சிகூடுங் கொல்! இவனென்னிடத் தன்புடையான்கொல்! எனக் கூற்றுலையுற் றுரையாளாயினுங் குறிப்பாலையநிகழும்; அவற்றைத் தலைமகனுளத்தா னுட்கொண்டு நால்வகையையமுந்தீரக் கூறியது.

(இ-ள்) பொன்னகர்..................................உரைசெய—மனனே சுவர்க்கத்துட் குடிபுகுந்த அழகிய புதிய அமிர்தங் குடிபுகுந்தபின்னர்ப் பொன்மயமல்லாத மற்றொருநிலத்தின்கட் சலமயமல்லாத மற்றொரு வடிவெடுத் தொருகணப்பொழுதுந் தங்குவதன்றென் றுயர்ந்தோர் கூறு நிற்பவும்; அப்போமிர்து—அப் பெருமையையுடைய வமிர்தம்; அகநகர் புரப்பேன்—அகநகரின்கண் ணிருந் துலகினைப் புரக்கு மாசுரிமையுடை யேன்; அருள்புரிகடவுளாணையின்......................தொலைத்ததற்பின்— என்னிடத் தினியகருணையைச்செய்யும் பால்வரைதெய்வத்தினைவலான் வேட்டைமேன் மனம் வைத் துலகத்துயிர்கட்கு மாறுபாடிழைக்கும்

ஆளி முதலிய விலங்கின்கூட்டத்தைக் குறைத்தபின்னர் ; அயர்வுயிர்த்தற்கு........... ..சார்வுழி—அவற்றைத் தொடர்ந் தோடி யாடின வருத்தம் போக்குதற்குப் பொற்றகடுபொதிந்த நேமியையுடைய குதிரைபூண்ட தேரோடும் வென்றி விட்டுநீங்காத பாகன் சுவடுபார்த்துவருவனென வுட்கொண்டு புறநகர்ப்பொதும்பர்க் குளிர்ந்தநிழலைநோக்கி யணுகின காலத்து ; பெண்ணியல் பெருக்கி யெதிர்தலும்—பெண்ணின திலக்கணத்தைத் தனதாகப் பெருப்பித் தெனதெதிர்நிற்ப ; யாவதிவ்வுருவென..................காண்டொறும்—மலர்மகள் முதலாயினோருருவினுள் யாதுதா னிவ்வுருவமென நின்றொருங்கூடி நீக்கமின்றி யுசாவாநிற்ப வுள்ளேநிகழு மெழுமையுந் தொடர்ந்தவன்பு பால்வரைகடவுளினன் புடன்கூடி யிக்காவகத் திவ் வுருவ மலர்மகண்முதலாயோர் காந்திகளெல்லாந் திரண் டேகமாகக் குடியிருப்பதோ ரிடவகைதானென் றுணர்வினு ளொன்றுவிப்ப வந்நிலையே கண்க ளிவ்வுருவினை விருப்புற் றுட்கொண்ட விருப்பமிகையானே நோக்குந்தொறும் ; புகுமுகம்புரிதலின் ....அமைநலன்—எனது நோக்கிடமாகப் புகுந்து தன்கண் விரும்பிநோக்குதலால் யான் புணர்ச்சிமேன் மனம்வைப்பப் புகுமுகம் புரிந்தபின் பொருளிலக்கணந் திரட்டியுரைத்த பொறிநுதல்வெயர்த்தன் முத லிருகையுமெடுத்த லீறாய பதினொருமெய்ப்பாடு மொன்றன்பின்னொன்று தொடர்புடைத்தாகத் தோற்றிக் கண்டுற் றுண் டுயிர்த்தலாகிய நான்கோடு மென்மேல்வைத்த கருணையுடைத்தாய் மிழற்றுமோசையு மெனக் கேட்பதுமாக வைம்புலன்களையு மென வைம்பொறிகளும் ஒரு காலத் திலவமலர்போன்ற வதரமொன்றின்கண் ணுகர்ந் தாக்கமெய்த விருந்தலையினும் வழிபடும் யாவரு மணுகாதபடிக் கேகாந்தமாக முழுத்த வின்பத்தை ; வண்டுழா...............பொன்னி—சுரும்புக ளாறுதாளினூலுந் துவைப்ப முகைவிண்டு பரிமளத்தை மிகுப்பதாங் குளிர்ந்த துளபமாலிகையையுடைய அரங்கேசனது தடந்துறைவாய்ந்த திருக்காவிரியினிடத்து ; திரைவான்றெறி..................வாய்ந்தருண்மறை — பெரிய திருமுகத்துறைத்திரைகள் கொழித்தெறியுந் தாளத்திரணில விருளைத் தூர்ந்து நிமிராநிற்பப் பரிமளப்பூவாகிய மெல்லிய அணையைவிரிக்கும் புன்னையின்கீ ழுயர்ந்த வழகொடுந் தாழ்ந்தகிளைகளாகிய திரையினுட் டோன்றி யளித்த விராசியத்தை ; யார் மனக்கொள்புவரே—யாமேயறிவதல்ல துலகத்துள் யாவ ரறிவரென்றவாறு.

இதனுள், நாடினனென்பது 'வினையெஞ்சுகிளவியும்வேறுபல்குறிய' என்பதனால் வினையெச்சத் தனித்தன்மைத் தெரிநிலைமுற்று. சார்வுழி என்பது கொள்வுழி, செல்வுழி என்பனபோல ஒற்றீற்று வகர வுடம்படு மெய் வந்தது. உயவல்—உசாவல்; "யானுன்றுயவுகோவையசிறிது" என்பதனு லறிக. யாவர்மனக்கொள்பவரென்பது யாரென வகரங் கெட்டது. யாதிவ்வுரு என்பது யாவ திவ்வுரு வென வகர மிகுந்தது. என்னை? "பலரறிசொன்முன்யாவரென்னும், பெயரிடைவகரங்கெடுதலு மேனை, யொன்றறிசொன்முன்யாதென்வினுவிடை, யொன்றியவகரம் வருதலுமிரண்டு, மருவின்பாத்தியிற்றிரியுமன்பயின்றே" என்றாகலின். அப்போமிர்து என்பது "வினையெஞ்சுகிளவியு முவமக்கிளவியு, மெனவெனெச்சமுஞ்சுட்டினிறுதியு, மாங்கவென்னுமுரையசைக்கிளவியும், ஞாங்கர்க்கிளந்தவல்லெழுத்துமிகுமே" என்பதனால் வல்லொற்று மிகுந்தது. இச்செய்யுளின்கண் ணகநகர்புரப்பேனெனவே யானாசனென்னுங் குலனும், புறநகர்சார்வுழியெனவே "ஒன்றேவேறேயென்றிருபால்வயி" னென்பதனால் ஒரு நகருள் அகநகரும் புறநகரும் என்னு மிடமும், உண்ணிகழுழுவலன்புடனின்றாட்ட வெனவே உழுவலன்பாற் பண்டும் பயின்றுவருகின்ற நட்பு இப்பிறப்பினுங் கூடிற்று; இதுபோல இன்னு மிடையிடையே கூட்டநிகழு மென்பதூஉம், அப்போமிர்து பெண்ணியல் பெருக்கி யெனவே நலம்பாராட்டலா லவன் தன்மேலன் புடையானென்பதூஉந் தலைமகளுட்கொண்டுணரு மென்பதாம். இதனுள், பொன்மயமல்லாத சலமயமல்லாத என்பன முதலாய யாமே யறிவதல்ல தென்பதீறாய சொல்லெச்சங்களும், தலைவியுள்ளக்குறிப்பைக் குறித்தானென்னுங் குறிப்பெச்சமும் எஞ்சிநின்று விரிந்து முடிந்த வாறுங் கண்டுகொள்க. இச்செய்யுள் "அகன்றுபொருள்கிடப்பினு மணுகியநிலையினு, மாட்டெனமொழிபபாட்டியல்வழக்கின்" என்பதனால் மாட்டென்னு முறுப்பாற் பொருள்கோள் நிகழ்ந்தவாறுங் காண்க. இது மருதநிலத்தலைமகன் பாலதாணையின் ஆயத்தைநீங்கிய மருதநிலப் புறநகர்த்தலைவியை யெதிர்ப்பட்டுக்கூடிய களவொழுக்கக் கந்திருவம். என்னை? "முதலொடும்புணர்ந்தயாழோர்மேன, தவலருஞ்சிறப்பினைந் நிலம்பெறுமே" என்றாகலின். இனிவருஞ் செய்யுட்கு மிவ்வாறு

விரித்துரையெழுதாததற்குஞ் சொற்றொறும் பொருளுய்த்துணர்ந்து கொள்க. பகுதி—இயற்கை. துறை—புணர்ச்சிமகிழ்தல்.

முயற்சியொன்றின்றாய்நெருநன்முழுநல
னியற்றியதெய்வதமிறவாதிருப்பதொன்
றென்றுணர்ந்துழப்புறினின்றுமாங்கெதிர்தன்
மன்றவென்றுறுதலின்மடந்தையர்குழாமொரீஇ
மடந்தபமாணிழைவணரிணரைம்பா
லிடந்தலைப்பாட்டினெய்தின்பநன்பனுவலைத்
தேரின்பத்தையுஞ்சிறிதுநில்லாதே
பேரின்பமதாய்ப்பெருகவுமன்றோ
சிற்றின்பமெனத்தீர்ந்தனராகிச்
சொற்றமிழ்மாறனைத்துதிக்குமெய்த்தொண்டர்
பற்றறுத்துணர்த்தியபாசுர
முற்றிடிலாசங்கையதாமொன்றே. (2)

என்பது இடந்தலைப்பாட்டின்கூட்டத்திறுதிக்கட் டலைமகன் சொல்லியது.

(இ-ள்) மனனே! நம்மிடத்து முயற்சி சிறிதுமில்லையாகவும் நெருநற்று நமக்குப் பெருத்தவின்பத்தை யுண்டாக்கித்தந்த தெய்வமானதென்று மிறவாதிருப்பதொன்றாமென்றறிந் தினி நாஞ் சிறிது முயற்சியுறினின்று மத் திருவுரு முதனாட்கண்டவிடத் தெதிர்தல் சந்தயமில்லையென் றியா முறுதலோடு மிகுளையர்குழாத்தைவிட்டுநீங்கி நம்மிடத்து வைத்த வேட்கையாற் றன்னிடத்தோன்றிய மடமையுந் தன்னை விட்டுநீங்க மாட்சிமைப்பட்ட அணிகளோடுங் கடைகுழன்று பூங்கொத்துச்செருகிய குழலினையுடையா ணம்வரவுபார்த்துநின்றவிடத்துத் தலைப்படுதலாலெய்திய வின்பமானது, நன்பனுவல்களை யாராய்ந்து நமதுண்ணின்றவின்பத்தைச் சிறிது நிலைபெறாதே பெயர்க்கப்பட்டதா யவ்வின்பநின்றவிடங்கொண் டாராவின்பமாகப் பெருகாநிற்ப இதனைச் சிறியதாகிய வின்பமென விட்டுநீங்கினாராகிச் செஞ்சொற்

றமிழாகிய திருவாய்மொழிபாடிய காரிமாறப்பிரானை வாழ்த்து மூண் மைத்தொண்ட ரிவ்வுலகத்து மகளிரிடத்தெய்து மின்பத்தின்மேல் வைத்த வாசையைவிட்டுப் பரமபதத்தின்பமே தெவிட்டாதவின்பமென முன்னமுணர்த்திய முதுமொழி யிதுபொழுது விசாரிக்கிற் சந்தயமாவ தொன் றென்றவாறு.

மனனே என்பது தோன்றுவெழுவாய். நின்றவென்பது முதலாய சொல்லெச்சங்களையு மாங்காங்கு வருவித்துக்கொள்க. மன்—ஆக்கம். ஓ—அசை. பகுதி—இடந்தலை. துறை—இதுவும் புணர்ச்சிமகிழ்தல்.

முதல்வனிற்பெறு நூன்முதற்றாயெனலாய்ப்
புதல்வனிற்பிறந்தவழி நூற்பொழிப்புரை
செலச்சொலுங்குரவனிற்றெளிந்தோர்தமக்கவ்
விலக்கணவிலக்கியமீந்தவின்பத்தினு
நயப்படவிரித்துரைநடைதாந்தமது
முயற்சியினுணர்வுழிமுன்னுமின்பத்தினு
முணராநுட்பமுமெச்சமுமொருபுடைப்
புணர்மாணுக்கரிற்புலப்படுமவர்பா
லெய்தியதெவிட்டாவின்பமொன்றெனலாம்
பொய்கையுட்காமொடுபொருதுநைந்தழைத்த
கடமலைக்குதவியகண்ணன்
வடமலைமடவால்வாய்ந்தருணலனே. (3)

என்பது பாங்கற்கூட்டத்திறுதிக்கட் டலைமகன் புணர்ச்சிமகிழ்தல்.

(இ-ள்) மனனே! முதல்வனு லமைத்தருளப்பட்ட முந்து நூல் நற்றாயாக அதற் கொரு புதல்வனைப்போலப் புலவராலமைக்கப்பட்டுண் டான வழிநூலின்பொழிப்புரை முதலே கேட்போ ருணர்வுட்கொள்ளப் புகலுங் குரவனாற் றெளியப்பட்டோர்க் கவ் விலக்கண விலக்கியங்கள் புரந்தவின்பத்தினும் நன்குமதிப்பதாக வந்நூல்கட் காசிரியர் விரித் துரைப்பதாய வுரையினது ஒழுக்கத்தை யவ்வுரைகோளாளர் தமதறி வுடன் முயற்சியாலுணர்ந்தவிடத்துண்டான இன்பத்தினும் நூல்க ளிடத் துணரப்படாத வரும்பதநுட்பமும் எச்சமும் தம்மொடு கற்ற வொருபுடைமாணுக்காராலாராய்ந் தறிவிற்புலப்பட்ட வவர்பா லெய்திய

தெவிட்டாவின்பம்போலு மொன்றெனலாம், பொற்றாமரையோடையி னிடத்துக் காரமொடுபொருது நொந்தழைத்த கடாத்தொடுகூடிய மலைபோன்றயானைக் கதனுயிர்பிழைப்பான் சென்றுதவிய கண்ணனது வடக்கின்கண் வேங்கடவெற்பினிடத்து மடவால் தோன்றிநின்றருளிய பேரின்ப மென்றவாறு.

மனனே என்பது தோன்றுவெழுவாய். இதனுள், பொழிப்புரை குரவனிற் றெளிந்தோர்க் கந்நூல்களீந்த வின்பத்தினும் என்பது முயற்சியின்றி யியற்கையிற் றெய்வத்திற்கூடிய இன்பமதாம். விரித்துரை தாந் தம் முயற்சியா லுணர்வுழி முன்னுமின்பத்தினு மென்பது சிறிதுமுயற்சியா னிடந்தலைப்பாட்டினெய்திய வின்பத்தினு மென்ப தாம். நுட்பமு மெச்சமு மொருபுடைமாணுக்கரி னுணர்ந்தவிடத் தெய்திய தெவிட்டாவின்பமொன்றெனலா மென்பது பாங்கனாற்கூடிய கூட்டத் தெய்திய வின்பமென்பதாம், இவை குறிப்புவமை.

குலனுந்தொன்மையுங்குணனுந்திருவு
நலனும்பருவமுமுருவமுநயந்தோ
ரறம்புரிகொள்கையோடளவளாய்வாழ்நாட்
டிறம்பாக்கற்புடைச்சேயிழைவயிற்றிற்
கருப்பம்வந்தடியிடக்கண்டகண்மலரால்
விருப்பமுற்றதனினுமேம்படுநிலத்துறப்
பிறந்தநன்புதல்வர்பீடுடைமுகமலர்
சிறந்தவர்காண்டொறுஞ்செறிபேருவகை
யாங்கவற்றினுமிகுமரும்புமென்மழலை
யோங்கியசெவிப்புலத்துறவருமுவகை
யுவகையிற்கழிந்தபேருவகையதாகு
மவமதிப்பின்றியேழாண்டமைவெய்தலும்
பொற்புடைக்குரவர்தம்பொன்னடிவணங்குபு
கற்பனயாவையுங்கசடறக்கற்றபின்
கல்வியுங்கவியுங்கவின்பெறச்செலச்சொலு
மெல்லையிற்றந்தையின்புறலும்பொருவரும்
பூதலம்புகழப்பொலிந்துநின்றருளிய
சீதான் குருகாபுரேசன்சிலம்பின்

மதுமலர்ச்சோலையுண்மடவரல்

புதுவதுபுதுவதாய்ப்புரிந்தருணலனே. (4)

என்பது பாங்கியிற்கூட்டத் திறுதிக்கட் டலைமகன் கூறியது.

இதனுள், கருப்பம்வந்தடியிடக்கண்டகண்மலரால் விருப்பமுற்றது என்பது இயற்கையிற்கூடிய வின்பவிருப்பத்தை. அதனினு மேம்படும் புதல்வர்பிடிடைமுகமலர் சிறந்தவர்காண்டொறுஞ் செறிபேருவகை என்பது இடந்தலைப்பாட்டிற்கூடிய வின்பமகிழ்ச்சியை. ஆங்கவற்றினுமிகு மழலை யோங்கியசெவிப்புலத் துறவருமுவகை யென்பது பாங்கற்கூட்டத்திறுதிக்கட் கூடிய வின்பமகிழ்ச்சியை. உவகையிற் கழிந்தபேருவகையதாகுங் கல்வியுங் கவியுங் கவின்பெறச் செலச்சொலு மெல்லையிற்றுதையின்புறலும்பொருவரும் என்பது பாங்கியிற்கூட்டத்துக்கூடிய புணர்ச்சியை. பொருவருமென்பதனை நான்கினுங் கூட்டுக. குணம்—அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி, நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு. திரு - செல்வம். அளவளாய் - கலந்து. திறம்பா—அழியா. அவமதிப்பு - கற்கப்படுநூல்களைக் கற்கநினையாமை—இகழ்தல். இன்றி- இல்லாமை. செலச்சொலல் — கூறும்பொருள்களறிதற்கரியவாயினுங் கேட்போர்க் கெளியவாய் மனத்துட்கொளக் கூறல். கவின்பெற—அழகு பெற. ஒழிந்த அகல முறையிற்கொள்க. இது மாட்டுறுப்பு மெச்சமு மின்றிவந்த முத்தகச்செய்யுள். என்னை? "மாட்டுமெச்சமுநாட்ட லின்றி, யுடனிலைமொழியினுந்தொடர்நிலைபெறுமே" என்றாராகலின். பகுதி - பகற்குறி. துறை - இதுவும் புணர்ச்சிமகிழ்தல்.

தண்டளவுங்கொன்றையும்பைந்தார்தழைப்பவாய்மயிலின்

கண்டழைப்பவண்டுகளிதழைப்ப—நுண்டுளிசோர்

கார்வாவிதென்றயரேல்கண்ணன்குறுங்குடியார்

தேர்வாவிதென்றணங்கேதேர். (5)

இதுவும் மாட்டுறுப்பு மெச்சமுமின்றிவந்து தனிநின்றுமுடிந்த முத்தகச்செய்யுள். தார் - பூ. ஆய்மயில் - ஆடாநின்ற மயில். வாவு என்பது தொழிற்பெயர்போலநின்று நிகழ்காலங்காட்டுவதோர்வாய்

பாடு. நுண்டுளி — அசும்பு. கார் — மழை. வாவு — வாராநின்றது. அயரேல் - வருந்துவதொழி என்றவாறு. பகுதி—வரைபொருட்பிரிதல். துறை - பருவங்காட்டிவற்புறுத்தல்.

நிறையழிகாமக்கடலைநீந்திச்சலாபத்
துறைமுகமுத்தங்கொளவேசூழ்வார்க்—கிறைவளையா
யாய்ந்தபுணையென்பவருண்மாறன்வண்குருகூர்
வாய்ந்தபனைமாமடல். (6)

(இ-ள்) அருண்மாறன் வண்குருகூரிறைவளையாய்! ஆடவர் நிறையாகிய கரையை யழிக்கப்பட்ட காமமாகிய புணரியைக் கடந்து மகளிரிடத்தின்பத்துறையைத் தரும் முகத்தில் அதரபானத்தையுட்கொள வழியேதென்று விசாரிப்பவர்க்கு வாய்ந்த பனைமாமடலே ஆராய்ந்தறிந்த புணையென்றுகூறுவர் பெரியோரென்றவாறு.

இதுவும், ஆடவர்களென்னும் பெயர்ச்சொல்லும், எனக்கு மதுவே குறிப்பென்னுங் குறிப்பும் எஞ்சிநின்று முற்றியதால் இருவகையெச்சமும் மாட்டுறுப்புங்கூடித் தனிநின்று முற்றின முத்தகம். சலாபத்துறை முகமுத்தங்கொள என்பது சிலேடை. இது, பாங்கியிற்கூட்டத்துச் சேட்படுக்கப்பட்டானுன தலைமக னுண்டுறந்துரைத்தல். பகுதி-மடல். துறை - உலகின்மேல்வைத்துரைத்தல். முத்தகமென்பது காரணப் பெயர். முத்தகம் முற்றும். (௬)

இனிக் குளகம் வருமாறு:—

68. குளகம்பலபாட்டொருவினைபேர்கொண்டு
வளர்முலையாய்மூன்றிடத்துமன்னு—மளவை
யுகளகஞ்சாந்தானிகங்காபாலிகத்தோடைந்தின்
மிகல்வகைத்தாநூல்சொல்விதி.

(எ-ன்) முறையே குளகச்செய்யுளின்கூறுபாடுணர்........ற்று.

(இ-ள்) வளராநின்ற முலையிணையுடையாய்! குளகச்செய்யுளென்பது, பலபாட்டொருவினையேயாதல் ஒருபெயரேயாதல்கொண்டு, எண்ணினதளவு உகளகம், சாந்தானிகம், காபாலிகம் என்னு மூன்றிறத்தினோடும், ஐந்தாயும் அவ்வைந்தினுமிகுங் கூறுபாடுடைத்தாயும்

செய்யுளகத்து முதல் இடை கடை யென்னு மூன்றிடத்தும் நூல் சொன்னவிதியாக நிலைபெறுமென்றவாறு.

வினையென்ற விதப்பால் வினையின்வேறல்லவாம் வினைக்குறிப்பும், பெயரென்ற விதப்பாற் பெயர்ப்பெயரேயன்றி வினைப்பெயருங் கொள்ளுமென வுணர்க. வினைமுதலிய நான்கோடுந் தானமூன்றோடு முற்ற வுதாரண மீண்டுரைப்பிற் பெருகும். அவற்றுட் சில வுதாரணங் காட்டுதும்:—

நினைமருவொன்றில்லா தனுநாளுநிகனைப்
புனைவகுளத்தாமப்புயனை—வினையினையே
வென்றானைக்காரிதரும்வித்தகனைப்பாவலன்பின்
சென்றானோநாதனெனத்தேர்ந்து, (7)

வேதமதனைவிளங்குதமிழ்ப்பாப்படுத்திப்
போதந்தழைந்துபுகழ்புண்ணியனை—நாதமுனி
போற்றும்புனிதனையந்தாமம்புகமனனே
தேற்றம்பயின்றேதினம். (8)

இவையிரண்டும் வினைகொண்டு முற்றிய யுகளகாதிகுளகம். உகளக குளகமென்பது இரண்டுபாட்டு வினைமுதலியவற்று ளொன்றுகொண்டு முற்றுவது.

குன்றமதனைக்குடைகொண்டநீலமணிக்
குன்றமதனைக்குணக்கடலைக்—குன்றமதே
மத்தாகக்கொண்டமிர்தம்வானோர்க்களித்ததரு
மத்தானைத்தேவாய்மதித்து, (9)

வாழ்த்துபரசமயவாதியர்தம்வாய்மதத்தைச்
சாய்த்ததமிழ்மறைப்பாத்தந்தானைக்—கீர்த்திபுனை
பாவேசர்போற்றும்பராங்குசனைமுத்திபெற
நாவேமனத்தானயந்து. (10)

இவையிரண்டும் வினைகொண்டுமுற்றின யுகளகமத்திய குளகம். வாழ்த்து என்பது ஏவல்வினை. இவை நான்கும் திணை - பாடாண்; துறை - ஓம்படை.

காலிருக்கக்கையிருக்கக்கண்ணிருக்கச்சென்னியதன்
மேலிருக்கநாநடுவேவீற்றிருக்க—நாவிருக்கும்
பொய்யாதிருக்கப்புகழ்மாறனைவலஞ்செய்
துய்யாதுமஞ்சலியாதும், (11)

பூவிற்சிறந்தவவன்பொன்னடியைக்கண்டுமலர்
தூவிவணங்கித்துதியாத—பாவிகளோ
டொன்றாகியவுளமேபோனவைபோட்டுதியமா
மின்றாகினுமுற்றிறைஞ்சு. (12)

இவையிரண்டும் வினைகொண்டு முற்றிய யுகளகாந்தியகுளகம். இதனுள் மாறனையென்பது மால்தனை எனவும் பொருந்தும். இவை யாறிற்கும் ஒழிந்த அகல முறையிற் கொள்க. திணையுந் துறையு மிதுவு மது.

அடித்தகைத்தலம்பிடித்துவன்கனகனாருயிரைக்
குடித்தகோளரியாயகொற்றவனுமாண்குறளாய்
நடித்துமூவுலகன்றளந்தவனுமைந்நாகந்
துடித்துமூலமென்றழைத்ததற்குதவியசுகத்தோன். (13)

அம்பிகாபதியிரப்பொழித்தவனுமாதரவா
லும்பராமுதருந்தவைத்தவனுமும்பருளார்
தம்பமாந்தசரதன்றிருமகனெனத்தழைத்தே
கம்பவாரிதியடைத்தருளயோத்திகாவலனும். (14)

இவையிரண்டும் வினைக்குறிப்புக்கொண்டு முற்றிய யுகளகடத்திய குளகம். திணை - பாடாண். துறை - கடவுள்வாழ்த்து.

அரியுமயனுமரனுமெனமூன்றாய்த்
தெரியுமவருட்டெளிதற்—குரியபொரு
ளந்தாமத்தானென்றுணர்த்தியடியவர்தஞ்
சிந்தாகுலந்தவிர்த்ததே, (15)

முந்தமதுரகவிக்களித்தமுதுரைசா
லந்தமலரடியையாதிரைநாள்—வந்த

மறையவர்கோன்சென்னியினும்வைத்தெமையாள்செந்தே
னிறைவகுளப்பூங்கண்ணியன். (16)

இவையிரண்டும் வினைக்குறிப்புக்கொண்டுமுற்றிய யுகளகாந்திய குளகம். கண்ணியைப் புனைந்தவனென்னும் வினையைக் குறிப்பினாற் கொள்ளக்கிடந்தமையானென் றுணர்க. என்னை? "காலந்தாமேமூன் றெனமொழிப" "இறப்புநிகழ்வுமெதிர்வுமென்று, வம்மூக்காலமுங் குறிப்பொடுங்கொள்ளு, மெய்ந்நிலையுடையதோன்றலாறே" என்று ராகலின். ஆதலால் வினைக்குறிப்பிற்குங் காலமுண்டெனக் கொள்க. திணை - இதுவுமது. துறை - பழிச்சினர்ப்பரவல்.

முழுக்கலையற்றரைக்கலையுமிழந்தாய்தோகை
முருந்துறப்பீலியின்முழுதுமுன்றில்சீக்கு
மொழுக்குறநின்றனையுடையுமஃதேயபாரு
யுன்விரதமெதுபெயரேதுரைத்தியென்ன
வழுக்கறவேயியங்குயிர்கொல்லாமையாசீ
வகனுகவிறைவன்யாருகனில்யா
திழுக்கியல்பின்றுந்தனியூர்யாதுசெம்பொ
னெயிலெனவவ்வெயிலெவனென்றிசைத்துமீட்டும் (17)
எப்படிவந்தோன்றியதப்படிவத்தெல்லா
மின்னுயிருண்மையையுணராயியங்கற்பால
வப்படிவத்துயிருளதாயுணர்ந்தாயீசற்
கருத்துமுறையினிலருத்தியறத்திற்கேற்ற
துப்புரவுண்பதுகடனென்றுள்ளாயாகத்
தொழிலிகழ்ந்தாய்சுடர்சொரூபாம்வேதமார்க்கத்
தப்பினையெம்மறைகொடுசாதிப்பதென்றே
சமண்மதத்தைப்பழித்தனராயழித்துச்சாய்த்தார். (18)

இவையிரண்டும் வினைப்பெயர்கொண்டுமுற்றிய யுகளகாந்திய குளகம். திணை—பாடாண். துறை—"அமரர்கண்முடியுமறுவகையானு" மென்றதனுல் முனிவர்வாழ்த்து ; பார்ப்பனவாழ்த்துமாம்.

முன்புலகமேழினையுந்தாயதுவுமூதுணர்வா
ரின்புறக்கங்காநதியையீன்றதுவு—நன்பாதன்
கண்டிருப்பவைகியதுங்கான்போயதுமமிர்த
முண்டிருப்பாருட்கொண்டதும், (19)

வெந்தகரியதனைமீட்டுமகவாக்கியது
மந்தச்சிலையினைப்பெண்ணாக்கியதுஞ்—செந்தமிழ்தேர்
நாவலன்பின்போந்ததுவுநன்னீர்த்திருவரங்கங்
காவலன்மாவலவன்கால். (20)

இவையிரண்டும் பெயர்ப்பெயர்கொண்டுமுற்றிய யுகளகாந்திய குளகம். என்னை? பெயர்நிலைக்கிளவிகாலந்தோன்றா, தொழினிலை யொட்டு மொன்றலங்கடையே" என்றாராகலின், இடுகுறியாய்க் கால் எனக் காலமுந் தொழிலுந் தோன்றாதுநின்றவாறு காண்க. திணை—இதுவுமது. துறை—கடவுள்வணக்கம். ஒழிந்த ஆதியினும் இடையினும் யுகளகுளகம் வந்தவழிக் கண்டுகொள்க. யுகளகுளகம் முற்றும்.

தொடுத்துமுத்தலைச்சூலவன்படையினைத்துண்டப்
படுத்துவெஞ்சினத்தாடகையுயிர்நமன்பகுவாய்
மடுத்துவேள்விகாத்தெதிர்ந்தபோர்நிருதர்க்குமரணங்
கொடுத்தடுந்தொழிற்கரன்முதலவர்க்குவிண்கொடுத்தே, (21)

கிளைத்துநாகவன்பிடர்மிசைக்கிளர்மராமரமேழ்
துளைத்துவாலிமார்பமுந்துளைத்தடற்கருஞ்சுடுதீ
விளைத்துவேலையுளுருகெழுகோதண்டமேனாள்
வளைத்துவாய்மையோர்வடிவெடுத்தனையதோர்வாளி, (22)

கும்பனைப்பொருநிகும்பனைக்கும்பகன்னனைநீ
டம்புராசியிற்றுரைத்தெழுபலப்படையதனைச்
செம்பொனாலயம்விருப்புறத்தெசக்கிரீவனைக்கோன்
றெம்பிரான்சனகியைமணந்தாடலெய்தியதும். (23)

இவைமூன்றும் வினைகொண்டுமுற்றிய சாந்தானிகாதிகுளகம். திணை - வாகை. துறை - வில்வென்றி.

அருமறையாய்நள்ளிரவிற்கொடுபோகிவசுதேவராயர்பாடித்
திருநகரத்திடைகரப்பவளர்ந்தவனும்வெண்ணெயினைத்திருடிமேனாட்
பொருவறுகைத்தாமரையாற்செங்கனிவாய்வைத்தவனும்போதனேற
னிருவருங்காண்பதற்கரிதாமந்தாமந்ததிபாண்டற்கெளிதினன்பால், (24)

கொடுத்தவனுமானிரைகாத்தருள்காலைக்
கன்மாரிகுடைகுன்றாகத்
தடுத்தவனுநான்முகத்தோன்கொடுபோய
பல்லுருவின்றன்மையாக
மெடுத்தவனுந்தேவகியீன்றருள்புதல்வன்
றரோவதியாமின்பக்கொம்பன்
றுடுத்ததுகிலிருஞ்சபையுட்டொலையாமை
யளித்தவனுமுன்னைகூறின், (25)

காண்டகுபொன்முடியுதைத்துக்கஞ்சனைக்கொன்
றறவோர்முன்கடுஞ்சொற்கூறப்
பூண்டதொழிற்சிசுபாலன்பொன்முடிசக்
காத்தறுத்துப்புவனம்போற்றப்
பாண்டவற்குத்தூதாகிநூற்றுவர்மு
னுருணெடுந்தேர்ப்பாகனாகி
யாண்டகைமைத்தருமன்முதலவர்க்கவனி
[illegible]னைத்துமளித்தவனுமன்றே. (26)

இவைமூன்றும் பெயர்ப்பெயர்கொண்டுமுற்றின சாந்தானிக மத்தியகுளகம். துறை - கடவுள்வாழ்த்து.

தெள்ளுநான்மறைப்பனுவலுமயனையாதியரும்
வெள்ளிவெண்மதிக்கடவுளுங்கதிருமீன்கணமுந்
தள்ளரும்பொறைமன்னுயிர்க்கணங்களுந்தழங்கு
கொள்ளைவெண்டிரைப்புணரிமொண்டெழுநிலதுலையா, (27)

வாக்கும்பாதமும்பாணியுங்கரணமுமற்று
நீக்கமுற்றமன்னுயிர்கடாமாயையுண்ணெடுங்கற்
றாக்குமாடகத்துகண்மெழுகடைந்தபோற்றயங்கக்
காக்கும்வாய்மையீங்கெனதெனத்திருவருள்கலந்தே, (28)

காலம்யாவையுங்கழிந்தபின்கழிந்தபேருருவின்
ஞாலமுற்றவுண்டுறுபுனனடுவணநயந்தோ
ராலநண்டளிரெனுமனந்தனிலுலகனைத்தும்
பாலனாகியுள்ளடக்குபுதுயின்றனன்பரிப்பான், (29)

இவைமூன்றும் வினைப்பெயர்கொண்டு முற்றின சாந்தானிகாந்திய குளகம். திணை - பாடாண். துறை - கண்படைநிலை. (குருகா மான்மியம்.)

பாத்துவமுதலாப்பஞ்சவுற்பனனும்
பாமனெம்மிறைவனுமெனல்போல்
வரத்தொடும்புகழும்பஞ்சமாத்தொழிலும்
வழங்கலுமிவன்றிறத்தெனல்போற்
றிரத்தவாம்பஞ்சபூதமுஞ்செனித்த
செய்கையுமிவன்றிறத்தெனல்போற்
காத்தினிற்பஞ்சாயுதங்களேதரித்த
கருணையங்கடவுளாமெனல்போல், (30)

ஞானமுமழகும்வீரமுந்திருவுநவையிலானந்தமுமெமவே
யானவேனையவாமுலகமென்பவற்றிற்கவையமைதியவலவெனல்போல்
வானுறநிவந்தவெழுநிலத்தமைந்தமாடசூளிகையின்யாப்புறுத்தைதம்
பானிறந்தழீஇயதுகிற்கொடிநுடங்குபாங்கரின்வயங்குமெம்மறுகும்,(31)

செம்மையின்யாணர்த்திவ்வியமணியாற்
செழும்பொனாற்றிசைதிசையெறிக்கும்
பொம்மலுநிவப்பும்வியலுநீளிடையும்
பொருந்தலினெருமறுகிடைப்புக்
கிம்மறுகெவனிங்கிவற்றுளிம்மாட
மெம்மணிமாடமென்றியாருந்
தம்வயிற்செறிந்தோரிமைப்பருநாட்டத்
தாங்கியுமறிவருந்தகைய. (32)

இவைமூன்றும் பண்பிடனுகத்தோன்றினவுடைமைவினைக்குறிப்புக் கொண்டுமுற்றின சாந்தானிகாந்திய குளகம். சாந்தானிகுளகமென் பது மூன்றுபாட்டு வினைமுதலியவற்று ளொன்றுகொண்டு முற்றுவது. திணை - இதுவுமது. துறை - பாமபதவருணனை. இவையும் குருகா மான்மியம். ஒழிந்தனவும் வந்தவழிக்கண்டுகொள்க. சாந்தானிகுளகம் முற்றும்.

ஆதிப்பாப்பிரமநாராயணனென்றுஞ்
சோதிச்சுடர்மயமாந்தோற்றஞ்சா—னீதிச்
சொருபமுடனுநுவந்தோய்ந்துளன்காணென்று
மொருபாந்தாமத்தானென்றும், (33)

பாங்குடையமன் னுயிரொன் றல்லபலவென் று
மாங்கவற்றனீங்காதவனென் று—மோங்கவற்றை
நித்தியமாமென் றமுடனித்தியமன்றென் றுமதை
யுய்த்ததுபூதாதிபதென் றும், (34)

முத்திக்கவனேமுதற்காரணனென் றும்
பத்திவிடாதேபயிலென் றுஞ்—சத்தியமாய்ச்
செல்வத்திருப்பதிவாழ்சீநிவாதன்பகர்ந்த
சொல்வித்தகமேதுணிந்து, (35)

நாமானிடப்பிறவிநன்றென் றுந்தேர்ந்தனமாற்
காமாதிகளாங்களைகளைந்து—பாமாலை
சாத்தியேநெஞ்சேதருமெமக்குமுத்தியென
வேத்தியேயின்புற்றிரு. (36)

இவைநான்கும் வினைகொண்டுமுற்றின காபாலிகாந்தியகுளகம்.
திணை - பாடாண். துறை - குரவனைவாழ்த்தல்.

இச்சிப்போனிட்டவிணைபடிப்போதன்றொருவ
னுச்சிப்போதானதுலகறிந்த—நிச்சயமே
யாய்ந்தாலொருவன்சிரத்தணிந்ததன்றொருவன்
பூந்தாள்கழுவும்புனல், (37)

இளிவந்ததுசெய்திரந்தானொருவன்
வெளிவந்தொருவனதைமீட்டான்—களிவந்த
சித்தமுறத்தன்பெயரேகேளாச்செவியனுக்கு
முத்தியளித்தானோர்முதல், (38)

சேதிப்பதாமொருவன்செய்தொழிலுமேனையவற்
காதிப்புவனமவைகாவல்—கோதற்ற
நற்குணத்தெம்பூமகள்கோனாரணனந்தாமத்தான்
முற்குணத்தானேயெம்முதல், (39)

என்றாய்ந்துணர்ந்துணர்த்திபிங்கெமையீடேற்றினான்
பொன்றாதசெஞ்சொற்புலவீர்கா—ளொன்றாய
தேவின்புறத்தமிழ்செய்தென்குருகூரான்மனம்போல்
வாவுஞ்சிறையோதிமன். (40)

இவைநான்கும் வினைக்குறிப்புக்கொண்டுமுற்றின காபாலிகாந்திய குளகம். திணை - இதுவுமது. துறை - பழிச்சினர்ப்பரவல்.

மீனமதாயாமையாய்வெள்ளைவராகமதாய்த்
தானவனைக்கொன்றுமறைதந்தானும்—வானவர்க்காய்
வாங்குதிரைகடைநாண்மந்தரமேற்கொண்டானு
மோங்குமகிலங்கொணர்ந்தானும், (41)

ஆளரியாயாடகனைச்செற்றானும்வாமனமாய்த்
தாளிணையான்மூவுலகுந்தாயானுங் —கோளரிபோன்
மாறுதிரட்காவலரைமாய்த்தமழுவாளியா
யூறுதிரத்தேகுளித்தானும், (42)

அன்றுதனுராமனாகியிருபதுகைக்
குன்றினுயிரைக்குடித்தானும்—வென்றியுடன்
பார்திருத்துநாஞ்சிற்படையானும்பாண்டவர்க்கவ்
வூர்திருத்தமூற்றளித்தானும், (43)

புண்டரிகத்தானைப்புரந்தானுமைந்நீல
கண்டனிரப்பொழியக்கண்டானு—மண்டமினி
மேலிலையிங்கென்னவிழுங்கியவேகோதகத்தோ
ராலிலையின்மீதுதுயின்றான். (44)

இவைநான்கும் வினைப்பெயர்கொண்டுமுற்றின காபாலிகாந்திய குளகம். திணை - இதுவுமது. துறை - கடவுள்வாழ்த்து.

மாயோனெடியோன்மதுசூதனன்புவனந்
தாயோன்முகுந்தன்சராசரங்க—ளாயோ
னராரியரியச்சுதனாகணையான்
முராரியழியாமுதல், (45)

மாதவன்கேசவன்வாமனன்கோவிந்தன்
சீதரன்பூமகள்கோன்றேவேசன்—பூதலத்தை
யுண்டோன்விரிசிறைப்புள்ளூர்ந்தோன்பகிரண்டங்
கண்டோனிருதாந்தகன், (46)

மந்தாகினிபிறந்தவார்கழலோனேமியோன்
றந்தாவளமுரைத்தசால்பினோ—னெந்தை
திருமால்வரனுந்திபூத்தோனமரர்
பெருமான்பிரமன்பிதா, (47)

கண்ணன்கருணாகரனமலன்காயாம்பூ
வண்ணன்கடல்வண்ணன்மைவண்ணன்—விண்ணவர்கோன்
றம்பிரானாரணனந்தாமத்தான்வேதாந்த
னெம்பிரான்முத்தனிறை. (48)

இவைநான்கும் பெயர்ப்பெயர்கொண்டுமுற்றின காபாலிகாந்திய குளகம். துறை - கடவுள்வாழ்த்து. ஒழிந்தவும் வந்தவழிக் கண்டு கொள்க. காபாலிககுளகம் முற்றும்.

செம்பினையுருக்கிவாக்கித்திண்ணிதினகழிதூர்த்திட்
டும்பரின்முதலேவெண்பொனுவானமதமைத்தபின்றைப்
பைம்பொனார்செகதிகண்டம்பட்டிகைவகுத்திட்டோர்சா
ரிம்பர்நின்றேறயாளிச்சுருட்படியியற்றிமன்னோ, (49)

பாங்கர்வேதிகைக்குத்தானம்பகுத்தாங்கினுக்குநாப்ப
ணோங்குபொற்சுவர்நிறீஇச்சித்துருமசாளரஞ்செய்தோவா
வீங்கிருடுணிக்குஞ்செய்யவிழுமணியதனுன்மேல்வாய்த்
தாங்குமுத்திரம்வைத்துள்வச்சிரத்துலாந்தகவின்வைத்தே, (50)

பச்சைநன்மணியையீர்ந்தபலகைமேற்பரப்பிநீலத்
தச்சுறுகொடுங்கைமுட்டியதன்புழையகத்தவாக
வச்சிரவலைகளோடிமணிசெய்வேதிகைமாண்டுணைத்
துச்சிமேற்பலகைசிற்றுத்திரத்தினோடொன்றச்சேர்த்தே, (51)

வெள்ளிவெண்பலகைநான்குவிரல்வியனீப்பின்றாக
வள்ளுறநிறைத்துவண்பொன்னாணிகளழுத்திக்கையா
லள்ளுபுதிரளுமொண்பொன்னரதனஞாங்கர்மேய்ந்து
தெள்ளிதினேழதாகத்திகழ்நிலம்புணர்த்துமாதோ, (52)

வாரிநீணிலையுமேல்கீழ்மரீஇயநோன்படியுந்தாளுங்
கூர்கபாடமுமொன்றாகக்கொளீயமாண்மணிகடம்மாற்

சீர்கெழுதசும்புசூட்டுஞ்சிமயமோடுயர்ந்துவானு
ளார்தமக்கமைந்ததச்சார்க்கணங்குசெய்வனபொன்மாடம். (53)

இவை ஐந்தும் பெயர்கொண்டுமுற்றின அந்தியகுளகம். மேலைந்து முதலிய வெவற்றிற்குங் குளகமென்பன பொதுப்பெயர். திணை - பாடாண். துறை - நகர்வாழ்த்து.

அற்புதமாமன்னுயிரேபிரமமென்று
மலகிலவன்றென்றெனவுமலகில்யாக்கை
நிற்பனயாதெனிற்புனல்பெய்கடங்கடோறு
நிழற்கதிர்தோன்றியநெறித்தாமென்றுமங்ஙன்
பொற்பனவொன்றிறத்தலுமேனையவும்பொன்றாப்
பொலிவெவனென்றலவைபோலெனவுமாறிக்
கற்பனைசெய்பவன்றனைநான்பிரமமென்றே
கழறுமிரண்டெவனெனவேகழறிமீட்டும், (54)

நான்பிரமமென்றனைநீபிரமமாகி
நான்முகனையுந்தியிற்பெற்றிடுதிபொன்று
வான்பிரமமமைத்தபகிரண்டமெல்லாம்
வயிற்றிடைவைத்திடுதிசதுமுகத்தால்வையந்
தான்புரந்தவ்வுலகினைமூவடியிற்றாய
தனுவினன்றோனுமயமாந்தனுவுங்கோடி
யூன்பயின்றகூரம்பையைநீத்துலகமெல்லா
மொருங்கெறிக்குஞ்சுடர்மயமாமுருவுங்கோடி, (55)

ஆயிரவாய்ப்பஃறலைப்பாம்பணைமேற்காவ
லறிதுயிலுங்கொண்டிடுதியனந்தனாகி
மாயிருஞாலங்களொருபத்துநானு
மணிமுடிமேற்றரித்திடுதிவழிந்துநாளுந்
தாயதிரைப்பாற்கடலைத்தயிரேயாக்கிச்
சந்திரனைமந்தரமேற்றறியதாக்கித்
தூயசுவைத்தெள்ளமிர்தநரர்க்கும்விண்மேற்
சுரர்க்களித்ததெனவளிக்குந்தொழிலுங்கோடி, (56)

எண்ணிறந்தநால்வகைத்தோற்றத்துளாய
வெழுவகைத்தாஞ்செனனமுநீயிசைந்துபின்ன
ரெண்ணிறந்தவிடங்கடோறுநிற்பதோடு
மியங்குதியீங்கிவையன்றியேககாலத்
தெண்ணிறந்ததொழில்புரிதியண்டாண்டத்
திவ்வுலகிற்பாதாளத்தின்பதுன்ப
மெண்ணிறந்தவிவர்க்கிவற்றிற்கிசைந்ததென்றென்
றிசைந்ததிறம்வாய்மையதாயிசைப்பதோடும், (57)

இவ்வுடலத்திறத்தியிறந்திடுகாயத்தை
யீமத்தங்கிடுபொழுதிலெரிந்திடாதே
யவ்வுடலத்துடனெழுந்துவருதிகாயத்
தருவருப்பாக்கியமலமூத்திரங்களெய்தாச்
செவ்வியின்வாழ்ந்திடுதிநரைதிரைமூப்பில்லாச்
சிறப்பினொடும்வளிமுதலாச்செறிந்தமூன்றும்
வவ்வுதலற்றீறில்சுகானந்தமேய
வச்சிரகாயம்புணர்ந்தவாழ்வினோடும், (58)

மின்னுயிர்க்குங்கனகன்வினவினபொற்றூணம்
வெடிப்பவுதித்தடித்தகரம்பிடித்தபோல
வுன்னுயிர்கொண்டெனதுகரம்பிடித்ததூணத்
துறுதியிவைமுதலவுனக்குறுவதின்றுன்
முன்னுயிர்தாமலகிலவாம்வகையுமீசன்
வாழ்வகையுமுணர்ந்திலையுன்மத்தனுறை
யின்னுயிர்வேறின்னுயிர்கட்குயிராய்நின்ற
விறைவனும்வேறெனத்தெளிவித்திதஞ்செய்வாரே. (59)

இவையாறும் வினைப்பெயர்கொண்டுமுற்றின அந்தியகுளகம். திணை - பாடாண். துறை - முனிவர்வாழ்த்து. *"ஆங்கதன்" முதல், "தொண்டமால்வரை" ஈறாக கூ௰ம் பாணிருப்பான் என வினைமுற்றுக் கொண்டுமுற்றின அந்தியகுளகம். இவற்றின்மிக்குவருவனவு முள; அவையும் பெருங்காப்பியங்களினிடத்துக் கண்டுகொள்க. குளகம் முற்றும். (௬)

* 'ஆங்கதன்' என்பது குருகாமான்மியம் பரமபதவருணனைச்சருக்கத்து ௬௦௩-ம்செய்யுள், 'தொண்டமால்வரை' என்பது ௸சருக்கத்து ௧௧௬-ம் செய்யுள்.

69. உலவாதகேள்வியொருவர்பலராற்
பலவாய்ப்பகர்பாவினமா—யிலகுபொரு
ளெண்பாட்டளவுதொழிலிடங்காலஞ்சினையின்
பண்பாந்தொகைநிலைச்சொற்பா.

(எ-ன்) வைத்தமுறையானே தொகைநிலைச்செய்யுளாமா றுணர்-ற்று.

(இ-ள்) தொகைநிலைச்செய்யுளென்பது குறையாத கேள்வியினை யுடைய வொருவரானுதல் பலரானுத லுரைக்கப்பட்டுப் பலபாட்டாய் வருவனவாய், அவை பொருளானும் எண்ணானும் பாட்டானும் அளவானும் தொழிலானும் இடத்தானும் காலத்தானும் சினையானும் தொகுத்த பெயர்பெற்ற பண்பினையுடையவாமென்றவாறு.

இன் உருபுமயக்கம். உம்மை செய்யுள்விகாரத்தாற் றொக்கது. உலவாத கேள்வியென்பதனை யிருவரிடத்துங் கூட்டுக. கேள்வி-கல்வி. ஒருவரானுரைக்கப்பட்டன திருவள்ளுவப்பயன். பலரானுரைக்கப் பட்டன - நெடுந்தொகை. இஃதெல்லாத் தொகைக்கும் பொது. பொரு ளாற்றொகுத்தபெயர்பெற்றது புறநானூறு. எண்ணாற்றொகுத்தபெயர் பெற்றது பதிற்றுப்பத்து. பாட்டாற்றொகுத்தபெயர்பெற்றது கலித் தொகை. அளவாற்றொகுத்தபெயர்பெற்றது குறுந்தொகை. தொழி லாற்றொகுத்தபெயர்பெற்றது ஐந்திணை. இடத்தாற்றொகுத்தபெயர் பெற்றது களவழிநாற்பது. காலத்தாற்றொகுத்தபெயர்பெற்றது கார் நாற்பது. சினையாற்றொகுத்தபெயர்பெற்றது நயனப்பத்து பயோதரப் பத்து. உம்மை யெச்சவும்மையாகலானிவ் வெட்டுவகையானுமன்றிப் பிறவகையானும் பெயர்பெற்றனவுளவேனும் அவையும் அறிந்துகொள்க. தொகைநிலைச்செய்யுண் முற்றும். (ரு)

70. சொல்லாற்பொருளாற்றொடருந்தொடர்நிலைக
ளெல்லாமவற்றுளெழுத்தசைசீர்—மல்கு
மடிசொற்றொடர்நிலைகளந்தமுதலாம்
படிவைத்தனர்முன்பகுத்து.

(எ-ன்) தொடர்நிலைச்செய்யுளினது கூறுபாடுணர்-ற்று.

(இ - ள்) தொடர்நிலைச்செய்யுளென்றுகூறப்படுவன வெல்லாஞ் சொல்லானும் பொருளானுந் தொடரப்படுவனவாம். அவ்விரண்டனுள், சொற்றொடர்நிலையைப் பகுத்துக்கூறுமிடத்து நின்றசெய்யுளி னீற்றெழுத்தாதல், அசையாதல், சீராதல், அடியாதல் வருஞ்செய்யுட்கு முதலாகத் தொடுக்கும்படியென வுட்கொண்டனர் முற்காலத்துப் புலவரென்றவாறு.

வைத்தனர் - உட்கொண்டனர். இச்சூத்திரப்பொருள்கோள் மாட்டுறுப்பு. எல்லாமென்றதனான் மூன்றாவது சொல்லினானும் பொருளினானுந் தொடர்வதுமுளவெனக்கொள்க. மல்குமென்று சிறப்பித்தவதனால் நான்கும், பலவடியான்வரு மொருசெய்யுளகத்தும் வருவதுளவெனக் கொள்க. இவற்றிற்கெல்லாஞ் செய்யுள் வருமாறு:—

நாவலன்பின்போந்தநறுநீர்த்திருவரங்கங்
காவலன்பொற்றுளாங்கமலத்தே—பாவலர்தம்
பாமாலைசூட்டாதப்பாமாலையையவனே
தாமானிடர்க்களிக்குஞ்சால்பு. (60)

புரந்தரனாதியராயபுத்தேளிர்பொற்போதுகடூஉய்
நிரந்தரமேத்தும்படியேதுயின்றதுநெஞ்சத்தன்பு
சுரந்தரன்சாபந்துடைத்தோனிருந்ததுதொண்டர்க்கெல்லாம்
வரந்தரநின்றதரங்கநன்காஞ்சிவடமலையே. (61)

மலைமுழைவைகலும்வைகினராகியுங்
கனிகிழங்கடுகுகண்டனமாந்தியு
மூவாரயுமுதற்கடவுட்
காவலநீயேகாத்தல்வேண்டுவலே. (62)

வேண்டுவதிங்கின்றெமக்குமெய்க்காவிரியரங்கத்
தாண்டகைதன்வெற்பிலணங்கன்னார்—காண்டகுசீர்ப்
பொன்றாமலர்முகமும்பூண்முலையுங்கண்டனமயா
மென்றாலினியிதன்மேல்யாது. (63)

என்றாலினியிதன்மேல்யாதுவேண்டுமெனக்குவெள்ளிக்
குன்றானதன்பிடர்மீதேமரகதக்குன்றெனவே

யன்றுடாவிற்றுயிலாங்கேசனருள்புரிந்து
பொன்றாதசெல்வத்திருமா தூடனுட்புகுந்தனனே. (64)

இவ்வைந்து பாட்டினும் எழுத்து அசை சீர் அடியென்னும் நாலந்தாதியும் அடைவே வந்தவாறு கண்டுகொள்க. இவற்றுள் "வேண்டுவதிங்" கென்ற வெண்பாவொன்றும் கிளவி வேட்டல். ஒழிந்த நான்குங் கடவுள்வாழ்த்து. இவை நம்பெருமாள்மும்மணிக்கோவை.

இனிப் பலவடியான்வரும் ஒரு செய்யுளகத்து நாலந்தாதியும் வருமாறு:—

நாவேயுரானுறுநலமிகுமுதற்பொருள்
பொருளுரையாய்தரிற்புகலுமற்றுளதே
யுளதேவண்டிமிருறுமலரோடை
யோடைமால்வரைமூலமேன்றுரைசெய
வோடைமால்வரைமூலமேன்றுரைசெய
வுரைவிசைத்தடங்காவொல்லேயிற்குறுகுபு
புனிற்றுவெனவருள்புரிந்திடர்செகுத்த
வறைபுனலரங்கத்தமுதினையன்றியு
மதித்தொருமுதலேயேமகிழ்ந்து
துதிப்பதுமுளதோசுரர்பெருநாவே. (65)

இந்நேரிசையாசிரியப்பாவினுள் நாலந்தாதியும் வந்தவாறு காண்க.

இன்னுமவ்விலேசானே இறுதிநின்ற சொற்பொருளேக்கத்தான் ஆகுபெயராற் சொற்றொடர் வருவனவுமுள. அதற்குச் செய்யுள்:—

"பரிவதிலீசனைப்பாடி
விரிவதின்மேவலுறுவீர்
பிரிவகையின்றிநன்னீர்தூஉய்ப்
புரிவதுவும்புகைபூவே." (66)

"மதுவார்தண்ணந்துழாயான்
முதுவேதமுதல்வனுக்
கெதுவேதென்பணியென்னு
ததுவேயாட்செயுமீடே." (67)

இவை முதற்பத்தி லாருந்திருவாய்மொழியின் முதற்பாட்டும் இரண்டாம்பாட்டும். இவற்றுள், பூவென்றசொல்லின் பொருணைக் கத்தாற் சினையைக்கூற முதலையறிவிக்கும் ஆகுபெயரால் அந்தாதித்தவா றுணர்க. இவை நாலுவேதத்தையும் ஓதாதுணர்ந்த ஞானபூரண ஞானமுத்திரைக்காரம்புயன் றிருவாக்கு. சொற்றொடர்நிலைச்செய்யுண் முற்றும். (சு)

71. பெருங்காப்பியங்காப்பியமெனும்பெற்றித்தாற்
சுருங்காப்பொருட்டொடருஞ்சொல்லிற்—பொருந்தவற்று
ளொன்றும்பலவும்பொருளிற்குறைவுறுமே
லென்றுமது காப்பியம்.

(எ - ன்) பொருட்டொடர்நிலைச்செய்யுளின்கூறுபாடுணர்-ற்று.

(இ - ள்) பொருட்டொடர்நிலைச்செய்யுளின்கூறுபாடு சொல்லு மிடத்துப் பெருங்காப்பியமென்றும் காப்பியமென்றுங் கூறு மிரண்டியல் பினையுடைத்தாம் ; அங்ஙனம் பொருந்தியவற்றுள் அறமுதலிய பொருள்கள் நான்கினுள் ஒன்றாயினு மிரண்டாயினுங் குறைவெய்தவரு மெனில் அதனை யெக்காலத்திலுங் காப்பியமென்பதேயா மென்றவாறு.

எனவே நாற்பொருளுங் குறைவின்றிவருவதே பெருங்காப்பிய மென்பதாம். சுருங்காப்பொருட்டொடரெனவே பொருட்டொடர் மிகவும் விரிவுடையதென்பதூஉ மாயிற்று. (எ)

72. வைத்தபெருங்காப்பியநிலையும்வாழ்த்தியல்பார்
மெய்த்தவவையடக்கம்வீறுசான்—முத்திதருந்
தெய்வவணக்கமுடன்செய்பொருளுமுன்வரவாங்
கெய்தவுரைப்பது தானேய்ந்து. (அ)

73. தப்பிலாநாற்பொருளுஞ்சாற்றுவதாய்த்தாரணிமே
லொப்பிலாதான்சரிதையுட்கொண்ட—செப்பமுற
நன்மணமில்வாழ்க்கைநலம்புதல்வர்ப்பேறுபசும்
பொன்மகுடம்வைத்தின்புறல். (கூ)

74. அலையாழிமேன்மையருட்புயலின்செய்கை
மலையாறுநாடூரின்வண்மை—தொலையா
விருசுடரின்றோற்றமிருதுவளம்பானம்
பொருபுனல்புக்காடல்பொழில். (கய)

75. மந்திரந்தூதொற்றுடல்வாய்ந்தநிரைகோடல்
புந்தியுறச்சேறல்புறத்திறுத்தல்—வெந்திறல்கூர்
மிக்கவிகல்வென்றிநிலையாமையைமிகுத்தல்
கைக்கிளைகள்கூறுங்கடன். (கக)

76. படலமிலம்பம்பரிச்சேதங்காண்டந்
தொடர்தொடர்பிற்பாடையுரைதோய்ந்தூந்--திடமுறச்சொன்
மூன்றுட்கொளலாமுறையிற்சுவைவிறல்கூர்ந்
தான்றவர்மெய்ப்பான்புகல்வதாம்.

இவ்வைந்து பாட்டும் என்னுதலிற்றோவெனின், மேற்சொன்ன பொருட்டொடர்நிலையிரண்டனுள்ளும் காப்பியத்தின் மரபுணர்த்திப் பெருங்காப்பியத்தின்மரபுணர்—ற்று.

(இ - ள்) சொல்லுவானுட்கொண்ட பெருங்காப்பியத்தினிலக்கண முலகமதிக்கப்பட்ட வாழ்த்தியலும் அவையடக்கியலும் தெய்வவணக்க மும் செயப்படுபொருளும் என்னும் நான்கும் பாயிரத்தினு ளவ்வவ் விலக்கணமுரைத்தபடியே பொருந்துவனவாய், வழுவுதலில்லாத நான்கு பொருளையுங் குறைவறக் கூறப்பெற்று, உலகத் தொத்தாரு மிக்காரு மில்லாத தலைவன்சரிதையுட்கொண்ட வுண்மையுற்று, நன்மணம், இல்வாழ்க்கை, கலவி, புதல்வர்ப்பேறு, பொன்முடிபொறுத்தின்பமுறு தல், கடலை மேகத்தை மலையை யாற்றை நாட்டை நகரத்தை ஆதித்த வுதயத்தைச் சந்திரவுதயத்தைச் சிறுபொழுதைப் பெரும்பொழுதை வருணனைபுரிதல், வீரபானம், காமபானம், புனல்புக்காடல், பொழில்புக் காடல், மந்திரம்பகர்தல், தூதுவிடுதல், ஒற்றுடல், நிரைகோடல், மேற்சேறல், எயிற்புறத்திறுத்தல், செருச்செய்கை, வென்றியெய்தல், வென்றவேந்தன்நிலைபெற்றிருப்ப இறந்தவேந்த னிலையாமையை மிகுத் துரைத்தல், ஆண்பாற்கூற்றுக்கைக்கிளை, பெண்பாற்கூற்றுக்கைக்கிளை யென்னுமிவற்றினையும் பாடாண்பகுதி யென்பதனோடுங் கூறுமுறைமை

யுடன் படலமென்றாதல் இலம்பகமென்றாதல் பரிச்சேதமென்றாதல் பகுதிப்படுமவற்றை யுட்கொண்ட காண்டங்களோடும் பொருட்டொடர்புடைத்தா மொருதிறப்பாட்டி னிருதிறப்பாட்டுமாகிய பாப்பாவினத்தோடும் பாடைவிராயு முரைவிராயு மேற்சொன்ன வுண்மையுடைய முத்தகமுதலிய மூன்று முட்கொள்வனவா முறைமையுடன் எட்டு மெய்ப்பாடும் மெய்ப்பாட்டுக்குறிப்பு மிருந்து கல்வி கவியான்மிக்கோர் மதிக்கும்படியுரைப்பதா மென்றவாறு.

இதனுள், வைத்த என்பது உட்கொண்ட எ-று. நிலை—இலக்கணம். இயலு மது. பார்-உயர்ந்தோர்; இடைநிலைத்தீபகம். முன்வரவு-பாயிரம். என்னை? நூற்குமுன்னேவருதலான் முன்வரவென்றாயிற்று. செய்பொருளு மென்னு மும்மையாற் றழுவப்படும் எஞ்சுபொருட்கிளவி பிற்படக்கிளத்தலாய்நின் றும்மையில்செஞ்சொல்லாய் முற்படக்கிளந்த வாழ்த்தியல் முதலாய மூன்றினுங் கூட்டி விரித்துரைக்கப்பட்டது. என்னை? "எஞ்சுபொருட்கிளவிசெஞ்சொலாயிற், பிற்படக்கிளவா முற்படக்கிளத்தல்" என்றாராகலின். நலம்—புணர்ச்சி. இருதுவும் பானமும் சாதியேகவசனம். புக்காடலென்பதனைப் புனல் பொழி லிரண்டினுங் கூட்டுக. செப்பமுற—உண்மையுற; என்பது, செய்து என்பது செய என ஒரு வினையெச்சம் மற்றொருவினையெச்சமாகிநின்றது. வாய்ந்தநிரைகோடல் என்பது முதலாக் 'கைக்கிளைகள் கூறுங்கடன்' என்பதனால் வெட்சிமுதற் பாடாண்டிணையீறாகப் புறம் புறப்புறம் அகப்புறம் என்னும் மூன்றுகூறாய வெழுதிணையு முறையே கூறியவாறுங் காண்க. இவ்வாறன்றி, இவற்றி னிடையிடை காந்தை நொச்சி என்பவற்றையும், இறுதியிற் பொதுவியல் கைக்கிளை பெருந்திணை என்பவற்றையும் கூட்டிப் பன்னிரு படலமாக்கி யவற்றிற்கு இருபது, பதினாலு, இருபத்தொன்று, இருபத்திரண்டு, ஒன்பது, இருபத்தொன்பது, இருபத்துநாலு, முப்பத்துமூன்று, நாற்பத்தெட்டு, முப்பத்தேழு, பத்தொன்பது, முப்பத்தாறு எனத் திணையுந் துறையுமாக விரித்து வெண்பாமாலையாகிய வழிநூலுள் ஐயனாரிதனார் கூறியதூஉம் இவ்வெழுதிணையு ளடங்குமெனக் கொள்க. தப்பிலா நாற்பொருளுஞ் சாற்றுவதாய் என்பதனாற் கூறிய வுறுப்புக்கள் சிலபல குறையினும் நாற்பொருளுங் குறையாதனவெல்லாம் பெருங்காப்பியமெனக் கொள்க. பாடை—திசைச்சொல்; "சிதைந்தனவரினு மியைந்தனவரையார்" என்

பதனால் *பாஷை பாடையாயிற்று. உரை — செய்யுளின்றி உரைநடையான்வருவது. அது இளங்கோவடிகள் கூறிய சிலப்பதிகாரத்துட் கண்டுகொள்க. உம்மையால் உரையிடைவிரவாது வருவதே சிறப்புடைத்தெனக் கொள்க. (கஉ)

77. மன்னியபேர்யாப்பிற்குவைதருப்பம்வான்கவுடம்
பன்னியபாஞ்சாலமெனப்பகுத்து—மின்னிடையாய்
நன்னூன்முழுதுணர்ந்தோர்நாட்டகத்துநாட்டலுறீஇ
மூன்னூலுட்கண்டநெறிமூன்று.

(எ-ன்) இதுவு மேற்சொன்ன செய்யுட் கூறுபடுபாகமுணர்-ற்று.

(இ-ள்) இங்ஙனம் நால்வகைத்தாக நிலைபெற்றபெயரையுடைய செய்யுளினத்திற்கும் வைதருப்பம் கௌடம் பாஞ்சாலமென்னு மூன்று நாட்டினகத்துள்ளாரால் வழங்கும் பாகத்தான் மூன்றாகப் பகுத்து அவ்வவநாட்டினதுபெயரால் நல்ல நூல்களை முற்றவுணர்ந்தோர் தங்களாற் செய்யப்படு மூன்று நூலகத்து நாட்டுதலையுற்றுக் கண்டமார்க்க மூன்றுளவாமென்றவாறு.

உறீஇ - உற்று. வைதருப்பம் - விதர்ப்பநாடு. மின்னிடையாய் என்பது மகடூஉமுன்னிலை. (கங)

78. இழுமென்மொழியுமினியபொருளுந்
தழுவுமதுவைதருப்பம்—விழுமியவாஞ்
சொற்கடினத்தோடும்பொருட்கடினந்தோய்ந்தரிதாய்க்
கற்பனசாருங்கவுடங்காண்.

(எ-ன்) வைத்தமுறையானே வைதருப்பபாகமுங் கௌடபாகமும் பாகுபடுமாறுணர்-ற்று.

(இ-ள்) மெல்லென்ற விழுமிய இனியமொழியும், மெல்லென்ற விழுமிய இனிய அறமுதலிய நாற்பொருளும் பொருந்துவன வைதருப்பபாகமாமென்றும், விழுமிய சொற்கடினமும் பொருட்கடினமுந்தோய்ந் தரியநடைத்தாய்ப் புலவனாற்கூறப்படுவது கௌடபாகமாமென்றும் மனத்தாற் கண்டுகொள்க வென்றவாறு.

* பாழ்சை - பிரதிபேதம்.

விழுமியது - முக்கியம். இதனுள் விழுமியவாம் என்பதனை இடைநிலைத்தீபகமாக்கியும், காண் என்பதனை யிரண்டிற்கு மிறுதிவிளக்காக்கியும், மனத்தாலென்பதனை யெச்சமாக விரித்தும், மென்மை யினிமை யென்பவற்றை முன்னையதற்கு முதனிலைத்தீபகமாக்கியுங் கொள்க. சொற்கடினம்-வல்லினம் வல்லொற்றடுத்து மிகுதல். பொருட்கடினம் - பயங்கரமாகிய பொருள்பயத்தல். (கச)

79. இடையிட்டனவாகுமின்சொற்பொருளாற்
றடையற்றொழுகுவபாஞ்சால—மடைவடைவே
யக்கவிகள்பாடுமேவர்க்கங்கவைபெயராய்
மிக்குலகங்கூறும்விதித்து.

(எ-ன்) ஒழிந்த பாஞ்சாலத்தின்பாகுபாடும் அக்கவிகள் பாடுவோர்க்கெய்துங் காரணப்பெயருமாமாறுணர்-ற்று.

(இ-ள்) மென்மையுங் கடினமுமாகிய வைதருப்பகௌடங்களோடுங் கூடாதே யிடைநிலைப்பட்டவா மினியசொல்லானும் பொருளானுந் தடையின்றி நடைபெற்றொழுகுமது பாஞ்சாலபாகமாம். முறைமுறையே அக்குணக்கவிகள் பாடுவோர்க்கு மங்கங் கதுவேபெயராக விதித்து மிக்கபெரியோராற் கூறப்படுமென்றவாறு. அவை வைதருப்பகவி கவுடகவி பாஞ்சாலகவி என்பனவாம்.

இவற்றிற்கெல்லாஞ் செய்யுள் வருமாறு:—

பதியுமாமுகில்கரிப்படாமுமாய்ப்புன
னதியுமாய்ப்படுகதிர்நான்றவேணியாய்
மதியமாமுளைமதிமதியமாய்த்தமிழ்ப்
பொதியமானது சிவன்போலுமானதே. (68)

உந்தியங்கமலமேலுதிப்பதாலுரஞ்
சிந்துதெள்ளருவிவெண்ணூலின்செம்மைத்தாய்ப்
பந்திசேர்திசைமுகம்பயிலும்பான்மையாற்
சந்தமால்வரைமறைத்தலைவனொத்ததே. (69)

விண்டுவென் றுரைப்பதால்விண்ணினோங்கியே
பண்டுலகளந்தமெய்ப்படிவங்கூர்ந்தடிக்
கொண்டநீர்பகிரதிக்கோதையொத்ததால்
வண்டுழாய்மலைந்தசெம்மலையுமொத்ததே. (70)

இவைமூன்றும் வைதருப்பபாகம். திணை - பாடாண். துறை - மலைவருணனை.

மூப்புரத்தினைச்செகுத்தமுக்கணக்கனிற்சிரித்து
முத்தலைக்கணிச்சியுக்கதாற்
றப்பறப்பொருப்பினைக்குலுக்கிடக்கையைச்செருத்
தலத்துறப்புடைத்துருத்தெழா
நெய்ப்புறத்தினிற்குளித்தவச்சிரத்தினைப்பிடித்து
நெட்டுயிர்ப்புயிர்த்தியக்கவே
குப்புறப்புழைக்கைவெற்பின்மத்தகத்தினைத்துளைத்த
கொப்புளித்தபச்சிரத்தமே. (71)

மத்தகத்தழுத்துவச்சிரத்தினைப்பறித்துயர்த்தி
மத்தவெற்புடற்றிநிற்பதா
னத்தகத்தடக்குமைக்கடற்கடைக்கனற்சினத்த
னச்சுளத்தினுற்றெதிர்ப்பவே
பித்தகத்தழைத்தடற்பொறிப்புலிப்புலத்தினுற்ற
பெற்றமொப்பவட்கியுட்குநீ
டுத்தமச்சுவர்க்கமுற்றகொற்றவற்கிமைப்படுத்த
வொத்தபத்துடைச்சதக்கணே. (72)

புற்புதக்கடக்கவுட்பொருப்புவச்சிரத்தினைப்
புழைக்கையிற்புடைத்தியக்கவே
யுற்றதுக்கிரச்சமர்க்குடக்குமிக்குராத்துராத்
துடைத்ததைப்பறித்துருத்திடா
வற்புதத்தெதிர்த்தியக்கநெட்டடிக்குளூற்றதொற்றை
யக்களிற்றைவிட்டுமுட்டவே
தெற்குவெற்பினைத்துளைத்ததப்புறப்புறக்கொடைத்
திசைக்களிற்றினைத்துளைத்ததே. (73)

இவைமூன்றுங் கௌடபாகம். திணை — தும்பை. இவற்றுள், முப்புரத்தினையென்றது ஏமவெருமை. ஏனையிரண்டும் யானைமறமும் ஏமவெருமையுமாம்.

விரைக்கமலமூறுக்குடைந்ததகட்டகட்டினடுப்பொகுட்டு
வெண்டோட்டும்பர்
நிரைக்கமலத்தினிதிருந் தூட்டெகினம்பார்ப்பருத்த
நினைத்து நீர்வா
யிரைக்கெழவேசெங்கால்வெள்ளுகிருறுமுன்னிதழூரிஞ்சி
யிழிந்ததீந்தே
னரைக்குடுமிமறைக்கிழவனெருப்பிடைநெய்யுகுப்பனபோ
ணுன்றமாதோ. (74)

மாதண்டர்புகழ்ந்திடவாழ்ந்தருள்வாமபாகத்து
மழைதோய்வெள்ளி
வேதண்டமிசைப்பவளவேதண்டம்பகிரண்டம்
விழைவுகூர்வான்
மூதண்டமுகடுதொடுமும்மதிளின்மூரண்முருக்க
முன்கைக்கொண்ட
கோதண்டவடவரைபோற்பணைத்தகெந்தமாதனமாங்
குன்றொன்றுண்டே. (75)

நெய்த்திருண்டுசுருண்டுகடைகுழன்றறலின்கெழுதகைத்தாய்
நெறித்துநீண்டு
மொய்த்திருக்குங்குழற்காட்டின்முகையவிழ்பூந் துணர்விரையு
முற்றுமுன்ன
ரெய்த்திருக்குமிடைக்கிடர்மேலிடரிழைக்குந்தமர்போலு
மிறுமாந்தொண்பூண்
வைத்திருக்குமுலைமுகட்டிற்பொதிகளபத்தொளிவிரையும்
வளர்ந்தமன்றே. (76)

இவைமூன்றும் பாஞ்சாலபாகம். முதற்பாட்டு நாடுவாழ்த்து. இரண்டாவது மலைவருணனை. மூன்றாவது குழல்வருணனை. இவை யொன்பதுங் குருகாமான்மியம். இவை மூன்றுபாகமும் பலவடி

யான்வரு மொருசெய்யுளின்கண்ணே பலவடிதோறும் விரவியும் பேதித்தும் வருவனவு முள. அவையும் மேற்காட்டுதும். (கரு)

80. இன்பந்தெளிவுசெறிவுசமனின்னிசையே
நன்சொலுதாரநவின்றவலி—மன்காந்தந்
தையலுய்த்தலில்பொருண்மைசாற்றுஞ்சமாதியுட
னையிரண்டும்வைதருப்பமாம்.

(எ-ன்) எடுத்தமுறையானே வைதருப்பத்திற் கெய்துவனவாங் குணவலங்காரங்கட்குப் பெயரும் முறையும் தொகையும் உணர்—ற்று.

(இ-ள்) இன்பமுந் தெளிவுஞ் செறிவுஞ் சமனிலையு மின்னிசையு முதாரமும் வலியுங் காந்தமு முய்த்தலில்பொருண்மையுஞ் சமாதி யென்பதோடும் பத்தும் வைதருப்ப குணவலங்காரமாமென்றவாறு. (கசு)

81. ஏனைக்கவுடமிவையீரைந்தொடுங்கூடா
மானைப்பழித்தமதர்விழியாய்—நானயந்திங்
கெண்ணியபாஞ்சாலமிவைகட்கிடைப்பட்டு
நண்ணியதோர்சால்புடைத்தாநன்கு.

(எ-ண்) ஒழிந்தனவாங் கௌட பாஞ்சாலங்களும் அக்குணவலங் கார மேற்குங் கூறுபாடுணர்—ற்று.

(இ-ள்) ஒழிந்த கௌடமு மிவ்வன மெண்ணப்பட்ட பத்தி னோடுங்கூடாது நடக்கு மிலக்கணத்தவா மென்றவாறு. பத்திேனாடுங் கூடாதெனவே யும்மை யெச்சமாதலாற் சிலவற்றோடுங் கூடியும் வரு மென்பதாம். பாஞ்சாலமு மப்பத்தினோடும் வைதருப்ப கௌடங்க ளோடுங் கூடா திடைப்பட்டுநடத்தலைப்பொருந்து மொழுக்கத்தினை யுடைத்தென்றவாறு. இவைகட்கும் என்னும் உம்மை யிறந்தது தழீஇய எச்சவும்மையாம். (கஎ)

82. சொல்லாற்பொருளாற்சுவையுறலின்பந்தெளிவு
மொல்காப்பொருள்புலப்பாடொண்செறிவு—நல்லா
யெழுத்தோரினஞ்செறிதலெல்லாவெழுத்தும்
வழுத்திர்ந்தநல்சமனுமாம். (கஅ)

83. இன்னிசையதின்னிசையாமேய்ந்தவுதாரங்குறிக்கொள்
சொன்னடையால்வேறுபொருடோன்றலா—நன்னுதாஅல்
வாய்ந்ததொகைமிக்குவருதல்வலிகாந்த
மாய்க்தொன்றனையுயர்த்தலாம். (கசு)

84. செய்யுட்பொருளைத்தெளியவிரித்தற்குரிச்சொல்
லெய்து நடைத்துய்த்தலில்பொருண்மை—தையலா
யோங்குஞ்சமாதியுவமேயத்தின்வினையை
யாங்குவமைக்கேற்றுவதொன்றும்.

(இவைமூன்றுசூத்திரமு முடனெழுதப்பட்டன.)

(எ-ன்) இவை யின்பமுதற் சமாதியீறாய பத்து மாமாறுணர்-ற்று.

(இ-ள்) சொல்லினாலும் பொருளினாலு மினிமையுறவருதல் இன்பமாம். தெளிவென்பது கவியாற் கருதப்படும்பொருள் கேட்போர்க்குக் குறிப்புமொழியின்றி வெளிப்படைமொழியாகத் தோன்றுவதாம். ஒள்ளியசெறிவும், மூவினமாகிய எழுத்து ளொரினமிருந்து செறியப் பாடுவதாம். ஒள்ளியசெறிவென்றதனால் எழுத்தாறாய சொல்லாறாய பொருளுஞ் செறிதலுங் கொள்க. சமநிலை மூவினமும் விரவப் பாடுவதாம். இரட்டை துணிவு. இன்னிசையும் அவ்வவ செய்யுட்கேற்ற சொன்னடையாற் பாடுவதாம். உதாரமும் செய்யுட் சொன்னடையால்வரும் பொருளன்றியதன் குறிப்பினால் வேறுபொரு டோன்றுவதாம். வலியும் தொகைநிலைச்சொன் மிக்குவருவதாம். காந்தமும் ஒன்றனை யுயர்த்திப்புகழுங்கா லுலகநடையிறவாமை யாராய்ந் துயர்த்துவதாம். உய்த்தலில்பொருண்மை கவி தன்னாற் கருதிய செய்யுட்பொருளை விளங்க விரித்துக் கூறுவதற்குப் பிறிதுமொழி பெய்துகூட்டா ததற்குரியசொற்கள் செய்யுளகத்துளவாம்படி பாடுவதாம். சமாதியும் உவமேயத்தின்வினையை யுவமைக்கேற்றுவதோரிலக்கணத்ததா மென்றவாறு. இதனைச் சாற்றுஞ் சமாதியென்றதனாற் குணவலங்காரங்கள் பத்தினுள்ளு மிதுவே சிறந்த குணவலங்காரமென் பதூஉ மிஃது மூன்றுநெறியார்க்கு மொக்குமென்பதூஉ மாயிற்று.

இவற்றிற்கெல்லாம் எண்ணும்மை யிடையிட்டுவந்தன. ஆம் என்பதனைச் சூத்திரந்தோறு மிறுதிவிளக்காகக் கூட்டுக. நல்லாய், நன்னுதாஅல், தையலாய் என்பன மகடூஉமுன்னிலை. தையலென்பது அண்மைவிளி.

அவற்றுள், சொல்லின்பமாவது அடை சினை முதலென முறை மூன்று மயங்காமை வரும் வண்ணச்சினைச்சொற்களும் முதலொடு குணமிரண்டடுக்கிவரும் அடைசொற்களுஞ் சினையொடு குணமிரண்டடுக்கி வரும் அடைசொற்களும் வழக்கிடமுஞ் செய்யுளிடமுமாக விரண்டிறந்தனவா யடைபல வேண்டினவழியேபுணர்ந்தசொற்களுடன், வழிமோனை முதலியன வரத்தொடுப்பனவாம். அவற்றாற் கேட்டோர் பெறு மின்பம் சொல்லின்பம். பொருளாவன:—அறம் பொருள் இன்பம் வீடென்பன. அப்பொருளால்வரு மின்பமாவது மலரின் மதுக்காரணமாக மதுகரங் கட்கு வரு மின்பம்போலக் கவிப்பொரு ளுட்கொண்டோர்க்குவரு மின்பமாம். எனவே யவ்விரண்டினுள், பொருளணியுள்ளு முக்கியமான பொருளணி யுடைத்தாய்ப் பாடுவதே பொருளின்பமாம். இனிச் செய்யுள் வருமாறு:—

வெண்டிரைப்புனலருவியலயல்வயல்விரி
வண்டிமிர்பாசடைக்குவளைமென்பனிமலர்
புறக்கொடைமதிதரப்பொதியவிழ்ந்ததுபோய்ச்
சிறக்கணித்தனவாஞ்சேயிதழ்க்குமுத
முட்டாட்டாமரைமுறுக்குடைநாண்மலர்க்
கட்காமருகடைவாய்வழிந்திழிதர
மேய்தருகயவாய்மேதிகன்றுள்ளுபு
பணைமுலைசுரந்துபனித்தபாற்றடினி
நெடுவெண்டிங்கணிறைமறுத்துடைத்தொளிர்
செந்தளிர்ப்பூஞ்சுனைத்தேமாத்துகுகனி
முடப்பரியமைப்பலாமுட்புறக்குடக்கனி
புறக்காழ்மாகதப்பூகமிடற்றி
னிறக்காழ்திரண்டுநீண்டுதிர்பழுக்காய்
நெட்டிலையாம்பையினீடுபொற்கூன்கனி
புதைபிருடுரீஇக்கதிர்பொழிநவமணிக்குவை
சுழித்தெடுத்திரைத்தவாய்த்தூமலர்பலகொடு

பாற்கடல்பொன்னியுட்படிதிருவுருவங்
காண்பதின்முன்னியகாட்சியொன்றெனலாய்த்
துறைதொறுந்துறைதொறுந்துழனியின்வளைக்குந்
திருவரங்கேசனைத்திருமறுமார்பனை
மனத்துறநினைந்தும்வாழ்த்தியும்வணங்குந
ரெக்குலத்தெவரேயாயினு
மக்குணத்தவர்க்கடியேனடியேனே. (77)

இங்நேரிசையாசிரியப்பாவினுள் நால்வகை யடைசொற்களும் வந்தவாஞ் சொல்லின்பத்தோடும் பொருளின்பமும் வந்தமையா லிது சொற்பொருளின்பம். இதனு ளீரடை முதலொடுஞ் சினையொடும் புணர்ந்தன வைதருப்பம். இரண்டிறந்த மூவடை புணர்ந்தன பாஞ்சாலம். இரண்டு மூன்று மிறந்த பலவடை புணர்ந்தன கௌடச்சொல்லின்பம். ஆதலாற் சொல்லின்ப மூன்றுபாகமும் அவற்றோடு மூன்றுநெறியார்க்கும் ஒருதன்மைத்தாம் பொருளின்பமும் பலவடியான்வந்த ஒரு செய்யுளகத்துக் காட்டியவாறு கண்டுகொள்க. இதனுட் பொருளணியாவது தற்குறிப்பேற்றவுவமை. திணை — பாடாண். துறை — நாடுவாழ்த்து.

பொன்னசலந்திரண்டிரண்டாம்பொருவமர்தோட்கமலக்கட்
பொலிந்துநின்று
ரன்னவயற்குருகூராணிவரைவாழ்மதர்நெடுங்க
ணணியிழாய்கேண்
மின்னிடையார்புறந்தருநாண்மிகுகாமக்கடலாழ்ந்த
மிக்கோர்தங்கண்
முன்னுயிரைத்தரும்புணைதான்மலிதிரைநீர்க்கடவிடத்தார்
மடலென்பாரே. (78)

இது வைதருப்பச்சொல்லின்பம். பகுதி—மடல். துறை—உலகின்மேல்வைத்துரைத்தல். இவ்வாறு பொழிப்புமோனையாய்வருத லின்றுதெனவேண்டுவர் கௌடர்.

குயிலாருங்குளிர்பொழிற்றென்குருகேசன்குழகனுயர்
குன்றிற்குன்றாக்

கயிலாயன்களத்தணிந்தகடுவிடமுங்காத்துழையுங்
கரந்தகண்ணாய்
மயிலாலுமழைதவழ்நும்மணிவரைக்கெம்மணிவரைநின்
மணிப்பூண்மன்னும்
பயிலாரப்பணைமுலைக்கோர்பணைமுலையெப்படியெனுமப்
படியாம்பண்பே. (79)

இது கௌடச்சொல்லின்பம். பகுதி — வன்புறை. துறை—இடமணித்துக்கூறி வற்புறுத்தல்.

கடுவேகயலெனக்கரந்தடுங்கண்ணிணை
காமனுங்காமுறுங்காட்சியகாண்முகங்
கிள்ளையின்கிளையுங்கிளைத்தகைக்கிளையுடைக்
கீரமுங்கீர்த்திக்கீரமுங்கீரே
குவடுடைக்குளிர்பொற்குன்றேகுவிமுலை
கூர்புதற்கூன்சிலைகூற்றுயிர்கூட்டுணுங்
கெடலருங்கெழுதகைகெழுமுபுகெழீஇய
கேகயங்கேளொடுங்கேடுறுங்கேழியல்
கைபுனைகைக்கிசைகைக்கிணைகைத்துணை
கொண்டலுட்கொண்டன்னகொண்டையுங்கொடியிடை
கோடாக்கோவலர்கோற்றொடிகோமான்
கௌரவகௌசிகன்கௌசிகங்கௌத்துவ
மணியெனக்கொண்டுமனவீடளித்தோன்
கண்ணன்குறுங்குடிக்கனவரை
மண்ணகத்துறையுளாய்வளர்நிலமகட்கே. (80)

இது ககர வருக்க முற்றுமோனை. இதுவுங் கௌடச்சொல்லின்பம். பகுதி — பாங்கற்கூட்டம். துறை — இயல்பிடங் கூறல்.

கயலெனவேமதர்த்தமர்த்தகருநெடுங்கண்ணிவடனக்கிக்
கன்னிமன்றே
வயலெனவேயமர்துணையன்றளவளாயமர்துணையென்
றறிந்ததன்பான்

மயலறவேயியற்றமிழ்செய்மகிழ்மாறன்றுடரியின்கண்
மணந்தகாதல்
புயலெனவேபுரைநறுமென்புரிகுழற்குப்புகல்வனினிப்
புகலுமாறே. (81)

இது பாஞ்சாலச்சொல்லின்பம். பகுதி-மதியுடன்படுதல். துறை-குறையுறத்துணிதல். "குயிலாரு" மென்பதனையும் பாஞ்சாலச்சொல் லின்பமெனினு மாம்.

வண்ணமுலைப்பொற்றாமரைமுகுளம்விறழிந்து
கண்ணெகிழாவண்ணங்கருதியோ — தண்மதியை
மால்வைத்தமாநிதிவண்கோளூரில்வாணுதாஅன்
மேல்வைத்தான்மேனுள்விதி. (82)

இது பொருளின்பம். இதனுண் முலையாகிய பொற்றாமரைமுகை யவிழாதிருப்ப வதன்மேலாகப் பிரமன் மேனுண் முகமென்று பெயரை யுடைய மதியைவைத்தா னென்னும் பொருளின்பம் வந்தவாறு காண்க. பகுதி — இடந்தலை. துறை — மருங்கணைதல்.

மேலைமலைக்கதிர்மறையக்குவிமரையுட்டேனசையான்மீளாவைகிச்
சோலையில்வண்டினந்திறப்பவயற்கழுநீரிடந்தோய்ந்தசுரும்புமாதோ
மாலையிற்றன்மனைபுகுதுமணமகனைவிறலியொடுமதங்கன்பாடிக்
காலையினிற்றுயிலெழுப்பக்கடைதிறந்துபாத்தையிற்போகியகாட்சித்தே. (83)

இதுவுமது. துறை — நாடுவாழ்த்து.

திரகாயத்திரிகருணைக்கிலக்காகுமுணர்வுடையோர்சித்திகாட்டப்
பாகாயத்திடைபுகுந்துமறித்தொருகாயம்புகுமப்பான்மையேய்ப்ப
வுரகாயத்துரிவையுரீஇயொருபாந்தளொருபாந்தளுரிபுக்கூர்ந்து
வரகாயத்தகடுரிஞ்சும்பஃறலைபமலைமுழைபோய்வைதுமன்னே. (84)

இதுவுமது. மலைவருணனை. இவையிரண்டுங் குருகாமான்மியம். இன்பம் முற்றும்.

ஏவொன் றுடக்கியிருபதுகைக்கார்வயிரத்
தூவொன் றுடலந்துளைபடுத்த—காவொன்
றாங்கத்தானல்லாதனைத்துயிருங்காத்தற்
கிரங்கத்தானல்லாரெவர். (85)

இது வைதருப்பத்தெளிவு. இதற்குச் சொல்லின்முடிவாற் பொரு டோன்றும். துறை - கடவுள்வாழ்த்து.

தேனேமுளைமதியஞ்செந்தழல்பாரிப்பவிருந்
தேனேயயலார்சிரிப்பவே—தேனே
யிறைவகுளத்தாமரையோவெய்தார்வேளெய்து
குறைவகுளத்தாமரையோகூறு. (86)

இது சொல்லாற் கவியருமையும் நோக்குடைப்பொருள்கோளுந் தோன்றத் தொடுத்தமையாற் கௌடத்தெளிவு.

(இ-ள்) தேன்போலும் இனிய மொழியையுடையாய்! இளம்பிறை யானது தழலைவிரிப்பவும் அயலார்சிரிப்பவும் இத்துணைப்போதும் உயிரைத் தாங்கியிருந்தேனே! இங்ஙனமிருந்த வெனது துன்பமிகுதியும் நாண்டுறந்ததுங் கண்டு தேனையொழுக்காநின்ற வகுளத்தாமத்தை யுடையோர் அந்தோ மேவுகிலர்; இனிக் காமனெய்து குறைந்துபோவன குளத்தின்கட் டாமரையொன்றேயோ, ஒடையிற் காவியும் ஆவிவு மல்லவோ கூறுவாயாக; என்றவாறு.

ஏகார நான்கினுண் முன்னது விளி. இரண்டாவ திரக்கத்தின்கட் குறிப்பு. பின்னைய விரண்டு மீற்றசை. தாமரையோவென்னு மோகாரம் ஒழியிசை. திணை - பெண்பாற்கூற்றுப்பெருந்திணை. துறை - துன்பு மிகுதி தோழிக்குரைத்தல்.

உள்ளத்துணர்வெனுங்கண்ணுட்கொண்டுகாண்பதற்குங்
கள்ளக்கருங்கண்கலுழ்வனகண்—டெள்ளிப்
பிரியாரையுந்திருமால்போர்நகரார்தூற்றத்
தரியாதென்னுள்ளந்தளர்ந்து. (87)

(இ-ள்) எனதகத்தே யறிவென்னுங் கண்ணானது நங்காதலருடனென்னையுமுட்கொண்டு காணுநிற்பதற்குப் புறத்தே தாமுங்காணாத

விருப்பத்தா லென்னை வஞ்சித்த கள்ளத்தையுடைய விக்கண்களழுவ தனைக்கண்டு எம்மையிகழ்ந்து பிரியாதவரையுந் திருமால் திருப்பேர் நகரின்கணுள்ளார் பிரிந்தாரென்று தூற்றுமதனைக்கேட்டுத் தளர்ந்தவென் னுள்ளம் ஒருவழிப்பட்டுநில்லாதென்றவாறு.

இது பாஞ்சாலத்தெளிவு. என்னை ? வைதருப்பத்தெளிவுபோல வெளிப்படையுமன்றிக் கௌடத்தெளிவுபோல நுண்ணிதாய்க் குறிப்பி னாற் கொள்வதுமன்றி யிடைப்பட்டநீர்மைத்தாய்வந்தமையா னெனக் கொள்க. பகுதி - பொருள்வயிற்பிரிதல். துறை - தலைவி தலைவனை யியற்படமொழிதல். தெளிவுமுற்றும்.

வண்ணமைந்நிறவண்ணன்விண்ணினு
மண்ணினுமுறைவார்
கண்ணன்விண்ணகர்மஞ்ஞைவிம்மிய
கண்ணகன்வரையோ
ரண்ணலிம்மலர்கொண்மினென்னவு
மன்னையங்ஙனம்பா
னெண்ணவொண்ணுதன்முன்னின்முன்னருள்
கென்னமுன்னினளே. (88)

என்பது, அன்னாய்! அழகிய மேகம்போன்ற திருமேனியையுடையான், சுவர்க்கத்தினும் பூமியினு முறைவார் கண்ணினுள்ளான் அவனது திரு விண்ணகரத்து மயில்கள் அகவும் இடமகன்ற மலைப்பக்கத் தொரு பெரியோன் யாங்கள் விளையாடும் வண்டன்மாளிகை முன்றிற்கண் வந்து நுமது வண்டலம்பாவைக்கணிய விம்மாலையை வாங்கிக்கொண்மி னென்று கூற, அங்ஙனம் வந்து கூறியதற்குச் செய்யவேண்டுவதென் னென்றியா னெண்ணுநிற்ப, நம தொளிபொருந்தின நுதலினை யுடையாள் முன்னாள் அதனை யருள்கென வவன்முன்னேசென்று அதனை வாங்கினள் ; இஃ தியானறிந்தபடி யென்றவாறு.

முன்னில்-இன்முன் ; அஃது முன்றிலென இலக்கணப்போலி யாயும் வரும். முன்னிலெனவே வண்டன்மாளிகையும் வண்டலம் பாவையுங் கூட்டியுரைக்கப்பட்டன. இது வைதருப்பச்செறிவு. என்னை? மெல்லினமாகியவெழுத்துச்செறிய மெல்லினவண்ணமுற் றவ்வெழுத்தா னாய சொற்கள் செறியச் செறித்தமையி னெனக்கொள்க. பகுதி -

உடன்போக்கு. துறை—பூத்தருபுணர்ச்சிக் கறத்தொடுநிற்றல். இவ்வாறு மெல்லினவண்ணத்தால் மெல்லெழுத்துச் செறிந்துவருதல் விரும்பாது வல்லினவண்ணத்தால் வல்லெழுத்துச்செறிந்தசொல்லோடும் வற்கெனத் தொடுப்பதே வேண்டுவர் கௌடர்.

புட்குழியுத்தமர்புட்கொடியத்தர்பொருப்பின்மடக்குயிலே
கட்டழல்கக்குகுழிச்சிறுகட்காடத்ரிகடத்தொருமா
விட்புலமுற்றவிருப்பமிகுத்ததொர்வெற்றியனைக்குறுகா
வுட்குறவெற்றினனற்றதுதிக்கையொடுற்றமருப்பிணையே. (89)

என்பது, புட்குழியென்னுந்திருப்பதியின்கண் ணுத்தமர், கருடக்கொடியுயர்த்த சுவாமியார் பொருப்பிடத்து மடப்பத்தையுடைய குயிலே! மிக்க அழலைக்கக்குங் குழிந்த சிறுகண்களையு முள்ளத்தறுகண்மையையுங் கவுளின்கண் மதத்தினையு முடையதோர் யானை, விண்ணோரனை வரும் விருப்பத்தை மிகுப்பதோர் வெற்றியையுடையானொருவனைப் பாயும்படிக்குக் குறுகினகாலத் ததனுள்ள முட்க வவ னதனை வாளாலெறிதலு மதன் றுதிக்கையுந் துதிக்கைபற்றிய விருகோடு முடனே யற்ற வென்றவாறு.

இங்ஙனம் வல்லிசைவண்ணத்தால் வந்தவாறு கண்டுகொள்க. அஃதே லிதன் முதனூல் செய்த தெண்டியாசிரியர் "செறிவெனப்படுவது நெகிழிசையின்மை" யென வைதருப்பச் செறிவிற்குக் கூறியதனை விரும்பாது ஒருதிறத்தெழுத்தானே நெகிழத்தொடுப்பதே கௌடச்செறிவெனவேண்டிய திந்நூலுடையாருட்கொண்டு மிங்ஙனம் வற்கெனத் தொடுத்தன் முதனூலோடும் வழிநூன் மாறுகொளக்கூறலென்னுங் குற்றமாமாலோவெனின், நன்றுசொன்னாய்! அவர்தாமே "விரவத் தொடுப்பது சமநிலையாகும்" என்பதற்குச் "சோகமெவன்கொலிதழி பொன்றாக்கின" என்பதனுள் மூவினமும் விரவத்தொடுத்ததனை வைதருப்பச்சமநிலையெனவும், விரவுதலுள்ளும் வல்லெழுத்துச்செறிய 'இடர்த்திறத்தைத்துறபொற்றொடிநீயிடித்துத்தடித்துச், சுடர்க்கொடித் திக்கனைத்துந்தடுமாறத்துளிக்குமைக்கார்' என வற்கெனத் தொடுப்பதே கௌடச்சமநிலையெனவும் காட்டினமையானும் இவ்வண்ணங் கூறுக்கால் வைதருப்பச் செறிவிற்கும் வைதருப்பச் சமநிலைக்கும் வேற்றுமையின்மையானு மிச்செறிவிற்கு மோசையே நோக்கமென்பதனு

னும் பாஞ்சாலத்தோடும் பாகமூன்றெனக்கோடலானும் வைதருப்ப முதலிய மூன்றற்கு மூன்றுவண்ணமுஞ் சித்திரகவியிற் சாராது செறித்தார்; அன்றியும், பாயிரத்துள்ளும் இரண்டிடத்தாற் செய்தார் என்பதனு னுலகவழக்கினும் அருமையோடும் வற்கெனத் தொடுப்பானைக் கௌடகவியென்ப துட்கொண்டமையானுந் தன்கோட்கூறலென்னு முத்தியானும் இவர்க் கெழுத்துச் செறிவு மோசையு மவ்வவபாகத்தின் படியே செறித்தனேக்கமாதலானும் இவ்வண்ணங்கூறுதன் மாறுகொளக் கூறலென்னுங் குற்றமாகாதென்றுணர்க.

முல்லைமுகைவெல்லுநகைநொய்யநடையையவிடை
மொய்யளகநவ்விவிழியா
யொல்லைநடையுள்ளதினிவெள்ளிடையதில்லையென
வுள்ளபொழில்செய்யினபல்சூழ்
மல்லைநகரெல்லையிவணல்லிமலர்வல்லிபுணர்
வள்ளலுறையெல்லையவணே
தொல்லைமறையுள்ளபடிதெள்ளியுணரையநுறை
துய்ப்பதிசொல்லிலுவணே. (90)

என்பது, முல்லையரும்பைவெல்லும் நகையையும் மெல்லிய நடையையும் உளதிலதென் றையமுறு மிடையையும் நெருங்கினகுழலையுமுடைய மானபோனேக்கத்தாய்! உனக்கினி யொருகணப்பொழுதே நடையுள் தஃதியாதென்னில் இவண் வெளியென்பது சிறிதுமில்லையெனவுண்டாய சோலைகள் செய்யினது பக்கமெல்லாஞ் சூழப்பட்ட திருக்கடன்மல்லையாம். அவண் தாமரையாளைத்தழுவும் திருமாலாகியவள்ளலுறை தானம். உவண் கூறுகிற பழைய மறையின்கணுள்ள நுட்பமெல்லா மவை சொன்னபடியே தெள்ளிதாயுணரு மறையோருறையும்பதி யாகலா னென்றவாறு.

இது பாஞ்சாலச்செறிவு. என்னை? இடையினமாகிய வெழுத்து மிகவுஞ்செறிய வியைபுவண்ணமுமுற் றவ்வெழுத்தானுயசொற் செறிய வந்தமையா னெனக்கொள்க. இங்ஙன மூன்று வண்ணமுமுற வாங்காங் கவ்வினமிகப்பாடுவதன்றி வேற்றினஞ் சிறிதும் விரவாது தொடுப்பின் மூவினப்பாட்டானும் விரவாதுபாடுஞ் சித்திரகவியிற் சாருமாதலாற்

பிறவினமுஞ் சிறிது விரவுவதே முறையென்றுணர்க. இவற்றுள் முன்னையது பகுதி - நடுங்கநாடல்; துறையுமது. இது பகுதி - உடன் போக்கு. துறை—பதிபரிசுரைத்தல். இவைமூன்றும் எழுத்துச்செறிவு.

மறைமுரசந்தாமமகிழ்வழுதிநாடர்
துறைபொருநைவெற்பூர் துடரி—யுறைகுருகை
யஞ்சம்பராங்குசம்வெள்ளானைகொடியாணைமா
பஞ்சகலியாணன்பரி. (91)

என்பது, வழுதிவளநாடர் துறை - பொருநை; வெற்பும் ஊரும்—துடரியும் உறையுளாங் குருகாபுரியும்; பரி - பஞ்சகலியாணன்; மா - வெள்ளானை; ஆணை - சீபராங்குசம்; கொடி - அன்னம்; தாமம் - மகிழ்; முரசு வேதம் என்றவாறு.

இதனுள் வழுதிவளநாடர் என்பது மத்திமதீபம். அதுவே நாடுந் திருநாமமுமாம். வெற்பூர் - நிரனிறை. பரி மா ஆணை கொடி விதலையாப்பும், தாமம் மகிழ், முரசு மறை என மொழிமாற்றுமாகத் தசாங்கமென்னுஞ் சின்னங்களாகிய பல்பொருட் செறிவோடும் பல பொருள் கோளுஞ் செறிதலா னிது பொருட்செறிவு. துறை - தசாங்கவாழ்த்து.

மறந்தாங்கித்தெவ்வடுவைந்நுதிதாங்கிநட்பிழம்புமடியச்செந்தீ
நிறந்தாங்கியிடங்கரின்வெண்ணிணந்தாங்கியனைத் தலதுநியதிகாக்குந்
திறந்தாங்கியொளிர்திகிரிப்படைதாங்கித்திருவடிபொற்சென்னிதாங்கி
யறந்தாங்கிவளம்புகழ்வாரறந்தாங்கியவரெனுமிவ்வங்கண்ஞாலம். (92)

தழற்பாணிகறைகெழுவச்சிரபாணிமிளிர்படிகத்தாமம்வேய்ந்த
நிழற்பாணிவிழைந்தகமண்டலபாணிமுதலெவர்க்குநிபனேயாய்வேய்ங்
குழற்பாணிகொடுதொறுவின்குழுவழைத்தமழைமுகில்பார்குளிர்ப்பானீன்ற
கழற்பாணிதனைப்புகழ்சக்கரபாணியனைத்துயிர்க்குங்களைகணுவான். (93)

இவையிரண்டும் ஒருவகைச் சொற்செறிவு. இங்ஙனம் வந்த சொற்செறிவும் பொருட்செறிவும் மூன்றுநெறியார்க்கு மொக்கும். துறை — செந்துறைப்பாடாண் பாட்டு. செறிவு முற்றும்.

விழியுங்களபமுலையும்புன்மூரலும்வேயுமுந்திச்
சுழியும்முரோமவொழுங்குங்கண்டேம்வண்டுசூழ்ந்துசெந்தேன்
வழியுந்திருமகிழ்மாலைப்பிரான்வெற்பில்வல்லிசெவ்வாய்
மொழியுந் துணைநெஞ்சமேசெவிக்கேயென் றுமுழ்குவதே. (94)

இது வைதருப்பச்சமனிலை. துறை - கிளவிவேட்டல்.

பணிப்பிறைப்பற்றுளைக்கட்செவித்துத்திப்பணாடவிமேற்
குனித்தபொற்சிற்றடிச்சித்திரக்காரர்குருகேசன்வெற்பிற்
றனித்தழற்கட்களிற்றைக்கொடுஞ்சீயந்துரத்திருள்வாய்த்
தனித்துறற்குய்த்துணர்த்துங்கதிர்வேலவன்றாழ்குழலே. (95)

இது கௌடச்சமனிலை. சூத்திரத்துள் நிலையென்பது செய்யுள் விகாரத்தாற் றொக்கதனை விரித்துரைக்க. தனித்துறற்கு - கங்குலின் கட் டனித்துக் குறிவழிவருதற்கு. உய்த்துணர்த்தும்—என்னுள்ளங் கொள்ளச் செலச்சொல்லி யுணர்த்தாநிற்கும். கதிர்வேலவன் - ஒளியை யுடைய வேலவன். தாழ்குழலே - தாழ்ந்தகுழலினையுடையாய். யான் இதற்குச் செய்யவேண்டுவ தென்னென்றவாறு. பணாடவி - ஆகுபெயர். பகுதி - இராவிற்குறி. துறை - இரவுவரவுணர்த்தல்.

இடிக்குங்கடகளிற்றுன்சடகோபனியலிசையாய்
வடிக்குந்தமிழ்மறைபாடியமாறன்மணிவரைமே
னடிக்குங்களிமயிலேவருந்தேனுமர்நல்வரைப்பூங்
கொடிக்குங்கொழுகொம்பராமெமர்மாடக்கொடிக்கழையே. (96)

இது பாஞ்சாலச் சமனிலை. பகுதி - இயற்கை. துறை - இடமணித்துக்கூறி வற்புறுத்தல். இவற்றுள் மூவினமும் விரவிவந்தவாறு காண்க. மூன்றனுண் முதற்பாட்டும் மூன்றும் பாட்டும் கிளவிமணிமாலை. சமனிலை முற்றும்.

எழுகா தலினலிருகாவியுணீ
ரொழுகாமதியா லுலைவாய்—மெழுகா
யுருகா தணையாருயிர்காவலர்பே
ரருளாளருமாமவர். (97)

இதனுள், இருகாவியுணீர் - இரண்டுகண்ணு ணீர். ஒழுகா என்றது ஒழுகவென்பத னெதிர்மறை. உருகா தணையாரென்பது வினையெதிர் மறுத்தவினையெச்சம், அணையாரென்னும் வினைகொண்டது. பொரு ளாளருமாமென்னு மும்மையால் உயிர்காவலருமாம் என்னு மும்மை விரிக்க. உயிர்காவலருமாய்ப் பொருளாளருமாக, உருகு மென் காதல் கண்டு முருகியணைகின்றில ராதலா லிஃ தென்வினையன்றோ வென்றவாறு.

திணை-பெண்பாற்கூற்றுக் கைக்கிளை. துறை—நிலவுகண்டழுங்கல். இது தூங்கிசைச்செப்பலோசைத்தாய்வந்தமையால் வைதருப்ப வின்னிசை. என்னை? "இயற்சீர்வெண்டளையான்வரும்யாப்பைத், தூங்கிசைச்செப்பலென்மனார்புலவர்." என்றதனு லறிக. இவ்வாறு விரும்பா தேந்திசைச்செப்பலோசைத்தாய்த்தொடுப்பதே வேண்டுவர் கௌடர்.

குஞ்சரமாமெய்தது வன்கோதண்டங்கூடாமல்
வெஞ்சரம்பாய்வித்தனரால்வேட்டைதான்—வஞ்சகமே
யாங்கடவார்பூம்புனமீங்காரிவரொன்றேயறியேம்
வேங்கடவாணன்சிலம்பின்மேல். (98)

என்பது, வேங்கடவாணன்வரையிடத் திவ ரெய்ததுங் குஞ்சரமாம்; வில்லுமின்றியே தழையே வில்லாக வெம்மையைச்செய்யும்வாளியைப் பாய்வித்தனராகையா லிவர் வேட்டைமேலிட்டுவந்தது தான் வஞ்சமே யாம்; அதுவுமன்றி, நமது பொலிவையுடைய புனத்தைவிட்டுநீங்கு கின்றிலரால், இவர் யாரொன்றும் வந்தகாரணம் யாதென்றுந் தெளிகில மென்றவாறு.

பகுதி - இருவருமுள்வழி யவன்வரவுணர்தல். துறை - ஐயுறுதல். இஃ தேந்திசைச்செப்பலோசைத்தாய்வந்தமையாற் கௌடவின்னிசை. என்னை? "வெண்சீர்வெண்டளையான்வரும்யாப்பை, யேந்திசைச்செப்ப லென்மனார்புலவர்" என்பதனாலறிக.

மானபரனீந்தமணியாழிகைக்கொடுத்துச்
சானகிதன்னுவிதளிர்ப்பித்தான்—மீன

நெளிதாங்கவேலைநெறிகடந்துதேவர்
களிபுரந்தசேயெமதுகண். (99)

என்பது, பெருமையுடைய பரமனாகிய இரகுநாதன் கொடுத்த மாணிக்கத் திருவாழியைக் கொடுத்துச் சனகராசன்புதல்வி திவ்வியான்மாவைத் தழைப்பித்தான்; அவன் யாரெனின், மீன்களையுடைத்தாய் நெளிக்கப் பட்ட திரையையுடைய சமுத்திரத்தி னெல்லையைக்கடந்து தேவர்க் கெல்லாங் களிப்பைக்கொடுத்த அஞ்சனைபெற்ற புதல்வன், எனக்கென் னுறுப்பிற்சிறந்த கண் ணென்றவாறு.

இஃது ஒழுகிசைச்செப்பலோசைத்தாயே வந்தமையாற் பாஞ்சால வின்னிசை. என்னை? "வெண்சீரொன்றலுமியற்சீர்விகற்பமு, மொன் றியயாப்பேயொழுகிசைச்செப்பல்" என்பதனா லறிக. இம்மூன்று விகற்பமு மூன்று நெறியார்க்கு மொக்கு மென்பாரு முளர். திணை-பொது வியல். துறை - தூதுவென்றி.

நாட்டங்களிபற்றநாவுநசைபற்ற
வேட்டிற்பலர்கையிணைபற்றத்—தோட்டிலஞ்சிக்
கன்புற்றமுத்தர்பெருமானடிபரவி
யின்புற்றவர்க்கடிமையாம். (100)

இவ்வாறு வரும் பொய்ந்நிலப்பட்ட வின்னுவிசை மூன்றுநெறியாரும் வேண்டாரெனக்கொள்க. தெண்டியாசிரியர் ஒழுகிசையென்பது மிது. திணை - பாடாண். துறை - பழிச்சினர்ப்பரவல். இன்னிசை முற்றும்.

மண்ணோர்தொழுஞ்சேறைமாயோன்மணிமார்பிற்
பெண்ணோர்மனுகுலமாம்பெற்றியாய்—விண்ணோர்
மருந்துதலைப்பெய்திருப்பமம்மர்கூர்நஞ்ச
மருந்துதலைச்செய்பவரிங்கார். (101)

என்பது, உலகின்கண்ணுள்ளார்வணங்குந் திருச்சேறையின்கண் மாதவன் றிருமார்பிலிருக்குந் திருமகள் மனுகுலத்துட் டோன்றிய தொன்று மியல்பினையுடையாய்! விண்ணிற் றேவர்பானமாகிய அமிர்த மானது தம்மிடத்தே தமதாகவிருப்ப அதனையு மருந்தி மருந்து

பிறிதில்லாப் பெரும்பிணியைத்தரும் நஞ்சையு முண்ணுநிற்பவ ரிவ் வுலகின்கண் யாவர்தா மென்றவாறு.

பகுதி - பாத்தையிற்பிரிவு. துறை - நினைவறிகண்புதை. இது வைதருப்பவுதாரம். என்னை? தம்மிடத்திலே பெறுதற்கரிய அமிர்த மெளிதாயெய்தியிருப்ப வதனை யுண்ணுகின்றவர் அயலேயிருக்கு நஞ் சினையுஞ் சென்றுண்ண விரும்புவா ருலகின்கண்ணில்லையால், அதுபோல நின்னிடத் துவட்டா வின்பந்துய்க்கின்ற யான் பிறரிடத் துவர்ப் புடைத்தா மின்பந் துய்யேனென்பது குறிப்பினாற் கொள்ளக்கிடந்தமை யினானெனக் கொள்க.

நாதன்மகிழ்மாறனன் பனுவல்கற்றுணர்ந்து
போதந்தழைந்தபுனிதர்தாம்—வேதம்
விதித்தவொருமூன்றின்மெய்ம்மையுணர்வான்
மதித்தொருநூலோதார்மறித்து. (102)

இதுவும் வைதருப்ப வுதாரம். என்னை? மகிழ்மாறன் பனுவல் கற்றுணர்ந்தார் தத்துவங்கண்மூன்றி னுண்மையுணரவேண்டி மறித் தொருநூலோதாரெனவே யத்தத்துவங்கண்மூன்றினையு மது தானே மயக்கமறக் கூறுமென்பது குறிப்பினாற் கொள்ளக்கிடந்தமையானெனக் கொள்க. வேதம்விதித்தவொருமூன்றுவன:—சித் தசித் தீ ச் சு ர ம். மெய்ம்மை-உண்மை. உணர்வான்-உணரவேண்டி. மதித்து-உட்கொண்டு. மறித்து—மீண்டும். திணை—பாடாண். துறை—பனுவல்வாழ்த்து.

காழில்கனியுண்கடுவன்களங்கனியை
யூழிற்பருகியுருகுதிரு—மூழிக்
களத்தாதியைமதங்காரமக்குழவி
வளத்தாரிடந்தேடுவாய். (103)

என்பது, காலைமங்கலம் பாடவந்த யாழ்ப்பாணனே! பாலில்லாதே முழுது மென்மையு மினிமையுமுடைய அரம்பைக்கனியை யச்சமின்றி யுண்ணுநின்ற கடுவன் அகத்துமுழுதும் பாலாய்ச் சிறிது புற மென்மையு மற்பச் சுவையுமுடைய களங்கனியையு முறையேபோலப் பருகி யதன்சுவைக்கு முள்ளமுருகுந் திருமூழிக்களத்து முதல்வனைக்

காமமென்னுங் குழவிச்செல்வத்தையுடைய பரத்தையரிடத்தே தேடிக் காண்பாராக; அஃதன்றி யெம்மிடத்துக்காண்ட லரிதென்றவாறு.

காழ் - கொட்டை. ஊழில் - ஊழ்வினையாலேயெனினுமாம். இது கௌடவுதாரம். என்னை? 'காழில் கனியுண் கடுவன் களங்கனியை யூழிற்பருகியுருகு திருமூழிக்கள' மெனவே யக்கடுவன்போல, உத்தம மாகிய விவளோடும் உள்ளும் புறம்பும் ஒருநீர்மைத்தா மென்மை யோடும் உவர்ப்பில்லாத பேரின்பத்தைத் துய்த்த தலைவன், இழிந்த வியற்கையை யுடையாராய்ப் புறம்பு பொருணசைக்காய்ச் சிறிதுநெகிழ்ந் துண்ணெகிழ்ச்சியற்ற பரத்தையரிடத்தே யுவர்த்த சிற்றின்பத்தைத் துய்த் தவ்வின்ப மீட்டுந்துய்ப்பா னவர்சேரிவிட்டு நீங்கானுயினனென வுள்ளுறையுவமங் குறிப்பிற் கொள்ளக்கிடந்தமையானும், காமக்குழவி வளத்தாரிட மெனவே யிஃது எமது காதற்புதல்வன் என்னுஞ் செல் வத்தையுடைய மனையென்பதூஉம், யாம் புதல்வற்பயந்த மூப்புடையே மென்பதூஉம், இன்னும் அவ்விலேசானே யெம்மிடத் தவர்பெறு மின்பம் எமக் கவர்கொளுத்தக்கொண் டியாங்கொடுக்கு மியற்கையின்பமே யல்லாது பலரையுந்தோய்ந் தவரவர்கொளுத்தக்கொண்ட பல விகற்ப மாகிய செயற்கையின்ப மெம்மிடத்தில்லையே யென்னுங் கூற்று மாகக் குறிப்புங் கூற்றுங் குறிப்பினாற் கொள்ளக் கிடந்தமையானே யிவ்வாறு வேண்டுவர் கௌடரெனக்கொள்க. பகுதி - இதுவுமது. துறை - பாண னொடு கூறல். கூற்று - தோழிகூற்று.

நாம்பிரமமென்றேநவில்வாருமன்னுயிர்க
டாம்பிரமத்தொன்றுமெனுஞ்சார்பாரு—மாம்பிரம
நாரணனேவென்பாருநாவீறுடையபிரா
னாரணப்பாக்கற்றுணராதார். (104)

என்பது, பேரானந்தச் சிற்குணுதிகச் சுடர்ச்சொரூப ரூபப் பரத்துவ மென்னும் பரமபதநாதன், அநிருத்தனுகி யுந்தியந்தாமரைப் பொகுட் டிற் பலகோடியண்டங்களைப் படைத்துப் பலகோடி யண்டந்தோறும் பலகோடி பிரமாதிகளைப்படைத் தழிவிலதா யலகிறந்த வணுக்கடோறும் திவ்வியாத்ம சொரூப வியத்தியுடன் சருவபூத பூரண காரணனுகி மீனவ தாரமுதலாய வவதாரங்களாலும் அம்சாவதாரங்களாலுங் காவல்பூண்டு

வாழ்நாளுட் டன்றல், லீலைக்காக அமைத்த வலையனைத்து மழிந்துந் தானழியா தேகோதகத்தின்மே லோராலிளந்தளிரு ளடங்கும் பச்சைக்குழவியாகியும் பல்லாயிரகோடி யண்டமாகியவற்றை யகத்திட்டு மறித்தும் புறத்திட்டுக் காவல்பூண்டு விளையாடு மகடிதகெடித சாமர்த்திய குணங்களு ளொருகுணமுமின்றி யிருவினைத் தளைப்பட்டு மலமூத்திராதிகளாலாய பாண்டத்தோடு பிறந்தும் பிறந்து முழலு முத்தியறியா மூடராகி நாம்பிரமமென்றே நாக்குத் தடுமாறுது நவிலு மொருசார்பாரும், கற்றறிநூல் பல கற்றனராகித் தத்துவமுணர்ந்தும் பற்றறச் சாலோகமுதலிய மூன்று மெய்தி யிருவராயிருந் தீறில்பேரின்ப மொருவராமெனத் துய்க்குஞ் சுகாநந்தத்தைக் கெடுத்துக் கூடாததனைக் கூடுவதாக்கிச் சூனியப்படுத்தி மன்னுயிர் பிரமத்தோடு மொன்றுமென்று நாயனடிமைத்திறம் நழுவிய மூடா மொருசார்பாரும், ஆதியு மந்தமு மருமறை யரியென வோதிய பொருளுரைக் குடையதை யறிந்தும் அகிலாண்டகோடி பிரமாண்டநாயகனென முத்திதருவதாம் பிரமம் சீமந் நாராயணனே வென்றையுறு முழுமூடரும் ஒருநான்மறைத்துணி வோதாதுணர்ந்த நாவீறுடையபிரான்கூறிய திருவாய்மொழியைக்கற்றுண்மைப்பொருளுணரா மூவகைமூட ரென்றவாறு.

ஆரணத்தின்வழிவந்தநூலாதலாற் றிருவாய்மொழிக் காரணப்பா வென்ப தாகுபெயர். அல்லதூஉந் தமிழ்வேதமென்றும் அதற்குப் பெயர். ஆரணப்பாக் கற்றுணராதா ரெனவே யதனைக் கற்றுணர்ந்தாரவைகூறுரென்னுங் கூற்று மெஞ்சிநிற்பதூஉங் காண்க. இங்ஙனங் கூறிய மூன்றும் வேதத்தின்வழிவந்த திருவாய்மொழியாகிய பனுவற்றுணிவன்றென்பதூஉம் அதனைக் குரவரா லுணர்ந்தோர்மதமும் அம்மூன்றினையுந் தள்ளின மதமே யென்னுமவையுங் குறிப்பெச்சம். இக்கூற்றுங் குறிப்பும் புலவனாலறியலாம். இங்ஙனமாகிய சொன்னடை கொண்டு வேறுபொருடோன்றலா லிதுவுங் கௌடவுதாரம். திணை — வாகை. துறை - சால்புமுல்லை.

சினமென்பதையறியாதவர் தினமும்புகழ்மாறன்
செஞ்சொற்றமிழ்மறைபாடியசெல்வன்குருகையுளார்
முனமன்பினதளவொன்றியமுறையான்மலரணைமேன்
முடிகும்பரிசமொடிங்கிதமொழியென்பதுபெறவே

தனமின்றெனி னுலகத்தெவர் தனியின்பமதுறுவார்
தாமென்றபினளகத்துறு தனிவண்டொடுநின்பான்
மனமொன்றியபெடையேவலியுளதென்றனரன்றே
மறையென்றதையுணராதவென்மனதேகொடியதுவே. (105)

என்பது, தோழீஇ ! வெகுளியென்பதை மனத்தினுலுங் குறித்தறியாத சுத்தசாத்துவிககுணனுடையோர் வாழ்த்துங் காரிமாறப்பிரான், செஞ்சொலாகிய தமிழ்மறையைப்பாடிய செல்வத்தையுடையோன் குருகைமாநகரினிடத்து நம்பிறைவர் பொருண்மேற்பிரியுமுன்னர் இருவர்க்கும் புணர்ச்சிமேற்சென்ற வுள்ளத்தன்பினதளவும் யாக்கையின் களிப்புமேகாந்தமு மிடையாமமும் ஒன்றாகப் பொருந்திய வியல்பான் மலராலலங்கரிக்கப்பட்ட அமளியிடத்து முடங்கிய பரிசத்தோடு நலம்பாராட்டலென்னு முறைபோற் பிரிதனிமித்தமென்பதாக, என்னோடுந் 'திருவே ! மகளிரிடத்துத் தனமென்பன வில்லையாகி னுலகத்துள்ள வாடவருள் யாவர்தா மொப்பற்ற வின்பத்தை யெய்துமவர்க' ளென்றன ரதன்பின்னரளகத் தரும்பவிழ்ந்தகாலைத் தேனையுண்ணவந் ததனிடத்துறைவதாந் தனிச்சுரும்போடும் நினதிடத் தொருமனப்பட்ட பெடையே மனவலியுடைய தென்றனரன்றே; அவையிரண்டையும் மிக்க தொனியென் றுட்கொளாத வெனது மனதே கொடியதென்றவாறு.

இது பாஞ்சாலவுதாரம். என்னை ? தனமென்ப திரட்டுறமொழிதலாய் நடுவனை யெய்தாதவர்க் கிருதலையுமெய்தா ; பொருள்வயிற்போக வேண்டு மென்பதனை யுணர்த்தியதாகவும், நின்பான் மனமொன்றிய பெடையே வலியுளதென்றதனால் நீவைத்து நீங்கியபெடைநின்னையின்றி யாற்றாமையாற் றுனிறக்கி னீயு மிறப்பையென்று நினதுயிரைப் போற்றித் தனதுயிரைப் பிடித்திருந்த மனவலியுடைத் தென்பதாயது போலத் தாம்பிரிந்தகாலத் தியானு மாற்றாமையா லிறவாது தம்முயிரையும் போற்றி இல்லறங்காத்திருத்தல்வேண்டுமென்பதூஉமுணர்த்தியதாகக் குறிப்பினாற் பிறபொருள் கொள்ளக்கிடந்தமையானென்றறிக. இதனுள் அளவும் என்னு மும்மை செய்யுள்விகாரத்தாற்றொக்கதனை விரித்துரைக்க. தோழீஇ என்னு முன்னிலைப்பெயருமெஞ்சிநின்றதுங் காண்க. பகுதி - பொருள்வயிற்பிரிதல். துறை -

தலைவி தலைவனை யியற்படமொழிதல். இவற்றை மூன்றுநெறியார்க்கு மொக்குமென்பாருமுளர். அவை பொருந்தாவென வுணர்க. உதாரம் முற்றும்.

மன்னிலங்கைமூதூர்வழியோதிறந்ததொன்றூர்
பொன்னகர்செல்வாயிற்புதவன்றோ—தென்னரங்கன்
மைந்நீரசெம்பவளவால்வளையவண்டாள
மூந்நீரணைகட்டுமுன். (106)

என்பது, அழகிய திருவரங்கத்தையுடைய மாயோன் கடலைக் கரை கட்டின முற்காலத்து இராவணனாகிய நிருதர்கோன திலங்கையாகிய பழையநகர்க்குச்செல்லும் வழியோ திறந்தது? தென்னரங்கேசனது பாணத்தா லிறந்த சத்துருக்களாகிய அரக்கர்செல்லும் வீரசொர்க்க வாயிலின்கட் கதவல்லவோ திறந்த தென்றவாறு.

எனவே வழியுங் கதவுந் திறந்த தென்பதாம். மைந்நீர செம்பவள வால்வளைய வண்டாள முந்நீரை யெனக் கூட்டுக இது வைதருப்பவலி. என்னை? இருளி னீர்மையுடைத்தாய்ச் சிவந்த பவளத்தைப் பெற்ற வெளுத்த வளையைப்பெற்ற அதனிடமாக வளவியதாளத்தைப் பெற்ற முந்நீரை யூடறுத்துக் கடலை யணைகட்டின முற்காலத்தெனவே வேற்றுமைத்தொகை இருபெயரொட்டுப்பண்புத்தொகை வினைத்தொகைகளை முன்னிட்டுப் பெயருடைமைப்பொருளாய்நின்று கருகும்நீர்மை யுடையநீரையெனப் பெயர்மேலேறியவிடத்து மிப்பொருளையுடையதா யிருந்த திப்பொரு ளென்னுமிடத்து மிடைநின்ற வுடைமைவினைக் குறிப்புங் காலம்பெற்றவினைக்குறிப்புமாகிய சொற்க ளிடையிடை பல விடத்துந் தொக்கதோடும் பிறசொற்களுந் தொகைமிக்கு விரிதலானும் எனக்கொள்க. திணை - உழிஞை. துறை - புறத்திறை.

வன்கேழற்பன்றியாய்வான்பிறைக்கோட்டாழ்புனலாழ்
கொன்கேழிளர்தாழ்குழல்களிப்ப—மூன்கொணர்ந்த
வெம்பிரான்சங்காழியேந்திறனெவ்வுளார்
தம்பிரான்றாளேசரண். (107)

என்பது, வலியகேழலாகிய பன்றியாய் வானின்கட் பிறைபோன்ற கோட்டாலே யாழ்ந்த புனலின்கட் டாழ்ந்த நிறங்கிளருந் தாழ்ந்த குழலினையுடைய பூமிதேவியானவ ளுள்ளங்களிப்ப முன்னாட் புறத்தே

கொண்டுவந்த எம்முடைய பிரான் சங்கையு மாழியையுங் கைகளிலேந்தி ஞன் எவ்வுளார்க்குந் தம்பிரான் ; அவனது திருவடிகளே சரணமென்ற வாறு.

கொன் - பயனில்சொல். இது கௌடவலி ; என்னை ? இதனு ளிருதிறப் பண்புத்தொகை முதலாகத் தொகையாறு முடைமைவினைக் குறிப்பும் பிறசொற்றொகைகளு மிகவருதலா னெனக்கொள்க. துறை— கடவுள்வணக்கம்.

பொற்றொடிவேற்கண்கள்புடைசிறந்தாட்கெஞ்ஞான்று
முற்றவுடலுயிரீங்கொன்றென்றே—சொற்றனவாற்
றோடலர்தார்மாறன்றுடரியினெஞ்சேயிவளைக்
கூடலெளிதென்றேகுறி. (108)

என்பது பாஞ்சாலவலி. என்னை ? பொற்றொடியெனவே வேற்றுமைத் தொகைப்புறத்துவந்த அன்மொழித்தொகையும், வேற்கண்ணெனவே யுவமைத்தொகையும், புடைசிறந்தாட்கெனவே வேற்றுமைத்தொகையும், உடலுயிரெனவே யும்மைத்தொகையும், தோடலர்தாரெனவே வினைத் தொகையும் வந்து பண்புத்தொகையொன்றுமே வராது, பெயர் வினைச் சொற்களு முளவாய், முன்னவைபோலச் சுருங்காது மிகாது மிடைநிலைப் பட்டமையா னென்றுணர்க. பகுதி-பாங்கியிற்கூட்டம். துறை-பாங்கியை யறிதல். வலி முற்றும்.

ஆவிக்குறு துணைப்பெண்ணாமுதைப்போலுரைத்த
நாவிற்கினிமைநயப்பதோ—மூவுலகுந்
தாய்க்கொண்டதாளரங்கர்தண்ணளிசார்விண்ணவர்தாம்
வாய்க்கொண்டுயிர்வாழ்மருந்து. (109)

என்பது, எனதாவி வாழ்வதற்கு மிக்கநற்றுணையாகிய விப் பெண்ணாகிய அமிர்தினைப்போற் றன்பெயரினைச் சொன்னாற் சொன்ன நாவிற்கு மினிமையை யளிப்பதொன்றுமோ ? பூமிமுதலாய மூன்றுலகங்களையுந் தாண்டியளந்துகொண்ட தாளினையுடைய திருவரங்கேசர்கருணையைப் பொருந்தின வானிலுள்ளார் வாயாலுண் டினிமையைக்கொண் டுயிர் வாழாநின்ற அமிர்தமென்றவாறு.

ஓகாரம் ஒழியிசை. இதனுள், பெண்ணாகிய அமிர்தினுயர்த்தி யுலகொழுக்கிறவாமை யுயர்த்தினமையால் இது வைதருப்ப காந்தம். பகுதி - இடந்தலை. துறை - நலம்புனைந்துரைத்தல்.

திங்கள்வெண்கதிரும்பானுவின்கதிருஞ்சிறிதும்வைகலுநுழைந்தறியாப்
பொங்கர்மல்கியபூஞ்சோலைநள்ளிடையிற்புதையிருளிரிதரமடவா
ரெங்குமேந்தியசெஞ்சுடர்களாலூாகனேங்கெழின்மவுலியாயிரத்துந்
தங்குபன்மணிகள்பரப்பிலைவத்தொளிர்பாதாலமீதெனப்பொலிதருமால். (110)

இதுவுமது. (குருகாமான்மியம்.) திணை - பாடாண். துறை - விளக்கு நிலை.

தென்னனந்தைமால்வரைமேற்சேயிழைவன்கட்கூற்ற
முன்னிலுயிருண் ணுமெனமுன் னுற்றே—மன் னுயிருண்
கூற் றுருவமக்களுருக்கொண்டோர்விழிக்கெதிரே
தோற்றுவருங்கொள்ளாத்துணிவு. (111)

இது கௌடகாந்தம். பகுதி - இயற்கை. துறை - தகையணங் குறுத்தல்.

பூட்டியுழுங்கருமேதியரிதாளிற்கருங்குவளைப்போதுமேயத்
தீட்டியநாவினைக்குறுக்கிச்சிறைவண்டின்பண்ணமுதைச்செவியாலுண்டு
மோட்டுமுதுமூலைக்கண்மடைதிறந்தொழுகும்பாலமுதமுழங்கியாம்பற்
காட்டுவரம்புடைப்பவயற்கழனியடைத்துழவருழுங்காட்சித்தொன்றே. (112)

இது பாஞ்சாலகாந்தம். துறை-நாடுவாழ்த்து. (குருகாமான்மியம்). காந்தம் முற்றும்.

ஆழிப்படைக்கையருளாளன்மிக்கதிரு
மூழிக்களத்துறையுமூவர்கோ—னூழிதொறும்
வித்தகனேகாரிதருமெய்ஞ்ஞானமுத்திரைக்கை
யுத்தமனேகாக்கவுனை. (113)

திணை - பாடாண். துறை - புறநிலைவாழ்த்து.

இறையேதிருமால்வீடென்பது மந்தாம
மறையேபனுவலெனவைக்கு—நிறைகூர்
கரையற்றபோதக்கடன்மாறனுண்மை
யுரைகற்றுணர்ந்தாருளம். (114)

திணை - பொதுவியல். துறை - பறுவல்வாழ்த்து. இவையிரண்டும் உய்த்தலில்பொருண்மை. இவை மூன்றுநெறியார்க்குமொக்கும். உய்த்தலில்பொருண்மை முற்றும்.

கூண்டுகுமுதமலர்சிரிக்கக்கோகனக
மீண்டிதழ்ச்செங்கைகுவிக்குமெல்லிதா—னீண்டுகமா
மென்றுலிறையரங்கத்தேந்தல்பொருட்கேக
லொன்றாலுமாகாதனக்கு. (115)

சிரித்தல் - மலர்தல். ஏந்தல் அண்மைவிளி. இதனுள், சிரிக்க வெனவும் கைகுவிக்கவெனவு முக்கியப்பொருளாகிய வாயினதுகிரியை யும், கையினதுகிரியையும் ஒப்புடைப்பொருளாகிய குமுதத்தினுங் கமலத்தினும் புணர்த்துரைத்தமையாற் சமாதி யெனக்கொள்க. பகுதி - பொருள்வயிற்பிரிதல். துறை - செலவழுங்குவித்தல்.

ஆரப்பொழிற்கோங்கரும்புதினமாக
வாரைப்பொருதெழுந்தவண்மைசேர்—பேரைக்
குழைக்காதரென்றொருகாற்கூறுதோவென்றிக்
கழைக்கார்முகன்காகளம். (116)

இது சிலேடைவாய்பாட்டால் வந்த சமாதி.

சந்தனப்பொழிலகத்துநின்ற கோங்கரும்பு வைகலும் மேகத்தி னிடத்துண்டாகிய தண்ணீரைத் துழாயெழும் எனவும், ஆகத்தி னிடத்துக் கட்டின கச்சினைப் பொருதெழு மெனவும் முலையினது கிரியையைக் கோங்கினதரும்பிடத்துப் புணர்த்தவாறு காண்க. மாகம், ஆகம் எனப் பிரிமொழிச்சிலேடையும், வாரையெனச் செம்மொழிச் சிலேடையுங் கொள்க. இவை மூன்றுநெறியார்க்கு மொக்கும். சமாதி முற்றும். ஆக இன்பமுதற் சமாதியீறாகக் குணவலங்காரம் பத்தும் அடைவே வந்தவாறு காண்க. திணை - பெண்பாற்கூற்றுக் கைக்கிளை. துறை - குயிலொடுவெறுத்துக்கூறல். (உ0)

85. செய்யுட்குணங்களொழிவறவேசெப்புவதும்
பொய்யில்புலமையுறுப்புன்கவியேற்—கெய்துமதோ
சொற்றவற்றாற்சொல்லாதவற்றினையுஞ்சொல்லியவா
மூற்றுவித்தல்கற்றோர்முறை.

(எ-ன்) சொல்லிய குணவலங்காரங்கட் கொழி புணர்—ற்று.

(இ-ள்) செய்யுட்களின் குணவலங்காரங்களை யொழிவற முற்ற வுணர்த்துவதும் பொய்யென்பதில்லாத அறிவின்றன்மைபொருந்தாத புன்சொற்கவியேற்கு மெளிதா யெய்தப்பெறுந்தன்மைத்தொன்றோ? ஆகையா லிங்ஙனஞ் சொல்லப்படுங் குணங்களோடுஞ் சொல்லாதொழிந்த வக்குணங்களையுஞ் சொல்லியனவாக முற்றுவித்தல் கற்றுணர்ந்த சான்றோர்கட னென்றவாறு.

இங்ஙனம் கூறவேண்டும்நோக்கம் யாதோவெனின், செறிவென்று சொல்லப்படுவதும் எழுத்துச் செறிவும் சொற்செறிவும் பொருட் செறிவுஞ் செறிந்து வேறுவேறு ஒலித்து நடக்கும் என்று கூறியவற்றுள் எழுத்துச் செறிவும் வண்ணமு மூன்றுநெறியார்க்கும் வேறுவேறாக்கி, யொருவகைச் சொற்செறிவு மவையல்லாத பொருட்செறிவு மூன்றுநெறி யார்க்கும் பொதுவாகக்கூறினரெனினும் மெய்க ளுடனிலைமயக்கமின்றி யேனைமயக்கமாக வண்ணமும் பொதுவாவனவு முள. அது வருமாறு:—

மயர்வறமதிநலனருளியநறைகமழ்மலர்மகள்புணர்பவன்மே
லுயர்வறவுயர்நலனெனமுதிர்தமிழ்மறையுரைமகிழ்முனிவரைவாழ்
புயல்புரைகுழன்மதிபுரைநுதல்வடவரைபுரைபுணரிளமுலைசேர்
கயல்புரைவிழியெனதுயிரெவணினதுயிர்கவல்வகையெவன்மயிலே. (117)

இது அராகந்தொடுத்த அடியோடும் பிறிதடியும்படத் தொடர்ந் தோடினமையான் முடுகுவண்ணம்; "முடுகுவண்ண, மடியிறந்தோடிய வதனோரற்றே" என்றாராகலின். இவ்வண்ணமு மூன்றுநெறியார்க்கும் ஒக்கும். ஒழிந்தனவற்றுள்ளு மிவ்வண்ணம் பாகுபடுமென்னு நோக்கத் தாற் கூறப்பட்டது. அவையெல்லா மீண்டுரைப்பிற் பெருகும். பகுதி - உடன்போக்கு. துறை - செவிலிதேடல். (உக)

பொதுவியலுரை முற்றும்.

தருகாளமேகங்கவிராயராயன்சடையனன்பாற்
குருகாபுரேசர்புனையலங்காரக்குவலயத்தே
கருகாதசெஞ்சொலுரைவிரித்தான்கற்பகாடவிபோல்
வருகாசிரத்னகவிராயன்பேரைவரோதயனே.

இரண்டாவது

பொருளணியிய லுரை.

86. பொருளினுஞ்சொல்லினும்புனையுறுசெய்யுட்
கணிபெறப்புணர்த்தலினணியெனும்பெயர்த்தே.

என்பது சூத்திரம். இவ்வோத் தென்னுதலிற்றோவெனின், ஒத்து நுதலியதூஉ மோத்தினது பெயருரைப்பவே விளங்கும். ஆயின் இவ்வோத் தென்னபெயர்த்தோவெனின்? பொருளணியிய லென்னும் பெயர்த்து; பொருளானு மணிகளுணர்த்தினமையின். ஆயின், இதன் றலைச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின்? சொல்வான் றொடங்கிய அணியென்பவற்றிற்குக் காரண மிவையென்பதூஉம் அவை செய்யுட் கின்ன சிறப்புடைத்தாகப் புணர்த்தலி னிப்பெயர்த்தாயிற் றென்பதூஉ மூணர்-ற்று.

(இ-ள்) புலவராற் றொடுக்கப்பட்ட கவிகட்குப் பொருளானுஞ் சொல்லானும் அழகெய்தப் புணர்ப்பதால் அணியென்னும் பெயரை யுடைத்தாயிற் றிவ்வலங்காரமென்றவாறு.

புலவரா லென்பதூஉம் அலங்கார மென்பதூஉஞ் சொல்லெச்சம். அணி யிரண்டனுண் முன்னையது அழகாம். பின்னையது பூணும். எனவே பொருளானுஞ் சொல்லானு மணி யிரண்டென்பதாயிற்று. (க)

87. அவற்றுள்,
புவனம்போற்றியபொருளணிபுகலிற்
றவலரும்பான்மைத்தன்மையுவமை
யுருவகமுள்ளுறையொட்டுல்லேக
மொப்புமைக்கூட்டம்வேற்றுமைதிட்டாந்தந்
தற்குணம்பிரத்தியனீகஞ்சந்தய
மற்புதநிதரிசனந்தற்குறிப்பதிசயஞ்
சிலேடைபின்வருநிலைதீபகநிரனிறை
பூட்டுவிலிறைச்சிப்பொருள்கோள்பொருண்மொழி

யதிகம்வகைமுதலடுக்கிணைபெதுகை
விரோதமுபாயம்விசேடஞ்சமாயித
மேதுச்சுவைபரியாயமிலேசந்
தற்பவமசங்கதிதடுமாறுத்தி
புணர்நிலைவேற்றுப்பொருள்வைப்புவிபாவனை
யார்வமொழிநெடுமொழிபரிவருத்தனை
காரணமாலைகாரியமாலை
யேகாவலிபிரதீபம்பிறவணி
முன்னவிலக்கபநுதிநிந்தாத்துதி
புகழ்வதினிகழ்தன்மாறுபடுபுகழ்நிலை
பரிசங்கைகாவியலிங்கம்பரிகா
முறுசுவைவிநோத்திசமுச்சயமுதாத்த
மாசிசங்காஞ்சங்கீரணமே
பாவிகமெனவறுபானுன்காகும்.

(எ-ன்) வைத்தமுறையானே பொருளாறு மணிகளது பெயரு முறையுந் தொகையு முணர்—ற்று.

(இ-ள்) அங்ஙன மிரண்டுகூற்றவாகிய அணிகளுள் உயர்ந்தோர் முதலெனப் போற்றப்பட்ட பொருளணியொன்றனையுங் கூறுமிடத்துத் தன்மைமுதலாகப் பாவிகமீறாக அறுபத்துநான்கா மென்றவாறு.

இவற்றிற்கெல்லா மெண்ணும்மை தொக்குநின்றன. என என்பது எண்ணிடைச்சொல்; என்னை? "என்று மெனவு மொடுவு மொரோவழி, நின்றும் பிரிந்தெண் பொருடொறு நேரும்" என்பதனால். எனவென்ப தனைத் தன்மைமுதலாக வெண்ணிய வெங்கு மொட்டுக.

அஃதாக; இச்சூத்திரத்துள் சிலேடை, பின்வருநிலை, தீபகம், நிரனிறைமுதலிய சொல்லாறுமணிகளு மிதனுட் கூறுநிற்பப் பொரு ளணியியலென்ப தென்னையெனின், மிகுதி பொருண்மேலவாதலின் மிக்கவற்றாற் பெயர்கொடுத்தார்; அஃ தியாவதுபோலவெனின், அங்க ராகமாகிய சந்தனத்துடன் குங்கும கற்பூர கத்தூரி கூடினும் பூசியது சந்தனமென்பதுபோலக் கொள்க.

அற்றேல் இவை முறையாயினவாறென்னையோவெனின், இயல்பு விகாரமென விரண்டாகிய வவற்றுள், தன்மை யியல்பாகலான் முற்பட்ட

முறைமைத்தாக வைக்கப்பட்டது. உவமையை மூன்றுறுப்படக்கிய பிண்டமாகுந் தொல்காப்பியத்து ளிறுதிநின்ற பொருளகத் தகப்பட்டதாக அலங்காரத்தினையுங் கூறிய ஒல்காப்புலமைத் தொல்காப்பியனாரு முவமையென்ப தொன்றாகத் தொகைபெற்று வினைமுதலிய நான்காய் வகுத்துப் பலவேறு விரிவாய்நின்று விகாரமாயதன்றிப் பிறவலங்காரங்கட்கு முபகாரமுடைத்தாகலானு மஃதொன்றினையுமே முக்கியமாக்கி யதனுட னுருவகமும் உள்ளுறையுவமமும் வகுத்துக்கூறிய முதன்மையானும், இதற்குத் தனியே முதனூல்செய்த தெண்டியாசிரியநும் அவர்நோக்கமே தாமு முடம்பட்டாராகத் தன்மையின்பின் னுவமையை வைத்தாராகலானும், இருவர்நோக்கமு முட்கொண் டிந் நூலுடையா ரவையிரண்டிற்கு மிந்நூல் வழிநூலாகலானுந் தன்மையை முதல்வைத் ததன்பின்ன ருவமையையு முதல்வைத்தது முறையெனக் கொள்க. உருவகமும், உவமையும் பொருளும் வேறுபட்டு நில்லா தொன்றெனனும் பான்மைத்தாய மாட்டேற்று முவமையாதலானும் உள்ளுறை யுவமமும் இசைதிரிந் திசைக்கப்படுவதா யுவமையோடுவமிக்கப்படும்பொருள் பிறிதோராறு தாராது அவ்வந்நிலங்களிற் பிறந்த கருப்பொருளோடுஞ் சார்த்தி யுள்ளுறுத்திக்கொள்ளுமுவமை யாதலானும் அவை முறையே வைக்கப்பட்டன. ஒழிந்த ஒட்டு உல்லேக முதலியனவு முவமையைப் பின்சென்றிருத்தலா னவை வைத்தமுறையு முய்த்துணர்ந்துகொள்க. அவையெல்லா மீண்டுரைப்பிற் பெருகும். உவமையைப் பின்சென்றனவல்லாத அலங்காரங்களையுந் தமக்குப் பொருந்தினமுறையே வைத்தமுறையு முய்த்துணர்ந்துகொள்க. அவையு மீண்டுரைப்பிற் பெருகும்.

அஃதாக ; ஆறு மிந்நூலுடையார் முதனூல்களிற் கூறியபடியே வழிநூலிற் சிறிது புடைநூலிலக்கணந் தவறாது கூறப்புகுந்து மிகவு மிதன் முதனூலாகிய தண்டி கூறிய அணிகளுள் நுட்பமென்னும் அலங்காரத்தைக் குறைத்துப் பிற முதனூலணிகள் கூறிய அணிகளையுந் திரட்டிக்கூறி, மூந்து நூல்களுட் கூறாத பூட்டுவில் இறைச்சிப்பொருள்கோள் பொருண்மொழி யென்னு மூன்றினோடும் வகைமுதலடுக்கு இணையெதுகை உபாயம் உறுசுவை புகழ்வதினிகழ்த லென்னும் அலங்காரங்களையுங் கூட்டி அறுபத்துநாலாக மிகுத்ததூஉ மொருவழிக் குன்றக்

கூறன் மிகைபடக்கூற லென்னுங் குற்றமாம்பிறவெனின், ஆகாது; என்னை? நுட்பமென்பது பரிகரத்து ளடங்குமெனக் குறைத்துச் செய்யுட் கணிபெறப் புணர்ப்பதெல்லா மணியெனப்படுதலான் முன்னைய மூன்றுஞ் சொல்லிலக்கணத்திலும் பொருளியலினும் புறத்திணையினுங் கூறியபடியே செய்யுட்கழகாதலி னணியிற்கூட்டி யிருத்தார்; ஏனைய வைந்து மழகெய்துவதா யிலக்கியங்கண்டதற் கிலக்கண மியம்பியதாக்கி யிருத்தாராகலானென்றுணர்க. அன்றியும், வழிநூலும் புடைநூலுஞ் செய்தற்கேதுத் தொகுத்தன் முதலிய நான்கினுள்ளு முதலன விரண்டு மிவ்வு மேதுவாகலானுங் கூறப்பட்டன. அற்றேல் ஐயமுந் தெரிதரு தேற்றமும் பொதுநீங்குவமையுந் தெண்டியாசிரிய ருவமவிரியுட் புணர்க்க, அவற்றை யேனையாசிரியர் வேறுவேறணியாகப் புணர்க்க, இந்நூலுடையார் முதலிரண்டும் பிறர்நோக்கத்தோடுங் கூட்டிப் பிறிதோரணியாக்கிப் பின்னையது தெண்டிநோக்கத்தோடுங் கூட்டிப் புணர்த்த தூஉங் குற்றமாமெனின், குற்றமன்று. இருவர்க்கும் முதலான தொல்காப்பியனார் "தடுமாறுவமங் கடிவரையின்றே" யென வழுவமைதிவாய் பாட்டாற்கூறினமையானும் அவற்றுள் உவமவுருபு புணராமையானு முவமையைப் பின்சென்ற பிறிதோரணியாகப் பிறருடம்பட்டது தானுடம்படுதல் என்னு முத்தியா னுடம்பட்டும், ஏனையது "தானே தனக்குவமைதா" னென உவமவாசகம் புணர்ந்தமையானும் "ஒரீஇக் கூறலு மரீஇய பண்பே" என்றாராதலானும் பிறர்மதங்களைதலென்னு முத்தியானுங் கூறப்பட்டது. இங்ஙனம் பெயரு முறையுந் தொகையு மாகிய அணிகளை முதனூலாசிரியர் வகைப்படுத்தியும் விரித்துங் கூறிய நோக்கத்தோடுஞ் சிலவற்றை யிந்நூலுடையார் தன்கோட்கூறலென்னு முத்தியானுந் தன்குறியிடுதலென்னு முத்தியானும் வகுத்ததன்மேல் விரித்துவகுத்தும் விரித்ததன்மேல் விரித்ததையும் அவ்வணிகட் குணர்த்தும் பீடிகைமுதலாய வுரைநடைநோக்கங்களா னுங்காங்குக் கண்டுகொள்க. அவையெல்லா மீண்டுரைப்பிற் பெருகும். (உ)

88. வழுவாமரபினெப்பொருளையும்விகாரந்
தழுவாநடைபெறப்புணர்ப்பது தன்மை.

(எ-ன்) மே னிறுத்தமுறையானே தன்மையென்னு மலங்காரத்தி னது பொதுவிலக்கண முணர்-ற்று.

(இ-ள்) இருதிணையுட் குற்றமில்லாத இலக்கணத்தையுடைய எவ் வகைப்பட்ட பொருள்களையு முவமை முதலிய விகாரவணிகள்கூடாதே சுபாவநடைபெறப் புலவன் பாடுவது தன்மையென்னு மலங்காரமா மென்றவாறு.

நடை - ஒழுக்கம். குற்றமில்லாத எவ்வகைப்பட்ட பொருளையு மெனவே குற்றமுள்ளவற்றின் சுபாவத்தைப் பாடுவதுந் தன்மையா மெனினும் அலங்காரத்தின்பாற்கூடாதென்பதாம். வழுவாதமபென் னும் வினையெதிர்மறுத்தபெயரெச்சவாய்பாடு செய்யுள்விகாரத்தாற் றொக் கிற்றுயிர்மெய் கோவாமுத்தமென்பதுபோலக் குறைந்துநின்றது. தழுவா வென்பது மது. விகாரம் ஆகுபெயர். (௩)

89. அதுவே,
ஒண்பொருண்மக்களுயிருளவஃறிணை
சினைவினைபண்பிடமெனவுஞ்சிவணும்.

(எ-ன்) தன்மையின் சிறப்பிலக்கணப்பாகுபாடுணர்-ற்று.

(இ-ள்) அத் தன்மையென்னுமணி, உயர்திணையிடத்துப் பொருட் டன்மையும் மக்கட்டன்மையும், அஃறிணையிடத் துயிருள்ள அஃறிணைத் தன்மையும், உயிரில்லாத அஃறிணைத்தன்மையும் அப்பொருளின் சினைத்தன்மையும், வினைத்தன்மையும், பண்புத்தன்மையும், இடத் தன்மையுமெனத் தனித்தனி புலப்படப் பொருந்துமென்றவாறு.

அதுவே, என்பது "சீர்கூனுதல் நேரடிக்குரித்தே" யென்பதனாற் சீர்கூனுயிற்று. இவற்றிற்கெல்லா மெண்ணும்மை செய்யுள்விகாரத்தாற் றொக்குவிரிந்தன. உயிரில்லஃறிணை யென்பது முயர்திணையென்பது மெதிர்மறையெச்சமாகி விரிந்தன. இன்னு மவ்விலேசானே யுயிருள வஃறிணையு ளியங்குதிணையும் உயிரில்லவற்றுட் கருத்துப்பொருளுங் கொள்க. (௪)

90. அவற்றுள்,
பொருளியல்பாண்பெண்ணெனவிருபுலப்படும்.

(எ-ன்) இதுவும் பொருட்டன்மைக்கோர் பகுதியுணர்-ற்று.

(இ-ள்) அச் சொல்லப்பட்ட வுயர்திணை யஃறிணையுட் பொருட் டன்மை ஆடூஉப்பொருட்டன்மை மகடூஉப்பொருட்டன்மை என விரு வகைத்தாய்த்தோற்றுமென்றவாறு. (௫)

91. அரும்பெறன்மக்கட்டன்மையுமற்றே.

(எ-ன்) இதுவும் உயர்திணைக்கண் மக்கட்டன்மைக்கோர் கூறுபா டுணர்-ற்று.

(இ-ள்) பெறுதற்கரிய மக்கட்டன்மையும் பொருட்டன்மைபோல விருவகைப்படு மென்றவாறு.

அற்று உவமவுருபு. அஃறிணைக் கொருமை பன்மை யென்பதல் லாது ஆண்பெண் ணென்பது சிறப்பின்மையாற் கூறாராயினார்; என்னை? "ஆண்பெண்பலரெனமுப்பாற்றுயர்திணை", "ஒன்றேபலவென்றிருபாற் றஃறிணை" யென்பதனு லறிக.

இவற்றிற்கெல்லாஞ் செய்யுள் வருமாறு:—

செம்பொனுடைசெறிதிருமருங்கின
னம்புயத்தனிமலரலர்ந்தவுந்தியன்
கவுத்துவக்கடவுட்கவினிழன்மூழுமணி
பவித்திரத்திருமகள்பதிந்தமார்பினன்
வலம்பயின்முப்புரிநூலொடும்வாடா
திலங்கியவனமாலிகைபுனையிணைப்புய
னிகல்புரிதிகிரிசங்கேந்தியகரத்தினன்
கதிர்மணிமௌலிகவித்தசேகரன்
மதிதவழ்சோலைமலையலங்காரன்
பூதலந்தாயபொன்னடி
காதலித்தவர்வல்வினைகடந்தவரே. (118)

இது ஆடூப்பொருட்டன்மை. திணை - பாடாண். துறை - கடவுள் வாழ்த்து உரையிற்கோடலென்பதனு னுரையெழுத வேண்டுவதில்லை, பா - நேரிசையாசிரியப்பா.

கனையிருள்கடிவயிரப்பால்செறிதமணியப்
புனைகழலொடுவுனைபரிபுரப்பூந்தாளினன்

குறங்கிணையொடுமருங்கிணைவளைபொலந்துகிலின
னறந்தழைதருமயன்றனையருளலருந்தியன்
கவுத்துவமணிவனமாலிகைகலந்தொளிர்திருப்
பவித்திரமுடன்மலர்மாமகள்பயின்மார்பினன்
வான்றோய்கதிரினிற்றிகிரியைவலனேந்தியு
மீன்றோய்மதியினில்வரிவளையிடனேந்தியு
மகரக்குழைதழைகாதினன்மணிமௌலியன்
சிகரப்பலதலைசேர்திருமலைமேலுறை
செல்வனை,
மனமொழிமெய்களின்வழிபடுபவராய்ப்
புனைநறுமலர்பொழிபவர்பாற்
கனவிலுமுறுான்கொடுங்கணிச்சியோனே. (119)

கனையிருள்—செறிந்தவிருள். வயிரப்பால்—வயிரமணி; உள்ளீடாய தரி. தமனியப்புனைகழல்—பொன்னாற்புனையப்படும் வீரக்கழல். பூந்தாளென்றது பொலிவினையுடைய சீபாதம். வான்றோய்கதிர்....ஏந்தியும் - வானிடத் தலமரல்பொருந்திய கதிராற்கொண்ட சக்கரத்தை வலத்தே தரித்தும். மீன்றோய்...........இடனேந்தியும் - நாண்மீனோடு பொருந்திய மதியாற்கொண்ட வலம்புரியை யிடத்தே பொறுத்து மெனக. என்னை? வான்றோய் கதிர்போன்ற திகிரியை, மீன்றோய் மதிபோன்ற வலம்புரியை யென வுவமைத்தொகைத்தொடர்மொழியன்றோவெனின், அன்று; "இமையாதமுக்கண், மூவரிற் பெற்றவ" ரென்பதுபோலக் கொள்க. ஈரிடத்தும் இன் சாரியை. ஆல் என்னு முருபு இல்லென மூன்றுவதைந்தனுருபாய் மயங்கின. கொண்ட வென்னும் வினையுந் தொக்கது. செல்வனை யென்பது தனிச்சொல். சீபாத முதலியவற்றை யுடையனாகித் திருமலைமே னிலைபெற்ற திருவுடையானைத் திரிவித காரணங்களாலும் அருச்சனைசெய்பவராய்க் கைகளா னறுமலர் தூயவரிடத்துக் காலன் கனவினுங் கனவினு மணுகானென்றவாறு. இது பத்தடியாய்ச் செல்வனை யென்னுந் தனிச்சொற்பெற்று மூன்றடி நேரிசையாசிரியச்சுரிதகத்தானிற்ற சிந்தடிவஞ்சிப்பா. அலங்காரமுந் திணையுந் துறையு மிதுவு மது.

பூங்கமலக்கோயிலாள்புத்தமிர்தினுட்பிறந்தாள்
வீங்குதுணைமுலையாள்வெண்ணகையா—ளோங்குபுனற்
பொன்னிநடுவுட்பொருண்மார்பகத்தாளென்
சென்னிபிரியாத்திரு. (120)

இது மகடூஉப் பொருட்டன்மை. இதனுள், பொன்னிநடுவுட் பொருள் என்ற திரண்டாற்றிடைக் கண்வளர்ந்த நம்பெருமாள். திணை— இதுவுமது. துறை - பெண்பாற்கடவுள்வாழ்த்து.

முப்புரிநூன்மார்பினுன்முக்கோல்கைக்கொண்டுளான்
பொய்ப்புலனைவென்றபொறையுடையான்—மெய்ப்பொருளைச்
சேவிக்குநுண்ணுணர்வான்சீநிவாதன்றமியே
ஞவிக்கருள்புரிந்தாள்வான். (121)

இஃது ஆடூஉ மக்கட்டன்மை. ஆவியை என்பது ஆவிக்கென இரண்டாவது நாலாவதாயிற்று. திணை - வாகை. துறை - தாபதவாகை; என்னை? "பொறியுணர் வெல்லாம் புலத்தின் வழாஅமை, லொருவழிப் படுப்பது தொகைநிலைப் புறனே", "மனத்தினை யொருவழி நிறுப்பது பொறையே", "நிறுத்திய மனத்தினை நிலைதிரி யாமற், குறித்த பொருளொடு கொளுத்துத னினைவே" என்ற முறையே தொகைநிலை பொறை நிலை நினைத லென்னு மூன்று மிப்பாட்டினுள்ளே கூறினமையான் "அறுவகைப்பட்ட பார்ப்பனப்பக்கமும்" என்னுஞ்சூத்திரத்துள்'நாலிரு வழக்கிற் றாபதபக்கமு' மென்னு மெட்டனுள் தவஞ்செய்து யோகம்பயில் வார்க்குரிய விம்மூன்றும் வந்தமையா லெனக்கொள்க.

கூரெயிற்றுருண்கண்ணார்கொம்மையிளமுலையார்
வார்புருவத்தார்திலகவாணுதலார்—காரகத்தெம்
மால்வரையாரெண்ணிறந்தமாதருணின்றூற்குறித்த
கோல்வளையாரிறைவகூறு. (122)

இது மகடூஉமக்கட்டன்மை. கூரெயிறு - கூரியபல். உண்கண் - மையுண்கண். கொம்மை - திரட்சி. இளமை - மேனிவனப்பு. வார் புருவம் - நீண்டபுருவம் கோல்வளை - திரண்டவளை. வாணுதல் - ஒளி பொருந்திய நுதல். பகுதி - சேட்படை. துறை - அறியான்போன் றவனினைவுகேட்டல்.

வள்ளுகிருந்தோலடியுஞ்செவ்வாயும்வார்சிறைகூர்
புள்ளியுமென்சூட்டுமுறுபொற்பினதா—மொள்ளியவை
மாறிவருவாதியரைவென்றமகிழ்மாறனு
ரேறிவருவெள்ளோதிமம். (123)

இஃது உயிருளதா யியங்கு மஃறிணைத்தன்மை. வள் - கூர்மை. தோலடி - என்பில்லாத அடி. புள்ளி - பொறி. திணை - பாடாண் பொதுவியல். துறை - அன்னவாழ்த்து. என்னை ? பாலற்மரபிற் பொருநர் கண்ணும் வாகைத்திணையுட்கூறிய சூத்திரம்போல வென்றி கூறுது அன்னத்தினது தன்மைகூறியதனுனும் வாழ்த்தெல்லாம் பாடாணுதலானு முணர்க.

பரியரைத்தாய்த்திணிவயிரம்பயின்றுநிலங்கிளைமுதற்றாய்
விரிசினைத்தாய்ப்பசுந்தழைத்தாய்விரைமலர்த்தாய்விழைகனித்தாய்ப்
பெரியகதிரவன்மறைந்தபிழம்பிருட்குமுறங்காது
வரிவளையூர்புனற்குருகூர்மகிழ்மாறர்திருப்புளியே. (124)

இஃது உயிருளதாகி யியங்கா வஃறிணைத்தன்மை. இவையிரண்டுங் கடவுட்டன்மையுடைத்தாயினு முலகின்கட் டோன்றும் வடிவ மஃறிணைத்தன்மையவாதலி னிங்ஙனம் கூறுவதாயிற்று. திணை - இதுவுமது. துறை - தாவரவாழ்த்து. பா—தாவுகொச்சகக்கலிப்பா. இருள் - ஆகுபெயர்.

ஆதாரபீடத்தமர்ந்துயர்ந்தபாதசெடி
மீதாயமூர்த்தமிதித்துநிமிர்தாட்டுணைத்தாய்த்
தாழ்ந்ததுதிக்கையினைத்தாவியிருகைபற்ற
வாழ்ந்தபகுவாயகத்தோங்குநாவின்
வளையெயிற்றுக்கூர்ங்கோட்டுவான்பிடர்வீழ்கற்றை
யுளைவனப்பிற்பாங்கருயர்செவித்தாயொண்கருக்கி
னூடோன்றியசிர்த்தொடேற்றமுறுமாளியின்மே
லாழுங்குடைத்தாயதன்மேற்கொளாளியதாய்
நான்றதலைப்போதிகைத்தாநாவீறர்வண்புளிக்கீழ்த்
தோன்றுதிருக்காவணக்கற்றூண். (125)

இஃது உயிரிலஃறிணைத்தன்மை. இது பத்தடியான்வந்த பஃறொடைவெண்பா. திணை - இதுவுமது. துறை - மதலைவாழ்த்து.

நீண்டசெவியுறவினீள்புருவத்திம்பரொளி
கூண்டுபயநோக்கமுங்கைக்கொண்டதாம்—பாண்டவர்தந்
தேர்ப்பாகனனசிறுபுலியூரானுலகங்
காப்பான்றன்மால்வரையாள்கண். (126)

இது சினைத்தன்மை. உபயநோக்கம்—அருணோக்கமு மருணோக்கமும். பகுதி - சேட்படை. துறை - கண்ணயப்புரைத்தல்.

கைச்சிரத்தானுந்து நிப்பக்கன் றினாரகந்திறந்து
பச்சிரத்தமுண்டுயிருண்பான்மைத்தே—வச்சிரத்தாற்
குன்றெறிந்தானும்பரவுங்கோயிலான்பாரதப்போர்க்
கன்றெறிந்தவன்சக்கரம். (127)

இது வினைத்தன்மை. ஆகம் - மார்பு. திறத்தல் - பிளத்தல். பச்சிரத்தம் - குளிர்ந்த ரத்தம். அன்று - முற்காலத்து. குவ் வுருபு மயக்கம். திணை - வாகை. துறை - திகிரிவென்றி.

பூரித்துடலம்புளகித்திடப்புலமை
சீரித்துயிர்தளிர்ப்பச்சேர்ந்துருகும்—பாரித்த
முத்தமிழ்மாறன்ஞானமுத்திரைக்கைகண்டுதொழு
முத்தமராய்வாழ்வாருளம். (128)

இது பண்புத்தன்மை. பூரித்தல்—தடித்தல். புளகித்தல்-உரோமஞ்சிலிர்த்தல். புலமை - அறிவின்றன்மை. சீரித்தல் - இடைவிடாமற் பழகுதல். தளிர்த்தல் - தழைத்தல். சேர்ந்துருகுதல் - பரத்துவ சொரூபத்தை யோகித்துக் குழைதல். பாரித்தல் - விரித்துரைத்தல். முத்தமிழ்—சித் தசித் தீச்சுர மூன்றுங் கூறுந் தமிழ்; அது திருவாய்மொழி. உளம் - ஆன்மஞானம். முத்தமிழ்மாறன் ஞானமுத்திரைத் திருக்கையைக் கண்ணினாற் கண்டுங் கையினாற் றொழுது முத்தமராய் வாழ்வாரது ஆன்மஞானமான துடலந் தடித் துரோமஞ் சிலிர்ப்பப் பரத்துவஞானத்தோடும் பயின்ற பரத்துவசொரூபத்தை யோகித்துக் குழையு மெனக் கூட்டுக. திணை - பாடாண். துறை — பழிச்சினர்ப் பரவல்.

உற்றபரமேட்டிமுதலோங்கியவைம்பூதநிலை
பெற்றுளதாய்ச்சோதிப்பிழம்பதாம்—பற்றிலர்பே
ரானந்தமெய்துவதாமாதியிடையென்பவுடன்
றுனந்தமில்லான்றலம். (129)

இஃது இடத்தன்மை. பரமேட்டி முதலாய வைம்பூதமாவன:— பரமேட்டி, புமான், விச்சுவம், நிவிர்த்தி, சருவன். இது பரமபதமாகிய இடத்தன்மை. திணை - பாடாண்பொதுவியல். துறை—புலவரேத்தும் புத்தேணாடுவாழ்த்து. புலவர் - நித்தியசூரியர்.

ஏழாவரணமிசைந்தீர்ந்தண்புனற்பொன்னி
சூழாமணிமாடஞ்சூழ்ந்துளதா—வாழ்மறையோர்
வேதவொலியும்விழாவொலியுங்கூர்தகைத்தா
நாதனரங்கநகர். (130)

இதுவும் இடத்தன்மை. திணை - இதுவுமது. துறை - நகர் வாழ்த்து.

தேவும்புவனமூந்திரண்டமன்னுயிர்
யாவும்யாவருமிறந்தொடுங்கியஞான்
றொருபெருந்திருமாலுந்தியங்கமலத்
தருள்பகிரண்டகோடிகளனுமவற்று
ளொன்றயனுலகாதியாயவீரேழி
னயனிலைமேருநடுக்கொள்பூலோக
நவகண்டமதாநாவலந்தீவொடு
மூவொன்றியநீருடைக்கருங்கடலொடு
மேற்பெருந்தீவுமேற்பெருங்கடலும்
வாழ்வுடைத்தாகியும்வானவர்வைகு
மேமபூதலமிடையிடுதிகிரிக்
காமர்மால்வரைகடந்தருள்ளிருளா
யண்டபித்தியினகத்தண்டகோளகைக்கீழ்
மண்டுமொழ்புனற்குமேல்வடக்கொடுகுணக்கெதி
ரைம்பதுகோடியோசனைத்தெனவளவை
யும்பரோடிம்பருமுணர்வுறவுணர்வான்

றீதறுபான்மையிற்றெருட்டும்
போதமுற்றோங்கியபுராணசித்தமதே. (131)

இதுவும் இடத்தன்மை. திணை - இதுவுமது. துறை - போண்ட வாழ்த்து. இதனுள், தே என்றது அன்னியதெய்வங்கள். புவனம்— இருநூற்றொருபத்துநாலு புவனமும். யாவும் யாவரும் — அஃறிணை களும் உயர்திணைகளும். மேருநடிக்கொள்பூலோகம் - மேருவைத் தனது மத்திமத்தே தாங்கிக்கொண்ட பூலோகம். வானவர் வைகு மேமபூதல மிடையிடுகிரிக் காமர்மால்வரை - கடவுளர் அரமகளிரோடு மின்ப மெய்திவைகும் ஏமபூதலத்தை நல்லதண்ணீர்க்கடற்குந் தனக்கும் நடு வாகவைத்த சக்கரவாளகிரி யென்னு மழகிய பெரிய மலை. மண்டுமாழ் புனல் - கெர்ப்போதகம். வடக்கொடு குணக்கெதிர் என்பது வட திசைக்குங் கீழ்த்திசைக்கு மவற்றிற் கெதிரான தென்றிசைக்கும் மேற் றிசைக்கு மென்பதாம். புராணசித்தம் - ஆகுபெயர். ஒழிந்த அகலமு முரையிற்கொள்க. பா - நேரிசையாசிரியம். எனவு மென்னு மும்மை யெச்சவும்மையாதலாற் காலத்தன்மையு முள.

நித்தமாய்மூன்றுநெறித்தாயிலவமுதல்
வைத்தபான்மைக்குரித்தாமாண்பிற்றே—பத்திகிரிச்
செங்கண்மாலுந்தியின்மேற்செங்கமலத்தோன்முதலா
மங்கண்ஞாலம்புகழ்காலம். (132)

இது காலத்தன்மை. இதனுள் மூன்றுநெறியென்றது இறப் பெதிர்வு நிகழ்வு. இலவ முதலியனவும் முறையே பிரமகற்பமீறாக வுணர்ந்துகொள்க. திணை - பொதுவியல். துறை - பருவவாழ்த்து. (சு)

தன்மையலங்காரம் முற்றும்.

உ-வது உவமையலங்காரம்.

92. உவமையின்வகையேயுணருங்காலை
வினைபயனுறுப்புருவென்றநான்கினுந்
தமிதமிநிகழ்ந்துந்தப்மின்விரவியுங்
காதல்சிறப்பேநலன்வலியுடனிழி
போதியவைந்துமுறுநிலைக்களனு
யிருதிணையைம்பாலிவற்றொடுமயங்கியு
முதலொடுசினைகளின்முறைமையிற்பிறழ்ந்து

முதல்சினைவினைகுணமின் றியுமுயர்ந் தும்
பெருமையுஞ்சிறுமையும்பெற் றியிற்சிறந் து
மெண்மெய்ப்பாட்டினெழில்பெறமரீஇ
யகத்தினும்புறத்தினுமமர் தருநெறித்தா
யுரனுடையுரவோருளங்கொளமுதனூல்
வரன்முறைபுணர்க்குமாண்பிற்றாகும்.

(எ-ன்) வைத்தமுறையானே உவமையென்னு மலங்காரத்தினது பொதுவிலக்கண முணர்—ற்று.

(இ-ள்) உவமையென்னு மலங்காரத்தினது கூறுபாட்டை யாராயுமிடத்து வினையும் பயனு முறுப்பு முருவு மென்னு நான்கும் காரணமாகத் தோன்றுவனவாகியும், அங்ஙனந் தோன்றுவன வொருபொருளோடொருபொரு ளுவமஞ்செய்யும்வழி யொன்றேயன்றி யிரண்டு மூன்று விரவுவனவாகியும், காதலுஞ் சிறப்பு நலனும் வலியு மவற்றோடுங் கிழக்கிடும்பொருளுமாகிய வைந்துந் தமக்கு நிலைக்களனாகியும், உயர்திணைக் குயர்திணையு முயர்திணைக் கஃறிணையு மஃறிணைக் கஃறிணையு மஃறிணைக் குயர்திணையு மாண்பாற் காண்பாலு மாண்பாற்குப் பெண்பாலும் பெண்பாற்குப் பெண்பாலும் பெண்பாற் காண்பாலும் ஒருமைப்பாற் கொருமைப்பாலு மொருமைப்பாற்குப் பன்மைப்பாலும் பன்மைப்பாற்குப் பன்மைப்பாலும் பன்மைப்பாற் கொருமைப்பாலு மயங்காதும் மயங்கியும், முதற்கு முதலும் முதற்குச் சினையும் சினைக்குச் சினையுஞ் சினைக்கு முதலுமாகப் பிறழாதும் பிறழ்ந்தும், முதலுஞ் சினையும் வினையுங் குணனு மின்றியு முவமங் கூறுவனவாகியும், பொருளினு முவம முயர்ந்து மிறப்பவுயர்வு மிறப்பவிழிபு முவமிக்குங்கா லின்னாவாகச் செய்யாது கேட்போர் மனங்கொள்ளும்படி சிறப்பிற்றீராவாகிச் சேர்தலியல்புசிறந்தும், எட்டு மெய்ப்பாட்டினோடுங் கூடி யழகுபெறு நிலைமைத்தாகி, அகப்பொருளினும் புறப்பொருளினுஞ் சென்று பொருந்துநெறியை யுடைத்தாய்க் கற்றுவல்ல அறிவுடையோ ரறிவிற்குப் பொருந்த முதனூல் வரலாற்றுமுறைமையிற் றிரியாது சேர்க்கப்பெறும் பெருமையை யுடைத்தென்றவாறு.

இதனுள் நான்கினுமென்ற வும்மை யெச்சவும்மைபாகலா னவை நான்குமே காரணமாகியவற்றோடுஞ் சொற்பொருள் காரணமாகவும்

உவமை பிறக்குமென்றவாறு. அவை மேற் கூறப்படும். மயங்கியும் பிறழ்ந்து மென்பது எதிரதுபோற்றுந் தந்திரவுத்தி. இவற்றிற்கெல்லாம் உதாரணம் உரைநடையானுஞ் செய்யுணடையானும் வருமாறு:—

புலியன்ன மறவனென்பது வினையுவமம். 'மாரியன்ன வண்மை' யென்பது பயனுவமம். 'துடியன்ன விடை'யென்பது உறுப்புவமம். 'செவ்வானன்ன மேனி'யென்பது உருவுவமம். 'செவ்வானன்னமேனி' யென்பது வண்ணமொன்றுமே பற்றி யுவமஞ்சென்றது. "ஊர்ந்ததேறே சேர்ந்தோளுமையே, செவ்வானன்னமேனியவ்வா, னிலங்குபிறையன்ன விலங்குவால்வையெயிற்" றென்பது வண்ணத்தோடு வடிவும் பற்றி யுவமஞ் சென்றது.

வள்ளைக்கொடிமிசைபாய்மைக்கயல்போல்வார்குழையி
னுள்புக்குலாவருமையுண்கண்ணாய்—புள்ளார்
வகுளாம்புயன்வரைமேல்வான்பிறைக்குன்செங்கை
முகுளாதநென்னோமொழி. (133)

இதனுள் வினையு முருவு முறுப்புமாகிய மூன்றுவமையு மொரு பொருட்கண்ணே பிறிதொருபொருளுங்கூடி வந்தவாறு காண்க. இவை விரவுவமை. பகுதி - நாணநாடல். துறை - பிறைதொழூகென்றல்.

"பாவையன்ன பலராய மாண்கவின்" எ-து மகள்கட்சென்ற காதலுவமைக்கு நிலைக்களனாயிற்று. 'என்னனை' யென்பது மது. "முரசமுழங்குதானை மூவருங்கூடி, யாசவையிருந்த தோற்றம்போலப், பாடல் பற்றிய பயனுடையெழாஅற், கோடியர்தலைவகொண்டதறிந" எ - து சிறப்பினாற்பெற்ற வுவமமாதலிற் சிறப்புநிலைக்களனாயிற்று. உலகத்து னியல்புவகையானன்றி விகாரவகையாற் பெறுஞ் சிறப்பு 'ஓவத்தன்ன விடனுடைவரைப்பின்' என்புழி அந்நகரின் செயற்கைநலந் தோன்றக் கூறினமையின் நல னிலைக்களனாயிற்று. நலனென்பது அழகு. 'அரிமா வன்னவணங்குடைத் துப்பிற், திருமாவளவன்றெவ்வர்க்''கென ஒருவன் வலிநிலைக்களனாயிற்று. "அராவுநுங்குமதியி னுதலொளிகரப்ப"என்றது ஒன்றினிழிபுதோன்ற வுவமித்தலி னிழிபுநிலைக்களனாயிற்று.

குமானனையா னுங்குறமகளன் றாரு
மமார்குழாமெனக்கூண்டன்பர்—தமாணங்கே
நின்றிறைஞ்சுமாயோனைநின்றவூரங்கிதன்முன்
சென்றிறைஞ்சுவார்நீதிரும்பு. (134)

இதனு ளுயர்திணைக் குயர்திணையும் ஒருமைப்பாற் கொருமைப் பாலும் பன்மைப்பாற்குப் பன்மைப்பாலும் ஆண்பாலுக் காண்பாலும் பெண்பாற்குப் பெண்பாலும் வந்து திணையும் பாலு மயங்கா துவமை யாயிற்று. பகுதி - உடன்போக்கு. துறை - இயைபெடுத்துரைத்தல். நகரடைந்தமைகூறலுமாம்.

"மகிழ்வார்க்கு மல்லார்க்குந், தாயாகித் தலையளிக்குந் தண்டுறை யூரனீ," "கலங்கவிழ்ந்தநாய்கன்போற் களைதுணைபிறிதின்றிப், புலம்பு மென் னிலைகண்டும் போகலனே யென்றியால்" என்பனவிவை யாண் பாற்குப் பெண்பாலும் பெண்பாற் காண்பாலு மயங்கிவந் துவமை யாயிற்று.

அரிக்குழாமன்னவடலாக்கர்வாவும்
பரிக்குழாந்தேர்க்குழாம்பாயுங்—கரிக்குழா
மோர்வாளிபட்டுருள்வானெங்குசிலைக்கால்வளைகைக்
கார்வானமாலிமையோர்கண். (135)

எனவும்,

பிறைபுரைவெண்கோட்டுப்பிணர்த்தடக்கைவேழத்
திறைபுரந்தபொன்னகருக்கிப்பா—ருறைதருவான்
பூணவாவற்றெனமால்பொற்புருடையாட்கிரங்கும்
வேணவாநெஞ்சேவிடு. (136)

எனவும், வரு மிவற்றுள் உயர்திணையாண்பாற்பன்மைக் கஃறிணையாண் பாற்பன்மையும் அஃறிணைப் பன்மைச்சினைக் குயர்திணை யொருமை முதலும் மயங்கிவந் துவமையாயிற்று. வேழத்தையுடையவிறை - ஈண் டிந்திரன். அற்றென - அதுபோலுமென. பூணவா - மனத்துட்பூண்ட ஆசை. வேணவா—வேட்கைப்பெருக்கம். இவ் விரண்டினுள் முன்னது திணை - வாகைப்பொதுவியல். துறை - வில்வென்றி; அல்லது திணை— பாடாண். துறை - கடவுள்வாழ்த்துமாம். பின்னது பகுதி—இரவுக்குறி. துறை - அருமைகேட்டழிதல்.

முத்தநகைவெம்முலைபோன்மலைகொடியே
யெய்த்தவிடைநுதலுக்கேந்திழா—யொத்ததுதா
னேற்றுருவங்கொண்டநிலாத்தளிரேகூற்றுருவம்
வேற்றுருவங்கொண்டனையாண்மெய். (137)

இதனுள், பன்மைச்சினைக்குப் பன்மைச்சினையும், பன்மைச்சினைக் கொருமைமுதலும், ஒருமைச்சினைக் கொருமைமுதலும், ஒருமைச் சினைக்கு ஒருமைச்சினையும், பெண்பாற் காண்பாலும் மயங்காதும் மயங்கியும்வந் துவமையாயிற்று. இதனுள் முத்தமும் நகையும் முலையும் சாதியேகவசனம். பகுதி - சேட்படை. துறை - தலைவன் பாங்கிக் கவயங்கூறல்.

'கருஞாயிறன்னான்,' 'விசும்புதோனுரிப்பனபோல,' 'மலைநடந்தனைய,' 'அமிர்துபுளித்தாங்கு' இவை முதலுஞ் சினையும் வினையுங் குணமு மில்லாதன வுவமையாயின.

" கடல்கண்டன்னகண்ணகன்பரப்பின்," "மாரியன்னவண்மைத், தேர்வேளாயைக்காணிய," "தெள்ளமிர்தென்னத்திருந்தியதேமொழி," " ஏறுபோற்பீடுநடை " என்பன உவமையினதுயர்ச்சியாற் பொருட் குயர்ச்சியாயின.

"அவாப்போலகன்ற வல்குன்மேற் சான்றோர், குசாப்போல வுண்டே மருங்கு" லென்பன கழியபெரியவாயினுங் கழியசிறியவாயினுஞ் சிறப் பிற்றீராவுவமையாயின. சிறப்பிற்றீர்வனவு முவமவொழிபிற் கூறுப. எண்மெய்ப்பாட்டினும் அகத்தினும் புறத்தினும் வருவன முந்து நூல்களுட் கண்டுகொள்க.

அஃதாக; இதன் முதனூல்செய்த தெண்டியாசிரியர் பண்புமுத லாகக் காரண மூன்றென்ப துணர்ந்து மிந்நூலுடையா ருறுப்பினைக் கூட்டிக் காரண நாலென்பதூஉம் நிலைக்களனைந்தென்பதூஉம் மிகைபடக் கூறலென்னுங் குற்றமாமாலோவெனின்? ஆகாது; என்னை? தெண்டி யாசிரியர் "வடிவி னளவின் வண்ணத்தின் வருஉ" மென்னுஞ் சூத்திர நோக்கி வடிவும் பண்பினுளடங்குமென் றுட்கொண்டாரேனு மிந் நூலுடையார், உற்றுணரும் பண்பும் கட்புலனும்பண்பு மெனப் பண்பினை வேறுபடக் கொண்டார், அங்ஙனங்கோடல் வடிவுயற்றியபண்பு இருளின்

கண்ணும் உற்றுணரப்படும்; வண்ணமாகிய கட்புலனும் பண்பு அவ்வா றுணரப்படாதாதலால் வடிவினைக்கூட்டி நாலென்றார். அன்றியும், "வினை பய மெய்யுரு வென்ற நான்கே, வகைபெற வந்த வுவமைத் தோற்றம்" எனவு மிக்கருத்தேபற்றி முதனூல்செய்த ஒல்காப்பெருமைத் தொல் காப்பியனாருங் கூறினார்; இதற் கதுவு முந்து நூலாகலின் அவர்கருத்தே யிந்நூலுடையாரும் உட்கொண்டாரென வுணர்க.

அன்றியும், "விரவியும் வரூஉ மரபின வென்ப," "சிறப்பே நலனே காதல் வலியோ, டந்நாற் சொல்லு நிலைக்கள னென்ப," "கிழக்கிடும் பொருளோ டைந்து மாகும்," "முதலுஞ்சினையுமென் றாயிரு பொருட்கு, நுதலிய மரபி னுரியவை யுரிய," "உயர்ந்ததன் மேற்றே யுள்ளுங் காலை," "பெருமையுஞ் சிறுமையுஞ் சிறப்பிற் றீராக், குறிப்பின் வரூஉ நெறிப்பா டுடைய," "பெருமையுஞ் சிறுமையு மெய்ப்பா டெட்டன், வழிமருங் கறியத் தோன்று மென்ப" எனவுங் கூறிய சூத்திரங்களானு மேனையவு முணர்க. (எ)

93. அதுவே,

நிறைவினுங்குறைவினுநிகழ்த்துதனெறித்தாய்த்
துறைதொறும்பழமையும்புதுமையுந்தோய்ந்து
விரிவினுந்தொகையினும்விழுமிதினடைபெறும்.

(என்) இதுவும் அவ் வுவமைக்காவதோர் பொதுவிலக்கண முணர்—ற்று.

(இ-ள்) அதுவே—அவ்வகைப்பட்ட வுவமை யென்னுமது, நிறை வுவமை குறைவுவமை யெனப் புலவராற் கூறுதலைத் தனக் இலக்கண நெறியாகவுடைத்தாய் வினைமுதலாய் நால்வகைப்பட்ட இடந்தோறு முந்து நூற்புலவராற் கூறப்பட்ட தொன்மைத்தாகியும், அதன்பின்னர் அவ்வவகாலத்துப் புலவராற் புதுவதுபுதுவதாகக் கூறப்பட்டுவரு வனவுமாகப் பொருத்தமுற்று விரியுவமை தொகையுவமை யென இரு திறத்தினும் விழுமிதாக நடைபெறு மென்றவாறு.

விழுமிதினென்று சிறப்பித்தவதனால் இவைநான்கும் இனிமேல் வரும் விரியுவமையனைத்திற்கும் பொதுவாமெனவும், இன்னு மவ்விலே சானே அவற்றுள் விரியுவமையுந் தொகையுவமையும் வினைமுதலிய

நான்கினோடு மெட்டாமெனவுங் கொள்க; என்னை? "நாலிரண் டாகும் பாலுமா ருண்டே" என்றாராகலின். (அ)

94. அவற்றுள்,

முக்கியப்பொருட்டிறமுற்றுதனிறைவே.

(எ-ன்) நிறைவுவமையின திலக்கண முணர்-ற்று.

(இ-ள்) உவமேயத்தி னுன்குகூறுபாடு முவமையினு முற்றக் காண்பன நிறைவுவமையா மென்றவாறு.

ஆராவமுதமளித்ததிருப்பாற்கடலு
ணாராயணனுகணைமீது —நேரிழா
யெப்படியேகண்வளராநின்றானெனுமரங்கத்
தப்படியேகண்வளர்வானும். (138)

இது நிறைவுவமை. இதனுள், திருப்பாற்கடனாத னுவமை. ஆரியரிதனைப் பூரணவுவமை யென்ப. அங்ஙனமாதல், அவன் கண்வளரா நின்றதுபோல விவனுங் கண்வளராநின்றானென வினை யுவமையும், அவன் றிருமேனி யெப்படியேயிருக்குமென்னும் அப்படியே யிவன் றிருமேனியுமிருக்கு மெனவே வடிவினோடு காந்தியாகிய பண்பும், அவனைச் சேவிப்பார்க் கச்சேவை காரணமாக முத்தியாகியகாரியம் பயக்குமது போல விவனைச் சேவிப்பார்க்கு முத்தியாகியகாரியம் பயக்குமெனப் பயவுவமையும் உவமையாகிய திருப்பாற்கடலிடத்தும் வினை முதலிய நான்கும் பூரணமாகி யுவமை யுயர்ந்தபடியுங் காண்க. எப்படியே கண் வளராநின்றானெனு மென்பது பிரமன்முதலாயினார்புராணங்க ளெப்படியேகூறுமென்பதாம். பயவுவமையென்பது ஒன்றன்றொழி லேதுவாகப் பிறக்குங் காரியம். அஃ தெச்சமாயிற்று. நேரிழா யென்பது மகடூஉமுன்னிலை. இரண்டாற்றிடையரங்கத்துத் திருமதிட்குப் பாற் கடனள்ளிடை யாவரண முவமை. திணை-பாடாண். துறை-கண்படை வாழ்த்து.

பனிமதிக்கிரணம்வியன்களநடுவட்
பாந்துடல்கதுவுபோர்ப்பாய்மா
முனியுறப்பொழியுமிருண்மதமுடுக்க
முரணிழந்திரியல்போம்வேடர்

குனிதிரைத்திருப்பாற்கடலினைக்கடைநாட்
கொதித்தெழுங்கருவிடந்தொடரத்
தனிதனியுலக்கற்றறிவிழந்திரிந்த
தலைமைவானவரையொத்தனரே. (139)

இதுவுமது. இதனுள், திருப்பாற்கடலீன்ற கருவிடந் தொடர்ந்தது வெண்ணிலவு வியன்களநடுவட் பாந் துடல் கதுவிய போர்ப் பாய்மாப் பொழியு மிருண்மத முடுக்கினதற் குவமை. முரணிழந் திரியல்போய்வேடரென்பது தனித்தனி யொருவர்க்கொருவ ருதவாது ஓடின தலைமைவானவரை யொத்தன ரென்றவாறு.

இருண்மத முடுக்கவெனவே பண்பும் வடிவும் வினையுவமையும், அறிவிழந்தெனவே அதனலாய காரியமாதலாற் பயனுவமையுமாகிப் பூரணவுவமையாயவாறு காண்க. (கூ)

95. ஒன்றுதியசிலவொப்பது குறைவே.

(எ-ன்) குறைவுவமையாமா றுணர்-ற்று.

(இ-ள்) உவமேயத்தின்வினை முதலிய கூறுபாடு நான்கும் ஒவ்வாது அவற்றுள் ஒன்றுமுதன் மூன்றொப்பது குறைவுவமையா மென்றவாறு.

இஃது "ஒரீஇக் கூறலு மரீஇய பண்பே" என்பதன்பாற்படும்.

வாவித்திருக்குருகூர்மாறநின்வண்டமிழென்
றாவிற்கினிமைநயப்பதாற்—றேவர்
மருந்துநிகரென்றேமதித்துரைப்பன்முற்றப்
பொருந்துவமற்றின்மையினிப்போது. (140)

இஃது ஒன்றொத்த குறைவுவமை.

வெள்ளைப்பிறைக்கோட்டுவெங்கரியைவென்றவிரற்
பிள்ளைப்பெருமான்றென்பேரைவாழ்—வள்ளைக்
குழையாரைத்தோய்ந்தகன்றகொற்றவனைக்காய்ந்த
பிழையார்பொறுப்பார்பிறர். (141)

இஃது இரண்டுபெற்றவுவமை.

பாயுங்கருங்கயல்போற்பாங்கியிவளென்றுமருங்
கேயும்படிதாவினதியற்பாத்—தோயும்
புவிநாவலர்புகழ்மால்புட்குழியாள்செவ்விக்
கவினனைத்துலவுண்கண். (142)

இது தொழில் பண்பு வடிவு மூன்றும்பெற் றொன்று குறைந்த வுவமை.

"அகர முதல வெழுத்தெல்லா மாதி, பகவன் முதற்றேயுலகு" "மாதர் முகம்போ லொளிவிட வல்லையேற், காதலை வாழி மதி" என்பனவும் எடுத்துக்காட்டுவமை எனவும், ஒன்றொத்த குறைவுவமை எனவும் படும்.

செய்யகமலமுகஞ்செங்கனிவாய்முத்தநகை
வெய்யகளபமுலைமின்மருங்குன்—மொய்யிழாய்
பையரவப்பாயலான்பாடகத்தான்மால்வரைவாழ்
தையலடிமாந்தளிர். (143)

இதுவுமது. பகுதி - சேட்படை. துறை - தலைவன்பாங்கிக் கவயவங்கூறல். வடநூலார் உலுத்தவுவமையென்பது மிது.

முந்து நூற் புலவராற் கூறப்பட்டுத் தொன்றுதொட்டுவரு முவமையாவன:—'புலிபோற்பாயுமறவன்,' 'மாரியன்னவண்மை,' 'துடிபோற் சுருங்கு மருங்குல்,' 'பவளம்போன்ற செவ்வாய்,' 'குறைபடுமதியந்தேயக்குறுமுயறேய்வதேபோல்,' 'நஞ்சமமிர்தமுமேபோல் குணத்த,' 'கருமணியம்பாலகத்துப்பதித்தன்ன,' 'பொருகயற்கண்'என்பன முதலியன.

அதன்பின்ன ராகுங்காலங்கடோறும் புலவராற் புதுவதுபுதுவதாகப் புணர்த்தவற்றுட் சில வருமாறு:—

கோழரையகாஞ்சிரைதாம்பழுத்தருகேநிற்பவற்றிற்
குறுகாதாங்குக்
காழிலவாங்கொழுங்கதலிக்கனிகளைச்சேட்சென்றருந்துங்
கவிகண்மார்க்க
மூழிலவாய்ப்படைத்தபொருள்பிறர்க்குதவாவுலுத்தரைநீத்
துசிதமான
வாழ்வுடையோர்பொன்மனைச்சென்றமிர்தருந்திப்பசிதணிவார்
மார்க்கமானும். (144)

வாசமொருசிறிதின்றாயிணரூழ்த்தசெம்மலர்தம்
மருங்காய்நிற்பப்
பூசல்வரிவண்டினங்கணீளிடைப்போய்வாவிதாம்
பூந்தேன்மாந்த
லாசறக்கற்றுணர்ந்தறியாரவைக்களநீத்தேசெலச்சொல்
பவராய்நுண்ணூல்
காசறக்கற்றவர்கழகத்தடைந்து நலனுணர்பவர்தங்
காட்சிமானும். (145)

உற்றவயக்களிற்றினொடும்பிடியினையாங்கொருபாந்த
ளொருவாய்க்கொள்ளக்
கற்றது கண்டிருதலைப்புளவற்றிருகைகவர்ந்தெடுப்பக்
கௌவுகாலைப்
பற்குலமுக்கிடருழத்தறீவினைவந்தடியிடுநாட்
பசையதாகப்
பெற்றபொருளினைப்பேணி முதலுமிழந்திடருறுவோர்
பெற்றிமானும். (146)

உச்சவான்மலைச்சிகரத்து றுகொடிகள்படர்பாங்க
ருடையவாகும்
பச்சைவேய்ங்கழைத்தலையிற்சுழல்வனவாய்த்தோகைநடம்
பயிலுநீர்மை
மொய்ச்சுலாங்குழற்கழைக்காரிகைபாசம்பூண்டகழை
முடிமேனின்றே
விச்சைமேதகப்பவுரிகாட்டுவதாமெனக்கவினும்
விளம்பின்மன்னே. (147)

காவின்மேற்படுபலவின்கனிகடுவன்கொடுசினைதாழ்
காமர்வல்லி
மாவின்மேற்படர்ந்ததன்மேன்மந்திகடாம்வயிற்றிடையே
மகவைத்தாங்கித்
தாவினுற்றவருடைத்தாமெனவருவதொடுபோகுந்
தன்மைகூத்த
ரோவில்வான்கழைக்கயிற்றின் முழவுதழீஇயெதிர்நடப்ப
தொப்பதாமே. (148)

வெதிரெதிர்சென்றேபொரவிண்டுகுதழலவ்வெதிரினையும்
வெண்ணீறாக்கி
யெதிர்பொருதற்றிறனறியாச்சந்தனத்தேம்பொதும்பரையு
மெரித்தமார்க்கம்
பிதிரெனவாழ்ந்திடுசிறியார்விளைத்தசினமவர்திருவின்
பெற்றிதேய்த்துச்
சதிருடன்வாழ்ந்திடுதலைமைத்தமர்திருவுந்தொலைத்திடுமத்
தன்மைமானும். (149)

வீங்குபாரைக்கழைகண்முளிந்தவாயுயிர்த்ததழன்
மிறைசெய்காலை
யோங்குபசுங்கழைக்குலங்கண்மழைக்குலங்கிண்டுகுபுனலா
லொழித்தபான்மை
தீங்குவிளைத்திடுமுதுவருறமிடரையக்குலத்துட்
சிறுவர்மன்னர்
பாங்குபடைத்துளகருணைமுகத்தவராற்றணித்தருளப்
பான்மைமானும். (150)

கருநிறப்பரூஉக்காழ்க்களங்கனிவகுளக்காமர்தீங்
கனிகண்மாங்கனிகள்
பெருமிதப்பலவின்கனிசுவைத்ததன்பின்
பீடுலாங்காழிலாக்கனியை
யொருமுகப்படவுண்சுகமுறுசுகமாங்
குபயநூல்களைமுறைமுறையே
குருமுகத்துணர்ந்தபின்னர்நான்மறைதேர்
குறிப்பினர்சுகம்பொருவருமே (151)

இவை எட்டும் திருகாமான்மியத்திற் கந்தமாதனச் சருக்கத்திற் பாட்டு. இவற்றுள் நால்வகைக்கும் புதுவதா முவமை புணர்த்தவாறு காண்க. (கo)

96. உவமையுமுருபுமேதுவும்பொருளுந்
தவலருஞ்சிறப்பிற்றாம்விரிவணவிரி.

(எ-ன்) வைத்தமுறையானே விரியுவமைக் கிலக்கண முணர்-ற்று

(இ-ள்) உவமையும், உவமவுருபும், வினை பய முறுப் புருவென்ற நான்கினு ளொன்றும், உவமேயமும் என்னு நான்கும் ஒன்றற் குவமங் கூறுமிடத்துத் தொகாது விரிவன விரியுவமையா மென்றவாறு.

தவலருஞ் சிறப்பிற் றும்விரிவன வென்றதனுற் பெயரு முறையுந் தொகையுஞ் சிதையாமல் வருதல் சிறந்ததென் றுணர்க. அவையாவன:— பவளம்போலச் செவ்வா யென்புழி, பவளம் உவமையெனவும் உவமான மெனவும் படும். போலவென்பது உவமவுருபு. செம்மை யென்பது குணமாகியவேது. வாயென்றது உவமேயமெனப்படும். இப்பெயர்— பெயர், இம்முறை முறை, இத்தொகை தொகை யெனக்கொள்க.

கருங்குவளைபோற்கருங்கண்கன்னல்போலின்சொற்
சுருங்குதுடிபோற்சுருங்கு—மருங்குல்
பிடிபோலியங்குநடைப்பெய்வளையைக்கண்டாற்
குடிபோங்குடிபோங்குணம். (152)

இதனுள் உவமைமுதலிய நான்கும் முறையே வந்தவாறு காண்க. அன்றியும், வினை பய முறுப் புரு வென்ற நான்குவமையு மிதனகத்து வந்தவாறுங் கண்டுகொள்க. அடுக்குத் துணிவின்மேற்று. குணம் - அறிவு. குடிபோ மென்றல் தன்னிலையி னீங்குமென்றல். பகுதி—பாங்கற் கூட்டம். துறை - தலைவன்வியத்தல்.

இலவிதழ்போற்செவ்வாயியற்றமிழ்போலின்சொல்
கலகநமன்போலவடுங்கண்க—டிலகப்
பிறைபோல்வளைநுதலிப்பெண்ணமிர்தைக்கண்டா
லறைபோமறைபோமறிவு. (153)

இதுவுமது. இதனுள்ளும் நான்குவமையும் வந்தவாறுகாண்க. துறை - இதுவுமது. இதன்கண் ணடுக்குந் துணிவின்மேற்று. அறை போதல் - கீழறுத்தல். (கக)

97. உரைத்தநான்கினுளொன்றிரண்டிடையன
யாப்பினுளிடைப்பட்டெஞ்சலுந்தொகையே.

(இ-ள்) வினைத்தொகையுவமையிலக்கணமுணர்—ற்று.

(இ-ள்) விரியுவமைக் குவமைமுதலாகச் சொல்லப்பட்ட நான்கனு ளிடைப்பட்டன விரண்டனு ளொன்றேயாயினும் இரண்டேயாயினும் யாப்பினிடத் திடைப்பட்டுத்தொகுவது தொகையுவமையாமென்றவாறு.

இதனுள், தொகையென்றதல்லது உவமையென்பதுபெற்ற தி யாதோவெனின், விரியுவமைக்கு முதலே யுரைத்த சூத்திரத்தாற் பெற்ற தெனக் கொள்க.

அம்பவளச்செவ்வாயுமாரநிரைவெண்ணகையும்
பைம்பொனசலப்பணைமுலையின்—விம்பமுடன்
கண்டுகளித்தேந்திருமால்காட்கரையார்கன்னலின்சொல்
லுண்டுகளிப்புற்றிலமன்னோ. (154)

இஃ துவமவுருபொன்று மிடையிற் றொக்க தொகையுவமை; இத னுள் அம்பவளச்செவ்வாய் முதலியவற்றிடையிற் போலவென்னு முவம வுருபு தொக்கதனாலறிக. நெஞ்சமே யென்னு முன்னிலையு மெழுவாயு மெச்சம். மன்னும் ஓவும் அசை. பகுதி - இயற்கை. துறை - இளவி வேட்டல்.

நீலம்போற்கண்ணுநிறைமதியம்போன்முகமும்
வாலமதிபோனுதலும்வண்டிமிர்பூங்—கோலத்
தொடைத்துளபமாலைத்தொழுமாறன்வெற்பிற்
படைத்துளதேன்மன்னுயிர்நண்பா. (155)

இஃ துவமவேதுவென்பதொன் றிடையிற்றொக்க தொகையுவமை.

(இ-ள்) கருங்குவளைபோலக் கரியகண்ணிணையும், எல்லாக் கலைகளு நிரம்பின மதிபோன்ற செம்முகத்தினையும், பிறைபோல வளைந்த நுதலினையும் வண்டுகளாரவாரிக்கு மழகிய தொடையாகிய துளப மாலிகையையுடைய மாயோனைத் தொழு மாறன்றுடரிவெற்பிற் றனக் குறிப்பாகப் பெற்றுநிற்ப நீகண்டதுளதே லஃதென் னிலைபெற்ற வுயிரா மென்றவாறு.

இதனுள் நிற்ப நீகண்டது என்னுஞ் சொற்களையும் அஃதென் னென்னுஞ் சொற்களையு மெச்சமாக நின்றனவாக்கி விரித்துரைக்க. பகுதி—பாங்கற் கூட்டம். துறை—அவ்விடத்தேகல்.

அஃதாக; இதன முதனூல்செய்த தண்டியாசிரியர் வினை பய முதலிய வேறுக்கடொருவதே தொகையுவமையென நோக்கவும்

இந் நூ லு டை ய ா ருவமவுருபு தொகுவதுந் தொகையுவமையென்ற தென்னையோவெனின், அஃதே; நன்றுசொன்னாய்! இவையிரண்டிற்கும் முதனூலாகிய தொல்காப்பியத்துள் "உவமைத் தொகையே யுவமவியல" என்பதனானும், அதன்பின்னர் நேமிநாதர் பவணந்தி முதலியோரும் "உவமவுருபிலதுவமத்தொகையே" என்பதனாலுங் கூறப்பட்டது.

பவளவாய்முத்தநகைப்பைங்கொடியீரூழி
யவளவாய்க்கங்குனெடிதாமோ — துவளருவிச்
சோலைமலையார்துணைத்தோளிற்பைந்துளப
மாலைமலையாமயிற்கு. (156)

என்ப திரண் டிடையிற் றொக்க தொகையுவமை; என்னை? பவளம் போலச் சிவந்த வாயினையு முத்துப்போல வெளுத்த நகையினையுமென்னு முவமவுருபும் பண்பு மிடையிற் றொக்கதா லென்றுணர்க. திணை—பெருந் திணை. துறை—கண்டுகைசோர்தல்.

கறைவேல்விழியிலவிதழிதழ்
நறைநாண்மலரஃதானனம்
புருவஞ்சிலையுருவம்புய
லுநவம்புரிகுழலெனுமது
பொன்னங்கிரிகொங்கைத்துணை
மின்னென்றுரையிடைகண்டிலன்
எனவாங்குக்
கற்றறிவுடையவென்னிறையினைக்கலந்து
ணற்றிருவுறைவிடநண்பா
சொற்றமிழ்மாறன்றடரிவண்பொழிலே. (157)

இதுவு மிரண்டு தொக்க தொகையுவமை. இஃ தா ற டி த் தா யொன்றியும் ஒன்றாதும் வரும் வஞ்சித்தளையான், எனவாங்கு என்னுந் தனிச்சொற்பெற்று மூன்றடி நேரிசையாசிரியச்சுரிதகத்தாலிற்ற குறளடி வஞ்சிப்பா. பகுதி — பாங்கற்கூட்டம். துறை — இயல்பிடங்கூறல்.

'இடைப்பட்டெஞ்சனு'மென்ற வும்மையா னிடைப்பட்டுத்தொகாது முதலானும் முதலைக்கூறச் சினையறிகிளவியாகிய வாகுபெயரானும்

உவமையு முவமவுருபும் விரிந் தீற்றி லிரண்டு தொகுவனவு முளவென்ப தூஉந் தோன்றிநின்றது.

கொடிபோல்வடவரைபோற்கொவ்வைபோற்காமர்
பிடிபோலிளமான்பிணைபோல்—வடிவமைந்த
தென்னாருயிரமரர்க்கின்னமிர்தன்றீந்தபிரான்
றன்னாகையன்னாடனக்கு. (158)

(இ-ள்) கொடிபோ னுடங்குகின்ற விடையினையும், வடமலை போலப் பெருத்த முலையினையும், கொவ்வைக்கனிபோலச் சிவந்தவாயினையும், அழகிய பிடிபோன்ற மென்னடையினையும், இளைய மான்பிணை போல வெருண்ட நோக்கினையு முடைத்தாகிய வடிவா லழகமைந்திருப்ப தொன்று; தோழீ யெனக் குயிர்போலச் சிறந்தவனுமாகி யமரர்க்கு முன்னைநா ளமிர்தமீந்தபிரான் றிருநாகையனையாட் கென்றவாறு.

இதனு ளீற்றில் விரித்தவிரண்டுஞ் செய்யுட்கட் டொக்கவாறு காண்க. தோழீ யென்னு முன்னிலை யெச்சமாயிற்று. பகுதி-சேட்படை. துறை - தோழிக் கவயவங்கூறல்.

இரண்டுமென்ற வும்மை யெச்சமாதலா னீற்றின் மூன்று தொகுவனவுமுள.

அன்னநடைமானோக்கணியிழாய்வார்சுமந்த
பொன்னசலந்தன்னைப்பொறுப்பதாய்—முன்னுதித்த
வெய்யாநடுவறக்கொன்றிட்டதைவைத்தென்னோசெங்
கையான்மறைத்தமையுண்கண். (159)

என்பது, அன்னநடைபோன்ற மென்னடையினையு மானோக்குப்போன்ற வெருண்ட நோக்கினையு மழகிய பூணினையு முடையாய்! வாரைச்சுமந்த வாய்ப் பொன்மலைபோலப் பணைத்த முலையானவை தம்மைச்சுமப்பது மாய்த் தாம் பிறந்து பணைப்பதற்குமுன்னே பிறந்த வுடன்பிறப்பாகிய தேயாநடுவினை முற்றக்கொன்றவற்றைக் கொல்கவென வெளியில்வைத்து யானுய்யும்படிக் குன துயிர்போன்ற தோழியைக் காட்டித்தந்த மையுண் கண்களைக் கைகளான் மறைத்த தென்ன பேதைமையோ வென்றவாறு.

உண்கண்களையென் றோர் சொல் லிறுதி யிரண்டாவது தொக்கு விரிந்தது. ஒழிந்த சொல்லெச்சங்களுங் குறிப்பினால் விரித்துரைத்த வாறுங் காண்க. பகுதி – இடந்தலை. துறை – நாணிக்கண்புதைக்க வருந்தல். (கஉ)

98. இருமையுமொருதொடர்பினுளுறலியல்பே.

(எ-ன்) இன்னுமத் தொகை விரியுவமைகட் காவதோர் விதியுணர்—ற்று.

(இ-ள்) அத்தொகையுவமையும் விரியுவமையு மாகிய விரண்டு தன்மையு மொருசெய்யுளகத்து வருதலுமா மென்றவாறு. உம்மை செய்யுள்விகாரத்தாற் றொக்கது.

மொழியமுதமுற்றுமுலைமுகுளம்வைவேல்
விழிமகிழ்மாறன் றடரிவெற்பி—லெழின்மயிற்கு
நன்போதவிழ்குழல்கார்நண்பனேசெம்மேனி
பொன்போன்ம்பல்வெண்முத்தம்போன்ம். (160)

என்பது, நண்பனே! மகிழ்மாறன் றடரிவெற்பி லழகிய மயில்போலுஞ் சாயலுடையாட்கு மொழி யமுதம்போலும்; இளமுலை தாமரைமுகுளம் போலும்; விழி கூரிய வேல்போலும்; செருகிய முல்லையரும்பவிழாநின்ற குழல் கார்போலும்; சிவந்தமேனி பொன்போலும்; வெண்பல் முத்த நிரைபோலு மென்றவாறு.

இதனுள் முன்னையநான்கும் உவம வுருபு மேதுவு முவமேயத்தை முன்னிட்டுத் தொக்கன. எழின்மயின் முற்றுவமை. பின்னையவிரண்டும் விரியுவமை. போலு மென்னு முவமவுருபீற்றினுகாம், "செய்யுமெனெச்சவீற் றுயிர்மெய் சேறலுஞ், செய்யுளு ளும்முந் தாகலு முற்றே, லுயிருமுயிர் மெய்யு மேகலு முளவே" என்பதனுல் முற்றுதலின் உயிர் கெட்டது. "மெல்லெழுத் தியையின் னகார மாகும்" என்பதனுல் லகாரம் னகாரமாய்த் திரிந்தும், "னகார முன்னர் மகாரங் குறுகும்" என்பதனு லீற்றுமகாரங் குறுகியும், "செய்யு ளிறுதிப் போலி மொழிவயின், னகார மகார மீரொற் றாகும்"என்பதனு லீரொற்றுடனிலையாயும், மேலே பகரவொற்று வருதலின் செய்யுளிடைப்பட்டும் வந்த முற்றுப் போன்ம் என்றுயிற்று. "ஐயிணைமாண்பகழியரந்தின்வாய்போன்ம் போன்ம்போன்ம், பின்னுமலர்க்கண்புனல்" எனப் பரிபாடலாகிய சங்கச் செய்யுளகத்தும் பகர மேலே வருதலாற் செய்புளிடைப்பட்டும் வந்தமை காண்க. இது தொகைவிரியுவமை.

இன்னும் வேறுபட வருவனவெல்லாந் தொகைவிரியுவமைக்க ணமைக்க. (கங)

99. அவைதாம்,
வெளிப்படைகுறிப்பினும்விழுமிதினடைபெறும்.

(எ-ன்) இதுவுமவ்விருவகை யுவமையின்கூறுபாடுணர்—ற்று.

(இ-ள்) அங்ஙனங் கூறப்பட்ட விரியுவமையுந் தொகையுவமையு மென்னு மிரண்டும் வெளிப்படையுவமங் குறிப்புவம மென்னு மிரண்டாய் விழுமிதாக நடைபெறு மென்றவாறு.

பவளச்செவ்வா யென்புழி இரண்டற்கும் பொதுவாய செம்மைக் குணத்தை வெளிப்படையாகக் கூறினமையான், குறிப்பின்றியுவமை கொள்ளப்படுதலானும், பவளவா யெனநின்றவழிப் பவளத்தினையும் வாயினையுங்கூட்டிச் செம்மைக்குணம்பற்றி யுவமஞ்செய்ததெனக் குறித் துக்கொள்ளப்படுவதல்லது வல்லென்ற பவளத்திற்கும் மெல்லென்ற விதழிற்குமுள்ளதோரொப்புமைக்குணங்க ளாண்டில்லை யென்பதூஉம், பானல்போற் கருங்கண் ணென்புழியும் இரண்டற்கும் பொதுவாய கருமைக்குணத்தை வெளிப்படையாகக் கூறினமையாற் குறிப்பின்றி யுவமையே கொள்ளப்படுதலானும், பானலுண்கண் ணெனநின்றவழிப் பானலையுங் கண்ணினையுங்கூட்டிக் கருமைக்குணம்பற்றி யுவமஞ்செய்த தெனக் குறித்துக்கொள்ளப்படுவதல்லது பல விதழினோடும் பலவல்லியுந் தாதுவுங் கூடிய பரிமளப்போதிற்கும் நீண்டு பிறழ்ந் துலாய்க் குழை மேற்றாய கண்ணிற்கு முள்ளதோ ரொப்புமைக ளாண்டில்லை யென்பதூஉ முணர்க. பிறவுமன்ன; என்னை? "சுட்டிக் கூறா வுவம மாகிற், பொரு ளெதிர் புணர்த்துப் புணர்ந்தன கொளலே" என்றாராகலிற் கொள்க.

விழுமிதி னடைபெறு மென்றதனால் விழுமிதாய குறிப்புவமையு முள. அவையு மேற்காட்டுதும்.

பாற்கடல்வெய்யோனிலொளிபாரித்தசோதிவட
நூற்கடலைத்தென்னுரைநன்னூற்கடலாய்—மாற்கடிமை
வாய்ந்தாரிடேறவகுத்தளித்தான்றண்ணளிதாந்
தாந்தாமெனும்வகுளத்தான். (161)

இது விழுமிதாய குறிப்புவமை,

(இ-ள்) உலகின்கண்ணேயிருந்து நோக்குவார்க்குத் திருப்பாற் கடலின்கட் டோன்று முதயதிவாகரனைப்போல ஒளியைப்பரத்தின சோதிச்சொரூபத்தையுடையான் அவன் யாரெனில் வடமொழியாகிய சுருதிக்கடலைத் தென்றுரை நூற்கடலாக்கித் திருமாலுக் கடிமையாகத் தோன்றினர் பேரின்பமெய்தப் பாடித்தந்தான் குளிர்ந்த வண்டுகள் தாந்தாமெனப்பாடித் தேனையுண்ணும் வகுளமாலிகையை யுடையான்; அவன் பரமகருணையிருந்தபடியோ! வென்றவாறு.

இது விழுமிதாய குறிப்புவமையாயது, இதனுள், திருப்பாற் கடலிற்றோன்று முதயதிவாகரன் றனது செய்யமேனியி லாயிரங்கிரணங் களைப்பரப்பி யுலகத்திருளைத்துரத்தி யுலகினுள்ளார்க்குக் கடபடாதி களைக் காட்டி யின்பத்தைப் புரந்தாற்போல விவனும் வெண்டிரைப் பொருநைத்துறை மாடத் திருக்குருகூரினிடத்துச் சிவந்தமேனியோடுந் தோன்றித் திருவாய்மொழியாகிய வாயிரம் பாடல்களையும் விரித்தத னோடு மன்னவாகனத்தினுந்தோன்றித் தன்னை மனோவாக்குக் காயங்க ளாற் றியானித்தும் வாழ்த்தியும் வணங்குவார்மனத்து ளறியாமை யாகிய வந்தகாரத்தை நீக்கிப் பரப்பிரமத்தைக் காட்டித்தருவனென வினையுவமம் பயவுவமம் வடிவுவமம் உருப்புவமமென்னும் நான் குவமையுங் குறிப்பினாற் கொள்ளக்கிடந்தமையானெனக் கண்டுகொள்க.

தண்ணளி..........தான் என்பதற்குக் குளிர்மையுடன் கூடியதாய வண்டுகள் பாடித் தேனையுண்ணும் வகுளமாலிகையை யுடையானெனினு மாம். வெண்டிரைப் பொருநைமாடத் திருக்குருகூரோடும் அன்ன வாகனமுந் திருப்பாற்கடற்குவமை.

இக்குறிப்புவமை இந்நூலுடையார் யாண்டுப்பெற்றாரெனின்? நலமிகு புலமை நக்கீரர் "உலக முவப்ப வலனேர்பு திரிதரு, பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங், கோவற விமைக்குஞ் சேண்விளங் கவிரொளி" எனக் கூறிய முருகாற்றுப்படுத்ததுட் பெற்றாராம்.

வாழ்த்தெல்லாம் பாடாணாதலால் திணை—பாடாண்சார்ந்த பொது வியல். துறை—பனுவல்வாழ்த்து; அன்றியும், வாகையைச் சார்ந்த பொதுவியலிற்கூறிய பாடல்வென்றியுமாம்.

மின்பதிந்தகார்மேனிவிண்ணகர்மாலைப்புலவன்
பின்பதிந்துசென்றபெருமானை—முன்பதிந்து
சேவித்தாராளுந்திருநாடுதேவரெனப்
பாவித்தார்க்கெட்டாப்பதம். (162)

இதுவுமது ; என்னை ? மின்குடிகொண்ட கார்போலுந் திருமகள் குடிகொண்ட மார்பினோடுங் கூடிய கரியதிருமேனியையுடையான் எனக் குறிப்புவமை கொள்ளக்கிடந்தமையா னெனக்கொள்க. தேவ ரெனப் பாவித்தார்க் கெட்டாப்பதம் என்பது—கண்டாகன்னனாலறிக. திணை—பாடாண். துறை—பழிச்சினர்ப்பரவல். (கசு)

100. உவமேயத்தியலுயர்த்தியபின்ன
ருவமப்பொருளியலுயர்த்திமுடித்தலும்
கவினப்பொருட்குறிற்கடிநிலையிலவே.

(எ-ன்) இஃ தவ்வுவமத்திற் கெய்தாததெய்துவித்தது.

(இ-ள்) முதலே யுவமேயத்தினதுபட்டாங்கை யுயர்த்திக்கூறி, அதன்பின்னர் உவமப்பொருளின்பட்டாங்கை யுயர்த்திமுடித்தலும் அவ் வுவமேயத்திற் குயர்ச்சி குறிப்பினானுண்டாம்படி பயனில தோன்று மெனி னீக்கப்படா தென்றவாறு. கவின் ஆகுபெயர்.

முத்திரைக்கைம்மாறன்மொழிந்ததிருவாய்மொழியே
சத்தியநூலென்பர்தகைசான்ற—மெய்த்தமிழோர்
மேதினிமேலாரணப்பாமெய்த்திருமாலேபரனென்
றோதியநூஉமாதியினிலுண்டு. (163)

(இ-ள்) திருஞானமுத்திரைக்கையினையுடைய காரிமாறப்பிரான் சீமந்நாராயணனே பரதத்துவமென்று அவனது சொரூபரூப குண விபூதிகளைக்கூறிய திருவாய்மொழியே யுண்மைநூலென்று பெருமை பூர்த்தியான வாய்மைத்தமிழ்ப்புலவோர் கூறுவர். அத்திருவாய்மொழியே யன்றி யுண்மைப்பொருளான திருமாலே பரதத்துவமென் றாதிகாலத் துப் பூலோகத்துக்கு மேலாய சத்தியலோகத்தினுமிருந்து வடமொழி யாகிய சுருதி கூறியநூஉ முண்டென்றவாறு.

எனவே, ஆதியாய்ச் சத்தியலோகந் தொடங்கிப் பரந்த வடமொழியா யுணர்த்திற்றென்று சுருதியாகிய நூலை மிகச்சிறப்பித்துக் கூறுவானாகித் திருவாய்மொழியாகிய நூலை யுயர்த்திக் கூறுதததுபோல வியல்பினாலாய வுவமங் கூறினாராயினும், மண்ணின்குடத்தோடு பொன்னின்குடத்திற்குண்டாய வேற்றுமைபோல அந்தணருமேனை மூவகைக்குலத்தோருமோதுவதாகவும் பரந்துபோகாதே தமிழ்மொழியா லெவ்வுலகத்தாரும் பரதத்துவத்தையுணரும்படிக்கு மறைவின்றி யிருட்டற வேதசாரத்தை யெடுத்துக்கூறித் தெருட்டிற்றெனத் திருவாய்மொழிக்கேற்றமானதோர் பயனிலை குறிப்பினாற் றோன்றினவாறு காண்க. என்னை? "உவமத் தன்மையு முரித்தென மொழிப, பயனிலை புரிந்த வழக்கத் தான" என ஒல்காப்பெருமைத் தொல்காப்பியனார் கூறிய விலக்கணத்தானும், "பாரி பாரி யென்றுபல வேத்தி-யொருவற் புகழ்வர் செந்நாப் புலவர்-பாரி யொருவனு மல்லன்-மாரியு முண்டீண் டுலகு புரப் பதுவே" என்னுஞ் சங்கச்செய்யுளாகிய இலக்கியத்தானு முணர்க. திணை - பாடாண். துறை - பனுவல்வாழ்த்து; அல்லது வாகைசார்ந்த இயல்வென்றியுமாம். இதுவுங் குறிப்புவமைப்பாற்படும். (கரு)

101. பலபொருளொருபொருளொருவயிற்பலவயிற்
போலியில்பொருண்மறுபொருள்விபரீத
மருட்கைதலைதடுமாற்றம்விகாரந்
தடுமாற்றம்மேசமுச்சயமின்சொ
ணியமமநியமம்புகழ்நிந்தையுவம
மோகமவயவமவயவிமுற்றே
யேகமாலையந்தாதிபொதுநீங்கலென்
றுகவையைந்தாமதன்விரியே.

(எ-ன்) இதன்முன்னர் உவமையெனத் தொகையானின்றாய் நின்றது வினை பய மெய் உருவென்ற நான்கினோடுங்கூடி யேதுவைந்தாமென வுமவைமுதலிய வகையின் பாகுபாடுகளெல்லா முணர்த்தி யவற்றினின்றும் விரிந்த வுவமையினது பெயர்வேறுபாடுந் தொகையுமுணர்-ற்று.

(இ-ள்) அதன் விரி - அங்ஙனங் கூறுபடுத்தின வுவமையின் விரி, பலபொருளுவமைமுதலாகப் பொதுநீங்குவமையீறாக விருபத்தைந்தா மென்றவாறு.

இவற்றிற்கெல்லாம் எண்ணும்மை தொக்கன. போலியென்பதனை யிறுதிவிளக்காக்கி, இருவயினுங் கூட்டி, உவமமென்பதனை மத்திம தீபமாக்கி, முன்னும் பின்னும் எல்லாவற்றோடுங் கூட்டி யுரைக்க. என்றென்ப தெண்ணிடைச்சொல்; "என்று மெனவு மொடுவு மொருவழி, நின்றும் பிரிந்தெண் பொருடொறு நேரும்" என்பதனு லறிக. இவை யெல்லாஞ் சொல்லின்முடியு மிலக்கணத்தனவாதலாற் பெரும் பான்மையும் தம் பெயருள்ளே இலக்கணமும் புலப்படும். அல்லதூஉம் உரையினுங் கொள்க.

க. அவற்றுள், பலபொருளுவமையென்பது ஒருபொருட்குப் பலபொருளுவமைகாட்டுவது. பலபொருளுவமையெனப் பொதுப்படக் கூறினமையான், அது ஒன்றுபலகுழீஇய பலபொருளுவமையும், வேறு பலகுழீஇய பலபொருளுவமையுமென விருகூற்றவாம். அவற்றுள், ஒன்றுபலகுழீஇய பலபொருளுவமை வருமாறு:—

எண்ணிற்கடங்காவிளஞாயிறென்றியபோற்
கண்ணிற்கடங்காக்கதிர்விரிக்கும்—விண்ணிற்
பரந்தாமமாதவன்பொற்பாதநினைந்தேத்தும்
வரந்தாம்படைத்தார்வசம். (164)

இஃது ஒன்றுபலகுழீஇய பலபொருளுவமை. இதனுள், பரந்தாமம் என்றது பரமபதம். வரந்தாம் படைத்தார் வசம் என்பது மாதவன் றிருவடிகளை யிப்பிறப்பிற் சிந்திக்கவும் வாழ்த்தவும் முற்பிறப்பில் வரம்படைத்தவர்தாமெவர் அவர் கைப்படும்பொருளாமென்றவாறு.

கொடியுமொருபிடியுங்கோளரவுமின்னுந்
துடியும்புரைமருங்குற்றோகை—வடிநெடுங்கண்
ணென்னுயிர்க்குத்தம்பமதாயிற்றனூர்மால்வரைத்தன்
மன்னுயிரைக்காட்டுமெதித்து. (165)

இது வேறுபலகுழீஇய பலபொருளுவமை. ஒரு பிடி—ஒருகையை விரன்மடக்கின அளவாம். "ஒருபிடிநுசுப்பினுட்கே" எனச் சிந்தாமணியினுங் கூறினமை காண்க. பகுதி—இயற்கை. துறை—பாங்கியையறிதல்.

ஆலம்போற்செவ்வேளயில்போலடுங்காலன்
சூலம்போற்காமன்றொடுத்தியக்கு—நீலம்போற்
கொல்வான்பிறழ்கட்கொடிக்கிடமாமூலமெனச்
செல்வான்கடிகைச்சிலம்பு. (166)

இதுவுமது. பகுதி—பாங்கற்கூட்டம். துறை—இயல்பிடங்கூறல்.

௨. ஒருபொருளுவமை யென்பது பலபொருட் கொருபொருளுவமைகாட்டுவது:—

இமிழ்திரைநீர்ஞாலத்திருளிரியவான்றோய்ந்
துமிழ்கதிர்வெண்டிங்களுடனேயெஞ்ஞான்றும்
வலஞ்செய்சுவணவடவரைபோன்மாடம்
பொலஞ்செய்மதிள்கோபுரஞ்சிகரபந்தி
யிலங்குமதிளரங்கத்தெம்பிரான்பல்புகழைப்
பாடினார்பாதந்தனைப்பாடிச்சென்னியின்மேற்
சூடினார்க்குண்டோதுயர். (167)

என்பது பலபொருட் கொருபொருளுவமை. பலபொருள்—செம்பொன் மாட முதலியன. உவமை வடமேருவெனும் ஒன்று. பா—ஏழடியான் வந்த பலவிகற்பப் பஃறொடைவெண்பா. திணை—பாடாண். துறை—பழிச்சினர்ப்பணிதல்.

வண்ணவனசமலர்போற்றிருமுகமுங்
கண்ணுமலரடியுங்கைக்கொண்ட—பெண்ணரசைச்
செந்தமிழ்மாறன்சிலம்பிற்சேர்ந்தகன்றென்பாலுரைக்க
வந்தவனேதிண்ணியனவான். (168)

இதுவும் ஒருபொருளுவமை, பகுதி—இதுவுமது, துறை—தலைவனைவியத்தல்,

௩. ஒருவயிற்போலி என்பது ஒரு தொடர்மொழிக்கட் பல வுவமைவந்தா லுவமைதோறும் உவமைச்சொற் புணராது இறுதியி லோருவமைச்சொற் புணர்ப்பது:—

வாவித்திரையெறிந்தநித்திலத்தின்மள்ளரெறி
காவித்திரள்சேர்கமலமலர்—பாவைமார்
வெண்ணகையுண்கண்ணுனனம்போன்மெனத்தோன்றுங்
கண்ணபுரத்தானிமையோர்கண். (169)

இஃ தொருவயிற்போலி. திணை — பாடாண். துறை — கடவுள் வாழ்த்து ; நாடுவாழ்த்துமாம். திரையெறிந்த நித்திலத்தினோடு மள்ளர் களைகட்டெறிந்த காவிகளுஞ் சேர் கமலமென்க. போன்மெனத் தோன்று மென்பது போலத்தோன்று மென்றவாறு. ஒழிந்த அகல முறையிற் கொள்க.

௪. பலவயிற்போலி யென்பது ஒருதொடர்மொழிக்கட் பல வுவமைவந்தா லுவமைதோறு முவமைச்சொற் புணர்ப்பது.

பொன்மலைபோலுந்திருமால்புட்குழியாள்பூண்முலைநீர்
மன்னருவிபோலுமணிவடங்கள்—சொன்னதன்மேற்
செக்கர்வான்போலுமெழிற்செம்படாமும்புனைந்தா
ரெய்க்குநூலென்னுமினி. (170)

இது பலவயிற்போலி. எய்க்குநூல்—எய்யாநிற்குநூல். பொன் மலைபோன்ற முலையின்மேற் பொற்பூணையும் பூட்டி முத்துவடத்தையும் பூட்டிச் செம்படாத்தையு முத்தரீகமாகப்போட்டமையா னினியிடை யிறுமென்றவாறு. என்னு மென்பது குறிப்புமொழி. எனவே, இடையைத் தாங்கி வடமுதலியவற்றைத் தாங்கிப் புடைபெயர்த்துத் தனத்தைப் பரிசித்து மருங்கணைந்தானும். பகுதி—இடந்தலை. துறை— மருங்கணைதல்.

௫. இல்பொருளுவமையாவது முன்பில்லாததொன்றை யொன்று றற் குவமையாக்கி யுரைப்பது:—

உதிக்குங்கருஞாயிறென்றேயுவமை
மதிக்ும்வடமலைமாயோனைத்—துதிக்குந்
திருநாவுடையபிரான்செந்தமிழையோதி
யிருநாவேவாராதிடர். (171)

என்பது இல்பொருளுவமை. என்னை? கருஞாயிறு இல்லாத பொருளாதலால் அதனைக் காளமேகம்போன்ற திருமேனிக் குவமைகூறினமையா னென்றுணர்க. திணை - பாடாண். துறை - ஓம்படை.

சொன்னவாறென்றுரைக்கக்காணேன்றுணைமேரு
வென்னவாழ்வுற்றவிணைமுலையாண்—மன்னவா
பந்துகழங்கம்மனைகைப்பற்றுகவென்றின்றெனையும்
வந்துதழீஇக்கொண்டாண்மகிழ்ந்து. (172)

இதுவுமது; இதனுள் துணைமேருவென்றதனால் வடமேரு ஒன்றல்ல தில்லையால் இல்பொருளுவமையாயிற்று. இவ்வணஞ் சிந்தாமணியினும் "கோண்மின்னு மீன்சூழ் குளிர்மாமதித் தோற்ற மொத்தே" என வந்தமையா விதனது வேறுபாடுங் காண்க. பகுதி - உடன்போக்கு. துறை - குறிப்புணர்தல்.

சு. மறுபொருளுவமை யென்பது முன்னர்வைத்த பொருட்கு நிகராவதோர் பிறிதொருபொருள் பின்னரு மதன்கண் வைப்பது:—

மாண்குலாமாறுநின்வண்டமிழ்போன்மற்றொருநூல்
காண்கலேனுங்கதுபோற்காண்கலேன்—மீண்டும்
புதல்வற்கருள்புரிந்துபொற்றாணிற்றோன்று
முதல்வற்கிணையாமுதல். (173)

இது மறுபொருளுவமை. திணை - பாடாண். துறை - பனுவல் வாழ்த்தோடு கடவுள்வாழ்த்துமாம்.

எ. விபரீதவுவமையென்பது முன்பி னுவமையாகவந்ததனைப் பொருளாக்கிப் பொருளை யுவமையாக்குதல்:—

மென்றோளெனத்திரண்டவேயினங்கள்வெம்முலைக
ளென்றோவெனக்கோங்கரும்புற — நின்றனவால்
வண்டமிழ்மாறன் றடரிவண்பொழிலுமின்றெனக்கவ்
வொண்டொடியாய்த்தோற்றமுறும். (174)

இது விபரீதவுவமை. என்னை? "பொருளே யுவமஞ் செய்தனர் மொழியினு, மருளறு சிறப்பினஃ துவம மாகும்" என்றாகலின். அன்றே வென்பது அல்லவோவென எதிர்மறையாகி ஆம் என்றாயிற்று. பகுதி - பாங்கற்கூட்டம். துறை - பொழில்கண்டுமகிழ்தல்.

அ. மருட்கையுவமை யென்பது உவமைகூறுவான் மருட்கை வயத்தனாகி யொருபொருட்குக் கூடாதபண்பினைக் கூடுவதாகக்கொண்டு அதனை யொன்றிற் குவமையாக்கி யுரைப்பது:—

தாகம்பெறநுகர்தீந்தண்மருந்துகைத்தழலின்
வேகம்பயின்றவிதிபோலு—மோகம்
படையாதமாறன்பணிவரைமேலென்னோய்
துடையாதுநீயுரைக்குஞ்சொல். (175)

இது மருட்கையுவமை. தெண்டியாசிரியர் கூடாவுவமை யென்பதுமிது. தீந்தண்மருந்து - இனிய குளிர்ந்த வமிர்து. கைத் தழலின் வேகம் பயிலுதல்—கயந்து தழல்போலச் சுடுங் கோப மிடைவிடாமை. பகுதி—இதுவுமது. துறை—பாங்கனைநொந்துகூறல்.

கூ. தலைதடுமாற்றவுவமை யென்பது மேற்றொட்டு முதலே வந்த வுவமப்பொருளிடையினு மீற்றில் வந்த வுவமேயப்பொருண் முதலினும் இடையினின்ற வுவமவுருபு இறுதியிற் றொக்கதும் விரிந்ததுமாகப் புணர்ப்பது:—

மையமருண்கண்காவிவாய்பவளந்தோளிணைவே
யையவிடைநுண்ணூலகலல்குல்—பையரவங்
கஞ்சத்திருமாதுகாதலிக்குமார்பகத்தான்
றஞ்சைத்திருமான்றனக்கு. (176)

இது தலைதடுமாற்றவுவமை. இவை யுவமவுருபு இறுதியிற் றொக்கது. "குவவின கொங்கை குரும்பை குழல் கொன்றை" யென்பதுமிது. மையமருண்கண்—கருமைபொருந்திய மையுண்கண். ஐயவிடை நுண்ணூல்—உண்டில்லையென்று சந்தேகமுற்ற விடை நுண்ணிய நூல் போலு மென்றவாறு. ஐயவிடை யென்பதற்கு ஐயனே யென அண்மை விளியா யுவப்பின்கண்ணே மயங்கியதாகக் கூறினுனெனினுமாம். பகுதி-இதுவுமது. துறை—இயல்பிடங்கூறல்.

௧௦. விகாரவுவமை யென்பது உவமையாகிய தன்மைப் பொருள்களை விகாரம் பண்ணியதாக உவமிப்பது:—

தெள்ளமிர்தத் துள்ளாயதீஞ்சுவையைமெய்வேதத்
துள்ளவுணர்வையுணர்வினு—லள்ளி
யெடுத்திசைத்ததொன்றெனலாமின்பொருளான்மாறன்
றொடுத்திசைத்தவுத்தமப்பாச்சொல். (177)

இது விகாரவுவமை. உணர்வை யுணர்வாலள்ளி யென்பது உபநிடதச் சொல்லுளிருந்த ஞானத்தைத் தனதுண்மைஞானத்தாற் சொல்லைநீக்கித் திரட்டியெடுத்தென்றவாறு. இரும்பை யிரும்பினலறுத்தென்பதுபோலக் கொள்க. சொல்லெனவே சொல்லு மதனுட் பொருளு மாயிற்று. சொல்லு மதனுட்பொருளும் அமிர்தினுள்ள சுவையையு முபநிடதச் சொல்லினுள்ள வுணர்வையுந் தனது பரமஞானத்தா லள்ளியெடுத்துச் சொல்லும் பொருளுமாகத் தொடுத் திசைத்ததொன்றெனலா மென்க இது பனுவல்வாழ்த்து.

௧௧. தடுமாறுவமமென்பது ஒருபொருள் ஒருகால் உவமையுமாய் ஒருகாற் பொருளுமாகி யொருதொடர்ச்சிக்கண்ணே தடுமாறிவருவது:—

மெய்வேதம்போன்றதுநின்மெய்த்தமிழ்நின்மெய்த்தமிழ்போன்
மெய்வேதமுங்காட்சிமேயதால்—வையகமெண்
ணுவலவர்காரிதருநாவீறுநின்னிகராம்
பாவலரிங்காரோபகர். (178)

இது தடுமாறுவமை; என்னை? "தடுமாறுவமங் கடிவரையின்றே" என்றாராகலின். தெண்டியாசிரியர் இதரவித்ரமென்பது மிது. இணையுந் துறையு மிதுவுமது.

கஉ. சமுச்சயவுவமை யென்பது இதனானேயன்றி யிதனையொப் பதினானு மொக்கும் என்பது:—

வண்ணத்தாலன்றிவடிவாலளவினா
லெண்ணிற்கமலமுகையேய்க்குமே—கண்ணன்
வழியார்துணைமாறன்மால்வரையாய்கன்னன்
மொழியார்துணைமாமுலை. (179)

இது சமுச்சயவுவமை. கண்ணன்வழியார்—கண்ணனே பாதத்துவ மெனநிற்கு மார்க்கத்தினையுடையார். துணையென்றது அவர்களான்மா வுக்குறுதித்துணை யென்றவாறு. மாறன் மால்வரையிலுள்ள தலைவனே! கன்னலினது பாகுபோலு மொழியையுடையாரொன்று நீ சொல்லப் பட்டவ ருபயமுலை செம்மைநிறத்தா லொத்ததன்றி வடிவினானு மளவி னாலு முள்ளத்தா னுவமைகுறிக்கின்ற செந்தாமரைமுகையை நீ சொன்னபடியே யொக்குமென்றவாறு.

குறிவழிச்சென்ற பாங்கன் தலைவி தனமுங் காண்பனோவெனிற் காண்ப துண்டென்பதற்குச் செய்யுள்:—"அானம்பலத்தி, னியலுள வேயிணைச்செப்புவெற்பாநினதீர்ங்கொடிமேல்" என்றதனா லறிக. மால் வரையாயென்றதனா னில மொன்றென்பதாயிற்று. பகுதி - பாங்கற் கூட்டம், துறை - செவ்விசெப்பல்.

கங. இன்சொலுவமை யென்பது பொருளினா முவமைக்கோர் மிகுதி தோன்றக்கூறி யுவமேயத்தினு மிகுதியுளவேனு மொப்பதன்றிச் சிறந்ததன்றென்பது:—

ஒன்றாயநின்முகத்ததொண்டமிழ்வேதங்குரவ
னன்றாயுநான்முகத்ததவ்வேத—மென்றாலும்
வண்டமிழ்மாறாவண்டமிழ்மறைக்கொப்பன்றிமறைக்
குண்டெனலாமோவேறுயர்பு. (180)

இஃது இன்சொலுவமை. இதனுள் ஒப்பதன்றியென்பது ஒப்பன்றியெனச் செய்யுள்விகாரத்தாற் றொக்கது. திணை - பாடாண். துறை - பனுவல்வாழ்த்து.

கசு. நியமவுவமை யென்பது இன்னதற் கின்னதே யுவமையென்று தேற்றேகாரம்பெறத் துணிந்துசொல்லுவது:—

வாய்மைமறையேநிகர்து வாய்ந்ததமிழ்மறையின்
வாய்மைதனக்கிணையாம்வாழ்த்துங்காற்—றாய்முலைப்பா
லுண்ணாதமெய்ஞ்ஞானமோங்கியமாறாகமலக்
கண்ணனேநின்னிணையாங்காண். (181)

இது நியமவுவமை. வாய்மைமறை - மெய்வேதம். திணை—வாகை. துறை - தாபதவாகை.

பைம்பொற் குன்றேபணையிளவனமுலை
யம்புத் துணையேயரிமதருண்கண்
குனிசிலையிரண்டேகொடுநன்புருவம்
பனிமாமதியேபழிதீர்நன்முகங்
கொடியேதளரிடைகொண்மூவேகுழ
லாடரவின்படமாமேகடிதடங்
காந்தளின் றுணைமலர்க்கவினேகையும்
பூந்தளிரன்றேபுடைபெயர்மெல்லடி
மாதே,
படர்புகழ்மாறன்பராங்குசன்
றடரிமால்வரைவளர்தோகையதியலே. (182)

இதுவு மது. பா - பொதுச்சீர் பதினாறும்வந்து நேரிசையாசிரியச் சுரிதகத்தாலிற்ற குறளடிவஞ்சிப்பா. பணையிளவனமுலை - பெருத்த இளைய அழகிய முலை. அரிமதருண்கண்—செவ்வரியார்ந்து கண்டார்க்கு விருப்பத்தைக்கொடுக்கு மையுண்கண். பகுதி—சேட்படை. துறை—அவயவங்கூறல்.

கரு. அநியமவுவமை யென்பது நியமித்த வுவமையை விலக்கிப் பிறிதுமோருவமை புணர்ப்பது:—

தேன்சுவைக்கொண்டோங்குமகிழ்ச்செல்வாநின்செந்தமிழின்
வான்சுவைக்குவான்சுவைகொள்வான்கனியே—நான்பகர்தற்
கொப்பாகக்கண்டதுமற்றுள்ளிற்சுவைதெவிட்டா
தப்பான்மைத்தானதுமொப்பாம். (183)

இஃது அநியமவுவமை.

(இ-ள்) வண்டுகள் தேனையுண்ணும் பரிமள வகுளமாலிகையை யுடைய செல்வனே! நினது திருவாய்மொழியிலுண்டான சொல்லும் பொருளும் கேட்ட செவிக்கும் ஓதின நாவிற்கும் உற்ற வுணர்விற்கும் இனிமைதரும் பெரிய வினிமைக்குப் பரமபதத்துள்ளார் மனோ வாக்குக் காயங்களால் இனிமைகொள்ளும் பரமபதநாதனாகிய அக்காரக்கனியே நான் சொல்லுதற் கொப்பாகக் கண்டது; அஃதன்றி வேறுவமை குறிப்பேனாகின் முப்பொறிகளுஞ் சுவை தெவிட்டாத திருவாய் மொழியேபோலப் பண்ணும் பாடலுமாய் நடைபெறுஞ் சுருதியும் அதற் கொப்பா மென்றவாறு.

அப்பான்மைத்தானதும் என்றது சுருதியை. துறை - பனுவல் வாழ்த்து.

கசு. புகழுவமையென்பது உவமையைப் புகழ்ந்துவமிப்பது:—

விண்ணோருயிர்தளிர்ப்பான்வேலைவாயன்றுதித்த
தண்ணாரமிர்தந்தனைநிகர்க்கும்—பண்ணாற்
றிருந்துமறையைத்தமிழ்செய்தேவேசன்வெற்பின்
முருந்துநகையார்மொழி. (184)

இது புகழுவமை. பண்ணாற்றிருந்து மறை—கீதநடைத்தாய்க் குற்றமற்ற மறை; அது சாமவேதம். மறையைத் தமிழ்செய் தேவேச னெனவே வேதந்தமிழ்செய்தபெருமாள் என னு நாவீறுடையபிரான் என்பதாயிற்று. பகுதி - இயற்கை. துறை - புணர்ச்சியிறுதிக்கட் டலைமகன் காதற்சிறப்புரைத்தல்.

கஎ. நிந்தையுவமையென்பது உவமையை இகழ்ந்துவமிப்பது:—

உறைகழித்துக்கைம்மிசைக்கொண்டோண்மறவரோச்சின்
மிறைபுரிவேலொப்பெனினுமேலா—நறையூர்வாழ்

தேந்துளபமால்வரைமேற்றூனேதெறுஞ்செயலா
லேந்திழையாள்வன்கண்ணிணை. (185)

இது நிந்தையுவமை. ஒண்மறவர் — கொலைமேற்கொண்டொழுகு மொள்ளிமையுடையமறவர் ஓச்சில்—செலவிடுக்கில். பிறைபுரிவேல்— கொலையைவிரும்பும் வேல்; எடுத்தெறிதலைவிரும்புவார்தொழிலை வேலின்மே லேற்றியது காரண காரிய மயக்கம். மறவரோச்சுகிற் கொல்வ தல்லது வன்கண்போற் றூனேதெறுஞ்செய லின்றென்பதனால் நிந்தை யுவமையாயிற்று. பகுதி—பாங்கற்கூட்டம். துறை—உற்றதுரைத்தல்.

கஅ. மோகவுவமை யென்பது ஒருபொருளின்மே லெழுந்த வேட்கையாலதற்கு உவமையாகக்குறிக்கப்பட்ட வதன்மேலும் வேட்கை நிகழ்ந்ததாகக் கூறுதல்:—

அம்பவளமொன்றிருப்பவன்புறுமாதொண்டையெனச்
செம்பதுமத்தேனேநின்செவ்வாயை—விம்பமுநே
ராதற்கதைவிரும்புமாழியான்கோழியூர்க்
காதற்சிறப்புடையேன்கண். (186)

இது மோகவுவமை.

(இ-ள்) ஆழியான் கோழியூர்ச் செய்யபதுமத்தினிடத்து விளைந்த தேன்போலுமொழியையுடையாய்! நினது சிவந்த வாயை யதற்கொத்த அழகிய பவளமுளதாயிருப்பவும் ஆதொண்டையை யொப்பெனநோக்கி யன்புறுநிற்கு மஃதன்றி யவ் வாதொண்டை செய்ய வாயினிறத்தோடும் வடிவிற்கு மொப்பதால் அவ்வாயினையுங் காதலிக்கப்பட்ட சிறப்புடையே னேடுங் கூடிய கண்கள் அவ் வாதொண்டையையும் விரும்பாநின்ற வென்றவாறு.

ஆதற் கென்பது மூன்றுவது நான்காவதாயிற்று. அதையும் என்னு மும்மை விகாரத்தாற்றொக்கது. விம்பம்—வடிவம். பகுதி— இடந்தலை. துறை—காதற்சிறப்புரைத்தல்.

கக. அவயவவுவமை யென்பது அவயவத்தையுவமித் தவயவியை வாளாதே கூறுவது:—

மாதரிலவிதழ்போன்மாண்பிற்றேமாதவனால்
வானோருந்துமருந்து. (187)

இதனுள், மாதரென்ற தவயவி. இலவிதழென்ற தவயவம். பகுதி-இதுவுமது. துறை-நலம்புனைந்துரைத்தல். புணர்ச்சிமகிழ்தலுமாம்.

வல்லிக்கொடிமருங்குன்மாதினுக்குமேருமுலை
யல்லிக்கமலமனையதடி—கல்லதர்தீ
சொல்லும்பொழுதரங்கர்தொன்னகர்சேய்த்தாயிழாய்
செல்லும்படிக்கெளிதோசெப்பு. (188)

இதுவும் அவயவவுவமை.

(இ-ள்) வல்லிக்கொடிபோலு மருங்குல்; வடமேருப்போலு முலை; அல்லியோடுங் கூடிய தாமரைபோலுந் தாள்கள்; பாலோடுங் கூடிய வதரும் அழல்போலச் சுடும். சொல்லுங்காலத்தில் அரங்கர்நகரமென்றால் நெடுந்தூர மாகையா லாராய்ந்தணிந்த பூணினையுடையாய்! நினது மாதினுக் கென்னோடும்வரும்படி யெளியதொன்றல்ல வென்றவாறு. பகுதி-உடன்போக்கு. துறை-அருமையுரைத்தல்.

௨0. அவயவியுவமை யென்பது அவயவியை யுவமித்து அவயவத்தை வாளாதே கூறுவது:—

பொன்னங்கொடியனையபொற்றொடிதன்றாட்சுவடு
மென்னன்புறத்தோன் றுமிங்கிவைக—ளன்னங்
கடிக்கமலஞ்சேராங்கர்காளிகாங்காளை
யடிச்சுவடுமாங்கவையேயாம். (189)

இஃது அவயவியுவமை. அரங்கர்காளிகாங் காளை-அரங்கர்புதல்வனுங் காமன்போல்வானுங் காளையென்பதாம். பகுதி-இதுவுமது. துறை-சுவடுகண்டறிதல்.

௨க. முற்றுவமை யென்பது அவயவ அவயவிகளை யொருசெய்யுளகத் தொக்க வுவமிப்பது:—

பொன்னெடுங்குன்றெனச்செறிந்துபுடைபரந்தபுளகமுலை
மின்னெனலாநுணுகிடையவேய்புரையுந்தடமென்றோட்
குளிர்மதிபோன்மிளிர்வதனக்கோமளப்பூங்கொம்பன்னா
டளிர்புரைமெல்லடிச்சுவடுந்தளர்ந்தனவெய்யோன்மன்னோ
குடதிசைவான்கதிர்சுருக்கிக்கொடித்தேரினொடுமறைந்தா
னடல்புனைவேடுவர்குறுகியற்றம்பார்த்தாறலைப்பார்
பொன்புனைபூண்மணிமார்பிற்புரவலவின்றிருவீரு
நன்குலத்தெம்மில்வைகிநறுந்தேன்செந்தினையருந்தி
மனையதனிற்றுயில்வைகிவைகறைவாய்த்துயிலெழுந்து
விரைகமழ்தார்மகிழ்மாறன்மெய்த்தமிழ்ச்சொற்குருகூரின்
முதிர்திரைப்பாலாழியின்வான்முகடுரிஞ்சுமுதயகிரி
கதிர்வருமுன்சேர்தல்கடன். (190)

இது முற்றுவமை.

(இ-ள்) பொன்மேருவாகிய மலைகளென்னும்படி சிக்கென்று மருங்ககன்ற புளகமுலையினையு மின்னெனத் தகுவதா நுண்ணிய விடையினையு மூங்கில்போலும் பெரிய மெல்லிய தோளினையு மதிபோல விளங்கு முகத்தினையு முடைத்தாய பூங்கொம்பன்னாள் தளிர்போன்ற மெல்லிய வடியிரண்டுந் தளர்ந்தன, ஆதித்தனுங் குடதிசைவாய் வானிற் கிரணங்களை யொடுக்கிக் கொடியையுடைய தேரினோடு மறைந்தான், வெற்றியையுடைய வேடுவர்கள் அற்றம் பார்த்து வழிபறிப்பர், இனிப் பொன்னினாற்செய்த பூணினையணியு மார்பினையுடைய மன்னனே! இற்றைப்போது நீங்களிருவீரு முத்தமகுலமாகிய எங்களில்லின்கண் வதிந்து, நல்லதேனினோடுங் கூடிய தினைமாவினையுந் துய்த்து, மான்றோலிற் றுயிலமர்ந்து, வைகறையிற் றுயிலெழுந்து, மணங்கமழாநின்ற வகுளமார்பன் மெய்த்தமிழ் பாராட்டப்பட்ட கீர்த்தியையுடைய குருகாபுரியிடத்துப் பெருத்த திரையையுடைய திருப்பாற்கடலின்கண் வானினுச்சியைத் தைவருங் கொடுமுடியையுடைய வுதயகிரியிற் கதிரோனுதிக்குமுன்ன மெய்துவதே முறைமை யென்றவாறு.

மன்னும் ஓவும் அசை. பகுதி—இதுவுமது. துறை—நெறிவிலக்கு. பா—வெண்கலிப்பா.

உ௨. ஏகவுவமை யென்பது உவமையும் உவமேயமுந் திணை பான் முதல் சினை பெயர் வினை யென்பன மயங்கா தொன்றாயிருக்கை:—

முற்றவுணர்த்து முதுகாப்பியம்புணர்ப்பா
னுற்றவர்தங்கண்போன் றுறங்காவா—மிற்பிரிந்தா
னல்லியலார்வந்தனைசெய்நாவீறன்மால்வரைமேன்
மெல்லியலாரின்பவிழி. (191)

என்பது ஏகவுவமை. இதுவும் பூரணவுவமைப்பாற்படும்.

(இ-ள்) நெஞ்சமே! நன்புலவ ரஞ்சலிசெய்யு நாவீறுடைய பிரான் வண்குருகூரினிடத்து மெல்லியசாயலையுடையா ரின் பவிழியானது இனிநாமிவரை யில்லின்கண்வைத்துப் பிரிவோமாகில் அறமுதலிய நாற் பொருளுமலை கட ளுடுமுதலிய பதினெட்டு வருணனையு மொழிந்தனவுங் குறைவின்றி யுணர்த்தப் படுவனவாகும் பெருங்காப்பியம் பாடுதற் குட் கொண்ட புலவர்கண்போலத் துயிலொழிந்ததோடும் தன் பவிழியா மென்றவாறு.

இது, கற்பினு ளில்வாழ்க்கையெனனும் பகுதிக்கண் பிரிந்து சேய்நாட் சென்று வந்து கூடிய தலைமக னவளுறுப்புக்களை வேட்கை மிகுதியாற் புதுவது புதுவதாகப் பாராட்டத் தலைமக ளிஃதொன் றுடைத்தென வஞ்சியவழிப் புணர்ச்சியந்தியத்துந் துயிலாதனைத் துயின்று துயிலொழிந்தோன் தன்கட் பிரிதற்குறிப்புளதாகக் குறித்த வேறுபாடெனக் குறிப்பானறிந்த தலைமகன் முன்னிலைப் புறமொழி யாகத் தன்னெஞ்சிற் கவள்குறிப்பறிவுறுத்துவான்போல வினி நின்னிற் பிரியேனெனப் பிரியாத தன்குறிப்பினைத் தலைமகட்கறிவுறுத்தல். கலி யுள்ளும், "மாசில்வண் சேக்கை மணந்த புணர்ச்சியுட், பாயல்கொண் டென்றோட் கனவுவா ராய்கோற், றொடிநிரை முன்கையாள் கையாறு கொள்ளாள், கடிமனை காத்தோம்ப வல்லுநள் கொல்லோ" எனத் தலைமகன் புணர்ச்சியந்தியத்துக் கனவினாற்றியதனைத் தலைவி துயிலொழிந்திருந் தவன் குறிப்புணர்ந்தனளென்பது மூணர்க. அன்றியும், கற்பினுட் குறிப்பறிவுறுத்தலென்னு மதிகாரத்தின்கண் வள்ளுவரும் "கரப்பினுங் கையிகந் தொல்லாநின் னுண்க, ணுரைக்க லுறுவதொன் றுண்டு" என் னுங் குறட்பாவினுட் டலைவன் றன்பிரியாமைக்குறிப்பினைத் தலைவிக்

கறிவுறுத்தவாறுங் காண்க. இதனுள், தலைவி இஃதொன்றுடைத்தென நாடின் மடனழிந்ததன்றோ வெனின்? தலைவன்கட் டலைவி விரும்புதலா லதுவுங் கடனாயிற்று. என்னை? "தன்வயிற்காத்தலுமவன்வயின் வேட்டலு, மன்னவிடங்களல்வழியெல்லா, மடனொடுநிற்றல்கடனென மொழிப" என்னும் பொருளியற்சூத்திரத்தா னுணர்க. முதுகாப்பியம் புணர்ப்பா னுற்றவர்தங் கண்போன் றுறங்காவா மென்றதனுல் தோழி கூற்றன்று; தலைவன்கூற்றென வுணர்க; என்னை? "இவ்விடத் திம்மொழி யிவரிவர்க் குரியரென், றவ்விடத் தவரவர்க் குரைப்பதை முன்னம்" என்னுஞ் செய்யுளியற்சூத்திரத்தான், பெருங்காப்பிய வொழுக்கம் அறிவது பெண்டன்மைக் குரிமையன்மையி னுணர்க. இங்ஙனங்கூறிய விலக்கணங்க ளிறந்தவற்றிற்கு மினிமேல்வருவன வற்றிற்கு மிலக்கணமெனவுணர்க.

உரு. மாலையுவமை யென்பது ஒருபொருட்குப் பலவுவமை வந்தா லவை யொன்றோடொன் றிடைவிடாது தொடர்ச்சியுடையன வாகப் புணர்த்துக் கடைக்கட் பொருளை வெளிப்படையாகக் கூட்டி முடிப்பது:—

பாற்கடலுண்மால்போலவன்மார்பிற்பைந்தொடிபோற்
கோற்றொடியுட்கொண்டகுணமேபோ—னூற்கடலாய்ந்
தாமாறுணர்ந்தாறம்பயின்றநாவகலா
பாமாறன்சொன்னதமிழ்ப்பா. (192)

இது மாலையுவமை. அறம்—வேதம். உட்கொண்டகுணம்—கருணை. துறை—பனுவல்வாழ்த்து.

தென்னரங்கனுந்திச்செழுமலர்போலம்மலருண்
மன்னுமயன்போலயன்மனத்து—ணன்மறைபோ
னீங்காதொருபொழிற்கண்ணேவியம்போனின்றதொன்று
பாங்காகக்கண்டனன்வெற்பா. (193)

இதுவுமது.

(இ-ள்) வெற்பனே! திருவரங்கேச னுந்தித்தாமரைபோலவும் அத்தாமரையுள்வைகும் பிரமனைப்போலவும் பிரமன்மனத்துட் குடி-

கொண்ட நல்ல சுருதிபோலவும் ஒருபொழுதும் நீக்கமின்றி நீகூறிய பொழிற்கண் ணோவியம்போனின்றதொரு பெண்ணுருவத்தைக் காவின தொருபக்கமாகக் கண்டன னென்றவாறு.

ஓவியம்போனின்றதென்றான் உயிர் நின்னிடத்தும் உடலங்குமாக நின்றதென்பது தோன்ற. ஒருபக்கத்தேநின்றதென்றான் ஆயத்தை நீங்கிநிற்பதுதோன்ற. பகுதி — பாங்கற்கூட்டம். துறை — பாங்கன் கண்டமைகூறல்.

உச. அந்தாதியுவமை யென்பது ஒரு செய்யுளகத்துப் பல பொருட்குப் பலவுவமை வந்தான் முதலேயுவமஞ்செய்த வுவமேயப் பொருட்பெயரினை யாகுபெயராதல் அன்மொழித்தொகைப்புறத்துவந்த பெயராத லாக்கித் துணித்து நிறீஇ யவ்வுவமேயப்பெயரினை யந்தாதித் துவமானப்பெயராக்கி யுவமவுருபுகொடுத்துப் பின்ன ரதன்மேல்வரு முவமேயப்பொருளோடு புணர்த்து நிகழ்த்துவது:—

குருமணிசூயின்றபொற்குடமெனத்தகைசால்
பருமணிவடந்தோய்ந்தெழுதருபணைமுலை
முலையெனப்பொடித்ததாமரைமுகைமுகைநெகிழ்
பொழுகுதண்ணறவெனவுறுநர்நன்மார்பத்
திழுகுமான்மதமளாயெழுபுனற்சங்கணித்
துறைவளங்கெழீஇயதொன்மைசான்மரபி
னீங்கிதுபுவனம்யாவையுந்தழைத்தற்
கோங்கியவிராமாநுசமுனியிருக்கை
யாங்கது தருமமோர்படிவமுற்றனைய
பாங்குறுசக்கரபாணிபேர்புனைபதி
மழைகிழித்தெழுந்தபொன்மாளிகைச்சூளிகைத்
தழைதுகிற்கொடித்திரடாமவெண்மதியகட்
டுறுமறுத்துடைத்துவாளெறீஇநுடங்குங்குரு
முருகார்மொய்ம்மகிழ்மாறன்
குருகாபுரியெனக்கூறுநன்னகரே. (194)

இஃது அந்தாதியுவமை. இதனுள், பணைமுலை யென்பது பணைத்த முலையினையுடையாயென வினைத்தொகைப்புறத்துவந்த வன்

மொழித்தொகைப் பெயராய் அண்மைவிளியேற்றுத் துணித்து நிறீஇய வாறும் முலையென வருபெயரினை யுவமானப்பெயராக்கி, யுவமவுருபு கொடுத்துப் பின்ன ரதன்மேல்வருந் தாமரைமுகையென்னு முவமேயப் பொருளோடும் புணர்த்தலுங் காண்க. முகை நெகிழ்பு—முகைநெகிழ்ந்து. ஒழுகு தண்ணறவென—ஒழுகு தண்ணறவுபோல. வுறுநர் - தன்னிடத்திலே பரிசிப்பார். இழுகு மான்மதம்—பூசுங் கத்தூரி. அளாயெழுபுனற் சங்கணித்துறை — கலந்தோடும் புனலையுடைய திருச்சங்கணித்துறை. ஈங்கிது வென்றது தமக்கு முன்னுனவிடத்தை. ஆங்கது வென்றது தமக்குச் சேய்த்தானவிடத்தை. ஊங்குது வென்றது இரண்டிற்கும் நடுவான விடத்தை. தாமவெண்மதி—ஒளியையுடைய மதி. ஒழிந்த வகல முறையிற் கொள்க.

அஃதேல், "அடுக்கிய தோற்றம் விடுத்தல் பண்பே" எனத் தொல் காப்பியனு ரிதனைக்கூறி மறுக்கவும் இங்ஙனங் கூறுமது மாறுகொளக் கூற லென்னுங் குற்றமாம் பிறவெனின், ஆகாது; என்னை? அஃ தொருபொருளோ டொருபொருளை யுவமித் ததற் குவமவுருபுகொடுத் துப் பிறிதொருபொருளை யுவமித்தல். அதற்குச் செய்யுள், "மதியத் தன்ன வாண்முகம்போலும், பொதியவிழ் தாமரைப் புதுப்பூம் பொய்கை" என்பது; மதியத்தன்ன வாண்முகத்தை யொக்கும் தாமரை யென்றமை யின் அவை யொன்றினோடொன்று பொருந்தாதென்பதுகருதி மறுத் தார், இஃ தன்னதன்று. என்னை? பருமணிவடந்தோய்ந் தெழுதரு பணைமுலையினையுடையாயெனத் துணித்துக்கூறினமையா னென் றுணர்க. "ஈர்ந்து நிலந்தோயு மிரும்பிடித் தடக்கையிற், சேர்ந்துடன் செறிந்த குறங்கினள் குறங்கென, மால்வரை யொழுகிய வாழை வாழைப் பூவென" என்பதுபோலக் கூறினுமென்க. பகுதி—உடன்போக்கு. துறை—பதிபரிசுரைத்தல். பா—நேரிசையாசிரியப்பா.

உ௫. பொதுநீங்குவமை யென்பது உவமையைக் குறிப்பினு னுதல் வெளிப்படையானுதல் கூறி மறுத்துப் பொருடன்னையே பொருட் குவமையாக்கி யுரைப்பது:—

முற்குணத்தான்மாதர்முலைப்பாலருந்தாத
நற்குணத்தால்வேதமொருநான்கினையுஞ்—சிற்குணத்தா

லோதாதுணர்ந்துணர்த்துமுத்தமமாறற்கிணைபார்
மீதார்மனனேவிளம்பு. (195)

இது குறிப்பால் வந்த பொதுநீங்குவமை. இதனுள், மனனே விளம்பென்பது மாபுவழுவமைதி; என்னை? நாவாகியபொறியினது கிரியையை அந்தக்கரணத்தின்மேலேற்றி யதனைக் கூறுக வென்றதனால். நாவாகிய பொறிக்குச் சொற்கிளத்தலுஞ் சுவையறிதலுமாகிய இருதிறத் தனவா மவையிரண்டு மந்தக்கரணங்கள்கூடாதே யதற்குங் கூடாதாதலா னதனை யங்ஙனங் கூறப்பட்டது. திணை—பாடாண். துறை—"அமரர்கண் முடியு மறுவகை யானு" மென்பதனுன் முனிவர்வாழ்த்து.

வாரியைமொண்டுண்டோன்வசிட்டன்முதலாய
சீரியரின்ஞானஞ்செறிந்ததாற்—காரிதருஞ்
சேயேயுடையநங்கைசெம்முலைப்பாலுண்ணுதாய்
நீயேநினைக்குநிகர். (196)

இது வெளிப்படையாய்வந்த பொதுநீங்குவமை. துறை—இதுவு மது.

ஆகப் பலபொருளுவமைமுதற் பொதுநீங்குவமையீருக வுவமவிரி யிருபத்தைந்தும் அடைவே காண்க. (கரு)

102. சிறப்பினும்வரூஉந்திறமுமொன் றுளதே.

(எ-ன்) இஃ துவமவிரியு ளோதாததாகவொழிந்த தொன் றுணர்-ற்று.

(இ-ள்) ஒருபொருளைப் பிறிதொருபொருளாகச் சிறப்பித்துச் சொல்லுமிடத் துளவாய்வரூஉங் கூறுபாடு மொன் றுளதென்றவாறு.

சிறப்பென்பது ஒருபொருளையெடுத் ததற்குச் சிறந்த பல அடை களையு முவமித் தவற்றானே யுவமையாக்கி யுரைப்பது.

நுண்டுகிற்கொடிகளுடங்குபுவளங்கெழு
வெண்பொன்மாளிகைசுலாம்வீதிதெண்டிரையெழும்
பாற்கடற்பரப்பதாய்வரிபலபயின்மதிண்
மேற்படிவந்துவிளங்குகோபுர

மைவாய்ச்சேடன்மண்டலித்தனனாகிப்
பைவாய்த்தலைநிமிர்பான்மையவாகக்
கருங்கடன்மொண்டெழுங்கருவிக்கார்மழை
யொருங்கதனனந்தலையுறப்படிந்ததொடு
மோங்குபொற்கம்பத்துச்சிமேலதனொளி
பாங்குறவுச்சியிற்பதிதருபானு
யோகநித்திரைகொளுமாவோனுந்தியி
னேகதாட்டாமரைப்பொகுட்டிறைவனைநிகர்
சினகாக்குருகாபுரியினுட்செவ்வியி
னனவரதமுஞ்சராசரங்களாக
வுதிக்குமன்னுயிர்களையுவந்தே
துதிப்பர்நித்தியரெனத்துறவுளோரே. (197)

இது சிறப்புவமை. திணை—இதுவுமது. துறை — சினகா வாழ்த்து. (கஎ)

103. அடையொடுபொருட்கடைபுணர்க்குமஃதிரட்டை.

(எ-ன்) இதுவும் விரியுளோதாத வொழிபுணர்—ற்று.

(இ-ள்) அடையடுத்த முக்கியப்பொருட் கொப்புமை கூறும் ஒப்புடைப்பொருளிடத்து முக்கியப்பொருளி னடை புலப்படப் புணர்ப்பது மிரட்டையுவமையா மென்றவாறு.

புணர்ப்பது மென்னு மும்மையால் ஒற்றைக்கிளவியும் இரட்டைக் கிளவிவழித்தாகிவருவன கொள்க; என்னை? "இரட்டைக்கிளவி யிரட்டைவழித்தே" என்றாராகலின். உவமை யென்பது அதிகாரத்தாற் பெற்றது.

நறைமல்கியகொழுங்காவியைப்போனள்ளிரவினுநீ
டுறைமல்கியகண்டுயிலாமையன்பர்க்குரைக்கிலநான்
மறைமல்கியசெந்தமிழ்மாறன்வண்குருகூர்ப்பொருநைத்
துறைமல்குசேவற்சிறையிறைநீங்கிற்றுயரன்னமே. (198)

இஃ திரட்டையுவமை; நறைமல்கியகாவிபோ லுறைமல்கியகண் ணென்பதா லறிக. மல்குதல் — பெருகுதல். உறை - துளி. இறை நீங்கில் — சிறிது நீங்கில். துயரன்னம் — துன்புறுமன்னம். பகுதி— ஒருவழித்தணத்தல், துறை - ஓதிமப்பெடையோடியுரைத்தல்.

ஊனூறியவிருகோட்டொருமாவையுறுபுனல்வன்
மீனூறுசெய்வதைத்தீர்த்தபிரான்வடவேங்கடத்திற்
றேனூறிலவிதழைக்கண்டபோழ்திலென்சிந்தையும்பர்
வானூர்மதிமுகத்தாளிதழாகமதித்திடுமே. (199)

இஃது ஒற்றைக்கிளவி யிரட்டைவழித்தாய்வந்த வுவமை; இதனுள், தேனூறிலவிதழைக்கண்டபோழ்தெனக் கூறியவழிப் பானமூறுமித ழென்னாதே இதழென ஒற்றைக்கிளவியாய்க் கூறினமையா னென்றுணர்க. பின்னர்வந்த விதழ் - அதரம். உம்பர் வானூர் மதிமுகத்தாளென்பதன்கண்ணு மிவ்வுவமை வந்தவாறு காண்க. அது, "கருங்கால் வேங்கை வீயுகு துறுகல்—லிரும்புலிக் குருளையிற் றோன்றுங் காட்டிடை" என்னுங் குறுந்தொகைப் பாட்டினுங் காண்க. முன்னர்வந்ததற்கும் "பொன்காண் கட்டளை கடுப்பச் சண்பின்-புன்காய்ச் சுண்ணம் புடைத்த மார்பின்" என்பதனுட் காண்க. பகுதி — இடந்தலை. துறை — புனங் கண்டுமகிழ்தல். (கஅ)

104. உவமையுமுருபுந்தொடர்வழிப்பிறிதுமொன்
றுவமேயப்பொருட்கடைபுணர்ப்பதுமுள.

(எ-ன்) இதுவு மெய்தாத தெய்துவித்தது.

(இ-ள்) ஒப்புடைப் பொருளொடு புணர்ந்த வுவமவுருபிற்குப் பின்னாகப் பிறிதுமோ ரொப்புடைப்பொருண் முக்கியப்பொருட் கடையாக முன்னோராற் புணர்க்கப்பட்டுவருவது முளவென்றவாறு. இஃ திலக்கியங்கண்டதற் கிலக்கணங் கூறியதெனவுணர்க.

அம்பனையவேற்கண்ணணங்காலறிவழிந்த
திம்பருனக்கெய்தியதாலெவ்வுளா—னும்பரெலாம்
போற்றவருண்மாலைப்போற்றார்போலாயினையான்
மாற்றமிதற்கென் னுரைக்கேன்மற்று. (200)

அம்பனையவேற்கண்ணென்றவழி யுவமப்பொருளின னுருபின் பின்னர் வேற்கண்ணென வந்தவாறு காண்க. இதற்கு முன்னோர் கூறிய விலக்கியமாகக் கண்டன யாவையோ வெனின், "துப்புறழ் தொண்டைச் செவ்வாய்" எனத் திருத்தக்கமாமுனிகள் கூறிய சிந்தாமணியினும்,

"ஆம்பனூறுந் தேம்பொதி நறுவிரைத்—தாமரைச் செவ்வாய்" என்புழித் "தேம்பொதிநறுவிரை யாம்பனூறுந் தாமரைச் செவ்வாய்"என இளங்கோவடிகள் பாடிய அந்திமாலைச்சிறப்புச்செய்காதையினுங் கண்டவை யென்றுணர்க. இம்பருனக்கும் என்னு மும்மை செய்யுள்விகாரத்தாற் றொக்கது. பகுதி—பாங்கற்கூட்டம். துறை—பாங்கன்கழறல். (௧௯)

105. மாபினும்வருவதோர்மரபுடைத்தென்ப.

(எ-ன்) இதுவு மெய்தாததெய்துவித்தது. இலக்கியங்கண்டதற் கிலக்கணங்கூறலு மாம்.

(இ-ள்) ஒருதொடர்பினு ளொருபொருட்காதல் பலபொருட்காதல் உவமைகூறுமிடத் துவமப்பொரு ளொருகுழூவினு ளொருமரபாகப் பலவுவமம்வருவது மரபுவமையா மிலக்கணத்தை யுடைத்தென்று கூறுவர் சான்றோ ரென்றவாறு.

செந்தாமரைவதனஞ்சேதாம்பல்வாய்நயன
நந்தாதசெங்குவளைநாடுங்காற்—கொந்தார்
வகுளம்புனைவார்வரைமயிற்குக்கஞ்ச
முகுளம்புணர்மாமுலை. (201)

இது மரபுவமை; என்னை? கோடு கொடி நீர் நிலம் என்னும் நால்வகைப்பூக்களுள் நீர்ப்பூவாகிய குழூவுள், செம்மையென்னு மோரிலக்கணத்தனவாந் தாமரை யாம்பல் குவளை யென்னும் மூன்றினையும் முகம் வாய் நயனம் முலை யென நான்கிற்கு மரபுபொருந்துவனவாக வுவமம்புணர்த்தலினெனக் கொள்க. இதற் கிலக்கியங்கண்டதாவது: "கடையாயார் நட்பிற் கமுகனைய ரேனை, யிடையாயார் தெங்கி னனையர்—தலையாயா, ரெண்ணரும் பெண்ணைபோன் றிட்டஞான் றிட்டதே, தொன்மை யுடையார் தொடர்பு" என்பதனுள் ஓரினத்தனவாகிய புறக்காழ்ப் புன்மரமேகூறி யொழிந்தமரங்க ளொப்பன வுளவாயினுங் கூறாராயினாராதலான் மரபுவமையாமென வுணர்க. துறை — இயல்பிடங்கூறல். (௨௦)

106. ஒத்ததுவென்றதென்றொருபொருட்குவமை
வைத்தனவாயொருதொடர்பினும்வருமே.

(எ-ன்) இதுவு மெய்தாத தெய்துவித்தது.

(இ-ள்) ஒருபொருட் குவமைகூறுமிடத்து ஒருபொருளை யொத்தது ஒருபொருளை வென்றது என் றிருபொருளைக் குறித்தனவா யொரு செய்யுளகத்துவருவனவு முவமவிலக்கணத்திற்குக் கூடியும் நீங்கியும் வருமென்றவாறு:—

கூற்றுவன்வேல்போன் றுருகன்வேலைவென் றுகொலை
யாற்றலுறும்வன்கண்ணமர்விளைப்பத்—தோற்றமுறுங்
கொல்லிப்பாவைக்கிணையாய்நின் றதெவன்கோகனக
வல்லிப்பாவைக்கிணையாவாய். (202)

இஃது ஒத்தது வென்றதென்றல். ஆற்றல்—பெருமை. தோற்றம்-பொலிவு. கொல்லிப்பாவை—காமுகரைக்கொல்லும் பாவை. கோகனக வல்லிப்பாவை-திருமகள். பகுதி—இயற்கை. துறை-இரந்துபின்னிற்றல்.

தெண்ணறவைவென் றுதிரைத்தெள்ளமிர்தையொத்தமொழிப்
பெண்ணரசேமாதவன்றென்பேரைவாய்த்—தண்ணறும்பூக்
கொய்யாமலாயமுடன்கூடாமலூசலிற்றுள்
வையாமனின்றதென்னோமற்று. (203)

இது வென்ற தொத்த தென்றல். பகுதி—இதுவுமது. துறை—முன்னிலையாக்கல். (உக)

107. ஏதுநுதலியமுதுமொழியினும்வரும்.

(எ-ன்) விரியுவமையினு ளின்னு மோ ரொழிபுணர்—ற்று.

(இ-ள்) அவ்வுவமை யேதுப்பொருளைக்குறித்துமுடித்தற்குப் பிறிதொருபழமொழியினும் வருமென்றவாறு.

பாம்புகடித்ததற்குத்தேளுக்குப்பார்ப்பதுபோ
லாம்புகழ்மால்கச்சியணிவரைவா—யாம்பகட்டா
லோடத்துணிந்தளித்தானுய்த்தநோய்க்கின்றுவெறி
யாடத்துணிந்தானறிவு. (204)

இஃது ஏதுநுதலியமுதுமொழியுவமை ; என்னை? "நுண்மையுஞ் சுருக்கமு மொளியுடை மையு, மென்மையு மென்றிவை விளங்கத் தோன்றிக், குறித்த பொருளை முடித்தற்கு வரூஉ, மேது நுதலிய முது மொழி யென்ப" என்றாராகலின். இதனுட் குறித்தபொருண்முன்ன ரொரு முதுமொழியினைவைத்துப் பின்னர்த் தாங்குறித்த பொருளை வெளிப்படையாகவைத்தமையா னெனவுணர்க. பகட்டாலோடத் துணிந்தளித்தானென்பது யானையைக்கண் டியாங்கள் பயந்தோடாநிற்ப அவ்வியானையையும் பொருதற்குத் துணிந் திவளுயிரைத் தந்தானென்க. உய்த்தநோய்க்கு—தந்தநோய்க்கு. வெறியாடத்துணிந்தான் என்பது இகழ்ச்சிக்குறிப்பு. அறிவென்ற தீண் டறியாமை. "உழுத வுழுத்தஞ் செய் யூர்க்கன்று மேயக், கழுதை செவியறிந் தற்றால்—வழுதியைக், கண் டநங் கண் ணீ ருகுப்பப் பெரும்பணைத்தோள், கொண்டன மன்னோ பசப்பு" என்பது மிது. துறை—வெறிவிலக்கு. (உஉ)

108. பிசியினும்புலப்படும்பெற்றியதாகும்.

(எ-ன்) இதன்முன்னர் விரியுவமையி னொழிபுகூறி யிதனுட் டொகையுவமையினதொழிபுணர்—ற்று.

பிசியென்பது நற்பொருள்; என்னெனின்? "பிசியென்ப பொய்யுஞ் சோறும் பேசுநற் பொருளும்" என்பதனா லறிக.

(இ-ள்) பிசியென்ற இலக்கணத்தோடும் புலப்படு மியல்பினையு முடைத் தவ்வுவமை யென்றவாறு.

அஃதாவது உவமேயப் பொருட்குள்ள சினை வினை சார்பு முதலியன வுவமப்பொருட்கண் ணில்லையாயினும் அவற்றை யதனோடு சார்த்தி யுவமப்பொருளொன்றனையுங்கூற வுவமேயப்பொருளு மேதுவு முவம வுருபும் விரிந்து புலப்படுதலாம்.

வருங்குன் றினைக்கடிந்தெம்மன் னுயிரைத்தந்தா
னிருங்கங்கணக்குன் றிருப்பப்—பெருந்தகைசால்
செந்தமிழ்மாறன்சிலம்பிற்சேய்நீநடித்தருந்த
வந்ததையானோதடுப்பேன்மற்று. (205)

இஃது ஒப்பொடுபுணர்ந்த வுவமத்தானுஞ் சார்பினானும் வந்த பிசியுவமை ; என்னை? "ஒப்பொடு புணர்ந்த வுவமத் தானுந், தோன்று

வது கிளந்த துணிவி னானு, மென்றிரு வகைத்தே பிசிவகை நிலையே" என்றாராகலின். இதனுள், வருங்குன்றினை யென்றது யானையை எனவும், இருங்கங்கணக்குன்றென்றது சார்போடுந் தோளினை யெனவும் வினையானும் வடிவானும் சார்பானும் உவமவுருபுமுதலியனவு முவமேயப்பொருளும் புலப்படுவதாயிற்று. ஒழிந்த அகல முறையிற் கொள்க. பகுதி—இதுவுமது. துறை—களிற்றிடையுதவிக் கறத்தொடு நிற்றல். (உரு)

109. முக்கியப்பொருட்குமுக்கியப்பொருளுவமை
புணர்ப்பதுமுதன்மைப்புலனெறிவழக்கே.

(எ-ன்) இதுவு மொருவகையா மொழிபுணர்—ற்று.

(இ-ள்) உவமேயப்பொருட் குவமேயப்பொருள்களை யுவமமும் பொருளுமாக்கிச் செய்யுளகத் துரைப்பனவும் புலவராற்றுவழக்கமா மென்றவாறு. இஃது இலக்கியங்கண்டதற் கிலக்கணங் கூறல்.

சீதரனேமுத்தனெனுந்தேற்றமுறச்சிந்தையினுட்
பேதமைபோலற்றபிறர்நசையும்—பாதகமாம்
பொன்றுவழுக்காறெனப்போயதுபுல்லமைக்
கொன்றுப்புறங்கூறலும். (206)

என்பது, நெஞ்சமே! நாம் சீமந்நாராயணனே யகிலாண்டகோடி பிரமாண்டங்களையுஞ் சத்தாவரணங்களையும் பிரகிருதியையும் கடந்து மேலாய விரசைக்கக்கரையா முத்தியைத் தருவதற்குரியனென்ப தாரியனாலுணர்ந்து அறிவுபிறந்தபின்னர் நம்மிடத்து முன்பு நின்ற வறியாமை போல வகன்ற தொழிந்த அரனைய னென்னு மிருவரைப்பற்றின பசையும்; அதுவுமன்றிப் பாதகத்திற் கேதுவா மழுக்காறகன்றதுபோலகன்றது அறிவிற்குப்பொருந்தாப் புறங்கூறலும்; ஆதலாலினி நாமீடேறினே மென்றவாறாயிற்று.

திணை—பொதுவியல். துறை—முதுகாஞ்சி. எதிர்மறைகளை யுவமமும் பொருளுமாக்கிய திரண்டானும் பெறுதற்கு இலக்கியம், "இழிவறிந் துண்பான்க ணின்பம்போ னிற்குங், கழிபே ரிரையான்க ணோய்" என்பதனாலறிக. (உச)

110. உருவகநிரனிறையதிசயஞ்சிலேடை
தற்குணந்தற்குறிப்பற்புதம்விரோத
மொப்புமைக்கூட்டமேது விலக்குடன்
மெய்ப்படவிரவுமேதகவுடைத்தே.

(எ-ன்) அவ் வுவமையலங்காரம் பிறவலங்காரங்களோடுங் கூடி வருமாறு கூறுகின்றது.

(இ-ள்) உருவகமுதலாக விலக்கீறாக மேற்கூறப்படும் பதினோரலங்காரங்களுடன் விரவிவரு மவ்வுவமையலங்கார மென்றவாறு.

மெய்ப்படவிரவும்—பொருள்பெறவிரவு மென்பதாம். மேதகவுடைத்து—பெருமையுடைத்து. (உ௫)

111. இவைதத்தமவிலக்கணங்களிற்றிறம்பா
துவமச்சொற்புணர்ந்திறினஃதுவமை.

(எ-ன்) இஃ தவ்வுவமையலங்காரம் பிறவலங்காரங்களோடுங்கூடி வருவதற் கோரறிகுறியுணர்—ற்று.

(இ-ள்) இவை—பதினோரலங்காரமும், தனக்குத் தனக்கு விதித்த விலக்கணங்களிற் குன்று துவமவுருபுடனேகூடி யுவமையாந்தன்மை பெறமுடியுமாயி னவற்றை யவ்வவபெயரானே யுவமையென்று பெயர் கொடுத்து வழங்கப்பெறு மென்றவாறு.

பூந்தண்வகுளாபரணன்புயசயிலம்
வாய்ந்தவருவிவரைமானும்—பாய்ந்ததிரை
தங்கொலிசீர்வையந்தனைச்சூழிருடொத்தும்
பொங்கொளிசேர்முத்தவடம்பூண்டு. (207)

இஃது உருவகவுவமை. இதனை முதனூல்செய்த தண்டியாசிரியர் உருவகத்தின்கண் ணுவமையுருவக மென்றார். அதற்குக் காட்டிய, "மதுமகிழ்ந்த மாதர் வதன மதிய, முதய மதியமே யொக்கும்" என்ற செய்யுளகத் துருவகவாய்பாடாகவக் துவமவுருபோடிறுதலி னது பொருந்தாதாதலா னிவ ரதனை யுவமையி லுருவகவுவமையென்று பெயர்கொடுத்ததே பொருத்தமென்றறிக. பூந்தண் வகுளாபரணன்—

பொலிவினையுங் குளிர்மையையுமுடைய மகிழமாலிகையை யாபரண மாகவுடைய மாறன். புயசயிலம் - திருப்புயங்களாகிய மலை. வாய்ந்த - புலப்படுவதான. அருவிவரைமானும் — நீரருவியோடுகூடிய வரையை யொக்கும். பாய்ந்ததிரை - பரந்ததிரை. புயசயிலம் முத்துவடம்பூண்ட தால் நீரருவியுடன்கூடிய மலையையொக்குமெனக் கூட்டுக. திணை — பாடாண். துறை - புயவருணனை.

மலைமதிதேன்மாறன்வரைவேல்விழியாண்
முலைவதனநண்பாமொழி. (208)

இது நிரனிறையுவமை. பகுதி - பாங்கற்கூட்டம். துறை - இயல் பிடங்கூறல்.

புருவநயனம்பொருசிலைவேல்போன்ற
திருமகணின்னோடுவரிற்செல்வா—கருவிளைமென்
பூநீனிறமாயன்புட்குழிசூழ்வாசமலர்க்
காநீர்த்தடமாங்கடம். (209)

இதுவுமது. இவையிரண்டும் பெயரொடுபெயர் நிரனிறையுவமை. வாசமலர்க்காநீர்த்தடமாம் - பரிமள மலர்ச்சோலையும் வாவியும்போலக் குளிர்மையையுடையவாம்; கடம் - சுரம். நின்னொடுவருகி லவளுக் கெனக் கூட்டுக. ஒழிந்த வகல முறையிற் கொள்க. பகுதி - உடன் போக்கு. துறை - ஆதரங்கூறல்.

காருலாவியகொழும்பொன்மணிமாடவெயிற்பிழம்புகதுவநாளு
மேருமால்வரையெனவேபொலிந்தபனிவரைக்குலங்கள்வேலைநீர்சூழ்
பாருமாடகநகரிற்சிறந்தவிறன்மதன்மகுடபந்திமானும்
வாருலாமுகிழ்முலைமங்கையருமலைமகள்குழுவின்வாழ்வார்மன்னே. (210)

என்பது குணவதிசயவுவமை. திணை - பாடாண். துறை - நகர வாழ்த்து (குருகாமான்மியம்).

வார்செறிந்துகல்லாரமன்னியகலத்தவாய்த்
தார்செறிந்தவல்லியெழுதற்கிடமாஞ்—சீர்செறிந்த
நற்றிருமால்வைகியதென்னனைத்தடமா னு
முற்றிழையாண்முற்றாமுலை. (211)

இது செம்மொழிச்சிலேடையுவமை. தடத்திற்குந் தனத்திற்குஞ் சிலேடை.

(இ-ள்) தண்ணீர்பொருந்திச் செங்கழுநீரோடுங்கூடி யிடமகன்ற தாய்ப் பூநெருங்கின வல்லிக்கொடிகடோன்றுதற் காகரமாந் தடத்தை யொக்கும், கச்சினதசத்தடங்கி மாணிக்கப்பூ ணிலைபெற்று மார்பிடத்த வா யொழுங்குசேர்ந்த தொய்யிலெழுதுதற் கிடம்பெற்றன முற்றிழையா ளிளமுலையென்றவாறு.

பொலிவுகுடிகொண்ட நல்ல திருமால்வைகு மழகிய திருநாகைத் தடத்தை யெனக் கூட்டுக. தடத்தின்மேற் சொல்லுங்கால், வார்—தண்ணீர். செறிதல் - பொருந்துதல். கல்லாரம் - செங்கழுநீர். மன்னி—கூடி. தார் - பூ. செறிதல் - நெருங்குதல். வல்லி - கொடி. எழுதல்—தோன்றுதல். இடமாம்—ஆகரமாம். தனத்தின்மேற் சொல்லுங்கால் வார்—கச்சு. செறிதல் - அடங்குதல். கல்லாரம் - மாணிக்கப்பூண். மன்னி — நிலைபெற்று. அகலம்—மார்பு. தார்—ஒழுங்கு. செறிதல்—சேர்தல். எழுதல்—எழுதுதல். இடமாம் — இடம்பெற்றதாம் என்க. பகுதி — பாங்கற்கூட்டம். துறை — செவ்விசெப்பல். பகுதி — இயற்கை. துறை — நலம்புனைந்துரைத்தலுமாம்.

மான்மதங்கூர்வெங்களபமட்டிக்கமைந்துளவாய்க்
கானிலவாவாரநிழல்கைக்கொண்ட—ஞானமுனி
செஞ்சொற்றமிழ்மலயமேபோலுஞ்சீதான்வாழ்
தஞ்சைத்திருமான்றனம். (212)

இது பிறிமொழிச்சிலேடையுவமை. இது மலயத்திற்குந் தனத்திற்குஞ் சிலேடை.

(இ-ள்) மயக்கத்தைத்தருங் கடமுண்டான வெம்மையைச்செய்யும் யானையும் பூவிற்றேனும் வைத்ததேனும் நிறைந்துளவாய்க் காடாய இலவும் ஆச்சாவும் சேர்ந்த மலைப்பக்கங்கள் குளிர்மையைத் தன்னிடத்துக்கொண்ட தமிழ்மலையை யொக்கும், கத்தூரிமிகுந்த விருப்பத்தைத் தருஞ் சந்தனச்சேற்றைப் பூசப் புளகித் திறுகிய வலியையுடையவாய்ப் பரிமளநிலைபெற்று முத்தினொளியைத் தன்னிடத்துக்கொண்ட புனமான்போலும் விழியையுடையாள்தனம் என்றவாறு.

ஞானமுனி செஞ்சொற் றமிழ்மலையை யெனவுஞ் சீதரன்வாழ் தஞ்சைத் திருமான்றனமெனவு முன்னும் பின்னுங் கூட்டுக. கூர்வெங் களபம் - வினைத்தொகை. ஏகாரம் - அசை. பொதியத்தின்மேற்சொல் லுங்கால் மால் - மயக்கம். மதம் - கடாம். கூர்-உண்டான. வெம்மை- வெப்பம். களபம் - யானை. மட்டு - பூவிற்றேன். இக்கு - வைத்ததேன்; "தேன்,றுளியோடுமதுத்துளி"யென்றார் சிந்தாமணியினும். அமைதல்- நிறைதல். உளவாய் - உண்டாய். கான் - காடு. இலவு-இலவமரம். ஆ- ஆச்சாமரம். வாரம் - பக்கம். நிழல் - குளிர்மை முலைமேற்சொல்லுங் கால். மான்மதம் - கத்தூரி. கூர்தல் - மிகுதல். வெம்மை - விருப்பம். களபம் - சந்தனச்சேறு. மட்டித்தல் - பூசுதல். மைந்து - வலி. கான்- பரிமளம். நிலவா - நிலைபெற்று. ஆரம் - முத்துவடம். நிழல் - ஒளி. கைக்கொண்ட வென்ப திருதலைக்கு மொருபொருள். இது பகுதி- இயற்கை. துறை - நலம்புனைந்துரைத்தல்.

நடுக்கற்றறைவளத்தினன்பொருள்களெல்லா
மிடுக்கற்றுதவுமியல்சான் — றொடுக்கமற
வேய்ந்தமலையமெனவளர்கின்றான்பரன்சீ
ராய்ந்ததமிழ்மகிழ்மாறன். (213)

இஃது இருவகைச்சிலேடையும் விரவி யிரண்டுபொருளைக் கவிநாயக னுக் குவமையாக்கி யவற்றை யிரட்டுறமொழிந்து மூன்றாவது கவி நாயகன்மேலுஞ் சிலேடை செல்வதாக வவனு மவைபோலிருந்தானென்று மூன்றுபொருள்பயந்தசிலேடையுவமை. இது பொதியத்திற்குங் கட லுக்குங் காரிமாறப்பிரானுக்குஞ் சிலேடை.

(இ-ள்) அசைவற்றப் பக்கப்பாறைகளின் வளத்தோடுங்கூடி நல்ல பொருள்களையெல்லாங் குறைவற்றளிக்கு மியல்பமைந் தழிவின்றித் தகுதியடைந்த பொதியமலையொப்பெனவும் தழைபாநின்றனன், மத்தி மம் பாராகிய தறைவளத்தோடுங்கூடி நல்லபொருள்களையெல்லாங் குறைவறவளிக்கு மியல்பமைந்து அழிவின்றித் தகவடைந் தழகிய வலையையுடைய கடலை யொப்பெனவுந் தழையாநின்றனன், அவன் யாரெனில் உண்மைநூல்களை யோதாதுணர்ந்து பிறர்க்குணர்த்தும் வளத்தினோடுங்கூடி நல்லபொருள்களையெல்லாங் குறைவறவளிக்குங்

தகுதியடைந்து பாத்துவ சொரூபரூபகுணவிபூதியாகிய பொலிவினை யாராய்ந்த திருவாய்மொழி யென்னுந் தமிழையுடைய திருமகிழ்மாறன் என்றவாறு.

மலயத்தின்மேற்சொல்லுங்கால், நடுக்கு-அசைவு. அற்று-இன்றி. அறை - பாறை. வளத்தின் - வளத்தோடுங்கூடி. கடன்மேற்சொல்லுங் கால், நடு - மத்திமம். கற்றறை - பாராகிய தறை. வளத்தின் - வளத் தோடுங்கூடி. மாறன்மேற் சொல்லுங்கால், நடுக்கற்று-உண்மை நூல்களை யோதாதுணர்ந்து. அறை - உணர்த்தும். வளத்தின் - வளத்தோடுங் கூடி என்க. எல்லாம் - முழுதும். இடுக்கு - குறைவு. அற்று-இன்றி. உதவும் - அளிக்கும். இயல் - இயல்பு. சான்று - அமைந்து. ஒடுக்கம்— அழிவு. அற்று - இல்லையாக, என்க.

இப்பாட்டினுள் "வளத்தி னன்பொருள்களெல்லா மிடுக்கற்றுதவு மியல்சான் றொடுக்கமற வேய்ந்த"வென்னுந் துணையு மூன்றுபொருட்கு மத்தச்சிலேடை யொன்றாய்நின்றன. அவற்றுள்ளும் பொருளென்பது பலபொருளொருசொல்லாதலின் மலை முதலிய மூன்றுபொருட்கு முறை முறையே சந்தனம் அகில் குங்குமம் தக்கோலம் ஏலம் இலவங்கம் சாதிக் காய் தேன் என்பனவும் பிறவும், சங்கு முத்து பவளம் என்பனவும் பிறவும், சிச் தசித் தீச்சுர மென்பனவுமாம். இதனுள், ஏய்ந்தமலைய மெனநின்ற பெயரெச்சவாய்பாட்டைக் கடலைக்கூறுமிடத்து ஏய்ந்து என வினையெச்சவாய்பாடாக நிறுத்தி அம் அலையென்பவற்றை இடை யில் ஏற்பன வந்தனவாக வளர்கின்ற ரென்னுந் தன்னெச்சமான வினை யோடுங் கூட்டுக. பான்சீராய்ந்த தமிழ் என்பது காரண காரிய மயக்கம். திணை - பாடாண். துறை - செந்துறைப்பாடாண்பாட்டு.

பெற்றாளிகழவளர்த்தாளிடர்செயப்போர்த்துறவொான்
றற்றாகமெங்குங்கருகியும்வாய்விட்டாற்றுமந்தோ
பொற்றாமரைக்கண்ணன்விண்ணோர்பிரான்புட்குழியில்வஞ்சங்
கற்றார்பொருட்பிரிவுற்றிடைவேனிற்கருங்குயிலே. (214)

இஃது அத்தச்சிலேடையுவமை பகுதி - பொருள்வயிற்பிரிதல். துறை — குயின்மேல்வைத்துக்கூறல். சொற்பொருள்காரணமாகவும் உவமைபிறக்கும் ; அவை முன்னர்க்காட்டுது மென்றாம் ; அவை யிவை யெனவுணர்க.

அறிவுடையார்தத்துவநுண்பொருளுரையாய்ந்தறிகழகத்
தறிவொன்றில்லா
வறிதுடையாரடைதரிற்சிற்குணத்தினராய்த்தலைப்படுமவ்
வாழ்வுபோல
வெறிவரிவண்டுளர்நறுமென்சந்தனப்பூம்பொதும்பரிடை
விராயவேணு
முறிபடுதண்சினைவெளிற்றுத்தாருவுமாங்கதிற்கமழு
முதன்மைத்தாமே. (215)

இது தற்குணவுவமை. துறை—பருப்பதவாழ்த்து.

சிலைவணக்குந்திருநுதலார்சிற்றிடையைவணக்கியவச்
சிறுமைநோக்கி
முலைவணக்கஞ்செய்தடுபோன்முதுக்குறைவந்தடைந்துபொறை
முதிரநோன்று
ணிலைவணக்கங்கொண்டது கண்டிடென்றதாய்சுமந்திறுத
னெறித்தன்றென்றே
தலைவணக்கங்கொண்டுகதிர்நிலமகட்கேசரணமெனச்
சாய்ந்தமன்னோ. (216)

இது தற்குறிப்பேற்றவுவமை. நாடுவாழ்த்து. (இவையிரண்டுங் குருகாமான்மியம்.)

கொடிமேல்வளருமிருகுன்றுமுளவென்னும்
படிமேதகப்பணைத்தபாவாய்—வடிவேற்கட்
பொற்றொடிக்கைப்பூமகள்கோன்புத்தூர்வரைமடமான்
சிற்றிடைமேற்கொங்கைத்திரள். (217)

இஃது அற்புதவுவமை; என்னை ? குன்றின்மேற் கொடிவளர்வதல்லது கொடிமேற் குன்று வளர்வதின்று, ஆதலான் அற்புதவுவமை. அற்புதமென்பது ஆச்சரியம். பகுதி - சேட்படை. துறை - பாங்கிக் கவயவங்கூறல், பாங்கன் செவ்விசெப்பலுமாம்.

மின்னுமாவும்விளங்கிழாய்நின்னிடையும்
பன்னுதமிழ்மாறன்பணிவரைவா—யுன்னில்

விருத்தமுளவாயிருப்பமெய்யுவமைக்கென்ஞே
பொருத்தமுடைத்தென்னும்புவி. (218)

இது விரோதவுவமை. பகுதி - இடந்தலை. துறை - நலம்புனைந்துரைத்தல்.

எப்பொருளுங்கோதற்றிசைக்குமறையம்மறைபோன்
மெய்ப்பொருளெல்லாஞ்சொலுநின்மெய்த்தமிழு—முப்பொருளு
மாசின்றுணர்த்துமயனயன்போன்மாறுநீ
யாசின்றுணர்த்துமவை. (219)

இஃது ஒப்புமைக்கூட்டவுவமை. எப்பொருளு மென்பன:— "மிக்க விறைநிலையு மெய்யா முயிர்நிலையுந், தக்க நெறியுந் தடையாகித்— தொக்கியலு, மூழ்வினையும் வாழ்வினையும்" என்பனவாம். முப்பொருளும் ....உணர்த்தும் என்பது அங்ஙன முதலிற் கூறிய மறை, அரி அயன் அரனென்னுமவர் மூன்றுபொருளாய் முக்குணமாய் மூன்றுதொழிலா யிருக்குமெனக் கூறியவண்ணமே குற்றமின்றி யுணர்த்து மென்பதாம். இன்றியென்னும் வினையெச்சவாய்பாட்டிகரம் இன்று என உகரவீறுயிற்று; என்னை? "அன்றி யின்றியென் வினையெஞ் சிகரந், தொடர் பினு ளுகர மாய்வரி னியல்பே" என்றாராகலின். அவற்றை யென்பது அவையென இரண்டாவ திறுதியிற்றொக்கது. கோதற்றென்பதனைக் கோதறவென்றாக்குக. முன்னது – பனுவல்வாழ்த்து. பின்னது – இயன்மொழிவாழ்த்து.

மாடகூளிகைக்கொழும்பொற்றகட்டமைத்த மூழுமணிவால்
வயிரநீலம்
பாடல்சால்பசுமணிபொன்னிறப்புருடராகமிவை
பத்திவாய்ந்து
கோடலால்வளந்தருசெங்கேழ்கிளர்மாணசெக்கரொடுங்
குறைவொன்றில்லா
வாடகாசலக்குடிமிவளைத்தெழுமிந்திரதனுவொத்
தவிர்வதொன்றே. (220)

இஃது தேதுவுவமை. துறை–நாடுவாழ்த்து. (குருகாமான்மியம்.)

பூரணமாங்கண்மலர்க்கும்புத்திக்குந்தித்திக்குங்
காரணத்ததாமோகடலமிர்தங்—தாரணிமேற்
கன்னியிடத்தார்பாவக்காகோதரத்துவளர்
பொன்னியிடத்தாரமுதைப்போல். (221)

இது விலக்குவமை. துறை - கடவுள்வாழ்த்து.

அளிமருவும்பொற்காவகமணந்துஞ்சங்க
வொளிமருவுநீணிதியுட்கொண்டும்—விளிவில்லா
நன்னரங்கவீடருளநாடாதருளரங்கன்
றென்னரங்கநேர்வரும்புத்தேள். (222)

இதுவும் விலக்குவமை.

(இ-ள்) அளிமருவும் பொற்கா – கொடையைப்பயிலும் பொற்சொரூபமான கற்பகக்கா. மணந்து – குடிபுகுந்து. சங்கவொளி மருவு நீணிதி – சங்கநிதி. திருவரங்கத்தின்மேற் சொல்லுங்கால், வண்டு பொருந்திய பொலிவையுடைய சோலைகள். (மணத்தல்-) பரிமளங்கூர்தல். சங்கவொளிமருவுநீணிதி - பாஞ்சசன்னியத்தைத்தரித்த அன்பர்க் கழியாவைப்பாகிய அரங்கநாதன். நன்னர்–நன்மை. வீடு–பரமபதம். நாடாது-ஒவ்வாது; அப் பரமபதத்தைக்கொடுக்கப் புத்தேள் நினையாது. திருவரங்கம் பரமபதங்கொடுக்கு நினைவுள்ளதா மாதலாற் புத்தேளைத் திருவரங்கத்துக் குவமைகூறுவது பொருந்தாதென விலக்குக. நேர் வரும்புத்தேளென்பது இகழ்ச்சிக்குறிப்பு; எதிர்மறையு ளடங்கும். இங்ஙன முவமையைக் கூறிவிலக்குதலால் விலக்குவமையாயிற்று.

இதனுள்ளுஞ் சிலேடை விரவிற்றேனும் வீடருளநாடாதென்பத னுல் விலக்குவமையென்பதே நோக்கம். தண்டியாசிரியரும் "குழை பொருது நீண்டு குமிழ்மேன் மறியா, வுழைபொருதென் னுள்ளங் கவாா" வென்னும் விலக்குவமையினுஞ் சிலேடைவிரவியதூங் காண்க. திணை - பாடாண். துறை - நகரவாழ்த்து.

ஆக உருவகவுவமை முதலாக விலக்குவமை யீறாகப் பதினெண்ணும் அடைவே வந்தவாறு காண்க. (உகூ)

112\. சிறப்பிற்றீர்ந்தசெய்கையவாகி
யிறப்பவுயர்த்தலிழித்தன்மிகுத்தல்
குறைத்தல்பான்மாறுதல்கொள்கடனிலவே.

(எ-ன்) உவமைக்குக் கூறிய பொதுவிதிச்சூத்திரத்துட் பெருமை யுஞ் சிறுமையும் பெற்றியிற்சிறந்து மென்பதற்குச் சிறப்பிற்றீர்ந்துவரு வனவாய்க் கடியப்பட்டன முன்னர்க் கூறப்படுமென்று மவையிவை யென்ப துணர்—ற்று.

(இ-ள்) ஒன்றினை யுவமிக்குங்காற் சிறப்பினைநீங்கியசெய்கையை யுடையவா யிறப்பவுயர்ந்த வுவமேயத்திற் கிறப்பவிழிந்த வுவமானத் தினை யுவமித்தலு மிறப்பவிழிந்த வுவமேயத்திற் கிறப்பவுயர்ந்த வுவமா னத்தினை யுவமித்தலு முவமேயவடைக் குவமானவடை மிகப்புணர்த் தலு முவமேயஅடைக் குவமானவடை குறையப் புணர்த்தலும் ஆண் பாற்குப் பெண்பா லுவமித்தலும் பெண்பாற் காண்பா லுவமித்தலும் ஒருமைப்பாற்குப் பன்மைப்பா லுவமித்தலும் பன்மைப்பாற் கொரு மைப்பா லுவமித்தலும் பெரியோ ராமெனக்கொள்ளுங் கடனிலவா மென்ற வாறு.

ஆனையெருத்தமகழ்வான்வெரினேய்க்கும்
பூனையிடியேறுபோன்முழங்கு—மூனை
யயிலரியேறன்னளிவளிவடன்னுசி
பயிலணிதாராகணமொப்பாம். (223)

இதனுள், இறப்பவிழிந்த அகழ்வான்வெரினை யிறப்பவுயர்ந்த யானையின்முதுகிற் குவமைகூறியதூஉம், இறப்பவிழிந்த பூனைமுழக் கிற்கு இறப்பவுயர்ந்த இடியேற்றின்முழக்கை யுவமைகூறியதூஉம், அரியேறுகி யிறப்பவுயர்ந்த வஃறிணையாண்பாலை யுயர்திணைப் பெண்பாற் குவமைகூறியதூஉம், நாசியாபரணமான முத்தினொருமைக்குத் தாரா கணப் பன்மையை யுவமைகூறியதூஉம் வழுவாயிற்று.

பைங்குவளைமுல்லைபணிவண்டுலாங்குமுதந்
திங்களிடத்தாயினபோற்செவ்விதரு—மிங்கிதமே
கற்றமர்கூர்கண்ணகைவாய்காமுறவாழ்வெய்தியவிம்
முற்றிழையாள்சோதிமுகம். (224)

இதனுள், உவமானமான குமுதத்துட் புணர்த்த வண்டிற் குவ மேயமின்றி யுவமான அடை மிகுந்து வழுவாயிற்று.

தேனருவிநீரருவியோடேசிறந்துளநற்
றானவடமேருவெனுஞ்சால்பிற்றே—மானனையார்
சித்திரப்பொற்கச்சணிந்துசெய்யமணிவடமு
முத்தவடமும்பூண்முலை. (225)

இதனுள், பொற்கச்சணிந்தென்னு முவமேயவடைக் குவமான வடை குறைந்து வழுவாயிற்று. பொற்கச்சு—பொன்னெழுத்துக்கச்சு.

நமன்மடந்தையன்னாளிவனிவன்றன்னாரி
சமனனையளிங்கிவர்க்குத்தந்தையா—லமர்புதல்வ
ரெண்ணிருவர்க்கொப்பாகுமன்றேயமன்சமரிற்
பண்ணமைத்தாங்கேறும்பகடு. (226)

இதனுள் உயர்திணையாண்பாற் குயர்திணைப்பெண்பாலு முயர் திணைப்பெண்பாற் குயர்திணையாண்பாலும் உயர்திணையாண்பாற்பன் மைக் கஃறிணையாண்பாலொருமையுஞ் சிறப்பிற்றீர்ந்தனவாய் வழக்கின் றாய்க் கூறுதலால் வழுவாயிற்று.

வாலிலாச்சம்புவெனவாழ்மதங்காவந்ததற்குப்
பாலிலாவுண்டிபடையேமான்—மேலுமக்குக்
கூகைக்கறியிலையேகோதிலாத்தேனுடனே
பாகைச்சொரிந்தென்பயன். (227)

இதனுள் இங்ஙனம் வாலிலாச்சம்புவெனப் பழித்துவண்மைகூறுதல் வழுவன்று. சம்பு—நரி. பகுதி—பரத்தையிற்பிரிதல். துறை—பாணனைப் பழித்தல். (உஎ)

(113) பொதுவினுஞ்சிறப்பினும்புணர்ந்துளவாகி
யிதுவழக்கொடுசெய்யுளெனுமீரிடத்தும்
வெளிப்படைகுறிப்பெனவிழுமியநெறியாற்
கொளப்படுமுவமவுருபினைக்கூறி
னன்னபோலவனையமான
வென்னநேரவிறப்பநிகர்ப்ப
நாடநளியநடுங்கநந்த
வோடவொன்றவொடுங்கவொட்டக்

கள்ளக்கருதக்காட்டக்கடுப்ப
வெள்ளவிழையவெதிரவேய்ப்ப
மருளமலையமாறமதிப்ப
வென்றவந்தவேரவேய
வாங்கவொப்பவமரவியையப்
புல்லவுறழப்புரையப்பொருவ
வனைதுணைகெழுவீழ்தழைசெத்தற்றணி
யென்றிவைநாற்பானெட்டும்பிறவு
மொன்றியதிறத்தாலொழுகுதலுளவே.

(எ-ன்) இஃ துவமேயத்தினையு முவமானத்தினையு மொப்புமைப் படுத்துங்கா லிடையினு மீற்றினும்வரு முவமவுருபினை யினைத்தெனக் கூறுத னுதலிற்று.

(இ-ள்) கொள்ளப்படு முவமவுருபினைக்கூறின் என்பது இது வினைப்பாலுவமம் இது பயனிலையுவமம் இது மெய்ப்பாலுவமம் இஃ துருவினுவமம் என நால்வகைத்தாக மனத்தான் மதித்துக்கொள்ளப் படுதலையுடையவாய்ப் பொதுவானுஞ் சிறப்பானும் பொருந்துவதுளதா யிது வழக்கிட மிது செய்யுளிடமென விரண்டிடத்தினோடுங்கூடி வெளிப் படை குறிப்பென வருஞ் சொற்களுக்கு வரையறைகூறின் அவை, அன்ன போல வென்பன முதலாக அற்று அணி யென்பன வீறாக வெண்ணப்பட்ட நாற்பத்தெட்டும் பிறவுமாகிப் பொருந்துங் கூறுபாட்டா னொழுகலாறுடைத்தா மென்றவாறு.

பிறவுமென்பதனால் எடுத்தோதினவேயன்றி வெல்ல, வென்ற, வியப்ப, ஒத்த, ஒக்கும், தகைய, தகைப்ப, பொற்ப, காய்ந்த, நோக்க, மருளும், புரையும், துலை என்றற் றொடக்கத்தனவும், ஐந்தாம்வேற்றுமை யுருபாய்வரும் இன்னும், என, என்னென வரும் எச்சவாய்பாடுகளாய் வருவனவும், பிறவுங் கொள்க. சொல்லினை யிரண்டு நாலு மயக்கம். இவற்றுட் பலவும் செயவனெச்சமாயவாய்பாட்டான்வந்தனவெனினும் போல வென்னுஞ்சொல் புலிபோலவந்தானென வினையெச்சவாய்பாட் டான் வினைகொண்டும், புலிபோலும்மறவ னென்புழியும் புலிபோன்ற மறவ னென்புழியும் பெயரெச்சவாய்பாட்டாற் பெயர்கொண்டும், புலி போன்மறவ னென்புழி யிடைச்சொல்வாய்பாட்டாற் பொதுவாயும் நிற்கும்.

இவ் வோதியவாய்பாடெல்லா நான்குவமத்திற்கும் பொதுவென்ப தீண்டுக் கூறினர். இனிச் சிறப்புவகையா னுரியவாம்வகை, ஒல்காப் புலமைத் தொல்காப்பியனாரும், உவமவியலுள் "அன்ன வாங்க மான விறப்ப, வென்ன வுறழத் தகைய நோக்கொடு, கண்ணிய வெட்டும் வினைப்பா லுவமம்," "அன்னவென் கிளவி பிறவொடுஞ் சிவணும்," "எள்ள விழையப் புல்லப் பொருவக், கள்ள மதிப்ப வெல்ல வீழ, வென் றுங் கெட்டே பயனிலை யுவமம்," "கடுப்ப வேய்ப்ப மருளப் புரைய, வொட்ட வொடுங்க வோட நிகர்ப்பவென், றப்பா லெட்டே மெய்ப்பா லுவமம்," "போல மறுப்ப வொப்பக் காய்த்த, நேர வியப்ப நளிய நந்த வென், றொத்துவரு கிளவி யுருவி னுவமம்," "தத்த மரபிற் றோன்று மன் பொருளே" என்ற சூத்திரங்களா னுணர்க.

இவற்றுள், அணியென்பது முதலாய சிலவுருபுக ளீறுவிகாரப் பட்டுநிற்பனவு முள. அஃதேல் அணி, வந்த, துலை என்னு முருபுகள் முன்னோர்கூறிய வுவமவுருபுத்தொகைச்சூத்திரங்களு ளில்லையாலோ வெனின், அவை "முலையணிந்த முறுவலாள்" எனவும், 'கயல்வந்த கண்ணியர்' எனவும், "தோல்வி, துலையல்லார் கண்ணுங் கொளல்" எனவும் இலக்கியங்களுட் கண்டமைபாற் காட்டியதெனக் கொள்க. ஒழிந்தன வாய் மறைந்த வுவமவுருபுகட்கு மீண் டிலக்கியங் காட்டி விறப்பப் பெருகும். அவைகட்கும் வந்தவழிக் கண்டுகொள்க. (உ அ)

உ-வது உவமையலங்காரம் முற்றும்.

௩-வது உருவக வலங்காரம்.

114. முக்கியப்பொருளையொப்புடைப்பொருளெனமதித்
திருபெயரொட்டாயிசைப்பதுருவகம்.

(எ-ன்) வைத்தமுறையானே யுருவகமென்னு மலங்கார முணர்—ற்று.

(இ-ள்) உவமேயப்பொருளையு முவமப்பொருளாக வுட்கொண் டிரண்டுபொருளையு மிருபெயரொட்டாக வொற்றுமைகொளுத்தி யுரைப்ப துருவகமென்னும் அலங்காரமா மென்றவாறு.

உம்மையா விரண்டுபொருளையு மொற்றுமைகொளுத்தா துவமை யாத லுவமேயமாத லிரண்டிலொன் றுருவகச்சொல்லொடுதொக்கு மாட்டேறில்லாதுவரு முருவகமு முளவென்றவாறு. மூன்றுதொக்கு வருவனவு முள. இவற்றிற்கெல்லாஞ் செய்யு ளுருவகவிரியுண் முன்னர்க் காட்டுதும்.

அஃதாக; உவமையும் பொருளுமென இதன் முதனூலுடையார் கூறவும், இந்நூலுடையார் முக்கியப்பொருளை முதல்வைத்ததியாதோ வெனின், உவமைபோலாது முக்கியப்பொருளை முதல்வைத் தொப்பு மைப்பொருளை யதன்பின்னர்வைத் தொற்றுமைகொளுத்துவதே யுரு வகத்திற்கு மிக்கதோர் அறிகுறி யென்பது தோன்ற வைத்தாரெனக் கொள்க. (உசு)

115. பொருண்முதலினுமுவமையதாம்புணர்வுழி
யொற்றிடைதோன்றறிரிதலோடொன்றிய
மற்றதற்குறுசொல்விரியாவயினே.

(எ-ன்) உவமைக்கு முருவகத்திற்கு மெய்தியதோ ரைய மறுத் துணர் —ற்று.

(இ-ள்) (முக்கியப்பொருண் முன்னு முவமப்பொருள் பின்னுமாக வருவ துருவகத்திற்கு மிக்க வறிகுறியென்றார்; அவ்வாறன்றிப்) பொருண்முதலேவரினு நிலைமொழியாகி யுயிரு மொற்று மீறாய்வரு முவ மேயச்சொல்லும் வருமொழியா யவைமுதலேவரு முவமச்சொல்லுந் தம்மிற் புணருமிடத் தவற்றினிடையி லொற்றுத் தோன்ற றிரிதலின்றி யவற்றோடு மவ்வுருவகத்திற்குரியசொல்லும் விரியாவிடத் துவமையாம் பகுதியு முள வென்றவாறு.

உதாரணம்:—வாய்ப்பவளம், (வாயென்றபவளம், வாய்பவளமாக.) குழற்கொன்றை, கொங்கைக்குரும்பை யெனவு மிவை யுருவகம். வாய் பவளம், குழல் கொன்றை, கொங்கை குரும்பை யெனவு மிவை யுவமை. "வாய்பவளந், துடிக்கின்றவா" எனவும், "குவவின கொங்கை குரும்பை குழல்கொன்றை" எனவுங் கண்டுகொள்க. ஒன்றிய வென்றதனால் வதன சந்திரன், கரகமலம், கரபுண்டரீகம் எனவும் நிலைமொழியுவமேயவுயிரீற் றின்முன்னர் உவமையாய வருமொழி முதல் வல்லெழுத்துமுன்ன ரொற்றுமிகா துருவகமா மிடமுமுள. இது உவமவிரியினுள், தலைதடு

மாற்றவுவமையின்கண் பொருண்முதலேவந்து முவமையாயினவாறு கண்டுகொள்க. (ருO)

116. அதுவே,
தொகையினும்விரியினுந்தொடரிருவகைத்தே.

(எ-ன்) இதுவு மவ்வுருவக மின்னவகைப்படு மென்கின்றது.

(இ-ள்) அவ்வுருவகமென்னு மலங்காரந் தனக்குரியசொற் றொக்கும் விரிந்தும் வருமொழியொடு தொடர்ந்துநிற்கு மிரண்டுகூறுபாடுடைத்தென்றவாறு.

உம்மை யிரண்டனுண் முதலது சிறப்பும்மையாதலால் அதற்குரியசொற் றொக்குவருதலே சிறப்புடைத்தெனக் கொள்க. ஏனைய திழிவுசிறப்பும்மை. (ருக)

117. அடையிடைபுணரினுங்கடிநிலையிலவே.

(எ-ன்) இதுவு மவ் வுருவகந் தொகையினும் விரியினும் புணர்வுழி யெய்துவதோர் வழுவமைப் புணர்—ற்று.

(இ-ள்) இரண்டுபொருளையுந் தம்மி லொற்றுமைகொளுத்தும் வழி யிடைப்பட வுவமைக்கண் ணடைச்சொற்புணர்த்துக்கூறினு முருவகமேயாம்; நீக்கப்படாதென்றவாறு.

உம்மையான் முதலே யடைபுணரினு நீக்கப்படாதாம்; எனவே தொகைநிலைவகையானும் அடைச்சொற்புணராமலும் புணர்ப்பதே சிறப்புடைத்தென்பதாம். இவற்றிற்குச் செய்யுள் வருமாறு:—

முருகவிழளகக்காட்டைமுன்னிடாவல்குற்றேரும்
பருமணிவடத்திற்சேர்த்தபடாமுலைக்களிறுமுந்திப்
புருவவிற்குனித்து நாட்டப்பொருகணையுடக்கிமைந்தர்
செருவிழந்தோடமார்பிற்செஞ்சவேசெலுத்துவாரே. (228)

என்பது தொகையுருவகம். இதனுள் படாமுலை, பொருகணை யென்பன அடை. துறை - நாடுவாழ்த்து. (குருகாமான்மியம்.)

கண்கழுநீராய்க்காங்கள்காந்தளாய்த்தீங்கிளவி
பண்களாய்ச்செவ்வாய்பதுமமாய்—நண்பனே

வாய்ந்தமடவரற்குமாறன்மணிவரைவா
யீர்ந்தண்பொழிலாமிடம். (229)

இது விரியுருவகம். பகுதி - பாங்கற்கூட்டம். துறை - இயல்பிடங்கூறல். (௩௨)

118. ஒருதொடர்பினுளிருமையுமுறலுளவே.

(எ-ன்) தொகைவிரியுருவக மூணர்—ற்று.

(இ-ள்) தொக்கும் விரிந்தும் வரு மிரண்டுதன்மையு மொரு செய்யுளகத்து வருதலுமுள வென்றவாறு.

பெண்ணாரமுதளித்தபேரின்பத்தீஞ்சுவைபெற்
றுண்ணுநினைவேற்குறுதியெனக்—கண்ணு
லளித்தவருணோக்காமமிர்தினைக்கண்டுள்ளந்
தளிர்த்ததையிங்கார்க்குரைப்பேன்றான். (230)

இது தொகைவிரியுருவகம். துறை - பாங்கியையறிதல்.

கதிர்முலைக்குவடுந்திண்டோட்சயிலமுங்கலவிமுந்நீ
ரெதிர்கொளநிறீஇமத்தாகவிவறலாந்தாம்புபூட்டி
முதிர்பொறிப்புலவர்மாண்பின்முறைமுறைசுழற்றுமாற்றாற்
சதிர்பெறப்பிறந்தவின்பத்தனியமிர்தருந்துரோர். (231)

திணை—பாடாண். துறை—நாடுவாழ்த்து. இதனுள்ளு முதலேயுமிடையினு முவமேயத்தினு முவமையினும் அடைச்சொற் புணர்ந்ததுங் காண்க. (குருகாமான்மியம்.) (௩௩)

119. உரைத்தவையினிவரும்விரிக்குறுபொதுவே.

(எ-ன்) இதுவு மத் தொகைவிரிகளா லெய்து மிலக்கண மூணர்—ற்று.

(இ-ள்) இங்ஙனமுரைத்த தொகையும் விரியு மேற்கூறப்படு முருவகவிரிக்கு மிக்க பொதுவிலக்கணமாமென்றவாறு. (௩௪)

120. இயைபியைபின்மையேகதேச
மொருபொருள்பலபொருளுருவகஞ்சிறப்பே

விருத்தமவிருத்தநட்புவியனிலை
யேகவங்கமனேகவங்க
மவயவமவயவிமுற்றெனவாய்ந்த
நவையறுசிறப்பினுருவகதன்விரியே.

(எ-ன்) உருவக மென்னு மலங்காரத்தின் விரியிலக்கண முணர்—ற்று.

(இ-ள்) இயைபுருவகமும், இயைபிலுருவகமும், ஏகதேச வுருவகமும், ஒருபொருளுருவகமும், பலபொருளுருவகமும், உருவகவுருவகமும், சிறப்புருவகமும், விருத்தவுருவகமும், அவிருத்தவுருவகமும், நட்புருவகமும், வியனிலையுருவகமும், ஏகாங்கவுருவகமும், அநேகாங்கவுருவகமும், அவயவவுருவகமும், அவயவியுருவகமும், முற்றுருவகமும் என ஆராய்ந்த குற்றமற்ற சிறப்பினையுடைய வுருவகவிரி பதினாறு மென்றவாறு.

இவற்றிற்கெல்லாம் உருவகமென்னும்பெயரை யதிகாரத்தாற் கூட்டி யுரைத்ததனோடும் எண்ணும்மைத்தொகையும் விரித்துரைக்கப்பட்டது. நட்பென்பது சமாதானம். இவையெல்லாஞ் சொல்லின்முடியு மிலக்கணத்தன. அல்ல துரையினுங் கொள்க.

அவற்றுள், இயைபுருவக மென்பது ஒரு தொடர்பினுட் பல பொருளையு முருவகஞ்செய்யுங்காற் றம்முட் காரணகாரிய மியைபுடைத்தாகவைத் துருவகஞ்செய்வது:—

நித்தர்முத்தரிற்புகழ்நிபுணன்பராங்குச
னுத்தமஞானமென்றொளிர்திருப்பாற்கடல்
புரந்தசெந்தமிழ்மறையாயபுத்தமிர்த
நிரந்தரமுலகின்மெய்ந்நெறிநிலைதழைவான்
பூமகளெனும்பெயர்புனைமலர்நிதியொடந்
தாமமாதவனெனுஞ்சங்கநீணிதியினை
யருளுடைமையின்வெளிப்படுத்தருளவுமவை
வருபவர்வருகெனவாழ்வுபெற்றிருப்பவும்
வாழ்நாளதன்கண்வழிபடுசரிதையின்
வீழ்நாள்படாமைவீட்டினையெய்தா
தொல்லையிற்பிறந்திறந்துழல்வோர்
வல்வினையதனில்வலியதொன்றிலையே, (232)

இஃ தியைபுருவகம்.

(இ-ள்) அநந்த கெருட சேனாபதிகளோடும் பரமபதத்து முத் தரும் புகழு மிகவும் வல்லோனாகிய சீபராங்குசன் றிருஞான மென் றொளிரும் திருப்பாற்கடலளித்த திருவாய்மொழியெனும் புத்தமிர்தம் எல்லாநாளு முலகின்கண் சீமந் நாராயணனே பரப்பிரமமென்னு முண்மை மார்க்கநிலை தழைக்கும்படி மலர்மடந்தையெனப் பெயர்புனை பதுமநிதி யுடன் கூடிய பரமபதத்தையுடைய மாதவனென்னுஞ் சங்கநிதியைத் தனது திருவுள்ளக்கருணையுண்டானதன்மையால்வெளியிடவு மவை யிருட லேகமாகி முத்திவேண்டினவர் வருவார் வருகவென்று தம்மினீங் காது வாழ்ந்திருக்கவுந் தமக்குள்ள வாழ்நாள் வீழ்நாள்படாமை மனோ வாக்குக் காயங்களால் அருச்சனைபுரியு மொழுக்கத்தினன் மோக்கத் தினைப் பொருந்தாது சிறுவரையிற் பிறந்து மிறந்து முழல்வோ ரும்மையி விழைத்த தீவினைபோல வலியுடையதொன் றில்லை யென்றவாறு.

மலர்நிதி—பதுமநிதி; சங்கநிதி—பாஞ்சசன்னியத்தைத் தரித்த பெரியநிதி; திருவு மாயோனும். இதனுள், திருப்பாற்கடன்முதலாக அடைவே காரணகாரியத்துடனியைந் துருவகமாயினவாறு காண்க. பா—நேரிசையாசிரியம். திணை—பாடாண்பொதுவியல். துறை—பனுவல் வாழ்த்து.

ஆரவடநீரருவியா மாணிக்கத்
தார்கெழுசீர்த்தேனருவிதானாகப்—போழகு
பாரிக்குமாரன்பனிவரைமான்வார்புனைந்து
பூரிக்குங்கொங்கைப்பொருப்பு. (233)

இஃ தியையிலுருவகம். ஆரவடம் — முத்துவடம். மாணிக்கத் தார் - மாணிக்கமாலை. பகுதி — பாங்கற்கூட்டம். துறை — செவ்வி செப்பல்.

ஏகதேசவுருவக மென்பது ஒரு செய்யுளகத்து ஓரிடத் தொரு பொருளை யுருவகஞ்செய்யுங்கான் மாட்டேறுபெற வுருவகஞ்செய் தப் பொருளோடு சம்பந்தமுறப் பிறிதோர்பொருளைச் செய்யுளகத்துப் பிறி தோரிடத்து மாட்டேறுபெற வுருவகஞ்செய்யாது தொகைநிலைவாய் பாட்டாற் கூறுதல்:—

அறியாமையென்னுமகவிருளைச்சீக்கப்
பிறியாதறிவிருக்கப்பெற்றுங்—குறியாத
தீச்சொற்பயில்வரேசெண்பகமாறன்பவள
வாய்ச்சொற்றிறம்பயிலாமல். (234)

இஃது ஏகதேசவுருவகம். இதனுள் அறியாமையென்னு மகவிருளை யென மாட்டேறுபெற வுருவகஞ்செய்ததனோடு மெதிராகச் சம்பந்தமுற ஞானமாம்விளக்கென மாட்டேறுபெற வுருவகஞ்செய்யாது தொகை நிலைவாய்பாட்டா னறிவெனக் கூறியவாறு காண்க.

செண்பகமாறன் பவளவாய்ச்சொல்—திருவாய்மொழி. திறம்—சித்த சித்தீச்சுரத்தை மயக்கமறவிளங்கக்கூறுங்கூறுபாடு. பயிலாமல்—இடைவிடா தூணர்வினுற் சிந்தியாமல். இது, உவமேயமு முருவகவுருபு மாகிய இரண்டுதொக்க தொகையுருவகம். ஞானவிளக்காவது திருவாய் மொழி; பிறாறியாமையென்னு மிருட்டறக் கூறிய ஞானமாகிய விளக்கு. பயில்வரே யென்பது பரசமயவாதியரை. ஏகாரம் — இரக்கத்தின்கட் குறிப்பு. துறை - இதுவுமது.

புன்பனுவனஞ்சம்பொசிக்கின்றபேதையர்பே
ரின்பமுறமெய்யுணர்வாரேனோருந்—தன்பால்
விருந்தருந்தத்தானருணுவீறனூர்கூறு
மருந்தருந்தாரந்தோமதித்து. (235)

இதுவுமது. இதனுள் நாவீறனூர்கூறு மருந்தென்பது திருவாய் மொழியாகிய மருந்து. மருந்தென்பது - அமிர்தம். எனவே திருவாய் மொழியாகிய மருந்தென வுருவகஞ்செய்ததனோடுஞ் சம்பந்தமுறும்படி பிறவியாகிய பிணியைத்தீர்த்து முத்தியாகிய பேரின்பத்தைத் தரு மருந்தென வுருவகஞ்செய்யா துவமேயமுதலிய மூன்றினையு மிருவகைத் தொகைநிலைவாய்பாட்டாற் கூறியவாறு காண்க.

மெய்யுணர்வார்—தத்துவத்திரயத்தி னுண்மையுணர்வார். தன்பால் விருந்தருந்த - அம் மூன்றினையும் மயக்கமறவுணர்த்தும் ஞானமான அமிர்தத்தைத் தமது மெய்யுணர்வா லுவட்டாது புதுவதுபுதுவதாக வுரிசிக்கவும் என்க. அருந்தாரந்தோ என்ப திரக்கம். மெய்ப்பொருண் மாறன்—உண்மைப்பொருளை யுணர்ந்தமாறன்; உண்மைப்பொருளாகிய மாறனென்றுமாம்.

மிக்கவரிதாளின்மெய்யன்பிணைவித்தித்
தக்கதவந்தினமுந்தான்பொழிந்துட்—புக்கதோர்
ஞானமுருவியபின்னன்முத்தியைவிளைக்கு
மானபரன்காரிதருமன். (236)

இது, உவமையு முருவகவுருபு மாட்டேறில்லாதுவந்த வுருவகம்; என்னை? அரிதாளாகிய செய்யின்கண் அன்பாகிய வித்தை விதைத்துத் தவமாகிய நீரைப்பொழிந்து ஞானமாகிய முளையுருவியபின் முத்தியாகிய போகத்தை யென மாட்டேறுபெறாதுவந்தமையானுணர்க. ஒழிந்த அகலமுரையிற்கொள்க. இவை யிரண்டுதொகைக்கது. இவற்றுண் முன்னையது பனுவல்வாழ்த்து. இது திணை—வாகையைச்சார்ந்த புறத்திணை. துறை—அறக்களவழி. இவை மூன்று மாட்டேறிலாதுவந்த வுருவகம். இவற்றிற்கு "அறவாழி யந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லாற், பிறவாழி நீந்த லரிது" எனவும், "சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி யினமென்னு, மேமப் புணையைச் சுடும்" எனவும், "பவளவாய்ச் செறுவு தன்னு ணித்திலம் பயில வித்திக், குழவினா றெழுந்து காளைக் கொழுங் கதிரீன்" றெனவும், "அஞ்சவரு தானை யமரென்னு நீள்வயலுள், வெஞ் சினம் வித்திப் புகழ்விளைக்கும்" எனவும் முந்து நூல்களினும் அடைவே வந்தவாறு காண்க.

ஒருபொருளுருவக மென்பது உயர்திணை அஃறிணை யென்று சொல்லப்பட்ட காட்சிப்பொருளுங் கருத்துப்பொருளு மொருசெய்யுளகத்துவந்தா லவற்று ளொருபொருளை யுருவகஞ்செய்தல்:—

பிறப்பாரிறப்பார்பிறப்பாயவேலை
துறப்பாரொருபோதுந்தூவார்—சிறப்பாகுஞ்
செய்படைத்ததென்னரங்கர்சேவடிமேன்மானிடாரய்க்
கைபடைத்தும்வாழ்ந்தகதை. (237)

இஃ தொருபொருளுருவகம். அரங்கன், மானிடர்கை, சேவடி யென்னும் உயர்திணை யஃறிணைகளை யுருவகஞ்செய்யாது கருத்துப் பொருளாய பிறப்பென்னும் அஃறிணையை யுருவகஞ்செய்தலா னென்றறிக. திணை - பாடாண். துறை - வாயுறைவாழ்த்து.

பலபொருளுருவக மென்பது அவ்விருபொருளையு மொருசெய்யு ளகத் துருவகஞ்செய்தல்:—

தீதற்றமெய்ஞ்ஞானத்தெப்பமுடன்மேதகுநால்
வேதக்கடல்கடந்தவித்தகத்தாற்—கோதற்ற
வந்தாமத்தீவினுட்புக்காழியானுமணியைத்
தந்தானம்பூதூர்வந்தான். (238)

இது பலபொருளுருவகம். அந்தாமத்தீவு—விரசைக்கக்கரையாகிய பரமபதம். திணை—பாடாண். துறை—அறுமுறைவாழ்த்தினுண் முனிவனைவாழ்த்தல்.

உருவகவுருவக மென்பது ஒன்றனை முதலே யுருவகஞ்செய் ததனைப் பெயர்த்து முருவகஞ்செய்தல்:—

மத்தம்புரியவிச்சைவாராழியாமிருளென்
சித்தமினித்தேறுமேதேமகிழ்த்தார்—முத்தன்
முகத்தாமரையாமுழுமதியென்செவ்வி
யகத்தாமரையகத்தாக. (239)

இஃ துருவகவுருவகம். இதனுள், மத்தம்—மயக்கம். புரிதல்—தருதல். அவிச்சை—அறியாமை. அவிச்சையாம் வாராழி யென வுருவகஞ்செய்ததனை மறித்து மிருளென வுருவகஞ்செய்ததும் முகத்தாமரையா முழுமதி யெனவும் உருவகவுருவகம் வந்தவாறுங் காண்க. துறை—இதுவுமது.

சிறப்புருவக மென்பது ஒருபொருளையெடுத் ததற்குச் சிறந்த அடைகளை யுருபித் தவற்றானே யதனை யுருபித்துரைப்பது:—

நாரங்குழலாய்நளினமுகமாய்முகுளங்
கூர்வெம்முலையாய்க்கொடியிடையா—யூர்திரைகள்
வெண்டுகிலதாகிவிளங்குமகிழ்மாறன்
வண்குருகூர்த்தண்பொருநைமாது. (240)

இது சிறப்புருவகம். நாரம்—பாசி. வெம்முலை—விருப்பத்தைத்தரும் முலை. பொருநைமாது—பொருநையாகியபெண். துறை—நதிவாழ்த்து.

விருத்தவுருவக மென்பது ஒருபொருட்குக் கூடாதனபலவுங் கூட்டி யுருவகஞ்செய்வது:—

வேம்பாலிசைந்தசுவைவெவ்விடத்திஞேடுதித்த
தாம்பாலதன்றறலின்பாலன்று—பாம்பா
லிமிழ்திரைவாயிற்பிறந்ததென்பதன்றுமாறன்
றமிழ்மறையாஞ்செஞ்சொலமிர்தம். (241)

இது விருத்தவுருவகம். வேம்பு-கைப்பு. கைப்பைத் தனக்குச் சுவையாகவுடைய நஞ்சிஞேடும் பிறந்ததாம்பகுதியையுடையதன்று; அறலின்பாலன்று – சலத்தினதுமயம ம்பகுதியையுடையதூஉமன்று; பாம்பா...............தன்று—பாம்பாகிய தாம்பா லாரவாரிக்குந் திரையையுடைய கடலைக் கடையப் பிறந்ததென்று கூறுவதூஉமன்று; காரிமாறப் பிரான் றிருப்பவளத்திற் பிறந்த திருவாய்மொழியாகிய வினிய சொல்லின்மயமா மமிர்தமென்றவாறு.

அமிர்திற்கு விடத்திஞேடுதிப்பதுமுதலாயதுஞ் சலமயமாவதுஞ் சுபாவம். இந்த அமிர்தத்திற் கவையின்மையால் விருத்தவுருவகமாயிற்று. துறை—பனுவல்வாழ்த்து.

அவிருத்தவுருவக மென்பது ஒருபொருட்குக் கூடுவனவாந்தன்மை பலவுங் கூட்டி யுருவகஞ்செய்வது:—

ஓர்பொழுதுந்துஞ்சாதலமந்துறுதுளித்தாம்
போர்புனேவேலண்ணல்பொருட்கேகிற்—சீர்பெருகுந்
தண்ணூர்பசுந்துளபத்தார்மார்பன்றஞ்சைமான்
கண்ணுகியகார்க்கடல். (242)

இது, அவிருத்தவுருவகம். அண்ணல்—அண்மைவிளி. ஒழிந்த அகல முறையிற்கொள்க. பகுதி—பொருள்வயிற்பிரிதல். துறை—செல வழுங்குவித்தல்.

நட்புருவக மென்பது ஒருபொருளை நன்ருக வுருவகஞ்செய்து அதனைத் தீங்குதருவதாகக் கூறி யத்தீங்கு அதனுல்வந்ததன்றென் றதற்குப் பிறிதோர்காரணங் கூறுதல்:—

தீங்கிளவியென் றுயிர்க்குந்தெள்ளமிர்தம்வெவ்விடத்துப்
பாங்கிழமைகூர்தலணிமாற—ஞங்கைப்
பதித்திருவேதீவினையின்பாங்காயதென்றே
மதித்திருக்குமின்றென்மனம். (243)

இது நட்புருவகம்.

(இ-ள்) இனிய கிளவியென வொலிக்கு மொள்ளிய வமிர்தமானது வெம்மையைச்செய்யும் விடத்தின்கயப்பா மூரிமையை விளைத்தல் நின்னிடத்துண்டாய பாங்கினு லுண்டாயதல்லவென்று மெனது தீவினையின் பாங்காயதென்றுஞ் சந்தயமற விசாரியாநின்ற திப்பொழு தென்மன மென்றவாறு.

உயிர்த்தல்—ஒலித்தல். கூர்தல்—விளைதல். பாங்கு—வாரம். பகுதி—பரத்தையிற்பிரிதல். துறை—பரத்தையிற் பிரிந்துவந்த தலைமகன் வாயில்வேண்டப் புறத்தொழுக்க முண்டென்று வாயின்மறுத்துக் கடுஞ் சொற்கூறிய விற்பரத்தையுடன் புறத்தொழுக்க மின்றென்றுகூறித் தன தாற்றுமையே வாயிலாகக் கூடியது.

வியனிலையுருவக மென்பது ஒன்றினங்கம் பலவற்றையு மொரு செய்யுளகத்துக்கூறி யவற்றுட் சிலவுருவகஞ்செய்து சிலவற்றை யுருவகஞ்செய்யாது அவயவியை யுருவகஞ்செய்வது:—

வையம்பரவுமகிழ்மாறன்செவ்வாயுந்
துய்யநயனத்துணைப்போதுஞ்—செய்ய
முகத்தாமரையுடன்கைம்முத்திரையுங்கண்ட
சுகத்தார்க்குமுண்டோதுயர். (244)

இது வியனிலையுருவகம். இதனுள் அவயவி முகத்தாமரை. இதன் கண் ணவயவியுடன் அவயவங்களை யுருவகஞ்செய்து மற்றையொன்றை யுருவகஞ்செய்யாமையுங் காண்க. துறை-கடவுள்வாழ்த்து. பழிச்சினர்ப் பரவலுமாம்.

ஏகாங்கவுருவக மென்பது ஒன்றினங்கம் பலவற்றினு ளொன்றை யுருவகஞ்செய்வது:—

மாறன்பனிவரைமேல்வாண்முகச்செவ்வாயிவட்கு
வேறன்றிவளெனவேமெய்யுணர்விற்—கூறென்றக்
காட்டுகின்றதொண்பொற்கனங்குழைமேற்பல்காலு
மோட்டுகின்றகட்காவியுற்று. (245)

இது, ஏகாங்கவுருவகம். ஒருபொருளாவ திதனுண் முகமாகிய அவயவி. இதன்பொரு ளுரையிற் கொள்க. துறை—பாங்கியை யறிதல்.

அநேகாங்கவுருவக மென்பது ஒன்றினங்கம் பலவற்றையு முருவகஞ்செய்வது:—

செங்கைத்தளிர்நயனச்செவ்வேன்மறைப்பவர
மங்கைத்திருமால்வரைமடவாய்—கொங்கைக்
களியானைக்கட்படாநீக்கியோகண்ணுற்
றெளியானைக்காக்குமியல்பு. (246)

இது, அநேகாங்கவுருவகம்.

(இ-ள்) திருமால் சீவரமங்கைவரையில் வாழும் மடப்பத்தை யடையாய்! பெறுதற்கரிய நின்னோடும் பேரின்பத்தை யனுபவித்துப் பின்ன ரதுபெறாது வருத்தமிக்கு நின்கண் ணெளியனுவேனைக் கருணை புரிந்து காக்குமியல்பு, செங்கையாகிய தளிரா னயனமாகிய சிவந்த வேலை மறைத்துக் கொங்கையாகிய களியானையினது முகபடாத்தினை நீக்கிக் கொல்லும்படியே யவற்றை வெளியில் வைத்ததோ? இஃது தருளுக்குத் தகாதென்றவாறு.

பகுதி - பாங்கற்கூட்டம். துறை—நாணிக்கண்புதைக்கவருந்தல். எளியானை யென்றது தன்னைப் பிறன்போலக்கூறல்.

கொங்கைக்துவடுங்குழற்காருமேலிருந்த
சங்கைக்கருண்மாயன்றஞ்சைவாய்—மங்கைக்குப்
பொய்யேயுளதென்கைபோற்றுதிலதென்கை
மெய்யேயிடையாம்வெளி. (247)

இதுவுமது. சங்கை - வளம். ஏகார மிரண்டும் எதிர்மறை. இடையாம்வெளி யுளதென்கை பொய்யே யிலதென்கை மெய்யேயெனத்

தேற்றேகாரமாக்கிக் கூட்டினுமாம். பகுதி - இடந்தலைப்பாடு. துறை—மருங்கணைதல்.

அவயவவுருவக மென்பது அவயவமே யுருவகஞ்செய் தவயவியை யாளாது கூறுவது:—

நிறத்தாரைவேலிமையாநீடுறையைநீக்கிப்
புறத்தாயிடரிழைக்கும்போர்மே—லறத்தான்
வருந்தாவிரங்குவதென்மாலரங்கத்தின்பம்
பொருந்தானனத்தாய்புகல். (248)

இது, அவயவவுருவகம்.

(இ-ள்) திருமாலரங்கத்தினிடத் தழகுகுடிகொண்ட முகத்தினையுடையாய்! நினது செவ்வரிபரந்த கண்ணாகியவே லிமையாகிய வுறையை நீக்கி வெளிப்பட்டுத் துன்பத்தைச் செய்யும் பூசன்மேலும் யான் மிகவும் வருந்தும்படி கலுழ்வதற்குக் காரணம் யாதெனக்கூறுவாயாகவென்றவாறு.

தாரை - கண். உறை—கவிசனை. அற—மிக. வருந்தா—வருந்த. இரங்குதல்—அழுதல். இன்பம்-ஆகுபெயர். பகுதி—பொருட்குப்பிரிதல். துறை—கருத்தறிந்தழுத கண்ணீர் துடைத்தல்; என்னை? பொருள்வயிற்பிரிந்த தலைவன் உள்ளக்குறிப்பினைக் கரந்து பன்னாளும் புதுவதுவாக வுறப்பினைப்பாராட்டியதா லிஃதொன்றுடைத்தென அவனது பிரிவையுட்கொண்டழுத கண்ணீராதலின்.

அவயவியுருவக மென்பது அவயவியை யுருவகஞ்செய்து அவயவத்தை யாளாதே கூறுவது:—

மூதிராமுலையுமுறுவற்குறிவந்
தெதிர்பாயுங்கண்களுங்கண்டெய்தி—வதனமதிப்
பொற்றொடியைமாறன்பொருப்பிடைவைத்திங்கெதிர்ந்த
வற்புதனேதிண்ணியனவான். (249)

இஃ தவயவியுருவகம். துறை—பாங்கன்றலைவனைவியத்தல். இதனுள் வதனமதியென்றது அவயவியுருவகம்.

பெண்ணமுதேயங்கையாற்பேரைமால்தண்சிலம்பிற்
றண்ணறும்பூவேங்கைதலைநாட்செய்—கண்ணி
தனைக்கொய்தனமேற்றமரிற்செறிப்பான்
றினைக்கொய்திறம்விளையாதே. (250)

இது மகா அவயவியுருவகம். இதனுள், பெண்ணமுதே யென்றது மகா அவயவியுருவகம். தண்ணறும்பூ..................கண்ணி—குளிர்ந்த நறுவிதாம் பூவாமுன்பே வேங்கை வைத்த அரும்பு. பகுதி—பகற்குறி. துறை—வேங்கையொடுவெறுத்து வரைவுகடாதல்.

முற்றுருவக மென்பது அவயவ அவயவிகளை யேற்றவிடத்தோடும் பிறவிடத்தினோடு முற்ற வுருவகஞ்செய்வது:—

வட்டவதனமதியுநுதற்பிறையும்
பெட்டநகைநிலவும்பேர்த்தறியாக்—கட்டளகக்
கங்குலின்மேன்மாறன்கனவரைவண்டீரிருந்தா
லிங்கிவளுக்குண்டோவிடை. (251)

இது முற்றுருவகம். பெட்ட — விரும்பப்பட்ட. பேர்த்தறியா—நீக்கியறியாத. கட்டளகக்கங்குல் - ஐம்பாலாகக் கோலஞ்செய்த குழலாகிய விருட்பிழம்பு. ஒழிந்த அகல முரையிற்கொள்க. பகுதி—இடந்தலை துறை - வண்டகற்றி மருங்கணைதல்.

மண்படர்தாட்டாமரையுமைபடர்கட்காவியையுங்
கொண்டுமுலைக்கோங்கரும்புங்கொண்டதோர்—பெண்கொடியைக்
கண்டனையேனண்பாகமுறலைமாறன்சிலம்பில்
வண்டமர்தண்பூஞ்சோலைவாய். (252)

இதுவுமது. பகுதி — பாங்கற்கூட்டம். துறை — கழற்றெதிர் மறுத்தல். இதன்பொரு ளுரையிற்கொள்க.

ஆக இயைபுருவக முதலாக முற்றுருவக மீறுகப் பதினாறு மடைவே கண்டுகொள்க. (௩௫)

121. உரைபெறுகிலேடைவேற்றுமையுடனேது
வபநுதியுவமையென்றவற்றொடும்விரவும்.

(எ-ன்) அவ்வுருவகம் என்னும் அலங்காரம் பிறவாயு அலங்காரங்களோடும் விரவிவருமென்ப துணர்—ற்று.

(இ-ள்) சிலேடைமுதலாக வுவமையீறாகக் கூறப்பட்டவைந்தலங் காரங்களோடும் விரவியும் வருமென்றவாறு.

உரைபெறுசிலேடையென்றதனால் வினைமுதலிய நான்கு காரணத்தா னுவமை பிறப்பதேயன்றி யிரட்டுறமொழியுஞ் சொற்பொருள் காரணமாகவு முவமை பிறக்கும் என்பதும், சிலேடை இக்கூறிய வுரு வகத்திற்கும் காரணம், இனிமேல்வரும் பிற அலங்காரங்கட்கு முப காரங்களாம் என்பதுந் தோன்ற நின்றதுங் காண்க. இச்சூத்திரஞ் சிங்க நோக்காம்.

அவற்றுட் சிலேடையுருவக மென்பது ஒருபொருளை யொரு செய்யுளகத் திருபொருள்பயப்பதாகப் பலவிடத்தினும் புணர்த் திறுதி யினு மிருபொருள்பயப்பதாக வுருவகஞ்செய்வது:—

விற்புடைக்கீழ்மன்னிமிகுநாணிடைதழீஇச்
சுற்றுடைமாண்கோதைத்தொடைசெறியும்—பொற்புடைத்தாம்
பாணிழையாவண்டலவும்பைந்துளவமாலுறையூர்
மாணிழையார்சேயரிக்கண்வண்டு. (253)

இது செம்மொழிச்சிலேடையுருவகம். கண்ணிற்கும் அம்பிற்குஞ் சிலேடை.

(இ-ள்) (கண்ணின்மேற் சொல்லுங்கால்) வில் - புருவம். இஃ துவமப்பேர். புருவத்தின்பரப்பின்கீழ்த் தங்கிப் பெருத்த நாணிடத்துக் கூடிச் சுற்றுதலுடைய மாட்சிமைக் குழலின்மேல் மாலையை மேனோக்கத் தாற் பொருந்துங் கண்ணாகிய வண்டெனவும், (அம்பின்மேற் சொல்லுங் கால்) தனுவி னகன்றவிடத்துக்கூடி மிகுந்த நாணுக்குநடுவே யெய்தி விரலிற் கட்டுதலுடைய விறற்சாபமுறத் தனுவிற்குவல்லார் தொடுத்தெய் வதை யெய்தும் அம்பு எனவுங் கொள்க. பகுதி - சேட்புலை. துறை- கண்ணயப்புரைத்தல்.

பூங்குமிழ்மீதேறிப்புணர்க்குமதனண்கலைதோய்ந்
தோங்குவனத்தாமரையினுட்பயினும்—தேங்குபுனல்
வெள்ளக்குளத்துறைமால்வெற்பினில்வாழ்மெல்லியலார்
வள்ளைக்குழையார்கண்மான். (254)

இது பிரிமொழிச்சிலேடையோடுங்கூடியவுருவகம். கண்ணிற்கும் மானிற்குஞ் சிலேடை.

(இ-ள்) (கண்ணின்மேற் சொல்லுங்கால்) பொலிவையுடைய மூக்கின்மீதேறிக் காமன் புணர்க்கு நல்லகலேயைக் கற்றுப் பெருத்தெழுந்த தண்ணீரகத்துத் தாமரைபோன்ற முகத்தினுட்டங்கு மிகுந்த புனலையுடைய திருவெள்ளக்குளத்துறையுந் திருமால்வெற்பில்வாழு மெல்லியலாராகிய வள்ளைக்குழையினையுடையார்கண்ணுகிய மான் எனவும், (மானின்மேற் சொல்லுங்கால்) பூவினேடுங் கூடிய குமிழாகிய மரத்தினைப் பாய்ந்து, காமத்தைத் தன்னிடத்தே விளைக்கும் நல்லகலையைப் புணர்ந்து, ஓங்கிவளருங் காட்டின்கண்ணுளவாம் மரைகண்டு பழகு மெல்லிய வியல்பு மிகுந்த வள்ளைக்கொடியினது குழையைப்பருகுங் குறிப்பினையுடைய மானெனவுங் கொள்க. இதனுள், கண்மா னென்ப துருவகம். புணர் மதன் என்பதனை மதன் புணர் எனப் பாடமாற்றுக. துறை—இதுவுமது.

மன்பார்குளிர்விக்குமாறன்குடைமதியு
நன்பான்மதியுமதிநாடுங்கான் — மூன்பாங்
குடைமதிக்குண்டாவதல்லகுன்றுதன்மைவானத்
தடைமதிக்குண்டாங்குன்றுதல். (255)

இது குணவேற்றுமையுருவகம். வடநூலார் வெதிரேகவுருவகமென்பது மிது. குன்றுதல் - தேய்தல். மை - களங்கம். குடைமதியென்ப துருவகம். திணை - பாடாண். துறை - குடைமங்கலம்.

பேரழகார்காரிதரும்பிள்ளைமாணிக்கநெறி
சீரியமாணிக்கமுறுஞ்செய்கைத்தோ—வாரியர்கா
ளூற்றுளதேற்றத்துவங்களெல்லாமுணர்ந்துணர்த்தக்
கற்றுளதாய்க்காணேன்களித்து. (256)

இதுவுமது. இதனை விலக்குருவக மென்றுங் கூறப்படும். துறை - அறுமுறைவாழ்த்தினு ளடங்கும்.

வேகத்தால்வாயுவதாம்வெண்ணீர்மைமேதருகே
மாகத்தாற்றூரசயிலாதியா—மோகனிலை
காய்ந்தவுணர்வாற்சுகனுங்காசின்றயிர்திரளா
லாய்ந்துணர்ந்தவானரசிங்கம். (257)

இது, ஏதுவுருவகம். வெண்ணீர்மைமேதகுகேழாகம்—வாலிதாந் தன்மை பெருமையோடு பொருந்துந் திருமேனி. தாரசயிலாதி—வெள்ளி யாங் கயிலை. மோகநிலை - காமத்தினிலைமை. சுகன் - சுகப்பிரமவிருடி. ஆசின்று - குற்றமின்றி. அயிந்திரநூல் - ஐந்திரவியாகரணம் வானர சிங்கம் - சிறியதிருவடி. திணை - வாகை. துறை - சால்புமுல்லை.

முத்திரைக்கையன்றுமுளரிமலர்திதுபூந்
தொத்தணிமார்பன்றுசுவணகிரி— பத்தி
திகழானனமன்றிதுதிங்கள்வாச
மகிழ்மாறனன்றிவனுமால். (258)

இது, அபநுதியுருவகம். பத்தி—பரமபத்தி ; அஃதாவது அன்பு. சுவணகிரி - பொன்மலை. இதனுள் மகிழ்மாறனன்றிவனுமால் என்பது உருவகம். திணையுந் துறையு மிதுவுமது.

விடமனையகட்காவிமெல்லியலாள்சோர்ந்தாள்
குடவரைபுக்கான்வெயிலோன்கொல்வா—ரடல்வேடர்
வேலவனேகங்குல்விருந்தருந்திவைகறைவாய்
மாறனுறையூர்க்கெய்தன்மதி. (259)

இஃது உவமையுருவகம். பகுதி - உடன்போக்கு. துறை — நெறி விலக்கல்; விருந்துவிலக்கென்பதுமிது. இதனுள், 'விடமனையகட்காவி' என்பது உவமையுருவகம். " மையோர்குவளைக்கண்வண்டினம்வாழும் " என்பது மிது.

பொற்பிற்குரியதிருமால்கரிசொன்னபோழ்தினிலச்
சொற்பிறபடச்சென்றுதவியமாயன்றுவரையின்வாய்
வெற்பிற்புடைக்குந்தனவேழமானவிலங்கறுத்தாற்
கற்பிற்குரியவிப்புல்லோதடுத்திடைகாப்பதுவே. (260)

இதுவு முவமவுருவகம். இதனுள் வெற்பிற்புடைக்குந் தனவேழ மென இடையி லடையடுத்துவந்தவாறுங் காண்க. பகுதி—மணஞ்சிறப் புரைத்தல். துறை - அக்கினிசாக்ஷியாகத் தலைவன் றலைவியைக் கைப் பற்றித் தீவலம் செய்து, வசிட்டனையு மருந்ததியையு மிருவருங்கண்டு

மணவறைக்கட் பள்ளியிடத்தாராயகாலைத் தலைவ னருமறைச்சூடங் கிற்குப் படுத்த தருப்பையைநோக்கித் தலைவி காதலையுந் தனதாற்றாமை யையு முட்கொண்டுரைத்தல். (௩௬)

122. ஒழிவறவுருவகமுடனேயுவமையு
மொழிவதற்கடங்காமுறைமையவாகலின்
மொழியப்புகும்யான்முதுணர்விலனு
லிவற்றினுக்கிதனுளிசைத்தவையொரீஇவரு
மவற்றையுமிவற்றினகப்படவுரைகொளீஇ
முற்றவுணர்த்தியமுறைமையவாக்குதல்
கற்றோரறிவின்காட்சியதாகும்.

(எ-ன்) மேற்சொல்லிய வுருவகமு முவமையு மென்னு மிரண் டிற்கும் புறனடையுணர்—ற்று.

(இ-ள்) உருவகமு மதற்குக் காரணமாகிய வுவமையு மென்னு மிரண்டலங்காரமு முற்றக்கூறுவதற் கடங்கா முறைமையையுடைய வாகலானும் அவற்றைக் கூறுவதற்காக முந்துநூலுணர்ந்தோரவையின் கண் புகுதாநின்ற யான் முதியவுணர்விலனுதலானும் இக் கூறிய விரண் டலங்காரத்திற்கு மிந்நூலுள் யானிசைத்த தொகைவிரிகளைக் கடந்து வருவனவா முருவக வுவமங்களையுங் கூறியவிவற்று ளகப்படுவதாக வுரை கொளுத்தி முழுதுமுணர்த்திய முறைமையவாக்குதல் அலங்கார முதலிய விலக்கணங்களோடு மிலக்கியங்களையு முற்றக்கற்றோரறிவினுக் கழகென்றவாறு.

உவமையின்வழி பிறந்த துருவகமாதலி னுவமைக் குரைக்கத் தகுவனவெல்லா முருவகத்திற்கு முரைத்துக்கொள்க. ஈண் டுருவகமுற் கூறியதனு லதிகார மிடையறுதெனக் கொள்க.

கூறியவற்றை யொரீஇயினபோல்வருமவற்றுட் சில வருமாறு:—

காமரதத்தோகைகளிவண்டினமுலவுந்
தாமரைசாராம்பற்றளிநறவுண்—டேமுறுபே
ரின்பத்தினும்பெரிதேயெவ்வுண்மாலைப்பணிந்து
துன்பற்றவர்சேர்சுகம். (261)

இது, பேதத்தை யபேதமாக்கின வாய்பாட்டால்வந்த வுருவகம். இது முதலே உவமேயமு முவமவுருபுந் தொக்க தொகையுருவகம். என்னே? கண்ணாகிய வண்டினம் முகமாகிய தாமரை வாயாகிய வாம்பல் பானமாகிய நறவு என்பன முறையே தொக்கதா லென் றறிக. ஆனால் அவற்றினை யவ்வாறுக்கியதென்னே? வண்டினம்போன்ற கண்களுலவுந் தாமரைபோன்ற முகத்தி லென்பனவோடு மேனையவுந் தொக்கதாக விரித்துத் தொகையுவமமாக்கப்பெறுவோவெனின், ஆகாது; என்னே? முற்றுவமவாய்பாடாக வுவமமொன்றனையுங் கூறும்வாய்பாடு உவமையுருவக மென்னு மிரண்டற்கும் பொதுவாய்பாடேனு மீண்டு மருட்கை யென்னு மெய்ப்பாட்டுவயத்தனாகிப் புணர்ச்சியை மகிழ்ந்து பேதத்தை யபேதமாக்கி விதந்துரைத்தானாதலிற் றொகையுருவகமாக வுரைகோடலே யாம். காட்சிக்குத் "திருவளர்தாமரை" யென்னு முதற்பாட்டு மருட்கை வயத்தனாகிக் கூறிய இவ்வாய்பாடென் றுணர்க. அற்றேல், இதனகத்துப் பேதத்தை அபேதமாக்கிய தியாதோவெனின், தாமரை வேறு முகம் வேறாயிருக்கவு முகத்தைத் தாமரையென்றே பேதமறக் கூறியவாற்றானு மேனையுவமேயத்தினையு மவ்வாறே கூறியவாற்றானு முணர்க. பகுதி-இயற்கை. துறை - புணர்ச்சிமகிழ்தல்.

மேவி நந்தவிண்ணோர்வியத்தக்கசெம்மையதாய்ப்
பாலிகையுட்டெள்ளமுதம்பாலிக்குஞ்—சால்புடைய
திங்களைக்கண்டான்மாறன்செம்பொற்றுடரியுள்யார்
தங்களுளங்கோடாதவர். (262)

இது, அபேதத்தைப் பேதமாக்கிய சிலேடைவாய்பாட்டான்வந்த அற்புதவுவமை. இதனுள் அபேதத்தைப் பேதமாக்குதல் சந்திரனொருவனன்றிப் பிறனொரு சந்திரனின்றாகவுஞ் செம்மையுடையதாய்ப் பாலிகையுட் டெளிந்த அமிர்தத்தை விளம்புந் திங்களெனப் பேதித்துக் கூறினமையா னறிக. பாலிகை - வள்ளமும் அதரமும் ஆதலாற் சிலேடை. பகுதி - இதுவுமது. துறை - தலைவனைவியத்தல். இதுவுந் தொகைநிலையுளடங்கும்.

காவிற்பிறவாக்கனகக்கொடிகமல
வாவிக்கடங்காமடவன்னம்—பூவிற்

பிறவாநறுந்தேறல்பேர்நகர்மால்வெற்பி
னுறவாய்நின்றபுண் ணூறு. (263)

இது, சம்பந்தமுள்ளதைச் சம்பந்தமில்லையாக்கி வந்த வுருவகம். அன்றியும், காவிலும் வாவியிலும் என்றமையால் விரோதவலங்காரமு மிதனுள் விளைப்பாருமுளர். "மலையிடைப் பிறவா மணியே யென்கோ, வலையிடைப் பிறவா வமுதே யென்கோ" என்பனவற்றையும் விரோத வலங்கார மாக்குமாறுபோல என்றறிக. பகுதி - இதுவுமது. துறை-இயல்பிடங்கூறல்.

கோதிலாப்பொன்னைக்குழைத்துமதன்றாரியக்கோல்
காதலாற்கைப்பற்றிக்காட்கரைமால்—போதங்
குழைந்தருள்பொற்கொம்பிற்குறித்ததென்கோவின்பந்
தழைந்தருளிக்கொம்பினையேதான். (264)

இது சம்பந்தமில்லாததனைச் சம்பந்தமாக்கிக் கூறிய மோகவுவமை. விகாரவுவமை அதிசயவுவமை எனினு மாம். பகுதி—இயற்கை. துறை—நலம்புனைந்துரைத்தல்.

மாயன்குருகாபுரியனையமாதரா
ளாயந்தொழுவாழநுமையுறிற்—றூய
கனவென்கோகூடிக்குழைந்ததனைக்காமர்
நனவென்கோயாதென்கோநான். (265)

இதனுள், குருகாபுரியனையாளென்பது குருகாபுரி செயற்கையா னன்றி யியற்கையானு முதலே யழகுடையதுபோன் றிவளு மியற்கை யான் அழகுடையளென்பது தோன்ற நின்றமையா லிதுவு முவமையு ளோர் பேதம். பகுதி—இதுவுமது. துறை—ஆயவெள்ளம் வழிபடக்கண் டிது மாயமோவென்றல். "பாயும்விடையான்றில்லையன்னாள்" என்பது மிது. "வில்லேருழவர் பகைகொளினுங் கொள்ளற்க, சொல்லேருழவர் பகை" எனவும், "நல்லார்கட் பட்ட வறுமையி னின்னாதே, கல்லார்கட் பட்ட திரு" எனவும், இவைபோல்வன பிறவு மிவற்றின்பாற் கூட்டியுணர்க.

திருந்திழையாய்மாறன்றிருவாய்மொழியே
மருந்துபிறவிப்பிணிக்குமாதர்—தரும்பிணிக்கு
வாய்ந்தமருந்தென்பார்மடல். (266)

இது, மாதர்தருங் காமமாகியபிணிக்கென்பது மாதர்தரும் பிணிக்கென மாட்டேறிலாதுவந்த வுருவகம். பகுதி—மடல். துறை—உலகின் மேல்வைத்துரைத்தல். பா—இரண்டுவிகற்பத்தால்வந்த நேரிசைச் சிந்தியல்வெண்பா.

வழிமதுத்தார்மாறன்மணிவரைமேன்மாதர்
விழியெழுதினுமிணைவெற்பெழுதினு
மொழியெழுதலாமோமொழி. (267)

இது, மாட்டேறில்லாதுவந்த ஏகாங்கவுருவகம்; என்னை? முலையென்பவற்றை யுவமைவாய்பாடுதோன்றக் கூறினமையா லுபயமுலையாகிய விணைவெற்பெனக் கோடல்வேண்டுமென் றுணர்க. பகுதி—இதுவுமது. துறை—எழுதவரிதென்றல். பா—ஒருவிகற்பத்தால்வந்த இன்னிசைச்சிந்தியல்வெண்பா.

நாணுநிறையுநறுநுதலுன்மாணிழையார்
தந்தவெங்காமத்தழல்கதுவவெந்து
தருமடன்மாவேற்றந்தரும். (268)

இஃது ஏகதேசவுருவகம். இதனுள், நாணும் நிறையுமாகிய பஞ்செனவுருவகஞ்செய்யாது காமத்தழலென வொன்றையே யுருவகஞ்செய்தமையா னென்றறிக. பகுதி—இதுவுமது. துறை—நாணழிவுரைத்தல். பா—அடிதொறூஉமொரூஉத்தொடைபெற்றுவந்த இன்னிசைச்சிந்தியல் வெண்பா.

தருமன்றண்ணளியாற்றனதீகையால்
வருணன்கூற்றுயிர்மாற்றலின்வாமனே
யருமையாலழகிற்கணையர்துடைக்
திருமகன்றிருமாறனிலமன்னனே. (269)

என்பதும் ஒருவகையுருவகம்; என்னை? தண்ணளியால் மன்னனாகிய தருமன், தனதீகையால் மன்னனாகிய வருணன், உயிர்மாற்றலால் மன்ன

ளுகிய கூற்று, அருமையால் மன்னனாகிய வாமன், அழகால் மன்னனாகிய காமன் என வுருவகஞ்செய்துணர்க.

மன்னர்மடங்கன்மறையவர்சொன்மாலை
யன்னநடையினார்க்காரமிர்தந்—துன்னும்
பரிசிலர்க்குவானம்பனிமலர்ப்பைந்தா
ரெரிசினவேற்றானையெங்கோ. (270)

என்பதும் கூறிய ஒருவகை யுருவகம்.

வருந்தியீன்றாண்மறந்தொழிந்தாள்வளர்த்தாள்சொற்கேட்டில்கடிந்தாண்
முருந்தின்காறுங்கூழையைமுனிவார்நின்னையென்முனிவார்
பொருந்திற்றன்றாலிது வென்னாய்பொன்றுமளித்திவ்வுயிரென்னாய்
திருந்துசோலைக்கருங்குயிலேசிலம்பவிருந்து கூவுதியால். (271)

என்றற் றொடக்கத்தன வுருவக இலக்கணம்விளங்கநின்றிலவேனு மத னிடத்து மயக்கிநின்றன கொள்க. என்னை கொள்ளுமாறெனின், ஈன்ற குயிலாகியபெண் மறந்தொழிந்த, வளர்த்த காக்கையாகிய பெண் இல் கடிந்த, பெண்குயிலாகியபெண்ணே யெனக் கொள்வதை மயக்கிநின்றமை காண்க (கூஎ)

கூ-வது உருவகம் முற்றும்.

௬-வது உள்ளுறையுவமம்.

123, உணர்வதற்கரிதாமுவமப்போலி
புணர்திறம்வினையேபொருண்மெய்யுருவெனப்
பிறப்பொடுமைந்தாம்பெற்றித்தாகிச்
சிறப்புறுதிணைகளிற்றெய்வதமொழிந்த
கருப்பொருள்களுக்கட்டுரைபயின்று
முவமையோடெதிருள்ளுறுத்தலுற்றயலா

யுவமச்சொற்றொகலொருதலையாகியு
மன்பினதளவாமகத்திணையிருவயி
னின்பதுன்பத்திசைதிரிந்திசையாத்
துணைவன்றுணைவிதோழிசெவிலி
யிணையெனும்பாங்கன்பாணனென்றிவாற்
கொள்கையின்வரூஉங்குறிப்புரைத்தாகும்.

(எ-ன்) வைத்தமுறையானே யுள்ளுறையுவமமென்னுமதற்குப் பொதுவிலக்கணமுணர்—ற்று. உவமப்போலியென்று மதற்குப்பெயர்.

(இ-ள்) உணர்வினு லுணர்தற்கரிதாகிய வுள்ளுறையுவமமென்பது முற்கூறிய வெளிப்படையுவமம்போல வினைபயமெய்புருவுகாரணமாகத் தோன்றுமவற்றினோடும் பிறப்புங் கூட்டி நிலக்களனோடு மவ்வவ நிலங்களிற் றெய்வதமொழிந்த கருப்பொரு ணிலக்களனுகவு மழகிய வுரையுட் பயின்றும் வெளிப்படையாகவரு முவமப்பொருளோடும் அதற் கெதிராகிய வுவமேயப்பொருள்களை யுள்ளுறுத்துக்கொள்ளும்படித்தாயு முவமேயம் பாடலுட்பயின்றுவாராது அயலாகியு முவமவுருபு தொகுத லொருதலையாகவுங் களவு கற்பென்னுங் கைகோளினிருவகையினு மின்ப துன்பங் காட்டுவனவா யிசைதிரிந் திசைப்பனவாய்த் தலைவன் றலைவி முதலியபெயர்களாற் குறிப்புரையாய்வரு மென்றவாறு.

உணர்வதற்கரிதா மென்பதனால் ஏனை யுவமம் புலப்படக்கூறாத வுள்ளுறையுவமத்தைத் தருகின்ற கருப்பொருட்குச் சிறப்புக்கொடுத்துக் கூடிநிற்குமென்பதாம். கொள்கையின்வரூஉமென்பதனால் “கிழவி சொல்லி னவளறி கிளவி, தோழிக் காயி னிலம்பெயர்க் துரையாது” எனவும், “கிழவோற் காயி னுரனொடு கிளக்கும், ஏனோர்க் கெல்லா மிடன்வரை வின்றே” எனவும், “கிழவோட் குவம மீரிடத் துரித்தே,” “கிழவோற் காயி னிடன்வரை வின்றே” எனவும், “தோழியுஞ் செவிலியும் பொருந்துவழி நோக்கிக், கூறுதற் குரியர் கொள்வழி யான” எனவும் வருங் கூற்றுக்களோடும் தோழியு முழைபரும் தலைவன்கொடுமைகூறும் வழியினும் பிறவழியினுந் தலைவனூரின்கண்ணுள்ள கருப்பொருள்களா னவைசொல்லத் தலைவற்கேயன்றியுந் தலைவிக்கேற்றனவா முவமத் தன்மைத்தோற்றத்தனவா யுள்ளுறையுவமங்கோடலும், பிறவாறு வரு

வனவா மவைகளுங் குறிப்புரைத்தாகு மென்பதனானு முய்த்துக் கொள்க. பிறப்பாவது அவ்வவ நிலங்களி லிழிந்தபிறப்போடுஞ் சார்த்திக் கூறல். உள்ளுறுத்தல் - உள்ளேகுறித்தல். ஒருதலை - நிச்சயம். அகத்திணை யிருவயினென்பது இறந்ததுபோற்றலென்னுந் தந்திரவுத்தி. இசைதிரிந்திசைத்தலென்பது செய்யுட்சொற்க டம்பொருளுணர்த்தாது வேறுபடக்கூறுதல். இசையாவது சொல். சொல்லாவது எழுத்தினாலாக்கப்பட்டுப் பொருளறிவுறுத்துமோசையாகலி னிசையென்றார். இஃதாகுபெயர். என்னை? "இசைதிரிந்திசைப்பினுமிசையுமன்பொருளே, யசைதிரிந்தியலா" என்னும் பொருளியற்சூத்திரத்தா னுணர்க.

இவற்றிற்கெல்லாம் செய்யுள் வருமாறு:—

காமர்பன்மலர்கஞலியபொதும்பர்
மாமரப்பணையின்மதுகரமிழைத்த
முதுநறுந்தேறனொதுமலர்மூன்றுபு
கொளத்தகுமாபிற்குன்றவாண
வரைதலின்வரையாதொழுகலினிருவிரு
மாறுபட்டொழுகியமதியினிராகலிற்
றிருமகிழ்மாறன்றிருவருட்கிலக்கா
யொழுகாதவருளத்தொன்று
மழுகாமதியின்மறுகுவல்யானே. (272)

என்பது வினையுவமப்போலி; என்னை? மாமரப்பொதும்பாகத்து மதுகரங்கள் தமக்குப் பின்னைக்கு நுகர்வதாக மறைத்துவைப்ப விளைந்த தேனை நொதுமலாராய்ந்து கைப்பற்றிக்கொடுபோங் குன்றவாணனே யென்றதனாற் களவினோடுங்கூடிய கூட்டத்தை நீட்டித்துப் பின்னரிவளை வரைந்துகொள்ளக்கடவெனென நினைந்தநினைவு தவறும்படி பருவமுதிர்ந்த விவளையும் பிறர்நயந்து பொன்னணிந்து கொடுபோவரதுபோல வென்பவாகலான்; உவமைக்குப் பிறிதுபொருள் எதிர்த்துவமஞ்செய்யாதாண்டுப்பிறந்த கருப்பொருளவற்றோடு முள்ளுறுத்துவைத்தலி னிஃதுள்ளுறையுவமமாயிற்று. அவற்றோடு மிஃது நொதுமலர் கொடுபோவ

ரென்னுந் தொழிலோடு மிவளையும் பிறர்கொடுபோவரென்னுந்தொழி லுவமங்கொள்ளநின்றமையின் வினையுவமப்போலியாயிற்று. அன்றியுங் காமர்பன்மலர் கஞலியபொதும்ப ரென்பது நற்றாய் தோழி செவிலி முதலியோர்வைகு மனைக்குவமையாம். திணை - குறிஞ்சி. கைகோள் - களவு. கூற்று - தோழி. கேட்போன் - தலைவன். இடம் - முன்னிலை. காலம்—நிகழ்வு. பயன்—இற்செறிவுரைத்து வரைதல்வேண்டுமென்றது. மெய்ப்பாடு—அச்சத்தைச்சார்ந்த பெருமிதம். பகுதி—பகற்குறி. துறை—வருத்தங்கூறி வரைவுகடாதல். காமர் - அழகு. ஒழிந்தனவுமுரையிற் கொள்க.

இறைவறங்கூராவீர்ந்தண்பொய்கைத்
துறைதொறுந்துவன்றதோடவிழ்பன்மலர்
மாந்துபுவயினிறைவெய்தியகவரி
யேந்தெழின்மாடத்தீன்றகன்றுள்ளிப்
படர்வுழிப்படர்வுழிப்பணைமுலைக்குறுங்கண்
மடைதிறந்துவளகமடுநிறைத்தொழுகு
பாற்றடினியினயற்பழிதீர்பேடையைப்
போற்றறுகளிப்பிற்புணர்ந்தவண்மூழ்கிப்
புனிதமுற்றிருசிறைபுலர்த்தியவோதிமந்
தணந்தயற்கழனிச்சாதிப்பெடைகளை
மணந்ததனனந்தலைமள்ளர்தாமுழுத
நாற்றடியதன்கணறுந்தழைபதனழிந்
தூற்றெழுகளங்கவுறுபுனலாடிப்
பண்டுதான்மரீஇயபானிறப்பேடைக்
கண்டுதான்வளைக்குங்காமருகடல்கெழு
கண்ணகன்ஞாலங்கண்டுகண்ணயப்பான்
விண்ணவர்வியப்பான்மேதகுபடிவத்
தாவணைத்துயின்றருளரங்கத்தமுதி
னூரவுநீர்க்காவிரிக்குறுபுனலூர
புல்லேன்பொதுவுணின்மார்பெனச்
சொல்லேன்புன்மனத்தொடர்புடையேனே. (273)

இதுவும் வினையுவமப்போலி. இதனுள், இறைவறங்கூரா வென்பது சிறிதும் வற்றாதவென்றவாறு. ஈர்ந்தண்பொய்கை - மிகவுங்குளிர்ந்த

பொய்கை. “ துறைதொறுந்துவன்ற..........................கவரி” இடந் தோறுநெருங்கின இதழ்விரிந்த தாமரை முதலிய பலமலரையு முண்டு வயிற்றைநிறைத்தல்பொருந்தின காரான். “வந்தெழில்.................. தொடர்புடையேனே” எ - து உயர்ந்த அழகையுடைய மாளிகையினிடத் தின்றகன்ற குழக்கன்றைநினைந்துசெல்லுமிடத்து முறுகின முலைக் குறுங்கண் மடைதிறந்து பள்ளவாவிகளைப் பெருக்கி யோடாநின்ற பாலாற்றின்பக்கமே குற்றமற்ற தனதுபேடையைப் பாதுகாப்பற்ற களிப்பினேடும்புணர்ந் தப் பாலாற்றினடுமூழ்கிப் பவித்திரமுற் றிருசிற கரும் புலர்த்திய சேவலோதிம மப் பேடையை நீங்கி யயல்வயற் கூட்டப் பெடைகளை மணந் தக்கழனிநடுவண் மள்ள ருழுத நாற்றடிநனந்தலை நறியதழைக ளழுகி யூற்றிருந்த சேறு மிகுந்த புனலிடை யாடி முன்னர்த் தான் மணந்த வெண்ணிறப்பேடையைப் புணர்ச்சிகுறித்து வளையும், அரவணைத்துயின்ற அரங்கத்தமிர்தி னுரவுநீர்க்காவிரிக்குறுபுன லூரனே! புல்லேன் பரத்தையர் பொதுவுணின்மார்பெனச் சொல்லேன் புன்மனத்தொடர்புடையே னென்றவாறு.

பொதுவுணல்-பரத்தையர் பலரா யேககாலத் தின்பத்தைப் பொது வாக அநுபவித்தல். இதனுள், பரத்தையரென்பது சொல்லெச்சம். ஒழிந்த அகல முரையிற்கொள்க.

அஃதாக; இதனையும் வினையுவமப்போலி என்ற தென்னையெனின், தனக்குரிய பேட்டோடும் பாலாற்றினயற்புணர்ந் ததன்பின்னர் அப் பாலாற்றின்முழுகியசேவ லன்னப்பெடையைநீங்கி யயற்கழனியிடத்து வேற்றுப்பேடைகள் பலவற்றையும்புணர்ந் ததனள்ளிடை நாற்றடிக் களங்க வுறுபுனலின் முழுகி யக்களங்கப்புனல் புலராமுன்னம் பண்டு தான் மரீஇய பேடையைவளையு மென்பதனல் நமதகச்சோலையினடுவட் பனிநீராற் பூரித்த புழுகுசுனையினதய லென்னேடும் பாதுகாப்பற்ற களிப்புடன் உவர்ப்பில்லாவின்பத்தைத் துய்த்துப் பவித்திரமெய்த வேண்டி முழுகி யீரவாடைகளைந்து நனைந்த குழற்கற்றை புலர்த்தி யெதிர் முகமாகவிருந்த நீ நீங்கி யெனதுமாளிகைக் கயலே சேரிப்பரத்தையர் பலரையுந்தோய்ந்த வேர்வோடுங் குழம்பிய மான் மதச் சேறு புலரா முன்னம் வாயில்வேண்டாதுவந் தெனது பள்ளியிடத்தானுகி மணி மேகலையைப்பற்றுதற் கிருகையால் வளையாநின்று யென்னும் உவமேய வினை கருப்பொருள்களனுகத் தோன்றிநின்றமையா னென்றுணர்க.

இது திணை - மருதம். கைகோள் - கற்பு. பகுதி - பரத்தையிற் பிரிதல். கூற்று - தலைவி. கேட்போன் - தலைவன். இடம் - மூன்னிலையாய பள்ளியிடன். காலம் - நிகழ்காலம். பயன் - ஊடறீர்தல். மெய்ப்பாடு - வெகுளியைச்சார்ந்த வுவகை. இதற்குத் திணையுட்டிணை—பெண்பாற்கூற்றுப்பெருந்திணை. துறை—இல்லவைநகுதல்; அல்லது பரத்தையிற்பிரிந்துவந் தாற்றாமையேவாயிலாகப் புகுந்த தலைவனூ டறீர்கின்றாளாய இயற்பரத்தைகூற்றுமாம்.

குவளையுங்குமுதமுந்தவளவெண்பதுமமுந்
திசைதிசையோசனைதேங்கமழ்திவ்விய
வசைதீரந்தண்மயிலைவேலிப்
பொய்கையுட்செவ்வியிற்பொதியவிழ்புனிதச்
செய்யதாமரைத்தேறலையளவளா
யுவட்டாதருந்தியுமுருகியசுரும்பதன்
கரைசேர்வெள்ளிடைக்கலித்தநீர்முள்ளியிற்
பாடவிழ்ந்தயற்சுரும்புளர்ந்துணப்பதனழி
பூநறவுண்டின்புறுபுனலூரன்
றெண்டிரைக்காவிரித்திருவரங்கேசன்
றொண்டர்தந்தொண்டர்தொடர்பினையொரீஇப்
போதம்புறந்தாப்புரைதீரின்னுயிர்க்
கேதங்கொள்ளுநரிதயம்விட்டகலா
தொல்லாப்புலன்வழியுய்க்கும்
புல்லறிவினுட்குடிபுகும்புன்மையனே. (274)

இது பயனுவமப்போலி; என்னை? பொய்கையுட் பவித்திரச் செய்யதாமரை பருவத்தின் மலர்ந்தகு புதிய தீந்தேறலை யளவளாயுண்ணத்தெவிட்டா துள்ளமுருகிய சுரும்பு அதன்கரையினில் மலிந்த முள்ளுடை நீர்முள்ளி முறுக்கவிழ்ந்தபருவத்து வேற்றுச்சுரும்பு பலவுந்துவைத்துண்ணச் செவ்வியிழந்த பழம்பூவிற் சுருங்கியதேனையுண்டின்புறுமெனவே நமது தலைவர்க்குயர்ந்தமகளி ரிழிந்தமகளி ரென்பதில்லை; புணர்ந் தின்புறுதற் கியாவருமுரிய ரென்னும்பய னுள்ளுறுத்துக் கொள்ளக்கிடந்தமையா னென்றுணர்க.

திவ்ய - நல்ல. புனிதம் - பவித்திரம். அளவளாய்—உடலுமுயிருங் கலந்து. வெள்ளிடை - வெளி. கலித்தல் - மிகுதல். புன்மையன்—

அறிவினற் சிறுமையன். வெளியினிற்கும் நீர்முள்ளி யெனவே வீதியி னிற்கும் வேசை என்பதாயிற்று. ஒழிந்த அகலம் நம்பெருமாள் மும் மணிக்கோவைவிரித்துரையுட் காண்க. இணையும் பகுதியு மிதுவுமது.

துறை - உழைய ரியற்பழித்தல்.

இனியதெள்ளமிர்தாயெறித்தெழுகிரணப்
பனிமதியகடுழப்பணைநெடும்பொங்கர்ப்
பூந்துணர்ததைஇயபொழிலெழினள்ளிடை
யீர்ந்தண்கோட்டகத்தினமலர்முற்றிய
பொதியவிழ்தாமரைப்பொகுட்டாசனத்து
மதிநலனுறப்புணர்மாண்புடைப்பெடையொடும்
வீற்றிருந்தின்புறுமேன்மையோதிமமொரு
பாற்படுகரைசேர்பன்மரக்காவிற்
குறுகுபுகொடுமுட்டாழைக்கூன்சினை
வெறுநிலத்தடர்தரவிரித்தபாசடைமேற்
றளிநறைமாந்துபுசார்பெடைக்குருகொடு
புணர்தனலனுறும்புனன்மலியூரன்
பூமகளிலைகுலாம்பூண்முலைமுகடுழத்
தேமவிழ்பசுந்துழாய்த்திருமணிமார்பன்
றென்னரங்கேசன்றிருவருட்கிலக்கா
முரனுடையோர்களுயிர்த்துணையெனவா
ழில்லறம்பழிபிறங்காதிருந்தில்லி
னகனமர்ந்தாளுந்துறையுந்
தகவேதுமிலாததவறுளோனே. (275)

இதுவும் பயனுவமப்போலி; என்னை? இருமனமு மொருமனம் போலப் பேரானந்தமெய்தப் புணர்ந்த பேடையோடும் பொதியவிழ்ந்த தாமரைப்பொகுட்டி லரசுவீற்றிருந் தின்புறுஞ் சேவலோதிம மப்பேடை யைப்பிரிந்து வாவிக்கொருபக்கமான கரைசேர் பன்மரக்காவின்புறத்து வளைந்த முள்ளுடைத்தாழை முடச்சினை வெறுநிலத்துத் தகடுபட விரித்த பாசடைமேலிருந் ததனிடத்துத் துளித்துவிழுந் தேனையுண்ட களிப்பினுல் வெளுத்த சிறையுடைப் பெடைக்குருகைப் புணர்தனு

மானந்தமெய்தும் புனன்மலியூரனெனவே இப் பொற்புடையில்லின்கணிருந் திக்கற்புடையவளோடு மிருமனமு மொருமனமாகப் புணர்ந்து பேரானந்த மெய்தியபின்னர் யாம்புடைசூழ அரசுவீற்றிருந்தோன் இவளைநீங்கி எமது மாளிகைக் கயலாய்ப் பொலிவிழந்த சேரிப்பரத்தையைப் பெண்டன்மைமாத்திர மொத்தலிற் காமபானத்தையுண்ட புத்திப்பிரமையா லுவர்ப்பின்றிப் புணர்ந்ததனு லின்பமெய்துமூரன் றகுதியொன்றுமில னென்றுரைத்தபான்மை யுள்ளுறுத்துக்கொள்ளக்கிடந்தமையா னென்றுணர்க.

இதற்கும் விரித்துரை நம்பெருமாள்மும்மணிக்கோவையுரையுட் காண்க. பகுதி—இதுவுமது. துறை—தோழி தலைவனை யியற்பழித்தல்.

நீர்நிலைமுற்றியநிழன்மலிசோலையுட்
கார்வழங்காதகாலையுங்கவின்பெற
வேர்முதற்பழுத்துவியன்சினைப்பலவு
வளங்கெழுநாடவெம்மணிபுரைமாண்கவின்
புறந்தருமாயினும்புனிதநின்னின்று
லரவணைத்துயிலமர்ந்தருளரங்கேசன்
றாநீர்க்காவிரித்துறைபடிந்தல்லதை
யொல்லேன்மலரமளியினுறப்
புல்லேன்பரத்தையர்ப்புணர்ந்தநின்மார்பே. (276)

இது மெய்யுவமப்போலி; என்னை? கார்வழங்காதகாலையும் நிழன்மலிசோலையுட் பலவு வேர்முதற்பழுத்து வாட்டமின்றி வளனெய்தினாற்போல நீ யென்னிடத் தருளின்றிப் பரத்தையர்மாட்டுப் பிரிந்தகாலத்தும் ஆயுவெள்ளம் விட்டுநீங்காத எனதுமனையிடத் தில்லறங்கோடாது நடத்துதற்பொருட் டித்துணைப்போது முளனானே னென்றதாக வுள்ளுறுத்துக்கொள்ளக்கிடந்தமையானென்றறிக. இதற்கு மொழிந்த விரித்துரை மும்மணிக்கோவையுரையுட் காண்க. பகுதி—இதுவுமது. துறை — அணைந்தவழியூடல்.

உலைவினீரமுவத்துறுசிறையதன்க
ணலைகொழித்தலைதொறுமலைதொறுமொத்துண்
டுழுங்கனுரெய்தியயாக்கையதாகியுர்

தன்னால்வளர்க்கத்தகுசினையதன்மேன்
மன்னாதாவின்வளர்மீன்வைத்தகண்
வாங்காதுய்த்துவளர்புனலூரற்
கேவலிற்பிழையாவின்னிசைப்பாணர்
புதுவதுவாய்வழிபிழைத்திவண்போதரு
மதுநினைந்தருவிருந்தளித்திடற்கந்தோ
மதுமகிழ்மார்பினன்வழுதிநன்னாட்டவர்
குடிஞையைக்காய்திறன்குறிப்பதுமின்றாற்
காதோடுலவுகட்காரிகை
யாதோகறியீங்கினிதமைப்பதுவே. (277)

இதுவும் மெய்யுவமப்போலி ; என்னை ? அழிவில்லாத நீர்க்கயத்துண் மிக்க சிறையிடத்துத் திரையெடுத் தெற்றுந்தோறு மெற்றுந்தோறு மதனா லெற்றுண்டு மிகவுந் துன்பமெய்திய யாக்கையோடுங்கூடிய மீன் றன்னால்வளர்க்குஞ் சினையின்மேல் வைத்தகண்வாங்காது வளர்த்தாற்போல யானுந் தலைவர்பிரிந் தெனக்களித்த துன்ப மென்மேனியை வருத்தவு மம்மேனியோடு மில்லின்கணிருந்து மென்னாலோம்பப்படு மில்லற மோம்புதற்குள்ளானேனென்ப துள்ளுறுத்துக்கொள்ளக்கிடந்தமையா னென்றறிக. இதுவும் பகுதி யது. துறை - பாணனைப் பழித்தல் ; தலைவிகூற்று. இதற்கும் விரித்துரை கூறவேண்டுவதில்லை.

பன்மலர்கஞலியபழுமரச்சோலையுட்
டன்னிழறுணையாத்தளிர்த்தமௌவலின்மலர்
விரிகதிர்தெறுதலின்வெம்மையுற்றுணங்க
பூட்புறக்குடக்கனிமுடப்பலவதனயற்
செங்கிடைமலர்கவின்சிறப்பவுமிழற்று
மொண்புனலூரற்குறுபழிவிளைக்கும்
யாமேதிலமேதிலமெனவெங்கையர்
மாளிகையயின்றுமதங்கருற்றிலாற்
புவிப்பாவலர்புகழ்புரவலன்மதுர
கவிப்பாவலன்புகழ்கருணையங்கடவுண்
மதுமகிழ்மார்பினன்வண்குருகூரன்

சதுமறைப்பொருளாற்றருதமிழ்மறையினுண்
முதுமொழியுணராமூடமதடைந்த
மனனகமலமிகமறுகுன
றினமெனலொன்றாயிகழ்பொய்ம்மையனே. (278)

இது நிறமல்லாத பண்புவமைப்போலி. என்னை? சோலையுட் டன்னிழலே துணையாகத் தளிர்த்த முல்லைக்கொடியின்மலரானது விரிந்த கதிர்தெறுதலான் வெம்மையுற்றுணங்க மூடப்பலவு தனக் கயலாகத்தோன்றின செங்கிடைமலர்க் கழகுமிக அதற்கு நிழல்செய்யுமது போலத் தலைவனும் தன்னையே துணையாக ஆவிதளிராநின்ற விவளுங் காமத்தீயால் வெந்து மேனிவாடத் தனக்கயலாய பரத்தையர்க் குடலு முயிருந் தளிர்ப்ப நலங்கொடாநின்றா னெனப் பண்புள்ளுறுத்துக் கொள்ளக்கிடந்தமையா னென்றுணர்க. பகுதி - இதுவுமது. துறை— பாணனொடுவெகுளல். கூற்று - தோழி.

ஒன்றாய்ப்பரந்தவுறுவளிகறங்கலின்
மின்றாழ்பன்மின்மிளிர்விசும்புழுசினை
சுமைமலிந்தொசிதரத்துணர்த்தமென்பூமுகை
பொறிச்சுரும்புளர்தொறுமுளர்தொறும்பொதும்பருண்
முறுக்குடைந்திழிதரூஉமொய்ந்நறுந்தேறல்
பரந்துபன்முகத்தவாய்ப்பவளக்கொடியொடுங்
குரூஉக்கட்பரூஉத்தாட்குடம்புரைசெருத்தற்
கயவாய்மேதிகட்கழுநீருண்
டுயவால்வைந்நுதித்தொடர்நெறிமருப்பிற்
புறக்காழ்வயிரப்பூங்கழைதடிந்துகு
நிறக்காழ்நித்திலநிரந்தரம்வான்றயல்
வெள்ளிடைநிவந்தமேதகுசுவலினை
யுள்ளுயிர்ப்பெடையையுறையுளினிருத்திப்
பாலுணீர்தெரித்துப்பருகுமொண்சேவ
லாலுநீர்ச்சிறைபுக்காய்ந்திரைகொணர்வலென்
றிகந்தயலிடைப்படிந்தெழுமயர்வுயிர்ப்பான்
வாலுகவைப்பெனமறுகுபுகுறுகிவீழ்ந்

தன்மையிற்றவக்குற்றச்சப்பார்வையிற்
புராதனப்பொய்கையுட்புகுபுன லூர
பொருவருதாமரைப்புதல்வனைப்பயந்த
திருமறுமார்பன்றிருவரங்கத்துப்
பொதுநலப்பெண்டிர்பொதுவுணின்மார்ப
மல்லனீர்படிந்தல்லது
புல்லேந்தீண்டலெம்பொன்னடிச்சுவடே. (279)

இதுவும் பண்புவமப்போலி ; என்னை ? சேவலன்னம் நித்திலங்கள் வெள்ளிடைநிவந்த மேதகுசுவலினை வாலுகவைப்பெனக்கருதி யிருத்தற்கு மென்மையில்லாததனோடு மறிவுமயக்கமுற்றதனால் இலச்சை யுற்றுத் தன்பேடையையிருத்திப்போந்த பொய்கையுட் புகாநிற்கு மது போல நீயுங் கற்பு நாணு முதலிய நற்குணங்க ளின்றித் தன முதலியனவெய்தும் பெண்டன்மைமாத்திரமேயுடைய பரத்தையரையு நற்குணநற்பெண்டிரென்று தோயுமளவிற் பொருண்மேற்சென்று வற்கென்ற துர்க்குணத்தாராதல்கண் டதனோடு நினது புத்தி மயக்கமுற்றது நினக் கிழிபென நாணி யெம்மனையிடத்துவந்து வாயில் வேண்டா நின்று யென்ப துள்ளுறுத்துக்கொள்ளக்கிடந்தமையானென்றுணர்க.

வெள்ளிடை - வெளி. நிவந்தது - உயர்ந்தது. சுவல் - மேடு. வாலுகவைப்பு - மணற்குன்றாகிய விடம். தவக்கு - இலச்சை ; நாண். கருத்துப்பொருளாய பண்புவமப்போலி. பகுதி—இதுவுமது. துறை—அணைந்தவழியூடல். இது கூற்று - இற்பரத்தை.

ஓங்கியகுரம்புசாருவளகவயின்வயின்
வீங்கியதிணிதோண்மிடலுடைமள்ளர்
சுதைபெய்தாற்றலிற்சுடுமண்பன்முறை
ததைவுறப்படுத்தசால்பிற்றெண்ணீர்
வார்ந்துகுகவர்முழைமதகுபடர்குடுமியிற்
சேர்ந்தசைவறவிருசிறகருமொடுக்கி
மறைபுகுநோக்கின்மனப்பட்டிமையாற்
றுறைபுகுகயலினைச்சேர்புகண்டெடுத்துக்
கூர்வாய்வெண்சிறைக்குரண்டமென்பெடைக்
கார்வரயெனவருத்தியினருத்துபுதுடித்

தயல்வீழ்வதனையற்றம்பார்த்து
மிச்சிலென்றறிந்தும்விழுநெறியொரீஇ
நச்சியுண்புலவுநாற்றத்தோடுஞ்
செங்கால்வெள்ளுகிர்ச்சேவலோதிம
மொருசிறையிருந்தவோவாச்செவ்வி
யிருசிறைப்பேடையெழின்மலர்குறுகு
நளிமலர்ப்பொய்கைநல்வயலூர
திருநெடுமாயன்றிருவரங்கத்துப்
பொருணசைப்பரத்தையர்பொறித்தநின்மார்பிற்
றனக்குறியாநிற்றழூவுபுசிதைவுறின்
மனக்கிடரிழைப்பதுமன்றி
நினக்கிடருறுமாநெருங்கலெம்மிடனே. (280)

இது பிறப்புவமப்போலி. என்னை? இழிந்தகுராண்டங் தன் பேடைக் கருத்துங் கயலை யதுவாய்க்கொள்ளத் தூடித் தயலேவீழ்ந்த தனை மிச்சிலென்றறிந்து மறிவினுலுயர்ந்த அன்னம் அதனை யற்றம் பார்த்தெடுத்துண்ட புலானுற்றத்தோடுந் தன துத்தமப்பேடையுறையு மழகிய சேக்கையாகிய தாமரைமலரைக் குறுகுமதுபோல நீயு முயர்ந்த குலத்துட்பிறந்து மிழிந்தகுலத்துளோர் தோய்ந்தகன்ற மிச்சிலாகிய பரத்தையரிடத் தின்பத்தைத் துய்த்து வேற்றுநாற்றத்தோடு மெமது நன்மனைக்கண் ணெம்மைத் தீண்டவந்தனை யாதலா லெம்மைத்தீண்டல் பொருந்தாதெனக் கூறினளென் றுள்ளுறுத்துக்கொள்ளக்கிடந்தமையா னென்றுணர்க.

பகுதி-இதுவுமது. திணை—பெண்பாற்கூற்றுப்பெருந்திணை. துறை-பள்ளியிடத்தூடல். கூற்று - இதுவும் இற்பரத்தை.

விசும்புதூர்த்தெழூவியன்சினைமாத்தின்
பசும்புறத்தீங்கனிபரீஇநுகர்கடுவன்
புரப்பவர்குறுகுபுலம்புறீஇப்பொங்க
ரிரிந்தலம்போதருமீர்ந்தண்சோலையுட்
புளிங்கறிவேட்டபுன்றொழிற்றன்மையர்க்குப்
பழிப்பின்றாகப்பாகுசெய்தட்ட
கோதறுமாங்பாற்குழம்புபொற்கலத்தினுட்

பெய்திருந்தாறும்பெற்றியேய்ப்ப
முடவடிப்பலவின்முதிர்பொற்குடக்கனி
வேர்முதற்பழுத்து விரிந்தபொற்றீஞ்சுளை
பதனழிபான்மைப்பாய்புனலூர
நூற்கடற்பழகிய நுண்ணுணர்வுடையோ
ராற்றலிற்பாவுசீராங்கனுக்கமைந்த
பாற்கடன்முற்றப்பருகுதற்கெழுந்த
போராப்பெரும்பசியாளர்தம்முன்ன
ராராவள்ளத்தமிர்தமைப்பவர்போற்
சிறுவரையின்பத்தாறுதுயரிழைத்தற்
கிரத்தலிங்கியல்பன்றாற்
பாத்தையிற்பிரிதனின்பண்பாகும்மே. (281)

இது, "உள்ளுறையுவமமேனையுவமமெனத், தள்ளாதாகுந்திணையுணர்வகையே" என் று மகத்திணையியற்சூத்திரத்தான் உள்ளுறையுவமந்தா னேனையுவமமென்றுகூறும்படி யுவமையு முவமிக்கப்படும் பொருளுமாய்நின் றுள்ளுறையுவமத்தினைத்தரும் கருப்பொருட்குச் சிறப்புக்கொடுத்துநின்றது ; என் னை ? ஆகாயத்தை மூடியெழாநின்ற அகன்ற கொம்பர்மாமரத்திற் செம்மைமுற்றுப் பசுத்த வினிய கனியைப் பறித்துநுகர் கடுவனுன தச்சோலையைக் காப்பவர் முடுகத் தனிமையுற்று அத னயற்கொம்பரிற் சுற்றித்திரியுங் காவினுட் புளிப்பாகினை யுண்ண வேட்ட புன்றொழிற்றன்மையுற்றவர்க் கூட்டுவதாகக் குற்றமில்லையாம் படி பாகுபடுத்திக் காய்ச்சின எப்பிணியுந் தீர்க்கும் பசுவின்பாற்குழம்பு பொன்னின்கலத்துட் பெய்திருந்தாறுமுறைபோல முடப்பலவின் வேரிற் குடக்கனி முற்றிப் பழுத்து விரிந்த பொன்போனிறத்தையுடைய வினியசுளை யருந்தும்பருவத்தருந்தாது செவ்வியழியாநிற்கும் பாந்த புனலூரனே! என் ற தற் கு ஊரனே! நீ யுத்தமநாயகியில்லின்கண் மாலைக்காலத்தினுஞ்செல்லா திளைய செவ்வியுடைய சேரிப்பரத்தையைப் புணர்ந்து விளையாடாநின்றகாலத் தவள் பொதுமகளாதலின் பிறரப்பாத்தைமாளிகையைக் குறுகத் தனியுற்றுத் தணந் தப் பாத்தை மாளிகையைச் சுற் றித் திரியு மிவ்வூரிடத் தியானு நின்வரவுபார்த் தென்னையலங்கரித்து மிகுந்த காந்தியோடிருப்ப நின்வரவுதாழ்ப்பக் கவினழியாநின்ற வென் வருத்தத்தைத்தீர்ப்பா னொருசேரியினிடத்

தென்மாளிகைக்கண்வந்து வாயில்வேண்டாநின்று யென்னிடத் தின்ப நின்காதற் கார்த்தியுடையதொன்றல்ல வின்னு மச் சேரிப்பரத்தை மாளிகையிற்பிரித னினக்குக் கடனென்று காமக்கிழத்தி யுள்ளுறை யுவமங்கூறினளாதலி னெனவுணர்க.

அன்றியும், "உடனுறை யுவமஞ் சுட்டுநகை சிறப்பெனக், கெடலரு மரபி னுள்ளுறை யைந்தே" என்னும் பொருளியற்சூத்திரத்தா னிது சிறப்பென்றவுள்ளுறை. இச்சிறப்பென்றவுள்ளுறை "விரிகதிர்மண்டில" மென்னு மருதக்கலியுள்ளும் வந்தமை காண்க. இது சேரிப்பரத்தையிற் புணர்ந்துவந்த தலைவன்வரவுகண்டு காமக்கிழத்தியூடியவாறுகண்டு சென்றுசார்ந்த தலைவனுட னூடறீர்கின்றாள் கூறியது. ஒழிந்த அகலம் நம்பெருமாள்மும்மணிக்கோவை விரித்துரையுட் காண்க. கோது - ஆகுபெயர்.

மழைதவழ்பலவின்வான்சினைநீழற்
றழைதருமரம்பைதான்பொறையுயிர்ப்ப
விசும்புமிழ்திவலையின்விழுமிதின்முற்றிய
பசுங்காய்மதுரப்பலன்படுகாலை
நிறத்தபாசடைநீள்சினைவாட
விறப்பளித்துலகிற்பிறர்க்குறுபயனு
மடலவிழ்நறைமகிழ்மாலிகைமார்பன்
றுடரிமால்வரைதுறந்தனளாய்த்தொடர்ந்த
வினையேன்பெற்றமெல்லியலொருத்தியுங்
கனைகதிர்வேற்கைக்காளையுங்கடத்திடை
மணனியதிருவுமாயோனும்போன
முன்னியதுளதெனின்முக்கோற்பகவீர்
மதிபெறவணங்கினன்மகிழ்ந்தே
சதிர்பெறவிளம்புமென்றளர்வகன்றிடவே. (282)

(இ-ள்) மேகந்தவழாநின்ற பலவினது பெரியகொம்பர்நீழலில் வளர்ந்த வாழை யீனுநிற்ப முகில்பெய்யுந் துளியி னன்றாய்விளைந்த பசுங்கா யினிய கனியானபருவத்துப் பசுத்த விலையாகிய நீண்டசினை வாடுதலோடு மதற் கிறத்தலையுங்கொடுத் துலகின்கட் பிறர்க்கு மிக்க வூதியமாகு மாறனது துடரிமால்வரையை நீங்கினளாதலிற் றொடர்ந்து

போந்த வினையேன்பெற்ற மெல்லியசாயலையுடையாளொருத்தியும் நெருங்கிய கிரணத்தையுடைய வேற்கைக்காளை யொருவனுமாக விருவரும் விட்டுநீங்காத திருமகளும் மாயோனும்போல, முக்கோற்பகவிர் சுரத்திடைத் தெதிர்வரக்கண்டதுளதேல் யான் கூறியவையெல்லாம் புத்தியுட்கொண்டு மகிழ்ந்து எனது தளர்வுநீங்கச் சதிராக விளம்பும்; நும்மை வணங்காநின்றே னென்றவாறு.

இதனுள் செய்து என்பது செயவென்னும் வினையெச்சவாய்பாடாக நின்றது. இச்செய்யுள் நால்வகையுவமப்போலியும் விரவிவந்தவுவமப்போலி. என்னை? பலவின்கீழ் வளராநின்ற வாழையீன்ற தாறுபோல நற்றாயால்வளராநின்ற வென்றுற் பெறப்பட்டாள் என வினையுவமப்போலியும், விசும்புமிழ்திவலையிற் றுறுமுற்றியதுபோல வென்றுமாயத்தாலும் இளையள் விளைவெய்தினளெனவே மெய்யுவமப்போலியும், பசுங்காய்மதுரப்பலன்படுகாலை நிறத்தபாசடை நீள்சினை வாடவிறப்பளித் துலகிற் பிறர்க்குறுபயனு மெனவே அங்ஙன மிளையளாய் விளைவெய்திய தலைவி யிந்திரியகலினம்வந் தின்பத்திற்குரியளாயின காலத்து எனது மேனிக்கும் வாட்டந்தந் தெனதுயிரையுங் கொல்லாது கொன் றெனக் கொருபயனுமின்றி யயலானுன கணவற்கே யூதியமாயினளென்றுகொள்ளப் பயவுவமப்போலியும், பண்புவமப்போலியும், வினையுவமப்போலியு மிதனேடேகூடி முன்னும்பின்னு மிவ்வண்ணமே நால்வகை யுவமப்போலியு முள்ளுறுத்துக்கொள்ள நிகழ்ந்தமையா னென்றுணர்க. பயவுவமப்போலியாவது வினைகாரணமாகப் புலப்படுங் காரியத்தை யுள்ளுறுத்துக் கொள்ளப்படுவதாம். அஃது தீண்டுக் கூட்டத்தாற் பிறக்கும் பேரானந்தம். என்றுற் பெறப்பட்டா ளென்மகள் என்பன அன்பினதிகத்தானு நற்றாயென்றுந் தானென்றும் வேறல்லவாம் ஐக்கியத்தானுங் கூறினள். பாலைக்கலியுள்ளும் "என்மகளொருத்தியு" மெனக் கூறியவாற்றானு முணர்க. பகுதி—உடன்போக்கு. துறை—பின்சென்ற செவிலி முக்கோற்பகவரை வினுதல்.

இதனுள் தலைவி தோழி செவிலி இற்பாத்தை காமக்கிழத்தி உழையர் என்போர்கூற்று வந்தன. ஒழிந்தோர்கூற்றும் வந்தவழிக் காண்க. (௩௮)

சு-வது உள்ளுறையுவமம் முற்றும்.

ரு-வது ஒட்டலங்காரம்.

124. குறித்ததைமறைத்துக்குறிக்கொளநிகர்த்ததை
நுவல்வகைதாமேயொட்டெனநுவல்ப.

(எ-ன்) வைத்தமுறையானே ஒட்டென்னு மலங்கார முணர்—ற்று.

(இ-ள்) புலவனுற் குறித்தபொருளை மறைத் ததனைக் கற்று வல்லோ ருட்கொள்ளும்படிக் கதற்கொத்த பிறிதொன்றினை வெளிப் படையாய்க் கூறுங் கூறுபாடுதாமே யொட்டென்னு மலங்காரமென்று கூறுவர் பெரியோரென்றவாறு. வெளிப்படையாகவென்பது சொல் லெச்சம். (நுகூ)

125. அதுவே,
பொருளிடஞ்சாதிவினைகுணம்பொழுதொடு
மருளறுநெறித்தாய்வருதிறனுடைத்தே.

(எ-ன்) இஃ தவ் வலங்காரத்தின்கூறுபாடுணர்—ற்று.

(இ-ள்) அதுவே—அச்சொல்லப்பட்ட ஒட்டுப் பொருள்முதற் காலமீறுகச் சொல்லப்பட்ட வாறு மிடனுக மயக்கமற்ற நெறியுடைத் தாய்த் தோன்றுங் கூறுபாடுடைத்தா மென்றவாறு.

இவற்றிற்கெல்லாஞ் செய்யுள் வருமாறு:—

கற்றுணர்ந்தவாய்மைக்கவிப்புலவீர்கண்ணனருள்
பெற்றியன்றசெம்பொருளைப்பேணியே—சுற்றம்
வளைத்தருந்தவாழாது வந்தயலார்கூண்டு
இளைத்தருந்தவாழ்வார்சிலர். (383)

(இ-ள்) கற்பனவாம் நூல்களைக் கற்றுணர்ந்த வுண்மையோடுங் கூடிய கவிப்புலவீர்காள்! கண்ணனருளைப்பெற் றதனு லுண்டான வுண்மைநிதியை யழியாதோம்பி யதனை மாதா பிதா முதலிய வுரிமைச் சுற்றங்க டம்மைவளைத்திருந்து நுகர்வெய்தத் தாமு முடனுண்டுவாழும் வாழ்வெய்தாதே சிலர் தம்மோ டொருவழியு முறவில்லாத வயலார் களித் தருந்த வாழ்வா ரவரறியாமை தகாதென்றவாறு.

இது புலவன் குறித்தபொருளை மறைத் ததனைக் குறிக்கொளற் கதற்கொத்த பிறிதொன்றனை வெளிப்படையாய்க் கூறியது. குறித்த பொருளாவது கண்ணனருள்பெறுதலாலுண்டான வுண்மைப்பொருளாகிய கல்வியோடுங்கூடிய கவி. பேணுதல்—வாய்மையிழவாது போற்றுதல். சுற்றம்வளைத்திருந்தவாழாதென்பது ஆன்மாவை யீடேற்றுமுறுதிச்சுற்றமான பரமபதநாதனாகிய பிதாவும், பெரியபிராட்டியாகிய மாதாவும், ஆசிரியனும் அதனைக்கேட்டு மகிழ்வெய்த அவர்களைப்புகழ்ந் தப்பாடலை யவர்களுக்கேகொடுத் திம்மைப்பயனோடு மறுமைப்பயனா முத்தியையும்பெற்றுப் பேரின்பமெய்தி வாழாதென்றவாறு. சிலர் வந்தயலார்கூண்டுவளைத்திருந்த வாழ்வாரென்பது முன்பிலவர்களைப்போலக் கவிகளாற்புகழ்தற் கியாதுமியைபில்லாத மானிடராகிய வயலாரை வாய்மையிழந்து புகழ்வதனை யவர்கேட் டுட்கொண்டு களித்தளித்த கூறை சோறு முதலியன வுடுத்து முண்டும் வாழ்வா ரிஃதென்ன உலகியற்கை யென்றவாறு.

இது, பொருணிலைக்களனாகத்தோன்றிய ஒட்டு; என்னை? இருவகைப்பொருள் கல்விப்பொருளுஞ் செல்வப்பொருளு மென்பதனா லுணர்க. ஒட்டென்பதற்கு நுவலாநுவற்சி, பிறிதுமொழிதல், சுட்டு என்பன பரியாயம். திணை - பாடாண். துறை - வாயுறைவாழ்த்து.

உழவுபயன்கொள்வாருயர்நிலத்தினுள்ளாய்
விழைவுபெறவித்தியவித்தல்லா—லழகமையா
வன்பாரில்வித்தியதூஉமால்பொருட்டாற்போர்நிலத்தா
மென்பார்புலவீரெவர். (284)

(இ-ள்) உழவினாற் பயன்கொள்வார் நல்ல கழனியகத்தவாய் மகிழ்வெய்த விதைத்த நல்லவித்துச் சீமன்னாராயணன்பொருட்டால் விளைந்து களம்புகுமென உலகங்கூறுவதல்லா லுழவினுக்கியாதுஞ் சிறப்பில்லாத வலிய பாறைநிலத்தில் விதைத்ததூஉம் விளைந்து களம்புகுதுமென்று கூறுவார் புலவீர்கா ளுலகத் தொருவருமில்லையென்றவாறு.

இதுவுங் குறித்தபொருளை மறைத் ததற்கொத்த பிறிதொன்றனை வெளிப்படையாய்க் கூறியது. குறித்தபொருளாவது:—தவமாகிய

தொழிலாற் றமதுயிர்க்கு முத்தியாகிய வூதியத்தையெய்து மாரியர்கள் பரவுபகாரத்தாற் பூலோகமாகிய செய்யகத்து நல்ல கழனியாகிய கோயில் முதலிய திருப்பதிகளுள் விருப்பமுற்றிருத்திய சிறப்புடையுயிர்களே திருமால்பொருட்டாற் பாமபதமெய்துமென் றுலகங்கூறுவதல்லாற் சிறப்பில்லாத பாறைநிலத்தில் விதைத்த வித்து விளைந்து களம்புகுதா ததுபோல மணநலன்யாதுமில்லாத தறுகண்மையோர்வைகும் பாறையாம் பாலைநிலங்களில் வைகியவுயிர்க ளறியாமையேதுவாக முத்தியைப் பெறுமென்றுகூறுவார்க ளொருவரு முலகின்க ணில்லை யென்றவாறு. தவம் பெயர்ச்சொல்லெச்சம். உயர்நிலம்—கோயில்முதலிய திருப்பதிகள். விழைவுபெற—விருப்பம்பெற்று. வித்தியது—நியமித்திருத்தல். வித்து—ஆன்மாக்கள். இது மாட்டேறில்லா வுருவகம். வன்பார்—திருப்பதிக ளல்லாத பொல்லாதவூர்கள். மால் போர்நிலம் இரண்டுஞ்சிலேடை. மால்-திருமாலும் அறியாமையும்; அல்லது மேகத்தின்பொருட்டாலென்பது மொன்று. போர்நிலம் - சூடுநிற்குங்களமும் பரமபதமும். எல்லா வண்டத்தையு மீன் றகத்திடும் பிரகிருதிக்கு மேற்பட் டகன்ற விரசையையும் அகத்திடுநிலமாதலால் முத்திக்குப் போர்நிலமென்று பெயராயிற்று. போர்த்தல் - மூடுதல். இது இடநிலைக்களனாகிய ஒட்டு. திணையுந் துறையு மிதுவுமது. ஓம்படை யெனினுமாம்.

வாய்ந்ததமிழ்மாறனருட்புலவீர்மத்திமநோய்க்
கேய்ந்தமருந்தாவின்பாலென்றக்கா—லாய்ந்ததையக்
கற்றுவின்பாலுணர்ந்து கைக்கொளார்மேதியின்பால்
பெற்றூர்க்கும்போமோபிணி. (285)

இதனுள் மத்திமநோயென்பது பித்தம். அதற்கு மருந் தாவின்பாலென்றக்கால் என்பது வாகடநூ லதற்கு ஆவின்பாலே மருந்தென்று கூறியக்காலென்றவாறு. மேதியின்பால் பெற்றூர்க்கும் போமோபிணி யென்பது அப்பித்தமாகிய பிணி எருமைப்பாலைப்பெற்றூர்க்குத் தீராதென்றவாறு. இது வெளிப்படையாகக்கூறியபொருள். குறித்தபொருளாவது, மத்திமநோய்க்கு (என்பது:—பிறர்கூறும் பதி பசு பாசமென்பவற்று ளிடைநின்ற ஆன்மாவிற்குச் செய்த தீவினையடியாக வெய்தும்

பிறவியாகிய பிணிக்கு) நால்வேதத்தின் சாரமாகிய திருவாய்மொழி யென்னு மாவினிடத்துண்டாகிய வுண்மைஞானமாகிய பாலே யான்ம ஞானத்தினிடத்துத் தலைப்பெய்யாது, வேதமார்க்கமல்லாத புன்பனுவ லாகிய மேதியினிடத்துண்டான புன்மைஞானமாகியபாலாற் றீராதென்ற வாறு. வாய்ந்தது - உண்டானது. உம்மை—இழிவுசிறப்பு. ஓகாரம்— ஒழியிசை. ஒழிந்த அகல நூரையிற்கொள்க. இது சாதி நிலைக்களனாகத் தோன்றிய ஒட்டு. என்னை ? ஆவின்பால் மேதியின்பால் என்பவற்று லவை நிலைக்களனாகப் புலப்படுதலானென்றறிக. திணை—இதுவுமது. துறை — செவியறிவுறூஉ; அல்லது பாடாண்சார்ந்தபொதுவியற்பாற் சார்த்திற் பனுவல்வாழ்த்துமாம்.

வளைதவழ்நீர்மண்மேன்மதிப்புலவீரந்தோ
விளைகழனிச்சார்புள்விராய— களைகளைய
வாங்குங்களைக்கோலான்மாநிலத்தார்க்கேலாத
தீங்குபுரிவார்சிலர். (286)

என்பது, சங்கினந்தவழுங் கடல்சூழ்ந்தபூமியினுண்டாய புலவீர்காள்! செந்நெல்விளையுங் கழனியிடத்துவிரவுங்களையைக் களைவதற்குக் கத்தன் கொடுத்துக் கைக்கொண்ட களைகளையுங்கோலாற் களையைக்களையாது, பெரியநிலத்தின்கணுள்ளார்க்குப் பொருந்தாத தீங்காகச் சிலர் தமது கண்ணைக்களையுந் தீயதொழில் விரும்பிச்செய்வா ரிஃதென்னபேதைமை யோ வென்றவாறு. இது வெளிப்படையாகக்கூறியபொருள் விளை கழனி—சீவியாநின்ற வுடம்பு. உள்—ஆன்மா. சார்பு—இடம். விராயகளை— உம்மையிழைத்ததீவினை. களைய — அதனைப்போக்குதற்கு. வாங்குங் களைக்கோலால்—ஸ்ரீமந்நாராயணன்கொடுப்பக் கைக்கொண்ட மனோவாக்குக் காயங்களால். அவனைச் சிந்திக்கும் துதிக்கும் கண்டுங் கீர்த்தியைக் கேட்டுந் தாமஞ்சாத்தியும் கோயில்வலம்வந்தும் போதுபோக்காது, முத்தியைவிரும்புவார்புத்திக்குப்பொருந்தாத தீத்தொழில்களை விரும்பிச் செய்து தமக்குள்ளவாழ்நாளை யந்தோ வவமேபோக்காநின்றா ரினி யென்னனமீடேறுவ வென்றவாறு. இதற்கும் அவரைப்போலெனக் கூட்டுக. உள்—ஆகுபெயர். அந்தோவென்ப திரக்கத்தின்கட் குறிப்பு.

மாநிலம் — சிலேடை. இது குறித்தபொருள். இது வினைநிலைக்கள ஞகத் தோன்றியவொட்டு. என்னை? தீங்குபுரியுந்தொழில் நிலைக்கள ஞகத் தோன்றுதலா னென்றுணர்க. திணை — இதுவுமது. துறை— வாயுறைவாழ்த்து.

வாழ்ந்தமதிப்புலவீர்மால்வழங்குந்தூயநீர்
வீழ்ந்தநிலத்தியல்பான்மெய்திரிந்தாற்—சூழ்ந்ததனைத்
தேற்றிற்றெளிப்பதல்லாற்சேற்றிற்செறிகளங்க
மாற்றப்படுநெறித்தோமற்று. (287)

என்பது, முற்றவுணர்ந்த மூதறிவாளரோடுங்கூடிவாழ்ந்த மதியையுடைய புலவீர்காள்! மேகம்பெய்யுந் தெளிந்தநீர் தான் விழுந்தநிலத்தி னியல்பா னிறம்வேறுபட்டா லதனைப்போக்குதற் குலகம் விசாரித்தறிந்த தேற் றினு லங்நீர் தெளிவதன்றிச் சேற்றுநீரா லதற்கடைந்த களங்கத்தை யொருவாறு நீக்கப்படுமார்க்கமுடைத்தன் றென்றவாறு. இது வெளிப் படையாகக் கூறியபொருள். அது தெளியாததுபோல மாயோனளித்த நற்குணஞ் சிற்றினங்களை விரும்பிக்கொண்ட வுறவினதுபெற்றியா னுண்மைவேறுபட்டா லெல்லாநூல்களையு மனத்தாலுள்ளி யறிவறிந் தோர் தெளிந்தஞானத்தாற் பண்டுபோற்றெளிவதன்றிக் கரியசேறுபோற் செறிந்த சிற்றினத்தார் மாசுண்டஞானத்தாற் றேற்றப்படாதென்றவாறு. ஆதலான் மூதறிவுடையோர்நட்பு விடாது கொள்ளவேண்டு மென்றவாறு. இது குறித்தபொருள். இதனுள் மால், நீர், வீழ்ந்த, மெய், தேற்றில், களங்கம் என்பன சிலேடை. ஆதலா னிது அடைபொதுவாய்ப் பொருள் வேறுபட்டுப் பண்பு நிலைக்களஞகத் தோன்றிய ஒட்டு; என்னை? வீழ்ந்த நிலத்தியல்பான் மெய்திரிந்தாலெனக் குணநிலைக்களஞகக் குறித்த பொருடோன்றுதலா னென்றுணர்க. திணை—இதுவுமது. துறை—ஓம் படை.

நன்புலவீர்கஞ்குற்கிசைந்ததெலாநாரணனு
லின்புறவாராய்ந்தியற்றுமெஃகற்றே—புன்புலன்பெற்
றீட்டாதவரெவனேவெண்ணியது தாமுடிக்க
மாட்டாதழுங்குமதி. (288)

என்பது, நல்லறத்தினது பகுதியறிந்த புலவீர்கா ளிரவிற்கு வேண்டுவன வெல்லா நன்பகலே நாரணனருளாற் புத்திகளித்தியற்றுங் கூறி

விலாகித் தமது மந்தபுத்தியா லவற்றை யியற்றாதிருந்தவர் அக்கங்குல் வந்தகாலத்துக் கங்குற்குவேண்டுவனவின்றித் தாம் எண்ணியது முடிக்கமாட்டா தழுங்குகின்ற தென்னபேதைமையோவென்றவாறு. இது வெளிப்படையாய்க்கூறியபொருள். அவரைப்போல நிலையாமை யோடுங்கூடிய யாக்கை நிலைமைத்தா முயிரோடுங் கூடியிருக்கப்பெற்ற காலத் திம்மைக்கண்ணே மறுமைப்பயனு முத்தியைப்பெறுதற் கேதுவாம் ஞானநூல்களை யாராய்ந்து சித்தசித்தீச்சுரங்களையறிந் தவற்றோடும் அன்றறிவாமென்னா தறங்களைப் பயிலாதார் மரணம் வந்தடுத்தகாலத்தி லெண்ணியிருந்த முத்தியையெய்த வேண்டுவன செய்துமுடித்திலமென் றியமதூதுவர்கூட்டத்தைக்கண் டழுங்குகின்றமை என்னபேதைமையோ வென்றவாறு. எனவே முத்தியை யெய்துதற்கு வேண்டுவன யாக்கையிருக்கப்பெற்றபொழுதே பின்னையென்னாது செய்துமுடிக்க வேண்டுமென்பது பயன். இதனுள், நல்லறத்தின்பகுதியறிந்தவென்பது சொல்லெச்சம். நன்பகலேயென்பது எதிர்மறையெச்சம். இது காலநிலைக்களனாகத்தோன்றிய ஒட்டு. என்னை? இரவிற்குவேண்டுவனவெல்லா நன்பகலே யியற்றவேண்டுமென்னுங் காலநிலைக்களனாகக் குறித்தபொருடோன்றுதலா னென்றுணர்க. திணையுந் துறையு மிதுவுமது. பொழுதொடுமென்னுமும்மையாற் சினைநிலைக்களனாகத்தோன்றும் ஒட்டு முள. அதற்குச் செய்யுள் வருமாறு:—

எம்பெருமானின்னருள்சேரின்புலவீர்வான்பொருட்குச்
செம்பொனுளதீவிற்செலவுற்றாற்—பம்புதிரைச்
சங்கந்தவழ்கடலைத்தாம்பொடுபாய்கூம்பின்றி
வங்கங்கடந்துறுமோமற்று. (289)

என்பது, புலவீர்காள்! பெரும்பொருட்குப் பொன்விளைதீவிற் செல்ல நினைந்தாற் கப்பல் கயிற்றாற் கட்டப்பட்ட பாயோடுங்கூடிய பாய்மர மின்றி யத்தீவிற் றலைப்படாதென்றவாறு. இது வெளிப்படையாற் கூறியபொருள். அதுபோலப் பொன்மயமான பரமபதத்திற் செல்லக் குறித்தவர்கள் மனோ வாக்குக் காயங்களா னினைத்துந் துதித்துந் தாமஞ்சாத்துவதுமுதலான சரியையின்றி யாண்டுத் தலைப்படாதென்பதாம். இது குறித்தபொருள். கடல்—பிறப்பாயகடல். வங்கம்—ஆன்மா.

தாம்புங் கூம்பும் பாயும் - மனம் வாக்குக் காயம். திணை - இதுவுமது. துறை - வாயுறைவாழ்த்து.

தாந்தனுறையுளெனுந்தண்பொருநையின்வடபால்
வாய்ந்தகிரணமுழுமாணிக்க—மேந்திழாய்
ஞானமுணர்ந்துணர்த்துநன்முத்தியைவிளக்குந்
தானவனுமீதெவனோதான். (290)

இதனுள், தாந்தனுறையுளெனுந்தண்பொருநையின்வடபால் — செம்பொன்மாடத்திருக்குருகூர். கிரணமுழுமாணிக்கம் — காரிமாறப்பிரான். இது அடைவிபரீதப்பட்டுப் பொருள்வேறுபட்டது ; என்னை ? "ஞானமுணர்ந்" தென்பதுமுதலாயினநான்கும் மாணிக்கத்திற் கில்லையாதலி னடைவிபரீதமாயிற்று. இது முதலதுபோலப் பொருணிலைக்களனாகத்தோன்றின ஒட்டு. திணை - இதுவுமது. துறை—செந்துறைப் பாடாண்பாட்டு.

தென்னம்பொதியந்தருபொருநைத்தென்கரையின்
மன்னும்புளிக்கீழ்வளர்தருவொன்—றின்னமிர்தொத்
தான்றசுவைத்தீங்கனியோராயிரமுந்தண்ணளிகூர்ந்
தீன்றளித்ததன்பாலெமக்கு. (291)

இதனுள், மன்னும்புளியென்பது திருப்புளியாழ்வார். திருப்புளிக்கீழ்வளர்தருவாவது காரிமாறப்பிரான். இன்னமிர்தொத்தான்றசுவைத்தீங்கனியோராயிரமென்பது திருவாய்மொழியாயிரப்பாடல். இதுவும் பொருணிலைக்களனாகத்தோன்றின ஒட்டு; அல்லது சாதிநிலைக்களனாகத் தோன்றிற்றெனினுமாம். இவை யிரண்டிற்கும் ஒழிந்த அகல முறையிற் கொள்க. தருவுங் கடவுளாதலிற் றுறை—கடவுள்வாழ்த்துமாம். இதுவு முன்னதுபோற் செந்துறைப்பாடாண்பாட்டு. அஃதே லிதன்முன்னர்க் கூறிய வுள்ளுறையுவமத்தினோடும் ஒட்டென்னு மிதனிடை வேற்றுமை யாதோவெனின், அஃதே! நன்று சொன்னாய்! உள்ளுறையுவமமென்பது அகத்திணைக்கைகோளிரண்டிற்குமேயுரித்தாய் அகத்திணையைந்தினும் அவ்வவ நிலங்களிற் றெய்வதமொழிந்த கருப்பொருள்களனாகப் பிறக்குமெனவும், அவ் வுள்ளுறையுவமங்கூறுவார், தலைவன் றலைவி செவிலி

தோழி பாங்கன் பாணன் ஆக அறுவரெனவும், உள்ளுறையுவமங் கூறுதற்குரியரல்லாதார், நற்றாய், தந்தை, தன்னையத்தார், ஐயன்மாராக நால்வரெனவும், அங்ஙனங் கூறுதற்குரியோர் கூறுமிடத்து மருதம் நெய்தலென்னு மீரிடத்தும் மிகுந்தும், குறிஞ்சிக்க ணவ்வளவின்றியும், ஒழிந்த நில மிரண்டினு மதனிற் குறைந்தும் வருமெனவும், அங்ஙனங் கூறுமிடத்தும் வெளிப்படக்கூறு முவமையிடத் துவமேயங் கேட்போர் மனத்தின்கண்ணும் புலவன்குறித்தவாறே நிகழ்த்துதலின் உள்ளுறை யுவமமெனவும், மேற் கூறப்படுங் கருப்பொருள்களாகப் பிறக்கு மிறைச்சிப்பொருளோடுங் கூடாதனவாயும் வருமெனவுணர்க. இஃ தன்ன தன்றாய்க் கருப்பொருளிற்பிறக்கவேண்டுமென்னும் யாப்புற வின்றிப் புறத்தினும் புறப்புறத்தினுஞ்சென்று செய்யுட்செய்யும் புலவன் முதலாயினோர் கூறுங் கூற்றாய்ச் சுட்டென்னும் உள்ளுறைபவாய் நடத் தல் வேற்றுமையென்றுணர்க. அங்ஙனமாதல் "பீலிபெய் சாகாடு மச் சிறு மப்பண்டஞ், சால மிகுத்துப் பெயின்" "நுனிக்கொம்பரேறினாஃ திறந்தூக்கி, னுயிர்க்கிறுதியாகிவிடும்" எனவும், "நெடும்புனலுள்வெல்லு முதலையடும்புனலி, னீங்கின தனைப்பிற" "கடலோடா கால்வ னெடுந்தேர் கடலோடு, நாவாயு மோடா நிலத்து" "காலாழ் களரி னரியடுங் கண் ணஞ்சா, வேலாண் முகத்த களிறு" எனவும் திருவள்ளுவர்கூறிய வலி யறிதல் இடனறிதல் என்னு மிரண்டினுள்ளும், பிறநூல்களினுங் கண்டு கொள்க. தண்டியாசிரியர் ஒட்டென்னு மலங்காரத்தினுள் அடையும் பொருளு மயல்படமொழிவதாக "வெறிகொளினச்சுரும்புமேய்ந்ததோர் காவி" யென்றதில் உள்ளுறையுவமமும், அடைவிபரீதப்படப் பொருள் வேறுபடக் " கடைகொளுலகியற்கை " யென்பதிற் கருப்பொருள்களா காது ஒட்டுங் கூறினாரெனினும், இந்நூலுடையார், " உடனுறை யுவமஞ்சுட்டுநகைசிறப்பெனக், கெடலருமரபினுள்ளுறையைந்தே" என உள்ளுறையை யைந்தாய்ப் பிரித்தமையான் உள்ளுறையுவமம் ஒட்டு இறைச்சியென மூன்றாக்கினார். இங்ஙன மாராய்ந்து பிரித்தலிவர் நோக்கமுந் தெள்ளிதி னாராய்ந்துகொள்க. (௪0)

ரு-வது ஒட்டலங்காரம் முற்றும்.

கூ-வது உல்லேகவலங்காரம்.

126. ஒருபொருட்குவமச்சொற்றொகக்கவர்த்த
பொருவமர்பொருள்பலபுணர்ப்பதுல்லேகம்.

(எ-ன்) வைத்தமுறையானே உல்லேகமென்னுமலங்கார முணர்—ற்று.

(இ-ள்) புலவனாற்குறிக்கப்பட்டதோ ருவமேயப்பொருட் குவம வுருபுதொகப் பலவேறுவகைத்தாய்க் கவர்த்த வினைபயமெய் யுருவென்னு மேதுக்களா னொத்த வுவமானப்பொருள்களை யதற்குக் கூறுவ துல்லேக மென்னும் அலங்காரமா மென்றவாறு. (சக)

127. அதுவே,
யொருவர்பலர்குறிப்புரைப்ப துமொன்றும்.

(எ-ன்) இதுவு மதற்கோர் புறனடையுணர்—ற்று.

(இ-ள்) அச்சொல்லப்பட்டவுல்லேகம் ஒருவர் தன்மையிற் கூறப் படுவதோடும், அவர் பிறராயுள்ளார்பலர்குறிப்புரையையும் பெய்துரைப் பதும் பொருந்துமென்றவாறு. உம்மை, யெச்சமாதலால் வினாவினும் வருமென்றுணர்க.

என்னுயிரென்னிருகண்மணியென்னிதயத்துள்ளாய்
மன்னாமிர்தமென்மெய்க்கணியாரம்வகுளப்பிரான்
முன்னாளெனையடிமைக்கொண்டபேருண்மூர்த்திமண்மே
னன்னுவலர்தம்பிரானுயர்வானவர்நற்றுணையே. (292)

இது ஒருவர் பலகவர்ப்பாயுரைத்தது. இருகண்—அகக்கண்ணும் புறக்கண்ணும். இடம்—தன்மை. துறை—கடவுள்வாழ்த்து.

முத்திக்குவித்தென்பர்முத்திபெற்றார்முத்தியைவிளைக்கும்
பத்திக்குவித்தென்பர்பத்தியுற்றார்பனுவற்றொகைதேர்
புத்திக்குவித்தென்பர்முத்தமிழ்வாய்மைப்புலவர்மண்மே
லெத்திக்கும்போற்றுந்திருமகிழ்மாலையிறைவனையே. (293)

இது பலர் பலகவர்ப்பாய்க் கூறுவரெனப் பெய்துரைத்தது. முத்தமிழ்—சித்தசித்தீச்சுரத்தைக் கூறுந்தமிழ், அது திருவாய்மொழி; எழுத்துஞ் சொல்லும் பொருளுந் தேரும் வாய்மையுமாம். வாய்மை—உண்மை. துறை—இதுவுமது.

அருளதென்கோநல்லறமதென்கோகற்றறிந்தவர்மெய்ப்
பொருளதெஃகோசிற்குணமதென்கோதொண்டர்புந்தியுள்ளாங்
தெருளதென்கோபிறதெய்வமென்றேதிரிகின்றசெய்கை
மருளதென்பாலணுகாதென்னையாண்மகிழ்மாறனையே (294)

இது தன்றொழிலுரைக்கும்வினையின்கண்வந்தது. என்கோ என்பது யான் என்றுகூறுகோ என்னும்பொருட்டு. அருள்—கருணை. நல்லறம்—துறவறம். மெய்ப்பொருள்—ஸ்ரீமந் நாராயணன். சிற்குணம்—சுத்தசாத்துவிககுணம். புந்தியுள்ளாங்தெருள்—பரமஞானம். மருள்—அறியாமை. அது என்பாலணுகாமை-அம்மருளென்னிடத்துச் சிறிதுமுறுமை. என்னையாண் மகிழ்மாறன்—என்னையாட்கொண்ட மகிழ்மாறனென்றவாறு. இஃதனுள் தன்றொழிலுரைக்கும்வினையின்கண் ணீற்றினேகாரமுன்னர் வருமொழி முதற்கண்ணதாங் கசதபக்கண் மிகா தியல்பாயின. என்னை? "மாறுகொளெச்சமும்வினைவுமையமுங், கூறிய வல்லெழுத்தியற்கையாகும்" என்பதனாலறிக. திணை—பாடாண். துறை—பழிச்சினர்ப்பரவல். (௬௨)

௬-வது உல்லேகம் முற்றும்.

௭-வது ஒப்புமைக்கூட்டம்.

—:0:—

128. தக்கதோர்பொருளினைச்சாற்றுழியதுபோன்
மிக்கபல்பொருள்களையுடன்விளம்புதரு
வொப்புமைக்கூட்டமெனவுரைத்தனரே.

(எ-ன்) வைத்தமுறையானே யொப்புமைக்கூட்டமென்னு மலங்காரமுணர்—ற்று.

(இ-ள்) முக்கியமானதோர்பொருளினைப் புலவன்கருதிச் செய்யு ளகத்துக்கூறுங்கா லதுபோன்ற மிக்க பலபொருளையு மதனுடன் பொருளொப்புமையுடைத்தாய்க் கூட்டமுறச்சொல்லுத லொப்புமைக் கூட்டமென மேலாட் கற்றுவல்லோ ருரைத்தனரென்றவாறு. (சரு)

129. உயர்புகழ்பழியவற்றொடுமுறுமதுவே.

(எ-ன்) இதுவும் அவ் வலங்காரத்தின்பாகுபாடுணர்-ற்று.

(இ-ள்) அவ் வொப்புமைக்கூட்டமென்னுமது உயர்ந்தபுகழோடு முயர்ந்தபழியோடும் பொருந்திவரு மென்றவாறு. உயர்வு முதனிலைத் தீவகம். ஏகார மீற்றசை.

வையம்பரவுமகிழ்மாறன்வண்டமிழுஞ்
செய்யசதுர்மறையுந்தேசிகராய்—மெய்யுணர்ந்தோர்
பேரறிவும்பேருலகுண்டானேபிரமமெனப்
பாரறிந்ததாரறிதற்பாற்று. (295)

இதனுள், மகிழ்மாறன்வண்டமிழென்றது — திருவாய்மொழி. தேசிகர் — ஆசாரியன்மார். பேருலகுண்டான்—சீமந்நாராயணன். பாரறிந்தது — பெரியோர்களறிந்தது. அவையல்லவெனி லென்பதனைச் சொல்லெச்சமாக்கிக்கூட்டிப் பிரமமென்ப தாரறிதற்பாற்று என்பது ஒருவரும் அறியும்பகுதியுடைத்தன்றென்பதாம். திணை — வாகை. துறை—சால்புமுல்லை. அல்லது திணை—பொதுவியல். துறை—பனுவல் வாழ்த்துமாம். இது புகழொப்புமைக்கூட்டம்.

என்றும்பிறர்மனையாளின்பநயவாரு
நன்றிமறவாநலத்தாரு—மொன்றினைக்கொன்
றூன்பரிந்துண்ணுதவுரவோரும்பூமகள்கோன்
வான்புரந்துநீடுவாழ்வார். (296)

இதுவும்புகழொப்புமைக்கூட்டம். இதனுள், நீடுவாழ்வார் என்றது அழிவின்றிவாழ்வாரென்றவாறு. ஒழிந்த அகல முரையிற்கொள்க. திணையுந் துறையு மிதுவுமது.

வேரிமலர்மகள்கோன்மேவுந்திருமேனி
பாரிலுலோகமெனும்பாவிகளு—மரியனை

மாந்தரிலொன்றென்பாரும்வன்றொண்டர்சென்மநிலை
யாய்ந்துரைப்பாருந்நகரத்தார். (297)

இது பழியோப்புமைக்கூட்டம். திணை-பாடாண். துறை-வாயுறை வாழ்த்து.

பொல்லாவழுக்காறுபூண்குருகுமாலடியார்க்
கில்லாப்பழியொன்றிடுகுருகு—நல்லாற்றிற்
செல்குருகரைமீட்குருகுஞ்சேயிழையாயெய்துவன
நல்குரவுதீவாய்நரகு. (298)

இதுவுமது. நல்குரவு — வறுமை. தீவாய்நரகு — அக்கினிநரகம். எனவே இம்மைக்கு வறுமையும், மறுமைக்கு நரகுமென்பதாம். ஈரிடத்து மும்மை தொக்கன. திணையுந் துறையு மிதுவுமது.

மைந்தர்மூரல்வாய்முத்தமுண்ணுதவாய்வாயோ
மைந்தர்சொற்கொளாச்செவியுமோர்செவிகொலோமழலை
மைந்தர்சீறடிச்சுவடுறாமார்புமோர்மார்போ
மைந்தர்காட்சிகண்டின்புறுக்கண்கள்கண்மலரோ. (299)

இதுவுமது. திணை — வாகை. துறை — பொருளொடுபுணர்தல். அன்றித் திணை-பொதுவியல். துறை-மகப்பெறுதழுங்கல். (சச)

எ-வது ஒப்புமைக்கூட்டம் முற்றும்.

அ-வது வேற்றுமையலங்காரம்.

130\. ஒப்புடையிருபொருளுரையினுங்குறிப்பினு
மெய்ப்படவேற்றுமைப்படுத்துதல்வேற்றுமை.

(எ-ன்) வைத்தமுறையானே வேற்றுமையென்னு மலங்கார முணர்-ற்று.

(இ-ள்) உலகத்தொப்புடையனவாயிருக்கு மிரண்டுபொருளைத் தவற்றைக் கூற்றினாலாதல் குறிப்பினாலாதல் பொருள்பெறத் தம்முள் வேற்றுமைபடக்கூறுவது வேற்றுமையென்னும் அலங்காரமாமென்றவாறு. (சரு)

131. அதுவே,

ஒருபொருளிருபொருள்சமமுயர்ச்சியதெனும்
பொருள்பெறுமரபிற்புலப்படுமென்ப.

(எ-ன்) இதுவும் அவ்வலங்காரத்தினது பொருட்கூறுபா டுணர்-ற்று.

(இ-ள்) அவ்வேற்றுமையென்னுமலங்காரமாகியவது, ஒரு பொருளான் வேற்றுமைசெய்தலும், இருபொருளான் வேற்றுமைசெய்தலும் அங்ஙனம் வேற்றுமைசெய்யுங்கா லொன்றினுக்கொன்று சமமாந் தன்மையும், உயர்ந்துளதன்மையு முடைத்தெனப் பொருள்படு மிலக்கணத்தோடுந் தோன்றுமென்றுகூறுவர் பெரியோரென்றவாறு.

இவற்றிற்கெல்லாஞ் செய்யுள் வருமாறு:—

உண்ணத்தெவிட்டாதுடலுமுயிருந்தளிர்ப்பத்
தண்ணென்றினிமைதருமமிர்தம்—பெண்ணமிர்தின்
செவ்வாயமிர்தனையதென்றாலுஞ்செவ்வியினி
லொவ்வாததுபழமைத்தொன்று. (300)

என்பது, உண்ணுநிற்ப வுண்டோருடலு முயிருந் தழைக்கும்படி குளிர்ந்து தெவிட்டா தினிமையைக்கொடுக்குந் தேவர்பானமாகிய அமிர்தமொத்த திப் பெண்ணாகியவமிர்தின் செவ்வாயிடத்துண்டாகிய பானமாகிய அமிர்தமென்றே னுனுலுங் காலத்தினுற்பார்க்குமிடத்துப் பழமையுடைத் தஃ திஃ தப்படியன்று; புதிதுபுதிதாந்தன்மையை யுடைத்தாகையாற் காலச்செவ்வியா லொவ்வாதென்றவாறு.

இதனுள், பெண்ணாகிய அமிர்தின் செவ்வாயிடத்துண்டாகிய பானமாகிய அமிர்தமென உருவகவாய்பாடுகள் மாட்டேறுபெற்றும் மாட்டேறுபெறுதும் வந்ததுங் காண்க. இஃதொருபொருள். பகுதி— இயற்கை. துறை—நலம்புனைந்துரைத்தல்.

வண்ணவாய்மைச்சுடர்கண்மன்னுனனத்துலவு
கண்ணதாயம்பரமாய்க்கண்டவற்று—ளொண்மை
வெளியொன்றுவேங்கடத்துண்மெய்ப்பொருளாய்நின்ற
வொளியொன்றெனும்பேருலகு. (301)

இதனுள் அழகினோடுங்கூடிய வுண்மைச்சுடர்கள்—சந்திரனும் ஆதித்தனுமாம். ஆகாயமுந் திருவேங்கடமுடையானும் ஒப்புடைப் பொருள். ஆகாயத்தின்மேற்சொல்லுங்காற் சுடர்கள் பொருந்திய மகிழ்ச்சியோடுஞ் சுற்றிவருமிடமுடைத்தாய்ச் சலத்தைத்தரிக்கப் பட்டதாயெனவும், திருவேங்கடமுடையான்மேற்சொல்லுங்காற் சுடர்கணிலைபெற்ற திருமுகமண்டலத்துட்பிறழுந் திருக்கண்களாகவுடைய அழகிய பாதத்துவமாமெனவும் கொள்க. இஃ திருபொருள். ஒருபொருள், இருபொருள் இவையிரண்டும் சமம். கூற்று. துறை—கடவுள்வாழ்த்து.

மாறன்றமிழ்மறைக்குவாய்ந்தமறைமுப்பொருளுங்
கூறுந்திறத்தாற்குறிப்பொக்கும்—தேறத்
துயவரவேகூறுமிது சோதியையுட்கொள்ள
மயர்வறவேகூறுமறை. (302)

என்ப துயர்ச்சி. துயவு—அறிவுதிரிதல். இதுவும் கூற்று. இணை—பாடாண்சார்ந்தபொதுவியல். துறை—பனுவல்வாழ்த்து.

வெய்யநயனத்தசெவ்வாயவெண்ணகைய
தையல்வதனமிறைதண்காவுட்—பொய்கைதான்
வண்கழுநீர்சேதாம்பல்வால்வளைகடாமுயிர்த்த
தண்டாளநீணிரையதாம். (303)

உயிர்த்த - பெற்ற. இது சமம். குறிப்பு. பகுதி - இடந்தலை. துறை - தடங்கண்டுமகிழ்தல்.

மாதராள்வெய்யமுலைமாணிக்கமுத்துவட
மீதுலாவுந்தகைத்தாம்வேரிமகிழ்ச்—சோதி
துடரிவரைதேனருவிதூநீரருவி
படரியலநல்காதின்பம். (304)

வெய்யமுலை — விருப்பத்தைத்தருமுலை. வேரிமகிழ்ச்சோதி—காரிமாறப்பிரான். இன்பநல்காதென்பதனால் இதுவும் குறிப்பு. உயர்ச்சி. பகுதி—இதுவுமது. துறை—நலம்பாராட்டல். (சகூ)

132 அதுவே,
பொருளாதியவாநான்கொடும்புணரும்.

(எ-ன்) இதுவும் அவ் வேற்றுமையலங்காரத்தின் விதப்புணர்-ற்று.

(இ-ள்) அது—அவ் வேற்றுமையலங்கார மென்னு மது பொருள் குணஞ் சாதி தொழி லென்னும் நான்கினோடும் பொருந்திவரு மென்றவாறு.

அலைபுட்படியுமரும்புனலைவாங்கி
யுலைவிலுலகுய்யவோங்கு—மலைமேற்
களிக்கும்புயல்வேங்கடவனைப்போன்முத்தி
யளிக்குந்திறனறியாதாம். (305)

இதனுள், அலைபுட்படிதல் - திருப்பாற்கடலுட் கண்வளர்தலும், புனலையுண்ணக் கடலுட்டாழ்தலுமாம். அரும்புனலைவாங்கி யுலைவிலுலகுய்யவோங்குதல் - பெறுதற்கரியபுனலை மாவலிபால்வாங்கி யுலகத்துள்ளார் பிழைக்க விச்சுவரூபங்கோடலும், கடலிற் புனலைவாங்கி யுண்டுலகு பிழைக்க விசும்பின்மே னிமிர்தலும். இது பொருள்வேற்றுமை. துறை—கடவுள்வாழ்த்து.

செம்பவளமுந்திருமால்சேறைமான்செவ்வாயின்
விம்பவளமுங்குணத்தால்வேறன்றே—யம்பவளம்
வல்லென்றிருக்குமலர்மாதர்வாயெஞ்ஞான்று
மெல்லென்றினிமைமிகும். (306)

இது குணவேற்றுமை. செவ்வாயின்விம்பவளம்—வடிவின்செல்வம். ஒழிந்த அகல முறையிற்கொள்க. துறை—நலம்புனைந்துரைத்தல்.

மந்திரத்தால்வாகடஞ்சொன்மாமருந்தாற்றீராது
புந்தியிடங்கொண்டுபுறம்போகாவாஞ்—சந்ததமு
மைவளைவேற்கண்மடவீர்மாறன்றழுவாத
பெய்வளைபாற்காமப்பிணி. (307)

இது சாதிவேற்றுமை. திணை - பெண்பாற்கைக்கிளை. துறை—கண்டுகைசோர்தல்.

மாறுங்கொலைநமற்குமாறன்மணிவரைமேற்
றேறுமயில்விழிக்குஞ்சேர்வினைதான்—வேறன்றே
நின்றொறுக்குங்கூற்றுயிரைநேரிழைகண்மன்னுயிரைக்
கொன்றளிக்குமீட்டுங்குழைந்து. (308)

இதனுள் தேறும் என்பது (மானிடமகளெனத்) தேளியும் எனவும், மயில்விழிக்கென்பது மயில்போற்சாயலையுடையாள்விழிக்கெனவுங் கொள்க. இது தொழில்வேற்றுமை. கொன்றளிக்கை—நோய்செய்யும் நோக்கும், அதற்கு மருந்தாகிய நோக்கும். நோய்செய்யும்நோக்கு—இன்பத்தினைய காமக்குறிப்பினைவெளிப்படுத்துகின்ற நோக்கு. மருந்தாய நோக்கு—தன்கணிகழ்கின்ற அற்புநோக்கு. பகுதி—இயற்கை. துறை—குறிப்பறிதல்.

நான்கொடும்புணருமென்ற தெச்சவும்மையாதலாற் பிறவலங்காரங்களோடுங் கூடியும் வருவனவுள. அவை வருமாறு:—

ஊர்தியனமம்போருகமாசனஞான
நீதிவழுவாநெறிபடைத்தும்—வேதநெறி
யோதிப்பொறியிழந்தானெங்குரவனெங்கோமா
னாதித்திருமகிழ்மாறன். (309)

இது, சிலேடைவேற்றுமை. பொறியிழத்தல்—பிரமன் றலையிழத்தல். எங்கோமானாகிய மாறன் பொறியென்னும்பெயரையுடைய பெரியபிராட்டியருளையெய்தினவ னென்றமையாற் சிலேடையால் வேற்றுமையாயிற்று. திணை—பாடாண். துறை—பழிச்சினர்ப்பரவல்.

ஓவாதசெம்மையுதயத்துளதெனினுந்
தாவாமறுப்படைத்ததன்மையான்—மூவா
முதனமது கண்ணனெனுமுத்திரைக்கைம்மாறன்
வதனமது நேராமதி. (310)

இது விலக்குவேற்றுமை. திணையுந் துறையு மது. இன்னும் வேறுபடவருவனவும் வந்தவழிக் கண்டுகொள்க. (௬௭)

அ—வது வேற்றுமை முற்றும்.

௬-வது திட்டாந்த வலங்காரம்.

—————:o:—————

133. ஒருபொருட்டிறமுதற்குறித்தொப்புமைகொளத்
தெருள்புரிபிறபொருட்டிறமுஞ்செவ்விதி
னவ்வியலகத்தறைவது திட்டாந்தம்.

(எ-ன்) வைத்தமுறையானே திட்டாந்தமென்னு மலங்கார முணர்-ற்று.

(இ-ள்) யாதாயினு மொருபொருட் கெய்திய நன்மைதீமைக் கூறுபாட்டைப் புலவனுட்கொண் டதனைத் தன்னாற்கூறப்படுஞ் செய்யுளகத்து முதலேகூறி, யதன்பின்ன ரதனோ டொப்புமைகொள்ளும்படிக்குத் தெளிவைத்த நமற்றொருபொருளின்கூறுபாடும் அச் செய்யுளகத் தழகுபெறக் கூறுவது திட்டாந்தமென்னு மலங்காரமா மென்றவாறு. எனவே, உள்ளுறையுவமம்போல வுவமப்பொருள் செய்யுளகத்து வெளிப்படையாகநிற்பவேனை யுவமேயப்பொருள்களெஞ்சிநிற்பக் குறிப்பினாற் கொள்ளப்படுவதன்றென்பதாயிற்று.

பூரணன்மலர்மகள்புணர்மணிமார்ப
னாரணன்மதிநலனயந்தனன்புரப்ப
மூத்திரைக்காம்புயமுதல்வனுவீற
னுத்தமச்சுருதியையோதாதுணர்ந்துணர்ந்
தாரனுடையவற்றுளுமுபநிடதத்தால்
வாரனுடைத்தாகவடித்தவண்டமிழ்மறைப்
புடம்போற்றிநாப்பவித்திரம்படைத்தோ
ராடகமருமணிக்கிரணமோடளவளாம்
வீடடைவதுமெய்மெய்யேயாயினு
நாடரிதாகிநடைபெறுந்தொடர்புடைப்
பொதிந்தசொற்பொருணிலைபுலப்படப்புந்தியுட்
பதிந்தறியாரிருபசையறுத்துண்மை
யுணர்ந்துடனுயிர்தளிர்ப்பதுமுருமவர்
கணம்பயனிலவாங்காலங்கழியாத்
தேசிகவரைத்தேர்ந்துநற்றுணைக்கொளும்

பூசுரன் றிருப்பெரும்பூதூர்முனிவன்
குருபரம்பரையுரைக்குறிப்பினத்தமிழ்மொழிப்
பொருண்மலிநோக்கினைப்புணர்த்துணர்ந்தொண்மை
யிருநிலத்தொருவடிவெடுத்தகாட்சியதாந்
திருமலையாழ்வார் திருவருட்கிலக்கெனு
மறையவர்பிரான்மணவாளமாமுனிவ
னிறைநிலையுயிர்நிலையிஃதிஃதெய்து
முறைநெறியிஃதெனமுழுவது முனிவறத்
துறைதொறுந்துறைதொறுஞ்சோர்வறத்தொடுத்தெடுத்
துணர்த்தியவிசித்திரக்காண்டிகையொழிவின்முற்
குணத்தொடும்பழகுபுகூர்ந்துள்ளுறுத்தித்
தோய்ந்துவட்டாததூயபேரின்பம்
வாய்ந்தவர்தாமேபுலவிர்காண்மன்ற
விமிழ்திரைப்பாற்கடலினிற்பலவளஞ்சா
ரமிழ்தினைப்பசும்பொற்றசும்பகத்தடக்கியும்
பரிசிப்பதனெடும்பரிமளிப்பதலா
லுருசித்தறியாதுசிதமாமதன்சுவை
வானவர்சுவைக்கொளும்வாய்மை
நானிலத்தெவர்தெளியாதவர்நயந்தே. (311)

என்பது திட்டாந்தம்.

(இ-ள்) சொரூபமும், ரூபமும், ஞானமும், குணமும், விபூதியும், கருணையு முதலாகியவற்றுள் யாதுமோர் குறைவிலனும் நிறைவுள்ளான் பூமகள் விட்டுநீங்காத கவுத்துவமணியோடுங் கூடிய மார்பனுஞ் சீமந் நாராயணன் ஞானத்தையும் பேரானந்தத்தையு மன்புற் றளித்தலான் ஞானமுத்திரைக் கைத்தாமரை நாவீறுடையபிரான் ஒரு நூல்களு மொப்பில்லாத நன்மையையுடைய சுருதியை நாவினுலோதாது பாடந் தரித்துஞ் சத்தவிற்பத்தியால்வரு மத்தங்களை யுட்கொண்டும் ஞான மிகுந்த அச் சுருதிகளுள்ளும் நுட்பமா முபநிடத வாக்கியங்களாற் சேட்டமாகக் கோதற வடித்துரைத்த திருவாய்மொழியின் மூலமுழுதும் பழுதறவோதித் தமது நாவிற்குச் சுத்தி யுண்டாக்கினோர் இவ்வுலகிற் பெதுக்கரு மிரணியத்தளவு அருமணிக்கிரணத்தளவோடு மொரு

தன்மைத்தாகக்கலக்கு மந்தாமத்தைத அந்தியகாலத் தடைவதோடும் சிறிது தமதுளத் தீண்டிருந் தானந்த மெய்துவதும் பிறரற் பூசனை யெய்துவதும் மெய்; மெய்யேயாறுனும், அதன்க ணாராய்தற்கரியதாகி யொழுகும் பொருட்டொடர்புடைய மறைந்தசொல்லின்பொருள் சென்று முற்றுதல் வெளிப்படைபோலப் புலப்பட்டுத் தமதுபுந்தியுட்டங்கி யறியாதார் அயனரனென்னு மிருவராலெய்தும் பயனைவிட்டுச் சீமந் நாராயணனே பரதத்துவமென்னும் வாய்மையுணர்ந்து தமதுவாழ்நாளு ளுடலுமுயிருந்தளிர்ப்பப் பேரானந்தமெய்துவ தறியார்; அறிபவர் யாரெனிற் கணப்பொழுது முயிர்க் கிலாபமின்மையா மவப்பொழுதுகழி யாத பெரியநம்பிமுதலாம் ஆரியரைவரையும் ஆராய்ந்து முத்திக்கு நற்றுணையென்ன வுறவுகொண்ட பூலோகதேவனுந் திருப்பெரும்பூதூர் முனிவன் குருபரம்பரைநோக்கத்தோடு முதலேசொன்ன தமிழ்மொழிப் பொருளான்மிகுத்த நுட்பநோக்கத்தினையு மொன்றெனப்புணர்த் துட் கொண்ட ஒள்ளியஞானம் பெரியநிலத் தொப்பற்ற மனுகுலவடிவெடுத்த காட்சிப்பொருளென் றுகூறத்தகுவதாய திருமலையாழ்வார் திருவுள்ளக் கருணைக்கிலக்கென்னு மறையவர்க்கதிபதியாம் அழகியமணவாளமா முனிவனென்னுஞ்சேட்டவா னிறைநிலைமையிஃ துயிர்நிலைமையிஃ திறையை யுயிர்சென்றெய்து மடைவாகிய வழி யிஃதெனவு மவற்றோடு மேனையவிரண்டுமாகிய யாவையும் யாவரும் விரும்ப முதற்பத்துமுத லாய்ப் பத்தாம்பத் தீறுகு மிடந்தோறு மிடந்தோறுஞ் சந்தயமறத் தொடுத்தெடுத் துபதேசித்த பேரழகுடைத்தா முரைநடையை யொழி வில்லாத சுத்தசாத்துவிககுணத்தோடும்பயின்று வரம்பறுத் துட்கொண் டழுந்தி யனுபவித்துத் தெவிட்டாத வீறில்பேரின்பம்பலித்துள்ளார் தாமே சந்தயமில்லை; அஃதெப்படியொன்றெனி லொலிக்குந்திரையை யுடைய திருப்பாற்கடல்பெற்ற சங்கநிதிமுதலிய செல்வத்தோடும் பொருந்தியதா மமிர்தினைப் பசும்பொன்னாலாய குடம், தனதுவாய்க் கொண் டுள்ளடக்கியு முறுகொள்வதனோடும் பரிமளிப்பதல்லா லதற்கு யோக்கியமான மதுரத்தை யுருசித்தறியாதென்பதூஉம், துறக்கத்தவரே யிரதிக்கும் பெருமையுடையோ ரென்பதூஉ முலகத்து ளன்புற்றுத் தெளியாதவரில்லையாதலா லப்படியொன்றெனக்கொள்க.

இதனுண் முதலே குறித்தபொருளாவது திருவாய்மொழியும் பத்தரும். அவை யப்படியே முதல்வந்து அதன்பின்ன ரதனோ டொப்புமைக்கொள்ளும்படிக்குத் தெளிவைத்தரும்படிக்குக் குறித்த அமிர்தமாம் பொருட்டிறமு மதன்பின்ன ரிச்செய்யுளகத்துக் கூறிய தூஉங் காண்க. எனவே, போந்தபொருள் திருவாய்மொழிப் பாடம்போற்றுவதோடும் அதனகத் தைந்துபொருளையுங் குருபரம்பரையா யோரான் வழியாய்வரும் வியாக்கியானங் கேட்பதே பேரின்பமெய்துதற் குறுதியென்பதாயிற்று. திணை—பாடாண். துறை—ஓம்படை.

ஆதித்திருமாலடியார்நிரப்பிடும்பை
வாதிக்கினும்வளர்ப்பார்வண்மையே—பாதிப்
பிறையாகியுமதியம்பேரிருள்சீத்தற்குக்
குறையாகுறையாகுணம். (312)

இதுவுமது. நிரப்பு—வறுமை. வண்மை—கொடை. திணை—இதுவுமது. துறை—கொடுப்போர்ப்பழிச்சல்.

ஈத்துவக்குமின்பமியைந்தார்களேற்பவர்க்குச்
சேய்த்திருந்துமீத்துவப்பர்திண்ணமே—வாய்த்தமுகில்
வானம்பதியாயுமானிலத்தார்க்கேயுதவுந்
தானந்தவறாதுதான். (313)

இதுவுமது. இதனுள், மானிலத்தார்—மாயோனுலமைக்கப்பட்ட பூமியின்கணுள்ளார். இதுவுந் திணையுந் துறையு மது. (௬௮)

௯-வது திட்டாந்தம் முற்றும்.

௧௦-வது தற்குணவலங்காரம்.

134. ஒருபொருட்குணத்தைமற்றொருபொருள்சார்ந்துழிப்
பற்றுதறற்குணமெனப்பகர்ந்தனரே.

(எ-ன்) வைத்தமுறையானே தற்குணமென்னுமலங்காரமுணர்—ற்று.

(இ-ள்) யாதாயினு மொரு முக்கியப்பொருளினது குணத்தைச் சார்ந்தவிடத் தக்குணத்தைப் பிறிதொருபொருள் பற்றுதல் தற்குண மென்னும் அலங்காரமா மென்றவாறு.

காமர்திருப்பாற்கடலுங்கருங்கடலா
நாமந்தனைப்பயிலுநாடோறும்—பூமடந்தை
சீர்மேனியைத்தழுவுந்தேவேசனுகணையான்
கார்மேனிவண்ணங்கவர்ந்து. (314)

கவர்ந்து—உட்கொண்டு.

சாந்தமலர்ப்பொழிலும்பர்ச்சார்ந்தவெளிற்றுத்தருவுஞ்
சாந்தமணநல்குஞ்சால்பிற்றே—யேங்தெழில்கூர்
வாசவனுர்நான்முகனுர்வந்திறைஞ்சிவாழ்வுபெறுங்
கேசவனுர்சேடகிரி. (315)

இதுவுந் தற்குணம். சேடகிரி—திருமலை. ஒழிந்த அகல முரையிற் கொள்க. அஃதேல், குணவதிசயத்திற்குந் தற்குணத்திற்கும் வேற்றுமை யாதோவெனின், அதிசயஞ் சிறுமையை மிகுத்துக்கூறும்; இது மிகுந்ததை மிகுந்ததாய்க்கூறல். இவ்விரண்டினுண் முன்னையது கடவுள் வாழ்த்து. இது மலைவருணனை. (சகூ)

௧௦-வது தற்குணம் முற்றும்.

௧௧-வது பிரத்தியநீகவலங்காரம்.

135. ஒருபொருட்கொருதிறத்துடைபொருண்மற்றதற்
கத்திறத்தினிலொப்புடைப்பொருளதன்மே
லமர்விளைப்பதுவேபிரத்தியநீகம்.

(எ-ன்) வைத்தமுறையானே பிரத்தியநீகமென்னு மலங்கார முணர்—ற்று.

(இ-ள்) யாதாயினு மோருவமேயப்பொருட் கொருதிறத்தாற் றோற்ற வுவமைப்பொரு ளத்திறத்தா லதற்கொத்ததோ ருவமப் பொருண்மே லமர்விளைப்பதாகக்கூறுதல் பிரத்தியநீகமென்னு மலங்கா

மா மென்றவாறு. அநீகம்—படை. இது தற்குறிப்பேற்றத்தைப் பின் சென்றதோர்பேதம்.

தேமலர்வாவிப்புது வைச்செல்விமுகப்பொற்பினுக்குத்
தூமதியந்தோற்றதற்பின்றோலாத — காமருசீ
ரந்தாமரைமேலமர்விளக்குங்கங்குலின்கண்
வந்தாடல்பெற்றமதி. (316)

இது பிரத்தியநீகம். தேமலர்வாவிப்புதுவைச்செல்வி—சூடிக் கொடுத்தசெல்வி; ஆழவார்திருமகள். ஒழிந்த அகல முறையிற்கொள்க. துறை—பெண்பாற்கடவுள்வாழ்த்து. (௫௦)

கக-வது பிரத்தியநீகம் முற்றும்.

கஉ-வது சந்தயவலங்காரம்.

136. உற்றதோர்பொருளினையையுற்றுணர்தல்
கற்றவர்சந்தயமெனக்கழறினரே.

(எ-ன்) வைத்தமுறையானே சந்தயமென்னும் அலங்கார முணர்—ற்று.

(இ-ள்) புலனுகர்பொறிகளானுதல் கருத்தினானுதல் றுற்றதோர் பொருளினை யையமுறுதலுந் தெளிதலுஞ் சந்தயமென்னும் அலங்காரமா மெனறு கற்றோர்கூறின ரென்றவாறு. (௫க)

137. அதுவே,
சுத்தசந்தயநிச்சயகெர்ப்ப
நிச்சயாந்தமெனநிகழ்மூன்றும்.

(எ-ன்) இதுவு மதன் கூறுபா டுணர்—ற்று.

(இ-ள்) அச் சந்தயமென்னு மலங்காரம் சுத்தசந்தயமென்றும், நிச்சயகெர்ப்பமென்றும், நிச்சயாந்தமென்றும் மூன்றுகூறாய் நடைபெறு மென்றவாறு.

திருமகளோபார்மகளோதென்னரங்கன்வெற்பில்
வருமகளோயாரோவிம்மாது. (317)

இது சுத்தசந்தயம். பகுதி - இயற்கை. துறை - ஐயுறல். பா-குறள்வெண்பா.

மெய்த்தமிழ்மாறன் றடாரிவெற்பிலெதிர்நின்றது பூங்
கொத்தமைந்தபொன்னங்கொடியோகொ—வித்தாணி
மீதாயுடுத்தொடுத்துமேயதகைமின் னுருவோ
யாதாயதொன்றோவிது. (318)

இதுவுமது. இதனுள், பூங்கொத்தென்றது கோடு, கொடி, நீர் என்னும் பல்வகைப்பூக்களை. அமைந்தது — மிகுந்தது. இத்தாணி ....மின் னுருவோ—மேகத்தைவிட்டுப் புவியிடத்தாய் மேக படலத்தின்மேலாய வுடுக்கணத்தினைத் தனக்குறுப்பாந் தொடர்படுத்திப் பொழிலிடத்தடைந்ததொரு மின் னுருவமோ. யாதாயதொன்றோவிது என்பது எவ்வுருவ மவ்வுருவாயதொன்றெனத் தெரிதற்கரிதென்ற வாறு. பகுதி - இயற்கை. துறை - ஐயுறுதல்.

குன்றுபோற்புடைத்தெழுந்ததனத்தாளைச்சிறைவைத்த
கொடுமையானைத்
துன்றுபோர்க்களத்தெதிர்ந்துதொடுகணையான்முரணழியத்
துயரம்பூட்டி
யின்றுபோய்காளைவாவெனவிமையோர்கணம்பரவ
வெம்பிரானே
யன்றுபோர்க்களத்துரைத்ததறநிலையோமறநிலையோ
வறிகிலேனே. (319)

இதுவுமது. திணை - பொதுவியல். துறை - வில்வென்றி. திணை—வாகையெனினுமாம்.

மூண்டகத்தானென்னின் முகமொன்றேநான்குமுகங்
கண்டனமற்றில்லையாற்கண்ணனெனிற்—றண்டுளபத்
தாமத்தானன்றுமகிழ்த்தாமத்தானைத் துதித்தெந்
நாமத்தானென்றுரைப்பேநாம். (320)

இது நிச்சயகேர்ப்பம். திணை-பெண்பாற்கூற்றுக்கைக்கிளை. துறை-நயப்புரைத்தல்.

பாடற்சுரும்பெனிலோ பண்மிழற் றுங்காவியெனி
லோடைக்குளன் றியு தியா தா—லேடவிழ்தார்
வள்ளலருண்மாறன் மால்வரைமான் கண்ணேயென்
னுள்ளந்திறைகொண்டது. (321)

இது நிச்சயாந்தம். பகுதி - இயற்கை. துறை - தெரிந்து தெளிதல். (௫௨)

கஉ-வது சந்தயம் முற்றும்.

க௩-வது அற்புதவலங்காரம்.

158. அற்புதவாய்மையினறைவதற்புதமே.

(எ-ன்) வைத்தமுறையானே அற்புதமென்னுமலங்கார முணர்—ற்று.

(இ-ள்) ஆச்சரியந்தோன்றுமுண்மையினுன்மொழிவ தற்புத மென்னுமலங்காரமா மென்றவாறு.

உண்ணீர்மையற்றவர்க்கண்டாலவர்மன் னுயிர்க்கிரங்கிக்
கண்ணீர்பனிற்றும்புயன்மனுராமன்கைக்கொள்வதொன்றே
வெண்ணீர்மையுற்றநிருதரைச்சாலவெறுத்தவர்மேற்
புண்ணீர்பனிற்றச்சரமாரியன்றுபொழிந்ததுவே. (322)

இது, அற்புதம். திணை - பொதுவியல். துறை - வில்வென்றி.

சங்கத்தமிழ்ச்சொற்கவிப்புலவீர்சலாசிமண்மே
லுங்கட்குமற்புதமாவதொன்றேசிங்கவோங்கலின்வாய்த்
துங்கப்படைக்கையிரணியனுக்குஞ்சுகிர்ந்தநர
சிங்கத்தின்மார்பின்மலர்மகளாம்பிணைசேர்ந்ததுவே. (323)

இஃது துருவகவாய்பாட்டால்வந்த அற்புதம். சிங்கவோங்கல்—சிங்கவேள்குன்றமென்னுந் திருப்பதி. மலர்மகளாம்பிணை-பெரியபிராட்டி. சிங்கம் - அழகியசிங்கர். சிங்கத்தின்மார்பிற் பிணைசேர்ந்ததென்பதனு லற்புதமாயிற்று. துறை - கடவுள்வாழ்த்து. (௫௩)

க௩-வது அற்புதம் முற்றும்.

கச-வது நிதரிசனவலங்காரம்.

:(o):

139. இவ்வகைக்குலகத்திவைநிகழ்திறமெனு
மவ்வகைக்கவைபோன்றொருபொருட்டிறங்களைக்
கோட்டமில்குணந்தீங்கெனுமிருகுறிப்பிற்
காட்டுமென்றேகழறுதனிதரிசனம்.

(எ-ன்) வைத்தமுறையானே நிதரிசனமென்னுமலங்கார முணர்—ற்று.

(இ-ள்) உலகத் திவ்வகைப்பொருட் கிவை நிகழுங்கூறுபாடென்னு மக் கூறுபாட்டிற் கவைபோன்ற பிறபொருட்கூறுபாட்டை மாறுபாடின்றி நன்மையினுந் தீமையினு மிருதிறத்தாற் குறித்துக்காணக் காட்டுகின்றதெனக் கூறுவது நிதரிசனமென்னு மலங்காரமா மென்றவாறு.

வாழ்ந்தார்வரவரவேவறிதாவர்வறுமையொடுந்
தாழ்ந்தார்தலைச்செய்வரென்பதுகாட்டுந்தரியலரைப்
போழ்ந்தார்திகிரிப்பிரான்புருடோத்தமப்பொன்னகரைச்
சூழ்ந்தாய்மதிகுறைவாய்நிறைவாம்வகைதூநகையே. (324)

இது நிதரிசனம். இது பரத்தையிற்பிரிந்துவந்ததலைமகன் வாயில் வேண்ட ஆடியிருந்து வாயின்மறுத்த தலைமகளோடும் வாயினேர்விக்குந் தோழிகூறியது. அன்றித் திணை - பாடாண். துறை - வள்ளிவாழ்த் தெனினு மாம்.

இதனுள் 'வாழ்ந்தார்வரவரவே வறிதாவர் வறுமையொடுந், தாழ்ந்தார் தலைச்செய்வ ரென்பதுகாட்டு' மென்பது உலகத்து நல்வினையடிக்கொள வாழ்வெய்தினார் நல்வினைதேய்ந்து தீவினையடிக்கொள வறுமையெய்துவர்; தீவினையடிக்கொளத் தாழ்வெய்தினார் தீவினைதேய்ந்து நல்வினையடிக் கொளச் செல்வமெய்தித் தலைப்படுவ ரென்பதைக் காண்பிக்கு மென்பதாம். தரியலரைப்போழ்ந்தார் திகிரிப்பிரானென்பது சத்துருக்களுடலைப்பிளந் துயிரைப்பருகுஞ் சக்கரத்தையுடையாரென்பதாம். ஆய்மதி—இயக்குமதி. குறைவாய் - இளம்பிறையாய். நிறைவாம்—பூரணையாம்.

அஃதேல், திட்டாந்தத்தோ டிதனிடைவேற்றுமையாதோவெனின், திட்டாந்தம் புலவன் றன்னாற்குறித்த வொரு பொருட்கூறுபாட்டிற்குப்

பிறிதொருபொருளின்கூறுபாட்டை யதற் குவமைகுறிக்கொளும்படிக் குவமைவாய்பாடு தோன்றாதுதொகத் தன்வினையாக அப்புலவன் கூறுதல்; இஃது தன்னதன்று. ஒருபொருளின் பண்பு தொழில் பயன் முதலிய கூறுபாட்டைப் பிறிதொருபொருள் காட்டுவதாகப்படுத்திப் பிறவினையாற் கூறுதல் இவைதம்முள் வேற்றுமையாமென்றுணர்க. (ருச)

கச-வது நிதரிசனம் முற்றும்.

கரு-வது தற்குறிப்பேற்றவலங்காரம்.

—:0:—

140. உலகினுளொருபொருட்குற்றதன்மைத்திறம்
விலக்குபுபிறிதின்விளைந்ததென்றுட்கொண்
டேற்றுதலாகுந்தற்குறிப்பேற்றம்.

(எ-ன்) தற்குறிப்பேற்றமென்னும் அலங்காரமுணர்—ற்று.

(இ-ள்) உலகின்கணுண்டான விருதிணைப்பொருள்களுள் யாதாயினு மொருபொருட் கெய்திய தன்மைக்கூறுபாட்டை விலக்கிப் பிறிதொருகாரணத்தால் விளைந்ததெனப் புலவன் விதித் துட்கொண் டதனை யதன்கண்ணதாக வேற்றுவது தற்குறிப்பேற்றமென்னு மலங்காரமாமென்றவாறு. (ருரு)

141. அதுவே,
சராசரமெனுமிரண்டினுஞ்சார்தருமே.

(எ-ன்) இதுவும் அவ்வலங்காரத்தினதுகூறுபாடுணர்—ற்று.

(இ-ள்) அத் தற்குறிப்பேற்றமென்னு மலங்காரம் இயங்குதிணையும் நிலைத்திணையுமாகிய விரண்டினுஞ் சார்ந்துபிறக்கு மென்றவாறு.

செங்கேழ்கிளர்வேணியனுருவிற்
பைங்கேழுமையாளொருபாகமெனச்
சங்கேதமடைந்தவிவண்சமரிற்
கிங்கேறுவனென்றெதிரெண்ணியதே. (325)

இது, உயர்திணையிடத்துத் தற்குறிப்பேற்றம். செங்கேழ்—சிவப்பாகியநிறம். கிளர்வேணி—ஓங்கியசடை. பைங்கேழுமை — பச்சென்ற

நிறத்தையுடைய வுமாதேவி. எதிரெண்ணியது—வருங்காலங்குறிக் கொண்டது. திணை—வாகை. துறை—பொருநன்வென்றி.

பிலம்புகுந்தீரேழ்புவனமுந்தரித்தபெருந்தகையெம்பிரான்றனைவெண்
சலஞ்சலந்திகிரியெனப்புரப்பவர்கள்சந்த்ரசூரியரெனச்சயிலம்
வலம்பயின்றனரந்தரத்தவர்வருந்தாவகைதரித்திலமெனத்தரிப்பா
னிலம்புகுந்துயர்பூஞ்சினையொடுந்தருவாய்நிலைமரீஇயினதெனலாமே.()

இது நிலத்திணைத் தற்குறிப்பேற்றம். இது பாடாண்புறத்திணை யுட்சார்ந்த தாவரவாழ்த்து. (இவை குருகாமான்மியம்.)

தற்பயந்துமுற்றத்தனைவளர்த்ததண்டடநீ
ரெற்பயந்தவெப்புற்றிடையாதே—பொற்கமல
மின்பாசடைக்கவிகைமீநிழற்றுநீரகமே
யென்பாலுறைமாற்கிடம். (327)

இதுவும் நிலத்திணைத்தற்குறிப்பேற்றம். நிழற்றும் – நிழலிடும். திணை–பாடாண். துறை–நகரவாழ்த்து. (௫௬)

142. உவமச்சொற்புணர்ந்தொழுகலுமுளதே.

(எ-ன்) இன்னு மதற்கோர் புறனடையுணர்—ற்று.

(இ-ள்) அத் தற்குறிப்பேற்றம் போல மான வென்னு முவமவுருபு புணர்ந்து நடப்பனவு முளதாமென்றவாறு.

மாயன்குருகூர்வளர்மறையோர்விண்புரப்பான்
றாயவழல்வளர்ப்பத்தோன்றுபுகை—நேய
வகைத்தோட்டுவார்குழலாய்வாசவனைவிண்போய்ப்
புகைத்தோட்டுகின்றதுபோனம்போனம். (328)

என்பது ஈரோற்றுடனிலையாய ஒப்பில்போலி. இது உவமவுருபுபுணர்ந்த தற்குறிப்பேற்றம். துறை–நகரவாழ்த்து. (௫௭)

௧௫-வது தற்குறிப்பேற்றம் முற்றும்.

௧௧-வது அதிசயவலங்காரம்.

:(o):

143. விதந்தொருபொருளினைவிழுமிதினுரைப்புழி
யுயர்ந்தோர்மதிக்குறவுரைப்பததிசயம்.

(எ-ன்) வைத்தமுறையானே அதிசயமென்னு மலங்கார முணர்—ற்று.

(இ-ள்) ஒருபொருளினை யுயர்த்தி நன்றாகவுரைக்குங்காற் கற்றுயர்ந்தோரறிவிற்குப்பொருந்தவுரைப்ப ததிசயமென்னு மலங்காரமா மென்றவாறு. (௫அ)

144. அதுவே,
வையம்புகழ்பொருள்பண்புவினைதிரி
பையந்தெளிவெனுமாறினும்வருமே.

(எ-ன்) இதுவும் அவ்வலங்காரத்தை விரித்துணர்—ற்று.

(இ-ள்) அதிசயவலங்காரமென்னுமது பெரியோர்புகழும் பொருளும் பண்பும் வினையும் திரிபும் ஐயமும் தெளிவு மென்னும் ஆறுகூறுபாட்டினும் வருமென்றவாறு.

வென்றித்தனுராமன்வேலைவாய்நீறெழவே
கன்றிப்பொழிந்தகனல்வாளி—யன்று
வடவைநடுநடுங்கமாநீர்சுவறச்
சுடவைகியதாஞ்சொலின். (329)

இது பொருளதிசயம். வடவைநடுநடுங்க—வடவையும் வெருவி யோடுவான். மாநீர் — சமுத்திரம். சுடவைகியதன்று — அன்றுசுட்டு அதன்கண் வைகாநின்றது. சொலின் — அத்தழலின்பெருமையைக் கதைகூறியபடிகேட்டதனைச் சொல்லுமிடத்தென்றவாறு. ஒழிந்த அகலம் உரையிற்கொள்க. திணை - வஞ்சி. துறை - உழபுலவஞ்சி.

அம்பொன்மதிட்சோதியம்புவியைப்புத்தேளிர்
தம்பொன்னகராக்குந்தன்மைசால்—செம்பொன்செய்
கோயிற்றிருமால்குணங்கற்றொழுகாதார்
நாயிற்கடையாநரர். (330)

இது குணவதிசயம். இதன்பொருளுரையிற்கொள்க. துறை—நகரவாழ்த்து.

குழித்ததலத்தொடுநிலத்தையடிவைத்துயர்
குடிற்படர்முகிற்றிரளேயே
கிழித்ததுபுழைக்கையினடுக்கலையடுக்கொடு
கிளைத்ததுகவுட்கள்வழியே
சுழித்தெழுமதத்தினையுயிர்த்தொளிர்கடைக்கன
றுணுக்குறநெருப்பொழுகவே
விழித்ததுதெழித்ததுருமுக்குலம்வெருக்கொள
வெயர்த்ததுமழைப்பெயலென. (331)

இது தொழிலதிசயம். திணை - வாகை. துறை - யானைமறம்.

பூந்தேறல்வழிந்திழிந்துபொதும்பரிஞெண்புளினமுறப்
புரிவெண்சங்கந்
தீந்தேறல்வழிதவழ்ந்துதுழனியுடன்கழனிபுகத்
திணிதோண்மள்ளர்
தாந்தேறலுகக்களைகட்டெறிதவளமரைமுகையைச்
சார்ந்துசார்ந்து
மேய்ந்தேறவரிவளையைக்கொழுநனையென்றளிபுலம்பி
வீழுமோர்பால். (332)

இது திரிபதிசயம். துழனி—ஆரவாரம். திணிதோள்—திண்ணிய தோள். தவளமரைமுகை—வெண்டாமரைமுகை. துறை-நாடுவாழ்த்தாம். (இவையிரண்டுங் குருகாமான்மியம்.)

இருநிலமுதலாமேழ்பெரும்புவனமும்
பெருவிறன்மாவலிபெய்புனலேற்றபின்
னீரடியெனத்தாண்டிணையடியொடுங்கின்
கூர்திருவுருவமுஞ்சொரூபமுங்குணனு
மோரடிமுதற்கணுற்றுளத்தடங்கியதாற்
பார்புகழ்குருகைப்பரமநின்பதமோ
காரிதந்தருள்குருகாபுரிப்பரமன்
படைத்தவண்டமிழ்மறைப்பதமோவுணர்வோ
தடைத்தயாதெனவெவர்தமிதெளிபவரே. (333)

இஃ தையவதிசயம். இதனுள் உருவமுஞ் சொரூபமுங் குணனு மென்பது திருமேனியுந் திவ்வியான்மாவுஞ் சுத்தசாத்துவிககுணனும். ஓரடிமுதற்கண் என்பது திருவாய்மொழி முதற்பத்தின் முதற்பாட்டில் "உயர்வறவுயர்நலனுடையவனெவனவன்" என்னு முதற்பதம். திணை—பாடாண். துறை—பழிச்சினர்ப்பரவல். பாடாண்சார்ந்தபனுவல் வாழ்த்துமாம்.

பொருள்கோடித்தெழுபடிவத்திரணியற்குமழவிடையோன்
பொருட்டிற்பொன்று
வொருகோடியிருகோடியரைக்கோடிவாழ்நாள்பெற்
றுலந்துளாற்கு
மருள்கோடித்தெழுந்தசிசுபாலனுக்கும்வீடளிப்பான்
மாயாவுள்ளத்
தருள்கோடியென்றலிக்குணைத்தொழுவார்பெறுங்கதிகட்
கையம்யாதே. (334)

இது தெளிவதிசயம். துறை—கடவுள்வாழ்த்து. (ருக)

145. இடஞ்சினைகாலமென் றிவற்றொடுஞ்சிவணும்.

(எ-ன்) இதுவு மதனைப் பின்னுமோர்வகையான் விரித்துணர்—ற்று.

(இ-ள்) அவ் வதிசயம் இடமுஞ் சினையுங் காலமுமென்னு மூன்றி னோடும் பொருந்தியும்வரு மென்றவாறு.

வருமென்னும்வினைச்சொ லெச்சமாகி விரிந்தது. அதிசயமென்ப ததிகாரத்தாற் கூட்டியுரைக்கப்பட்டது.

சிகாபந்திமேற்குடமதியகடுரிஞ்சியவாய்ப்
பகரும்வானமதுரகனுச்சியிற்பதிபடித்தா
யகலநாவலந்தீவொருங்குறினுமுய்த்தடக்கும்
புகலிடத்ததாலதனையாரளவிடும்பொறற்பார். (335)

இது, இடவதிசயம். துறை - சினகரவாழ்த்து.

கறுத்தவனறுத்துவீழ்வன்கரிமருப்பகிலபாரம்
பொறுத்ததிக்கயமோரெட்டும்பொறுக்குமேலவற்றினுற்ற

லொறுத்ததென்றிமையோருட்கயமனுநின்றுட்குமெல்லே
நிறுத்ததுபுழைக்கைபற்றிநிறைமதியகடுபோழ்வான். (336)

இது சினையதிசயம். திணை - வாகை. துறை - யானைமறம்.

மாலையாயாமமாய்வைகறையாய்வைகுறுநன்
காலையாய்க்கங்குல்கழிந்துகமாம்—வேலே
யெழுபார்புகழ்மாறனேந்துபுகழ்மார்பந்
தழுவாத்தமியேன்றனக்கு. (337)

இது காலவதிசயம். திணை—பெண்பாற்கூற்றுக்கைக்கிளை. துறை-கங்குற்கிரங்கல். (௬௦)

௧௬-வது அதிசயம் முற்றும்.

௧௭-வது சிலேடையலங்காரம்.

———:(o):———

146. உயர்வுறுமொருமொழிதொடர்மொழிசெய்யுளி
னியல்பினுந்திரிபினுமியன்றுபல்பொருளைத்
தருபெயர்வினையிற்சார்வதுசிலேடை.

(எ-ன்) வைத்தமுறையானே சிலேடையென்னுமலங்கார முணர்—ற்று.

(இ-ள்) ஒருமொழியாதல் தொடர்மொழியாதல் செய்யுளிடத்துச் செம்மொழியினும் பிரிமொழியினு மொழுகலாறுடைத்தாய்ப் பல பொருளைத் தருவனவாய்ப் பெயரினும் வினையினுஞ் சார்வது சிலேடையலங்காரமாமென்றவாறு. உயர்வுறுமென்றதனால் அத்தச்சிலேடையென்பதூஉ முன்னர்க்கூறப்படும். (௬௧)

147. அவற்றுள்,
இயல்புசெம்மொழிதிரிபுபிரிமொழியே.

(எ-ன்) கூறியசூத்திரத்து ளியல்பினுந் திரிபினுமென்று ரவை பொருளேக்கத்தா னிப்பெயரினவாமென்ப துணர்—ற்று.

(இ-ள்) இயல்பு திரிபு என்ற விரண்டினுள் இயல்பு செம்மொழி யென்றும், திரிபு பிரிமொழியென்றுங் கூறப்படுமென்றவாறு.

பொன்னாழிமேவும்புவனமகத்தடக்கு
மன்னாகத்துச்சிவளைந்தாடு—நன்னீர்க்
களந்தழைமெய்காட்டுங்கலைமதியுட்டோயும்
வளந்தழையும்விண்ணகர்வாழ்மால். (338)

இது செம்மொழிச்சிலேடை. திருமாலுக்கும் மேகத்திற்குஞ் சிலேடை. மேகத்தின்மேற்சொல்லுங்காற் பொலிவினையுடைய கடலுட் செறியும் புனலையுண்டு வயிற்றுளடக்கும், நிலைபெற்ற மலையினது கொடு முடியைப் பொதிந்து பரக்கும், உவராறுத்த நல்லதண்ணீர்க்கிடமாகப் பெருத்தசொரூபத்தைப் புலப்படுத்தும், கிரணத்தையுடைய சந்திர மண்டலத்தைத் தனது மண்டலத்திற்குமேலாகச் சேரும், உலகிற்கு வேண்டு மெல்லாவளங்களையுந் தழைக்கும், விசும்பினிடத்து மேகமென வும், திருமான்மேற்சொல்லுங்கால், திருமகளையுந் திருச்சக்கரத்தினையும் பொருந்தும், விராட்புருடனாகி யண்டத்தை யுள்ளடக்கும், பகையெனப் பெருகின பாம்பினுச்சியிலே பதிந்தாடும், நல்லவியல்பினையுடைய களங் கனிபோலுந் தழைபாநின்ற மேனியைத் தோற்றும், சுருதிமுதலிய கலைகளினறிவிற்கு மேலாயிருக்கும், சகல செல்வமும் வளராநின்ற திரு விண்ணகரத்து வாழ்வுபெறுந் திருமாலெனவுங் கொள்க. துறை—கடவுள் வாழ்த்து.

பாமாறன்வெற்பிற்படர்மின்பயோதரங்க
டாமாகவட்டந்தனைமறைக்கும்—காமன்
வினைவளர்ப்பதன்றிமிகுபோகமென்ப
தனைவளர்த்தவம்பகற்றித்தான். (339)

இது, மேகத்திற்குந் தனத்திற்கும் பிரிமொழிச்சிலேடை மேகத்தின் மேற்சொல்லுங்கால், வெற்பிற்றவழாநின்ற மின்னோடுங்கூடிய மேகங்க டாமாகாயப்பரப்புத்தன்னை மறைத்தன, காவினிடத்துப்பொருந்துங் கிரியையுண்டாக்கின, அவையன்றியுந் தமதிடத்துண்டான தண்ணீரைப் பெய் தெங்கும்பரப்பிச் சந்தனம் அகில் சாலி முதலிய போகங்களையும் வளர்த்தன வெனவும், முலைமேற்சொல்லுங்காற் பாமாறன்றுடரிவரை

யிடத் தியான் மானிடமெனக்குறித்த மின்போலும் இடையினையுடையாண் முலைகளிரண்டுந் தம்மைப்பெற்ற மார்பினகலத்தளவைத் தோன்றாதுமறைத்தன, காமனலெழுப்பப்படு மோகமாகிய வினையை யென்னிடத்து வளர்ப்பதன்றி மிக்க போகசுகத்தையும் வம்மையகற்றிநிறைத்தன வெனவுங் கொள்க. இதனுள், பிரிமொழியாவன:—மாகவட்டம் ஆகவட்டம், காமன் காவினிடத்துமன், அம்பகற்றி வம்பகற்றி என்பனவாம். வம்பு—கச்சு. பயோதரம்—மேகமும் முலையும். பகுதி—இடந்தலை. துறை—நலம்புனைந்துரைத்தல். (௬௨)

148. இவையினிவிரிப்பனவாமெவற்றினும்வரும்.

(இ-ள்) செம்மொழி பிரிமொழியாகிய விவ்விரண்டுமினி முன்னர் விரிப்பனவாஞ் சிலேடையனைத்தினும் பொதுவாய் விரவிவருமென்றவாறு.

மேற் சிலேடைக்குரைத்த முதற்சூத்திரத்தி னியல்பினுந் திரிபினும் பல்பொருளைத்தரு பெயர்வினையிற்சார்வது சிலேடை யென்னாதியன்று பல்பொருளைத்தருவ தென்றதனாற் சிலேடை நாலுவகைப்படும்; அவையாவன:—அயல்பட விரண்டுபொருளை யொன்றுவமையாகவுமொன்றுவமேயமாகவுங் குறித் தவற்றைப் பாடுமிடத்துச் செம்மொழியினும் பிரிமொழியினு மிரட்டுறமொழியுமிடத் துவமைப்பாற்படுத்திக் கூறுதலும், இரண்டுபொருளைக் கவிநாயகனுக்குவமையாய்க் குறித் தவற்றைப் பாடுமிடத் தொருமொழியினாலாதல் தொடர்மொழியினாலாதல் புலவனாற் றொடுக்கப்படுஞ்சொற் கவிநாயகன் கிரியையோடு மூன்றுபொருள் பயப்பதாகப்புணர்த் தவனுமவைபோலிருந்தானெனக் கூறுதலும், இரண்டுபொருளை யொருமொழியினாலாதல் தொடர்மொழியினாலாதவிரட்டுறமொழிந்து கவிநாயகன்மேற் சிலேடையின்றிக் கூறுதலும், ஒருசொல் லியல்புபெயரானு மாகுபெயரானு நாலுபொருள் பயப்பதாக உருவகவாய்பாட்டாற்கூறும் உடனிலைச்சிலேடையுமென. அவற்றுள், முன்னையவிரண்டுஞ் சிலேடையுவமைப்பால் வந்தன. ஒழிந்தவிரண்டும் வருமாறு:—

தேசுபெறுஞ்செவ்வித்திருமகிழ்மாறன்சரணங்
காசினிமேலெஞ்ஞான் றுங்காத்தருள்க—மாசிலா
வாய்ந்தபுகழ்ப்பூதூர்மகிபதியைநான்மறைநூ
லாய்ந்தவெதிராசனை. (340)

இது, அயல்பட விரண்டுபொருளைத் தொடர்மொழியா விரட்டுற மொழிந்து கவிநாயகன்மேற் சிலேடையின்றிவந்தது. என்னை? திருமகிழ்மாறன்சரணமென்பது திருமகள் விரும்பப்பட்ட மாயோன்றிருவடியென்றும், அழகிய வகுளமாறன்றிருவடிகளெனவும் ஒரு தொடர்மொழி வந்து அவை யெதிராசனைக் காக்கவெனக் கவிநாயகன்மேற் சிலேடையின்றிவந்ததனாலென்றறிக. திணை—பாடாண். துறை—புறநிலைவாழ்த்து.

தேங்கமலமாசிலாச்செங்காந்தள்பைங்குமிழ்பொற்
கோங்கரும்புகாவியுடன்கொண்டதோர்—பூங்கொடியை
வண்டுகளிக்கின்றமகிழ்மாறனூர்மால்வரைமேற்
கண்டுகளிக்கின்றனவென்கண். (341)

இதனுள், கமலமுதலிய உவமப்பொருளைந்தனுள் கோங்கரும்பென்றதொன்று மியல்புபெயராகவு மொழிந்த நான்கு மாகுபெயராகவும் வந்து அவையைந்தும் நாலுபொருள் பயப்பதாகவும் பாடினமையால் உருவகவாய்பாட்டால்வந்த உடனிலைச்சிலேடையென்ப திதன்பெயர். என்னை? தாமரையென்னு முதலைக்கூறச் சினையறிகிளவியாகிய வாகுபெயர் தாமரைப்பூவையும், முகமாகியதாமரையென மாட்டேறில்லாதவுருவகவாய்பாட்டான் முகத்தையும், அத்தாமரைப்பூவைக் கருப்பொருளாகவுடைய மருதநிலத்தையும், அந்நிலத்து நிகழும் ஒழுக்கமாகிய ஊடலையுங் காட்டிநிற்றலானென்றறிக. ஒழிந்த காந்தண் முதலிய நாலுபூவா னு மிம்முறையே நாலுபொருள் கொள்க. எனவே, இப்பெண்ணாகிய பூங்கொடி ஊடிக் கூடி யிருந்து பிரிந் திரங்குதற்குரித்தாமெனவுட்கொண்டு களிக்கின்றன வென்கண் ணென்றானென்க. ஒழிந்த அகலமுறையிற்கொள்க. பகுதி—இயற்கை. துறை—காட்சி. (கூஅ)

149. ஒன்றுபலமுரணொன்றியவினையே
நியமநியமவிலக்குவிரோத
மவிரோதத்துடனதன்விரியேழுள.

(எ-ன்) அங்ஙனம்வகைப்பட்ட சிலேடையணியின்விரியுணர்-ற்று.

(இ-ள்) ஒருவினைச்சிலேடை, பலவினைச்சிலேடை, முரண்வினைச்சிலேடை, நியமச்சிலேடை, நியமவிலக்குச்சிலேடை, விரோதச்சிலேடை, அவிரோதச்சிலேடையென விரி யேழுளவாமென்றவாறு.

வினையென்பதனை முதலேவந்த மூன்றினுக்கு மிறுதிவிளக்காக்கி, அதன் என்பதனை யதிகாரத்தாற் சிலேடையதன்விரியெனக் கொள்க. ()

150. அவற்றுள்,
ஒருவினைகொள்வதொருவினைச்சிலேடை.

(எ-ன்) வைத்தமுறையானே ஒருவினைச்சிலேடை யுணர்-ற்று.

(இ-ள்) இரண்டுபொருளை, ஒருமொழியினாலாதல் தொடர் மொழியினாலாதல் இரட்டுறமொழிந் திரண்டுபொருட்கு மொருவினை கொள்ளமுடித்தல் ஒருவினைச்சிலேடையா மென்றவாறு.

நாதமுனிதம்பிரானுவீறன்வண்குருகூர்
மாதரணிமன்னிமழைதோயு—மோதி
யிருந் தும்பியுந்தேனுமெப்போதும்யாண்டும்
பொருந்திப்புரியும்பொறை. (342)

இது ஒருவினைச்சிலேடை, மலைக்கும், மாதராள்குழற்குஞ் சிலேடை.

(இ-ள்) நாவீறுடையபிரான் வளப்பத்தையுடைய குருகூரி னிடத்துப் பெருமைபெற்ற ஆதித்தியமண்டலத்தை யணவப்பட்டு மேகந்தவழு மலையானது, பெரிய யானைத்திரளையுந் தேனிறாட்டினையு மெக்காலத்து மெவ்விடத்தும்பயிலப் பொறைபுரியுமெனவும், இம்மாதரா ளழகுசெறிந் திருண்டநிறத்தைப்பயிலுங் குழலானது, கரியவண்டினையுந்

தேனினையுங் காந்தண்முதலிய வெல்லாப்பூக்களினையு மெவ்விடத்தும் பயின்று பொறுத்தலைப்புரியுமெனவு மாம். இதனுள் எப்போதும் யாண்டும் பொருந்திப்புரியும்பொறை யென்பதற்குப் பொறைபுரியு மென்ப திரண்டுதலைக்கு மொருவினை. ஓதியென்பது மலையும், குழலும். திணை-ஆண்பாற்கூற்றுக்கைக்கிளை. துறை-நலம்பாராட்டல். (சுநு)

151. பலவினைகொள்வது பலவினைச்சிலேடை.

(எ-ன்) பலவினைச்சிலேடையாமா றுணர்—ற்று.

(இ-ள்) ஒருசெய்யுளகத்துப் பலவினை யிருபொருட் கொட்டுறக் கொள்வது பலவினைச்சிலேடையா மென்றவாறு.

ஆம்பன் மலர்த்தியகவிருள்சீத்தொண்கலைக
டாம்புல்லியதண்மதிவரவுந் — தீம்பர்
செறிவகற்றுமாறன் றிருவாக்கும்பேதை
யறிவகற்றியேநின்றன. (343)

இது பலவினைச்சிலேடை. சந்திரோதயத்திற்குந் திருவாய்மொழிக் குஞ் சிலேடை.

(இ-ள்) ஆம்பல்—பண்ணும், குமுதமும். அகவிருள்—உள்ளமயக்க மும், உலகினிடத்தந்தகாரமும். ஒண்கலைகள் - சுருதி. மிருதி புராண மும், சந்திரகிரணமும். பேதையென்பது அறிவிலியும், மகடூஉவும். அறிவகற்றியேநின்றன என்பது அறிவினைப் பெருப்பியாநின்ற தென்றும், அறிவினை யழியாநின்றதென்றுமாம். "அறிவகற்று, மாக லூழுற்றக்கடை" என்பதனு லறிக. மலர்த்தி, சீத்து, புல்லிய என அடைவேவந்தவாறுகாண்க. திணை — பாடாண்சார்ந்தபொதுவியல். துறை—பனுவல்வாழ்த்து. அல்லது திணை—பெண்பாற்கூற்றுக்கைக்கிளை. துறை—தோழிநிலவுகண்டழுங்கலுமாம். (சுசு)

152. மொழிவினைமுரணுதன்முரண்வினைச்சிலேடை.

(எ-ன்) முரண்வினைச்சிலேடையாமா றுணர்—ற்று.

(இ-ள்) மொழியப்பட்டவினைப்பொருண்முரணச் சிலேடைப் படுத்துவது முரண்வினைச்சிலேடையா மென்றவாறு.

இன்பநந்தியவானகமதனையெய்துவதுந்
துன்பமுந்துறுமறநிலையடைவதுந்துணிவா
மன்பெரும்புகழ்மாறனைவாழ்த்துபுவணங்கி
யன்புறுர்பினர்தாமெனுநாளுமிவ்வகிலம். (344)

இது முரண்வினைச்சிலேடை. அன்பில்லார்க்கு மன்புள்ளார்க்குஞ் சிலேடை.

(இ - ள்) நிலைபெற்ற பெரியபுகழையுடைய காரிமாறப்பிரானை வாழ்த்தி வணங்குவதுமின்றி மனத்தினு லன்புறுருமாகிய மாறுபட்ட கிரியையுடையோர் பேரானந்தமென்பதுகெட்ட பெரியபாவங்களைக் கூடுவதுந் துன்பம்வந்தெதிர்கொளுங் கொலைமுதலிய மறத்தினிலையை யடைவதுஞ் சந்தயமில்லையெனவும், காரிமாறப்பிரானை வாழ்த்துவதுடன் வணங்கி மனத்தினுனினைந் தன்புமிகுமன்புடையோர் பேரானந்தமல்கிய பரமவைகுண்டத்தைப்பெறுவதுந் துன்பங்களைதன்மிகும் அறநிலை யடைவதுஞ் சந்தயமில்லையெனவும் உலகங்கூறு மென்றவாறு. உலக மென்ப துயர்ந்தோரை. மாறனை யென்பதற்கு மால்தன்னையெனினுமாம். திணை – பாடாண். துறை – பழிச்சினர்ப்பாவலும், பாடாண்பகுதிப் புறத்திணைப்பாற்படும் பரவார்ப்பழித்தலுமாம். (கூஎ)

153. இயல்புடைப்பொருள்கட்குளதிலதிரட்டுற
நியமித்துரைத்தனியமச்சிலேடை.

(எ - ன்) நியமச்சிலேடையாமா றுணர் - ற்று.

(இ - ள்) உயர்திணை அஃறிணை யென்னு மிரண்டினுள் விகாரப் படாதவியல்பினையுடையபொருள்கட் குள்ளது மில்லதுமாகச் சிலேடித்த பொருளைத் தேற்றம்பெற நியமஞ்செய் தவற்று ளொன்றினைக் குறிப்பி னுற்கொள்வனவாய்ப் புகல்வது நியமச்சிலேடையாமென்றவாறு. நியமித்தல் – தெளிதல்.

வண்டுளர்முண்டகக்கொழும்பொற்றுணரொன்றேபங்கமுற
வளர்ந்ததெல்லாந்
தண்டமைவானகடுரிஞ்சுஞ்சண்பகமேயளிதுறந்த
சால்பிற்றென்றும்

வெண்டாளப்பொறையுயிர்க்கும்வலம்புரியேகோடியதும்
விழவின்மாதர்
மொண்டலைவார்குளிர்புனலேகம்பலையுட்கொண்டதுவு
மொழியின்மன்னே. (345)

இது நியமச்சிலேடை.

(இ-ள்) பங்கமுறவளர்ந்ததெல்லாந் தாமரைப்பூவினது சாதியொன்றுமே; அளிதுறந்த சால்பினையுடையது சண்பகமரமொன்றுமே; கோடியதும் வலம்புரிக்குலமே; குளிர்புனலே கம்பலையுட்கொண்டதும் என்று உலகங் கூறப்படுமாதலால் ஒழிந்த உயர்ந்தோருள் மானவீனமுற வளர்ந்தோருமில்லை; கொடையைக் கைவிட்டோருமில்லை; மனக்கோட்டமுடையோருமில்லை; நடுக்குற்றோருமில்லை யென்பதாம்.

பங்கம் - சேறும், மானவீனமும். அளி - வண்டும், கொடையும். கோடியது - வளைவும், மனக்கோட்டமும். கம்பலை - ஆரவாரமும், நடுக்கமும். இவற்றுள், பின்னையநான்கும் உயர்திணையைக்குறித்துக் குறிப்பினாற்கொண்டவாறு காண்க. உளர்தல்—குடைதல். பொறையுயிர்த்தல்—பெறுதல். திணை - பாடாண். துறை - நாடுவாழ்த்து. (௬அ)

154. விளம்பியநியமம்விலக்குறுதல்விலக்கே.

(எ-ன்) நியமவிலக்குச்சிலேடையாமாறுணர்—ற்று.

(இ-ள்) இங்ஙனங் கூறப்பட்ட நியமத்தின்கூறுபாட்டைவிலக்கிப் பிறிதும் ஒன்றுகூறுவது நியமவிலக்குச்சிலேடையா மென்றவாறு.

கடம்புணர்ந்தகளிக்கணம்பொங்கரினிழைத்ததேக்கெறிதேங்
கமழ்செந்தேனே
திடம்புணர்ந்தகெழுதகையாடவர்கடவுஞ்சிந்துரத்தின்
றிரளொன்றுண்டான்
மடம்புணர்ந்தாரியற்கொழுநருளந்தவறுமடந்தையரே
மறித்துநாடி
னடம்புணர்ந்ததுகிற்கொடித்திண்டேர்மறுகுந்திருமறுகே
நவிலின்மன்னே. (346)

இது நியமவிலக்குச்சிலேடை.

(இ-ள்) கொள்கலத்துட்பொருந்தியது, வண்டின்கூட்டம் கொம்பர் தோறும்வைத்ததா யெடுத்துண்டார்யாவருந் தேக்கிடுவதாய் மிகவும் பரிமளிக்குஞ் சிவந்த தேனே; அதுவுமன்றி, உண்மையோடெங்கூடிய நட்பையுடைய வாடவர்கடாவும் யானைத்திரள்களு மதத்தோடுங்கூடிய துண்டு. மடப்பத்தைப் பொருந்தினவர் தமதில் லறத்திற்குரிய விலக்கணத்தையுடைய கொழுநருள்ளக்குறிப்பிற் பிழையாத கற்புடைய மகளிரே; மீட்டு மாராயி லாடுதலைப்பொருந்தின துகிற்கொடியையுடைய திண்ணியதேர்கள் சூழ்வரும் பொலிவினையுடைய வீதிகளும் அறச்சாலையை மருவும். அவையன்றி வறுமையுற்றுத் தனிசுகொண்டவருமில்லை; அறியாமையுடையோரு மில்லையென்றவாறு.

கடம் - பாத்திரம், மதம், கடன்கோடல். மடம் - மடப்பம், அறச்சாலை, அறியாமை. இதனுள்ளு மிறுதிநின்ற விரண்டுங் குறிப்பினு லுயர்திணைமேற்கொண்டவாறு காண்க. இழைத்தல் - திரட்டிவைத்தல். இதுவும் நாடுவாழ்த்து. (கூகூ)

155. சாதிமுதலாச்சாற்றியநான்கொடுந்
தீதறுபெயரினும்வினையினுந்திரிந்து
மேதகவிரோதத்தறைவதுவிரோதம்.

(எ-ன்) விரோதச்சிலேடையாமா றுணர்—ற்று.

(இ-ள்) சாதிமுதலாகப் பொருளீறுகக்கூறப்பட்ட நான்கினேடுங் கூடிக் குற்றமற்ற பெயரினும் வினையினுந் திரிந்துந் திரியாதும் பெருமை தருவதாய் விரோதமாகச் சிலேடையாற்கூறுதல் விரோதச்சிலேடையா மென்றவாறு.

திரிந்துமென்னு மும்மை யெச்சமாதலாற் றிரியாது மென்றுயிற்று. சிலேடையென்ப ததிகாரத்தாற் பெற்றது. மேதகவென்றதனுற் சாதியோடு நான்கும், கிரியையோடு மூன்றும், குணத்தோடிரண்டும், பொருளோ டொன்றுமாக விரோதச்சிலேடை பத்துளவென் றறிக. அவற்றிற் கெல்லாஞ் செய்யுள் வருமாறு:—

எத்திரமென்றேயறியேனென்னளவிற்காரிதரும்
புத்திரனூர்பொன்னம்புயப்போது—முத்தநகை
மின்குமுதப்போதகலவேனிலானெய்வதற்கு
மன்குமுதப்போதாயவாறு. (347)

(இ-ள்) முத்துப்போன்ற நகையினையும், மின்போன்ற இடையினையு முடையாய்! காரிமாறப்பிரான் பொலிவினையுடைய புயத்திற் புனைவதாம் வகுளமாலிகை, (வாங்கிச் சூடப்பெறாத) என்னளவில் யான் மகிழ்வெய்தும்போ தென்னைவிட்டு நீங்காநிற்பக் காமன் பஞ்சபாணங் களையுந் தொடுப்பதற்கு நிலைபெற்ற கலகப்போதானபடி யென்னகாரண மென் றறியேனென்றவாறு.

இதனுள், பொன்னம்புயப்போது-பொன்போலும் நிறத்தையுடைய தாமரைப்போது. மன்குமுதப்போதாயவாறு - ஆக்கஞ்செய்யு மாம்பற் போதானபடி யென்னகாரணமென் றறியேனென்றதனால், சாதிக்குச்சாதியி னோடே விரோதச்சிலேடையாயிற்று. மின் - அண்மைவிளி; உவமப் பெயர். குமுதமிரண்டினுண் முன்னையது மகிழ்ச்சி. பின்னையது கலகம். போது—பூவும், காலமும். திணை—பெண்பாற்கூற்றுக் கைக்கிளை. துறை-தாம்பெறாது தளர்வுற்றுரைத்தல். இது சாதிக்குச்சாதியோடே விரோதச்சிலேடை.

நாடறியமேனுணடந்ததலவின் றுளதாய்ப்
பீடழியவந்ததற்கென்பேசுகேன்—றாடகையென்
றாளையுயிருண்டானழுந்தூரான்வெற்பிளமான்
காளையுயிருண்டகதை. (348)

(இ-ள்) தாடகையென்பாளுயிரை வாளியினாலுண்ட திருவழுந்தூர் மாயோன்வெற்பினி லிளையமான் முதியகாளையினறிவை யுண்டதென நீ கூறியகதை மேனா ளுடறியநிகழ்ந்ததொன்றல்லவாகியு மஃதின் றுன் னிடத்துளதாகி யுனது பெருமையழியவந்த துன்பத்திற் கியான்பேசுவ தென்னென்றவாறு.

இதனுள், இளையமான் முதியகாளையறிவை யுண்டதென்றதனால், சாதிக்குக் கிரியையோடே விரோதம். உயிரென்ற தீண் டறிவு. இளமான் - தலைவி. காளை - தலைவன். முதியவென்ற தெதிர்மறைச்சொல் லெச்சம். துறை - பாங்கன்கழறல்.

மாகருடனடுங்கமம்மர்தருவதன
யோகமயிலினாத்தோங்கி—யாக

நடங்குமுடன்பிறப்பைநோக்காதொறுக்கத்
தொடங்குமெமைமயென்செயாதோ. (349)

இதுவுமது.

(இ-ள்) துறக்கத்துள்ளாரு முடனடுக்கமுறும்படிக்கு அவருள்ளத்திற்கு மருந்துபிறிதில்லாத தீராப்பிணியைக்கொடுப்பனவாகிய முலையினது கூட்டம், மயிலினது சாயல்போலுஞ் சாயலையுடையாண் மருமத்தின்கண்ணே புடைத்துயர்ந்து தம்மைத்தாங்கி யுடல்வளையு முடன் பிறப்பாகிய விடையை யுடன்பிறப்பென் றுட்கொள்ளாது கொல்வதைத் தொடங்காநிற்கும்; ஆகையால் நெஞ்சமே! நம்மை யென்செய்யாதென்றவாறு.

எனவே, மாகருடனடுக்க - பெரிய கருடனும் உடல் நடுங்க. டம்மர் தருவது—வருத்தத்தைத்தருவது. அனயோகம்..... ஓங்கி—அன்னத்தின் கூட்டம் மயிலினூரத்தோடும் பெருத்தென்பதனால் இதுவுஞ் சாதிக்குக் கிரியையோடே விரோதமாயிற்று. பகுதி – இயற்கை. துறை—தகையணங்குறுத்தல்.

கோபம்பயின்றவிடங்கூர்தாபரங்குறுகத்
தாபந்தவிர்ந்துயிருந்தண்ணென்ற—பூபதிகைத்
தூரிகையாலேயமைத்தசொற்றமிழ்மாறன்றுடரிக்
காரிகைசெவ்வாயெனவேகண்டு. (350)

(இ-ள்) இந்திரகோபங்கள்விட்டுநீங்காத இடமிருந்தசோலையைக் குறுகினகாலத்து விரகாக்கினியினாலுண்டான எனதுவாட்ட நீங்கி யுயிர்தண்ணென்று குளிர்ந்தது. நெஞ்சமே! யங்ஙனம் நீங்குதற்கேது யாதெனில், தாமரையை யிடவகையாயுள்ள பிதாமகன் கையினாற் றூரியக்கோலையெடுத்தெழுதியுண்டாக்கின வழகினையுடையாள்செவ்வாய்க் கொப்பெனவேகண் டென்றவாறு.

சொற்றமிழ் மாறன்றுடரிக்காவெனக் கூட்டுக. நெஞ்சமே யென் னு மெழுவாய் முன்னிலையெச்சம். கோபம்பயின்றவென்பது சினம்விட்டு நீங்காதவென்பதாய், இடங்கூர்தாபரம் விடங்கூர்தாபரமெனத் திரிந்து, தாபரமென்பது ஆகுபெயராய்ச் சினமிகுந்த நச்சுமாமரச்சோலையைமுடுகே வாட்டந்தீர்ந் துயிர் தண்ணென்றது எனவே இது சாதிக்குக் குணத்தோடே விரோதச்சிலேடையாயிற்று. பகுதி - இடந்தலை. துறை—பொழில்கண்டுமகிழ்தல்.

காா்க்கடற்பாா்வாழ்வுபெறக்காாிதருங்கண்ணனுளத்
தோ்க்கருணைக்கேசாியாயெய்துருவைப்—போா்க்கழியா
மெய்யனன்குபேரனென்பமெய்யுணா்ந்தவாரணங்க
ளையமின்றியேதெளிந்துளாா். (351)

என்பது, காியகடல்சூழ்ந்தபூமியின்கணுள்ளாா் முத்தியாகியசெல்வத்தையெய்தக் காாியாா்பயந்தளித்த கண்ணபிரான்றிருவுள்ளத்தழகிய கருணைக்கிணையாய்வந்தவுருவத்தைப் போா்க்கழியாகிய சத்தியவாய்மையுடையோனுக்கு நன்குமதிக்கும் பேரனென்றுகூறுவா் சித் தசித் தீச்சுரங்களி னுண்மையுணா்ந்த சுருதியினுண்மையைச் சந்தயமறத் தெளிந்துளாரென்றவாறு.

இதனுள், கண்ணபிரானழகிய திருவுள்ளக்கருணையைப்பெற்றுப் பரசமயகளியானைகட்கோா் சிங்கவேறாகிய சொரூபத்தை, நல்ல குபேரனென்பவெனத் திாிந்தமையா விது சாதிக்குப் பொருளோடே விரோதச் சிலேடையாயிற்று. திணை - பாடாண். துறை - முனிவா்வாழ்த்து.

பாவாதியையேபணித்தருள்பாமாற
னூரவாவருமருகா்க்குண்மை—காவாது
கோட்டுமதமால்யானைகூறியமால்வீட்டின்பங்
காட்டுவன்மன்னேபுலவீா்காள். (352)

என்பது, நித்தா் முத்தா் முதலாயுள்ள பத்தரும் பெத்தரு மேத்தப்பட்ட பரமபதநாதனைப் புகழ்ந்திடுந் திருவாய்மொழியாகியபாவையுடைய மாறன் ஞானதிண்ணியராய்த் தன்னிடத்துவந்தடைந்தவா்க்குப் பொய்யின்றித் திருமால்பதத்திலுள்ள போின்பத்தை யுண்டாக்கித்தருவன் புலவீா்கா ளென்றவாறு.

எனவே, நீரும் அவனையே சரணாகதியெனப்பற்றும்; உமக்கும் மூத்தியெய்தலாமென்பது பயன். இதனுள், பாவாதியைப் பணித்தருள் பாமாறன் – அந்நியசமயத்தைத் தாழ்த்துப்பேரடப்பட்ட திருவாய்மொழியென்னும் பாடலையுடைய காாிமாறப்பிரான். உரவாவருமருகா்க்கு-தன்னோடு வாதுக்குத் திண்ணியராகிவரும் அருகனைத்தெய்வமாகவுடையாா்க்கு. யானை மூலமே யென்றழைப்ப வந்தருள்செய்த ஸ்ரீமந் நாராயணன் வீட்டின்பத்தைத் தருவனெனவே கிாியைக்குக் கிாியையோடே விரோதச்சிலேடையாயிற்று. திணை—வாகை. துறை—அறிவன் வாகை.

இங்குமுளனேவெனச்சொன்னதானவனைப்
பொங்கியடலாளரியாய்ப்போர்வென்றான்—சிங்கவரைக்
கன்புற்றிருப்பானெதிர்கொண்டசுரரிடத்
தின்புற்றிருந்தவளனென். (353)

என்பது, மதலையே! நீ யெங்குமுளனென்றமாயோனித்தூணிலுமுளனே வென்றுகூறிய இரணியாசுரன்முன் அடலாளரியாய்த்தோன்றி யவனோடு பொருதவனைவென்று கொன்றோன், சிங்காத்திரியிடத் தன்புற்றிருப் போன், அவனை நாவே! தன்னையெதிர்கொண்ட தேவர்களிடத் தின்புற் றிருந்த வளத்தையுடையவனென்றுகூறுவாயாக வென்றவாறு.

இதனுள், எதிர்கொண்டசுரரிடத்தென்பதனைத் தன்னோடு மாற்றங் கொண்ட அசுரனைக்கொன்றவன் மாறுகொண்ட அசுரரிடத் தின்பமுற் றிருந்தவளன் யாதுதானெனக் கிரியைக்குக் குணத்தோடே விரோத மானசிலேடையாயிற்று. இப்பொருட்குச் செய்தவென்னும்பெய ரெச்சத்தீற்றினகரஞ் செய்யுள்விகாரத்தாற் றொக்கது; என்னை? "புகழ் புரிந்தில்லிலோர்க்கில்லை" யென்பதுபோலக் கொள்க. துறை – கடவுள் வாழ்த்து.

கருத்தகலாக்கண்ணனெனக்காவலருள்வானை
யுருத்திரனுமென்பதனோடொண்மைப்—பொருட்பாத
கண்டத்தாகிச்சிறந்தகங்கைக்கோடுற்றவிடக்
கண்டத்தானொன்னுமுலகம். (354)

என்பது, திருவுள்ளத்தைவிட்டுநீங்காத கண்ணோட்டமுடையானென்று சொல்லும்படிக் குலகுயிர்களைக் காவல்செய்வானைத் திவ்வியாத்தும சொரூப மழிவிலானென்பதோடு நல்லபயனைத்தரும் பாதகண்டத்தாகி யழகெய்திய கங்கைக்கரையையுற்றவிடமாகிய கண்டத்தானுமாமென்று உலகங் கூறுநிற்கு மென்றவாறு.

கங்கைக்கோடுற்றவிடக்கண்டமென்பது கங்கைக்கரைக்கண்ட மென்னுந் திருப்பதி. ஆதலால் அங்ஙனங் கண்ணோட்டமுடன் காவல் செய்வானை நெஞ்சமே! என்னுடன்கூடிப் பற்றுவாயாக; நமக்கு முத்தி யெய்து மென்பது பயன். ஒண்மை – நன்மை. பொருள் – பயன். இனிக் கண்ணனென்னுந் திருநாமமுடையானென் றுலகங்கூறும்படிக்

குயிர்களைக் காவல்செய்வானைச் சங்காரமூர்த்தி யென்பதனோடும் பிரம சிரத்தை யிரத்தற்குக் கையிலோடாகவுடையனுமாகி நஞ்சையணிந்த மிடற்றையுடையனுமாமென் றுலகங் கூறுநிற்கு மென்னும் பொரு டோன்றுதலா லிது கிரியைக்குப் பொருளோடே விரோதச்சிலேடையாயிற்று. உருத்திரன்-சொரூபமழிவிலாதான்; சங்காரமூர்த்தி. என்றும், கம் - சிரம். கைக்கோடுற்ற - கைக்கோடாகவெய்திய. இடக்கண்டத்தான்-இடமாகிய கண்டமென்னுந்திருப்பதியான்; விடக்கண்டத்தான் - நஞ்சையணிந்தமிடற்றான் எனவுங் கொள்க. திணை-பாடாண். துறை - ஓம்படை.

என்னென் றறியேனியற்றமிழ்தேர்காரிதரு
மன்னன் றனையுலகமாறனென—முன்னுரைத்தோர்
வன்புலனையொன்றுமதியாமுனிவரிடத்
தன்புடையானென்னுமது. (355)

இதனுள், காரியார்பெற்ற விளவரசை மாறனென்னும் பிள்ளைத் திருநாமத்தையுடையானென் றுலகின் முதலேகூறுவார், அதனோடும் வலியபுலன்களை யொருபொருளாக மனக்கொளாத இருடிகளிடத் தன் புடையானென் றும்புகலுவர் என்பது போந்தபொருள்.

இனி இதனுள் அது என நின்றதனோடும் அன்றியும் என்பதனைச் சொல்லெச்சமாகவிரித்து அஃதன்றியு மெனக்கூட்டிக் காரியார்பெற்ற இளவரசை யுலகம் யாவரோடும் மாற்றங்கொள்ளுங் குணத்தையுடையானென்று முதலேகூறுவதோடு மனத்தை யதுசென்ற விடத்துச்செலவிடா தப்புலத்தி னன்மைதீமைகளை யாராய்ந்து தீமைகளைநீக்கி நல்லதன்கட்செலுத்தும் வலியவறிவினையுடையோரையு மொருபொருளாகமதித்திடாது, கோபிக்கப்பட்டவரிடத்து மன்புடையானென யிருப்பனென்றுங் கூறும அஃதியாதென்றறியே னெனக்கூறியதாய்ப் பொருள்கொள்ளக்கிடந்தமையா னிது குணத்திற்குக் குணத்தோடே விரோதச்சிலேடையாயிற்று. திணை-வாகை. துறை-சால்புமுல்லை.

புனமலிதேமாவின்புணர்சினையின் றண்மை
தினமகவிற்சேர்ந்தாரைக்கோல்லி—யெனலாகு

நாடிப்பாளையுணர்நாவீறன்றண்சிலம்பிற்
கூடிப்பிரிந்தார்குணம். (356)

என்பது, நண்பனே! ஞானத்தாலாராய்ந்து சிமந் நாராயணனே பரதத்துவமென வுட்கொண்ட நாவீறுடையபிரான் குளிர்ந்தமலைப்பக்கத்திற் புனத்தின்கண்ணே மிகுந்த பெண்பாற்கடவுளாகிய திருமகள துபயவுறுப்பாகிய முலைகளிற் றண்ணென்றகுணந் தம்மைப் பரிசித்தகாலத்துத் தண்ணென்னும்; சேய்த்தாயகாலத்துப் போதுதோறும் நினைவையுஞ்சுடும் நெருப்பாய்நின்றன வாதலான் வாடினே னென்றவாறு.

தேமா - கடவுளாகிய திருமகள். புணர்சினை—உபயமுலை. பகுதி—பாங்கற்கூட்டம். துறை - உற்றதுரைத்தல். இதனுள், புனமலிதேமாவின் புணர்சினையின்றண்மை...........யென்பது, புனத்தின்கணெருங்கவைத்த தேனையுடைய மாமரங்களி னெருங்கின கொம்பரிற் சிவந்ததளிர்களின் குளிர்ச்சி தம்மைப்பரிசித்தகாலத்துத் தண்ணென்னும்; சேய்த்தாய் நீங்கினகாலத்து நினைவோடும் பார்த்தகண்ணிற்கு நெருப்பாய்த் தோன்றிப் பயங்கரமாகி யுள்ளத்தையுஞ் சுடாநின்ற தெனப் பிறிதுமோர்பொருடோன்றலாற் குணத்திற்குப் பொருளோடே விரோதச் சிலேடையாயிற்று. சேர்ந்தாரைக் கொல்லி - நெருப்பு. சினை, தினம் ஆகுபெயர். நண்பனேயென்னு மெழுவாய்முன்னிலையும், வைத்த தேனென்பதுமுதலாக வாடினே னென்பதீறாய சொற்களு மெஞ்சி விரிந்தன. இதன்பொருளுண் மாட்டுறுப்பா யெச்சமுங் கூடின.

நாடகத்தையீறாய்நயந்ததமிழ்நன்குணர்ந்தோ
ளூடகத்தைப்பித்தனையென்றாக்கியதூஉ—மேடவிழ்பூந்
தாமக்குழலிவளேதண்டமிழ்மாறன்சிலம்பி
லேமப்பொழிலுமிது. (357)

என்பது, இயன்முதலாக நாடகமீறாக வுலகம்விரும்பப்பட்ட தமிழ் மூன்றினையு நன்றாயறிந்தோன் வெற்றியையுடையபுத்தியை மையலளவாயாக வென்று கற்பித்ததும், இதழ்விரிந்த பூமாலையைச்சூடினகுழலையுடைய விவளே; தலைவன்கூறிய தண்டமிழ்மாறன்வரையி னின்பத்திற்கிடங் கொடுத்த சோலையு மிஃதே; பிறிதில்லை யென்றவாறு.

ஏகாரம் தேற்றம். தலைவன்கூறியவென்ப தெச்சம். இதனுள் ஆடகத்தைப் பித்தனையாக்கிற்றென்பதனாற் பொருட்குப் பொருளோடே

விரோதச்சிலேடையாயிற்று. பகுதி - பாங்கற்கூட்டம். துறை—குறிவழிச்சென்றபாங்கன் றலைவியைக் காண்டல்.

ஆகப் பத்தும் முன்னர்ச் சிலேடித்தவற்றைப் பின்னரும் விரோதமாகச்சிலேடித்த சிலேடை யடைவே வந்தமை காண்க.

திருமகிழ்மாலையனுமென்பர்மெய்யைச்சிறைப்படுத்திப்
பொருதளைகட்டுண்டறியானளியுறும்போதனென்பா
ருருவளர்பாரிபடைத்தறியானொண்புனிதனென்பா
ரருள்புரிவாய்வைத்தருந்தான்மின்சொர்க்கத்தமிர்தினையே. (358)

இதனுள், திருமகிழ்மாலையனுமென்பர் என்பது திருமகள் விரும்புமியல்பையுடைய திருமாலுக்கும், அழகியவகுளமாலிகையினையுடைய மாறனுக்கும் பெயராமென்றுகூறுவர் பெரியோர். திருமால் திருமேனியையொளித் துறியினையெதிர்ந்து தயிரைக் களவுகண்டறிவான்; மாறனஞானத்தைத் தனக்காணுக்கிக்கொண்டு தன்னோடு பூசல்பெருக்கும் பாசத்தளையிற் கட்டுப்பட்டறியான்; என்றும், அளியுறும்போதனென்பார் என்பது வண்டுகள்சென்றுமூடுகும் பூவிலுள்ள பிரமனுக்கும், தண்ணளிமிக்கஞானத்தையுடையமாறனுக்கும் பேர். பிரமன் வடிவகன்ற பூமியைப் படைத்தறிவன்; மாறன் காந்திதழையாநின்ற இல்லறக் கிழத்தியைக் கொண்டறியான்; என்றும், ஒண்புனிதனென்பார் என்பது நல்ல இந்திரனுக்கும், ஒள்ளியஞானத்தோடுங்கூடிய பவித்திரவானும் மாறனுக்கும் பேர். இந்திரன் திருமால்கருணைபுரிந்துகொடுப்ப வொளிருஞ் சுவர்க்கத்திருக்கு மமிர்தினை வாய்வைத்துண்டறிவான்; மாறன் மின்போலு மிடையையுடைய நங்கை யிரங்கிக்கொடுக்குந் திருமூலப்பாலினைத் திருப்பவளவாய்வைத்துண்டறியா னென்றுங் கூறியவாறுக வுணர்க.

இங்ஙனஞ் சிலேடை நிகழ்த்தலா விதுவும் பொருளோடே கிரியைக்கு விரோதமாகவந்த சிலேடைவேறுபாடெனக் காண்க. இன்னும் வேறுபடவருவனவெல்லாம் பொருளுணேக்கமறிந்து கொள்க. அவையெல்லா மீண்டுரைப்பிற் பெருகும். திணை — வாகை. துறை — தாபத வாகை. (எ0)

156. அவிரோதத்தறைவது மவிரோதம்.

(எ-ன்) அவிரோதச்சிலேடையாமாறுணர்—ற்று.

(இ-ள்) அவிரோதச்சிலேடையென்பது முன்னர்ச் சிலேடித்த பொருள் பின்னரும்விரோதியாமற் சிலேடிப்பனவாய்க் கூறுவதாமென்ற வாறு.

குருகையிடங்கொண்டான்மெய்க்கோலமுறுதுப்பான்
பெருமனத்தானிலஞ்சிபெற்றோ—னொருபுனித
னாகதருநிழலானன்னருறுமாதவன்பொன்
னாகமலம்வருநண்பான். (359)

(இ-ள்) திருமால், பாஞ்சசன்னியத்தை யிடதுகையிற்றரித்தான்; அழிவில்லாத வராகரூபியாய்ப் பூமிதேவிதோன்றுதற்குப் பற்றுக்கோடாயினன். மாறன், குருகாபுரியை யிருப்பிடமாகப்பெற்றுளான்; திருமேனியினது அழகு மிக்க பவளம்போல்வான். பிரமன், பெருமையெய்து மன்னவாகனத்தை யுடையான்; மாயோன்றிருவுந்தி பெறப்பட்டவன். மாறன், ஞானமிகுந்த மனத்தையுடையான்; மகிழமாலிகையை யுடையவன். இந்திரன், புனிதனென்னும் ஒரு பெயரை யுடையவன்; சுவர்க்கத்திற் றருவினது நிழலையுடையவன். மாறன், ஒப்பற்ற பவித்திரவான்; சேடாவதாரமான திருப்புளிநீழலையுடையான். ஆதித்தன், நன்மைமிகும் வடமேருவை வலம்வருவான். மாறன், முத்தியைப்பெறும் பெரியதவத்தையுடையவன்; பெரியபிராட்டிதிருவுளத்தி னிறைவெய்தும் அன்பினையுடையான். ஆதலால் அவன் திருவடிகளைப்பற்றுவாரும் முத்திபெறுந்தன்மையுடையவராவரென்பது பயன். இதனுள், கோலம்-பன்றியும், அழகும். துப்பு-பற்றுக்கோடும், பவளமும். இலஞ்சி-கொப்பூழும், வகுளமாலிகையும். நாகதரு-சுவர்க்கத்துக் கற்பகதருவும், திருப்புளியாழ்வாரும் நன்னர்-மங்கலமும், முத்தியும். இஃது ஆகுபெயர். ஆகம்-திருவுளம். அலம்வரல்-சுற்றுதலும், நிறைவெய்துதலும். இது, அவிரோதச்சிலேடை; இரண்டும் கடவுள்வாழ்த்து.

அந்தணாறைந்தவுரையினைச்செவிக்கொண்
டகனமர்ந்தணிதிகழுரையிற்
சுந்தரப்பீதாம்பரத்தினைநெகிழ்த்துச்
சுற்றுவிட்டதன்பினோர்வெண்பட்

டிந்துவினெறிப்பவரையுடீஇக்கடன்க
ளியற்றிவான்பொருணையுட்படியா
வுந்தியினுதித்தோனெனும்பெயர்பிரமற்
குண்மையாமெனும்படிக்கெழுந்தான். (360)

திணை-பாடாண். துறை-மண்ணுமங்கலம்.

வெம்புலால்கமழ்ந்துழூபடைவேடுவன்விறல்கண்
டும்பல்யாவையும்பறந்துவான்குரல்கிளைத்தொசிந்த
கொம்பின்மொய்த்தடர்போதகத்துறுமுழைகுறுகித்
தும்பியாமெனப்புலவாரற்புணர்பெயர்துணிவார். (361)

திணை-வாகை. துறை-போர்முல்லை.

பாய்கதிர்க்கடவுளும்பனிவெண்டிங்களுஞ்
சேயிகந்திரிதருஞ்செம்பொன்மாளிகைத்
தூயநுண்டுகிற்கொடிதுவன்றித்தோன்றலாற்
காயமம்பரமெனும்வாய்மைகாட்டுமே. (362)

இது நகரவாழ்த்து. இங்ஙனம்வருஞ் சிலேடைவேறுபாடுகளுங் காண்க. இவைமூன்றுங் குருகாமான்மியம். இனி ஒரு தொடர்ச்சொ லிரண்டுமுதலாக ஐந்துபொருள்காட்டுவனவாஞ் சிலேடைகளு முள. அவை சொல்லணியினு ளிடைவிடாமடக்கினுண் மூன்றுறக் காட்டுதும். அவை யாண்டுக்காண்க. ஈண்டுரைப்பிற் பெருகும். (எக)

கஎ-வது சிலேடை முற்றும்.

க அ-வது பின்வருநிலையலங்காரம்.

———:(o):———

157. நெறிப்படுசெய்யுண் முன்னிலைபெறுசொற்பொருண்
மறித்துறுபலபுடைவரிற்பின்வருநிலை.

(எ-ன்) வைத்தமுறையானே பின்வருநிலையென்னுமலங்காரமாமா றுணர்—ற்று.

(இ-ள்) முன்னர்க் கூறியநெறியே யுண்டான செய்யுட்களின் முதலேவருஞ் சொல்லாயினும் பொருளாயினும் அச்செய்யுளின்கண் மீட்டும் பலவிடத்தும் வருமெனின் அது பின்வருநிலையென்னும் அலங் காரமா மென்றவாறு. (எஉ)

158. அதுவே,
சொற்பின்வருநிலைபொருட்பின்வருநிலை
சொற்பொருட்பின்வருநிலையெனமூன்றும்.

(எ-ன்) இதுவும் அவ் வலங்காரத்தினது விரியுணர் —ற்று.

இதன்பொருள், சூத்திரத்தானே விளங்கும்.

மானைப்பொருகயற்கண்மானைக்கமலமலர்
மானைப்புவனமடமானை—மானைப்
பரித்தபிறையுஞ்சூடுமோபாடகத்தான்றெண்மேற்
றரித்ததுளபத்தார்தரில். (363)

இது சொற்பின்வருநிலை. பாடகம்-திருப்பதி. ஒழிந்த அகல முறையிற்கொள்க. திணை - பெண்பாற்பெருந்திணை. துறை - நிலவு கண்டழுங்கல்.

மாய்த்தேன்செனனம்வதைத்தேனென்வல்வினையைத்
தேய்த்தேனறிவின்சிறுமையினைச்—சாய்த்தே
னனிவினையாங்கூற்றைநறையூர்வருமால்
பனிமலர்த்தாள்போற்றிப்பணிந்து. (364)

இதன்பொருளு முறையிற்கொள்க. இது பொருட்பின்வருநிலை. மாய்த்தேனென்பதனோடும் ஒழிந்தவினை பரியாயமாகப் பொருள்கோடலா னென்றறிக. திணை-வாகை. துறை-அறிவன்வாகை.

வலம்புரிதுவைத்தனவரம்பிலாம்பணின்
றலம்பினகாடிகையுலப்பில்பேரிகை
சிலம்பினமுழவுடன்றெழித்ததெங்கணு
நலம்புரிகின்னரர்நவின்றநாதமே. (365)

இதுவுமது. இதன்வேறுபாடுங் காண்க.

மாதர்மாதர்கூர்வாளமருண்கண்மாநிலத்து
மாதர்மாதர்கூர்வண்டிமிரளியதாமரைப்பூ
மாதர்மாதர்கூர்மாலும்வேலையுமெனவளர்வான்
மாதர்மாதர்கூர்கெழுதகைபடைத்தமாண்பினவே. (366)

இது சொற்பொருட்பின்வருநிலை.

(இ-ள்) இம்மாதராள்விருப்பத்தைமிகுத்த வாள்போன் றமர் விளைக்குங்கண்களானவை, பூலோகத்துமகளிர்காணவிருப்பமிகும் வண்டுகளாரவாரிக்குந் தாமரையிற் கருணையோடுங்கூடிய பெரியபிராட்டி விருப்பமிகு மாயோனும் பாற்கடலுமொப்பெனக் கரியகுணங்களாலொளிவளராநின்ற பொன்னுலகி னரமகளிர்விருப்பமிகுநட்பினையளிக்கும் பெருமையுடையவாமென்றவாறு. பகுதி-சேட்படை. துறை-கண்ணயப்புரைத்தல். (எகூ)

159. உவமானப்பொருட்பின்வருநிலையுந்
தவலருஞ்சிறப்பிற்றன்வாலுளதே.

(இ-ள்) அப் பின்வருநிலை உவமானப்பொருட்பின்வருநிலை யெனவும் வருமென்றவாறு.

பொன்னசலம்வண்கோபுரமாடகசயில
மன்னுசிகரம்வடபொருப்பா—நன்ன
ருரங்கொண்மதிண்மேருவதாகுமாயோ
னரங்கமணிமாளிகை. (367)

இஃ துவமானப்பொருட்பின்வருநிலை. இதனுள் அசலம், சயிலம், பொருப்பு, மேரு எனப் பரியாயச்சொல்லா லுவமானப்பொருட்பின் வருநிலை வந்தவாறு காண்க. துறை-நகர்வாழ்த்து. (எஅ)

கஅ-வது பின்வருநிலை முற்றும்.

கக-வது தீபகவலங்காரம்.

160. தொழில்குணஞ்சாதிபொருளெனுமிவற்றொரு
மொழிபுணர்செய்யுளின்முதலிடைகடைநின்
றங்கதன்பலபுடையடைபொருள்விளக்கும்
பாங்குறுதீபகம்பன்னிருபாற்றே.

(எ-ன்) வைத்தமுறையானே தீபகம் என்னும் அலங்காரமுணர்—ற்று.

(இ-ள்) தொழில், குணம், சாதி, பொருளென்னு மிவற்றி னொன்றைக்காட்டும் மொழி புலவனாற் புணர்க்கப்பட்ட செய்யுளின் முதல் இடை கடை யென்னு மோரிடத்துநின்று பலவிடத்துநின்ற சொற்களோடுமடைந்து பொருளை விளக்குவதாய்ச்செய்யுந் தன்மையை யுடைய தீபகம் பன்னிரண்டுபகுதியுடைத்தென்றவாறு.

ஒழுகுங்கயற்கண்ணீரொண்டளிர்க்கைச்சங்க
மழுகும்பிறைநுதல்வேர்மன்னு—முழுதுணர்ந்
தார்பந்தழுவாரணத்தமிழ்செய்ந்நாவீறர்
மார்பந்தழுவாமயிற்கு. (368)

இது முதனிலைத்தொழிற்றீபகம. இதனுள் ஒழுகுமென முதலே நின்ற நிகழ்காலவினைச்சொல்லைக், கண்ணீர், சங்கம், வேரென்னு மூன்றிடத்தும் ஒட்டுக. திணை—பெண்பாற்பெருந்திணை. துறை—கண்டுகை சோர்தல்.

வளைத்ததுராமன்கைவல்விற்பகழி
துளைத்தவரக்கரைப்பேய்ச்சுற்றந்—திளைத்தசெருக்
கண்டகளம்புண்ணீர்கடலிலங்கைமாநகரைச்
சண்டதாண்வீசியபாசம். (369)

இதுவுமது. இதனுள் இராமன்கை வில்லைவளைத்தது. அரக்கரைப் பேய்ச்சுற்றம் வளைத்தது. செருக்களத்தைப் புண்ணீர்வளைத்தது. சண்டதாண் வீசியபாசம் இலங்கைமாநகரைவளைத்தது. என முதலே நின்ற இறந்தகாலவினையை யெங்கு மொட்டுக. திணை—வாகை. துறை—போரண்முல்லை.

பூரித்ததுகோசலநாடன்விற்புணர்தோள்
பாரிற்பொடித்தாள்பருவமுலை—தேரிற்
றடுகளத்துவீழ்ந்தவரக்கரைத்தின்றூழு
மடுநிகர்த்தபல்பேய்வயிறு. (370)

இது முதனிலைக்குணத்தீபகம். இதனுள், பூரித்ததென முதனின்றபண்பைத் தோள், பருவமுலை, பேய்வயிறு என எங்குமொட்டுக. பூரித்ததெனக் காலந்தோன்றிற்றேனும் பொருளின்புடைபெயர்ச்சியல்லாமையாற் குணமாயிற்று. இணையுந் துறையு மிதுவுமது.

பாம்பாடல்வாகனமாம்பாயலாம்பாதுகையாந்
தீம்பாற்பரவைத்திரைகடைநாட்—டாம்பாகுந்
தாசரதிகொற்றக்குடையாந்தனிவிளக்கா
மாசனமாம்பின்னவனுமாம். (371)

இது முதனிலைச்சாதித்தீபகம். பாம்பென்பது சாதி. ஆடல்—வென்றி. பாதுகை - திருவடிநிலை. பின்னவன் - தம்பி. துறை— அரவவென்றி. திருவனந்தாழ்வானும் நித்தருண் முதலாதலால் அறுமுறை வாழ்த்துள்ளுமாம்.

மாறன்சடகோபன்வண்குருகூரான்பொருநை
யாறன்றுடரியருளாளன்—வீற
னொருநான்மறைத்தமிழாலொண்பொருளைக்காட்டுந்
திருஞானமுத்திரைக்கைத்தே. (372)

இது முதனிலைப்பொருட்டீபகம். துறை - கடவுள்வாழ்த்து.

தேர்வண்டமிழ்மாறன்றென்குருகூர்வீதிதொறுஞ்
சார்வண்டாளமுதுஞ்சங்கினங்க—ளூரும்
பெருமாளிகைமுகட்டிற்பெய்முகில்கள்கஞ்சூல்
வருமாலையில்வெண்மதி. (373)

இஃது இடைநிலைத்தொழிற்றீபகம். இதனுள் ஊரும் என்பதனை ஊரும் தேரும்; ஊரும் சங்கும்; ஊரும் முகில்களும்; ஊரும் மதியும் என முன்னும் பின்னு மொட்டுக. துறை - நகரவாழ்த்து.

பூண்டுறந்தவாசவன்றன்பொற்புய முமுன்னோன்பின்
னூண்டுறந்து சென்றோனுடக்கம்பு—நாண்டுறந்த
கொற்றவிராவணிதன்கொள்கைக்குலக்கோதைக்
குற்றதிரள்கண்டமும். (374)

இது பெயரோடுங்கூடி யிடைநின்ற தொழிற்றீபகம். முன்னோன்-இராமன். அவன் பின் னூண்டுறந்து சென்றோன் - இளையபெருமாள். உடக்கம்பு—நாணிற்செறிந்தபாணம். நாண்டுறந்த—எய்தகாலத்து நாணை விட்டுநீங்கின. ஈண்டு நாண் - விரற்சரடும், விஞ்ஞாணுமாம். பூண்டுறந்த வாசவன்றன்பொற்புயமும் நாண்டுறந்த என்பது இராவணி சமர்முகத்துக் கட்டினவன்றே வாகுவலயமென்னும் ஆபரணத்தை மானபங்கத்தாலணியாதுவிட்ட இந்திரன்புயத்தில் அவன்கட்டினநாணும் அன்று விட்டுநீங்கின எனவும், கொற்றவிராவணிதன் கொள்கைக்குலக்கோதைக் குற்ற திரள்கண்டமும் நாண்டுறந்த என்பது, இராவணிகுலத்திற்குரிய பாரி திரண்ட கண்டமும் மங்கிலிய மன்று விட்டுநீங்கின எனவும் முன்னும் பின்னுங் கூட்டுக. திணை—வாகைசார்ந்த பொதுவியல். துறை—வில்வென்றி.

வட்டமுலைக்கண் குளிர்ப்பவண்பனிநீரிற்குழைத்துக்
கொட்டியகத்தூரிக்கொழுங்குழம்புஞ்—சுட்டதந்தோ
செய்வளைக்குந்தென்குருகூர்ச்செண்பகமாறன்றழுவாப்
பெய்வளைக்கும்விண்மேற்பிறை. (375)

இஃ திடைநிலைக்குணத்தீபகம். இதனுள், சுட்டது கத்தூரிக் குழம்பும், விண்மேற்பிறையும் என முன்னும் பின்னுங் கூட்டுக. திணை—பெண்பாற்கைக்கிளை. துறை — கண்டுகைசோர்தல். கொட்டியது — அப்பியது. கொழுங்குழம்பு-நெகிழ்ந்தொழுகுங்குழம்பு. அந்தோவென்பதிரக்கத்தின்கட்குறிப்பு.

வஞ்சகிருதர்மறப்படைக்கோர்கூற்றமா
நஞ்சனையமாயைக்கோர்நன்மருந்தா—மஞ்சனைதன்
கன்றுமனுராமன்கவசமாம்வாகனமா
மன்றுகுறித்தேவியதுதாம். (376)

இஃ திடைநிலைச்சாதித்தீபகம். அஞ்சனைகன்று - திருவடி. கன்றென்றது வப்பின்கண் மயக்கம், “பாலறிமரபிற்பொருநர்கண்ணும்,

அனைநிலைவகையோடாங்கவையுளப்பட" என்பதனால் வாகைப்புறத்திணையுள், துறை - வானரவென்றி.

தன்னிகரொன்றில்லாத்தனிமுதலாய்நின்றானு
மன்னுயிர்க்குமன்னுயிராவாழ்வானுந்—தென்னரங்க
னாரவமுதன்றமரர்க்களித்தானு
மோராயிரம்பெயரானும். (377)

இஃது இடைநிலைப்பொருட்டீபகம். ஓராயிரம்பெயர் - ஒப்பற்றளவிறந்த திருநாமம். ஒழிந்த அகல முறையிற்கொள்க. துறை—கடவுள் வாழ்த்து.

பெருவிறல்கூர்நாகப்பிடர்மேன்மாமு
முருகெழுதோள்வாலியுரமு—மிருபதுகைக்
குன்றின்வரமுங்குணராமன்வாளியினா
லன்றுதுளைபட்டது. (378)

இது கடைநிலைத்தொழிற்றீபகம். இருபதுகைக்குன்றென்றது இராவணனை. திணை—வாகைசார்ந்தபுறத்திணை. துறை—வில்வென்றி.

மைம்மாண்புயல்கிழிக்கும்வண்சுடர்மீதாமிமையோர்
தம்மாநகரணவுஞ்சால்பிற்றே—பெம்மான்
முருகவிழ்பூந்தார்வகுளமுன்னோன்குருகூ
ருருவளர்பொன்மாடவுயர்பு. (379)

இது கடைநிலைக்குணத்தீபகம். துறை - நகரவாழ்த்து.

தன்னெவ்வநோக்காதுதாயர்வெறுத்துளதா
மென்னெவ்வநோக்குமிகல்விளைப்பான்—மன்னருண்மால்
மோகூரனைத்தொழுதேன்மோகமிகக்காமாகூ
கூகூவெனுங்கோகிலம். (380)

இது கடைநிலைச்சாதித்தீபகம். திணை—பெண்பாற்கூற்றுப் பெருந்திணை. துறை - குயிலொடுவெறுத்துக்கூறுநிற்றல்.

தாடகைகைச்சூலமுரண்சாய்த்தானும்வில்லிறுத்துச்
சூடகக்கைச்சானகிதோடோய்ந்தானுங்—கேடகத்தான்

செம்பொன்மணிமாடத்தென்னிலங்கைசெற்றானு
மம்பொன்மணிக்கூடத்தான். (381)

இது கடைநிலைப்பொருட்டீபகம். கேடகத்தான் - கேட்டோடுங் கூடியவுள்ளத்தையுடையான்; அவன் இராவணன். துறை - கடவுள் வாழ்த்து. (எரு)

161. அதுவே,
ஒருபொருளுவமையுடனுறல்சிலேடை
விருத்தமாலையென்றிவற்றொடும்விரவும்.

(எ-ன்) இதுவும் அவ்வலங்காரத்தி னொழிபுணர்—ற்று.

(இ-ள்) அத்தீபகம் ஒருபொருட்டீபகமுதலாக மாலாதீபகமீறாகக் கூறப்பட்ட வைந்தினோடும் விரவிவரு மென்றவாறு.

வெங்கதிரோன்மெய்வருடும்வெண்மதியின்மெய்தடவு
மங்கணுயர்வானகடணவு—மெங்க
ளனகனபிராமனாழியான்மூழிக்
கனகமணிமாளிகை. (382)

இஃ தொருபொருட் கடைநிலையிடத்தீபகம். ஒருபொருளாவன:- வருடும், அணவும், தடவும் என்பன. துறை - நகரவாழ்த்து.

பொன்னங்கொடியனையள்பொற்பமைந்துமென்னடைகற்
றன்னந்தனையனையளாயிழாய்—நன்னுதலாள்
வாய்ந்தவியல்பெற்றுமயிலனையண்மின்னனைய
ளாய்ந்தநுடங்கிடைபெற்றாங்கு. (383)

இஃ துவமானப்பொருட்டீபகம். வாய்ந்தவியல்-தோற்றமுள்ள சாயல். பகுதி - சேட்படை. துறை - தலைவன் பாங்கிக் கவயவங்கூறல்.

ஏகாவடநிலைபெற்றின்புட்டகமணந்து
மாகாமருவாமொய்வாழ்வுறலாற்—றோகை
முலைக்குமகிழ்மாலைமுன்னோன்றடரி
மலைக்குமகிழ்வெய்துமனம். (384)

இது சிலேடாதீபகம். குடரிமேற்சொல்லுங்கால், ஏகாவடம் (=இயங்காத ஆலமரம்) நிலைபெற்று நல்லபுள்ளுக்கள் பெருமையோடு பொருந்துவனவாய்க் கரிய அழகிய யானைத்திரள்கள் செறியும்படி வாழ்வுற்றெனவும், முலைமேற்சொல்லுங்கால், ஏகாவடமென்னும் ஆபரணம் நீங்காது கண்ணுக்கினிமைதரும் படாந் தன்மேற் றகவோடு தழுவுவனவாய்ப் பெரிய விருப்பத்தையளிக்கு மிளமைத்தன்மையுடனிறுகி வாழ்வு பெறுதலால் எனவுங்கொள்க. பகுதி - இயற்கை. துறை - நலம்புனைந்துரைத்தல்.

தணந்தாருயிர்குறைக்குந்தந் துணைவர்பொற்றேண்
மணந்தாருயிர்நிறைக்குமானே—புணர்ந்தார்நல்
யாகத்துதிமாவிபகிரிமேன்மைதவழ்நீண்
மாகத்துதிமாமதி. (385)

இது விருத்ததீபகம். இபகிரி-அத்திகிரி. விருத்தம், குறைக்கும் நிறைக்குமென்பன. பகுதி - பொருள்வயிற்பிரிதல். துறை - நிலவு கண்டழுங்கல்.

வாவிக்கழகுமலர்கமலமன்கமலப்
பூவிற்கதனுட்பொலிதேவி—தேவிக்கு
நாளும்புதியதமிழ்நாவிறனையடிமை
யாளுந்திருநாரணன். (386)

இது மாலாதீபகம். இதனுள் அழகென்னுமதனை முதனிலைக் குணத்தீபகமாக்கிக் கமல முதலாக எவ்விடத்தும் மாலைப்படுத்திக் கூட்டுக. துறை - கடவுள்வாழ்த்து. (எசு)

கசூ-வது தீபகம் முற்றும்.

உ0-வது நிரனிறையலங்காரம்.

162. குறித்திடும்பெயர்வினைகூறியசெய்யுளி
னெறிப்படநிரலுறனிரனிறையாகும்.

(எ-ன்) வைத்தமுறையானே நிரனிறையலங்கார முணர்—ற்று.

(இ-ள்) இடுகுறியெனவுங் காரணமெனவுங் குறிப்பனவாம் பெயரேயாதல் வினையேயாதல் புலவனாற் கூறப்பட்ட செய்யுளினிடத்து முறையே யிரட்டிப்பது நிரனிறையென்னு மலங்காரமாமென்றவாறு. நிரலுதல் - இரட்டித்தல். (௭௭)

163. அவற்றுள்,
பெயரொடுபெயர்நிரலுதல்பெயர்நிரனிறை.

(எ-ன்) அவ்விரண்டினுட் பெயர்நிரனிறையாமா றுணர்—ற்று.

இதன்பொருள் உரையிற்கொள்க.

தாதிவர்பூந்தாமந்திருநாமந்தந்தைதாய்
மேதினியேழும்புகழ்நாவீறற்கு—மாதாரய்
வேரியார்வண்டிரைக்கும்வெய்யமகிழ்மாறன்
காரியார்நங்கையார்காண். (387)

இது பெயரோடுபெயர்நிரனிறை. இதனுள் தாமம், திருநாமம், தந்தை, தாய்:—மகிழ், மாறன், காரியார், நங்கையார் என அடைவே நிரைந்தமை காண்க. துறை - செந்துறைப்பாடாண்பாட்டு. (௭௮)

164. பெயரெதிர்நிரலுதல்பெயரெதிர்நிரனிறை.

(ஏ-ன்) பெயரெதிர்நிரனிறையமா றுணர்—ற்று.

இதன்பொருளும் உரையிற்கொள்க.

ஏடவிழ்தாரேதியெழில்வாகனந்தளிம
மாடரவமஞ்சிறைப்புள்ளாழிதுழாய்—நீடுபா
மேட்டியூர்வெண்டிரைவாயென்றுந்துயின்றதிருக்
கோட்டியூர்வாழ்நெடுமாற்கு. (388)

இது பெயரோடுபெயர்நிரனிறை. அரவம் தளிமம் அஞ்சிறைப்புள் வாகனம், ஆழி ஏதி, துழாய் தார், எனப் பெயரொடுபெயரெதிர் நிரனிறையாயவாறு காண்க. துறை - கடவுள்வாழ்த்து. (௭௯)

165. உயர்வுறுபெயரொடுவினையுறநிரல்வது
மயர்வறுபெயர்வினைநிரனிறையெனவரும்.

(எ-ன்) பெயரொடு வினை நிரனிறையாமா றுணர்—ற்று.

இதற்கும் சூத்திரத்தானே பொருள்விளங்கும்.

மற்றுளபம்போர்வேழம்வாராழிமுல்லைநிலங்
கொற்றமகிழ்மாறனையாட்கொண்டருளும்—விற்றுவமா
லாடினதுஞ்சூடினதுமட்டதுவுந்தட்டதுவும்
பாடினதுநேடினதும்பண்டு. (389)

இது பெயரோடுவினைநிரனிறை. மல்லென்பது கூத்து. முல்லை-பண். நிலம் - பூமிதேவி. அட்டது - கொன்றது. தட்டது - அடைத்தது. நேடினது - தேடினது. இதுவுங் கடவுள்வாழ்த்து.

பணிமொழியுண்கண்மலராள்பங்கயத்தாள்செய்ய
மணிமலர்க்கைபற்றியவாட்டாற்று—னணிமலர்த்தாள்
போமுதுண்சேடமெழில்பேரின்பமுற்றுமுகஞ்
சீரடியர்க்கேவல்செயல். (390)

இது பெயரோடுவினைமுறைநிரனிறை.

(இ-ள்) நெஞ்சமே! தாமரையாள் சிவந்த மணியு மலரும்போன்ற திருக்கையைப்பற்றின திருவாட்டாற்று னழகிய திருவடிகளைப் பணி; நாமத்தை மொழி; அமுதுசெய்த சேடத்தை உண்; திருமேனியின் காந்தியைத் தியானஞ்செய்; அதன்பின்னருற்ற பேரின்பத்தான் முக மலர்; அவன் றிருத்தொண்டர்க்கேற்ற ஏவல் செய்வதனை ஆட்சிசெய்வா யாக வென்றவாறு.

நெஞ்சமேயென் னுமெழுவாய்முன்னிலை யெஞ்சிநின்றதாக விரிக்க. இதனுள், பணிமொழியுண்கண்மலராளாகிய தாமரையாளெனத் தொடர் புடைத்தாய்நின்றனவுமாய்த் தொடர்பிற்பிரித்த தன்றொழிலேவலாயின வாறுங் காண்க. திணை - பாடாண். துறை - ஓம்படை. (௯௦)

166. ஓதியபெயரினோடுயர்வினையெதிரி
னீதிகொள்பெயர்வினையெதிர்நிரனிறையாம்.

(எ-ன்) பெயரொடுவினை யெதிர்நிரனிறையாமா றுணர்—ற்று.

இதற்கும் சூத்திரத்தானே பொருள்விளங்கும்.

வேதியனையீன் றளித்தமேன்மைத்திருவுருவே
வாதியர் தம்வாய்மதமேவண்டமிழே—யோதிமமே
யேறியதுங்கூறியதுஞ்சீறியதுமீசனெனத்
தேறியதுங்காரிதருஞ்சேய். (391)

இது பெயரோடுவினையெதிர்நிரனிறை. இதனுள் வேதியனை யீன் றளித்த மேன்மைத்திருவுருவென்றது சீமந்நாராயணனை. வாதியர் வாய் மதமென்றது அகம்பிரமிமுதலாயவர் புன்சாத்திரமதம். வண்டமிழ்—திருவாய்மொழி. ஏறியது ஓதிமம்; கூறியது வண்டமிழ்; சீறியது பாவாதியர்மதத்தை; பாதத்துவமெனத்தேறியது சீமந் நாராயணனை; அவன்யாரெனிற் புலவீர்காள்! காரிமாறப்பிரானுமென்றவாறு. திணை-பாடாண். துறை—பழிச்சினர்ப்பரவல். மொழிமாற்றுநிரனிறையு மிது. ()

167. வினையொடுவினைநிரல்வதுவினைநிரனிறை.

(எ-ன்) வினையொடுவினை நிரனிறையாமாறுணர்—ற்று.

இதற்கும் சூத்திரத்தானே பொருள்விளங்கும்.

வானுலகெண்வில்வளைத்துமாநீர்செறுத்தவுணர்
கோனுதகம்பெய்ததுகைக்கொண்டுதான்—சானகிதோண்
மேயினன்றென்னிலங்கைவென்றானெழுபுவியுந்
தாயினனீர்மலையத்தான். (392)

இது வினையோடுவினைநிரனிறை. அவுணர்கோனென்றது மாவலியை. தாயினன் - அளந்தான். துறை - கடவுள்வாழ்த்து. (அஉ)

168. வினையெதிர்நிரல்வது வினையெதிர்நிரனிறை.

(எ-ன்) இது வினையொடுவினையெதிர்நிரனிறையாமாறுணர்—ற்று.

இதனுள் வினையொடு என்பதனை முதலே விரித்துரைக்க.

வன்சயிலமேந்திவளைமுழக்கிவெண்டயிர்கட்
டன்புறக்கட்டுண்டமர்வென்றுவளித்தா—னன்புட்
கடவெந்தைவரனோர்கடிகாவிடந்த
விடவெந்தையில்வாழிறை. (393)

இது வினையோடுவினை யெதிர்நிரனிறை. ஆவளித்தான்—ஆவினைக் காத்தான். நன்புட்கடவெந்தை - நல்லகருடனையேறப்பட்ட வெமது சுவாமி; என் னப்பனென்றுமாம். துறை - இதுவுமது. (அ௩)

169. வினைபெயர்நிரல்வது வினைபெயர்நிரனிறை.

(எ-ன்) வினையொடுபெயர்நிரனிறையாமா றுணர்—ற்று.

இதற்கும் சூத்திரத்தானே பொருள்விளங்கும்.

ஏந்தினன்வேய்ந்தானிறுத்தானினிதாக
மாந்தினனூழிது மாய்வன்சிலைபார்—காந்தன்
றொலைவில்லிமங்கலத்தான்றோலாதார்வென்றி
தொலைவில்லிவானோர் துணை. (394)

இது வினையோடுபேயர்நிரனிறை. காந்தன் - அழகன். தொலைவில்லிமங்கலத்தான்-தொலைவில்லிமங்கலமென்னுந் திருப்பதியையுடையவன். தோலாதார்வென்றிதொலைவில்லி - போர்க்குப் புறமிடாதசத்துருக்களது வென்றியைத்தொலைக்கப்பட்ட வில்லையுடையான். வானோர் துணை — வானோருயிர்க்குநற்றுணை யென்றவாறு. வானோர் — நித்தியசூரியர். (அ௪)

170. வினையொடுபெயரெதிர்கொளவருநிரனிறை
வினையொடுபெயரெதிர்விதிநிரனிறையே.

(எ-ன்) வினையொடுபெயரெதிர்நிரனிறையுணர்—ற்று.

விதிநிரனிறை—இலக்கணத்தால்விதிக்கப்பட்ட நிரனிறை. ஒழிந்த அகலம் உரையிற்கொள்க.

நடித்தானொடித்தானடந்தானிடந்தான்
பொடித்தானொருதூணிற்புள்வாய்—வடித்ததமிழ்ப்
பாவலன்பின்கோதண்டம்பையரவிற்பல்லுயிர்க்குங்
காவலவன்றென்னரங்கன்காண். (395)

இது வினையோடுபேயரேதிர்நிரனிறை தூணிற் பொடித்தான்; புள்வாய் இடந்தான்; பாவலன்பின் நடந்தான்; கோதண்டம் ஒடித்தான்; பையரவில் நடித்தான் என வினையொடுபெயரெதிர்நிரனிறை காண்க.

பொடித்தல் — தோன்றுதல். இடந்தது — பிளந்தது. ஒடித்தல் — முறித்தல். (அ௫)

171. இருபெயர்க்கமைநாலெழுத்தைமுறைமாறிப்
பொழிப்புறப்பிரித்துப்புணர்த்துநிரைவகை
யெழுத்துநிரனிறையென்மனார்புலவர்.

(எ-ன்) இதுவும் அந் நிரனிறையலங்காரத்திற்கு எழுத்தாலாய தோர் சிறப்பிலக்கண முணர்—ற்று.

(இ-ள்) செய்யுளகத் திரண்டுபெயர்க்கு நிரம்பின நாலெழுத்தை மாறுடி யொரோவொன் றிடையிட்டுப் பிரித்துக்கூட்டி நிரையுங் கூறுபாடு புலவ ரெழுத்து நிரனிறையென் றுகூறுவ ரென்றவாறு.

மேவாருளிமுலைகண்ணண்பாமிளிர்விபதுண்
பூவார்வதனமொழிபொன்மகள்சேர்—தேவாதி
தேவேபிரமமெனத்தேர்மகிழ்மாறன்சிலம்பிற்
காவேயவட்கிடமாங்காண். (396)

இஃ தேழுத்துநிரனிறை. இதனுள் மேவாருளி என்றமொழிக்கண் நின்ற நாலெழுத்தினை ஒரோவொன்றிடையிட்டு மேரு வாளி எனப் பிரித்து, மேரு முலை; வாளி கண் எனக் கூட்டியும், விபதுண் என்ற மொழிக்கண் நின்ற நாலெழுத்தை ஒரோவொன்றிடையிட்டு விது பண்: வதனம் மொழி எனக் கூட்டியு நிரனிறையானவாறு காண்க. இவற்றுள் உவமைமுதலிய அலங்காரங்கள்விரவினு மீண்டு நிரனிறையே நோக்க மெனக் கொள்க. பகுதி - பாங்கற்கூட்டம். துறை - இயல்பிடங் கூறல். (அ௬)

172. முறைமுறைநிரைவதுமுறைநிரனிறையே.

(எ-ன்) இதுவும் நிரனிறைக்கோர் சிறப்பிலக்கணங் கூறுதனுதலிற்று.

(இ-ள்) பெயர் வினை யென்னு மிரண்டினையு மொருசெய்யுளகத் தொருமுறை முதலேகூறியவற்றுன்மூற்றுது அவற்றைப் பயனிலை முற்றுவிப்பான் மறித்னும் பெயரும் வினையுமாகநிரைத்து முறைபெற முடிப்பது முறைநிரனிறையா மென்றவாறு.

பொன்னனைவாளரக்கனை நூற்றுவரைக்காவைப்
பொருசிலையைக்கருங்கடலைப்பொன்னனின்ற
நன்மகற்காய்ச்சுரர்க்காயைவருக்காய்க்காத
னப்பிணைக்காய்ச்சானகிக்காய்நடைவைக்காக
மன்னுகிரால்வடிக்கணையால்வளையாற்புள்ளால்
வளங்கெழுதோள்வலியால்வானரங்களாலு
முன்னுடல்கிறிச்சிரங்கொய்தமரில்வீழ்த்து
முதலொடுங்கீண்டிறுத்தடைத்தான்மோகூரானே. (397)

இது முறைநிரனிறை. இதனுள் அங்ஙனம் பெயரும், வினையு மொவ்வொருபொருட்டொடர்ச்சிக்கண்ணே யொருமுறைவந்தவற்றோடு மறித்து முறைமுறையாக வந்தமைகாண்க. இதன்பொருள் உரையிற் கொள்க. துறை - கடவுள்வாழ்த்து. (அஎ)

173. இணைபெறவிடைநின்றிருவயிற்பெயரொடும்
புணர்தகைநிரனிறைபுகலிலொன்றுளதே.

(எ-ன்) இன்னுமவ் வலங்காரத்திற்கோ ரொழிபுகூறுதனுதலிற்று.

(இ-ள்) செய்யுளினிடைக்கண் இருமொழிபெறநின்று முன்னும் பின்னுமாகிய வீரிடத்தும் பொருள்களுட னெடுத்துநிரைக்கும் இடையிணைநிரனிறையுங் கூறுமிடத் தொன்றுளதா மென்றவாறு.

அருண்மனையாளாயுவந்ததாழியான்கோடு
பொருதிரைப்பாற்றெள்ளமிர்திற்போந்த—திருவரங்கம்
பூம்பதுமக்கண்முகிழ்த்துப்புத்தேளிர்கைதொழமால்
பாம்பணைவேல்வைகும்பதி. (398)

இஃதிடையிணைநிரனிறை. இதனுள், இடைநின்ற திருவரங்க மென்னுந் தொடர்மொழியைத் திரு அரங்கம் எனப் பகுத் திருமொழியாக்கி திரு ஆழியா னருளோடுங்கூடிய பாரியாயுவந்தது ; அரங்கம் மால் பாம்பணைமேலாய்ப் பள்ளிகொள்ளும்பதி யென முன்னும் பின்னும் நிரனிறையாக்கி முடிக்க. அல்லது ஆழியானாகியமால் பாரியாகவுவந்தது திரு; புத்தேளிர் கைகளாற்றொழப் பாம்பணைமேல்வைகும் பதி அரங்கம்

எனச் சேர்த்துக் கொண்டுகூட்டெனினுமாம். கோடு - கரை. போந்தது - தொன்றியது. ஆதலாற் பரமபதத்தினுந் திருப்பாற்கடலினுஞ் சேய்த் தாயவன் உலகத்துயிர்களீடேற அர்ச்சாவதாரமாகிச் சேவித்தற்கெளி தாய் அணித்தாய்க் கண்வளர்கின்றான்; அவனைச்சேவிப்பார்க் கிம்மைப் பயனாகிய அனைத்துச்செல்வமும், மறுமைப்பயனாகிய பேரின்பமும் பெறலாம்; சேவிப்பீராக வென்பதுபயன். திணை - ......துறை - ...."நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப், பின்னீர பேதையார் நட்பு" என்னுங் குறட்பாவு மிது. (அஅ)

174. உரைபயின்முதலீற் றுறும்பெயரொடுபெயர்
நிரைநிறையெதிர்பெறநிகழ்ந்தீறொடுமுதல்
புரைதீர்தாவிற்பூட்டுறுவதுமுள.

(எ-ன்) நிரனிறையென்னும்பொருள்கோளலங்காரம் பூட்டு விற் பொருள்கோளோடு விரவுமாறுணர்—ற்று.

(இ-ள்) செய்யுளகத்து விட்டுநீங்காத பெயரொடுபெய ரெதிர்நி னிறையலங்காரமாகநடைபெற்றுச் செய்யுளீற்றுப்பெயரொடு செய்யுண் முதனின்றபெயரெழுவாயுடனெதிர்வனவாய் விற்பூட்டுப்பொருள்கோ ளாவனவுமுள வென்றவாறு.

காவிகமலங்கமழ்தளவஞ்செங்காந்த
ளாவியனையாயரங்கத்தான்—பூவிற்
பிரமனைமுன்பெற்றபெருமான்வரைமான்
காமுறுவலானனமுண்கண். (399)

இது பெயரொடுபெயரெதிர்நிரனிறை; எழுவாயு மீறு மெதிர்வன வாய்ப் பூட்டுவிற்பொருள்கோளாயிற்று. பகுதி-பாங்கற்கூட்டம். துறை— இயல்பிடங்கூறல். (அகூ)

உ0-வது நிரனிறை முற்றும்.

௨௧-வது பூட்டுவில்லலங்காரம்.

———:( ):———

175. செய்யுளினிறுவாயெழுவாய்புணர்ந்து
மெய்யுறப்பொருணிலைவிளக்கல்விற்பூட்டே.

(எ-ன்) வைத்தமுறையானே விற்பூட்டலங்காரமுணர்-ற்று.
இதன்பொருள் உரையிற்கொள்க.

வருமதற்குமுன்னேமதிட்குருகூருள்புக்
கிருமகிழ்மாறற்கடிமையென்னுங்—கருமமிது
மற்றொப்பிலாதமதிப்புலவீர்பாசமுடன்
கொற்றப்பகடேறிக்கூற்று. (400)

இது விற்பூட்டு. இதனுள், கூற்றுவரு மதற்குமுன்னேயெனச் செய்யுளிறுவா யெழுவாயுடன்புணர்ந்து பொருளொக்குடைமைகாண்க. திணை - பாடாண். துறை - வாயுறைவாழ்த்து.

மறவாதுகூறுமதிப்புலவீரென்றும்
பிறவாதபேறுபெறலாம்—துறவாளர்
தோய்ந்தமறையாதியந்தந்துதிப்பதற்கு
வாய்ந்தமுதற்றிருநாமம். (401)

இதுவுமது. துறவாளர் - மனத்தாற்றுறப்பனவற்றைத் துறப்ப தாட்சியுள்ளார். மறை யாதியந்தந்துதிப்பதற்குவாய்ந்த முதற்றிரு நாமம் அரியென்னுந்திருநாமம். நாமம் மறவாதுகூறுமெனப் புணர்க்க. திணை - இதுவுமது. துறை - செவியறிவுறூஉ. (௬௦)

௨௧-வது பூட்டுவின் முற்றும்.

௨௨-வது இறைச்சிப்பொருளலங்காரம்.

———:( ):———

176. கருப்பொருள்களனுங்கட்டுரைபயின்ற
பொருட்புறத்தனவாமிறைச்சிப்பொருளணி.

(எ-ன்) வைத்தமுறையானே இறைச்சிப்பொருளலங்கார முணர்-ற்று.

(இ-ள்) ஐந்து நிலத்தினும் அவ்வவநிலங்களிற் கருப்பொருளே தனக்குநிலைக்களனு மழகியவுரையோடும்பொருந்திப் பொருட்குப்புறத்த வாய்ப் பயன்றரும் இறைச்சிப்பொருளலங்கார மென்றவாறு.

ஏனலுமிறடியுமிடர்சிறிதின்று
வான்வளஞ்சுரத்தலும்வயின்வயின்வனப்புற
விளைத்தவர்பலரொடுமிசைதிறத்தேவலின்
வளைத்தரிகுநரரிதற்கருமையவா
யொழிந்தபல்வளங்களுமோங்கினசெழுந்தேன்
வழிந்தொழுகியமகிழ்மார்பினன்வரைவாழ்
சேயரிக்கருங்கட்டிருநுதல்
வாய்மையின்வழாஅமன்மரீஇயபைம்புனமே. (402)

இதனுள் வாய்மையின்வழாஅ மன் என்பதே கூறவேண்டும் பொருள். அதன்புறத்தே இங்ஙனம் வழாஅ மன் மரீஇயபைம்புனத்தும் ஏனல் முதலிய பலவளங்களும் அழகுமிக வானுந் தன்வளனுகிய புனலைச் சுரந்துபொழிவதென்னென இறைச்சிப்பொருளணி தோன்றிய வாறு காண்க.

திருநுதல் - அண்மைவிளி. வாய்மையின்வழாதோன் என்றது இகழ்ச்சிக்குறிப்பு. ஏனல் - செந்தினை. இறடி - கருந்தினை. வான்வளம்- மழை. சுரத்தல் - பெருகுதல். வயின்வயின் - இடந்தொறுமிடந்தொறும். விளைத்தவர் - விளைவித்தார். மிசைதிறத்து - துய்த்தற்பொருட்டு. அரிகுநரரிதற்கருமையவாய் - அறுப்பவர் அறுத்துத்தொலைத்தற்கரிய தன்மையவாகி. ஏனையவளங்களும் - அவையிரண்டுமொழிந்த பலவளங் களும். ஓங்கின - அவற்றோடும் பெருத்தன. வழாஅமன் - வினையெதிர் மறுத்த வினைத்திரிசொல். பகுதி - வரைபொருட்பிரிதல். துறை - தலைவனைத் தோழி யியற்பழித்தல்.

அகத்திற்குரியவா மிறைச்சிப்பொருள்கோளெல்லா மிகுதியாய் வருவன தலைவன்கொடுமைகூறுமிடத்தென வுணர்க. ஏனையுவப்பினுஞ் சிறுபான்மைவரும். இப்பொருள்கோள் கருப்பொருளே தனக்கு நிலைக் களனுகவரு மென்பது இதற்கு முதனூல்செய்த ஒல்காப்புலமைத் தொல்காப்பியனாரும், பொருளியலுள் "இறைச்சி தானே பொருட்புறத் ததுவே" என்பதனுனுங் கண்டுகொள்க.

கறையடிச்சிறுகட்களிநல்யானை
யறைபொருக்கெழவெயிலழலுமிழதரிடை
யுருப்பமதாற்றா துயங்கியபிடியி
னடிக்கீழடிக்கடியளிதகவிலாழியைப்
பிணர்படுபுழைக்கையிற்பெய்துபெய்தாற்றி
யுடனமர்ந்தொரீஇயவொண்சுரமூடறுத்
திகந்தவர்நின்கவினிறந்துபாடெய்த
நெடுநாள்வைகுநால்லரின்னே
செய்பொருண் முற்றுபுவருவர்
மையமருண்கணாய்வருந்தனீயே. (403)

இது, "அன்புறுதகுநவிறைச்சியுட்சுட்டலும், வன்புறையாகும் வருந்தியபொழுதே" என்பதனு ளிறைச்சிப்பொருண் மூற்கூறியவற்றின் வேறுபடவருமென்கின்றது. என்னே? முன்னே நெஞ்சத்தன்புடையார், அதன்மேலுங் களிறு தன்பிடியின் கறையடிவெப்பத்தினை விலாழியைக் கையால்வாங்கி யடிக்கடி யிறைத் தாற்றி யுடன்கொண்டு சுரத்தினைக் கடக்கு மன்பினையுடைத்தென்றனர்; அவர் அதனை யிப்பொழுதுங் காண்பர்கா ணென்று அன்புறுதகுநகூறிப் பிரிவாற்றாதவட்குத் தோழி வற்புறுத்தினவாற்றா னறிக.

கறையடி - உரல்போன்ற அடி. அறைபொருக்கெழ - பாறை தகடுதகடாகவெடித்துச்சிந்த. வெயிலழலுமிழதரிடை - ஆதித்தன் அழலைச்சொரியுங் கடத்தற்கரிதாய சுரத்துவழியில். உருப்பமதாற்றா துயங்கியபிடியின் - வெப்பமானதற் காற்றாதுவருந்திய பிடியின். அடிக்கீ ழடிக்கடி யளிதக விலாழியை - அப்பிடியினடிக்கீழ்ப் பலகாலு மன்புமிக விலாழியை. பிணர்படு புழைக்கையிற் பெய்துபெய் தாற்றி - சருச்சரையுடைய துளைக்கையா லிறைத்து வெப்பத்தைநீக்கி. உடனமர்ந் தொரீஇய - உள்ளுமூடலு மொன்றெனக் கலந்து கடந்த. ஒண்சுர மூடறுத்திகந்தவர் - ஒள்ளியசுரத்தினதுவழியைத்தொலைத்துக்கடந்த வர். நின்கவி னிறந்துபாடெய்த - நினது மேனியினழகு மேனியை விட்டுப் புறம்போக. நெடுநாள்வைகுநால்லர் - நெடுநா ளங்குத் தங்குவா ரல்லர். இன்னே செய்பொருண்முற்றுபுவருவர் - இக்காலத்துத் தாம் ஈட்டுதற்கமைந்த நிதியீட்டுங்கருமமுற்றி வருவர். மையமருண்கணாய்

வருந்தனீயே - ஆகையான் மையெழுதவிரும்பிய மையுண்கண்ணாய் வருந்தாதிருப்பாயாக வென்றவாறு. பகுதி - இதுவுமது. துறை - வருத்தங்கண்டு தோழிவற்புறுத்தல்.

நீடியவியன்சினைநிலாய்நறைவிளைவுறு
பாடிமிழருவிப்பனிவரைநன்னாட
விட்டகல்வின்றாய்விழுமியோர்நுவலுங்
கட்டுரைமதியாக்காவலன்போலவும்
பாகரையடங்காப்பகட்டுளம்போலவு
மோகமுற்றனையாய்முதுரைப்படுத்திய
வொருவழித்தணத்தலுடன்கொண்டேகலென்
றிருவழித்தாயதிலிசைந்ததொன்றுள்ளாய்
வயல்வளஞ்சிறந்தமருங்குடைப்பொன்னியுட்
புயல்படிந்ததுபோற்பொறியரவணைத்துயி
லரங்கனைவழிபட்டவனருட்கிலக்காய்
வரம்பெறுநரினியாமனமகிழ்வெய்த
விரைவொடுமுயல்வையேல்விரைமென்
மரைமலர்மடந்தைநின்வயத்தினளாமே. (404)

இது, "இறைச்சியிற் பிறக்கும் பொருளுமா ருளவே, திறத்தியன் மருங்கிற் றெரியு மோர்க்கே" என்பதனால் எய்தியதிகந்துபடாமற் காத்தது; என்னை? கருப்பொருள் பிறிதோர்பொருட் குபகாரப்படும் பொருட்டாதலேயன்றி யக்கருப்பொருடன் னுள்ளேதோன்றும் பொருளு முள. அஃதுள்ளுறையுவமமன் றிறைச்சியென் றாராய்ந்துகொள்ளும் நல்லறிவுடையோர்க்கென்றார், இதனுள்ளு மவ்வாறே அரசியற்கமைந்த நீதியை விட்டுநீங்குதலின்றி யமைச்சியன்முற்றவு முணர்ந்தோர் காலமு மிடனுந் துணிந்துரைத்த வுறுதிக்கட்டுரையை யுறுதியென் றுட்கொள்ளா மன்னரைப்போலவும், பாகர்க்கடங்கா மதயானையினுள்ளம்போலவும் மயக்கமெய்தினையாய், முதியவுரையாக வுனதுணர்வுட்கொளுத்திய வொருவழித்தணத்த லுடன்கொண்டேகலென விருமுறையாய்வருவன வற்று ளொன்றுபுத்திக் கொன் றிசைவதாக வுட்கொண்டொழுகுங் குறிப்புமில்லையாயினை; இனியாயினும் பொன்னியுள் அரங்கனைவழிபட்

டவனருட்கிலக்காகித் தாஞ் சிந்தித்த வரம்பெற்றுரைப்போல யாங்களு மனமகிழ்வெய்த விரைவினேடும் வரைந்துகொள்வது மூயல்வையேற் ருமரைமலர்மகளையனையா ளினக்குரிமையாவளென்றமையா னிறைச்சி யாயிற்று ; என்னை? வண்டுகளென்றவுவமை யெச்சமாகநின் றவை தமக்குப் பின்னைக்குப் புசிப்பதாகவைத்த தேனின்விளைவையோர்ந் தந்நிலத்துவாழ்வார் மால்பியற்றிக்கொண்டுபோமாறுபோல நீயும் மேல் வரைந்துகொள்ளலாமென்றிருக்கு மிவளையும் மூதிர்ச்சிகண் டயலவர் பொன்னணிந்துகொடுபோவரென வுள்ளுறையுமவமெய்திற் றேனும், பின்னர்நின்றபொருளோ டியையாமையி னிவ்வுவம மூள்ளுறையுற்றுப் பொருள்பயவாதுவமையாகக்குறிக்கப்பட்ட அவ் வண்டுகளெஞ்சிநிற்பது நோக்கமாக நீ யினி வரைந்துகோடல்வேண்டுமென்றுகூறுதலே கருத் தாதலை யறிவித்ததால் இறைச்சியாய் நாடவென்பதனுள் வேறோர்பொரு டோன்றுவித்துநின்றதாதலின். “நீடிய வியன்சினை நிலாய்நறை விளைவுறு, பாடிமி ழருவிப் பனிவரை நன்னாட” வென்றது பிறரிவளைப் பொன்னணிந்துகொடுபோவரென் னுந் துணையன்றி யுள்ளுறையுவமப் பொருளை முற்றவுணர்த்தாமை யுணர்க. “கன்றுதன் பயமுலை மாந்த முன்றிற், றினைபிடி யுண்ணும் பெருங்கன் னாட” வென்ற குறுந்தொகைப் பாட்டும், “வேங்கைதொலைத்த” வென்னுங் குறிஞ்சிக்கலியு மது பகுதி- வரைவுமுடுக்கம். துறை - வரைவுகடாதல். (சுகசு)

உஉ-வது இறைச்சிப்பொருண் முற்றும்.

உங-வது பொருண்மொழியலங்காரம்.

177. ஊதியமெய்ப்பொருளுணர்த்தல்பொருண்மொழியாம்.

(ஏ-ன்) வைத்தமுறையானே பொருண்மொழியென்னும் அலங்கார முணர்—ற்று.

(இ-ள்) ஆன்மலாபமான வுண்மைப்பொருள் புலவனுற் செய்யு ளிடத் துணர்த்தப்படுவதும் பொருண்மொழியென்னும் அலங்கார மென்று சொல்லப்படுவதாமென்றவாறு.

இது தாஅனுட்டித்தனுது நிறுத்த லென்பதாம். உம்மை செய்யுள் விகாரத்தாற் றொக்கது. அலங்காரமென்பது அதிகாரத்தால் வருவிக்கப் பட்டது.

இந்தவுடல்பெற்றிருக்கப்பெறுபொழுதே
நந்திபுரவிண்ணகர்மாலைச்—சிந்திப்பா
ரன்றறிவாமென்னுதறஞ்செய்வார்பேரின்பஞ்
சென்றறிவார்நெஞ்சேதிடன். (405)

(இ-ள்) நெஞ்சமே! நால்வகைத்தோற்றத்துட் பெறுதற்கரிய ஆராவமிர்தமாம் இந்த மானிடவுடலம்பெற்றதோடு மின்னிலுநிலையில்லாத இந்தயாக்கை யிருக்கப்பெற்றபொழுதே நாம் இதுபொழுதினையமாக வின் இறக்குஞான்றுசிந்திப்போமெனக்கருதாதே நந்திபுரத்திருமாலைக் காலம்பெறச்சிந்திப்பாரும், அறத்தினை நாடோறுஞ் செய்வாரும் இவ்வுலகத்தின்பமெய்துவதோடும் அவ்வுலகத்துப் பேரின்பமுமெய்துவது துண்மையாமென்றவாறு.

ஆதலால் நாமு மவைசெய்வதே நமக்குறுதியென்பது பயன். சிந்திப்பார், அறஞ்செய்வார், பேரின்பம் என்னும் மூன்றிடத்தும் உம்மை தொக்கனவாக விரிக்க. அறிவாரென்பது காண்பரென்பதாயிற்று. பொருள் என்பது மெய்; "பொருளல் லவற்றைப் பொருளென் றுணரு, மருளானு மாணுப் பிறப்பு' என்பதனுலறிக. திணை - வாகை. துறை - பொருளொடுபுகறல். (௬௨)

உ௩-வது பொருண்மொழி முற்றும்.

உ௪-வது அதிகவலங்காரம்.

178. ஆதாரத்தினுமாதேயம்பெருத்
தகலம்பெறுதடங்கியதெனலதிகம்.

(எ-ன்) வைத்தமுறையானே அதிகமென்னும் அலங்காரமுணர்—ற்று.

இதன்பொருள் சூத்திரத்தானே விளங்கும்.

வசையிலாவிரசதத்தினுல்வயின்வயினமைத்த
வசைவிலாப்பணிவரைக்குலமளவிடற்கரிதாங்

இஃ திணையெதுகையலங்காரம். இதனுள் வேள்கணைக்கும் என்றதனால் ஒழிந்தபடைக்கு மிலக்காயது பெற்றதாம். திணை — ஆண்பாற் கூற்றுக்கைக்கிளை. துறை-புணர்ச்சிபெறாததழுங்கல்.

ஆய்ந்த வெதுகை யென்றதனான் மூவசைச்சீர்முழுதொன் றிணை யெதுகையலங்காரமுமுள.

துடியிடையார்பிடி நடையார் துணைமலையாமிணைமுலையா
ரடிபிடியாமடிபடியாவணைந்தழிசாந்தகலத்தாய்
வடிபுரைமாண்கருநெடுங்கண்மடநல்லார்நாடுகிலிப்
படியிரத்தல்பழுதொன்றாற்பற்றேலெங்கைத்தலமே. (410)

இது மூவசைச்சீர்முழுதோன்றிணையெதுகையலங்காரம். துணை மலையாமிணைமுலையாரடிபிடியாவென்பது உபயமலைபோலு முபயமுலையை யுடையாராம் பரத்தையர்பாதத்தை நீ பிடித்தென்க. மடிபடியாவென்பது இடக்கர். அணைந்தழிசாந்தகலத்தாய் என்பது அதன்பின்னர் அவர்களைத் தழுவுதலாலழிந்த சந்தனத்தையுடையமார்ப வென்க. இப்படியிரத்தலென்பது இவ்வணநின்று நீ யெம்முடன் குறையிரத்தலென்பதாம். பற்றேல் என்பது அல்லீற்றுவியங்கோள்வினைச்சொல்; அல் ஏலென ஈறுதிரிந்ததாம். பகுதி—பரத்தையிற்பிரிதல். துறை—பள்ளியிடத்தூடல்.

குயில்போன்மொழியும்அயில்போல்விழியுங்
கொடிபோலிடையும்பிடிபோனடையும்
பயில்வோரரவிற்றுயில்வோர்மயிலைப்
பதியார்முகமாமதியார்முலைதான்
மயில்போலியலாள்*பயலாநதியும்
மதியும்பதியுஞ்சடையார்விடையா
செயில்போர்பொருநாள்வளைவார்சிலையே
யெழில்வாணுதலும்புதலுஞ்சிலையே. (411)

இதனுள் நாலசைச்சீர்முழுதொன்றியதூஉங் காண்க. துறை—இயல்பிடங்கூறல். (திருப்பதிக்கலம்பகம்) (கூரு)

உகூ-வது இணையெதுகை முற்றும்.

---

* பயல் - பாதி.

உஎ-வது விரோதவலங்காரம்.

———(○)———

181. சொற்பொருண்முரணத்தொடுப்பதுவிரோதம்.

(எ-ன்) வைத்தமுறையானே விரோதமென்னும் அலங்கார முணர்—ற்று.

(இ-ள்) சொல்லினாலும் பொருளினாலும் மாறுபாடுதோன்றப் புணர்ப்பது விரோதமென்னும் அலங்காரமாமென்றவாறு. (கூசு)

182. அதுவே,
சொல்லும்பொருளுமொருமையிற்பன்மையிற்
றம்மின்முரணுஞ்சால்பொருநான்காய்ச்
சொல்லும்பொருளுஞ்சொல்லொடும்பொருளொடு
மொல்லுமுரணவிணையைந்தாகும்.

(எ-ன்) இதுவும் அவ்விரோதத்தினை விரித்துணர்—ற்று.

(இ-ள்) அச் சொல்லப்பட்ட விரோதமென்னுமது, சொல்லொடும் பொருளொடு மொருமையிலும் பன்மையிலுந் தம்மிற்று மாறுகொள்ளு மொழுக்க மொருநான்காயும் அவ்விரண்டுஞ் சொல்லொடுபொருளும் பொருளொடுசொல்லும் விரவிப் பொருந்துபு மாறுகொள்வதோடு மைந் தாகு மென்றவாறு.

மெய்யுரைப்பாரென்பதுபொய்மெல்லியலாளின்றெமையும்
பொய்யுரைப்பாரென்றுபுகலுமே—பையரவி
லாடுந்திருமாலரங்கத்தேதேர்வலவா
வோடும்புயன்முந்துறின். (412)

இது சொல்லுஞ் சொல்லும் முரணியது. மெய் பொய்யென்பது பொருளின்றிச் சொல்லு முரணினமையானென்றறிக. "செவ்வி வாய்த்த செம்பாட் டீத்து, வெள்ளைவெண்மதி" யென்பது மிது. அடிமுரண். பகுதி - பொருட்பிரிதல். துறை - பாகனோடுகூறல்.

செம்மையோர்வெண்மையோராகித்திடனழிந்தோர்
தம்மையோர்நட்பாகச்சார்வரோ—வெம்மையோ
ராளாயுவந்தானரங்கத்துளாயிழையாய்
வாளாதென்கண்புதைத்தவாறு. (413)

இது பொருளும் பொருளும் முரணியது. என்னை? செம்மையோ ரெனவும், வெண்மையோரெனவு மிரண்டுயர்திணைப்பொருளுள்வாய்த் தம்மின் முரணியதா லெனக்கொள்க. செம்மையோர் - அறிவுடையோர். வெண்மையோர்—அறிவிலாதோர். ஆளாயுவந்தான்—அடிமையாக ஆளு தற்கு விரும்பினேன். வாளாது - பேசாது. என்கண்புதைத்தவாறு - புறம்புல்கி எனது கண்களைப் புதைத்தபடி யாதுதா னென்றவாறு. பகுதி—பரத்தையிற்பிரிதல். துறை — நினைவறிகண்புதை. இஃ தோரள வடிக்கண் ணிணைமுரணாயிற்று. இவையிரண்டு மொருமை.

வெந்தழலைத்தண்ணீர்மைமேதகுவெண்சாந்தென்றே
சந்ததமும்பூசுவதென்றையன்மீர்—பைந்துளபக்
கொத்தணிந்ததாரழகர்கூடாநாட்கண்பனிநீர்
முத்தணிந்தபொற்பூண்முலைக்கு. (414)

இது சொல்லும் பொருளுஞ் சொற்களோடு முரணின. என்னை? வெம்மை - வெப்பம். தனியேபொருளின் றிச் சொல். தழல் பொருள், ஆதலால் அவை சொல்லும் பொருளுமாம் தண்ணீர்மை: தண்மை—குளிர்மை. நீர்மை - நன்மை. இரண்டுந் தனியே பொருளின்மையாற் சொல்லாயிற்று. மேதகுவெண்சாந்து—பெருமைபொருந்தியவெண் சாந்து. கண்பனிநீர்முத்து — கண்கள்சொரியாநின்ற தண்ணீராகிய முத்து. திணை - பெண்பாற்கூற்றுக்கைக்கிளை. துறை - மெலிவொடு கூறல்.

கண்காலருவிகொடுங்கைம்மேல்விழுந்தொழுகும்
பெண்காதனீக்கலார்பேதைமீர்—மண்காவல்
பூண்டவராமுன்னம்பொருகணையாற்றேவியைமீட்
டாண்டவராம்பொருளாளர். (415)

இது பொருளுஞ் சொல்லும் பொருளோடு முரணின; என்னை? கண் பொருள்; காலென்ப துறுப்பன்றி, உகுமருவியெனத் தனிநிற்கும் பொருளின்றிப் புனலினது கிரியையாதலாற் சொல். கொடுங்கை பொரு ளாதலானென் றறிக. திணை - பெண்பாற்கூற்றுக்கைக்கிளை. துறை— கண்டுகைசோர்தல்.

கருவிடமும்வெண்மருந் துங்கைக்கொண்டகண்ணம்
பிருபுருவவிற்கீழிலகுந் — திருமகட்குக்
கற்றார்புகழ்மாறன்கார்வரைமேற்கோங்கரும்பு
முற்றுதபொற்பூண்முலை. (416)

இதனுள், சொல்லும் பொருளுஞ் சொல்லோடும் பொருளோடும் முரணின. என்னை? கருவிடம் : கருமை சொல்; விடம் பொருள். வெண்மருந்து : வெண்மை சொல்; மருந்து பொருள் ஆதலால் அறிக. இதனுள், கைக்கொண்ட கண்ணம்பென்பனவும் அம்பு வில் என்பனவும் முரண். துறை - இயல்பிடங்கூறல்.

தம்மின்முரணுஞ் சால்பென்றதனால் இணைமுரண்முதலாகிய ஏழு விகற்பமும் ஒரு செய்யுளகத்துவரும் விரோதவலங்காரமும் உள. அவை வருமாறு:—

அறிவிலருணர்வுளரெனுமவரளவினி
லருவமொடொளிர் திருவுருவமதுடையனை
யெளியனையடியவர்க்கேனையோர்க்கரியனைக்
கனவினுநனவினுமறிதுயிற்கண்ணும்
வெண்சங்காழிசெம்மணிப்பொன்முடி
காலையுமாலையுங்கண்டுநன்பகலினு
மின்புறத்துன்பமற்றிம்பரொடும்பர்
நறவார்மலர்மகளுந்தனை
மறவாதவர்பதம்வழுத்துமென்னுவே. (417)

இதனுள் இணைமுரண்முதலாகிய எழுவிகற்பமும் முறையே வந்தவாறு காண்க. முரணுவது விரோதம். உலகத்துட் பொருளெல்லாம் காட்சிப்பொருளும் கருத்துப்பொருளுமாமெனினும் ஈண்டுக் கருத்துப் பொருள் சொல்லாயிற்று. இதனுள் அறிவிலர் உணர்வுளர்-பொருளும் பொருளும். அருவமொடுருவம்-சொல்லொடுபொருள். ஒழிந்தனவும் மொழியினும் பொருளினும் முரணினவாறு கண்டுகொள்க. இணை - பாடாண். துறை-பழிச்சினர்ப்பரவல். (கூஎ)

௨எ-வது விரோதம் முற்றும்.

உ௮-வது உபாயவலங்காரம்.

183. ஒருபயன்கோடற்குறுபொருட்டெனலா
மொள்ளியசூழ்ச்சியுணர்த்து தலுபாயம்.

(எ-ன்) வைத்தமுறையானே உபாயமென்னும் அலங்காரம் உணர்—ற்று.

(இ-ள்) யாதாயினும் ஒருதியங்கோடற்கு மிக்ககாரணமென்று கூறப்படுவதாம் முக்கியமானதொருசூழ்ச்சியையுணர்த்துதல் உபாய மென்னும் அலங்காரமாம் என்றவாறு. சூழ்ச்சி—உணர்வோடுசாவி யுண்டான வுறுதியறிவாம்.

சூடிக்கழித்ததுளபச்சருகெனினு
நாடித்தருகதிருநாகையா—யூடிப்
புலவாததற்குநினதருட்கும்பொற்றோள்
கலவாதவெற்குநலங்காண். (418)

இஃ துபாயம்.

(இ-ள்) நாகையின்கண்வாழும் மாதவனே! நினது மார்பத்தைத் தோய்வதற்கு விரும்பியவேட்கையுடைய எனக்குத் திருமகள் விட்டு நீங்காததிருமார்பத்து அணைவதற்குக்கூடாதாயினும், அத்திருமார்பிற் சூடிக்கழித்த துளபமாலிகைச்சருகையாகிலும் நினது திருவுள்ளக் குறிப்பாற் றருக; அங்ஙனம் திருவுள்ளக்கருணையால் உட்கொண்டு தருதல், பெரியபிராட்டி நின்னுடனேயூடியதன்மேலும் புலவாது நல னெய்துதற்கும் உபாயமாம்; நினது திருவருணலனெய்துதற்கும் உபாயமாம்; நினது திருப்புயத்தினை ஆலிங்கனஞ்செய்யாத எனக்கு நலனெய்துதற்கும் உபாயமாம் என்றவாறு.

நலமென்பது ஆகுபெயர். அதனை எங்கும் ஏற்றுக. திணை—பெண்பாற்கூற்றுக்கைக்கிளை. துறை—தாமம்பெறுது தளர்வுற்றுரைத்தல்.

மன்கரம்பைபடாயோன்வருகளிறேறவெள்சிலையாங்
கொன்கரும்பைநின்பனைக்கைகொண்டுநின்று—தின்பையெனி
லிக்கரும்பின்மோகமும்போமீதேயுபாயமுனக்
கக்கரும்பாற்றுகமுமின்றும். (419)

இதுவும் உபாயம்.

(இ-ள்) காம்பனூருத்தமன்வாகனமாகவருகளிறே! நீ இவனைக் கொண் டுலாவரும்பவனிகண் டிவன்மார்பத்தைவிரும்பின இவளை எய்வ தற்குக் காமன்கைச்சிலையான கரும்பை உனது பனைபோன்ற கையினாற் பற்றி முன்னின்றுதின்பையெனில் இக் கரும்புபோன்ற மொழியினை யுடையாள்மையலுந் தீரும், உனதுபசியுந் தீரும், ஆதலால் இருதலைக்கும் இதுபோற் றெள்ளியசூழ்ச்சி பிறிதில்லை யென்றவாறு.

ஏகாரம் பிரிநிலையாதலாற் பிறிதுபாயமில்லையென்பதாயிற்று. திணை-பெண்பாற்பெருந்திணை. துறை—பவனிகண்டழுங்கிய பைந்தொடி தோழி இவளுயிர்தருகென ஏற்றம்வேண்டல். (௬௮)

உ௮-வது உபாயம் முற்றும்.

உ௯-வது விசேடவலங்காரம்.

184. சாதிகுணந்தொழில்பொருளிடமுறுப்பென்
றோதியவிருமூன்றினுமுறுகுறைபட
லேதுவினதற்கதற்கிசைமேம்பாட்டா
னீதிகொள்புலவர்நிகழ்த்துதல்விசேடம்.

(எ-ன்) வைத்தமுறையானே விசேடமென்னும் அலங்காரம் உணர்—ற்று.

(இ-ள்) சாதியும் குணனும் தொழிலும் பொருளும் இடனும் உறுப்பும் என்னும் ஆறினும் மிக்க குறையுண்டாதல்காரணமாக அதற் கதற்கிசைமேம்பாட்டானே இலக்கணநீதியுட்கொள்புலவர் கூறுவது விசேடமாம் என்றவாறு.

கொச்சைப்பொதுவர்குலச்சிறுவன்சிற்றடிமீ
திச்சைப்படுபார்த்தனிட்டமலர்—நிச்சயமாய்
மூன்றாண்முடிக்கொண்டான்முக்கட்கடவுளா
மென்றுமுரைப்பேமிதற்கு. (420)

இது சாதிக்குறைவிசேடம். கொச்சை—ஆடு. நிச்சயம்—உண்மை. முடி—சடாமகுடம். இதற்கு—இப்பெருமைக்கு. என்னுமுரைப்பேம்—யாம் யாதுரைப்பேம்; என்பது ஆச்சரியம். துறை—கடவுள்வாழ்த்து.

வண்ணமகிழ்மாறன்வாய்மலர்ந்தநாண்மூரல்
வெண்ணிலவுசற்றேவிரியாமுன்—கண்ணகன்ற
தானமளவும்விரிந்தனவேதத்துவமெய்ஞ்
ஞானமெனும்வெண்ணிலா. (421)

இது குணக்குறைவிசேடம். மூரல்வெண்ணிலவு - திருமுத்தின் வெண்மை. கண்ணகன்றதானம் - பரமபதம். திணை - வாகை. துறை—சால்புமுல்லை.

தில்லைத்திருச்சித்திரகூடத்தான்றிருக்கை
வில்லைக்குனித்தருநாண்வீக்காமுன்—பல்பெரும்போர்
தாக்கினரென்னுஞ்சலநிருதர்மெய்புறநாண்
வீக்கினன்றென்றிசைவாழ்வேந்து. (422)

இது தொழிற்குறைவிசேடம். குனித்து—குனிக்க. அருநாண்—அறுதலில்லாதவிற்சரடு. வீக்காமுன்—கட்டாதமுன். சலநிருதர்—தீய நெறியையுடைய அரக்கர். தென்றிசைவாழ்வேந்து - இயமன். திணை—வாகை. துறை - வில்வென்றி. போரொண்முல்லையுமாம்.

உள்ளபடியேயுழக்கென்னுந்தண்டுலத்தால்
வெள்ளமெனவேவிருந்துறினு—நள்ளரணத்
தரவிதானம்புற்றமுதமைத்தாளேவருக்குந்
தேவியாஞ்செல்வத்திரு. (423)

இது பொருட்குறைவிசேடம். தண்டுலம் - அரிசி. வெள்ளம்—வெள்ளம் என்னும் இலக்கம். நள்ளரணம்—நடுக்காடு. அமுதமைத்தல்—அசனம்நிறைத்தல். திணை—பொதுவியல். துறை—இல்லாண்முல்லை.

ஆலந்தளிருளடங்குமொருபுனிதப்
பாலன்பசித்தசிறுபண்டிக்கே—மேலைநாட்
பல்லாயிரமாகப்பாரித்தபோண்ட
மெல்லாமடங்கிற்றெனும். (424)

இஃது இடக்குறைவிசேடம். புனிதப்பாலன் - அநிருத்தன். பாரித்தது - பரத்தினது. பேரண்டம் - அளவிறந்த அண்டம்; "பெரிய யோனிகள் பிழைத்திவண் மானிடம் பெறலே" என்பதனால் அறிக. எனும் - என்று புராணங்கள்கூறும். துறை - கடவுள்வாழ்த்து.

காமுஞ்சிரமுங்கணக்கின்றாமும்
வாமும்வாம்பின்றரக்கர்—சராமன்
ருன்மானிடனிருகைசானகியைநீங்குதளர்
வானகவும்வென்றனன். (425)

இஃது உறுப்புக்குறைவிசேடம். கணக்கின்று - எண்ணிறந்தன. அரக்கர் - மூலபலப்படை. தளர்வான் - தளர்ச்சியையுடையான். ஆகவும் வென்றனன் - இத்தனையெல்லாம் உறுப்புக்குறைவுண்டாயிருக்கவும் வென்றான்! என்ன ஆச்சரியமோ என்பதாம். முன்னுள்ள இடக்குறை விசேடத்திற்கும் இஃதென்ன அகடிதகெடிதசாமர்த்தியகுணமோ எனக் கூட்டுக. திணை - வாகை. துறை - போரண்முல்லை. (கூகூ)

உகூ-வது விசேடம் முற்றும்.

௩0-வது சமாயிதவலங்காரம்.

185. ஒருவினைமுயன்றதனூறுபயனைமற்
றொருவினைதாவுறுவதுவேசமாயிதம்.

(எ-ன்) வைத்தமுறையானே சமாயிதமென்னும் அலங்காரம் உணர்—ற்று

(இ-ள்) முதலே ஒருவர் ஒருவினையை முயல அதனாலெய்துங் காரியத்தைப் பிறிதொன்றன்வினைதர அதுகாரணமாக அக்காரியத்தை யெய்துவது சமாயிதம் என்னும் அலங்காரமாம் என்றவாறு.

ஊடிஞரூடியபினுள்ளத்துவகையெழ
வாடினள்வண்சுடர்தான்வரடையினுல்—விடியதாற்
காதலன்பொன்னுகங்கலந்தாளருள்கலப்ப
மாதவன்றன்மோகூர்மயில். (426)

இது சமாயிதம். இதன்பொருள் வெளிப்படை; கூற்றுன்விளங்கும். பகுதி - பரத்தையிற்பிரிதல். துறை - துறைகூறல். (௧00)

௩௦-வது சமாயிதம் முற்றும்.

௩௧-வது ஏதுவலங்காரம்.

———:o:———

186. ஏதுவென்பதிதனினிஃதாயதென்
ரேதுவதாமெனவுரைத்தனர்புலவர்.

(எ-ன்) வைத்தமுறையானே ஏதுவென்னும் அலங்காரம் உணர்—ற்று.

(இ-ள்) ஏதுவென்றுகூறப்படுவது இப்பொருட்டிறத்தினுன் இதனிடத் திஃதுண்டாயதென்றுகூறப்படுவதாமென்றுகூறினர் அறிவுடையோ ரென்றவாறு. (௧0௧)

187. அதுவே,
காரகஞாபகமெனவிருகாட்சிய.

(எ-ன்) இதுவும் அவ்வலங்காரத்தின்கூறுபா டுணர்—ற்று.

(இ-ள்) அச்சொல்லப்பட்ட ஏதுவெனத் தொகையானுென்றுய் நின்ற வது காரகவேது ஞாபகவேது என இருவகைப்படுமென்றவாறு. (௧0௨)

188. அவற்றுள்,
முதலதுமுதல்வனுங்கருவியுங்கருமமுங்
காலமுமிடனுங்கண்ணியநெறித்தாய்ப்
போக்கறுபொருளொடும்புகவிருமூன்றினு
மாக்கமுமழிவுமென்றமர்தருவிரித்தே.

(எ-ன்) இஃ தவ் விருவகையினுட் காரகவேதுவின்விரித்தொகை யுணர் - ற்று.

(இ-ள்) அக் காரக ஞாபக மிரண்டனுள் முதலேவந்த காரகவேது, முதல்வன்முதலாக இடமீறாகக்கூறப்பெறும் ஐந்தினோடுங்கருதப்பட்ட மார்க்கத்தையுடைத்தாகியும் குற்றமற்ற பொருளோடுங்கூடி யாறுமார்க் கத்தினு மாக்கமும் அழிவுமென்றுபொருந்தும் விரியையுடைத்தா மென்றவாறு. (௧0௬)

189. ஏவன்முதல்வனியற்றுதன்முதல்வனென்
றுவயின்வருமுதல்வனுமிரண்டாகும்.

(எ-ன்) இஃ தவ்வாறனுள் முதலேவந்த முதல்வன்கூறுபா டுணர்—ற்று.

(இ-ள்) அக் காரகவேதுவின்கண்வரும் முதல்வனும் ஏவன்முதல் வன் இயற்றுதன்முதல்வனென விருவராவரென்றவாறு.

முதல்வன் என்பவன் கருத்தா. முதல்வனுமென்றவும்மையாற் கருவியும் முதற்கருவியும் துணைக்கருவியுமென இரண்டாம். கருவி யென்பது காரணம். இவற்றிற்கெல்லாஞ் செய்யுள் வருமாறு:—

சீதானேநாதனெனத்தேர்ந்துலவாப்பொன்னுலகை
யாதரவாற்றன்னுலகென்றாக்கினான்—மாதரா
யெங்கண்மாறன்குருகூரெம்பிரானின்னருள்கூர்ந்
தங்கண்ஞாலத்துதித்தேயன்று. (427)

இது கருத்தாகாரகவேது. திணை—பாடாண். துறை—பழிச்சினர்ப் பரவல்.

பல்வளைக்கைச்சானகிதோள்பைம்பொற்றடக்கையால்
வில்வளைத்துமேனாளின்மேவினான்—சொல்வளையா
மெய்ம்மாதவர்சேரரிமேயவிண்ணகர்வாழ்
பெம்மானிமையோர்பிரான். (428)

இது கருவிக்காரகவேது. சொல்வளையாமெய்ம்மாதவர்-உரைதவறு வுண்மையுடையமாதவர். கருவி—தடக்கை. இது முதற்கருவி. வில்லும்

நாணும் முதலியன துணைக்கருவி. திணை - வாகை. துறை - வில்வென்றி. இவையிரண்டும் செய்வதன்றொழிலாக்கம்.

ஆழியுடையான்பொன்னாழிகொடுத்தேவ
வாழிகடந்தன்றடலனும—னாழி
யளித்தலிற்கைக்கொண்டணைத்தவாகம்போன்றுவி
தளிர்த்ததுவேசானகிக்குத்தான். (429)

இது கருமக்காரகவேது. திணை - பாடாண்சார்ந்தபொதுவியல். துறை - கலன்கண்டுகளித்தல். கருமம் - திருவடி திருவாழியைக் கொடுத்தலாற் பிராட்டி திருக்கைகொண்டணைத்தல். இதுவும் ஆக்கம்.

போற்றிப்படைத்தபொருண்மாறனன்பரையே
போற்றிப்புறத்தபொருளிரண்டும்—வேற்றுமையாய்க்
கொள்ளாமெதமையுமுடன்கொள்கென்றெதிர்ந்தவென
விள்ளாவிழிநீர்மிகும். (430)

இதுவுமது. புறத்தபொருளிரண்டும் என்பன அறனும் இன்பமும். கொள்கென் றெதிர்ந்தவென விள்ளாவென்பது எம்மையுங் கைக் கொள்வாயாக எனப் படைத்தபொருளையுடைய காரிமாறப்பிரானன்பரை முயற்சியின்றி யெதிர்கொண்டன என யான் வாய்திறப்ப அக்காலத்து எ — று. விழிநீர்மிகும் — ஆனந்தக்கண்ணீர் மிகாநின்ற வென்றவாறு. இதனுள், கருமம் வாய்திறப்ப என்றது. இது அழிவு. இவையிரண்டும் செய்விப்பதன்றொழில். பகுதி—பொருள்வயிற்பிரிதல். துறை—வாட்டங் கூறல். தலைவன்கூற்று

தோலாதமாவலிபாற்றேல்லுலகமூன்றுமிரு
காலாலளந்துமுனங்கைக்கொண்டான்—மேலாய
வத்தியூர்நின்றானடியார்தமக்கழியா
முத்தியூர்காட்டுமுதல். (431)

இதுவும் கருவிக்காரகவேது. இதன்பொருள் உரையிற்கொள்க. துறை—கடவுள்வாழ்த்து.

பொறிவழியேதாக்கும்புலனைந்தவித்த
வறிவழியாயோகமதனு—லெறிதிரைநீ

ராறன்றுயிலாயமர்ந்தானடிசேர்தன்
மாறன்றனக்கேவரும். (432)

இதுவும் கருமக்காரகவேது. ஆறன்றுயிலாயமர்ந்தான் என்பது ஆலமரத்தைத் தான் றுயில்கொள்ளுந் திருவனந்தாழ்வானாகவைத் ததனிற் றுயில்விரும்பினா னென்றவாறு. ஆல் - ஆகுபெயர். திணை - வாகை. துறை - தாபதவாகை. இவையிரண்டும் செய்வதன்றொழில் ஆக்கம்; இவைநான்கும் அடைவே ஏவற்கருத்தாவும் கருமக்கருத்தாவுமா மெனக்கொள்க.

இமிழ்திரைநீர்ஞாலமிருள்விழுங்கச்சோதி
யுமிழ்கதிரும்புள்ளுமொடுங்க—வமிழ்தொத்
தருண்மாலையெய்தாதவர்மனம்போன்மாலு
மருண்மாலைவந்தென்மனம். (433)

இது காலக்காரகவேது. ஒடுங்க - அடங்க. மாலும் - மயக்கத்தை யெய்தும். மருண்மாலை - மயக்கத்தைத்தரும் மாலை. திணை - பெண்பாற்கூற்றுக்கைக்கிளை. துறை - மாலையம்பொழுதுகண்டிரங்கல்.

சங்கனழியாத்தமணியநாடெய்தியதும்
பொங்குபுகழ்த்தாந்தன்புலவீர்கா—ளொங்கோனுஞ்
சோதிபதமெய்தியதுஞ்சொற்றமிழ்மாறன்னருள்கூ
ராதிநகர்த்தெய்வீகத்தால். (434)

இஃது திடக்காரகவேது. துறை - நகரவாழ்த்து.

நந்திபுரமாலேலவநன்மாருதிகொளுத்தும்
வெந்தழலால்வெந்துவிளிந்ததே—முந்தைப்
பெருவானவர்வாழும்போறமும்பொன்றப்
பொருவானிலங்காபுரம். (435)

இது பொருட்காரகவேது. மாருதி - அனுமான். திணை - வஞ்சி. துறை - உழபுலவஞ்சி. இது செய்விப்பதன்றொழில். இதற்கு மேலைச் சூத்திரத்துள்ளமுதல்வனை "ஏவன் முதல்வ னியற்றுதன் முதல்வன்" என்று ஒருபான்மேல் உயர்திணைநோக்கிவைத்தாரேனும், "ஒருமொழி

யொழிதன் னினங்கொளற் குரித்தே" என்பதனால் ஐந்துபாவினுங் கொள்க. இவற்றுள் முன்னதும் பின்னதும் அழிவு. இடைநின்ற இடக்காரகவேது ஆக்கம்.

கற்பனைமேற்கொண்டொழுகுங்கடைப்பிடியார்வயிற்றிருநாண்
பொற்புறுமாற்றலிற்பொறித்தபொருவருசெவ்வணிநோக்கித்
தற்பொதிவாட்டுறந்தகெழுதகைத்தாயபுனலூர
னிற்புகலால்வெஞ்சினநஞ்செனக்கூர்த்தமருணோக்க
முற்பலங்தெள்ளமிர்துயிர்த்தற்றொளிதிகழ்சீர்பயின்றனவே;

அதனொடும்,

அநகனிங்கெமையாண்டருண்மகிழ்மாறன்
புனல்வறங்கூராப்பொருநையுட்புரைதீர்
தினகரோதயத்திற்செவ்விபெற்றலர்ந்த
தண்மலர்புரைதகைத்தாகு
மொண்ணுதலரிவையுவகைவாண்முகமே. (436)

இது செய்வதன்றேழிற்கருத்தாகாரகவேது. பா - தரவு, தனிச்சொல், சுரிதகம் என்னும் மூன்றுறுப்பால்வந்த தரவுகொச்சகக்கலிப்பா. இதனுள் அழிவும் ஆக்கமும் முறையேநிகழ்ந்தமை காண்க. பகுதி - பாத்தையிற்பிரிதல். துறை - முகமலர்ச்சிகூறல்.

புத்தேளிர்நிரப்பிகப்பான்பொருதிரைப்பாற்கடல்கடைந்து
மெய்த்தேவர்பெருமானும்வேங்கடத்தெங்கண்ணபிரான்
புரந்தருணன்மருந்திறுத்தபுலந்துவரத்துறந்திழைத்த
வரந்தருபெண்ணமிர்தாமிம்மடவரன்மென்றேடுறந்தே
யில்லறத்தின்றொடர்புடையோர்க்கின்பமுமாதுலர்க்களிக்கு
நல்லறத்தின்றொடர்ப்பாடுநனிதருஞ்செம்பொருளென்றே ;

(இது தரவு.)

ஒருதலைபெற்றனணுகியுருப்பவிர்வெங்கடத்திடைப்போய்
வருபொழுதிற்பெருவறங்கூர்மணிநாவின்மம்மர்நோ
யருண்மடந்தையிலவிதழ்த்தெள்ளமிர்தருந்தத்துறந்தனவே ;

அதான்று,

வேனுதல்வன்புரற்கடத்தாரிடைவேனில்வெயிற்குமையாள்
கோனுதற்கட்டழற்குளித்தமதனெனமெய்கூர்த்தநோய்
பானலங்கட்கிளிமொழிமெய்ப்பரிசத்தாற்றுறந்தனவே;

அதான்று,

உருவிலாவுருவிற்றுமூருளிலாமசாதத்தைப்
பருகுவான்புனலெனச்செல்பாலேயுட்சார்ந்துளங்கொதிநோய்
திருமகளாற்பெறுமின்பத்திரையாடத்துறந்தனவே;

அதான்று,

வரைபிருமருங்கினுமரீஇயவெவ்விடம்
புரைசுரத்தாரதர்ப்புக்குயிர்க்குறுநோ
யம்மென்சாயலணிமயில்பைம்பூட்
கொம்மைவெம்முலேக்குன்றிடைமுயங்கலி
னனவுகனவாநயந்துழி
நினேகலாநீளிடைநீத்தனவே. (437)

இஃது இடையிடை தனிச்சொற்பெற்றுத் தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் என்னும் நான்குறுப்பினேடு நேரிசையொத்தாழிசைக் கலிப்பாவிற் சிறிதுவேறுபட்டுவந்த சிஃறுழிசைக்கொச்சகக்கலிப்பா. இதுவும் கருவிக்காரகவேது. இதனுள்ளும் ஆக்கமும் அழிவும் கூடி வந்தமைகாண்க. பகுதி—பொருள்வயிற்பிரிதல். துறை—உண்மகிழ்ந் துரைத்தல். (க0௪)

190. வினேயதொன்றுவெளிப்படமற்றது
தானுணர்விற்புலப்படுந்தன்மையதாய்க்
காரணகாரியந்தாமுறழ்ந்துணர்த்துஞ்
சால்பினுநடைபெறுஞ்சாற்றுங்காலே.

(எ - ன்) கருத்தாமுதலாகப் பொருள் ஈறுகக் கூறப்பட்ட அறுவகைப்படுங் காரகவேதுவினையுணர்த்தியொழிந்த ஞாபகவேதுவுணர்த்துவான்றொடங்கி அதன் பொதுவிலக்கணம் உணர் - ற்று.

(இ - ள்) காரகவேதுவொழிந்த ஞாபகவேதுவென்னுமது ஒன்று வெளிப்பட்டு வெளிப்படாதவொன்றையறிவிப்பதுவாய்க் காரணகாரியங்கண்மாறுடிபுணர்த்துமொழுக்கத்தினுங்கூடிநடைபெறுங் கூறுமிடத் தென்றவாறு.

காரகம் ஞாபகம் என்பது முறையே செய்விப்பதும் அறிவிப்பதுமா மாதலால், காரண காரிய முறம்தலைவது புகையுண்மையால் அதன்கீழ் எரியுண்மையை எரியினது காரியமாம்புகை அறிவித்தலெனவுணர்க ()

191\. எய்தியவின்பந்துன்பமிவற்றிற்
கையமில்பான்மையாக்கமுமழிவும்.

(எ-ன்) இதுவும் அவற்றிற்கோர்புறனடையுணர் - ற்று.

(இ-ள்) இங்ஙனங்கூறப்பட்ட காரகம் ஞாபகம் இரண்டிற்கு மாக்கமும் அழிவுமெனறுகூறப்பட்டன அவ்வேதுக்களாலெய்தும் இன்பந் துன்பங்களா மென்றவாறு.

அணியார்மென்றேளுமயில்விழியுஞ்சற்றுந்
தணியா திடந்துடிக்குஞ்சால்பான்—மணிமாடக்
கோயிலார்வெற்பிற்கொடியிடையாய்வைகறைநம்
வாயிலாங்காவலர்தேர்வந்து. (438)

இது காரணங்கண்டு காரியம்புலப்பட்ட ஞாபகவேது. பகுதி-வரைபொருட்பிரிதல். துறை-ஏதுக்காட்டி வருத்தந்தணித்தல். தணியா தென்றல்—இடைவிடாதென்றல். ஒழிந்த அகலம் உரையிற்கொள்க.

காவிநெடுங்கண்சிவப்பக்காமருசெவ்வாய்விளர்ப்ப
வாவிதளிர்ப்பதுவுமன்றியே—யோவியமே
வண்ணந்தனில்வெயர்ப்புமாறனூர்பூஞ்சிலம்பிற்
றண்ணஞ்சுனையேதரும். (439)

இது புணர்ச்சியாலுண்டான தோற்றப்பொலிவாங் காரியம் ஞாபக வேதுவாய்ப் புணர்ச்சியாகிய காரணத்தை யறிவித்தது. பகுதி - நாண நாட்டம். துறை - புணர்ச்சியுரைத்தல். (௪0௫)

192\. இருளறவறிவிப்பனவாமேதுவும்
பொருளிடம்வினைபண்பவற்றெடும்புணரும்.

(எ-ன் இது ஞாபகவேதுவின்கூறுபா டுணர் - ற்று.

(இ-ள்) முற்கூறிய ஞாபகவேது என்பதும் பொருள், இடம், வினை, பண்பு என்னும் நான்கினோடும்பொருந்துவனவாம் என்றவாறு.

தேக்குகதிர்வெய்யோன்றினமும்பகலுடிப்
போக்குவரவுபுரிதலாற்—காக்குந்
திருநாரணனுளனுஞ்செம்மையுணர்வித்தான்
குருநாதனுகியவெங்கோன். (440)

இது பொருண்ஞாபகவேது.

(இ-ள்) உலகமெங்கும்நிறைக்குங்கிரணங்களையுடைய ஆதித்தன் பகல் இரவு என்னும் பொழுதிரண்டினுள் இரவின்கண்மறைந்து பகற்பொழுது ஒருகணமு மேறுது குறையாது விதித்தநாழிகையுள் ஒடுங்கி மீளவுங் காலையிற்றேன்றினுகலான் நாராயணனென்று ஒருபரனுளனென்பதையும், அவனியமித்தபடி இக்கதிரோன் நடவாநின்றுனென்பதையும் குருநாதன் ஏதுக்காட்டி யெமக்கு அறிவித்தானென்றவாறு.

இதனுள், பொருளாகியஞாபகம் ஆதித்தியன். திணை — வாகை. துறை—அறிவன்வாகை; திணை—பாடாண்........சூரவனைவாழ்த்தலுமாம்.

ஓங்கொலிநீர்ஞாலத்தையுண்டு துயக்கோடல்
பூங்கமலவுந்தியுடைப்புண்ணியன்ற—னீங்காத
வாச்சினைகாணென்றேயறிவித்தானரியனுங்
கோச்சரிதைநீங்காக்குணன். (441)

இஃ திடஞாபகவேது. இதன்பொருள் மேலையதுபோலக் குறித்துணர்ந்துகொள்க. ஈண்டுரைப்பிற் பெருகும். துறை—இதுவுமது.

முன்னொருகைக்குஞ்சரமாய்முரிப்பிணையாகி
மின்னிடையெங்கென் றுவினயதாற்—றென்னனந்தை
மால்வரைமேலின்றிவர் தம்வாய்மையெலாம்வஞ்சமெனச்
சால்புடையநெஞ்சேதரி. (442)

இது வினைஞாபகவேது. அஃதேன் முன்னையவிரண்டு மிது போலப் போக்குவரவுபுரிதலும் உண்டாதலுங் கிரியையாயன்றே ஞாபகவேதுவாய தாதலால் அவற்றையும் வினைஞாபகவேதுவென்னுத

தென்னையெனின் ? அஃதே, நன்றுசொன்னாய் ! அவை கிரியையே யாயினும் பொருளோடும் இடத்தோடும் சார்த்திக்கொள்ளநின்றனவாதலாற் பொருளும் இடனும் வசனமின்றி ஞாபகவேதுவாயிற்று. இஃதன்னதன்று. வசனமாகியகிரியை ஞாபகவேதுவாயிற்று ; என்னை ? மின்னிடையெங்கென்ன அயல்படவினையதாலென்றறிக. அன்றியும், காரகவேதுவிற்கும் வினைகூடாதே யேதுக்கள்கூடாதெனவுணர்க. இதன் பொருள் உரையிற்கொள்க. பகுதி-இருவருமுளவழியவன்வரவுணர்தல். துறை—அறிவுநாடல் ; அயல்படவினாதலுமாம்.

ஆய்ந்ததமிழ்மாறனணிவரைமேலின்றொருவர்
பூந்தழைகொண்*டொன்றுபுகலாமுன் —வாய்ந்த
புதுமலர்ச்சிகொண்டதிந்தப்பொன்வதனமென்று
நொதுமலர்மேலானதிவணோக்கு. (443)

இது பண்புஞாபகவேது. வாய்ந்தபுதுமலர்ச்சியென்பது உள்ளக் குறிப்பைத்தோற்றுவித்த புதிதாயமலர்ச்சி யென்றவாறு. நொதுமலர்—அயலாவார். நோக்கு - உள்ளக்குறிப்பு. பண்பு - முகமலர்ச்சி. பகுதி—குறையுறவுணர்தல். துறை - அவள்குறிப்பறிதல்.

ஆக ஞாபகவேது பொருள் முதலாகப் பண்பு ஈறாக நான்கும் அடைவே கண்டுகொள்க. அவற்றொடும்புணரும் என்ற வும்மையாற் பிறவிடங்களோடும் வருவனவும் உள. அவையும் வந்தவழிக்கண்டு கொள்க. (௧௦௭)

193. இன்மையுமதன்கணெய்துதலுரித்தே.

(எ-ன்) இதுவும் அவ்வேதுவினை விரித்துணர்—ற்று.

(இ-ள்) இல்லாததன்மையவும் ஆகிய அவையும் அவ்வேதுவின் பாற்பொருந்துதற்குரித்து என்றவாறு.

இன்மையென்பது ஒன்றின் இல்லாமை. தண்டியாசிரியர் அபாவமென்பதும் இது. (௧௦௮)

194. அதுவே.
ஒன்றினொன்றின்மையுள்ளதனின்மை

* டென்று - பிரதிபேதம்.

யென்றுமின்மையிரேடின்மையினின்மை
யழிவுபாட்டின்மையோடைந்தாகும்மே.

(எ-ன்) அவ் வின்மையை விரித்துணர்—ற்று.

(இ-ள்) அவ் வின்மையென்னுமது, ஒன்றின்கண் ஒன்றினதின்மையும், ஓரிடத்தும் ஒருகாலத்தும் உள்ளபொருள், பிறிதோரிடத்தும் பிறிதோர்காலத்தும் இன்மையும், எக்காலத்தும் இன்மையும், இன்மையான் இன்மையும், முன்புள்ளது அழிவுபட்டின்மையும் என்பதனோடு ஐந்தாகும் என்றவாறு. இவற்றிற்கெல்லாஞ் செய்யுள் வருமாறு:—

புல்லறிவாளரைப்புல்லாரறிஞரப்புல்லறிவு
நல்லறிவாளர்தமைக்குறுகாமறைநாவினுட்பச்
சொல்லறிவாற்றமிழ்தேர்மாறனன்னகர்ச்சூழ்பொருட்குச்
செல்லறிவாளர்சொற்கோடாதழுங்கலொண்சேயிழையே. (444)

இஃ தொன்றினென்றின்மை; என்னை? ஒன்றின்கண் ஒன்றின்மையும் அதன்கண்ணும் அஃதின்மையுமாயினமையான் அறிக. சூழ்பொருள் - அறனும் இன்பமும் தருமென விசாரித்தபொருள். பகுதி—பொருள்வயிற்பிரிதல். துறை - பருவநினைந் தாற்றளாயதலைவியைத் தோழி வற்புறுத்தல்.

இன்றிருந்துநாளையிறப்போர்பெயரினையு
மன்றுதொறுமேந்திமறுகினவே—யன்றொருகாற்
சேமந்தரித்ததிகிரித்திருமலையா
ஞமந்தரித்தறியாகர. (445)

இஃ துள்ளதனின்மை. என்னை? இவ்வுலகத்து இப்பொழுதினுள்ளகிரியையானது முற்பிறப்பில் ஒருகாலத்தும் இல்லாதகிரியையை யறிவிப்பதாலென்றறிக. திணை - பாடாண்சார்ந்தபொதுவியல். துறை—பாவார்ப்பழித்தல்.

கள்ளார்பசுந்தண்டுழாய்மாதவன்கடிகைச்சிலம்பி
னுள்ளார்பிறதெய்வமென்றுமுள்ளாரென்பதுள்ளிருடித்

தள்ளாமறலிதன் றூதரைக்கூவித்தகியர்வரி
னெள்ளாதிறைஞ்சியயற்போமினென்னுமிரந்திரந்தே. (446)

இஃது தென்றுமின்மை ; என்னை ? திருமால்கடிகைச்சிலம்பினுள்ளா ராகியதொண்டர், பிறதெய்வம் என்றும் உள்ளாராயினாராகையால் அவர் இன்றும் உள்ளாரென்பது தொனியினாற்கொள்ளக்கிடந்தமையின், என்றுமின்மையாயிற்று. இதற்கு என்றுமுள்ளித்தொழாரென்பது இன்று முள்ளித்தொழாரென்பதறிவித்தற்கு ஏதுவாயிற்று. திணை - இதுவுமது. துறை - பழிச்சினர்ப்பரவல்.

கல்லாற்கடலடைத்தகண்ணன்பேர்கல்லாநா
ளில்லாதவர்க்கினிமேலில்லையே—நல்லார்கள்
சூழ்ந்தேததுயிர்திற்றேய்வதல்லாற்றீநரகில்
வீழ்ந்தேபதைக்கும்விதி. (447)

இஃது தின்மையினின்மை; கண்ணன்பேர் இச்செனனத்துக் கல்லா நாள் இல்லாதவர்க்கு மேல் எரிவாய்நரகத்துவீழ்ந்துபதைப்பதில்லாததி னால் அறிக. நல்லார்கள்சூழ்ந்தேததுயிர்தம்—பரமபதம். திணை—இது வுமது. துறை-ஓம்படை. ஆதலாற் றொண்டர்காள்! இக்காயம் இருக்கப் பெற்றபொழுதே அவன் திருநாமத்தை வீழ்நாள்படாமைச் சொல்லுவீ ராக என்பது பயன்.

மானிடரைவாழ்த்துமதியின்மைதீர்ந்ததற்பி
னீனநிலைதீர்ந்ததெனைவிட்டே—போனதற்பின்
மன்னெறியேநின் றுமகிழ்மாறனுரைத்துதிக்கு
நன்னெறியேபெற்றுளநன்று. (448)

இஃது தழிவுபாட்டின்மை ; என்னை ? மானிடரை உண்டிட்பொருட் டால் வாய்மையிழந்துவாழ்த்தும் அறியாமை யென்னிடத்தில்லையான தேதுவாக வென்னிடத் தீனமென் றிகழப்படும் இரப்பென்பது என்னை விட்டுநீங்கியது; நீங்கியபின்னர் நிலைபெற்றமார்க்கத்திலேநின்று காரிமாறப்பிரானைவாழ்த்தும் நல்லமார்க்கமேபெற்று வாய்மைபடைத்தது எனது நன்று என்றதனால் அறிக. திணை-வாகைசார்ந்தபுறத்திணை(யுள்) துறை - புலமைவென்றி. இன்மையதேதுவைந்தும் உடைவே காண்க. இவையும் ஞாபகவேதுவின்பாற்படும். (௬௦௧)

195. காரியமுந்துறுகாரகங்காரண
காரியமொருங்குறுகாட்சியுத்தமு
மயுத்தமுமெனமேலறைந்ததோடொன்றும்.

(எ-ன்) இது மேலேகூறிய காரகவேதுவைப் பிறிதொருவகை யான் வகுத்துணர் - ற்று.

(இ-ள்) காரியமுந்துறுகாரகம் முதலாயநான்கும் ஒருவகைக்காரக வேதுவின்பாற்படு மென்றவாறு.

பொன்மேதருநற்பொருளென்றேதேர்ந்துரைக்கு
முன்னேநெடுமாயன்மோகூர்வாழ்—மின்வாடைத்
தண்டுளிவந்தாற்றணந்தார்தம்முயிரையுண்குமெனக்
கண்டுளியாநொந்தனளாகம். (449)

இது காரியமுந்துறுகாரகவேது. இதனுள், தேர்ந்துரைக்குமுன்னே யென்றது தேர்ந்துரைக்கும் உரை கூடுமுன்னேயென்றவாறு. தணந் தார்—தலைவரைப்பிரிந்தார். கண்டுளியா—கண்ணீரைத்துளித்து. பகுதி—பொருட்பிரிதல். துறை - வாட்டங்கூறல். தலைவன்கூற்று. தோழி முன்னிலை.

தெண்முத்தமிழ்மாறன்றென்குருகூர்ச்சேயிழைக்குண்
உண்முற்றியபோக்குணர்த்துரையிற்—கண்முத்
துடனேவரு.மென்றாலொண்பொருட்குமேகல்
கடனேயிறைவாகழறு. (450)

இது காரணகாரியம் ஒருங்குநிகழேது. உண்முற்றியபோக்கு - உள்ளமொருமித்தசெலவு. கண்முத்து - கண்ணீர்த்துளியாகிய முத்து. உடனேவரும் - ஒக்கவரும். ஒண்பொருட்குமேகல் - ஒள்ளியபொரு ளாயினும் அதற்குப் பிரிதல். கடனேயென்றது முறையன்றென்றவாறு. ஏகாரம் - எதிர்மறை; ஒழியிசையெனினுமாம். உம்மை - சிறப்பும்மை. பகுதி - இதுவுமது. துறை - ஆற்றாமை கூறிச் செலவழுங்குவித்தல், தோழிகூற்று.

மாயிருஞாலந்தழைப்பவாசமகிழ்மாலை
ஞாயிறுமெய்வேதநலன்சிறந்த—வாயிரப்பாத்

தூயகதிர்விரித்துத்தோன்றலாற்றொண்டரகத்
தாயவிருடீர்ந்தன. (451)

இது, யுத்தவேது. இதனகத்து உருவகவாய்பாடும் விரவிவந்தவாறு காண்க. அவை மகிழ்மாலைஞாயிறு, ஆயிரப்பாத்தூயகதிர், தொண்டரகத்தாயவிருள் என்பனவாம். இவற்றுள் முதலும் ஈறும் ஏகதேசவுருவகம். மகிழ்மாலைஞாயிறு — மகிழ்மாலைமாறனாகிய ஞாயிறு. அகத்தாயவிருள் - அறியாமையாகியவிருள். துறை - பழிச்சினர்ப்பரவல்; கடவுள்வாழ்த்துமாம்.

நற்பால்விழைந்தபுகழ்நாவீறன்மெய்வேத
முற்பாடல்வாய்மைமுழுதடக்குஞ்—சொற்பா
வுரைமலர்ந்ததூய்மதியாற்கற்றோருளத்தா
மரைமலர்ந்தமன்னேமகிழ்ந்து. (452)

இஃ தயுத்தவேது. இதனுள் நற்பால்விழைந்தபுகழ் நாவீறனென்பது நல்லறத்தின்வழியொழுகினோர்விரும்பப்பட்ட நாவீறுடையபிரான் எ-று. நற்பால்—ஆகுபெயர். சொற்பாவுரை கீர்த்தியோடுகூடிய பாக்களாற்றோன்றினநூல்; அது திருவாய்மொழி. தூய்மதியாலென்பது திருவாய்மொழியினிடத்துப் பரந்த தூயஞானமாகியமதி உதித்தலால் எ-று. கற்றோருளத்தாமரை மலர்ந்தமன்னே மகிழ்ந்து என்பது கற்றுவல்லோர் இதயதாமரை மிகவும் மகிழ்ச்சியோடு மலர்ந்தன எ-று. துறை - பாடாண்சார்ந்தபுறத்திணையிற் பனுவல்வாழ்த்து. (கக0)

196. உணர்வுறினையவேதுவுமுளவே.

இதுவுமது.

(இ-ள்) அவ்வேது ஐயவேதுவினும் வருவதுண்டு என்றவாறு.

வேயாலிசைதந்தமால்பரமேச்சுரவிண்ணகர்வாய்த்
தோயாதரவுற்றனைப்பிரிந்தாவினித்தோயுந்தன்மை
யேயாதெனநினைந்தோநெடிதாமெல்லையெய்துகிலின்
மாயாப்பழியெய்துமென்றோநைகின்றதுவாணுதலே. (453)

இஃது ஐயுறவேது. இதனுள் இனிப் புணர்ச்சிகூடுந்தன்மை பொருந்தாதெனவிசாரித்தோ, அல்லது (நெடிதாமெல்லையெய்துகில்-) நெடும்பொழுதெய்துமாகில் (இன்மாயாப்பழியெய்துமென்றோ-) நமது குடிக்கு நீங்காத அவகீர்த்தியுண்டாமென்றோ (நைகின்றது வாணுதலே-) இவ்விரண்டினுள் வருந்துகின்றதற்கேது யாதுதான் என்றவாறு. பகுதி - இயற்கை. துறை - பருவாலறிதல். (௧௧௧)

௩௧-வது ஏது முற்றும்.

௩௨-வது சுவையலங்காரம்.

197. பொறியுணர்வொடுமொருபொருளினையெதிர்ந்த
நெறியுடைமனத்துணிகழ்தரும்பான்மை
யயலவருறப்புறத்தாய்ப்பொருளெட்டி
னியல்வதுசுவையென்றியம்பினர்புலவர்.

(எ-ன்) வைத்தமுறையானே சுவையென்னுமலங்காரம் உணர்-ற்று.

(இ-ள்) இந்திரியங்களினறிவினோடும் யாதானுமொருபொருளைக் காணப்பட்டமனத்துள் அப்பொருள் ஏதுவாகநிகழ்ந்ததன்மை நிகழ்ந்தவாறே புறத்தார்க்குப்புலப்படுவதோராற்றான் வெளிப்படமெய்ப்பாடெட்டாற்றோன்றுவது சுவையென்னும் அலங்காரமா மென்றவாறு.

பொருளென்பது மெய்ப்பாடு. இயல்வது - உண்டாவது. பொருளெட்டின் இயல்வது சுவையென்பது பொன்னினியன்றகுடம் என்பது போலக்கொள்க. (௧௧௨)

198. அவைதாம்,
பெருமிதநகைக்கமழுகையிளிவர
லுருத்திரநகைவியப்புவகையென்றாகும்.

(எ - ன்) மேற் பொருளெட்டின் இயல்வது என்றார், அவ்வெட்டும் இவையென்பது உணர் - ற்று.

(இ - ள்) பொருளெட்டென்னும் அவைதாம், பெருமிதமுதல் உவகையீறாம் இவ்வெட்டுமாம் என்றவாறு.

திருமால்பானெனவேதேற் றுதற்கன்பாக
வருமாரியன் றனையிம்மண்மேற்புலவீ
ரொருமானிடனென் றுணாா தவனெம்
பெருமானுமென் றுணர்ந்தப்பெம்மானருள்கூர்
பத்தர் தம்மடியிணைபாவுமினது வே
யுத்தமவிலக்கணமுரைசான்
முத்தியைவிளைக்குமுயற்சியுமஃதே. (454)

இது கல்விபற்றியபெருமிதம். பா - மருட்பா. திணை - பாடாண். துறை - செவியறிவுறூஉ; ஓம்படையுமாம்.

நாராயணனேநமவென் றுரைப்பவர்பால்
வாராவொருநாளும்வல்வினைகள்
சாராஞெ நநாளுஞ்சண்டதரன்சாராவாம்
போராதமாயப்பிறப்பு. (455)

இதுவுமது. என்னை? "கல்வி தறுக ணிசைமை கொடையெனச், சொல்லப் பட்ட பெருமித நான்கே" என்பதனால் அறிக. பா — "வெண்பாட் டீற்றடி முச்சீர்த் தாகும்" என்ற செய்யுளியற்சூத்திரத்துள் வெண்பாவிற்கு ஈறுணர்த்தப்புகுந்து முச்சீர்த்தென்னாது ஆகும் என்று ஆக்கங்கொடுத்தமையான் அத்துணை ஆக்கமின்றி இடையினும் முச்சீராய் அவ்விற்றுச்சீர் அசைச்சீராகாதுவருமென் றுட்கொண்டுணர்த்தினர் தொல்லாசிரியர்; அங்ஙனம் தனிச்சொல்லுமின்றிவந்ததோர் வெண்பாவில் விகற்பமாம். இங்ஙனம்வருவதனை அதன்பின்னர் வரும் ஒருசாராசிரியர் சவலைவெண்பாட்டென்றும் பெயரிட்டுவழங்குவதாம்; என்னை? "நனியிரு குறளாய் நான்கடி யுடைத்தாய்த், தனிவாயில்லது சவலைவெண் பாட்டே" என்பதனாலும் உணர்க.

கிலாலங்குளிறுதிரைகெழுகடன்முற்றகன்ஞாலத்
தாலாலமிசைபவளவருவரையுங்கருவரையுந்
தமிதமியென்னதுவெனலாந்தவலருமாண்டொழிற்றன்மை
யெமதெமதென் றெதிருநரின் னுயிர்செகுத்தீத்திருநோக்கிற்
கடைசிவந்துகருமையவாய்க்கவின்பெறுவார்குழைபோழ்ந்த
வடிபுரைமாண்மதர்மலர்க்கண்மதிபுரைவாணறுநுதாஅல்;

இடந்தழுவுங்குனிசிலைக்கையிகன்மறவர்கொடுங்கணையோ
டுடன்றெழிலென்சுடர்வடிவேற்குண்வாதலொருதலையாற்
றொடர்ந்தெழுநின்றமரேற்செண்பகமாறன்றுணையடிசேர்
திடந்தழுவுததியரெனத்தெருளுறநன்கருளுவனே ;

வாட்டானைத்துறுமறவர்வயிரவழற்பிழம்புகுகட்
கோட்டானையுடன்வரிலென்கூரிலைவேலவர்மார்பிற்
றீட்டானைவினையளிப்பனுமரேற்றிவ்வியதுளபத்
தோட்டானைத்தொழுமாறன்றொண்டரினன்கருளுவனே;

குளிர்மதிவானகடுரிஞ்சுங்கொடித்தேரின்குழுவினொடு
மொளிதிகழ்வன்படைமறவருடங்கெழின்வைந்நுதிவேலாற்
களிபயில்வெந்தொழில்புரிவனுமரேல்வண்கருணைச
னளிதிகழ்தேமகிழ்மாறனடியரினன்கருளுவனே ;

எனவாங்கு,

காணுதிகாணுதிகனலிதெறக்கெழினுந்
தாணுவினிலைதவறினுந்தவறுவுரை
குன்றுசூழ்கூர்ம்பாற்கொடுநெறிக்
கொன்றுநீயழுங்கருறலேகுதியே. (456)

இது தறுகண்மைபற்றியபெருமிதம். பகுதி — உடன்போக்கு. துறை — அடலெடுத்துரைத்தல்.

கொன்றேன்கொடுவினையைக்கூற்றுவனாட்டமெலாம்
வென்றேனினிநரகில்வீழ்கலேன் — சென்றுமறை
தேடிப்பிடித்ததிருமாலேதெய்வமென
நாடிப்பிடித்ததனுனன். (457)

இதுவும் தறுகண்மைபற்றியபெருமிதம். திணை—வாகை. துறை—சால்புமுல்லை.

அரியாயவன்பரனுமென்பதாதியிலன்றழைத்த
கரியானுமுண்மைபுராரிதென்னேகற்றுணர்ந்துசெம்பொன்
உரியார்கடைசென்றிரப்பவரோடொன்றெனவெணையுஞ்
சிரியாதருள்செய்தவாமகிழ்மாலிகைத்தேசிகனே. (458)

இஃ திசைபற்றியபெருமிதம். திணை — வாகையைச்சார்ந்தபுறத் திணை. துறை - புலமைவென்றி.

அன்றுதராவிற்கரிசொன்னகாரரங்கேசன்வெற்பி
னின்றுதைசொன்னநிதியமெல்லாமும்பர்நீடுசெம்பொற்
குன்றுமெனக்கொணர்ந்துய்ப்பன்மின்னேயின்பக்கொம்பின்செவ்வி
பொன்றுதிங்கவ்வளவுய்க்சொள்வதாநின்புகழென்பதே. (459)

இது கோடைபற்றியபெருமிதம். பகுதி - வரைபொருட்பிரிதல். துறை - பொருட்பிரிவுணர்த்தல்.

கூற்றங்கொடிதென்றுணர்க்துங்கொடுநரகை
மாற்றுந்திறந்தெரிந்துவாய்மையா—னோற்பதற்கிங்
கென்னறிவொன்றின்றுவினியரங்கத்தெம்மானே
யுன்னருளுண்டாமாகிலுண்டு. (460)

இஃ தணங்குபற்றிய அச்சம்; கூற்றமும் அணங்கேயாதலின், "அணங்கே விலங்கே கள்வர்தம் மிறையெனப், பிணங்கல் சாலா வச்ச நான்கே" என்றாகலின். மாற்றுந்திறந்தெரிந்து - நீக்குங்கூறுபாடறிந்து நோற்பதற்கிங்கென்னறிவொன்றின்றால் - நல்ல நோன்புகளை நோற்பதற்கு எனக்கெனச் சிறிதும் அறிவில்லையாகையால். இனியரங்கத் தெம்மானே யுன்னருளுண்டாமாகிலுண்டு - இனி உனது திருவுள்ளக் கருணை உண்டாமாகில் யமன்கையில் அகப்படாமல் முத்தியைப்பெறுதல் உளதாம் என்றவாறு.

வெறியாவிம்மம்மர்நோய்மீளுகிலென்மீளா
நெறியாலென்னாயினெஞ்சே—குறிதாய
கன்றால்விளவின்கனியுதிர்த்தோன்காட்கரைவா
யொன்றுலும்வாழாதுயிர். (461)

இது, பிறர்கட்டோன்றிய அணங்குபொருளாகப்பிறந்த அச்சம். நடுக்கமென்பதும் இது.

(இ-ள்) நெஞ்சமே! மருந்துபிறிதில்லாப் பெருந்துயரிழைக்கும் இக்காமமாகியபிணி வெறியாடலாற்றீருமேயெனில் அது தலைவர்க்கு எம்மிடத்துண்டாகிய அன்பினைக் கெடுக்கும், தீராவிடில், இஃதியாதென

அன்னையர் எமது காவினை யாராய்ந்தறியப்படு மாதலான் இருவழியாலும் இவ்வுயிர் வாழா தென்றவாறு; ஆதலான் மீளிலென் மீளாவிடிலென் என்பதாயிற்று. விளவின்கனியுதிர்த்தான்—வினைப்பெயர். பகுதி—வரைபொருட்பிரிதல். துறை—இன்னலெய்தல். அணங்கொழிந்தமூன்றும் வந்தவழிக்காண்க. அவையெல்லாம் ஈண்டுரைப்பிற் பெருகும்.

சோலைமலையழகர்தோண்மாலைகாமுறுமுன்
மாலையாயாமமாய்வைகறையாயல்கிரவின்
றென்னேநீட்டித்ததெவன். (462)

இது, தன்கட்டோன்றிய வறுமைப்பொருள்பற்றிவந்த அழுகை; என்னை? "இளிவே யிழவே யசைவே வறுமையென, விளிவில் கொள்கை யழுகை நான்கே" என்றாராகலின். வறுமையென்பது இச்சித்தபோகந் துய்ப்பப்பெறாத பற்றுள்ளம். திணை - பெண்பாற்கூற்றுக்கைக்கிளை. துறை - இரவினீடுபருவரல். பா - இரண்டுவிகற்பத்தின்னிசைச்சிந்தியல் வெண்பா.

அருணோக்கிறைபிறழிலார்பிரிவென்றுணு
மருணோக்குறலறிந்துமன்னன்—பொருணோக்குற்
றேறுவான்வங்கத்தென்றெங்கண்மால்வெள்ளறைவாய்க்
கூறுவாளிற்கொடிதோகூற்று. (463)

(இ-ள்) அருணோக்கு - அன்புறுநோக்கு. இறைபிறழில் -சிறிதுமாறில். ஆர்பிரிவு - நெடும்பிரிவு. என்று - என்றுகருதி. ஆனுமருணோக்குறல்..............கூற்று - நீங்காத எனதுள்ளம் மருணோக்குமிகுதியைத் தனதுள்ளத்தால் அறிந்தும், நமதுமன்னன் பொருண்மேலன்புற்று முந்நீரிடத்து வங்கத்துச்செல்வானென்று எம்முடைய திருமால் திருவெள்ளறையிடத்துக்கூறுவாளைப்போலக் கொடுமையுடையதன்று கூற்ற மென்றவாறு.

ஓகாரம் ஒழியிசை. இது, அசைவுப்பொருள்பற்றிவந்த அழுகை; என்னை? பண்டைநிலைமைகெட்டு வேறொருதிறத்தளாகிவருந்தலினெனவறிக. பகுதி - பொருள்வயிற்பிரிதல். துறை - ஆற்றாதுபுலம்பல்

புரவலநீசெய்பொருண்மேற்போகுதியேலாக்கந்
தாவலளன்றீங்கிவளுஞ்சாற்றி—விரவலர்க்கொன்

நீத்திகல்செற்றின்பமுறல்யாரோடுமோலெவ்வுளின்கண்
வாய்த்தபுகழில்லறமேல்வந்து. (464)

இது, பிறர்கட்டோன்றிய இழவுப்பொருள்பற்றிவந்த அழுகை. இழவென்பது தந்தையும் தாயும் முதலாகிய சுற்றத்தாரையும், இன்பம் பயக்கும் நுகர்ச்சிமுதலாயவற்றையும் இழத்தல்.

(இ-ள்) காவற்றொழிற்குவல்லவனே! நீ செய்யப்படும் பொருண் மேற்போகாநின்றனையேல் இவ்விடத்து இவளும் கூறுகில் உயிர்சீவித்திருப்பவளன்றாகையாற் செயப்படும்பொருளோடும்வந்து திருமாலெவ்வுளின்கண் புலப்படும்புகழையுடைய இல்லின்கணிருந்தில்லறத்தொழுகியிரவலர்மாட்டு அவர்வேண்டியவற்றையீந்தும், சத்துருக்களைச் செற்றும் இன்பமெய்துவது யாரோடுங்கூடி யென்றவாறு பகுதி - இதுவுமது. துறை - செலவழுங்குவித்தல்.

தேர்வலவாவென்னாழுகின்முந்திற்செங்கண்மால்
காரகத்தாட்கென்வாசகம். (465)

இஃது திளிவரல்பற்றிவந்த அழுகை. இளிவாலென்பது பிறரால் இகழப்பட்டெளியனாதல். பகுதி - இதுவுமது. துறை - வலவனொடு கூறல். பா - ஒருவிகற்பக்குறள்வெண்பா.

அறிவின்மையன்றிப்பொருளின்மையந்தோ
நிரப்பென்னுநீணீநுலகு. (466)

இது, பிறர்கட்டோன்றியவறுமைப்பொருள்பற்றிவந்த அழுகை. என்னை? ஞானச்செல்வமே பேரின்பநுகர்விக்குஞ்செல்வமாகலி னஃதின்மையே வறுமையென்றாயிற்று. ஞானமின்மையே வறுமையென்பது "அறிவினற் குறைவில்லா வகன்ஞாலத் தவரோடும்" எனப் புவிப்பாவலர் தம்பிரான் நாவீறுடையபிரான் தெய்விகப்பாடலானுணர்க. திணை - வாகை. துறை - பொருளொடுபுணர்தல். எனவே தன்கட்டோன்றிய வசைவு பிறர்கட்டோன்றிய வறுமைப்பொருள்பற்றியும் அடைவே வந்தமை காண்க.

மெய்வேலவனடிக்கவெண்மதிகோறற்கிசைக
மைவேல்விழிபிறந்திம்மம்மர்நோய்—செய்கைக்குப்
பூங்காவளம்பாடிப்புண்ணியன்றன்வெற்பினிற்சேய்
நீங்காவளம்பாடிநின்று. (467)

இஃது திளிவரல்; என்னை? "மூப்பே பிணியே வருத்த மென்மை யோ, டியாப்புற வந்த விளிவர னான்கே" என்றாராகலின். இது பிறர் கட்டோன்றிய பிணிப்பொருள்பற்றிவந்த இளிவரல். நடிக்க, இசைக என்பன வியங்கோள்வாய்பாடு; இகழ்ச்சிக்குறிப்பு. மம்மர்நோய்செய் கைக்கு என்பது மருந்துபிறிதின்றிப் பெருந்துயரிழைக்குங் காமமாகிய பிணியைத் தன்கட் செய்வித்துக்கொண்டமைக் கெனறவாறு. பகுதி - வரைபொருட்பிரிதல். துறை - வேலனையழைத்தல்.

மலமாயருவருப்பாய்மாறாப்புழுவின்
புலமாங்கருக்குழியுள்புக்கிங்—கலமருமென்
மம்மர்நோய்தீர்க்குமருந்திலையோமாசறுசீர்ச்
செம்மலேவேங்கடவாசெப்பு. (468)

இது, தன்கட்டோன்றிய பிணியும் வருத்தமும்பற்றிவந்த இளிவரல்.

ஒன்றாய்ப்பரந்தபுனலுண்டநாளெவ்வுயிரும்
பொன்றாதுட்கொண்டபொருளாகி—நின்றான்முன்
செய்ந்நன்றிகொன்றழலுந்தேவாந்தரர்தமக்கு
முய்ந்நன்றியுண்டாகுமோ. (469)

இஃது துருத்திரம். உருத்திரமெனினும் வெகுளியெனினுமொக்கும். அஃதாக, இஃது துருத்திரமென்பதென்னை? "உறுப்பறை குடிகோ ளலைகொலை யென்ற, வெறுப்பின் வந்த வெகுளி நான்கே" என்றாராகலின், செய்ந்நன்றிகொல்வதே மிக்ககொலையாதலிற் பிறர்கட்டோன்றிய கொலைப்பொருள்பற்றிப்பிறந்த வெகுளி. இதனுள், ஒன்றாய்ப்பரந்த வுறுபுனலென்றது ஏகோதகப் பிரளயத்தை. தேவாந்தரர்-ஸ்ரீமந் நாராயண னன்றி வேறு பரதத்துவம் உண்டென்போர். ஒழிந்த அகலம் உரையிற் கொள்க. திணை - பாடாண். துறை - வாயுறைவாழ்த்து.

பொய்ச்சாதமின்றார்வண்பொன்றணியுட்செறித்த
நச்செயிற்றாலாறுநயப்பதாய்—மிச்சி
றலைப்பெய்தமோகனவாய்த்தம்பர்சேயேயென்
முலைப்பெய்வதென்றோமொழி. (470)

இது தன்கட்டோன்றிய வூடல்பொருளாகிப்பிறந்த வெகுளி. "வெறுப்பின் வந்த வெகுளி நான்கே" என்பதனால் ஊடல் காரண மாயிற்று. பொய்ச்சாதமின்னாரென்பது பொய்யை மெய்யாகப்பாவிக் கும் மின்னாரென்றவாறு. நச்செயிறு—விடம்போல ஊறுசெய்யு மெயிறு. தம்பர் - தம்பலம். முலைப்பெய்வது — முலைமேற்பூசுதல். பகுதி—பரத்தையிற்பிரிதல். துறை - புதல்வன்மேல்வைத்துப் புலவியினீடல்.

பொதுமகளிர்வள்ளுகிராற்போழ்ந்ததனைச்சாந்தின்
மதுமலர்த்தார்மன்னன்மறைப்பக்—கதுமெனத்தண்
டாமம்பரிந்துதழல்விழித்தாள்செங்கமலப்
பூமன்சிறுபுலியூர்ப்பொன் (471)

இஃது உறுப்பறையென்பதனால், ஊறும் உறுப்பறைப்பாற்படுத லாற் பிறழ்ச்சியாற்பிறந்த வெகுளி. தாமம்பரிந்து — பள்ளியிடத்தா ளை தலைமகன்மார்பின் மாலையையறுத்து. தழல்விழித்தாள் - தலைவ னுள்ளம் தழலுற்றதுபோல வெதும்ப நோக்கினாள். பூமன் - பூமகள் காந்தன். சிறுபுலியூர்ப்பொன் - சிறுபுலியூரினிடத்துப் பொன்போலு நிறத்தையுடைய தலைமகள். பகுதி - இதுவுமது. துறை - கண்டு கண்சிவத்தல். கூற்று - துறைகூறல்; உழையருரைத்தலுமாம்.

நின்மகனையென்மறுகினின்னியல்கண்டன்புறீஇத்
தன்மகவென்றாளெடுத்தாடக்கதெனு—முன்னிலைக்க
ணெற்கண்டாணாணினாள்யாரேமதிநிலையில்வல்
விற்கண்டான்வில்லிபுத்தூர்மின். (472)

இஃது தெள்ளற்பொருள்பற்றிவந்தநகை; என்னை? 'எள்ள லிளமை பேதைமை மடனென், றுள்ளப் பட்ட நகைநான் கென்ப' என்றாராகலின், இது தலைவனையும் பரத்தையரிற் காமக்கிழத்தியையும்பற்றியுரைத்ததா லென்றறிக. நின்னியல்கண்டென்றது நின்னையொக்கும் உறுப்பிலக் கணங்கண்டென்றவாறு. தக்கதெனும் முன்னிலைக்கண் என்றது நீ யென்மகனென்றது தகாததன்று தக்கதே யென்று யான்கூற வென்னை முன்னிலையாகக்கண்டகாலத் தென்றவாறு. பகுதி-இதுவுமது. துறை-புரத்தையைக்கண்டமைகூறிப் புலத்தல்.

ஆள்வினையில்லாதேற்கருமருந்தைத்தந்தெனையிங்
காள்வினையாந்தெய்வமதையல்லால்—வேள்வினையை
வென்றான்மகிழ்மாறன்வெற்பிலினிவேறுதெய்வ
மொன்றாகவும்வியப்பேனோ. (473)

இது வியப்பு ; என்னை ? "புதுமை பெருமை சிறுமை யாக்கமொடு, மதிமை சாலா மருட்கை நான்கே" என்றாராகலின், தன்கட்டோன்றிய புதுமைப்பொருள்பற்றிவந்த வியப்பு. மருட்கையெனினும் வியப்பெனினும் ஒக்கும்.

(இ-ள்) முயற்சியென்பதுசிறிதுமில்லாத எனக்கு இப்பெண்ணாகிய அமிர்தினை யெளிதாக இவ்விடத்துத்தந்து என்னையாண்டு கொண்ட நல்வினையாந்தெய்வமென்பதனையல்லால், வேளாலெய்தும் காமவிகாரமாகிய தீவினையைவென்ற வகுளமாலிகைமாறன்வெற்பிடத்து வேறொருதெய்வத்தை யொருபொருளாகமதியேனென்றவாறு. ஓகாரம்—ஒழியிசை. பகுதி - இயற்கை. துறை - தெய்வத்தைவியத்தல்.

அண்டமெலாமுட்கொண்டதுவுமணுவகத்தாய்க்
கொண்டதிறமுங்குறிக்கொளீஇப்—பண்டை
மறையுந்துணியாமதிளரங்காநின்னை
யிறையுந்துணிகலேம்யாம். (474)

இஃது திறப்ப மகிமையும் இறப்ப அணுமையும் தன்கட் டோன்றினமைபொருளாகவந்த வியப்பு. துறை - கடவுள்வாழ்த்து.

சொல்லாமைமுன்பிரிந்துசூழ்நிதிக்குவைந்துதிவன்
கல்லாரழல்வெங்கடங்கடந்த—தெல்லா
மடலாழியான்கூடலாயிழைதன்னின்பக்
கடலாடநீங்கினவேகாண். (475)

இது, தன்கட்டோன்றிய புணர்ச்சிப்பொருள்பற்றிவந்த வுவகை; என்னை ? "செல்வம் புலனே புணர்வு விளையாட், டல்ல னீத்த வுவகை நான்கே" என்றாராகலின். இதனகத்துக் கடங்கடந்ததெல்லாமென்பது சுரங்கடந்துபோயதால் உடலுயிர்கட்குச் சுரத்தின்வெம்மையாலுற்ற துன்பமெல்லா மென்றவாறு. ஆயிழைதன்னின்பக் கடலாட நீங்கின

வென்பது அங்ஙனம் உண்டான வெம்மையெல்லாம் ஆராய்ந்தணிந்த பூணினையுடையாள் குளிர்ந்த இன்பமாகியகடலகத் தாடினகாலத் தென்னைவிட்டுநீங்கிற் றென்றவாறு. பகுதி - பொருட்பிரிதல். துறை- உண்மகிழ்ந்துரைத்தல்.

கேளாதிருந்திலேன்கேசவாவென்பதனை
வாளாதிருந்திலேன்வாழ்த்தினே—னாளானார்க்
காளானேனென்னிணையிங்கார். (476)

இது பெருமிதஞ்சார்ந்த வுவகை. திணை - வஞ்சி. துறை-நெடுமொழிவஞ்சி. பா - ஒருவிகற்பநேரிசைச்சிந்தியல்வெண்பா.

ஈசன்றிறமுமெழின்ம யிர்த்திறமு
மாசின்றுணரமதிகொளீஇ—நேசித்
துணர்த்துமோ நூல்களொருதலையாய்மாறன்
புணர்த்ததமிழ்வேதம்போல். (477)

இது தன்கட்டோன்றிய கல்விப்பொருள்பற்றிவந்த வுவகை. மாசின்றி என்பது மாசின்று என்றாயிற்று; "அன்றி யின்றியென் வினையெஞ் சிகரம், *செய்யுளு ளுகா மாகட லுடைத்தே" என்பதனுலறிக. ஓகாரம் ஒழியிசை. நூல்கள் - சுருதி மிருதி புராணங்கள். ஒருதலையாய்- உண்மையாய். தமிழ்வேதம் - திருவாய்மொழி. திணை - வாகைசார்ந்த புறத்திணை. துறை - பனுவல்வென்றி.

மென்சிறகர்வேதால்விழுப்பேட்டினையெகின
மென்புருகப்புல்லியிறைபிரியா—முன்பனியாற்
போதாய்தொடைத்திருமால்புல்லாணிமெல்லியற்கங்
கேதாயதென்றறியேனே. (478)

இஃது தச்சத்தைச்சார்ந்தமருட்கை.

(இ-ள்) விழுப்பேடு — விழுமியபெடை. இறைபிரியா — கணப்பொழுதும் விட்டுநீங்கா. முன்பனி - மார்கழியும் தையும். போதாய் தொடைத்திருமால்................றறியேனே என்பது பூக்களுள் நல்லதாய் ஆராய்ந்தெடுத்த பூவினுற்றொடுத்த மாலையையுடைய திருமால் திருப்

* தொடர்பினு ளொன்றும் பி - ம்; "தொடர்பினு ளுகர மாய்வரின்" என்பது நன்னூல்.

புல்லாணியின்கண் மயில்போலு மெல்லியஇயலையுடையாட்கு அவ்விடத் தெய்திய துன்பம் யாதென்றறியே னென்றவாறு. பகுதி-வேந்தர்க்குற் றுழி. துறை - வாணைக்கிவருந்தல். இவற்றின்வேறுபாடுங் காண்க.

புழைத்தடக்கைமால்யானைபோதருநாளன்பு
தழைத்தெனது மன்னுயிரைத்தந்த—மழைத்தடக்கை
மன்னவற்கோமாயன்மதிளரங்கத்தாய்பிறர்க்கோ
முன்னுறநின்றூர்க்குமுரசு. (479)

மெய்ப்பாடு இதுவுமது. பகுதி - வரைபொருட்பிரிதல். துறை - மணமுரசுகேட்டுவருந்தல் போதருநாள் - வருநாள்.

உவகையினும் என்னும் உம்மைத்தொகைவாய்பாட்டாற் சாந்தரத மென்பதுங் கூட்டிச் சுவை யொன்பதெனவும்படும். அஃதாவது "செஞ்சாந்து பூசினுஞ் செத்தினும் போழினு, நெஞ்சோர்ந் தோடா நிலைமைத் தாகும்". அது, காம வெகுளி மயக்கம் நீங்கினார்கண்ணே நிகழ்வதாம். சமநிலை, நடுவுநிலையென்பது மிது.

ஏதிலருற்றூர்பேறிழவின்பந்துன்பமெனப்
பேதுறுதலாம்வன்பிதற்றறவே—போதுந்
திருமகிழ்மாறன்பதமேசிந்தித்தெப்போது
மிருதரும்பேரின்பமிது. (480)

இது சாந்தரதம். இதனுள், நெஞ்சமென்னு மெழுவாய்முன்னிலை யெச்சமாயிற்று. நெஞ்சமே! சிந்தித்து வாழ்த்தியிரு, இது பேரின்பந் தருமெனக் கூட்டுக. இன்பந்தருமென்பது வினைமுற்று. திணை - பாடாண். துறை - ஓம்படை.

புகழ்ந்தாலும்வெந்தழலைப்போற்சுடுஞ்சொற்சொல்லி
யிகழ்ந்தாலும்பேறிழவென்றூலு—மகழ்ந்தாலும்
வெண்டிரைப்பாலாழியான்மெய்யடியார்மெய்யுணர்வுட்
கொண்டிருப்பார்கோடார்குறி. (481)

இதுவுமது. இவையிரண்டும் திணை - வாகை. துறை - சால்பு முல்லை இதனுள் உவமைமுதலிய அலங்காரங்கள் விரவினவெனினுஞ் சுவையே மிகத்தோன்றலாற் சுவையேநோக்கமாகக்கொள்க. இதனை வடநூலார் இரதமென்ப. (௧௧௩)

௩௨-வது சுவை முற்றும்.

௫௫-வது பரியாயவலங்காரம்.

199. தொன்மையி னொருபொருட் டொடர்பவம் பலவயிற்
பன்முறை பயின்றதெனல் பரியாயம்.

(எ-ன்) வைத்தமுறையானே பரியாயமென்னு மலங்கார முணர்—ற்று.

(இ-ள்) யாதாயினும் ஒருபொருள் பழமைத்தாகித் தொடர்புறப் பலவயினும் பலமுறையே பலபிறப்புப் பயின்றதென்றுகூறுவதும் பரியாயமென்னும் அலங்காரமாமென்றவாறு.

அன்றுமலரிலமிர் திற்கொழுமுனையிற்
றுன்றுதுழாய்க்காட்டிற்றோன்றியே—யின்று
நினையிற்றமிழ்மாறனீள்குன்றவாணர்
மனையிற்பிறந்தனள்பூமாது. (482)

இது பரியாயம். பரியாயமென்பது பலமுறை. பகுதி - இடந்தலை. துறை - நலம்புனைந்துரைத்தல். பயின்றதெனலும் என்னும் உம்மை செய்யுள்விகாரத்தாற் றொக்குநின்றுவிரிந்தமையால், தண்டியாசிரியர், "கருதியது கிளவா தப்பொரு டோன்றப், பிறிதொன்று கிளப்பது பரியா யம்மே" என்றார்; அவ்வாறு புணர்ப்பதும் பரியாயமாமெனக் கொள்க. அதற்குச்செய்யுள்:—

சொற்பாவலர் தம்பிரான்மகிழ்மாறன் குருடரிவெற்பிற்
பொற்பார்பிறைநுதற்பூண்முலையாயிப்பொதும்பரின்வாய்
நிற்பாய்நறுமென்மலர்கொணர்கேனவணீபெயரிற்
கற்பாய்தாக்கன்று நூபுரபாதகமலங்களே. (483)

என்பதனாலறிக. பகுதி - பகற்குறி. துறை - இடத்துய்த்துநீங்கல்.

(இ-ள்) புவிப்பாவலர் தம்பிரானாகிய திருமகிழ்மாறன் குருடரி வெற்பினிற் பொலிவுநிறைந்த இளம்பிறைபோன்ற நுதலினையும் பூண் அணிந்தமுலையினையு முடையாய்! இச்சோலையின்கண் நிற்பாயாக, நின் குழன்மேற்சூட்ட நறுவிதாகிய மெல்லியமலர் கொய்துகொண்டுவருவன், நீ என்னோடும் அவணேகுவையெனில் உனது சிலம்பணிந்த பாதகமல மானது சிறுபாலுறுத்தக் கன்றுமாதலா னென்றவாறு.

இதனுள், தோழி கருதியதுகிளவாது பிறிதொன்றுகிளத்தியது உணர்ந்துகொள்க.

அன்றியும், இளங்கோவடிகள், மனையறம்படுத்தகாதையுள், "தயங் கிணர்க் கோதை தன்னொடு தருக்கி, வயங்கிணர்த் தாரோன் மகிழ்ந்து செல்வுழி"யென்றவற்றுள், தயங்கல், வயங்கல் இரண்டும் விளக்கமாதலின் அதற்கு விரித்துரையெழுதிய அடியார்க்குநல்லாராகிய ஆசிரியர் அதனை யும் பரியாயமென்னும் அலங்காரமாகக் குறித்தார். அது இப்பொரு ளணியுள் மூன்றுறக்கூறிய பொருட்பின்வருநிலையுள் அடங்கு மென்றறிக. (ககச)

ருரு-வது பரியாயம் முற்றும்.

ருசா-வது இலேசவலங்காரம்.

:o:

200. தெள் ணிறப்பளிங்கிற்சிறுபுழைச்சென்றா
லெ ணிறம்புறம்பொசிந்தொளிரும்படித்தாய்க்
கரு வெளியிடுங்காமர்சத்துவங்களை
பலதாய்ச
யருத்தியின்மறைத்துரைப்பதுவேயிலேசம்.

(எ-ன்) வைத்தமுறையானே இலேசமென்னும் அலங்கார முணர்-ற்று.

(இ-ள்) தெளிந்தநிறத்தையுடைய படிகமணித்துளையில் ஏற்றப் பட்ட செம்பட்டுநூலினது ஒள்ளியநிறம் புறத்தேயுருவித்தோன்றுமாறு போன்றுள்ளக்குறிப்பைவெளியிடும் விருப்பத்தோடுங்கூடிய சத்துவங் களை யன்பினோடு மறைத்துக்கூறுவது இலேசமென்னு மலங்காரமாம் என்றவாறு. (ககரு)

201. மெய்ம்மயிர்பொடித்தல்வெதும்பல்வெயர்த்தல்
துய்யபொற்பசலைதோன்றனடுக்குறல்
விழிபுனலரும்பல்வெவ்வுயிர்ப்பாவித்தல்
மொழிதளர்வுறனகைமுதலியசத்துவம்.

(எ-ன்) சத்துவம் இவையென்பதுணர்-ற்று.

(இ-ள்) நகைமுதலாக மெய்யினிடத்து உரோமஞ்சிலிர்த்தலும் மெய்வெதும்பலும் வெயர்வுதோன்றலும் தூயதாய பொன்போன்ற பசலை தோன்றலும் மெய்ந்நடுக்கமுங் கண்ணீரரும்பலும் நெட்டுயிர்ப்புங் கொட்டாவியும் மொழிகுழறலும் ஆகிய பத்துஞ் சத்துவங்களாம் என்றவாறு.

சேதாம்பல்வாவித்திருவல்லிக்கேணியர்திண்சிறைப்புண்
மீதாம்பவனிதனைத்தொழுதேவிருப்புற்றிடுமெப்
போதாம்பசலைதன்மெய்க்கேதளிர்த்ததைப்பொய்த்தவர்தம்
பீதாம்பரத்தொளியென்னுமின்னார்க்கிந்தப்பெய்வளையே. (484)

தேலாதகேமிப்படையார்*நிலாத்திங்கட்டுண்டத்துள்ளார்
கோலாகலப்புட்பவனிகண்டேதொழுங்கோதைகொண்ட
மாலானடுக்கம்பயின்றமெய்ப்பான்மையைவாய்ந்தசிறைக்
காலானடுக்குற்றதாகமின்னார்க்குய்க்குங்கட்டுரைத்தே. (485)

இவையிரண்டும் இலேசம். இவற்றின்பொருள் உரையிற்கொள்க. திணை-பாடாண். துறை-"ஊரொடு தோற்றமு[ம்] [உ]ரித்தென மொழிப" என்றாராகலின், பவனிகண்டடைந்தபான்மை ம[றை]யால், [கூறு]தல். (கககூ)

ந௱ச-வது இலேசம் முற்றிற்று.

ந௱ரு-வது தற்பவவலங்காரம்.

202. யாதொருபொருட்டினொன்றிறந்தது மறித்துமவ்
வேதுவிற்பிறந்ததென்பது வேதற்பவம்.

(எ-ன்) வைத்தமுறையானே தற்பவமென்னு மலங்கார மூணர்-ற்று.

(இ-ள்) யாதொருகாரணத்தினான் யாதொன் றிறக்கப்பட்டது அது மீட்டும் அப்பொருட்பொருட்டுப் பிறந்ததென்பது தற்பவமென்னு மலங்காரமா மென்றவாறு.

---

* நிலாத்திங்கட்டுண்டம் - தொண்டைநாட்டுத்திருப்பதியுளொன்று.

போர்பட்டவேற்கண்பொருநோக்கினுக்கிலக்காய்
நேர்பட்டிறந்தநிறைமன்னோ—கூர்பட்ட
நேமியான்முட்டத்துநேரிழைதன்னாேக்கிற்
காமியாவந்ததுவேகாண். (486)

இது தற்பவம். தற்பவமென்பது மூன்றுவதன்றேகை; என்னை? அது தன்னாற்பிறத்தல்.

(இ-ள்) போருற்பவமான வேல்போன்றகண்கள் என்மேற் பூசல்புரி நோக்கத்தாற் றுறந்த எனது நிறை நண்ணிய ஆபரணத்தினையுடையாள் நாணோடுகூடியநோக்கினால் என்னைவிரும்பி மறித்தும் என்னிடத்துப் பிறந்தது என்றவாறு. பகுதி - இயற்கை. துறை - குறிப்பறிதல் (௧௧௭)

௫௫-வது தற்பவம் முற்றும்.

௬௬-வது அசங்கதியலங்காரம்.

203. காரியமயலதாய்க்கழிதிறனசங்கதி.

(எ-ன்) வைத்தமுறையானே அசங்கதியென்னு மலங்கார முணர்—ற்று.

(இ-ள்) யாதாயினு மொருகாரணத்திற் கேற்ற காரியம் அயலே தோன்றிக் கழியுங்கூறுபாடு அசங்கதியென்னு மலங்காரமா மென்றவாறு.

வள்ளலணிமார்பின்மற்றெருத்திகண்ணிணைவேல்
கொள்வதுநீஇயெங்கைகுறுங்குடியா—ளுள்ளமது
புண்பெற்றதனுவிப்பொன்னிறைவனின்னுயிரென்
றெண்பெற்றதுண்மையாமின்று. (487)

இஃது அசங்கதி. மற்றொருத்தி - பரத்தை. எண்பெற்றது - யாமெண்ணப்பட்டது. பகுதி - பரத்தையிற்பிரிதல். துறை - உலாப் போந்து பள்ளியிடத்தானுன தலைவனுடனாடியதலைவிநிலைமை உழைய ருரைத்தல். (௧௧௮)

204. அதுவே,
சிலேடையினெய்துந்திறனுமுடைத்தே.

(எ-ன்) அசங்கதி பிற அலங்காரத்துடன் விரவிவருமென்பது உணர்—ற்று.

(இ-ள்) அச்சொல்லப்பட்ட அசங்கதி சிலேடையுடன்கூடி முற்றுங்கூறுபாடு முடைத்தென்றவாறு.

மன்னிளவல்விண்மேன்மறைந்தவிராவணிவன்
சென்னியின்மேல்வாளிசினத்தேவ—நன்னுதலாய்
ஞாலத்தசங்கதியேநாடிவிராவணனார்
காலற்றதென்னுங்கதை. (488)

இது சிலேடைவாய்பாட்டான்வந்த அசங்கதி.

(இ-ள்) மன்னிளவல், மேகத்துண்மறைந்த இராவணிதலையறுக்கும்படி கோபித் தேவியபாணம் இராவணிதலையையறுக்கப் பூமியிலிருந்த இராவணனார்காலற்றதென்னுங்கதைநடையை விசாரிக்கில் அசங்கதியாமென்றவாறு.

மன்னிளவல்-இராமனாகியமன்னனுக்கிளைய இலக்குவன். இராவணி-இந்திரசித்து. கால் - சந்ததி. விண்ணின்மேல்நின்றவன் றலையற விட்டவாளி பூமியில்நின்றவன் காலற்றதாயகாரியத்தைவிளைத்ததால் அசங்கதியாயிற்று. முன்னர் அக்கனும் அதிகாயனும்படப் பின்னர் இராவணியும்பட்டதாற் காலற்றதாயிற்று. திணை - வாகையைச்சார்ந்த புறத்திணை. துறை - வில்வென்றி.

காணிலசங்கதியேதென்னிலங்கைகட்டழித்தா
ணுணிலுடக்கிநடுக்குழையப்—பாணம்
புரக்கவளைத்ததனுப்பொன்றுதிருப்ப
வரக்கர்தனுநாணறல். (489)

இதுவுமது. பாரமும் தாரமுங்கொள்ள நடுக்குழையவாங்கிய வில்லும் நாணும் அறுதிருப்ப அரக்கர்தனுவும் நாணும் அற்றது விசாரிக்கில் அசங்கதியா மென்றவாறு.

காணில் - விசாரிக்கில். தனு - உடல். நாண் - மானம். அரக்கர் - ஈண்டு மூலபெலப்படை.

தண்டியாசிரியர் ஏதுவுள், தூரகாரியமெனவிரித்தது மிது. இவர் அதனைப் பிறருடம்பட்டது தானுடம்படுதல் என்னும் உத்தியால் தனியே ஓரலங்காரமாக்கினர். (௧௧௬)

௩௬-வது அசங்கதி முற்றும்.

௩௭-வது தடுமாறுத்தியலங்காரம்.

———(௨)———

205. உரைதடுமாறுவது தடுமாறுத்தி.

(எ-ன்) வைத்தமுறையானே தடுமாறுத்தியலங்கார மூணர்-ற்று.

(இ-ள்) ஒருகாரணத்தினானே தொருகாரியமே, அக்காரியத்தாற் ரோற்றமான தக்காரணமென உரைதடுமாறக்கூறுவது தடுமாறுத்தியலங்காரமாம் என்றவாறு. உத்தி - உரை.

வையந்திருநாரணன்ரோற்றம்வண்டமிழோ
ரையன் மகிழ்மாறனாலென் னுந்—துய்யமகிழ்த்
தாமத்தான்ரோற்றமும்பொற்றமரையாள்கேள்வனருட்
சேமத்தாலென்னுந்தினம். (490)

இது தடுமாறுத்தி. வடநூலார் அன்னியோன்னியமென்பது மிது. திணை - பாடாண். துறை - பழிச்சினர்ப்பரவலும், கடவுள்வாழ்த்து மாம். (௧௨0)

௩௭-வது தடுமாறுத்தி முற்றும்.

௩௮-வது புணர்நிலையலங்காரம்.

———:(௨):———

206. நன்றிகொள்பண்புவினையிவைகாலத்
தொன்றவிருபொருட்குரைப்பது புணர்நிலை.

(எ-ன்) வைத்தமுறையானே புணர்நிலைபலங்காரமுணர் - ற்று.

(இ-ள்) நன்மையையுட்கொண்ட பண்பாதல் வினையாதல் இரண்டு பொருட்கு வினையுடனிகழ்ந்ததாகப் புணர்த்துக்கூறுவது புணர்நிலையலங்காரமா மென்றவாறு.

பொங்குகதிர்வெய்யோன்புறந்தரவேவேர்விழுந்த
கங்குலுடனேயிருண்டகாட்சித்தே—யெங்க
ளருளாளன்வேங்கடவனம்புயத்தார்வேட்டு
மருளாதரித்தாண்மனம். (491)

இது பண்புப்புணர்நிலை. திணை - பெண்பாற்கூற்றுக்கைக்கிளை. துறை - கண்டுகைசோர்தல்.

அந்தணராயந்தமுணர்வாரிதயார
விந்தமுடனேமலருமேன்மைத்தே—பைந்துளப
மாலைப்பெருமானேவான்பிரமமென்னுமகிழ்
மாலைப்பெருமான்செவ்வாய். (492)

இது வினைப்புணர்நிலையலங்காரம். திணை - பாடாண், துறை - அறமுறைவாழ்த்தினுள்ளாம். (கஉக)

௩௪-வது புணர்நிலை முற்றும்.

௩௫-வது வேற்றுப்பொருள்வைப்பலங்காரம்.

207. ஒருபொருணிலைமுதலுரைத்ததைமுடித்துத்
தருபொருணிலைபினுந்தான்வைப்பதுவே
புகழ்புணர்வேற்றுப்பொருள்வைப்பாகும்.

(எ-ன்) வைத்தமுறையானேவேற்றுப்பொருள்வைப்பென்னுமலங்கார முணர் - ற்று.

(இ-ள்) முதலே ஒருபொருளினது தன்மையையுரைத்துப் பின்னரும் அதனைச் சாதித்துத்தருவதோர்பொருணிலைமையினை யதனிறுதியில்வைப்பது வேற்றுப்பொருள்வைப்பென்னு மலங்காரமாமென்றவாறு.

208. அனைத்தினுஞ்செறிதலொருவகையடைதன்
முரணுறமொழிதலிரட்டுறமொழிதல்
கூடுதல்கூடாவகையிற்கூறுத
லிருமையின்விளம்பல்விபரீதத்தியம்பலென்
றெண்வகையான்வருமியலுடைத்ததுவே.

(எ-ன்) இதுவும் அவ் வேற்றுப்பொருள்வைப்பை விரித்துணர்—ற்று.

(இ-ள்) அனைத்தினுஞ்செறிதன்முதலாக விபரீதத்திசைத்தலீருக எண்வகைத்தாகவரும் இலக்கணத்தையுடைத்து அவ்வேற்றுப்பொருள் வைப்பென்னு மலங்காரம் என்றவாறு.

நாடாளுதற்குவசிட்டனிடுநன்னயநாள்
காடாளுநாளாகக்காட்டியே—வீடாளுந்
தொல்லாழியான்றனையுந்தூக்காதுவென்றதென்றால்
வெல்லாததாரைவிதி. (493)

இது முழுவதுஞ்சேறிதல். நன்னயநாள்—இராசநீதிக்கமைந்தநாள். தூக்காது - விசாரியாது. வெல்லாததாரை விதி என்பது விதியால் வெல்லப்படாதா ரொருவருமில்லையென்பதாம். திணை - காஞ்சி. துறை—...............

தன்பார்ப்பினையருந்துந்தண்ணளியற்றேமுதலை
பென்பார்புதல்வனையுமேந்திழாய்—வன்றுதை
பொன்பயிலாகத்தான்பொருணுமஞ்சொன்னதற்குத்
துன்பமிழைத்தானிலையோசொல். (494)

இஃதொருவகையடைதல். பொன்பயிலாகத்தான்பொருணுமம்—நாராயணன்றிருநாமம். பொன்பயிலாகத்தானுகியபொருளின் றிருநாமமெனக்கூட்டுக. திணை—பாடாண்சார்ந்தபுறத்திணை. துறை—பாவார்ப்பழித்தல்.

அன்றுமழுவாளியன்புடையசுந்தரர்க்காய்ச்
சென்றனன்காண்டூது திருநுதாஅ—லென்றதிலென்
னுதியினிற்பஞ்சவர்மேலன்புடைத்தாயத்திகிரிச்
சோதியுஞ்சென்றுனிலையோதூது. (495)

இதுவுமது. துறை - பாடாண்சார்ந்தபுறத்திணையுள், தூதுநிலை யுரைத்தலாம்.

நன்றறிந்தார்மானிடரைநல்குரவுற்றும்பாடச்
சென்றறியாதாரேதிருவுடையா—ரொன்றறியாப்
புல்லறிவாரேனுமொருபொய்யுரையாமாந்தரையே
பல்கலைதேர்நாவலரென்பார். (496)

இது முரணுறமொழிதல்.

(இ-ள்) ஆன்மலாபமான முத்தியைத்தரும் பரப்பிரமம் ஸ்ரீமந் நாராயணனேயென்னும் உண்மையையுணர்ந்தவர்கள், உம்மைப்பிறப்பிற் செய்த நல்வினையால் இம்மைப்பிறப்பிற்பலித்த கல்வியோடுகூடிய கவியை யுடைய நாவலர் உண்டிப்பொருட்டால் நிரப்பிடும்பை மிகுந்தாலும் அக் கவிகளான் மனிதரைச்சென்றுபாட மனத்தினாலுங் குறித்தறியாத வரைப் பேரின்பச்செல்வம் பெற்றவரென்பர்; அஃதன்றியும், இறைநிலை யும் உயிர்நிலையும் சிறிதுமுணராத புல்லறிவாண்மையுடையோராயினும் ஓரிடத்தும் ஒருபொழுதும் சிறிதும் பொய்சொல்லாதவரையே அற நூல்கள்பலவற்றையுங் கற்றுணர்ந்த நாவலரென்பா ரென்றவாறு.

நன்று—ஆகுபெயர். உற்றுமென்னும் உம்மை எதிர்மறை; உறாது என்பதை விளக்கிற்று. திணை—வாகை. துறை—"கட்டமை யொழுக் கத்துக் கண்ணுமை யானும்" என்பதனால் இது கட்டமையொழுக்கத் துக்கண்ணுமை.

ஏதிலார்கூட்டத்தினிதாகியவாடை
மாதராய்மாறன்மகிழ்துடரிச்—சூதமலர்
வாளியினுமின்னுயிரைவாட்டியதானீடுகருங்
காளியுறவாகாதுகாண். (497)

இது சிலேடைவேற்றுப்பொருள்வைப்பு. இரட்டுறமொழித லென்பதுமிது. ஏதிலார்—அயலானர். கூட்டத்து—புணர்ச்சிக்காலத்து. இனிதாகியவாடை—குளிர்ந்தவாடை. சூதமலர்வாளி—மாமலர்ப்பாணம்; வாட்டியது—சுட்டது. கருங்காளி—கரியகாற்றும், கரிய பத்திரகாளியும். ஆதலால் இஃ திரட்டுறமொழிதலாயிற்று. திணை—பெண்பாற்கூற்றுக் கைக்கிளை. துறை - வாடைக்கு வருந்தல்.

வைவேல்விழியாளைவந்தளித்தவாழ்வெனக்கு
நைவேதுமில்லாநலனளித்த—மெய்வேதப்
பாவினைத்தேர்மாறனருட்பார்வைக்கிலக்கானார்
தீவினைப்பாலெய்துவரோசென்று. (498)

இது கூடமியற்கை. வாழ்வு - நல்வினைப்பாலதாகிய தெய்வம். பகுதி - இயற்கை. துறை - தெய்வத்தைமகிழ்தல்.

பாலுஞ்செழுந்தேனும்பாகுங்கடலமிர்து
நாலுந்துணைதுறந்தநன்னுதலார்க்—காலமா
மின்பமாநல்வினைப்பாலீசனருளில்லாதார்க்
கன்பனேதீவினைப்பாலாம். (499)

இது கூடாவகையிற்கூறுதல். பகுதி - பொருள்வயிற்பிரிதல். துறை - செலவழுங்குவித்தல்.

ஏதிலர்தஞ்சொற்போலவின்னுயிரையீன்றவள்சொற்
கோதறவேயுண்ணுங்கொடுமையான்—மாதராய்
வெங்கதிரோன்பாலன்றிவெண்மருந்தினுவியன்ற
திங்களினுந்தோன்றுமோதீ. (500)

இஃ திருமையினியம்பல். ஏதிலார் - இக்காலத்து அயலவராகிய தலைவர். சொல் - நின்னிற்பிரியேன் பிரியி லாற்றேனென்று தலையளியிற்கூறிய கூற்று. பகுதி - இதுவுமது. துறை - செலவுநினைந் திரங்கல்.

தம்முனிலைவிட்டான்றனிமகுடஞ்சூடினு
னம்முனிலைநின்றானரசிழந்தான்—றெம்முனையி
லென்றாவிருவினையுமெங்களிராமன்னினைந்த
தொன்றாவிபரீதமாகும். (501)

தம்முனிலைவிட்டான்..........சூடினான் - வீடணன் அரசியல்பெற்றான். தம்முன்—தமையன். அம்முனிலைநின்றா னரசிழந்தான்—அந்தத் தமையனிடத்திலே நின்றான் (கும்பகருணன்) அரசுரிமையும் உயிரும் இழந்தான். இது, உலகியலுக்கு விபரீதமாதலால் விபரீதத்திசைத்தல். துறை - கடவுள்வாழ்த்து. (கஉரு)

ருசுஅவது வேற்றுப்பொருள்வைப்பு முற்றும்.

௪௦-வது விபாவனையலங்காரம்.

209. மேதகவுலகம்விளம்பியகாரணத்
தாதலேவிலக்குபுவயலொருநெறித்தா
மேதுவிற்றன்மையிற்குறிப்பினெய்தியமா
போதுதல்விபாவனையெனவுரைத்தனரே.

(எ-ன்) வைத்தமுறையானே விபாவனையென்னு மலங்காரமுணர்த்துறு.

(இ-ள்) ஒன்றன்வினையுரைக்குங்காற் பெருமைபொருந்தவுலகங் கூறியகாரணத்தா னஃதுண்டாதலையொழித்துப் பிறிதொரு வழியாங் காரணத்தானுக, இயல்பானுக, குறிப்பானுக, உண்டாயமரபுகூறுதல் விபாவனையென்னு மலங்காரமாமெனக்கூறினர் புலவரென்றவாறு.

ஆரமிர்தமுண்ணுதடங்காச்சுவைபடைத்த
தோரறமுஞ்செய்யாதொழிவிலாப்—பேரின்ப
முற்றதுநங்கோமாறனுய்த்ததிருவாய்மொழிப்பாக்
கற்றுணர்ந்தோர்நாநெஞ்சகம். (502)

இஃ தயற்காரணவிபாவனை. உய்த்தது - பாடித்தந்தது. திணை - பாடாண்சார்ந்தபுறத்திணை. துறை - பனுவல்வாழ்த்து.

மாணீலந்தோயாது மைந்நிறமேகூர்ந்ததுமெய்ந்
நீணீருஞ்சேறுநிறையாதே—வாணுதாஅல்
கோடார்பொழிற்குடந்தைக்கொற்றமாலுந்தியின்மேல்
வாடாதேநிற்குமரை. (503)

இஃ தியல்புவிபாவனை. மரை—தாமரை. கூர்ந்தது - மிகுந்தது. துறை - கடவுள்வாழ்த்து. (௧௨௪)

210. வினையெதிர்மறுத்துப்பொருள்புலப்படுத்தலு
நினைவுறுபொதுவகையாணிபம்விலக்கிக்
காரியம்புலப்படுத்தலுமெனக்கழறி
ஞரிரண்டாகுமுயர்குறிப்பினவே.

(எ-ன்) குறிப்புவிபாவனையின்கூறுபா டுணர்-ற்று.

இதன்பொருள் உரையிற்கொள்க.

ஆட்டாக்கரும்பினரும்பானமுண்பதைவிட்
டீட்டாய்நிதியென்றியக்கியே—பூட்டுருளற்
றோடுதேர்க்கானிடைநின்றேதுளமேயொன்றினைநீ
நாடுதிநின்பின்னெழுகேளுன். (504)

இது வினையெதிர்மறுத்துப் பொருள்புலப்படுத்தல்விபாவனை.

(இ-ள்) ஆட்டாக்கரும்பினரும்பானமென்பது தலைவியிதழ்ப் பானம். பூட்டுருளற்றோடுதேர் என்பது கொளுவப்பட்ட வண்டியின்றியும் ஓடுமாபோன்றியங்கும் பேய்த்தேர். இது குறிப்பு. பகுதி—பொருள் வயிற்பிரிதல். துறை—பொருள்வயிற்பிரிந்ததலைவன் சுரத்திடைநின்று நெஞ்சொடுநோதல்.

காட்டியகன்டாமேகலுழுந்திறமேது
தோட்டிலஞ்சிமாறன்றுணைப்புயத்தை—வேட்டவர்த
முள்ளந்தளரவதற்குருவிலா னுருவங்
கொள்ளுந்திறமிஃதென்கொல். (505)

இது பொதுவகையாற் காரணம்விலக்கிக் காரியம் புலப்படுத்தது.

(இ-ள்) காரிமாறப்பிரான் வகுளமாலிகையணியப்பட்ட திருப் புயங்களிற் காந்தியை யெனக்குக்காட்டி யித்துன்பத்தினை எனக்களித்த கண்கள் அவன் நமதுவீதியையகன்றகாலைத் தோழீஇ! அத் திருப் புயங்களை யெமக்குக் காட்டுவாயாகவென் றழுகின்றதென்? இன்னுந் தாங் காட்ட யான்காண்பதல்லது என்னாற் காட்டல்கூடாது; அஃ தன்றியும், அத்திருப்புயங்களை விரும்பியவருள்ளம் தளர்வெய்தியதற்கு உருவிழந்தகாமன் உருவங்கொண்டு எனதுமுன்னிற்றற்குக்காரணம் யாதென்றவாறு. இது பெண்பாற்கூற்றுக்கைக்கிளை. துறை - பவனி கண்டழுங்கல்.

வேரித்திறம்பயிலாமென்கமலத்தேடுளரா
மூரிக்கிளைவண்டுமொய்த்தார—வாரிக்கு
நாதந்தனிலோதிமமுறங்குநாகையே
வேதந்தொடார்க்குறைமால்வீடு, (506)

இதனுள், வேரித்திறம்பயிலாமென்கமலம் என்பது தண்ணீர். ஏடுளராமூரிக்கிளைவண்டு என்பது பூந்தோடுகளைக் குடைந்தறியாத கூட்டவலம்புரி. உளர்தல் - குடைதல். இதுவும் குறிப்பு. இதன் வேறுபாடுங் காண்க. திணை - பாடாண். துறை—நகரவாழ்த்து. (௩௨௫)

௪௦-வது விபாவனை முற்றும்.

௪௧-வது ஆர்வமொழியலங்காரம்.

211. விழுமிதினார்வமொழிமிகுத்துரைப்பது
பழிதீரார்வமொழியெனப்பகர்வர்.

(எ-ன்) வைத்தமுறையானே ஆர்வமொழியென்னுமலங்காரமுணர்—ற்று.

இதன்பொருள் சூத்திரத்தானே விளங்கும்.

ஞானமிலாநாயேற்குநன்குயர்தன்றொண்டனெனும்
வானுயர்தோற்றம்புரந்தவாழ்விற்குத்—தேனுலவுந்
தாதோடுறுமகிழ்த்தார்த்தம்பிராற்கென்பொருட்டால்
யாதோகைம்மாறிங்கினி. (507)

இஃ தார்வமொழி. இதனுள், வானுயர்தோற்றம் - மிகுதியாகவுயர்ந்ததலைமை. என்பொருட்டால்—என்னே. இனி யிங்குக் கைம்மாறியாதோ - யான் மேலிவ்வுலகத்துச்செய்யுங் கைம்மாறியாதென்றவாறு; எனவே அதற்குச் சரியாகச்செய்யுங்கைம்மாறில்லையென்பதாம். துறை - கடவுள்வாழ்த்து.

பொன்போற்சுடர்பல்கதிரோனடைத்தமென்போதிருக்கை
நன்போதகற்றுந்திறங்கற்றிடர்நள்ளிருளிடையோர்
மின்போற்றமிவர்தருள்செய்ததாலின்பமெல்லியலார
யென்போற்றவஞ்செய்ததாரருளாளரிபங்கிரிக்கே. (508)

இதுவுமது. இதன்பொருள் உரையிற்கொள்க. பகுதி—இரவிற்குறி. துறை - தளர்வகன்றுரைத்தல். (௩௨௬)

௪௧-வது ஆர்வமொழி முற்றும்.

௪௨-வது நெடுமொழியலங்காரம்.

212. இகல்புரிந்தொருவனிருநிலத்துந்தனை
நிகரிலையெனமேம்படுத்துதனெடுமொழி.

(எ-ன்) வைத்தமுறையானே நெடுமொழியென்னுமலங்கார முணர்—ற்று.

(இ-ள்) போரைவிரும்பினவொருவன் மண்ணினும் விண்ணினும் தனக்கு ஒருவர் நிகரில்லையெனத் தன்னைத் தான் உயர்த்திக்கூறுதல் நெடுமொழியென்னுமலங்காரமா மென்றவாறு.

புரிந்த வொருவன் என்னும் பெயரெச்சவாய்பாட்டீற்றகரம் செய்யுள் விகாரத்தாற் றொக்கது. தனக்கென்பது தனையென நான்காவது இரண்டாவதாய் மயங்கிற்று.

அரசர்மறவாகத்துதித்தபொன்னை
முரசதிரக்கொண்டிடமான்மோகூர்—வரையயலே
யானைமேல்வந்தாராம்பையரைவேட்டவரும்
வானையேசார்ந்தார்மடிந்து. (509)

இது நெடுமொழி. தூதாவென்னும் முன்னிலையெழுவா யெச்சம். திணை - காஞ்சி. துறை - மகட்பாற்காஞ்சி.

தானக்கரிமருப்புத்தாழ்வாரத்தூணிதுபார்
ஞானத்தவர்புகழ்மாறனைகைவரைக்—கானத்
துறவரெனுமெம்மிடத்தாமொண்ணுதற்காய்த்தூதா
மறவரிவணேறிவரும். (510)

இது திணை - உழிஞை. துறை - மகண்மறுத்துமொழிதல்.

இச்செய்யுளிரண்டினும் வரையயலே யெனவும், வரைக்கானத் தெனவும் பகர்ந்தமையால், "பாலை தானே குறிஞ்சியது புறனே" என்றாராகலின், பாலைநிலத்துமறவரெனக் கூறினர். மறவரென்பது மறக்குடியிலேபிறந்த சூத்திரர். "நிகர்த்துமேல் வந்த வேந்தனொடு முதுகுடி, மகட்பா டஞ்சிய மகட்பா லானும்" என்பதனா லறிக. பாலென்றதனான் முதுகுடிகளேயன்றி அனைநிலவகையெனப்பட்டார் கண்ணும் இத்துறைநிகழ்தல் கொள்க. (௧௨௭)

௪௨-வது நெடுமொழி முற்றும்.

௬௩-வது பரிவருத்தனையலங்காரம்.

———:(ஂ):———

213. உரியதோர்பொருள்கொடுத்தொருபொருள்கோடல்
பரிவருத்தனையெனப்பகர்ந்தனர்புலவர்.

(எ-ன்) வைத்தமுறையானே பரிவருத்தனையென்னு மலங்கார முணர்—ற்று.

(இ-ள்) யாதாயினுமொருபொருள் தன்னிடத் துரியதொரு பொருளினைப் பிறிதொருபொருட்குக்கொடுத்துத் தானும் அதனிடத் தோர்பொருளினைக்கோடல் பரிவருத்தனையென்னு மலங்காரமா மென்று கூறினர் அறிவுடையோ ரென்றவாறு.

நாவலவர்தம்பிரானுவீறன்றேமகிழ்த்தார்
காவலர்க்கும்வாசங்கலந்தளித்து—வாவிப்
பலமலர்வாசங்கவரும்பான்மைத்தேவிண்ணோர்
குலமுதல்வந்தேத்துகுருகூர். (511)

இது பரிவருத்தனை. இதனுள், காவலர்க்கும் என்னும் உம்மை எச்சமாதலால் வாவியின்கண்ணுள்ள மலர்க்கும் அளித்தமை யுணர்க. வாவிப்பலமலர்வாசமும் என்னும் உம்மை செய்யுள்விகாரத்தாற் றொக்கமையாற் காவிற்பலமலர்வாசமுங் கவருமெனக்கூட்டி விரிக்க. கலத்தல்- பாலும் நீரும்போலக் கலத்தல். அளித்தல் - புரத்தல். கவர்தல் - கொள்ளுதல். விண்ணோர்குல முதல் - தேவர்கூட்டமும் இந்திரனும். விண்ணோர்குலமுதல்வந்தேத்து குருகூர்நாவீறன்வகுளமாலிகை தனது வாசம்புரந்து அவற்றின்வாசங் கவரும்பான்மைத் தெனக் கூட்டுக.

பண்டாழியிற்றுயின்மாலிமையோரைப்பருவரல்சென்
றண்டாது தன்கைப்பகழியொன்றேகொடுத்தன்புபுறங்
கண்டார்நிருதர்திறந்திறந்தாவிகணக்கிறந்த
கொண்டானிருதர்குலாந்தகனும்பெயர்கொள்வதற்கே. (512)

இதுவும் பரிவருத்தனை. ஆழியிற்றுயின்மால் - திருப்பாற்கடல் நாதன். அண்டாது - அணுகாது. நிருதர் - மூலபெலப்படை. ஒழிந்த அகலம் உரையிற்கொள்க. இதன் வேறுபாடுங் காண்க. துறை - வில்வென்றி.

பொன்மாளிகையினில்வெண்பொற்குடங்களானிரவி
தன்மாண்படிவந்தமிபுரந்து—நன்மாமைத்
தாமாயிரம்படிவம்வாங்குந்தகைத்தலாாள்
கோமான்விளங்குகுருகூர். (513)

இதுவுமது. இதனுள், வெண்பொற்குடங்களான் என்னும் ஆனுருபு குடங்கடோறுமென்றுயிற்று; என்னை? "தகுதி யெனவொன்று நன்றே பகுதியாற், பாற்பட் டொழுகப் பெறின்" என்னுங் குறட்பாவா னறிக. அன்றியும், வழக்கினுள்ளும் ஊரானோர்தேவகுலம், வீட்டாற் குறுணி எனவும் ஆனுருபு இயல்பினுந் திரிபினும் தொறுவின்பொருட் டாய்வழங்குவ தறிக. (௧௨௮)

௬௩-வது பரிவருத்தனை முற்றும்.

௬௪-வது காரணமாலையலங்காரம்.

—:o:—

214. காரணந்தொடர்புறிற்காரணமாலை.

(எ-ன்) வைத்தமுறையானே காரணமாலையாமா றுணர்—ற்று.

இதன்பொருள் உரையிற்கொள்க.

நன்மாணிடப்பிறவிநல்லறிவிற்கேதுவது
சொன்மாண்பொருளைத்துணிவுறாஉந்—தன்மை
வருவதற்கேயேதுவதுமாசறுமந்தாமந்
தருவதற்கேயேதுவெனுந்தான். (514)

இதனுள், எனுமென்பது என்று உலகங்கூறுமென்பதாம். தான் அசை. நல்லறிவு - உண்மைஞானம். சொன்மாண்பொருள் - சுருதி கூறும் பெருமையையுடைய ஸ்ரீமந்நாராயணன். மாசறுமந்தாமம்—பரம பதம். திணை—வாகை. துறை — பொருளொடுபுணர்தல்; அருளொடு நீங்கலுமாம். (௧௨௯)

௬௪-வது காரணமாலை முற்றும்.

சரு-வது காரியமாலையலங்காரம்.

215. காரியந்தொடர்தலுங்காரியமாலை.

(எ-ன்) வைத்தமுறையானே காரியமாலை யுணர்—ற்று.

இதன்பொருள் சூத்திரத்தானே விளங்கும்.

பார்புனலின்காரியநீர்பாவகன்றன்காரியந்தீக்
கூர்பவனன்காரியங்கால்கொம்பனையாய்—பேர்விசும்பின்
காரியமாமேனையவுங்காரணமாயோனருளா
லாரியங்கூறுந்தொடர்பிற்றும். (515)

இது காரியமாலை. இதனுள், ஏனையவு மென்பன அஃறிணைப் பன்மைவாக்கியமாதலாற் பூதாதி மகான் மூலப்பிரகிருதிகளாம். திணை-இதுவுமது. துறையும் அது ; பொருளொடுபுணர்தலுள்ளும் இவை யிரண்டும் அறத்திற்கேற்ற மெய்ப்பொருளொடுபுணர்தலாம் ஆரியம்—சுருதி மிருதி புராணங்களாம். (கரு0)

சரு-வது காரியமாலை முற்றும்.

சகூ-வது ஏகாவளியலங்காரம்.

216. ஒருபொருண்முதல்வைத்ததற்குயர்பினையே
தருபொருண்மேல்வைத்ததனொடும்பலசால்
பேற்புடைத்தொடர்பித்திசைப்பதேகாவளி.

(எ-ன்) வைத்தமுறையானே ஏகாவளியென்னு மலங்கார முணர்—ற்று.

(இ-ள்) ஒரு முக்கியப்பொருளை முதல்வைத் ததற்கு உயர்பினையே தருவதாகப் பிறிதொருகூட்டத்தினுள் ஒரு முக்கியப்பொருளை யதன் மேல்வைத்து அப்படிப் பலசால்பின் முக்கியப்பொருள்களை யொன்றோ டொன் றேற்புடையனவாகத் தொடர்பித்து முக்கியப்பொருள்பயக்கு முற்றுகவுரைப்பது ஏகாவளியாம் என்றவாறு.

ஏகாவளியென்பது பலவளையத்தை யொன்றுக்கப்பட்ட சங்கிலி போலத் தொடர்தலின் அப்பெயர்த்தாயிற்று.

அவையாதல்சான்றோருண்டாயதேசான்றோர்
நவையறுநன்னூலுணர்ந்தோர்நன்னூ—லெவையுமா
மொன்றுமதனையுணர்த்தலதுவுந்திருவைக்
குன்றுதேகூடியதாகும். (516)

இது ஏகாவளி. திருவைக் குறையறக்கூடியது ஸ்ரீமந்நாராயண ணாகிய பரப்பிரமம். ஒழிந்த அகலம் உரையிற்கொள்க. திணையும் துறையும் இதுவுமது. (௫௧௬)

௪௬-வது ஏகாவளி முற்றும்.

௪௭-வது பிரதீபவலங்காரம்.

217. உவமையைமதியாதுவமேயந்தனைத்
திவ்வியமெனமதிப்பதுபிரதீபம்.

(எ-ன்) வைத்தமுறையானே பிரதீபமென்னு மலங்கார முணர்—ற்று.

(இ-ள்) உலகத் தியாதாயினும் சுடர்மயமாம் ஒருமுக்கியப் பொருட்கு ஒப்புடையனவாம்பொருளாலெய்துங்காரியத்தை யம்முக்கியப் பொருளான் மிகவுமெய்தப்பெற்றதா யதனைமதித்து நல்லதென வுரைப்பது பிரதீபமென்னு மலங்காரமாம் என்றவாறு. திவ்வியம் - நல்லது.

வேலாவலயம்விளக்கியகவிருளைத்
தோலாதுடற்றுஞ்சுடர்மயமாங்—கோலா
கலத்தமிழ்வேதச்செங்கதிருதிப்பவும்பர்
தலக்கதிரென்வேண்டுமினித்தான். (517)

இது பிரதீபம். இதனுள், வேலாவலயம் என்பது பூமி. அக விருள் - அறியாமை. தோலாது - தோற்பணசெய்யாது. உடற்றும் - களையாநிற்கும். கோலாகலம் - அழகு. தமிழ்வேதச்செங்கதிர் - திருவாய்மொழியைப் பாடித்தந்த காரிமாறப்பிரான். தமிழ்வேதமாகிய கதிரென்றது செங்கதிரென்றதனால், தமிழ்வேதமாகிய வோராயிரக்

கதிரைப்பரப்பின காரிமாறப்பிரானாகிய செங்கதிரோன் என்கூ மாட்டே றில்லாவுருவகவாய்பாட்டான்வந்த பிரதீபமானது காண்க. புறவிருளன்றி அகவிருளையும் தோலாதுடற்றும் என்றதனான் முக்கியமான சுடர் மயத்தை மிகுத்ததூஉங் காண்க. உம்பர்தலக்கதிர் - ஆதித்தன். என்வேண்டுமினி என்பதனை இனி என்வேண்டுமெனப் பாடமாற்றி மே லென்னகாரியத்திற்குவேண்டுமெனக் கூட்டுக. தான் அசை. துறை கடவுள்வாழ்த்து. (௧௩௨)

ஈஎ-வது பிரதீபம் முற்றும்.

ஈ௮-வது பிறவணியலங்காரம்.

218. பொன்னினுமணியினும்புனையணியிகழ்தரு
தன்மையிற்பிறவணிசாற்றுதல்பிறவணி.

(எ-ன்) வைத்தமுறையானே பிறவணியென்னு மலங்கார முணர்—ற்று.

(இ-ள்) ஒருவர்க்குப் பொன்னினலாதல் மணியினலாதல் பொற் கொல்லராற் கைபுனையப்பட்டழகுகொடுக்கும் ஆபரணங்களையும் இகழ்ந் திடுந்தன்மைத்தாக அவர்க்கு அழகுகொடுப்பதான பிறவணிகள் புலவ ராற்கூறப்படுவது பிறவணியென்னு மலங்காரமா மென்றவாறு.

கைக்கணியொன்றீகைகருத்திற்கணிஞான
மெய்ச்செவிகட்கேற்றவணிமேதகுநூ—லுய்த்தறிதல்
சென்னிக்கணிமாறன்சேவடிமேற்கொண்டிறைஞ்சல்
என்னுக்கணிவேறினி. (518)

இது பிறவணி.

(இ-ள்) யாவராயினும் ஒருவர்க்குக் கணியாவது அத்தகடகமும் ஆழியுமன்று; இல்லெனவிரந்தோர்க் கொன்றீவதேயணி. மனத்திற்கணி யாவது மகளிர்தனத்திற் செவ்வியைக் கண்காட்டக்கண்டு உட்கொள்வ

தோடும் அவரால்வருஞ் சிற்றின்பத்தைத் தவிர்த்துப் பொசிப்பனபொசித்தின்புறுதலன்று; இப்பொருள் நிலையாதது, இப்பொருள் நிலையிற்று என்றுணர்வதோடும் இது ஆன்மா, இது பிரமமென்றுணர்ந்து அப்பிரமமாகிய ஸ்ரீமந்நாராயணன்சொரூபரூபகுணங்களைத் தெரிசித்துக்குழையும் உண்மைஞானம். மெய்ச்செவிக்கணியாவது குண்டலமுதலிய மெய்யணியோடும் பொய்ப்பனுவன்மார்க்கம் உட்கொண்டுகுழைவதன்று, மெய்ப்பனுவல்கூறுந் தத்துவத்திரயங்களை யுட்கொண்டுமகிழ்வதாம். சென்னிக்கணி மயிர்முடியும் மணிமகுடமும் பூமாலையும் முதலியனவன்று; காரிமாறப்பிரான்றிருவடிகளாகிய அரவிந்தத்தைத் தாங்கிவணங்குவதாம். ஆதலால் வேறுபாரணம்வேண்டுமோ என்றவாறு. திணை - வாகை. துறை - பொருளொடுபுணர்தல். (கரு௫)

௪௪-வது பிறவணி முற்றும்.

௪௫-வது முன்னவிலக்கலங்காரம்.

219. மன்னியகுறிப்பின்மாற்றுதருனே
முன்னவிலக்கெனமொழிந்தனர்புலவர்.

(எ-ன்) வைத்தமுறையானே முன்னவிலக்கென்னுமலங்காரமுணர்—ற்று.

(இ-ள்) மனத்தின்கண் நிலைபெற்ற குறிப்பினனேவிலக்குவது முன்னவிலக்கென்னுமலங்காரமாமென்றுகூறினர் அறிவுடையோரென்றவாறு. குறிப்பினன்மாற்றுதருனென்னுது தேற்றேகாரம்புணர்த்தமையாற் கூற்றினுஞ்மாற்றினும் அவ்வலங்காரமாமெனினும் குறிப்பினன் மாற்றுதலே பொருட்பொலிவுஞ் செய்யுட்சிறப்பு மென்பதுநோக்கிப் புணர்த்தார்; ஏனையது அத்தன்மைய தன்மையின் இலேசினுனுடம்பட்டாரென்றவாறு.

அவை காலம் மூன்றினேடுங்கூட்ட அறுவகைப்படும். அவை முன்னர்க்காட்டுதும். முன்னம் - குறிப்பு. அதனுல்விலக்குதலின் ஈறுகெட்ட வாய்பாட்டாற்கூறினர். விலக்குதல் - மாற்றுதல். (கரு௬)

220. அதுவே,
இறப்பெதிர்நிகழ்வென்றேத்தியகாலம்
பெறப்பொருள்புலப்படும்பெற்றித்தாகும்.

(எ-ன்) அங்ஙனங் குறிப்பினுங் கூற்றினும்வரும் முன்னவிலக்குக் காலமூன்றுடன்கூட்ட அறுவகைப்படுமென்றூர், அக்காலமூன்றின் பெயரும் முறையும் உணர்—ற்று.

(இ-ள்) அச்சொல்லப்பட்ட முன்னவிலக்கு இறப் பெதிர் நிகழ் வென் றுலகங்கொண்டாடப்பட்ட காலமூன்றும்பெற்றுப் பொருடோன்று மிலக்கணத்தையுடைத்தாம் என்றவாறு.

இதனுள் நிகழ்வென்றேத்தியகால மென்றதனுல் நிகழ்காலமின் றென்பார்குறிப்பைநீக்கி உண்டென்பார்குறிப்பே யிந்நூலுடையாரும் உடன்பட்டாரென்பதாம்.

வண்டுலவுந்தண்டுளபமாயோனேயனைத்துயிர்க்கும்வசதியாய
வண்டாண்டபகிரண்டமகத்தடக்கூழுழுமுதனீயாயிற்றென்றூற்
பண்டுலகமனைத்தையுமோராயிலையிற்றுவிடந்தளர்ந்தபாண்மைபல்லா
துண்டுமிழ்ந்தபடியயல்கண்டிருந்தவாரெவணிருந்தன்றுண்டவாறே ()

இஃ திறந்தவினைவிலக்கு. துறை - கடவுள்வாழ்த்து. (குருகா மான்மியம்.)

போவனிறைவன்பொருட்கெனவேபோமிவடன்
னுவிதனைமீட்டருள்வசனங் —காவலனே
நற்றுளபத்தார்மாயனுகையின்முன்கற்றறியப்
பெற்றுளதுண்டாமேற்பிரி. (520)

இஃதெதிர்வினைவிலக்கு. வன்பொருள்-கல்விப்பொருள். வசனம்-மந்திரம். இறை - தலைவன். இவளென்பது இடமயக்கம். கற்றறியப் பெற்றுளதுண்டாமேல் என்பதனுல் வன்பொருள் கல்விப்பொருளாயிற்று. பகுதி - ஓதற்பிரிதல். துறை - செலவழுங்குவித்தல்.

பூம்புனல்வாயாமொழுகப்பொற்புயமுன்பானணைத்த
தாம்புனைமெய்த்தெய்வதமுன்பாயிருக்கப்—பாம்பணைசேர்

மெய்யமால்வெற்பில்விரைந்து பலிக்கெய்தணங்குன்
பொய்யையார்மூன்புரைப்பேன்போய். (521)

இது நிகழ்வினைவிலக்கு. இதனுள் யாமென்பது தோழி தன்னையுந் தலைவியையுங்கூட்டி யுளப்பாட்டுத்தன்மையாற்கூறியது. பொற்புயமுன்பானணைத்ததாம் புணைமெய்த்தெய்வதமென்பது உருவகவுருவகவாய்பாடுவிரவினதாம். எய்துமென்பது எய்தென்றாயிற்று. மெய்த்தெய்வதம் எனவே பலிக்கெய்தியது பொய்த்தெய்வமாயிற்று. அணங்கென்பது அண்மைவிளி. திணை - பெருந்திணை. துறை - வெறிவிலக்கல். (௩௫)

221. கூர்பொருள்காரணங்காரியங்குணமெனு
மீரிரண்டினும்புணரியற்கையதாகும்.

(எ-ன்) இஃ தவ்வலங்காரத்தின்கூறுபா டுணர்—ற்று.

(இ-ள்) மிகுந்த பொருள்விலக்கும், காரணவிலக்கும், காரியவிலக்கும், குணவிலக்குமென்னும் நான்குவகையானுங் கூடிவரும் இயல்பினையுடைத் தங்ஙனங் காலமூன்றினோடும்பொருந்திவரும் முன்னவிலக்கென்றவாறு.

வெங்கோபமால்யானைவிண்பகவேமூலமெனப்
பொங்கோதையையுணர்ந்ததத் துவளும்புத்தேளிர்
தங்கோனைத் துருவுந்தாளுனைசாரூப
வெங்கோனவனல்லால்யாரோவிறைநிலையே. (522)

இது பொருள்விலக்கு; (குருகாமான்மியம்.) துறை - கடவுள் வாழ்த்து.

படைக்கின்றசெழுங்கமலத்தயன்றன்வாழ்நாள்
பற்றுவிடப்பகிரண்டபதவிமாந்தி
யுடைக்கின்றபெரும்புனலினகத்தாயாக்கை
யொருங்கிழந்தேயலகிறந்தவுயிர்கள்யாவும்
புடைக்கின்றபொழுதினகப்படுத்திநாவிப்
புடைக்கனறுற்றுவகையிற்புறத்தேமீட்டு
மடைக்கின்றநினதுபெருங்கருணைக்கெந்தா
யவையளித்தகைம்மாறென்றறிகிலேனே. (523)

இது காரணவிலக்கு. இதனுள், வாழ்நாள் - பிரமகற்பம். பற்றுவிட - கூட. நாபிப்புடைக்கனல் - உதராக்கினி. ஆற்றுவகையின்- உண்ணுதகூறுபாட்டிற்கு. புறத்தே மீட்டு மடைக்கின்றது - திருவுதரத்தைவிட்டுப் புறத்தே ஆண்மகோடிகளை வினைவழியடைத்தல். ஒழிந்த அகலம் உரையிற்கொள்க. துறை-கடவுள்வாழ்த்து. (குருகாமான்மியம்).

போர்செய்யுமுல்லைப்புதுமலர்ச்சிகேள்குறித்த
கார்செய்ததன்றேகயற்கண்ணா—யேர்வகுளத்
தோடுறுந்தார்மாறன்குருகூரிமலைச்சந்தனப்பூங்
கோடுழுங்கார்செய்தகுறி. (524)

இது காரியவிலக்கு. கார்செய்ததன்று - கார் பருவமுற்றிச் சுபாவத்தாலேபெய்த மழைத்துளியாங்காரியமல்ல; வினைவெய்தாமுன் கொம்புகளுழுதலாற்பெய்த மழைத்துளியின்முல்லைமலர்ந்தது.

(இ-ள்) கயல்போன்ற கண்ணினையுடையாய்! நின்னறிவோடும் பூசலைச்செய்யாநின்ற முல்லையரும்பு புதிதாகமலர்ந்தமலர்ச்சி நினது தலைவர் குறித்த பருவக்கொண்மூப் பெய்துசெய்தகாரியமல்ல; அழகிய வகுளமாலிகையையுடைய காரிமாறப்பிரானது குருகூரிமலையிடத்துச் சந்தனக்கொம்பாலுழுப்பட்ட பருவமல்லாக்கார்பெய்துசெய்த காரியக்குறியாமென்றவாறு. ஆகையால் நின்வருத்தந்தணிவாயாகவென்பது பயன். பகுதி - வரைபொருட்பிரிதல். துறை - பருவமறைத்தல்.

அங்கண்மாஞாலத்தமைந்தவணுவுடம்பாய்த்
தங்குமணுவாந்தாத்தானைச்—செங்குன்றூர்ச்
சிற்றுயனைநெடுமாலென்றெவனோவெண்ணிதினால்
கற்றார்மொழியுங்கடன். (525)

இது குணவிலக்கு. அணு - உயிர். உடம்பாய் - (அணுமயமாகிய வுயிர்கள்) உடம்பாய். தங்குதல் - அதனகத்தந்தரியாமியாயிருத்தல். உரனெடும்நூல்கற்றாரென்க. துறை - கடவுள்வாழ்த்து.

ஆடலமைந்துளராமாறுளுமம்புடன்கைக்
கோடலமைவிற்குழைதழையே—நேடல்
சினவுவாவென்றேதிருவரங்கர்வெற்பில்
வினவுவார்வேட்டையுமெய்ம்மெய். (526)

என்பது காரணகாரியவிலக்கு; என்னை? வேட்டைகாரணமாகவந்தே னென்பதும், யானையையெய்தேன் எய்தவாளியோடும்போந்ததென்னுங் காரியமும் குறிப்பினால்விலக்கினமையாற் காரணகாரியவிலக்காயிற்று. ஆடலமைந்துள்ளார் என்பது மனவலியுங் காயவலியுமுடையாரென்பதாம்; அன்றி வென்றிநிறைந்துளாராமெனினு மாம். அமைவில்—மூங்கிலாற் கைக்கொள்ளுதலமைவில். குழைதழை - குழையுந்தழை. நேடல்—தேடல். சினவுவா - சினத்தைப்பெருக்குமியானை. மெய்ம்மெய் என்பது இகழ்ச்சிக்குறிப்பில்வந்த எதிர்மறையடுக்கு. பகுதி - இருவருமுளவழி யவன்வரவுணர்தல். துறை—அறிவுநாடல்; நகைத்துறையுமாம். (கரு௬)

222. கடுஞ்சொலாசிதலைமையிகழ்ச்சி
யுடன்படன்முயற்சிதுணைசெயலுபாய
மையம்பரவசம்வெகுளியிரங்கல்
கையறலுடன்விரிகாட்சியுமுளவே.

(எ-ன்) இதுவும் அதனையே விரித்துணர்—ற்று.

(இ-ள்) கடுஞ்சொன்முதலாகக் கையறவிறுதியாகக்கூறிய பதின்மூன்றேடும் விரிந்துவருந்தோற்றமுடைத்து அம் முன்ன விலக்கு என்றவாறு. (கரு௭)

223. அவற்றுள்,
கடுஞ்சொலின்விலக்குதல்கடுஞ்சொல்விலக்கே

(எ-ன்) இச் சொல்லப்பட்ட பதின்மூன்றினு ளொன்றற்குக் காரணப்பெய ருணர்—ற்று.

(இ-ள்) அச் சொல்லப்பட்டபதின்மூன்றனுள் வன்சொற் சொல்லி விலக்குதல் கடுஞ்சொல்விலக்காம் என்றவாறு. (கரு௮)

224. ஒழிந்தவுந்தம்பெயருரையிற்கொள்ளும்.

(எ-ன்) ஒழிந்த பன்னிரண்டிற்குங் காரணப்பெயர் தொகுத்துணர்—ற்று.

இதன்பொருள் உரையிற்கொள்க.

ஊன்சுவைக்கொண்டொன்றனுயிர்க்கிடுக்கண்செய்தூழல்வீர்
தேன்சுவைக்கொள்பூந்துளபச்செங்கண்மால் — வான்சுவைமேல்
வைக்கும்புலனுடையோர்மன்னுக்கொடுநரகத்
துய்க்குங்கொடுங்கூற்றென்றுண்டு. (527)

இது கடுஞ்சொல்விலக்கு. இதனுள் ஒன்றனுயிர்க் கிடுக்கண் செய்தல் - உயிரைக் கூட்டைவிட்டுப்பிரித்து அதனூனை யுண்டல். ஒழிந்த அகலம் உரையிற்கொள்க. திணை—பாடாண். துறை—வாயுறை வாழ்த்து.

மண்டாரமுற்கான்மழைதழைகவான்பொருள்வாழ்
வுண்டாகநீகுறித்ததொட்பென்று—லண்டர்
மருந்தேபெறப்புரந்தமால்கடித்தானத்தா
ளிருந்தேதிறந்தேதிதற்கு. (528)

இது வாழ்த்துவிலக்கு. ஆசியெனினும் ஒக்கும். மண்டாரமழல்—கொழுந்துவிட்டெரியுமழல். குறித்தது - பொருட்பிரிவு ; இஃதாகுபெயர். இருந்தேதிறந்தேதென்பது இருந்ததனால்வரும் பயனேது இறந்ததனாலுள்ள தாழ்வேதுனக்கென்பதாம். பகுதி-பொருட்பிரிதல். துறை - செலவழுங்குவித்தல்.

உரவுநீர்ஞாலமுணர்ந்தநிலையாமை
கரவிலாநூன்முகத்தாற்கற்று—மரவின்
பிடர்மேற்குனித்தருண்மால்போகத்தாய்கற்கப்
படர்மேற்படர்மேற்படும். (529)

இது தலைமைவிலக்கு. உரவுநீர்ஞாலம்—போக்குவரவுசெய்யு நீரையுடைய கடல்சூழ்ந்த ஞாலம். ஈண்டு ஞாலமென்பது உயர்ந்தோர். கரவிலாநூல் - உண்மைநூல். கற்கப்படர் - ஓதப்பிரிவாயாக. மேற்படர்மேற்படும் - நீ பிரிந்தபின்னர் இவளிடத்துத் துன்பம் பெருக்குமென்றவாறு. நிலையாமை—யாக்கையும், இளமையும், செல்வமும். பகுதி - ஓதற்பிரிதல் துறை - இதுவுமது.

என்னுயிர்க்குமென்னுயிரோடொன்றாகியவிறைவா
வுன்னுயிர்க்குமன்புற்றுரைப்பேன்சொன் — மின்னுயிர்க்குஞ்
சேட்டாழிமால்பிருதிச்செம்பொருளேபொன்னெனநீ
வேட்டாற்செவிக்கினிதாமே. (530)

இஃ திகழ்ச்சிவிலக்கு. என்னுயிரென்றது தலைவியை. உன்னுயிரென்றதுந் தலைவிதன்னை. செம்பொருள் - உண்மைப்பொருளாகிய திருமால். பொன்னென-செல்வப்பொருளென்றுட்கொண்டு. வேட்டால்-நீ விரும்பினுல். செவிக்கினிதாமே - பிரிவது முறையன்றென யான் கூறுவது நின்செவிக் கினிமையாய்விரும்புங்கூற்றாகா தென்றவாறு. மின்னுயிர்க்கும் - ஒளியைத்தோற்றுவிக்கும். சேடு - பெருமை. ஆழி-சக்கரம்; அது சேட்டாழியென ஒற்றுமிகுந்தது. ஏகாரம் எதிர்மறை. துறை - இதுவுமது.

சுத்தப்பொருட்கேகத்தோகையுநேர்ந்தாள்விசும்பிற்
புத்தப்புதுமதியம்பூணித்தான்—மூத்தி
வழிக்கிலக்காமாயோன்வடமதுரைவாழ்பெண்
பழிக்கிலக்கார்மன்னுபகர். (531)

இஃ துடன்படல்விலக்கு. இதனுள், புத்தப்புதுமதியம் என்றது பண்டுகாணுத அழலைப்பரப்பும் மதி. பூணித்தல்-தோற்றுதல். முத்தி வழிக்கிலக்காமாயோன் என்பது அரி அயன் அரன் என்னு மூவருள் வீட்டின்பந்தருநெறிக்கு எதிர்நிற்கும் ஸ்ரீமந் நாராயணன் என்பதாம். பெண்பழிக்கிலக்கார் என்பது நீ பிரிந்தால் இவளிறப்பது உண்மையென்றால் இப்பெண்பழிக் கேதுவாவார் யாவரென்றவாறு. பகுதியுந் துறையும் இதுவுமது.

முத்திரைக்கைம்மாறன்மொழிந்ததமிழ்வேதப்
புத்தமிர்தையுண்டின்புறுவேனைப்—பத்தர்காள்
வேறுதமிழ்கேட்பிப்பான்வேட்குமனங்கேட்கிலதைச்
சீறுமெனதின்பச்செவி. (532)

இது முயற்சிவிலக்கு. இதனுள், தமிழ்வேதமென்பது வடமொழியாகிய சுருதியென்னும் முதனூலின்வழிவந்த திருவாய்மொழி; எனவே ஆன்மலாபமாகிய முத்தியைத்தருவது திருவாய்மொழியல்லதில்லையாதலாற் பத்தர்காள்! வேறுதமிழ் கேட்பீரல்லவென்று அவர் முயற்சியைவிலக்குதல் பயன். திணை - பாடாண்சார்ந்தபுறத்திணை. துறை - பனுவல்வாழ்த்து.

வெறுக்கைக்கிறப்பதுவேவேட்டாய்மின்மின்னார்
வெறுக்கைக்கிறப்பதுவேமெய்யா—லொறுக்கைப்

படையாழியான்பார்த்தன்பள்ளியிற்புட்கூறு
திடையாமத்தேர்கடாயேகு. (533)

இது துணைசெயல்விலக்கு. இதனுள், வெறுக்கையென்றது பொன். இறப்பது - பிரிதல். வெறுக்கைக்கிறப்பது - அயலாரேசுகை கேட்டுயிர்விடுதல். பகுதி - பொருட்பிரிதல். துறை - செலவழுங் குவித்தல். துணைசெயல்விலக்காவது அப்பிரிவிற் குடன்பட்ட துணையார் போலக்கூறி விலக்குவது.

பூண்டநிதிக்கேகப்பொருந்தினையேற்செய்த்தாகு
மாண்டகைநின்பூந்தாரகன்மார்பங்—காண்டகைக்குக்
கஞ்சனைமுன்வென்றமால்*கார்வானமெல்லியல்கட்
கஞ்சனமொன்றுண்டேலருள். (534)

இஃதுபாயவிலக்கு. உபாயவிலக்காவது விலக்குவதனை ஒருபாயங் கூறி விலக்குவது. பூண்டநிதி-மனத்தாற்பற்றப்பட்டபொருள். ஒழிந்த அகலம் உரையிற் கொள்க. துறை - இதுவுமது.

ஐயவிலக்கென்பது ஐயுற்றதனை விலக்குவது:—

கண்ணாகவன்றிக்கயலாகவென்றுகவர்த்
தெண்ணாதவெண்ணியினைமனனே—விண்ணாடெண்
பொற்புடைமால்பாடகத்துப்பூவைமார்மையெழுதுங்
கற்பனையுமுண்டோகயற்கு. (535)

இஃதையவிலக்கு. இதனுள், கண்ணாக கயலாக வென்பது கண்ணாகவேண்டும், கயலாகவேண்டும் என்பனவாம். உண்டோவென்னு மோகாரம் ஒழியிசை. விண்ணாடு - ஆகுபெயர். இது நிச்சயாந்த மென்னுஞ் சந்தயவலங்காரம் முன்னவிலக்கினுள் விரவியதென்றுணர்க. பகுதி - இயற்கை. துறை - தெரிந்துதெளிதல்.

பரவசவிலக்கென்பது தன்வசமல்லாமைகூறிவிலக்குவது:—

ஈண்டுன்குறிப்பிஃதேயென்றற்பொருளொடுமுன்
மாண்டுய்ந்தவள்போன்மருணீங்கி—மீண்டு
வருநாளின்றேவெனுமான்மையலைத்தீர்த்தாழிப்
பொருணாவாய்மன்னவனேபோ. (536)

---

* கார்வானம் - தொண்டைநாட்டுத்திருப்பதியுளொன்று.

என்பது பரவசவிலக்கு. இதனுள், மாண்டுய்ந்தவள்போன்மருணீங்கி என்பது நின்பொருட்பிரிவை நீ குறிப்பாலுணர்த்த அப் பிரிவையுள்ளி யிறந்துபிழைத்தவள்போல மருண்டனளாய் நீதேற்றத் தெருண்டனளா யென்றவாறு. மீண்டுவருநாளின்றே என்பது பொருள்செயன்முற்றி மீண்டுவருநாள் இன்றே என்றவாறு. மையலைத்தீர்த்தென்பது மையலைத்தீர்ப்பது என்வசமன்று உன்வசமென்றவாறு. பகுதி—பொருட் பிரிவு. துறை - செலவழுங்குவித்தல்.

வெகுளிவிலக்கென்பது வெகுளிதோன்றக்கூறி விலக்குவது:—

கோட்டானைமுன்னம்பகர்மாயன்கண்ணங்குடியினிற்பைந்
தோட்டாற்புனைமென்சுரிகுழலாள்சமர்தோட்டிமதன்
பூட்டாடல்வாளிதனக்கிலக்காகப்புவிபுரத்தல்
வேட்டாய்புரவலநின்போற்றறுகண்ணர்வேறில்லையே. (537)

இது வெகுளிவிலக்கு. இதனுள், தோட்டாற்புனைமென்சுரிகுழ லாள் சமர் தோட்டிமதன் பூட்டாடல்வாளிதனக் கிலக்காகச் செய்த்தாய நாடுசென்று காக்கவிரும்பின புரவலனே! நின்னைப்போற் றறுகண்ண ரில்லையென்பதனால் வெகுளிவிலக்காயிற்று. பகுதி—நாடுகாக்கப்பிரிதல். துறை - இதுவுமது.

இரங்கல்விலக்கென்பது இரங்கல்தோன்றக்கூறி விலக்கல்:—

பொன்னைவிரும்புப்புரவலனேமெய்யடியா
ருன்னவருள்புரிமாலூரகத்து—மின்னிறந்தா
லெம்மனையெங்கென்றகிளிக்கென்னேமற்றேனையன
தம்மனையைக்காட்டியெவன்றான். (538)

என்பது இரங்கல்விலக்கு.

(இ-ள்) இவளைவெறுத்துப் பொருளைவிரும்புங் காவலனே! பிரிந்தகாலத் திவ ளிறப்ப தொருதலையென்றால் எம்முடைய அன்னை எவ்விடத்தாளென்று என்னொடுவினவு கிளிக்கு யான் வேற்றுக்கிளிகளை வளர்த்த அயலாகிய தாய்மாரை அதற்குக்காட்டியதனால் அதற் குண்டாம்பயன் யாதென்றவாறு. என்னேயென்பது இரக்கம். பகுதி— பொருட்பிரிவு. துறை - இதுவுமது.

கையறல்விலக்கென்பது வேண்டியபொருண்மேன்முயலும் ஒழுக்க மின்மைதோன்றக்கூறி விலக்கல்:—

சீதரன்பொற்றாளிணையைச்சிந்தித் துரைத்திறைஞ்சா
ராதரித்தமெய்யடியார்க்கன்புறார்—பாதகர்தாங்
தீதுசெயுஞ்சண்டதரன்சென்றணுகும்போதிலதற்
கேதுசெய்வாரென்றறியேனே. (539)

இது கையறல்விலக்கு. ஏதுசெய்வாரென்றது அவன்செய்யும் இயமதண்டத்தையனுபவிப்பதல்லால் ஒருசெயலுமில்லை யென்பதாம். திணை - பாடாண். துறை - வாயுறைவாழ்த்து.

ஆகப் பதின்மூன்று மடைவேவந்தவாறு காண்க. (௧௨ ௩)

225. வேற்றுப்பொருள்வைப்பேதுவென் றின்னவை
மேற்றொடர்ந்தியலும்விதியுமிதற்குள.

(எ-ன்) இதுவும் அவ்வலங்காரம் மேற்கூறிய அலங்காரங்களுடன் விரவிவருமென்ப துணர்—ற்று.

(இ-ள்) வேற்றுப்பொருள்வைப்பும் ஏதுவும் என்றுசொல்லப் பட்ட அவற்றினிடத்துங் கூடிவரும்விதியும் முன்னவிலக்கென் னுமிதற் குளவா மென்றவாறு.

எண்ணிறந்தபல்லாயிரகோடியண்டத்து
மெண்ணிறந்தபல்லாயிரமென்னக்—கண்ணகன்று
மாழியானெய்தாவனுவுண்டேனுண்டுபடைப்
பூழியான்செய்யாவுரு. (540)

இது வேற்றுப்பொருள்வைப்புமுன்னவிலக்கு. இதனுள், கண் ணகன்றும் என்பது கண்ணகன்றாலும் என்பதாம். படைப்பூழியான்- படைக்குந்தொழிலாகிய முறைமையையுடையான்; எனவே பிரமனென்ப தாயிற்று. ஒழிந்தனவுந் தாமேவிளங்கும். துறை—கடவுள்வாழ்த்து.

மாதாவினன்முலைப்பான்மாந்தாததான்மறைநான்
கோதாதுணர்ந்துணர்த்துமுண்மையாற்—றாதாக்க
ளுள்ளுவதெனுருயிரொன்றொண்டமிழ்மாறுபரனென்
றுள்ளுவதேயுண்மையுனை. (541)

இஃதேதுவிலக்கு. தாதாக்கள் - பெரியோர்கள். உன்னைப் பரனென்றுள்ளுவதே யுண்மையெனக் கூட்டுக. ஒண்டமிழ் — ஒள்ளிய தமிழ்; அது திருவாய்மொழி. பரன் - ஸ்ரீமந்நாராயணன், மாந்தாதி

தாலும், உண்மையாலும் என்னும் மூன்றுருவதனீற்றும்மை செய்யுள் விகாரத்தாற் றொக்கது. ஒண்மையாலென்றும் பாடமோதி ஒள்ளிய ஞானத்தாலும் என்க. திணை - வாகை. துறை - தாபதவாகை.

இன்னவையெண்பதனுற் பிற அலங்காரங்களுடன் கூடிவருவனவும் உள. அவையும் வந்தவழிக் கண்டுகொள்க. (௧௪0)

சகூ-வது முன்னவிலக்கு முற்றும்.

௫0-வது அபநுதியலங்காரம்.

226. குன்றலில்சிறப்பினும்பொருளினுங்குணத்தினு
மொன்றியவுண்மைமறுத்தூமற்றொன்று
யொருபுகழ்தோன்றவுரைப்பதபநுதி.

(எ-ன்) வைத்தமுறையானே யபநுதியென்னு மலங்கார முணர்—ற்று.

(இ-ள்) குறையாத சிறப்பினதும் பொருளினதுங் குணத்தினது மாகவொருபொருட்கொன்றிய வுண்மையை மறுத்து அவற்றிற்கெதிராய மற்றொன்றுய்ப் பொருட்குயர்புதோன்றவுரைப்பது அபநுதியென்னு மலங்காரமாம் என்றவாறு.

மெய்த்திரைப்பார்மீதினிலிம்மெல்லியலாள்வேள்கணைதைத்
தெய்த்திருத்தல்கண்டிரங்கிலா—லத்திகிரி
யண்ணலாரும்போருளாளரன்றிவர்வன்
கண்ணராமாராயுங்கால். (542)

இது சிறப்பபநுதி. இதன்பொரு ளுரையிற்கொள்க. திணை – பெருந்திணைப்பால். துறை - கண்டுகைசோர்தல்.

அண்டமாயெண்ணிறந்தவாருயிராயாருயிர்வாழ்
பிண்டமாய்த்தெய்வமெனப்பேருலகங்—கண்டதெல்லாந்
தானாகிநின்றதனிப்பிரமம்வெஃகாவுள்
யானுதரித்தவிறை. (543)

இது பொருளபநுதி. பேருலகம் - பெருமையையுடையபெரியோர். ஒழிந்த அகலம் உரையிற்கொள்க. தெய்வமெனக் கண்டதெல்லாந் தானாகிநின்றதனிப்பிரமம் என்பது "அவரவர்தமதமதறிவறிவகைவகை, யவரவரிறையவரெனவடியடைவர்களவரவரிறையவர்குறைவிலரிறையவ, ரவரவர்விதிவழியடையநின்றனரே" என்பதனு லறிக. துறை-கடவுள் வாழ்த்து.

மாமதுரப்பாகொழுகும்வாய்மையாய்நாவீறர்
தாமுரைத்தபாத்தண்டமிழன்று — பூமடந்தை
மன்னைப்பரவாதவாதியர்வாய்வஞ்சகச்சொற்
றன்னைச்சுடும்வெந்தழல். (544)

இது குணஅபநுதி. பூமடந்தைமன் - திருமகள்காந்தன். திணை-வாகைசார்ந்தபுறத்திணை. துறை - பனுவல்வென்றி. (௧௬௪)

227. இரட்டுறமொழிதலுமெய்தற்பாற்றே.

(எ-ன்) இது அவ்வபநுதி சிலேடையினும்விரவிவருமென்கின்றது. இதன்பொருள் வெளிப்படை. இரட்டுறமொழிதலாவது சிலேடை.

யாமின்புறக்கிடையாதென்றுலெழின்மாறர்
தாமமகிழ்மாலைதானன்று—காமவே
ளம்பிற்கிலக்காக்குமாறன்றிவாழ்நாளை
வம்பிற்கிலக்காக்குமால். (545)

இது சிலேடையபநுதி; என்னை? இதனுள், மகிழ்மாலையன்றென்பது விரும்பத்தகு மாலையன்று எனவும், வகுளமாலிகையன்றெனவும் வாழ்நாளைவம்பிற்கிலக்காக்கும் என்பது வறிதேகழியும்நாளாக்கும் எனவும், அயலார்கூறும் அலருக்கிலக்காக்கும் எனவும் இரட்டுறக் கொள்ளப்படுதலாலென் றறிக. இலக்காக்குமாதலால் விரும்பப்படு மாலையன்றெனக் கூட்டுக. திணை - பெண்பாற்கூற்றுக்கைக்கிளை. துறை-தாமம்பெறாது தளர்ந்துரைத்தல்.

மொழிதலுமென்றவும்மையால் இறந்தது தழீஇயதோடும் பிறவலங்காரங்களுடன்கூடிவருவனவுமுள. அவையும் வந்தவழிக் கண்டு கொள்க. (௧௬௨)

ரு௦-வது அபநுதி முற்றும்.

௫௧-வது நிந்தாத்துதியலங்காரம்.

228. இகழ்வதுபோன்றவியற்கையின்வண்புகழ்
நிகழ்தாவுரைப்பது நிந்தாத்துதியே.

(எ-ன்) வைத்தமுறையானே நிந்தாத்துதியென்னுமலங்கார முணர்—ற்று.

இதன்பொருளும் வெளிப்படை.

மாயனையோத்திவருமாயவன்றாதாய்
மேயகவிக்கரசன்மேனாளிற்—றூயதெல்லா
முள்ளடக்குந்தாட்டாமரைக்கையான்முண்டமுனி
யுள்ளடக்கிக்கொள்ளுமுவர். (546)

இது நிந்தாத்துதி. இதனுள், கவிக்கரசன் என்றது திருவடி. தாயது - பாய்ந்தது. முண்டமுனி - குறுமுனி. உவர் - கடல். ஒழிந்த அகலம் உரையிற்கொள்க. திணை - வாகையைச்சார்ந்தபுறத்திணை. துறை - தூதுவென்றி.

அம்பொன்மணிக்கூடத்தாழியான்பாண்டவர்க்குத்
தம்பமெனவாழ்சகாயனெனல்—பைம்பொன்னும்
விண்ணாடுநூற்றுவர்க்குமேதகுசீரைவருக்கு
மண்ணாடுமாக்கினன்வந்து. (547)

இதுவுமது. இதனுள், பாண்டவர்க்குத் தம்பமெனவாழ்சகாயனெனலென்பது நூற்றுவராலைவர் நிலைசாயாநின்றகாலத்துச் சாயாது தாங்குவதாகி யவர்க்கொரு பற்றுக்கோடாகிய துணையாவானென்று சொல்லப்படுவதென்றவாறு. துறை - கடவுள்வாழ்த்து. (௧௪௫)

௫௧-வது நிந்தாத்துதி முற்றும்.

௫௨-வது புகழ்வதினிகழ்தலலங்காரம்.

229. மதித்தொருபொருளினைவழாதுள்ளுறுத்துத்
துதிப்பதுபோன்றிகழ்வதுதுதிநிந்தை.

(எ-ன்) வைத்தமுறையானே புகழ்வதினிகழ்தலென்னுமலங்கார முணர்—ற்று. புகழ்வதினிகழ்தலெனினும் துதிநிந்தையெனினு மொக்கும்.

(இ-ள்) ஒருபொருளினை வெளிப்படையான் வழுவுதலின்றாக மதித்துப் புகழ்வதுபோலவும் புலவருள்ளத்தாற் குறித்துக்கொள்ளும் படிக் கிகழ்ச்சியாகக்கூறுவது புகழ்வதினிகழ்வதாம் என்றவாறு.

செருத்தந்தகன்புரத்தேபிலவாழ்நர்செலத்திரளாய்ப்
பகுத்தங்கம்வென்றருள்பாடகத்தாய்மகவைப்பயந்த
முகுத்தம்புகலும்படிக்களிதோவென்முதன்மைக்கொப்ப
வகுத்தெங்கையென்றொருமங்கையைக்காட்டியும்வாழ்வித்ததே. (548)

இது புகழ்வதினிகழ்தல். செருத்து - கொன்று. பிலவாழ்நர்—மூலபெலப்படை.

(இ-ள்) அந்தகன்புரத்தே பிலவாழ்நர்செலப் படையைத் திரள் திரளாகப் பகுதிப்படுத்திப் போர்வென்றருள் திருப்பாடகத்துப் பாண்டவர்தூதனுவானே! இப்புதல்வனைப்பெற்றமுகுத்த மெனக்களித்த வாழ்வின்பெருமை சொல்லும்படிக்களியதொன்றோ? என்றலைமைக்குப் பொருந்துவதாக என்மேல்வைத்த நினதுபுத்தியைப் பாத்தமை செய்வித்ததோடு மங்கைப்பருவத்தொரு தங்கையையுமுண்டாக்கி வாழ்வித்ததென்றவாறு.

இதனகத்துப் பாட்டுடைத்தலைவன் கிளவித்தலைவனுனதுங் காண்க. பகுதி - பாத்தையிற்பிரிதல். துறை - புதல்வன்மேல்வைத்து வாயின்மறுத்தல். (௧௪௪)

௫௨-வது புகழ்வதினிகழ்தன் முற்றும்.

௫௩-வது மாறுபடுபுகழ்நிலையலங்காரம்.

230. உற்றதோர்பொருளினைமறைத்தாறுபழியது
பெற்றிடமற்றொருபொருள்புகழ்பெற்றி
பொற்புடைமாறுபடுபுகழ்நிலையே.

(எ-ன்) வைத்தமுறையானே மாறுபடுபுகழ்நிலையலங்கார முணர்—ற்று.

(இ-ள்) கருதியபொருளினைமறைத் தது பழியெய்தும்படிக்குப் பிறிதொருபொருளினை வெளிப்படையாகப் புகழுந்தன்மை பொலிவினையுடைய மாறுபடுபுகழ்நிலையலங்காரமா மென்றவாறு.

பூரித்தெழுந்தபுணர்முலையைப்புல்லிவிடா
வாரித்தரளவடநிரைதாம்—நேரிழாய்
மட்டார்பொழில்வண்பரிசாரமாதவற்காட்
பட்டாதரித்தனவோபண்டு. (549)

இது மாறுபடுபுகழ்நிலை.

(இ-ள்) நேரிழையாய்! இப்புணர்முலையைத்தழுவி யொருபொழுதும் விட்டுநீங்காத நித்திலவடங்கள், மேனாள் வண்பரிசாரமாதவனிடத்து அன்புவைத் தடிமைப்பட்டுப் பெறுதற்கரியவரம் பெற்றனவோ வென்றவாறு; எனவே எனக் கிங்ஙனம் விட்டுநீங்காதமுயக்கங் கிடைக்கின்றில வால் யான் மேனாள் அவனிடத் தன்புவைத்துத் தவஞ்செய்யாமையா லெனக் குறிக்கக்கிடந்தமை காண்க. பகுதி—வரைவுமுடுக்கம். துறை—புணர்ச்சிபெறாதழுங்கல்.

வாவிப்பூம்பள்ளியின்மேல்வைத்தேகியோர்கணத்துண்
மேவிக்கொணர்ந்தவிரைமெய்ச்சேவ—லாவிமகிழ்
வுற்றருத்திநீங்காவுயர்புகழ்மால்கூடலின்முன்
பெற்றதவம்யாதெகினப்பேடு. (550)

இதுவுமது.

(இ-ள்) வாவியிடத்துண்டாய தாமரைப்பூவாயசயனத்தின்கண் பேட்டினைவைத்துப் பிரிந் தொருகணத்தின்கண்ணே நீர்ச்சிறையெய்தி யாராய்ந்துகொணர்ந்தவிரையை யுண்மைச்சேவலாகியவன்னந் தனது மனமகிழ்வுற் றதனை யதற்கருத்தி விட்டுநீங்காத, வுயர்ந்தபுகழையுடைய மாயோன்கூடலின்கண் எகினப்பேடு முன்னாட்செய்த தவம் யாதோ அறிகிலே னென்றவாறு.

எனவே யானும் அதுபோல எனதுகொழுநரோடும் விட்டுநீங்கா திருக்கத் தவஞ்செய்திலேன் எனக் குறிக்கக்கிடந்தமை காண்க. இது பொருட்பிரிதல். துறை - வரவுதாழ்த்திரங்கல். (௧௪௫)

௫௰-வது மாறுபடுபுகழ்நிலை முற்றும்.

௫௪-வது பரிசங்கையலங்காரம்.

—(௦)—

231 ஒருதிணைக்கூட்டத்தொருபொருளுயர்த்தும்
பிரிநிலையதுபீடுடைப்பரிசங்கை.

(எ-ன்) வைத்தமுறையானே பரிசங்கையென்னுமலங்கார மூணர்—ற்று.

(இ-ள்) உயர்திணை அஃறிணை யென்னு மிரண்டின்கண் ணொரு திணைக்கண் ணொருகூட்டத்தொருபொருளினைப் பிரித் துயர்த்திக் கூறுவது நிலைபேறுடைய பரிசங்கையா மென்றவாறு.

பதிகளினதிபதியரங்கநன்பதியே
நதிகளினதிபதிபகீரதிநதியே
நிதிகளினதிபதிசங்கநிதியே
யெதிகளினதிபதிபூதூரெதியே. (551)

இது பரிசங்கை. இதனுள், அதிபதியென்பது இராசா. நிதி—சங்கநிதி, பதுமநிதி, சிந்தாமணி. எதிகள் - சன்னியாசிகள். பூதூரெதி—எதிராசன். ஏகாரம்—தேற்றம். பா - அடிமறிமண்டிலவாசிரியப்பா. திணை - பாடாண். துறை - நகரவாழ்த்து, நதிவாழ்த்து, நிதிவாழ்த்து; "அமரர்கண்முடியு மறுவகையானும்" என்பதனால் முனிவனைவாழ்த்தனு மாம். வாழ்த்தெல்லாம் பாடாணாதலால் இவ்வண்ணங் கூறப்படும். பீடுடைப் பரிசங்கையென்றதனால் தொனியினால் வருவனவு முள.

முதியநான்மறைமொழிமுதன்மாதவனே
புதியவாயினிமைகூர்புகழவன்புகழே
வனிதையாயவணறைகமழ்மலர்மகளே
புனிதமாமுனிவரன்புகழ்ப்பராங்குசனே
மதமிராமாநுசன்மதமே
பதமெனத்தகுவதும்பரந்தாமமதே. (552)

இது தொனியோடுகூடிய பரிசங்கை. இறுதியினும் மையை யெஞ்சுமொட்டுக. பா—நேரிசையாசிரியம். திணை—இதுவுமது. துறை—கடவுள்வாழ்த்து. (௧௯௬)

௫௪-வது பரிசங்கை முற்றும்.

௫௫-வது காவியலிங்கவலங்காரம்.

———:(௨):———

232. வெளிப்படக்கிளந்ததன் வினைவினைவிளைபய
னொளித்திடவவைகுறித்துறுதொழிலொன்குறிப்
பளித்திடல்காவியலிங்கமென்றுமே.

(எ-ன்) வைத்தமுறையானே காவியலிங்கமென்னு மலங்கார முணர்—ற்று.

(இ-ள்) புலவரால் யாப்பினுள் முதலே வெளிப்படையாகக்கூறப் பட்டவினை யாதொன் றவ்வினைக் கெதிர்ப்பட்டதனு லுண்டான வினையு மவ்வினையாலாயகாரியங்களு மெஞ்சிநிற்க வக்காரியங்களைக் குறித் துண்டாயதொழில் கேட்டோ ருள்ளுறுத்துக்கொள்வதாக வொள்ளிய குறிப்பைத்தருவது காவியலிங்கமென்னு மலங்காரமா மென்றவாறு. காவியம் - கவி. இலிங்கம் - அறிகுறி.

சேதாம்பன்மலர்த்தடஞ்சூழ்சேறைமாயோன்
சிறைக்கருடன் றணைப்புயத்திற்செகத்தைத்தாய
பாதாரவிந்தமலர்பதித்தகாலைப்
பணைத்தெழலுமனுவெருவிப்பனுவலாய்ந்த
வேதாவைநோக்கினன்றன்குருவைப்பார்த்தான்
விண்ணவர்கோன்புகரினைவீடணனும்பார்த்தான்
மூதாதையொடுமுணர்த்தவுணர்ந்தபின்னர்
முத்தரொடுந்திருவடிக்கீழ்முன்னினரே. (553)

இது காவியலிங்கம். இதனுள் அவ்வாறு நிகழ்ந்தமுறை எங்ஙனேயோவெனின், நன்றுசொன்னாய்! சேறைமாயோன் கருடன் றணைப் புயத்திற் பாதாரவிந்தமலர்பதித்தகாலையென்பதும், அக்கருடன் பணைத் தெழலும் என்பதும் வெளிப்படக்கிளந்தவினை. அக் கருடன் சிறகசை யசைத்துச் சண்டவாயுவினையெழுப்ப என் னும் அவ் வினையாலாய வினையும், அச்சண்டவாயுவும் வடவாக்கினியையெழுப்புதலும், மீட்டும் அவ்வாயுத்தானே சமுத்திரங்களிற் சல முவட்டெடுத்து நிற்குநிலையை விட்டு வழிந்துபொங்க வெழுப்புதலுமாம் மூவகைத்தாய வினைவிளை பயனெஞ்சி யாப்பினுட் கிளக்கப்படா தொளித்துநின்றன. அவை

குறித்தது தொழி லொண்குறிப்பினை யளித்திடலாவன்—மனு பிரமனைப் பார்த்தான், விண்ணவர்கோன் குருவினைப்பார்த்தான், வீடணன் புகரினைப்பார்த்தான் என்பனவாம்; என்னை? அவாந்தரப்பிரளய காலத்துச் சேடனுசியிற்றோன்றுங் காலாக்கினியுருத்திரன் சொலியா நின்றனனோ? சண்டவாயுவெழுந்து பருப்பதமுதலாயினவற்றைக் கிளையாநின்றதோ? பிரளயம் வழிச்சேராநின்றதோ? என விளங்கவேணு மென்று மூவருங் கணிதமுணர்ந்தோர்மூவரையு நோக்கின சொன்னு மொள்ளியகுறிப்பினைச் செய்யுள்கேட்டார்க் களிப்பதாம். ஆகையால் அவர்களா லிது சேடனுசியிற்றோன்றுங் காலாக்கினியுருத்திரனுமன்று; சண்டவாயுவுமன்று; அவாந்தரப்பிரளயமுமன்று என்று உணர்த்தப் பட்டு உண்மையறிந்து மூத்தரோடுங்கூடிக் கருடனி னுலாப்போதலைக் கண்டு திருவடிகளைத் தொழுதனரென்றமையா லவ்வாறுநிகழ்ந்தமை காண்க. குரு - வியாழம். புகர் - சுக்கிரன். திணை - வாகை துறை- கணிவன்முல்லை. (கசஎ)

௫௫-வது காவியலிங்கம் முற்றும்.

௫௬-வது பரிகரவலங்காரம்.

:(௨):

233. உரைத்ததுபோன்றுறுதொனிப்பலதொடைமொழி
நிரைப்பனவின்றியுநிபுணர்நுட்பமெனுஅ
வாங்குரைத்ததுமாய்நோக்கமைந்தேது
நீங்கவினிலைமொழிச்சங்கையைவருமொழி
பாங்குறப்பாதுகாத்திடுதிடம்பரிகரம்.

(எ-ன்) வைத்தமுறையானே பரிகரமென்னுமலங்கார மூணர்-ற்று.

(இ-ள்) முன்னருரைத்த காவியலிங்கத்திற் றொனிபோன் மிகவும் அருமையுடன் றொனியுடைப் பலவடிதொடர்ந்த பன்மொழி நிரைத்துக் காட்டுவதின்றியும், பன்மொழிநிரைத்துக்காட்டுவதுளதாயும், கற்று வல்லோர் நுட்பமென்றுபெயரிட்டு மூர்த்து நூலுட்கூறியதூஉ மிது தானே யாய், நோக்கென்னும் இலக்கணத்தோடும் பொருந்தி, யாப்பினுட் காரணம்விட்டுநீங்காத நிலைமொழியினுண்டாய சங்கையைக்காரியம்விட்டு நீங்காதுவருமொழி யதற்குரிமையெய்தப் பாதுகாக்குந்திடத்தையுடை யுது பரிகரமென்னு மலங்காரமா மென்றவாறு.

இன்றியுமென்னும் உம்மை எச்சவும்மையாதலால் உளவாயும் என்பதூஉம், ஏது என்பதனாற் காரியமென்பதூஉம் எதிர்மறையாக விரிந்தன. நீங்கலிலென்பது முதனிலைத்தீபகமாகக் காரியத்தின்பின்னருங் கொண்டது.

நோக்கென்பது மாத்திரைமுதலாகநிரம்பும் அடிகளாலாய தொடையுடையவாஞ் செய்யுணடந்தவடியெத்துணையவாயினும் அவை முடியுங்காறும் வெள்ளைமையும் பிள்ளைமையுமின்றி வந்தவாக்கியங் கேட்டோர் மறித்துநோக்கிப் பயன்கொள்வதோர்கருவியாகிய யாப்புக்கால்; என்னை? "மாத்திரை முதலா வடிநிலை காறு, நோக்குதற் காரண நோக்கெனப் படுமே" என்றாராகலின். அதற்குச்செய்யுள்:—"முல்லை வைந்நுனை தோன்ற வில்லமொடு, பைங்காற் கொன்றை மென்பிணி யவிழ" என்னும் நெடுந்தொகைப்பாட்டினுள் முல்லையென்பது முதலாகக் கானமென்பதீறாக நாற்சொலியலான் மரபுவழிப்பட்டனவாயினும் பருவங்காட்டிவற்புறுத்துந்தோழி பருவந்துடங்கியதுணைகாணென்று வற்புறுத்தினாளென்பது நோக்கியுணரவைத்தானெனவும், "உதுக்காண் டோன்றுங் குறும்பொறைநாடன்" என்னுந்துணையுந் தலைமகனது காதன்மிகுதி கூறி வற்புறுத்தினாளென்பது நோக்கியுணரவைத்தானெனவும், ஒழிந்த அடிநிலைகாறும் பிரிந்தகால மணித்தெனக்கூறி வற்புறுத்தினாளென்பது நோக்கியுணரவைத்தானெனவும் படும்; என்னை? முல்லையென்றது வைந்நுனையென்றதனால் அவை யரும்பிய தணித்தென்பது பெறப்பட்டது; சின்னாள்கழியின் வைந்நுனையாகாது மெல்லெனுமாகலின். ஒழிந்தவும் இவ்வாறே நோக்கியுணர்க. முழுதும் ஈண்டுரைப்பிற் பெருகும்.

பரியென்பது பாதுகாத்தல். கரம் என்பது திடம்; எனவே பாதுகாக்குந்திடத்தையுடையது பரிகரமென்றாயிற்று. அன்றியுஞ் சங்கையைப் பரிகரிப்பதாற் பரிகாரமென்பதனை விகாரவகையாற் பரிகரமென்றாரெனினுமாம்*

அற்றேல், காவியலிங்கத்தோடு பரிகரத்திற்கு வேற்றுமையாதோ வெனின் காரண காரிய மிரண்டு மெச்சமாய் அவற்றாலாயதொழில்க

* இவ்வலங்காரப் பெயர்விவரணம் பிரதிகளிலெல்லாமிருந்தபடி பதிக்கப்பட்டது. பின்னதன் பிழையின்மை ஆராயத்தக்கது.

ளவற்றினையறிவிக்குங் குறியையுடைத்தூக் காவியலிங்கம்; அவையிரண்டும் வெளிப்படையாயும், அவற்றாலாயதொழில்கள் பிறவற்றையறிவிப்பன பரிகாரமாம்; இவை தம்முள் வேற்றுமையென்றறிக.

அடைக்கலமென்பவர்க்கருள்சீரரங்கத்தெம்மா
 னுடலுவாவினைக்கடவநிழலைக்காய்கட்
கடைக்கனல்வேலையைவளைப்பக்கன்னதானக்
 கடுவளிவெற்பினைக்கிளைப்பக்காடதான
மடைக்கலுழிதிசைதிளைப்பவிலங்கைவேந்தன்
 வானவர்கோன்மனுப்புகர்பொன்மறையோற்சார
நடைக்கணிதமுணர்த்தவுணர்ந்தனராய்முந்நீர்
 நானிலத்தோரெனமனத்துணடுக்கற்றாரே. (554)

இது பரிகரம். இதனுள், காரண காரிய மிரண்டும் வெளிப்படையாயும், பிறிதோர்பொருளை யறிவித்ததெங்ஙனேயோவெனின், நிழலைக்காய்கட்கடைக்கனல் வேலையைவளைப்ப, கன்னதானக்கடுவளி வெற்பினைக்கிளைப்ப, காடதான மடைக்கலுழி திசைதிளைப்ப வென்பன மூவகைப்பட்ட காரணகாரியங்கள்; அவை பிறபொருளைக் குறிக்கொள்ளும்படி அறிவித்ததாவன:—முன்னங்கூறினபடியே அவாந்தரப்பிரளயகாலத்துச் சேடனுசியிற் சுவாசத்திற்றோன்றிய காலாக்கினியுருத்திரன்முதலாய மூன்றுமெழுந்ததோவென விளங்கச் சார்ந்தாரென வுட்கொள்ளும்படிக்குப் பிறவற்றையறிவித்தவாறு காண்க. வளைப்பவென்பது வளைத்தெரிப்பவென்பதாம். ஒழிந்த அகல முறையிற்கொள்க. ஆதலால் காவியலிங்கம் அருமைத்தொனியுடைத்தென்பதாயிற்று. (கசஅ)

234. அதுவே,
குறிப்பினுந்தொழிலினுந்தமிகுறிக்கொளலாய்
வெளிப்படலொடும்விரவியும்வரும்வகைத்தே.

(எ-ன்) மேலைச்சூத்திரத்துள், "நுட்பமெனு அ, வாங்குரைத்ததுமாய் நோக்கமைந்"தென்றார், அவை யிவையென்பதுணர்—ற்று.

(இ-ள்) அச்சொல்லப்பட்டபரிகாரம் முந்துநூலாசிரியர் நுட்பமெனப்பகுத்துத் தம்மாற் புணர்க்கப்பட்டநூலகத் ததற்கொருவருள்ளக்குறிப்பினாலுந் தொழிலினாலுங் குறிப்பாதல் தொழிலாதல்

குறிக்கொள்ளவருமென்றார், அவ்வாறே பல தொடைமொழியுரையாது நிலைமொழித்தொடரொன்றால் வருமொழித்தொடரொன்றினோடு நோக்கமைந்து அவை தமிதமி குறிப்பிற்கொளவருதலோடுங் குறிப்பும் வினையும் ஒருசெய்யுளகத்து விரவியுநின் றுணர்த்துங்கூறுபாடுமுடைத் தென்றவாறு.

வடிக்குஞ்சுடரிலைவேலண்ணலேகைவறியருயிர்
பிடிக்கும்பொருட்குப்பிரிவது நீ இயைவர்போனூர்வென்
றிடிக்குந்துணைத்திருமாவிந்தனூர்த்திரையெற்றுகரைத்
துடிக்குங்கயலையுநீரையுநோக்கினள்சோர்குழலே. (555)

இது குறிப்பு; என்னை! நீ பொருண்மேற்பிரிவதை யானுணர்ந்த வுணர்வுற்றுத் திரையெற்றியகாலத்துக் கரையிற்கிடந்து துடிக்கும் நீரைவிட்டுநீங்கிய கெண்டை பிழைக்குமெனிற் றலைவர்நீங்கியகாலத்துத் தனதுயிர்பிழைக்குமென நோக்கியதெனத் தலைமகள்குறித்தகுறிப்பினைக் குறிப்பிற்கொளவந்ததென்றுணர்க. நீ யென்பதும் யானென்பதும் சொல்லெச்சம். கைவறியர் - பொருளில்லாதார். உயிர்பிடிக்கும்பொருள்- சீவனைப் பிழைப்பிக்கும்பொருள். ஒழிந்த அகலம் உரையிற்கொள்க. பகுதி - பொருட்பிரிவு. துறை - பிரிவுகேட் டழுங்கல்.

பாலாய்வழங்குமறைநீரியாவையும்பையுளெய்த
வாலால்வரையைக்குடைகொண்டமால்வல்லவாழிறைவா
குராலாய்வரிவண்டுகிண்டாக்குழுதக்கொழுநனைமென்
விரலால்விரித்திளமாம்பொழில்வீசினண்மெல்லியலே. (556)

இது தொழில்; என்னை? குராலென்பதோரிசையைக் காலத்திற் கேற்ப வாராய்ந்தெழுப்பும் பாட்டையுடைய வண்டுமலர்த்தப்படாத வாம்பலின் கொழுவியமுகையை மெல்லியவிரலான் மலர்த்திமாஞ்சோலையினிடத்தே யெறிந்தாளெனவே யாம்பன்மலரு மிரவின்கண் மாம்பொழிலின்கண் வருவானாகவெனத் தொழிலா னிரவிற்குறிக்கு நேர்ந்துரைத்தாளென்பது அறிவித்ததா லென்றறிக. பையுள் - துன்பம். குரால் — குராலென்பதோ ரிசை. ஒழிந்த அகல முரையிற்கொள்க. பகுதி — இரவிற்குறி. துறை - இரவிற்குறிக்கிடங்கூறல்.

காலையிலெழுகதிரவன்குடகடற்புகு
மாலையிற்கடைநாளினைவழிப்படுத்தி
யிடைநாளின்றுவேமுறவருதலு
முதனாளெதிர்கொளுமுழுநிலாமுன்றிற்
சதுமறைப்பொருளாற்றமிழ்மறைகொழித்துரை
மதுவிரிமகிழ்த்தார்மாறர்வண்குருகூர்க்
கற்பனைகடைப்பிடித்தற்புடைமகளிர்
பற்பலர்புகழ்பொறைப்பைந்தொடிநமதில்
லறங்காவலனையகற்றுபு
புறங்காவலனுக்குதல்புன்மைத்தே. (557)

இதுவும் பரிகாரம். இதனுள், கடைநாளென்ற திரேவதியை. இடைநாளின்று என்பது துன்பமுறுநாளில்லையாக. முதனாள் - அச்சுவதி. கடைநாளினை வழிப்படுத்தினது - கடத்தினது. எதிர்கொள்ளுதல் - வழிபடுதல். கடைநாளினைக்கடத்தி இடையுநாளின்றித் தன்னிடத்தின்பமுறவருதலு முதனாளுடாதெதிர்கொள்ளு முழுநிலாவெறிக்குமுன்றிலெனவே, நீயும், பரத்தையர்பலரையுந்தோய்ந்து பண்ணுட்கழிந் திறுதியில் இற்பரத்தையிடத்திற்றங்கி யவளையுநீங்கி நின்னில்லின்கண்வந்த இல்லறக்கிழவனைத் துன்புறுத்தி நமது கடைகாவலனுக்காறு வாயினேர்ந் தகங்காவலனுக்குவதே நினது பொறையுடைக் கற்பிற்குரியதொழில், எனதுள்ளக்குறிப்பு மஃதேயென நோக்குறக் கூறினளாகலிற் கூற்றுங் குறிப்பும் விரவிய பரிகரம். பகுதி-பரத்தையிற் பிரிதல். துறை - மதிநிலையுரைத்து வாயினேர்வித்தல்.

புன்னைப்பொதும்பர்ப்புதுவதுவாகப்புணர்நா
ளுன்னைப்பிரியேமெனவுரைத்தா —ரென்னப்ப
னாகவரையாரென்றுனைடுகாத்தற்பொருட்டா
லேகவரையானரவெறுத்தென். (558)

இதுவும் பரிகாரம்; என்னை? நாகவரையாரென்றுற் பிரியேமென்ற வரும் பிரிவரென்றதற்குத் தொனி யதனகத்துக் காணப்படும். அஃதாவது நாகத்திற்கு நாக்கிரட்டையாதலில் இவரும் நாவிரண்டுகூறுவரென்று இயற்பழித்ததாம். பகுதி - நாடுகாவற்பிரிதல். துறை - தோழியியற் பழித்துரைத்தல்.

காதலென் றறிவைக்கவற் றிருணிலையையும்
போதெனப்புறவிருடிதிழைநிலையையுந்
தூது சென் றனமேது தித் து நீயுரைத்தி
மூது ணர்வெனுமுழுமதியுடன்
மாதர்கூர்முகமதிமகிழ்மார்பினர்க்கே. (559)

இதுவும் பரிகாரம். இதனுள், போதெனப் புறவிரு டிதிழையென்பத ஞல் அறிவைக்கவற் றகவிருளையுமெனக் கூட்டியுரைத்துக்கொள்க. இது பெண்பாற்கூற்றுப்பெருந்திணை. துறை - தூதொருப்படுத்தல்.

தாதிவர் தளிநறைததும்புபொற்றுமரை
மாதுறைதிருமறுமார்பினனரங்கனைப்
புனல்படிந்தீர்ந்தண்பூம்புனலூரன்
றனதுணர்வுறவருச்சனைபுரிசால்பினிற்
கருனைமுக்கனிபயில்காமர்பாலடிசில்
பொருவருநளபாகத்தவாய்ப்பொலிதரப்
பொற்கலத்தருத்தியபுனிதநன்சேட
மிற்செறிவிருந்தினேடிருந்தினிதருந்திப்
பொலந்துகிலரையுடீஇப்புனைமலர்புனைந்திம
சலந்தனிற்குழைத்தசெஞ்சாந்தமும்புழுகு
மான்மதக்குழம்பின்மார்புறமெழுகிக்
கானமர்பஞ்சவாசமுங்கவுட்கொண்
டுமிழ்தருகாலையின்மாலைவந்துறதலு
மமிழ்தெனுமின்னிசைக்காகரமாகிய
மாடகயாழ்தழீஇவார்தலாஇயதொழிற்
பாடலைமடவாருடன்பயின்றிடலு
மொன்றியவேட்கையூர்தரவெழூந்தொருசிறை
மன்றன்மாதுளமலர்மணங்கொளமடந்தையுந்
தொண்டையங்கனியினைத்தூதுளங்கனியில்வைத்
துண்கவென் றுறுகிளிக்கூட்டினளாகி
யென்றாழ்நுழைபாவிருண்மாச்சிறையுட்
பாடமைசேக்கைப்பள்ளியுளாக

வாடவன்றொடர்வுழித்தொடர்பவரயலெழ
விடுஞ்சுடர்நாகவிழுமணிநாயகக்
கொடும்பூண்மருங்குதாழ்கொம்பரினூற்றிக்
குரவையாடலிற்கோவலர்க்கிறைவனைப்
பரவுதற்கெழுகெனப்பாங்கிற்செறியக்
கதிர்வளைத்தடக்கையுங்கடகத்தடக்கையுந்
தழுவலும்பானந்தலைத்தடுமாற
வேரிவான்றேன்மெய்யுயிரொன்றிய
வீறில்பேரின்பத்தின்றியமையா
நாணுநிறையுநனிதுறந்தனபோற்
பூணுந்துகிலும்புறம்போமொழுக்கிற்
றுணைமுலைமுகத்தினுந்தோளினுந்துயின்றாங்
கிறந்தவர்பிறந்ததொன்றெனத்துயினீத்தெழ
நீத்தநுண்ணுணர்வுதன்னிலையிற்றோன்றலும்
னிதமுற்றனராய்ப்புகுமுகம்புரிதலிற்
குறிப்பிற்குறிப்புணர்கொள்கையிற்கோதாய்
மறித்துனக்கிணையெவரெனவாழ்த்தியதொடு
மூழ்வினையினைக்குறித்துவப்பின்
வாழியென்றுரைத்ததெஞ்ஞான்றும்வாழியவே. (560)

இதுவும் பரிகரம். என்னை ? ஒன்றியவேட்கை மாதுளமலர்மணங் கொள என்றமையானும், மடந்தையும் உண்கவென்று கிளிக்கூட்டின ளாகி என்றமையானும், மாலைவந்துறுதலும் மணமகன் புணர்ச்சிமேல் வேட்கையனாகி முதலே யதரபானத்தின்மேன் மனம்வைத்த குறிப்பினை யவள் குறிகொள்வதற்கும், அங்ஙனங் குறிக்கொண்ட தலைமகளும் தனக்கு மதுவே குறிப்பென்பதனைத் தலைவனுங் குறிக்கொள்வதற்கும் கொவ்வைக்கனியினைத் துதுளங்கனியினையொத்த தனது அதரத்தில் வைத்து வருகவென முன்கையில்வருங் கிளிக்கூட்டினமையானும், அன்றியும் என்றூழின்கிரணங்களுழைந்தறியா விருண்மரக்கா மாலைக் காலமாதலின் மிகவு மிருளுமாகலின் அவ்விருணீங்கப் புணர்ச்சிக் காலத்து மார்பிற்பூணுமீதிரோமெனக்கழித்த நாகமீன்ற மாணிக்க நாயகப்பதக்கத்தை நித்திரைக்கியற்றிய சயனத்தில்வையாது மருங்கு தாழ்ந்த கொம்பரினூற்றி என்றமையானு முணர்க. இவர்தல்—பாத்தல்,

தளித்தல் - துளித்தல். ஈர்ந்தண்பூம்புனல் - மிகவுங்குளிர்ந்த பூவோடுங் கூடிய புனல். தனதுணர்வுற - தனதான்மஞானம் அரங்கநாதன் றிரு வடிகளிலே பொருந்த. அருச்சனைபுரிசால்பினில்—பூசனைபுரியுஞ்சோடச வுபசாரத்தின் அமைதியோடும். கருனை-பொரிக்கறி. முக்கனி—வாழை பலா மா வென்னும் முக்கனி. பொருவரும்—ஒப்பற்றவாகும். இற்செறி விருந்திேனாடிருந்தினிதருந்தி - தமரோடுந் தினநிலைக்களமாகிய அவ ரோடும் உண்பதோடும் புதுவதாக இல்லின்கண் வரும் விருந்திேனாடு மனமகிழ்ந் தமிர் திருந் தினிதாகத் துய்த்து. இமசலம் - பனிநீர். பஞ்சவாசம் - தக்கோலம், ஏலம், இலவங்கம், சாதிக்காய், கர்ப்பூரம். உமிழ்தருகாலை - தம்பர்போட்டகாலை. வார்தலாதியதொழில் - வார்தன் முதற் பட்டடையீறாயதொழில்க ளெட்டின். மாடகயாழ் - முறுக் காணியையுடைய யாழ். ஒன்றியவேட்கை—இருவர்க்கும் ஒருதன்மைத் தாகிய வேட்கை. ஊர்தர - மிகுதலால். ஈறில் பேரின்பம் - புணருந் தோறும் புணருந்தோறுந் தெவிட்டாது புதுவதுபுதுவதாம் பே ரின்பம். நீத்தநுண்ணுணர்வுதன்னிலையிற்றேன்றலும்—புணர்ச்சிக்காலத்து நனவுகனவாகநீங்கின இருவரறிவும் பண்டுபோல் நனவானகாலத்தில். புனிதமுற்றனராய் - பவித்திரம்பெற நீராடியபின்னரும். புகுமுகம் புரிதலின் - அப்பவித்திரமெய்தியபின்னருந் தலைமகன் விரும்பிநோக்கிய நோக்கத்தைத் தலைமகளும் விரும்பிநோக்கியிருந்தகாலத்து. குறிப்பிற் குறிப்புணர் கொள்கையிற் கோதாய் - உனதுள்ளக்குறிப்பால் என துள்ளக்குறிப்பினைத்தெளியப்பட்ட விருப்பத்தையுடையகோதையே. மறித்துனக்கிணையெவரெனவாழ்த்தியதொடும்-நினக்கு நீயே இணையென வாழ்த்தியதோடும். ஊழ்வினையினைக்குறித்துவப்பின், வாழியென் றுரைத்ததென்னொன்றும் வாழியவே—இறைவனே நீயும் ஊழ்வினையாகிய தெய்வத்தை வாழ்த்தியவாழ்த்தும் எக்காலத்தும் வாழக்கடவதென்ற வாறு. அழிந்த அகலம் உரையிற்கொள்க. கைகோள் - கற்பு. பகுதி— இல்வாழ்க்கை. துறை—புணர்ந்துடனயந்த புரவலன்செய்கையை-புணர்ந் தெதிர்பாங்கி புவகையின்வாழ்த்தல். (௧௬௧)

ஸ்ரீ ஸேவது பரிகரம் முற்றும்.

௫௭-வது உறுசுவையலங்காரம்.

———:o:———

235. பண்புடைச்சுவைபலபகர்ந்தவற்றினுளோ
ரொண்சுவையிணைமிகுத்துரைப்பதுறுசுவை.

(எ-ன்) வைத்தமுறையானே உறுசுவையென்னும் அலங்காரம் உணர்—ற்று.

(இ-ள்) உலகத்துள்ள பலபண்புடை மதுரமாகியவற்றை யொன்றினுக்கொன்றுயர்வுடையனவாக அடைவே எண்ணி, ஈற்றில் ஒரு முக்கியமானமதுரத்தை யெண்ணியயாவையினும் மிகுந்தமதுரமுடைத் தெனக்கூறுவது உறுசுவையென்னும் அலங்காரமா மென்றவாறு வட நூலார் சாரமென்பது மிது.

நால்வகைத்தாய்த்தோற்றநயந்தபூந்தேன்சுவையிற்
சால்புடைத்தாமுக்கனியுட்சார்சுவையின்—ஞாலமெலா
மிக்கதெனுமான்பாலுள்வீழ்சுவையினும்விரும்பத்
தக்கதெனும்பஞ்சதாரையினி—லக்கடல்வாய்த்
தோற்றமுறும்புத்தேளிரதுப்புரவாந்தெள்ளமுர்தி
னேற்றமுறுமின்சுவைத்தாமீதெனுந்—தேற்றமதாங்
கற்றவர்கொளுவீறன்காரிதருமாறன்
சொற்றமிழ்ப்பாநல்குஞ்சுவை. (561)

இதனுள் அவ்வாறுவந்தமை காண்க. இஃ தெட்டடியான்வந்த பஃறொடைவெண்பா. (௧௫௦)

௫௭-வது உறுசுவை முற்றும்.

௫௮-வது விநோத்தியலங்காரம்.

———(::)———

236. முதன்மையதாமொருமுக்கியம்பிறிதொரு
திதமுறுமுக்கியத்துடன்சேராதெனில்
விதமுறமுக்கியமன்றெனல்விநோத்தி.

(எ-ன்) வைத்தமுறையானே விநோத்தியென்னும் அலங்காரம் உணர்—ற்று.

(இ-ள்) யாதாயினுந் தலைமையதா மொருமுக்கியப்பொருள் உண்மையாகிய பிறிதொருமுக்கியப்பொருளோடும் பொருந்தாதெனின் முக்கியமல்லவென்று வேறுபடுத்திச்சொல்லுவது விநோத்தியென்னும் அலங்காரமா மென்றவாறு.

சொல்லாற்பொருளாற்சுவைபெற்றலங்கார
மெல்லாமிழுக்கின்றியன்றாலும்—புல்லாணி
மன்னிலங்கும்பேரூர்வளம்பரவாப்பாவினையே
நன்னிலங்கைக்கொள்ளாநயந்து. (562)

இது விநோத்தி. நன்னிலம் என்பது நல்லபூமியின்கண் ணுள்ள பெரியோர். சுவைபெறுதல்—இனிமையுடையவாதல். இழுக்கின்றியன்றாலும் என்பது வழுவின்றிநடந்தாலும் என்றவாறு. கைக்கொள்ளா — அதனை ஒருபொருளாகக்கொள்ளா. புல்லாணிமன் - தெய்வச்சிலைப் பெருமாள். பேரூர் - பரமபதம்.

சொல்லினாலும் பொருளினாலும் இனிமையுடைத்தாய் எப்பெற்றிப் பட்ட அலங்காரங்களும் இழுக்குதலின்றிநடைபெற்ற யாப்பெனினும், அதுவும் பரமபதத்தையே வாழ்த்தும் யாப்பெனிற் கைக்கொள்வதுவே யன்றிப் பிறிதொருபொருளைவாழ்த்தினகாலத்துப் பெரியோர் அதனைக் கைக்கொள்ளாரென முடிக்க. திணை - பொதுவியல். துறை - பொருண் மொழிக்காஞ்சி.

மெய்ப்பொருளைப்பரவுவார் இவ்வுலகிற் பிறிப்பதுமின்றி வீட்டின்ப மெய்துவர், பிறபொருளைப்பாடுவோர் இவ்வுலகிற் பிறந்தும் இறந்தும் உழலும் நிலையாமையை யெய்துவர், என்பது இதன்பயன். (கருக)

௫௪-வது விநோத்தி முற்றும்.

௫௫-வது சமுச்சயவலங்காரம்.

—:(o):—

237. ஒன்றினுக்கின்பமுந் துன்பமும்பலபல
வொன்றியதாகவுரைப்பதுஞ்சமுச்சயம்.

(எ-ன்) வைத்தமுறையானே சமுச்சயமென்னும் அலங்காரம் உணர்—ற்று.

(இ-ள்) ஒருபொருட் கின்பமாதல் துன்பமாதலுற்றதை யொன்றொன்றாயேகூறாது பலவாகக்கூறுவதுஞ் சமுச்சயமாமென்றவாறு.

கடிதுமலர்ப்பாணங்கடிததனிற்றென்றல்
கொடிதுமதிவேயுங்கொடிதாற்—படிதழைக்கத்
தோற்றியபாமாறன்றடரியின்மானினுயிரைப்
போற்றுவதார்மன்னுபுகல். (563)

இதனுள், துன்பஞ்செய்வதை யொன்றாயேகூறாது பலவாகவே திரட்டிக்கூறியவாறு காண்க. இதன்பொருள் உரையிற்கொள்க. பகுதி- பொருட்பிரிவு. துறை - ஆற்றாமைகூறல்.

மேலே "உரைப்பதுஞ்சமுச்சய"மென்ற வும்மையா லின்பமுந் துன்பமும் இருவயிற் பிறந்ததாகக் கூறுவனவும் ச மு ச் ச ய மா மென்றவாறு.

காரிதருமாறன்காசினிமீதேயுதிப்ப
வாரியர்மெய்பூரித்தகமகிழ்ந்து—பேரின்ப
முள்ளத்துடிக்குமுறுவலத்தோள்வாதியர்மெய்
துள்ளத்துடித்ததிடத்தோள். (564)

இஃ தின்பமுந் துன்பமும் இருவயிற் பலவாய்ப்பிறந்த சமுச்சயம். திணை - பாடாண். துறை - அறமுறைவாழ்த்தினுள் அடங்கும்.

ஆசுரியர்கோத்திரத்துளாதிபனுலாய்ந்தமதந்
தேசுறலாலேகதண்டர்செப்புமதம்—பாசுபதர்
வல்வாய்மதமருகர்வாய்மதம்வேதாந்திமத
மெல்லாமொளிமட்கின. (565)

இதுவுமது. திணை - வாகை. துறை................இதன்பொருள் உரையிற்கொள்க. ஆசுரியர்கோத்திரத்துளாதிபன் - எம்பெருமானார்.

இன்னும், அவ்விலேசானே இன்பமாதல் துன்பமாதல் ஒருவர்பால் இருவயிற்றோன்றும் இரண்டாஞ்சமுச்சயமு முள.

உத்தமப்பேரின்பமுணர்த்துந்தமிழ்மறைப்பா
வித்தகத்தாற்றந்தவிதிநினைந்து—முத்தி

யளிக்குமகிழ்மாறனருண்முகத்தைக்கண்டு
களிக்குமனம்போலவுமென்கண். (566)

இஃ திரண்டாஞ்சமுச்சயம். இதன்பொருள் உரையிற்கொள்க. திணை—பாடாண். துறை—அறுமுறைவாழ்த்தினுள் அடங்கும். (௧௫௨)

௫௯-வது சமுச்சயம் முற்றும்.

௬0-வது உதாத்தவலங்காரம்.

238. உயர்வறவுயர்ந்ததைவியந்துரைக்குமதே
மயர்வறவுதாத்தமெனவகுத்தனரே.

(எ-ன்) வைத்தமுறையானே உதாத்தம் என்னும் அலங்காரம் உணர்—ற்று.

(இ-ள்) யாதாயினும் உலகிற் றனக் கிணையில்லாதுயர்ந்தபொருளை யுயர்த்தியுரைப்பதே மயக்கமற உதாத்தமென்னும் அலங்காரமாமென்று கூறுவர் புலவ ரென்றவாறு.

உயர்ந்ததை வியந்துரைப்பதேயெனத் தேற்றேகாரம்புணர்த்தமையான் உயராததை வியந்துரைப்பது அதிசயமாமெனக்கொள்க. (௧௫௩)

239. அதுவே,
பொருள்கொடைகாந்திபொற்புறுகற்பே
பெருவிறல்செல்வமென்பவற்றொடும்பெருகும்.

(எ-ன்) இதுவும் அவ்வலங்காரத்தை வகுத்து விரித்துணர்-ற்று.

இதன்பொருள் உரையிற்கொள்க. (௧௫௪)

240. அவற்றுள்,
பொருளினைமிகுத்துரைப்பது பொருண்மிகுதி.

(எ-ன்) பொருண்மிகுதியை யுணர் - ற்று. உதாத்தமெனினும் மிகுதியெனினும் ஒக்கும்.

இதன்பொருளும் உரையிற்கொள்க.

ஏழுறமன்னுயிரொடுபெறற்குரித்தோ
தாமரைப்பொகுட்டிற்சதுமுகனியற்று
நால்வகைத்தோற்றத்தெழுபிறப்பவற்றுட்
சால்புறுதக்கனதகாதனவறியா
வோரறிவுடைப்புன்முதலியவுயிரல
வீரறிவுடைநந்தினமுதலியவல
மூன்றறிவுடைச்சிதன்முதலியவுயிரல
நான்கறிவுடைநண்டாதியபிறப்பல
வையறிவுடைமாவாதியதாமல
மெய்யறிவெனவேவிதிவிலக்கறிவா
னாறறிவுடைத்தாமரும்பெறன்மக்கட்
பேறதுகிடைத்தபெருமையிற்சிறந்தும்
பிரமனைப்பயந்தபிரமமென்றறிந்து
மரனிரப்பொழித்தவடிகளென்றறிந்து
மேவலிற்படைத்தும்பிருவருளன்றியுங்
காவலிங்கெனதெனக்கருணையுற்றெடுப்பா
னனந்தயோனியினணுத்தொறுமணுவாய்
நனந்தலைவியாத்திநயந்ததையறிந்து
மூலமென்றுரைத்தமொழியடங்காமுனத்
தோலிடர்கடிந்தசோதியென்றறிந்தும்
பொருளுரைதனதுபுன்பெயரெனப்புவிமேன்
மருளுரைநடாத்தியமாழையன்மகவுட
னிங்குளனோவென்றெற்றியதூணத்
தங்குளனாகியடுந்திறலறிந்து
மாவலிமுன்பொருமாண்குறளாகிமண்
மூவடிவாங்கிமுழுதுலகையுமிரு
சேவடியிற்றாய்ச்சேணுறநிமிர்ந்து
குறைதருகெனவவன்கொற்றம்வாங்கிச்
சிறையினிலிருத்தியசெம்மலென்றறிந்துந்
தீதறுமுனிவனிற்றிருநகர்ச்செல்வுழிக்
கோதமன்மானினிகொண்டகற்படிவ
மாதியிற்பொலங்கழலணிபெறவனைகழற்

போதினன் பூழியிற் போக்கிய தறிந்து
மிருபது காத்தி னுமே திபற்றினனுய்ப்
பொருவலி நிருதனைப் பொருது கொன்றதற்பின்
றெய்வக்கற் புடைத் திருவொடும் பரதனன்
றய்தற் கெய்திய வொருவனென் றறிந்து
மின்னுச்சொற் கிளைத் திளிவாலெய்தத்
தன்னுண்டகைமை தலைப்படப் பழித்த
மன்னுகிய சிசுபாலன் முடியினைக்
கொன்னுழியினுற் கொய்தவனுன் மா
வந்நாட் சாணினுட் புகக் கொளலறிந்தும்
பாவு பொற்றுளிற் பார்த்தனன் றணிமல
ரான் முடிமேற் கொண்டணிந்ததை யறிந்துந்
தென்னரங்கேசன் புகழினைச் செம்மையி
னுன்னினராகி யூழ்வினை யொரீஇ
யுளநெகநெகப் புறம் புரோமம் பொடிப்ப
வளிநன் கண்ணீரடிக்கடி ததும்பக்
கருமணிவண்ணங் காட்சி செய்தனரா
யெட்டெழுத்ததனையினிமையினோதிச்
சிட்டர் தஞ்சேவடி சென்னியிற் சேர்த்தி
நமன்றமர் முடிமேனடித்தடி பெயர்த்துத்
தமஞ்செறி நிரயந் தனைப் பாழ்படுத்தி
மதனவிகார மாருங் கறக் களைந்து
வெகுளியு மயக்கமும் வேரறவீழ்த் திட்
டாராவின்ப மமைவரமாந்தித்
தீராப் பிறவித் திரையினை நீந்தி
யேனையவுயிர்கட் கெல்லாமிரங்கு
ஞானநற் றுணையா நன்னெறியுறா து
பிறிதொரு தெய்வம் பேணு
நெறியினர் புன்னெறி நினையுங்காலே. (567)

இது பொருண்மிகுதி. இதன்பொருள் உரையுட் கொண்டுணர்க. ஈண்டுரைப்பிற் பெருகும். நம்பெருமாள் மும்மணிக்கோவை விரித்துரையுள் விளங்கும். துறை - கடவுள்வாழ்த்து. (௫௫௫)

241. கொடைநலன்விதந்துரைப்பதுகொடைமிகுதி.

(எ-ன்) கொடைமிகுதியுணர் - ற்று.

இதன்பொருளும் உரையிற்கொள்க.

படைக்கெதிர்நிற்பவரின்றுகுநேமிபரித்தபிரான்
கொடைக்கெதிர்நிற்குங்கொடையுளதோமறைகூறுமுண்மைத்
தொடைக்கெதிர்நிற்பக்கவிசொன்னமாறற்குச்சொன்னசொன்ன
நடைக்கெதிர்நிற்பவுபயவிபூதியுநல்கினனே. (568)

இது கோடைமிகுதி. இதனுள், மறைகூறுமுண்மைத்தொடைக் கெதிர்நிற்பவென்றது பரத்துவத்தையும், ஆவியினையும், பூதத்தையும் உபநிடதங்கோதத் தடைவேசொன்ன வுண்மைவாக்கியத்திற் கொப்ப வென்றவாறு. சொன்னசொன்னநடைக்கெதிர்நிற்ப வென்றது சொன் னலத்தி னொழுகலாற்றிற்கும், பொருணலத்தி னொழுகலாற்றிற்கும் பொருந்த வென்றவாறு. ஒழிந்தனவும் உரையிற்கொள்க. (௩௬௬)

242. காந்தியைமிகுத்துரைப்பதுவேகாந்தி.

(எ-ன்) காந்திமிகுதி யுணர்—ற்று.

இதன்பொருளும் உரையிற்கொள்க.

வேணுக்குழலிசைத்தவேங்கடமாலைப்புலவீ
ராணுத்தமனென்பதாரறியார்—நாண்மலருட்
பெண்ணுத்தமியிறையும்பேர்கிலாள்பேரழகைக்
கண்ணுற்றவன்மார்பகம். (569)

இது காந்திமிகுதி. முன்னையது பாடாண்சார்ந்தபுறத்திணையிற் கொடுப்போரேத்திக் கொடார்ப்பழித்தல். பின்னையது கடவுள்வாழ்த்து. ஆணுத்தமன் — புருடோத்தமன். பெண்ணுத்தமி — பெரியபிராட்டி. இறையும்பேர்கிலாள் — நீங்கிற் பிறளொருத்தி குடிபுகுவளென்பது கருத்து. (௩௬௭)

243. காமர்கற்புரைப்பதுகற்பின்மிகுதி.

(எ-ன்) கற்புமிகுதி யுணர்—ற்று.

இதன்பொருளும் உரையிற்கொள்க.

பொற்பிற்குரியபுகழ்ச்சானகிபுனிதக்
கற்பிற்கிணையுளதோகாணுங்காற்—சிற்றிளவ
லிட்டதழற்றண்ணென்றெதிர்சுமந்ததன்றதனைச்
சுட்டதவள்கற்பாஞ்சுடர். (570)

இது கற்புமிகுதி. துறை - வாகைசார்ந்தகற்புவென்றி. (கரு)

244. நயம்புணர்ஞானவீரியமமர்வீரமென்
றியம்பியவிறலுமோரிரண்டென்ப.

(எ-ன்) இது விறன்மிகுதிப்பகுதிபுணர்—ற்று.

இதன்பொருளும் உரையிற்கொள்க.

தருஞாலமேற்றந்தமாலருட்பாலன்றித்தாய்முலைப்பா
லொருநாளினுமருந்தாவரம்பேணியுணர்வழியப்
பொருமாயையையடங்கப்பொருதேபுறங்கண்டவொண்மைத்
திருஞானவீரியத்தான்மகிழ்மாறனெனசிந்தையனே. (571)

இது ஞானவீரியமிகுதி.

(இ-ள்) கற்பகாடவியைப் பூமியின்கண் பின்னைப்பிராட்டிக்களித்த மாயோன்கருணையாகிய வமிர்தத்தை நான்முகத்தான் ஞானத்தாற் பருகுவதன்றிப் பெற்றநற்றாயாகிய நங்கைதிருமுலைப்பாலையும் பிறந்த ஞான்று தொடங்கி யொருகாலத்துமுண்ணாதசேட்டத்தினையே முக்கியமாக விரும்பியதால், உலகத்தாரறிவழிய அவ்வறிவினோடும் பூசலைப் பெருக்கும் பஞ்சதன்மாத்திரைகண்முழுதையும் பொருது புறங்கண்டவொள்ளியதன்மைத்தாம் அழகிய ஞானவீரியத்தானாகிய காரிமாறப்பிரான் என்சிந்தையைவிட்டு அகலானென்றவாறு. ஆதலால் எனக்கியாதுகுறையென்பது இதன்பயன். திணை - வாகைசார்ந்தபுறத்திணை. துறை - ஞானவென்றி.

அண்டமென்றகன்றதையதனினுமகன்றுட்
கொண்டதாமண்டபித்தியையுட்கொளலாய்
வரங்குவெண்டிரைப்பெரும்புனலாவரிப்ப
வோங்குமாழ்புனலினையொளிருமங்காரக
னுங்ககலாநிலைமையினுவரிப்ப
வங்காரகன்றனையதிற்பதின்மடங்காய்

வங்கூழுயிர்த்தாவரிப்பதினதன்மேற்
கண்ணகலிருவிசும்பொழிவில்காரணமா
மண்முதலனைத்தையும்வளைத்தாவரிப்ப
வகல்விசும்பினைத்தாமதபூதாதி
தகவுடைத்தாயாவரித்திடுந்தன்மையி
னமைதாவதனைமானஃதாவரித்துச்
சமைதரவதனைமுற்றந்தாவரிக்கு
முறைமையிற்காலமுக்குணத்துடன்முளைத்த
வுறையுளாமாயையொழிவில்வான்பதத்தொடு
மொருபேருருவினொருங்காவரித்த
சுருதியுந்தொடர்தொடர்புடைத்தனிச்சோதியை
யாற்றல்கூர்தமிழ்மறையதனகத்தனவாம்
நூற்றுப்பத்தெனத்தொடர்நோக்குடையவற்றுண்
முந்தியபத்துண்முதற்பத்ததனில்
வந்ததோர்முதலாம்வனப்புடைப்பாட
லோரடியதனகத்தொடுக்கியவென்றியின்
வரியளிமுரல்வகுளாம்புயமாறு
தெரிபவர்தெரிதொறுந்தெவிட்டாவினிமை
போராயிரத்தினூறுடைவென்றி
யாராய்பவரிவ்வகலிடத்தெவரே. (572)

இதுவும் ஞானவீரியமிகுதி. திணையுந் துறையும் இதுவு மது.

குன்றுயிரஞ்சிரமுங்கையுமாயுருக்கொண்டதெனத்
துன்றுடன்மூலபலப்படைதான்முற்றுஞ்சுற்றியநா
ளொன்றுமுருவமலகில்பல்கோடியுருவெனலாய்ச்
சென்றுடல்கொண்டவன்வின்மையிங்கேதென்றுசெப்புவனே. (573)

இது சமர்வீரியமிகுதி. அலகில்பல்கோடியுருவம் - எண்ணிறந்த பலகோடியுருவம். துன்றுதல்-நெருங்குதல். சென்றுடல்கொண்டவன் என்பது ஆயிரம்வெள்ளம்படைக்கும் ஆயிரம் வெள்ளம் இராமனென்னும்படி ஓரொருவர்க்கோரோரிராமனென விரைந்தெதிர்முகநின்று சராமாரியைப்பொழிந்து வென்றிகொண்டவனென்றவாறு. வின்மை-வில்வென்றியினது தன்மை. இங்கேதென்று செப்புவனே என்பது இவ்

வுலகின்கண்ணிருந்த அறிவின்மையேன் யாதென்றுகொண்டாடுவே னென்றவாறு. திணை - வாகை. துறை - போரண்முல்லை; அல்லது வாகைசார்ந்தபுறத்திணையுள் வில்வெற்றியுமாம். (கருகூ)

245. கல்விச்செல்வமுங்கவின்பொருளுடைமைச்
செல்வமுமெனவிருதிறத்தவாஞ்செல்வம்.

(எ-ன்) செல்வமிகுதியின்பகுதி யுணர் - ற்று.

இதன்பொருளும் உரையிற்கொள்க.

பல்வித்தகமறையின் முறைபோயவற்றுட்பான்சீர்
சொல்வித்தகமறைதோய்ந்தெதிராசன் றுணிந்துகொண்ட
கல்விப்பொருளன்பர்க்கெல்லாமளிக்கவுங்கண்ணகன்ற
நல்வித்தகமிறையுங்குறையாதுண்ணயந்தனவே. (574)

இது கல்விச்செல்வமிகுதி. இதனுள், மறையின்முறைபோய் என்பது வேதத்தின்முடிவை யறிவினுற்கடந் தென்றவாறு. அங்ஙனம் பலவிதப்பட்ட சதிர்பெற்றமறை ஆதியோ டந்தமும் நடுவும் ஸ்ரீமந் நாராயணனேபரப்பிரமமென்பதனைச் சந்தயமற ஞானத்தாலறிந்து எதிராசனுட்கொண்ட ஞானமாகிய கல்விப்பொருளை யன்பொடு தன்பாற் கற்ற சீடர்க்குப் பரவுபகாரத்தாற் றானறிந்தபடியெல்லாவற்றையும் அவர்கள்வேண்டக் கொடுத்தும் அவனுள்ளத்து நிறைந்த நன்பொருட் சதிர்ப்பாடு சிறிதுங்குறையாது அவன்கண் ணயந் துறவுகொண்டன வென்றவாறு. திணை - பாடாண். துறை - அறுமுறைவாழ்த்தினு ளடங்கும்.

திருப்பூரநாள்வந்தபுத்தூர்மடந்தைதிருமுலைப்பொற்
பொருப்பூர்புயல்வடவேங்கடத்தான்மெய்ப்புழுகிற்பொத்துங்
கருப்பூரத்தூள்விலைக்கோர்நாட்சிற்றுண்டிகருணையுண்டி
விருப்பூரத்துய்ப்பதற்கெர்ப்போபிறர்வைக்குமெய்ப்பொருளே. (575)

இது பொருட்செல்வமிகுதி. அஃதேல் இஃது அதிசயத்தின்பாற் படுமோவெனின் அதனகத் தகப்படாது; என்னை? திருமேனியிற்பூசின புழுகுமறைபப்பொதிந்து திருமஞ்சனத்திற் கரையுங் கருப்பூரத்தூளி யின்சோதி மேலேதோன்ற மிகவும் பன்னாட்பொதிதலானும், திருப் பணியாரவகை பொரிக்கறியமுதுவகை திருப்போனகவகை பிறர் அமுது

செய்பவற்றினும் மிகுந்தது மெய்யாதலானும் உதாத்தமேயாம். திணை—வாகைசார்ந்தபுறத்திணை. துறை - செல்வவென்றி.

அவற்றெடுமென்னுமும்மை யெச்சவும்மையாதலாற் பிறவற்றேடும் வருவனவு முள. அவற்றுள்ளுஞ் சிலவருமாறு:—

ஆங்கதற்கணியாமாதியாவரணமொன்றினுக்
களவில்பேரண்டம்
வாங்குபுகவவுபுரிநெடுந்திகிரிவரைகளோர்
மருங்கினுக்காற்று
வோங்குபுபிறங்குசிகரகோபுரங்களொருவனீ
ராயிரங்கரங்கண்
டாங்குபுதூண்டிக்காண்டொறும்வரம்பு
தரித்திடற்கரியதன்மையவே. (576)

இஃ திடமிகுதி. திணை - பொதுவியல். துறை - புலவரேத்தும் புத்தேணுடுவாழ்த்து. (௧௯௦)

௯௦-வது உதாத்தம் முற்றும்.

௯௧-வது ஆசியலங்காரம்.

246. வாழ்த்துவதாமேவாழ்த்தெனப்படுமே.

(எ-ன்) வைத்தமுறையானே வாழ்த்தென்னுமலங்காரம் உணர்—ற்று.

வாழ்த்தெனினும் ஆசியெனினும் ஒக்கும். வாழ்த்துவதாமே யெனப் பன்மைப்பாலாகக் கூறியவதனு லவை பலவென்பனவாம். அவை மேற்கூறப்படும். (௧௯௧)

247. அதுவே,
கடவுள்வாழ்த்தேயமுறைவாழ்த்தெனத்
திடனுறவருமிருசிறப்பினவாகி
யியற்கையினமைதியியன்றமக்களை
வாழ்த்துதருனுமரீஇயதொன்றும்.

(எ-ன்) இதுவும் அவ்வாழ்த்தினை விரித்துணர்—ற்று.

(இ-ள்) அவ்வாழ்த்தென்னுமஃது, கடவுள்வாழ்த்தெனவும் அறுமூறைவாழ்த்தெனவும் உண்மையாய்நிகழும் இரண்டுகூற்றவாகி, அவற்றோடுஞ் செயற்கையானன்றி இயற்கையான் அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடியென்னும் நான்கும் அமைவெய்திய நன்மக்களை வாழ்த்துதலும் பொருந்தியதொன்றாகுமென்றவாறு. (௧௬௨)

248. மறையவர்துறவோர்மழைநாடாவுடன்
பொறைபுரியரசெனப்புகலிவையாவு
மமரர்கண்ணெனலாமறுமூறைவாழ்த்தே.

(எ-ன்) வைத்தமுறையானே யறுமூறைவாழ்த்தினது பெயரும் முறையும் தொகையும் உணர்—ற்று.

இதன்பொரு ளுரையிற் கொள்க. இவற்றிற்குச் செய்யுள் வருமாறு:—

பூமாதுநிழன்மணிப்பூண்பொதியவிழ்பொன்னிதழ்ப்புனிதத்
தேமாலைநறுங்களபஞ்செறிமார்பத்திடைமுயங்க
வளப்பரிதாம்பகிரண்டத்தப்புறமுமகத்தடக்கி
யுலப்பிலிளங்கதிருதயத்தொளிகிளர்பேருருவாயும்
நன்னரங்கத்தணுக்கடொறுநயந்தணுவாகியுமெழில்கூர்
தென்னரங்கத்தரவணைமேற்சிறந்திருகண்வளர்ந்துளாய்!

இஃது தாறடித்தரவு.

ஒருசுடராஞ்சொருபமுடனுருவமமைந்தொருசுடரோ
டிருசுடராய்க்குணமொருமூன்றெனலாகிமுறைமுறையே
படைப்பதையுமழிப்பதையும்புறம்போக்கிப்பழிபிறங்கா
திடைப்படுகாவலையெனதென்றெடுத்ததெவனருளுதியே

நின்றனவாயியங்குனவாய்நீடியபல்லுருவமைத்தோன்
பொன்றியநாளெழுந்தபெரும்புனற்படிந்தவுயிர்களைநீ
யெம்மானேதிருவுதரத்திருத்தியகாவற்கவற்றாற்
கைம்மாறங்கெவனோநீகைக்கொண்டதருளுதியே

புறம்பயின்றவினைவழிசார்போக்குவரவினும்பிரியா
தறம்புரிவதணுவுளவேலதற்கவற்றையெடுத்தனையா

யுண்ணீர்மையற்றனமாய்ந் துறுநரகிற்புகுவது நீஇக்
கண்ணீர்கொண்டகன்றகலாக்காவலெவனருளுதியே.

இவை மூன்றும் ஒருபொருண்மேன்மூன்றடுக்கி நான்கடித்தாய் இரண்டுவிகற்பத்தால்வந்த தாழிசை.

தரணியுளவரொடுமுரணியபெருவிற
லிரணியன்வரனெனுமரணறவிகலினை

ஒருபதுசிரமுடனிருபதுகரமுள
நிருதனதுயிர்மிசைபொருகணைசிதறினை

மறையவரிறையவருறைவயின்வடிவுரை
பறைபவனுயிர்புகுமறைகழலிணையினை

முதலையினிடருறுமதமலைமடிவினு
ளுதவுகவெனுமுரையதனெடுமுதவினை

இவைநான்கும் அராகம். என்னை? "உருட்டுவண்ணமாரகந் தொடுக்கும்" என்பதனாற் குறிலிணைந் துருட்டிவந்ததுகாண்க.

வஞ்சனையோர்வடிவெடுத்துமாதுலனுமறைபயின்ற
கஞ்சனைக்கொன்றுரகேசன்கடும்பொறையைத்தவிர்த்தனையே

குருகுலத்தார்நூற்றுவரைக்கூற்றுவனாட்டினிலிருத்தித்
தருமன்முதலவர்க்கவனிதனியாளக்கொடுத்தனையே

இவை நாற்சீரடி யிரண்டம்போதரங்கம். இவை பேரெண்.

கழிபெருங்கற்பினளாடைகழியாமனயந்தனையே
வழிபடிந்துதனுமாகிமடக்கோலைசுமந்தனையே
ததிபாண்டன்றனக்கழியாத்தமனியநாடளித்தனையே
விதிகாண்டற்குலப்பில்பலவேடமவைகொண்டனையே

இவை நாற்சீரோரடி நாலம்போதரங்கம். இவை அளவெண். அற்றேல் நாற்சீரீரடியிரண்டம்போதரங்கத்தோ டிதனிடை வேற்றுமை யாதோவெனின் எழுத்துமுதலா வீண்டியவடியிற் குறித்தபொருளை முடியநாட்டல் வேற்றுமையென்றறிக. இந்தநோக்கம் மேல்வரும் இடையெண் சிற்றெண்ணிற்கும் ஒக்கும்.

தாடகையுட லுயிர்போக்கினை
தாபதன்மன திடர்நீக்கினை
நீடகலிகைபழி தீர்த்தனை
நேயமுள்ளவனொடுசேர்த்தனை
வில்லினைமிதிலையில்வளைத்தனை
மெல்லியலிளமுலைதிளைத்தனை
வல்லரவடல்கெடநடித்தனை
மருதினைமுதலொடுமொடித்தனை

இவை முச்சீரோரடியெட்டம்போதரங்கம். இவை யிடையெண்.

உறித்தயிர்கட்டுண்டனையே
உரலிடைகட்டுண்டனையே
மறித்துநிரைகாத்தனையே
வழங்கினைமைங்காத்தனையே
குடநடமுன் பாடினையே
குழலினிற்பண்பாடினையே
படர்சகடம்பொடித்தனையே
பகட்டுமருப்பொடித்தனையே
நாவலன்பின்னடந்தனையே
நடித்தனைமென்னடந்தனையே
கோவலரில்விறுத்தனையே
கோள்விடையேழிறுத்தனையே
புள்ளினைவாயிடந்தனையே
புரந்தனைபாரிடந்தனையே
தெள்ளமிர்தங்கடைந்தனையே
தேவருளங்கடைந்தனையே,

இவைபதினாறும் இருசீரோரடியம்போதரங்கம், இவை சிற்றெண்.

எனவாங்கு, (இது தனிச்சொல்.)

இனையதன்மையவாமெண்ணருங்குணத்தி
னினைவருங்காவனிகழ்த்தினையதனை

னின்னது கருணையுநீயு
மன்னியதிருவுடன்வாழிவாழியவே. (577)

இது நான்கடியாய் நேரிசையாசிரியத்தாலிற்ற சுரிதகம்.

இது வாழ்த்து. இது, முதலே யாறடித்தரவொன்றும், இரண்டு விகற்பத்து நான்கடித்தாழிசை மூன்றும், எண் சீர் நான்காரகமும், நாற்சீரீரடியிரண்டம்போதரங்கம், நாற்சீரோரடி நான்கம்போதரங்கம் முச்சீரோரடி எட்டம் போதரங்கம், இருசீரோரடிப் பதினாறம்போதரங்கம் என்னும் பேரெண், அளவெண், இடையெண், சிற்றெண் ஆகிய நால் வகையும், தனிச்சொல்லும், சுரிதகமும் என்னும் ஆறுறுப்புங் குறை வின்றிவந்த வண்ணகவொத்தாழிசைக்கலிப்பா. இதனை வண்ணகவொத் தாழிசைக்கலிப்பாவென்பது வண்ணித்துப்புகழ்தலால் வண்ணகவொத் தாழிசைக்கலியென்றாயிற்று. இஃ தொல்காப்பெருமைத் தோல் காப்பியத்திற்குக் காண்டிகையெழுதின நச்சினார்க்கினியார்நோக்கம். இவ்வாறன்றி "அராகமுடுகியல் வண்ணகமாகும்" என்னுஞ்சூத்திரத்தால் அராகமென்னுமுறுப்புப் பெற்றமையால் வண்ணகவொத்தாழிசைக் கலியாயிற்றென்பாரும் உளர். அஃ தியாப்பருங்கலக்காரிகையார் நோக்கம் இருவர்நோக்கமும் பகுத்துணர்ந்துகொள்க. துறை—கடவுள் வாழ்த்து.

வாழிமறையோர்மழைவாழியான்வாழி
வாழிவழுதிவளநாடு—வாழி
புவிப்பாவலர்புகழ்பூதூர்முனிவன்வாழி
கவிப்பாவலர்க்கரசென்கண். (578)

இஃ தறுமுறைவாழ்த்து. இவற்றைத் தனித்தனிவாழ்த்திற் றனித்தனி துறையும் வாழ்த்துயாம். இனி "வழங்கியன்மருங்கின் வகைபடநிலைஇப், பரவலும்" என்னுஞ் சூத்திரத்தான் மக்களை வண்ணப் பகுதிவரைவின்றாகப்பாடியவாழ்த்துஞ் செந்துறைப்பாடாண்பாட்டாகிய துறையான்வருவனவாம் வாழ்த்துக்களும் வந்துழிக் கண்டுகொள்க. அதுவும் இயற்கையால் அமைதியுடையமக்களைவாழ்த்துதலாம். (௬௬௩)

௲௧-வது ஆசி முற்றும்.

௯௨-வது சங்கரவலங்காரம்.

249. பாலுநீர்நிலையெனப்பகுத்துணர்வரிதாஞ்
சால்பினீரணிதழுவுதல்சங்கரம்.

(எ-ன்) வைத்தமுறையானே சங்கரமென்னுமலங்காரம் உணர்—ற்று.

(இ-ள்) பாலினிடத்துக்கலந்த நீர்போல வோரணி வெளிப்படையாய்த்தோன்றிப் பிறிதோரணி குறிப்பினாற்கொள்ளும்படிக் கிரண்டணியாய்நிற்பன சங்கரமென்னுமலங்காரமா மென்றவாறு.

நறையார்வகுளப்பிரான்குருகூரனன்னீர்ப்பொருநைத்
துறையான்வழுதிநன்னாட்டெங்கண்மாதுன்னைத்தோய்ந்தமுதாக்
குறையாலரும்பம்பலாயதுநாளுங்குறைநயந்துன்
மறையால்வரவரவேயலரானதுமன்னவனே. (579)

இது சங்கரம். என்னை? அரும்பம்பல் - சற்றேதோன்றப்பட்டுச் சிலரறிந்து தம்முட் புறங்கூறல்; அலராயது—இறைவனே! நீயிங்ஙனம் மறைவயினீட்டித்தொழுகலாற் பலரும் அறிந்து தூற்றும் அலராயிற்று என்பது பொருள்; அங்ஙனந்தொடர்ந்த தொடர்மொழியுள் வறிதே அம்பலென்னுது அரும்பென்னுங் கிரியையால் அம்பலாகிய அரும்பென்னு மாட்டேறில்லாதவுருவகந்தோன்ற, அலராயிற்றெனவே மலர்ந்த போதாயிற்றெனவுஞ் சிலேடை குறிப்பினாற்கொள்ளப்படுதலா லீரணியாதலானென்றறிக. அரும்பம்பல் - வினைத்தொகை. அரும்புதல் — தோன்றுதல். பகுதி - இரவுக்குறி. துறை - அலரறிவுறுத்தி வரைவு கடாதல். (௧௯௪)

௯௨-வது சங்கரம் முற்றும்.

௯௩-வது சங்கீரணவலங்காரம்.

250. எட்பகருடுதண்டலமிவையொளிதிகழ்
கட்புலக்கொளவிரவியதாட்சியபோன்

றிரண்டிறந்தனவாயினிமையினணிபல
திரண்டனசங்கீரணமெனச்செப்பினர்.

(எ-ன்) வைத்தமுறையானே சங்கீரணமென்னுமலங்காரம் உணர்—ற்று.

(இ-ள்) முந்தையதுபோற் குறிப்பின்றி யெள்ளும், பயறும், தண்டுலமுமென்னுமிவை கண்ணினதறிவிற்குத்தோன்றக் கலந்ததோற் றம்போல யாப்பினுள் இரண்டிறந்த பலவணி தழுவுவனவாய்க் கேட் டோருணர்விற்கொள்ளும்படி பாடுவது சங்கீரணமென்னுமலங்காரமா மென்றவாறு.

இழுதனைவாட்கண்ணுமிருளளகக்காரு
முழுமதிதேய்ந்துட்குமுகமுங்—கெழுதகைத்தாய்ச்
சேந்தவிழ்ந்துவேர்கூர்திறந்தருநாவீறாணி
தோய்ந்ததுடரிப்பூஞ்சுனை. (580)

இது சங்கீரணம். இதனுள், வாட்கண்ணெனவே யுவமையும், அளகக்காரெனவே யுருவகமும், முழுமதிதேய்ந்துட்குமுகமெனவே தற்குறிப்பேற்றமும், சேந்தவிழ்ந்துவேர்கூர்திறந்தருமெனவே நிரனிறை யும், சுனை வேர்கூர்திறந்தருமெனவே அயுத்தவேதுவும், நகையென்னுஞ் சுவையும் விரவியவாறுகாண்க. பகுதி - நாணநாட்டம். துறை - புணர்ச்சியுரைத்தல்.

விள்ளாதகாதல்விழிவழியாய்த்தன்னிதயத்
துள்ளாயகாதலர்க்குச்சிட்டமதாமென்றுணவுட்
கொள்ளாததேதுக்குறித்துறங்காக்கண்கலுழ்வ
துள்ளாதெனுமாறனூர். (581)

இதுவுமது. இது, பொருள்வயிற்பிரிவின்கட் டலைமகனைத் தோழி யியற்பழித்துரைப்பத் தலைமகள் தனதாற்றாமையை மறைத்து இயற்பட மொழிந்ததனையுட்கொண்டு தோழி யவளது காதற்சிறப்புணர்தல்.

(இ-ள்) உண்டியைவெறுக்கவுங் கண்டுயில்வெறுத்துக் கலுழவும் பொருள்வயிற்பிரிந்ததலைவர் கடைப்பிடியுடையரல்லரென் றியற்பழித்த தனைக்கேட்டுத் தலைமகன்மேல்வைத்தவுள்ளக்குறிப்பால் விட்டுநீங்காத காதலையுடையா ளிடைவிடாதுநோக்குதலால், விழிவழியாகத் தன

திதயத்துட்குடிபுகுந்த தன்றலைவர்க்குத் தான்றுய்ப்பதியாதாயினு மவர்க்குச்சேடமாமென்று உண்டியைவெறுத்ததையுங் காரிமாறப்பிரான் குருகாபுரியினுள்ளார் உண்மையென் றுட்கொள்ளா ரென்னுமதுவேயு மன்றியித் துன்பத்திற் கேதுவாயினமென் றுட்கொண்டு தனதுகண்கள் உறங்காது கலுழ்வதனையும் உண்மையென்றுகொள்ளாரென்னுமாதலால் இவள்காதற்சிறப்பிருந்தபடி யென்னென்றவாறு.

மாறனாருள்ளாதென்பதனை யிறுதிவிளக்காக்கி யீரிடத்துங்கூட்டுக. எண்ணும்மை யீரிடத்துஞ் செய்யுள்விகாரத்தாற் றொக்கன. காதலும் மாறனாரும் ஆகுபெயர். உச்சிட்டம் - சேடம். இதற்கு இவளது காதற்சிறப்பிருந்தபடி யென்னென்பது சொல்லெச்சமின்றிக் குறிப் பெச்சமாய்ப் பயனிலையாயிற்று. பகுதி - பொருட்பிரிவு. துறை—காதற் சிறப்புரைத்தல்.

இதனுள் உண்டிவெறுத்ததனையும், கண்கலுழ்வதனையும் மறைத் துக்கூறினமையால் இலேசமும், உள்ளாதென்பது இறுதிவிளக்காகத் தீபகமும், விழிவழியென்பது எதுகையலங்காரமும், விழிவழி யிதயத் துட்புக்காரென அற்புதமும், சுவை பெருமையைச்சார்ந்த அழுகையும் ஆகப் பலவணி காண்க. பா—ஒருவிகற்பத்தின்னிசைவெண்பா.

காவலர்போற்காவலர்போற்காதங்கமழனந்தை
காவலனைக்காவலர்தூஉய்க்காவலெனக்கற்றுணர்ந்தோர்
காவலனேகாவலனேகாத்தியெனக்கண்டுற்றுங்
காவலகாவென்னார்கலர். (582)

அலங்காரம் இதுவுமது. என்னை? காவலர்போற்காவலர்போ லெனச் சொற்பின்வருநிலையும், பூரணவுவமையும், காதங்கமழனந்தை யெனவே அதிசயமும், பிறர்கட்டோன்றியவறுமைபற்றி அழுகை யென்னுஞ் சுவையும் வந்தமையால் அறிக. திணை—பொதுவியல். துறை— முதுமொழிக்காஞ்சி பா - ஒருமொழியொருவிகற்பத் தின்னிசை வெண்பா.

கோங்கரும்புபோலுங்குவிமுலைகடாம்புபத்து
ளாங்கரும்புமுல்லையரும்பேய்க்கும்—பூங்குழற்குச்
செவ்வாயும்வெண்ணகையுஞ்செண்பகமாறன்சிலம்பிற்
காமர்சுனைக்காவிகண். (583)

இஃ திரண்டாமடியினிறுதி தனிச்சொற்பெற்று நேரிசைவெண் பாவிற் சிறிது வேறுபட்டு மூன்றுவிகற்பத்தான்வந்த இன்னிசை வெண்பா. அலங்காரம் இதுவுமது ; என்னை? முதலே யுவமையும், புயத்துள்ளாங்கரும்பென்ன மாட்டேறில்லாவுருவகமும் (?) கரும்பு முல்லையரும்பு செவ்வாய் வெண்ணகையென்ன நிரனிறையும் விரோதமும், தன்கட்டோன்றியபுணர்வுபற்றிய வுவகையும் வந்தமையாலென் றறிக.

முகத்தாமரையைமுழுதடக்கலோடென்
னகத்தாமரைகவர்ந்ததற்புதம்பொற்பூண்முலையாய்
காவிமலரனையகண்ணிணையைக்கைக்காந்தட்
பூவின்மறைத்திடுமிப்போது. (584)

அலங்காரம் இதுவுமது. இதனுள், முகத்தாமரை, கைக்காந்தள் எனவே உருவகமும், முகத்தாமரையை முழுதடக்கலோடு என் அகத்தாமரையையுங் கவர்ந்ததெனவே அசங்கதியும், காவிமலரனையவெனவே உவமையும், கைக்காந்தள் காட்சிப்பொருளல்லாத அகத்தாமரையையுங் கவர்ந்ததெனவே யற்புதமும், உவகையுட்சார்ந்த வியப்பும் வந்தமையாலென்றறிக. பகுதி—இடந்தலை. துறை—நாணிக்கண்புதைக்கவருந்தல். பா - இரண்டுவிகற்பத்தால்வந்த இன்னிசைவெண்பா.

மாதராய்தென்னரங்கன்மால்வரைவாழ்மாதராள்
காமனிரதியெனுங்காட்சியாள்—காமவேள்
பூவாளியென்பவற்றுண்மன்னுயிருண்பூவாளி
கண்டார்நிறையினையுண்கண். (585)

அலங்காரம் இதுவுமது. இதனுள் உவமையும், அதிசயமும், சொற்பின்வருநிலையும், வியப்பென்னுஞ் சுவையும் வந்தமையா னறிக. பா—அடிதோறும் ஒரூஉத்தொடைபெற்று நேரிசைவெண்பாவிற் சிறிது வேறுபட்டுவந்த இன்னிசைவெண்பா. பகுதி - சேட்படை. துறை — அவயவங்கூறல். (௧௧௫)

சங்கீரணம் முற்றும்.

௬௪-வது பாவிகவலங்காரம்.

251. விளம்பியகாப்பியக்குணங்கள்பாவிகமே.

(எ-ன்) வைத்தமுறையானே யிறுதிநின்ற பாவிகமென்னுமலங்காரம் உணர்—ற்று.

(இ-ள்) விளம்பியகாப்பியக்குணங்களென்பது முன்னர்ப்பொதுவியலுட்கூறிய காப்பியக்குணங்கள். பாவிகமே - ஈற்றில்நின்ற அறுபத்துநாலா மலங்காரமா மென்றவாறு.

குணமாவன: அப்பொருட்டொடர்நிலைமுழுவதூஉம் நோக்கிக் கொள்ளப்படுவதல்லது தனித் தொருபாட்டாற்கொள்ளப்படாதெனக் கொள்க. அவற்றுட் சில வருமாறு:—

"கற்றதனாலாயபயனென்கொல்வாலறிவ
னற்றொடொழா அரெனின்" (586)

"சிறப்பொடுபூசனைசெல்லாதுவானம்
வறக்குமேல்வானோர்க்குமீண்டு" (587)

"ஒழுக்கத்துநீத்தார்பெருமைவிழுப்பத்து
வேண்டும்பனுவற்றுணிவு" (588)

"சிறப்பீனுஞ்செல்வமுமீனுமறத்தினூஉங்
காக்கமெவனோவுயிர்க்கு" (589)

"இல்வாழ்வானென்பானியல்புடையமூவர்க்கு
நல்லாற்றினின்றதுணை" (590)

"சிறைகாக்குங்காப்பெவன்செய்யுமகளிர்
நிறைகாக்குங்காப்பேதலை" (591)

"பெறுமவற்றுள்யாமறிவதில்லையறிவறிந்த
மக்கட்பேறல்லபிற" (592)

"என்பிலதனைவெயில்போலக்காயுமே
யன்பிலதனையறம்" (593)

"விருந்துபுறத்ததாத்தானுண்டல்சாவா
மருந்தெனினும்வேண்டற்பாற்றன்று" (594)

"இன்சொலாலீரமளைஇப்படிறிலவாஞ்
செம்பொருள்கண்டார்வாய்ச்சொல்" (595)

"எந்நன்றிகொன்றார்க்குமுய்வுண்டாமுய்வில்லைச்
செய்ந்நன்றிகொன்றமகற்கு" (596)

"நன்றேதரினுநடுவிகந்தாமாக்கத்தை
யன்றேயொழியவிடல்" (597)

"ஒருமையுளாமைபோலைந்தடக்கலாற்றி
னெழுமையுமேமாப்புடைத்து" (598)

"மறப்பினுமோத்துக்கொளலாகும்பார்ப்பான்
பிறப்பொழுக்கங்குன்றக்கெடும்" (599)

"அறன்வரையானல்லசெயினும்பிறன்வரையாள்
பெண்மைநயவாமைநன்று" (600)

"அகழ்வாரைத்தாங்குநிலம்போலத்தம்மை
யிகழ்வார்ப்பொறுத்தறலை" (601)

"அழுக்காறெனவொருபாவிதிருச்செற்றுத்
தீயுழியுய்த்துவிடும்" (602)

"நடுவின்றிநன்பொருள்வெஃகிற்குடிபொன்றிக்
குற்றமுமாங்கேதரும்" (603)

"கண்ணின்றுகண்ணறச்சொல்லினுஞ்சொல்லற்க
முன்னின்றுபின்னோக்காச்சொல்" (604)

"பல்லார்முனியப்பயனிலசொல்லுவா
னெல்லாருமெள்ளப்படும்" (605)

"மறந்தும்பிறன்கேடுசூழற்கசூழி
னறஞ்சூழுஞ்சூழ்ந்தவன்கேடு" (606)

"ஒப்புரவினால்வருங்கேடெனினஃதொருவன்
விற்றுக்கோட்டக்கதுடைத்து" (607)

"ஈத்துவக்குமின்பமறியார்கொறாமுடைமை
வைத்திழக்கும்வன்கணவர்" (608)

"புகழ்படவாழாதார்தந்நோவார்தம்மை
யிகழ்வாரைநோவதெவன்" (609)

"அருட்செல்வஞ்செல்வத்துட்செல்வம்பொருட்செல்வம்
பூரியார்கண்ணுமுள" (610)

"அவிசொரிந்தாயிரம்வேட்டலினொன்ற
னுயிர்செகுத்துண்ணாமைநன்று" (611)

"தவஞ்செய்வார்தங்கருமஞ்செய்வார்மற்றல்லா
ரவஞ்செய்வாராசையுட்பட்டு" (612)

"வலியினிலைமையான்வல்லுருவம்பெற்றம்
புலியின்றோல்போர்த்துமேய்ந்தற்று" (613)

"உள்ளத்தாலுள்ளலுந்தீதேபிறன்பொருளைக்
கள்ளத்தாற்கள்வேமெனல்" (614)

"பொய்யாமைபொய்யாமையாற்றினறம்பிற
செய்யாமைசெய்யாமைநன்று" (615)

"இறந்தாரிறந்தாரனையர்சினத்தைத்
துறந்தார்துறந்தார்துணை" (616)

"பிறர்க்கின்னாமுற்பகற்செய்யிற்றமக்கின்னா
பிற்பகற்றாமேவரும்" (617)

"அறவினையாதெனிற்கொல்லாமைகோறல்
பிறவினையெல்லாந்தரும்" (618)

"ஒருபொழுதும்வாழ்வதறியார்கருதுப
கோடியுமல்லபல" (619)

"இயல்பாகுநோன்பிற்கொன்றின்மையுடைமை
மயலாகுமற்றும்பெயர்த்து" (620)

"ஐயுணர்வெய்தியக்கண்ணும்பயமின்றே
மெய்யுணர்வில்லாதவர்க்கு" (621)

"வேண்டாமையன்னவிழுச்செல்வமீண்டில்லை
யாண்டுமஃதொப்பதில்" (622)

"நுண்ணிய நூல்பலகற்பினுமற் றுந்தன்
னுண்மையறிவேமிகும்" (623)

என்பனவும், இவைபோல்வனவாகிய பொருட்பால் காமத்துப்பால்களுள் வருங் குணங்களும், பிறகாப்பியங்களுள்வருங் குணங்களும், காப்பியக் குணங்களாமென் றுகொள்க. (கசுசு)

சுச-வது பாவிகம் முற்றும்.

பொருளணியியல் ஒருவகையான் முடிந்தது.

(கவிராசகேசரியான *பேரைக் காரிரத்தினகவிராயர்
உரையெழுதினதென் றறிக.)

தருகாளமேகக்கவிராயராயன் சடையனன்பாற்
குருகாபுரேசர்புனையலங்காரங்குவலயத்தே
கருகாதசெஞ்சொலுரைவிரித்தான் கற்பகாடவிபோல்
வருகாரிரத்நகவிராயன்பேரைவரோதயனே.

---

* 'பெரியரத்தினகவிராயர்' என்பது பிரதிபேதம்.

ஸ்ரீ:

மூன்றாவது

சொல்லணியியலுரை.

—————:(உ):—————

மடக்கு.

252. குறித்துரையெழுத்தின் கூட்டமுதன்மொழி
மறித்துமோர்பொருடரமடக்குதன்மடக்கே.

என்பது சூத்திரம். இவ்வோத் தென்னபெயர்த்தோவெனின், சொல்லானுமணிகளினியல்புணர்த்திற்றாதலாற் சொல்லணியியலென்னும் பெயர்த்து. அஃதாக, இச்சூத்திர மென்னுதலிற்றோவெனின், பொது வகையான் மடக்கென்னுமலங்கார முணர்-ற்று.

(இ-ள்) புலவனா லொருபொருள்குறிக்கப்பட்டுச் செய்யுளினிடத்துத் தொடரெழுத்தாற்சொல்லப்பட்ட முதன்மொழி, வருமொழியுமாய்ப் பெயர்த்துமொருபொருடருவதாகமடக்குவதூஉம் மடக்கென்னும் அலங்காரமா மென்றவாறு.

உம்மையாற் றொடரெழுத்துமொழியன்றி ஓரெழுத்தே பெயர்த்து மடக்குவதும் மடக்கேயா மென்றவாறு. புலவன், பொருள், செய்யுள், வருமொழியென்பன சொல்லெச்சம். எழுத்தின்கூட்டமெனவே இரண்டு முதலாகிய வெல்லாவெழுத்துமெனக் கொள்க. (க)

253. அதுவே,
தொடர்பிடைவிடாதுந்தொடர்பிடைவிட்டு
மடைவினிவிருமையுமமைவனவாகியு
நடைபெறுமூப்பாற்றெனநவின்றனரே.

(எ-ன்) அம் மடக்கினதுபாகுபாடுணர்-ற்று.

(இ-ள்) அச்சொல்லப்பட்டமடக்கு, தம்மிற்றொடருத விடைவிடாது மிடைவிட்டு முறையே யிரண்டுதன்மையும்பொருந்துவனவாகியு மொருசெய்யுளகத்து நடக்கு மூன்றுபகுதியையுடைத்தென்று முதனூலாசிரியர்கூறின ரென்றவாறு.

எனவே இது வழிநூலென்பதூஉந் தமக்கு மதுவேகருத்தென்பதூஉங் கூறினாரெனக் கொள்க. (உ)

254. ஒன்றுதியவாவொருநான்களவுஞ்
சென்றுநடைபெறுஞ்சீர்த்ததற்கடியே.

(எ-ன்) இதுவும் அதனையே வகுத்துணர்—ற்று.

(இ-ள்) அதற்கு (அம்மடக்கிற்கு) அடிவரையறை நான்கடிச் செய்யுளுள்ளே நடக்குங்கால் ஓரடிமுதலாக வீரடிக்கண்ணு மூன்றடிக் கண்ணு நான்கடிக்கண்ணு முன்னர்க்கூறியபடியே சென்று நடக்கு மழகினையுடைத் தென்றவாறு.

ஒருநான்களவுமென்றதனால் நான்கடிச்செய்யுளென்ப தாற்றலாற் போந்தபொருள். ஒருநான்களவுமென்னு மும்மை முற்றும்மையெனக் கொள்க. அவற்றிற்கெல்லாஞ் செய்யுண் மேற்காட்டுதும். (௩)

255. முதலிடைகடையேமுதலொடிடைகடை
யிடையொடுகடைமுழுதென வெழுவகைத்தே.

(எ-ன்) இதுவு மதனையே வகுத்துணர்—ற்று.

(இ-ள்) அம்மடக்கு முதன்மடக்கும், இடைமடக்கும், கடைமடக்கும், முதலொடிடைமடக்கும், முதலொடுகடைமடக்கும், இடையொடுகடைமடக்கும், முற்றுமடக்கும் என முறையே எழுவகைப்படு மென்றவாறு. அம்மடக்கென்பது அதிகாரம்பற்றிவிரிந்தது. (௪)

256. அவற்றுள்,
அடிமுதன்மடக்கோரைம்மூன்றுகும். (௫)

257. இடைகடையவுமதனெண்ணிலைபெறுமே. (௬)

258. உணர்வுறின்மடக்கிவையோரிடத்தனவே.

(எ-ன்) இவைமூன்றுசூத்திரமு மடிதொறு மோரிடத்தா மடக்கினது தானமு மெண்ணும் வரையறுத்துணர்—ற்று.

(இ-ள்) அங்ஙனங்கூறப்பட்ட வெழுவகைத்தானத்தினுள்ளும், அடிமுதன்மடக்குப் பதினைந்தாம்; இடைமடக்குங் கடைமடக்கு மென்னப்பட்ட விரண்டு மோரோவொன்று முன்னர்க்கூறிய அடிமுதன் மடக்குப்போலப் பதினைந்து பதினைந்தென்னு மெண்ணினதுவரையறை நிலைபெறு மென்றவாறு; ஆராயுமிடத் திவைநாற்பத்தைந்து மோரிடத்து மடக்கென்புனவா மென்றவாறு.

அவையாவன:—முதலடிமுதன்மடக்கு, இரண்டாமடிமுதன்மடக்கு மூன்றாமடி முதன்மடக்கு, நாலாமடிமுதன்மடக்கு இவைநாலு மோரடி யோரிடத்து முதன்மடக்கு; இனி, முதலிரண்டடியுமுதன்மடக்கு, முதலடியுமூன்றாமடியுமுதன்மடக்கு, முதலடியுநாலாமடியுமுதன்மடக்கு, கடையிரண்டடியுமுதன்மடக்கு, இடையிரண்டடியுமு த ன் ம ட க் கு, இரண்டாமடியுமீற்றடியுமுதன்மடக்கு இவையாறுமீரடிமுதன்மடக்கு, ஈற்றடியொழித் தேனைமூன்றடியுமுதன்மடக்கு, முதலயலடியொழித் தேனைமூன்றடியுமுதன்மடக்கு, ஈற்றயலடியொழித் தேனைமூன்றடியு முதன்மடக்கு முதலடி யொழித்தேனைமூன்றடியும் முதன்மடக்கு இவைநாலு மூன்றடிமுதன்மடக்கு; நாலடிமுதன்முற்று மடக்கு; ஆக விவைபதினைந்தும் அடிமுதன்மடக்கு. இனி, அடியிடை மடக்கும், அடியிறுதிமடக்குமிவ்வண்ணமே பதினைந்து பதினைந்தாம். இவை நாற்பத்தைந்திற்கு முதாரண முன்னர்க்காட்டுதும். (எ)

259. அடிதொறுமீரிடத்தனவாய் முதலொ
டிடைகடையிடைகடைகளினியன்றனவுந்
திதமுறநான்கறுபானெனச்சிவணி
யதனொடுமடக்கொருநூற்றைந்தாகும்.

(எ-ன்) அடிதொறு மீரிடத்தனவாமடக்கிற்கும், மூவிடத்தனவா மடக்கிற்குந் தானமும் வரையறையு முணர்—ற்று.

(இ-ள்) செய்யுளினடிதொறும் ஆதியொடிடை, ஆதியொடுகடை, இடையொடுகடை யென்றுசொல்லப்பட்டதானங்களி னீரிடத்தனவாய் நடந்தனவும், முத லிடை கடையென மூன்றிடத்து மடக்குவனவுமான நாலுதானத்தினு முண்மையாக வறுபதென்று கூறும்படிக்குப்பொருந்தி முன்னர்க்கூறப்பட்ட வோரிடத்துமடக்கு நாற்பத்தைந்தொடு மடக்கு நூற்றைந்தா மென்றவாறு.

இச்சூத்திரத்துண் முதலேவந்த முதலொடென்பதனை முதனிலைத் தீபகமாக்கி யிடைகடையென்னு மிரண்டினு மேற்றுக. (அ)

260. அவற்றுள்,
முதற்றொடைவிகற்பமேழொடுநான்கொடுந்
திதப்படவோரடியொழிந்தனசிவணும்.

(எ-ன்) இதுவு மத்தானங்களைத் தொடைவிகற்பங்களாற் கூறு படுத்தி விரித்துணர்—ற்று.

(இ-ள்) அவற்றுள், (அங்ஙனங்கூறப்பட்ட வோரிடத்தனவு மீரிடத்தனவு மூவிடத்தனவுமாக மடக்குமவற்றுள்) அடியொடு பொருந் தின முதற்றொடைவிகற்பமென்னு மிணைமுதலாகிய வேழொடுங் கடையிணை, யிடையிணை, முதற்கூழை, இரண்டாஞ்சீர் நான்காஞ்சீரொடு புணர்ந்த பின்னென்னு நான்கொடுங்கூடிப் பதினொருதொடைவிகற்பங்க ளொடுந் தெளிவுபெற வோரடியொழிந்தமடக்குகள் வருதலைப்பொருந்து மென்றவாறு. (கூ)

261. இடைவிடாமடக்கிவையெனமொழிப.

(எ-ன்) இது தொடர்பிடைவிடாதுமென்றசூத்திரத்தினுள் மூன்று பாகுபடு மடக் கென்றவற்றுள், முதலேகூறியபாகுபா டுணர்-ற்று.

(இ-ள்) இங்ஙனங்கூறப்பட்ட நூற்றைந்துமே யிடைவிடாமடக் கென்றுகூறுவர் புலவரென்றவாறு.

இவற்றிற்கெல்லாஞ் செய்யுள் வருமாறு:—

மதியார்மதியார்வளைவேணியினான்
விதியாவிரந்ததனைமீட்ட—முதியானை
மாதவனையல்லான்மதிப்பரோபேரின்பத்
தாதாவபூண்டவுளத்தால். (624)

இது முதலடி முதன்மடக்கு.

(இ-ள்) அறிவுடையோர், பிறையையும் ஆத்தித்தாரையுஞ்சூடின சடையையுடையான் பிரமசிரத்தையறுத்தகாரணத்தாற் பிரமசிரத்தி லிரந்ததனைப்போக்கின முதன்மையுடையோனைப் பெரியபிராட்டிகொழு நனை யுள்ளத்தாற்றியானிப்பதன்றிப் பரமபதத் தின்பத்தின்மே லாசை பற்றினவுள்ளத்தால் வேறொருகடவுளைத் தியானிப்பதில்லை யென்றவாறு.

வேறொருகடவுளரையென்பது சொல்லெச்சம். ஓகாரம்-எதிர்மறை. இதற்குப் புலவிர்காளென்னு முன்னிலையெழுவாய் தோன்றாது நின்றதாக விரித்துரைக்க. மதிப்பரோ யெனினுமாம். அதற்கு ஏகார மெதிர்மறை. திணை - பாடாண். துறை - செவியறிவுறூஉ; கடவுள்வாழ்த்துமாம்.

அமுதமடப்பாவையாடகப்போதல்கக்
குமுதங்குமுதங்கொளுந்தீத்—தமியராய்த்
தாழ்ந்தார்தமையன்றித்தண்ணளிமால்*கள்வனிற்பொய்
சூழ்ந்தார்தமைவருத்தாதோ. (625)

இஃதிரண்டாமடி முதன்மடக்கு.

(இ-ள்) அமுதமடப்பாவை - திருமகள். ஆடகப்போது—பொற்றாமரை. அல்கல்—குவிதல்; வறுமையெய்தலெனினுமாம். குமுதம்—ஆம்பல். குமுதங்கொளுந்தீ — மகிழ்ச்சியெய்தூந்தீ. தீ - சந்திரன், தன்னைச்சுடுதலாற் றீயென்றாள். தமியராய்த்தாழ்ந்தார் - புமான்களை நீங்கி மெலிந்தார். பொய்சூழ்ந்தார் - பொய்சொல்லவு நினைந்தார். தமை வருத்தாதோ - அவர்தமை வருத்தாதோ. வருத்திற்றாகில் நமது தலைவரும் வருவர். வாராமையால் வருத்தாதொழிந்த தென்றவாறு.

பகுதி — பொருள்வயிற்பிரிதல். துறை — நிலவுகண்டழுங்கல். இதற்குத் தோழீயென்பதனைத் தோன்றாதுநின்றதாக விரிக்க. ஓகாரம் வினா.

சிட்டர்பாவுந்திருமால்செழும்பொழில்சூ
†ழட்டபுயகரத்துளாயிழையார்க்—கிட்டிடைதான்
சித்திரமோசித்திரமோதெவ்வர்முரண்முருக்கு
மத்திரமேகண்ணென்பவை. (626)

இது மூன்றுமடிமுதன்மடக்கு.

(இ-ள்) சிட்டர் - தொண்டர். அட்டபுயகரம் - திருப்பதி. இட்டிடை - சிறியவிடை. சித்திரமோ என்னுமிரண்டனுள், ஒன்று வெளி; ஒன்று பொய். பகுதி - இயற்கை. துறை - தகையணங்குறுத்தல்.

நன்காரிமாறனெனுநாவீறன்வண்குருகூர்
மன்கார்வரைமயிற்குமன்னவா—மென்கோங்
கரும்பாங்கரும்பாங்களபமுலையின்சொற்
சுரும்பாநயனத்துணை. (627)

---

* கள்வன் - திருக்கள்வனூர்.

† இது அட்டபுயங்கமெனப்படும்.

இதுவுமது. பகுதி—பாங்கற்கூட்டம். துறை - பாங்கன் செவ்வி செப்பல்.

தெண்டிரைப்பார்போற் றுந்திருவெள்ளியங்குடியார்
தண்டுளபமார்பந்தழுவாநாள்—வண்டுளர்பூந்
தேனிலாய்நீண்டகுழற்சேயிழைதன் னாருயிரும்
வானிலாவானிலாவாம். (628)

இது நாலாமடிமுதன்மடக்கு.

(இ-ள்) வண்டுளர்—வண்டுகுடையும். பூந்தேனிலாய்நீண்டகுழல்-பூவிற்றே னிலைபெற்று நீண்ட குழல். சேயிழைதன் னாருயிரும் - சிவந்த பூணினையுடையாள்கேடில்லாவுயிரும். வானிலாவானிலாவாம்—விசும்பின் கண்ணுதிக்குமதியா லுடம்பின் கண் நில்லாததன்மையையுடைத்தா மென்றவாறு.

உயிரும் வானிலாவா னிலாவாம் என்பது நீருந் தன்பாலிருந்தன என்பதுபோல ஒருமைபிற்பன்மை மயக்கம். திணை - பெருந்திணை. துறை - கண்டுகைசோர்தல். இவை நான்கும் ஓரடி முதன்மடக்கு.

நிலமனிலமன்னெடுவெளிதீநீரா
யலமனலமன்னமலன்—புலனைந்தும்
வென்றார்தொழுமால்விளங்குதிருவிண்ணகர
மென்றார்க்குமுண்டோவிடர். (629)

இது முதலிரண்டடியும் முதன்மடக்கு.

(இ-ள்) நிலமனிலமன்னெடுவெளிதீநீராய்—நிலமும் வாயுவும் நிலைபெற்றபெரிய ஆகாயமுந் தீயு நீருமாகி. அலமனலமன்னமலன்—நிறைவு பொருந்தின ஆனந்தமாக்கம்பெற்ற அழுக்கற்றவ னென்றவாறு. திணை-பாடாண். துறை - கடவுள்வாழ்த்து ; நகரவாழ்த்துமாம்.

மாதவனின்மாதவனின்வன்றாட்டுகளணவு
போதவண்மெய்ச்சாபமதைப்போக்கினளப்—பாதமலர்ப்
பொற்போதிப்பொற்போதிப்பூதலத்திட்டஞ்சலிப்பா
ரிற்போதமிக்கவர்யாரியார். (630)

இது முதலடியும் மூன்றாமடியும் முதன்மடக்கு.

(இ-ள்) மாதவனில் - கௌதமபாரியையாகிய அகலிகை. மாதவனின் - திருமகள்காந்தனே! நினது. வன்றாள்...............போக்கினள் - வலியதாளிற்பூழியைப் பரிசித்தகாலத்தக் கௌதமனாற் றனதுமேனிக் கெய்திய சற்படிவத்தைப்போக்கின ளாகையால். அப்பாதமலர்........... பூ தல த் தி ட் டு - அந்தத்திருவடித்தாமரைசெய்தபொலிவையேத்திப் பொன்போலுநிறத்தையுடையபூக்களை யிப்பூமியிலிருந் தத்திருவடிகளிற் சாத்தி. அஞ்சலிப்பாரிற்போதமிக்கவர்யார்யார்-தியானித்து வணங்குவாரினும் ஞானமிகுந்தவரில்லை யென்றவாறு.

இன் — நீக்கம். அடுக்கு, அணியின்கண்வந்தது. மாதவனில் "மென்மைவரினேளலணனவா"மென்பதனால் லகாரந்திரிந்து னகாரமாயிற்று. மாதவன் - படர்க்கைமுன்னிலையாகிய இடமயக்கத்துவந்த அண்மைவிளி. திணை - பாடாண். துறை - கடவுள்வாழ்த்து.

மறுகுமறுகுமலைவார்சடையான்விற்போன்
றிறுகுமுலைமேற்பசலையேறு—மூறுதேந்
தெகிழ்மலர்ப்பாணத்தான்செருக்கடந்தமாறன்
மகிழ்மகிழ்த்தார்வேட்டாண்மனம். (631)

இது முதலடியும் நாலாமடியும் முதன்மடக்கு.

(இ-ள்) உறுதேம் - பரிமளமிகுந்ததேன். தெகிழ்மலர்........ மாறன் - வழியாநின்ற பூவாளிகளையுடையானாகிய காமனதுபோரை வென்ற காரிமாறப்பிரான். மகிழ்...........மனம் - சூடுதற்குவிரும்பின வகுளமாலிகையைவிரும்பின விவளுடையமனமானது. மறுகு........ யேறும் - ஊசலாடாநிற்கும் ; அதுவுமன்றி, அறுகிணைப்புனைந்த நீண்ட சடையான்வில்லாகிய விமவானைப்போலத் திண்ணிதாயமுலைமேற் பசலையும் பாவாநிற்கும்; ஆதலா லெங்ஙன முயிர்வாழும், யாதோசெய லென்றவாறு. திணை - பெருந்திணை. துறை - கண்டுகைசோர்தல்.

ஆயிரம்பெற்றாளொருமூன்றைந்தாற்றானதியர்க்கு
மேயமுதல்வனெனுமெய்வேதம்—பாய்திரைப்பா
லாழியானாழியானஞ்சிறைப்புட்பாகனெனுங்
கோழியான்கோழியான்கோ. (632)

இது கடையிரண்டடியும் முதன்மடக்கு.

(இ-ள்) உண்மைவேதமானது, பரந்ததிரையோடுங்கூடியயாற்கடலை யுஞ் சக்கிராயுதத்தையுமுடையனுகி யழகியசிறையையுடைய புட்பாக னெனுந் திருவுறையூர்மாதவனைக் கோழிக்கொடியானையும், கண் ணாயிரம் பெற்றானையும், ஒருமூன்றுபெற்றானையும், மூன்றுமைந்தும்பெற்றானையு மாதியாகவுடையார்க்கெல்லா மந்தர்யாமியாக வுள்ளேபொருந்திய முதல்வ னென்றுகூறுநிற்கு மென்றவாறு.

மெய்வேதங்கூறுமெனக் கூட்டுக. கோ - கண். கண்ணென்பதனை யாயிரமென்பதுமுதலாயவற்றிற்கு முதனிலைத்தீபகமாக்கியும், மூன் றென்பதனை மூன்று, மூன்றுமைந்துமென்னு மிரண்டிற்கு முதனிலைத் தீபகமாக்கியும், மூன்று மைந்துமென வும்மை தொக்கதாக விரித்தும் உரைக்க. கோழி - உறையூர். திணை - பாடாண். துறை - கடவுள் வாழ்த்து.

சலராசிமண்மேற்றவறிழைபாஞான
மிலராயிலராயினுமா—மலரா
னனத்தானனத்தானருட்குருகூர்மாற
னெனத்தானணுகாதிடர். (633)

இஃ திடையிரண்டடியும் முதன்மடக்கு.

(இ-ள்) தவறிழையாஞானம் - தீங்கினைப்பயவா வுண்மைஞானம். இலராயிலராயினுமா மென்பது — ஞானமில்லாதவரா யில்லின்கண்வாழ் வாரேயாயினுமாக வென்றவாறு. உம்மை - இழிவுசிறப்பும்மை. மல ரானனத்தானனத்தா னென்பது - தாமரைமலர்போன்ற திருமுகமண்ட லத்தையுடையான்; அன்னவாகனத்தையுடையா னென்றவாறு. அருட் குருகூர்மாறனெனத்தானணுகாதிடர் என்பது அருளொடுகூடிய திருக் குருகூர்க் காரிமாறப்பிரானென் றுரைக்காற்கூறினவரிடத்துத் துன்ப மென்பது சிறிதுமணுகா தென்றவாறு. எனவே யணுகுவது பேரின்ப மென்பது பயன். துறை - இதுவுமது.

மாசாதந்தனைவழுத்தலெனுமன்பெனக்குத்
தாசாதிதாசாதிதன்னுமர்—தேசும்பெறப்
பாடார்திணர்திடார்பல்காலிவர்க்கெளிதோ
வீடாதவீடாதன்மேல். (634)

இஃ திரண்டாமடியும் நான்காமடியும் முதன்மடக்கு.

(இ-ள்) மாசரதந்தன்னை.......தாசரதி - பரதெய்வங்களைத் துதியாது தன்னைத்துதிப்பதே ஆன்மலாபமாகிய பெரிய சதிர்ப்பாடென்றறிந்து தன்னிடத் தன்புறுதலைப் பேதையேனாகிய எனக்குந் தரப்பட்ட சதிர்ப்பாட்டையுடையவன். தாசரதிதன்னாமம் - தசரதன் பிள்ளையினது திருநாமமாகிய ராம வென்பதனை. தேசுபெற.......பல்கால் - நாவும் மனதும் விளக்கமெய்தப் பலகாலுஞ்சொல்லார், சிந்திப்பதுஞ்செய்யார். இவர்க்கெளிதோ வீடாதவீடாதன்மேல் - இவ்வறியாமையுடைய வித்தன்மையோர்க்குச் சரீரம்விட்டகாலத் தழிவில்லாத பரமபதத்தின்கட் சென்று பேரின்பமெய்துத லெளியதொன்றாகா தென்றவாறு.

உம்மை இழிவுசிறப்பு. ஓகார மெதிர்மறை. துறை - இதுவுமது. இவையாறு மீரடிமுதன்மடக்கு. இனி மூவடி முதன்மடக்கு வருமாறு:-

வேலைவேலைக்கடுவைவென்றவிழிநீர்ததும்பு
மாலைமாலைப்பணிவார்வண்குருகூர்ச்—சோலைக்
கயலேகயலேகவர்குருகேநீக்க
முயலேமென்றார்க்கேமொழி. (635)

இஃ தீற்றடியொழித் தேனைமூன்றடியும் முதன்மடக்கு.

(இ-ள்) வேலினை, கடலுட்பிறந்த நஞ்சினை வென்றதாமென்று அவர் பாராட்டின விழிகளானவை துன்பநீர்துளிக்கும் மயக்கத்தினை, திருமாலடிகளைவணங்குவார் வளவிய குருகாபுரியின்கட் சோலைப்பக்கத்து நீரின்கட் கயலைப்பருகாநின்றகுருகே! நின்னைவிட்டுநீங்குதல் உள்ளத்தாலும் முயலுதல்செய்யேமென்று வஞ்சமொழிகூறிப் பிரிந்தவருடன் கூறுவாயாக வென்றவாறு. பத்தி - ஒருவழித்தணத்தல். துறை - பறவையொடு பரிவுற்றுரைத்தல்.

போதகமூன்போதகமூன்புட்பாகன்பூங்கமல
மாதகலாதெய்து மணிமார்பன்—சீத
மலர்மலர்சேர்ப்பொன்னிமதிளரங்கன்பேர்கற்
கலர்கலருள்வன்பாதகர். (636)

இது முதலயலடியொழித் தேனைமூன்றடியும் முதன்மடக்கு.

(இ-ள்) போதகமூன்பு - கசேந்திரன்மூற்காலத்து. ஓதகமூன் - மூலமேயென்றுகூறப்பட்டவாவியினிடத்தெதிர்ப்பட்ட. புட்பாகன் - கலுழவாகனன், பூங்கமல.........மணிமார்பன் - பொலிவினையுடைய

தாமரையா ளொருபொழுதும் நீங்காதேதழுவுங் கவுத்துவமணியொடுங் கூடிய திருமார்பினையுடையான். சீதமலர்........பொன்னி - குளிர்ந்த மலர்கள்விரியப்பட்ட திருக்காவிரிநதியாகிய. மதிளரங்கன் - ஏழாவரணத்தையுடைய திருவரங்கேசன். பேர்கற்கலர் கலருள் வன்பாதகர்-திருநாமத்தைக்கல்லாதவர் பாதகருள் வலியபாதகரா மென்றவாறு. திணை - பாடாண். துறை - பழிச்சினர்ப்பணிதன் முன்னோர்கூறினமையாவிது பரவார்ப்பழித்தல்; கடவுள்வாழ்த்துமாம்.

பானலங்கண்பானலங்கண்பான்மைப்பணிமொழியாய்
கானடுங்கற்கானடுங்கற்காய்சுரந்தான் — போனதினி
மண்காத்தருள்பெருமான்மாநீர்வளவயல்சூழ்
தண்காத்தண்காவுதுபோய்த்தான். (637)

இஃ தீற்றயலடியொழித் தேனைமூன்றடியும் முதன்மடக்கு.

(இ-ள்) செங்கழுநீர்போலுங் கண்ணிணையும், பாலினதினிமையை யுவமையாகக்கருதப்படும்பகுதியையுடைய மெல்லிய மொழியினை யுமுடையாய்! நடக்குங்கா னடுங்குதல்செய்யுங் காட்டிடத்துப் பாத்திவைத்தாற்போலு முள்வாய்ப்பரலையுடைய வெம்மையொடுங்கூடியசுரம் போனது, இனி யாஞ்செல்லாநிற்பத்தோன்றும் உது, உலகத்துயிர்களைக் காத்துக் கருணைசெய்யும்பெருமையையுடைய திருமாலது மிக்கநீரையுடைய வளப்பத்தோடுங்கூடிய வயல்கள்சூழ்ந்த தண்ணென்றசோலையையுடைய திருத்தண்காவா மென்றவாறு. செல்லாநிற்பத்தோன்றுமென்பது சொல்லெச்சம். பகுதி - உடன்போக்கு. துறை - நகர்காட்டல்.

கள்ளவிழ்பூங்காவுங்கடிதடமுஞ்செய்யுமல்லா
தெள்ளிடையவெள்ளிடையதில்லாத — வெள்ளைக்
குளத்தான்குளத்தான்குழுவளர்ப்பான்மூழிக்
களத்தான்களத்தான்கலர்க்கு. (638)

இது முதலடியொழித் தேனைமூன்றடியும் முதன்மடக்கு.

(இ-ள்) தேனையொழுக்கும் பூவினையுடையசோலையும், பரிமளிக்கும்வாவிகளும், வயலுமல்லாதே எள்ளுப்போடுதற்கு மிடத்தையுடைய வெளியென்பதில்லாத வெள்ளைக்குளமென்னுந் திருப்பதியையுடையான்,

குளம்பினெறிக்கூடிய ஆவினதுகூட்டத்தைவளர்ப்பான், திருமூழிக்களமென்னுந் திருப்பதியையுமுடையான் றீயமக்களுக் கொளிக்குங் கள்ளத்தையுடையனு மென்றவாறு. எனவே, நன்மக்களை வெளிவந்து காப்பானென்பது பயன். துறை - கடவுள்வாழ்த்து.

பணியும்பணியும்பணிமாமதியா
மணியுமணியுமரற்கும்—பிணிசெய்
தலைதலைதீர்த்தான்சரணமல்லாதேதம்ப
மிலையிலைத்தாரீந்துபுலவீர். (639)

இது நாலடியும் முதன்முற்றுமடக்கு.

(இ-ள்) புலவிர்காள்! பாம்பையுங் குளிர்ந்தபெரியமதியாய் மேலாக்கஞ்செய்யு மாலையையுஞ் சடைமேற்புனைந்த சிவனாகியபெரியோனுக்குந் துன்பத்தைச்செய் தறிவைநடுங்குவித்த பிரமசிரமானதைக் கையைவிட்டுநீங்குவித்தானாகிய ஸ்ரீமந் நாராயணன் றிருவடிகளல்லாதே, அந்தியகாலத் தறிவுநிலைகலங்கிச்சாய்ந்து பிறவியாகியகுழியிலே நீர் விழும்பொழுது வீழாதே நும்மைத் தாங்குந்தூண் வேறில்லையாதலாலவன்றிருவடிகளிற் றுளபமாலிகையைச்சூட்டி வணங்குவீராக வென்றவாறு.

அரற்கு மென்னு மும்மை சிறப்பும்மை. இலைத்தார் - இலைமாலையாதலால், துளவமாலிகையென்றாயிற்று. புலவீர் பணியு மெனக் கூட்டுக. திணை - பாடாண். துறை - ஓம்படை; கடவுள்வாழ்த்துமாம். இவை பதினைந்தும் அடிமுதன்மடக்கு. இனி இடைமடக்கு வருமாறு:—

கயிலாயம்பொன்னுலகம்புரந்தானும்புரந்தானுங்
களிக்கமேனு
ளெயிலார்தென்னிலங்கையர்கோன்பஃறலைக்கோர்கணைவழங்கு
மிந்தனூரான்
மயிலாய்மைவரையணங்கேநினதுயிராமேவல்புரி
மயிலைக்காவல்
பயிலாயத்தெழுந்தருளித்துணைவிழியாலுணர்த்தியருள்
பாரிப்பாயே. (640)

இது முதலடியிடைமடக்கு.

(இ-ள்) கயிலாயம் பொன்னுலகம் புரந் தரனும் புரந்தானுங் களிக்க என்பது வெள்ளிமலையையுந் துறக்கத்தையுந் தமதாகப்புரந்து அரனும்

புரந்தானுங் களிப்பெய்த என்பதாம். எயிலார்.......கோன்-கோட்டையாற் பெருத்த தெற்கின்கண்ணுண்டாய விலங்கையிலுள்ளார்க்கு அரசனாகிய விராவணன். பஃறலைக்கோர்........னோரான். பல தலைகளும் அறும்படிக் கொருவாளிதொட்ட திருவிந்தனோரான். மயிலாய்...........பாரிப்பாயே-மயில்களாடப்பட்ட மேகந்தவழும் மலையிலுறையுந் தெய்வமனையாய்! நினதுயிர்போன்றவளாய் நினதேவல்விரும்புமவளாம் மயில்போலுஞ்சாயலையுடையாளை நின்னைக்காப்பவரா யிடைவிடாத ஆயவெள்ளத்தார்கூட்டத் தடைந்து திருக்கண்பார்வையாற் குறிப்பினுணர்த்திக் கருணையைவிரிப் பாயாக வென்றவாறு. பகுதி - பாங்கற்கூட்டம். துறை - தோழியைக் காட்டென்றல்.

புண்டரிகப்பொகுட்டணங்கேழும்மதமாவிருமருப்பிற்
புழைக்கைநீட்டி
யொண்டிறலாரொருவனைநம் மகிழ்மாறன்மகிழ்மாற
னுறந்தையோங்கற்
கொண்டலுணின்றிருபிறைநள்ளிடைவருபாம்பெனவனைத்துக்
கொண்டகாலை
மண்டமர்க்கூற்றுவன்கணிச்சியெனத்தடிந்ததனையவன்
வாகைவேலே. (641)

இஃதிரண்டாமடியிடைமடக்கு.

இதனுள், மகிழ்மாறன்மகிழ்மாறனுறந்தையோங்கல் என்பது வகுளமாலிகையையுடைய காரிமாறப்பிரான் மகிழ்ந்துபோற்றும் மாயோன்றனது திருவுறையூர்வரையிடத் தென்பதாம். ஒழிந்தனவுரையிற்கொள்க. பகுதி - நடுங்கநாட்டம். துறையு மது.

பாரெழுதும்படிக்கெழுதாமறைமொழியைத்தமிழ்மொழியாய்ப்
பகர்ந்தமாற
னீரெழுதெண்டிரைப்பொருநைத்திருநாடன்வரையணங்கி
னீர்மைகுன்றாச்
சீரெழுதியெனையெழுதிக்களபமுலைக்களபமுலைத்
தேமென்கோதை
பூரெழுதிப்பேரெழுதிக்கிழிகொடுசீறூர்மறுகே
யுலாவுவேனே. (642)

இது மூன்றாமடியிடைமடக்கு.

இதனுள், களபமுலைக்களபமுலைத்தேமென்கோதை என்பது மான் மதக்குழம்பையுடைய முலையாகிய யானையையும், முல்லைமாலிகையினது தேனொடுங்கூடிய குழலையுமுடையா ளென்றவாறு. பார் என்பது உலகின் கண் ணுயர்ந்தோ ரென்றவாறு. நீர்மைகுன்றுச் சீரெழுதியென்பது பெண்ணினிலக்கணங்குன்றாத அ வ ய வ அவயவிகளின்பொலிவினை யெழுதி யென்றவாறு. பகுதி - சேட்படை. துறை - மடலேறும்வகை யுரைத்தல்.

மறைபடுசொற்பொருளினைத்தெற்றெனத்தமிழ்செய்நாவீறன்
மழைதோய்செவ்வி
யுறைபடுதெள்ளறலருவித்துடரிவரையரமகளிர்க்
குவமையாவீர்
நறைபடுசந்தனப்பொழில்சூழ்புனத்திடைவந்தடைந்ததெனி
னவில்வீரொன்னார்
கறைப்டுவன்பகழியொடுமன்னுநமன்னுதங்
கதிகற்றுங்கே. (643)

இது நான்காமடியிடைமடக்கு.

(இ-ள்) மறையிடத்துண்டானசொல்லின்கண் மறைந்தபொரு ளினைத் தெளியும்படிக்குத் தமிழ்மொழியாகச்செய்த நாவீறரது மேகம் படிந்த பருவத்துப்பெய்யுந் துளிகளாலுண்டான தெளிந்தநீராய்வரு மருவியையுடைய துடரிவரையில் அரமகளிர்க் குவமையாகப்பட்ட மங்கைமீர்! முகையவிழ்ந்தபூவிற்றேன் றுளித் தாரவாரிக்குஞ் சந்தனப் பொழில்சூழ்ந்த நுமதுபுனத்தின்கண் சத்துருக்களைக் கொலைசெய் துண்டான குருதியின்முழுகிய பகழிதைத்ததொடும் ஒரு அரசுவா ஆக்கம்பெற்ற மலை நடைகற்றதுபோல வந்தடைந்த துண்டெனிற் கூறு வீராக வென்றவாறு.

உவமையாவீரென்றதனு லவர்கள் காந்தியை யுயர்த்திக்கூறினுனும். ஆங்கு என்றது வமவுருபு. கதி - நடை. பகுதி - மதியுடன்படுத்தல். துறை – வேழம்வினுதல். இவைநாலு மோரடியிடைமடக்கு. இனி யீரடியிடைமடக்கு வருமாறு:—

அந்தாத்தாருவியுவாவடமலைமன்வடமலைமன்
னந்தண்சாரற்
சந்தனப்பூந்துணர்மலிந்தவண்டழையவண்டழைய
தனைக்கொண்டுற்றேன்

சிந்தூரவாணுதற்களபத்தகழலைத்துவரிதழ்வாய்ச்
செவ்வேலுண்கட்
கொந்தவிழ்பூங்குழலீர்ளைக்கொள்வீர்மாரனையடிமை
கொள்வீர்மாதோ. (644)

இது முதலிரண்டடியும் இடைமடக்கு.

இதனுள், அந்தரத்தாரருவியுவாவடமலைமன்வடமலைமன் னந்தண் சாரலென்பது - விசும்பின் உச்சியினின்றுமிழிந் தாரவாரிக்கு நீரருவியும், யானைத்திரளும் ஆலமரத்தினையலைக்கும் நிலைபெற்ற வடவேங்கட மென்னும் மலைக்கு மன்னன், அவனதாம் அழகிய குளிர்ந்த மலைப்பக்கத் தின்கண் ணென்றவாறு. பூந்துணர்மலிந்த வண்டழைய வண்டழை யதனைக்கொண்டுற்றே னென்பது — பூங்கொத்துக்கள் பரிமளத்திறற் கூட்டமானவண்டுகளைத் தன்னிடத்தழைக்கப்பட்ட அழகியவளப் பத்தையுடைய சந்தனத்தழையதனைக் கையுறையாகக் கைக்கொண்டு நும்மிடத்துவந்தே னென்றவாறு. ஒழிந்தனவும் உரையிற்கொள்க. பகுதி - இதுவுமது. துறை - கருத்தறிவித்தல்.

கதியேபற்றுனர்ஞானக்கண்ணகலாக்கண்ணகலா
காயங்காண்பா
னதியேமுற்றியவரங்கத்திடை துயிலும்புயல்வரைமே
னயந்துவாழ்நும்
பதியேதிங்குரைத்திடுமென்றனைறையீர்நறையீர்மென்
பதுமைபோல்வீர்
மதியேதிங்கினியெனவுந்தெளிகிலனேகுதற்குமொரு
வழிசொல்வீரே. (645)

இது முதலடியும் மூன்றுமடியும் இடைமடக்கு.

(இ-ள்) பேரின்பத்தையுட்கொண்டாருள்ளக்கண்ணைவிட்டு நீங்காத இடமகன்ற பரமாகாயத்தைச் சென்றுகாணவேண்டித் திருக் காவிரியாகிய விரண்டாறுசூழ்ந்த அரங்கத்தினடுவே கண்வளரும் காளமேகம்போன்ற திருமேனியையுடைய அரங்கநாதன்வரையினிடத்து விருப்பத்துடன்வாழுந்தேனோடுங்கூடிய குளிர்ந்ததாமரையாளையொப்பீர்! இவ்விடத்து நும்முடையபதி யேதென்று கூறுகவென்றனன் கூறு கின்றிலீர், இனிமேன் மதி யாதென்றுந் துணிகிலன் ; மீண்டுபோவதற் கொருவழியுங் காண்கின்றில னென்றவாறு.

னறையீர்நறையீரென்பதனைப் பாடமாற்றி ஒற்றைப் பெயர்த்து அறையீரெனக்கூட்டுக. இதனுள், கதியேபற்றினர்ஞானக்கண்ணகலாக் கண்ணகலாகாயமென்பனமுதலாக அரங்கத்திடைத்துயிலும்புயல்வரைமே னயந்துவாழ்நும் பதியேதிங்குரைத்திடுமென்றனனறையீ ரென்பன வீறுக நோக்கென்னும் யாப்புக்காலெனக்கொள்க; என்னை "மாத்திரை முதலாவடிநிலைகாறு, நோக்குதற்காரணநோக்கெனப்படுமே" என்றாராக லின். அஃதே லிதனுள் நோக்கிக்கொள்ளக்கிடந்தமை யாதோவெனின், பேரின்பத்தைவிரும்பினோர் ஞானக்கண்ணை விட்டுநீங்காத பரமாகாயத்தை யவர்சென்றுகாணவேண்டிப் பரமகிருபையால் வெளிவந் தரங்கத்திடைக் கண்வளரும் அவன்வரையிடத்து விருப்பத்துடன்வாழுந் தாமரை யாளைப்போல்வீரென்றதனால், அவன்வரையிலிருந்தும் யான்விரும்பிய நுமது சீறூரை யெனக் குரைக்கின்றிலீ ரென்னதறுகண்மையோ என் பது நோக்கிக்கொள்ளக்கிடந்தமையா னெனக்கொள்க. ஏகாரமிரண்ட னுள், முன்னையது பிரிநிலை. ஏனைய ஈற்றசை. ஒழிந்தனவு முரையிற் கொள்க. பகுதி - இதுவுமது. துறை - பதிவினாதல்.

வயற்கழுநீர்க்கழிகவின்மாண்கொழுநனையேகொழுநனையே
மகிழ்நன்மாதர்
கயற்கருங்கண்ணெனமலராமுனங்களைகட்டெறிதிருக்காட்
கரைமால்வெற்பிற்
செயற்கரியதிருவுருவானுயிர்கொல்லிப்பாவையாய்ச்
சிறந்தீருங்க
ளியற்பெயர்யாதெனவினவியதைமொழியுமொழியுமிகழ்
வதனைமன்னே. (646)

இது முதலடியும் ஈற்றடியும் இடைமடக்கு.

இதனுள், கழுநீர்க்கழிகவின்மாண்கொழுநனையேகொழுநனையே மகிழ் நன்மாதர் என்பது செங்கழுநீரினது மிக்க அழகினையுடைய மாட்சிமைப் பட்ட கொழுவியபூமுகையைத் தங்கள்புமான்களை விரும்பு நல்ல கடைசிய ரென்றவாறு. கொழுநனையேயென்பது தேற்றேகாரம்; பிரி நிலையுமாம். கொழுநனையேவிரும்பும்மாதர் கொழுவியநனை மலராமுன்னங் களைகட்டெறியென்றது இறைச்சி. என்னை? முகையாய்நிற்பதன்றி

மலர்ந்தா லிவை யெமது கண்ணுக் குவமைபா யெமது கொழுந்ற்கு விருப் பத்தைக்கொடுக்குமென்னு மாற்சரியத்தாற் களைகட்டெறிந்தா ரென்னுங் குறிப்புப் பொருட்புறத்ததாய்நிற்றலானெனக்கொள்க. அதன்றெனில், கண்ணெனமலராமுன்னங் களைகட்டெறிந்தாரென்பது பயனில்கூற்றும். சிறப்புப்பெயர் சொல்லிப்பாவையென்பது செய்தற்கரிய வுமது அழகிய வடிவினுலறிந்தேம். அறியாத இயற்பெயரை மொழியும்; எம்மையிகழ் வதனை யொழிவீராக வென்றவாறு. செயற்கரியதிருவுரு - எழுதுதற் கரியதிருவுரு. பகுதி - இதுவுமது. துறை - பெயர்வினுதல்.

பூந்துளபம்புனைதிருமால்பொன்னியினுட்பொறியரவிற்
புயல்போல்வண்ணந்
தோய்ந்துதுயில்பயிலரங்கேசனைத்தொழுமாறன்றுடரித்
தோகைபோல்வீர்
வாய்ந்தவனப்பல்குலுக்குத்தனக்குவடுதனக்குவடு
வகிராழுங்க
ளேந்தெழிற்கட்புலங்கொளநின்றிடையேதங்கிடையேதங்
கியம்புவீரே. (647)

இது கடையிரண்டடியும் இடைமடக்கு.

(இ-ள்) வாய்ந்தவனப்பல்குலுக்குத் தனக்குவடுதனக்குவடு வகிரா ழுங்கள் என்பது வனப்புவாய்ந்தவெனப் பாடமாற்றி அழகுவாய்ந்த அல்குலுக்குந் தனமாகிய மலைதனக்கும் வடுவகிர் நிகராகியவுங்கள் என்ற வாறு. ஏந்தெழிற்கட்புலங்கொள என்பது உயர்ந்த அழகினையுடைய கட்புலனுக என்றவாறு. இடையேதங்கிடையேதங்கியம்புவீரே என்பது இரண்டிற்குநடுவே குடியிருக்கும் மருங்கான தெது தானவ்விடத்தென்று வினவுவேற் கிதுவென்றுசொல்லுவீராக வென்றவாறு. எனவே, எனது கண்ணிற்குப் புலப்படுவதின்றென்பது போந்தபொருள், பகுதி—இதுவு மது. துறை - இடைவினுதல்.

உரையார்ந்ததொகைப்பனுவன்முழுதுணர்ந்துழலகியலொன்
றுணராதார்போல்
வரையாதுமறைபுரிகோமானினைவுமானினைவு
மனத்துளுடி.

விரையார்நன்பசுந்துளபத்திருமாலைத்திருமாலை
வில்லிபுத்தூர்த்
திரையாடைப்புவிமகடன்கோமானைவணங்கலரிற்
றிகைக்கின்றேனே. (648)

இஃ திடையிரண்டடியு மிடைமடக்கு.

இதனுள், கோமானினைவு'மானினைவுமனத்தானுடி என்பது தலைவனே! உனதுள்ளத்து நினைவும், எனது மான்போலும்விழியினையுடையாண்மனத்து ணினைவும் எனது மனத்துட்கூறித்து என்றவாறு. துளபத்திருமாலைத்திருமாலை வணங்கலரிற் றிகைக்கின்றேனே என்பது துளபமாகிய அழகியமாலையையுடைய திருமகளோடுங்கூடிய மாயோனை வணங்காத் தீயமக்களைப்போல யான் மனமறுகாநின்றே னென்றவாறு. உலகியலொன்றுணராமை—உலகநடை சிறிதுமறியாமை. மறைபுரிதல்—வரைந்துகொள்ளாது களவொழுக்கத்தை நீட்டிக்கவிரும்புதல். பகுதி-பகற்குறி. துறை - வருத்தங்கூறி வரைவுகடாதல்.

மீனமாதியவாயவவதாரம்புரிந்தருண்மால்விண்ணோர்போற்றும்
வானமாமலைவளர்சீவரமங்கைவரமங்கைமார்நீரென்றூன்
மோனமாயிருந்ததனாற்பயனேதுவிருந்தினர்க்குமுகமன்கூறி
யீனமாகியவுறநோய்களைகண்ணுங்களைகண்ணுங்கியற்றிலீரே. (649)

இஃ திரண்டாமடியு மீற்றடியு மிடைமடக்கு.

இதனுள், சீவரமங்கை வரமங்கைமார் நீரொன்று லென்பது சீவரமங்கையென்னுந்திருப்பதியிற் சேட்டமாகிய மங்கைப்பருவத்து மடந்தையரையொப்பீரென் றுலகினுள்ளா ரும்மைக் கூறுவராயின் என்பதாம். பருவம் பேதும்பையராயினும் வியப்பினான் மங்கைப்பருவத்துள்ளாரையொப்பீ ரென்றான். மோனம்—மௌனம். நோய்களைகண்ணுங்களைகண்ணுங்கியற்றிலீ ரென்பது காமமாகியபிணியைக்களையுங் கருணையாங் காவலை நீர் செய்கிலீ ரென்றவாறு. ஒழிந்தனவு முறையிற் கொள்க. பகுதி—மதியுடன்படுதல். துறை - மொழிபெறாது வருந்தல். இவையாறு மீரடியிடைமடக்கு. இனி மூன்றடியிடைமடக்குவருமாறு:—

இருங்கணையின்றிவனுறிவர்தனுவேட்டைதனுவேட்டை
யிசையாதெவ்வுள்
வருந்திருமால்பனிவரைமேற்காவியங்கண்காவியங்கண்
மதியுட்கொண்டோ
ரொருங்குபுகழ்வதற்கரிதாமாதினைமாதினைக்காவ
லுவந்தாளென்கை
பொருந்துவதன்றிருவருந்தம்முட்காதன்மதர்நோக்கிற்
புகல்கின்றாரே. (650)

இஃ தீற்றடியொழிந்த வேனைமூன்றடியு மிடைமடக்கு

(இ-ள்) இவ்விடத் திப்புனத்துற்றவிவர்கையிற் பெருமையுடைய கணையு மில்லை, இவர்யாக்கையுந் தளர்ச்சியுடையது, ஆகையா லிவர் வில்வேட்டையும் பொருந்துவதன்று; இஃதன்றி, இந்த மாதராளைப் பெரிய தினைக்காவல்வரும்பிறனென்கையு முண்மையன்று, இவள் நீலோற்பலம்போன்றகண்களைப் பலகாப்பியங்களையு முணர்வினுட் கொண்டோரெல்லாங்கூடியும் புகழ்தற்கரிதாம்; இருவருமொருவ ரொருவர்மேலுள்ளவுள்ளக்காதலைக் கண்களாலுரைக்கின்றனரென்றவாறு. பகுதி—குறையுறவுணர்தல். துறை-இருவர்நினைவுமொருவழியுணர்தல்.

சுனையுணீனிறநாண்மலர்நாண்மலர்தொறுந்துணர்தெகிழ்ந்துக்க
நனையுண்மூழ்கியபலவினின்சுளையினைநாங்கைமால்வரைக்கிள்ளை
யனையபேடைவாயருத்தியினருத்தியின்புறுநிலையதுகண்டோர்
நினைகலானமூங்காற்றலையாற்றலைநினதுகண்ணுறின்மானே. (651)

இது முதலயலடியொழித் தேனைமூன்றடியும் இடைமடக்கு.

(இ-ள்) சுனையுணீனிற..........தொறும் என்பது சுனையின்கண் ணுண்டாவதாய நீலமணியினொளியு முவமைக்குநாணும் நீலோற்பலம் பக்குவம்வந்து மலருந்தொறும் என்றவாறு. துணர்தெகிழ்ந்து........ கிள்ளை என்பது அகவிதழ்நிறைந்தொழுகிய தேனின்கண், கரைசார்ந்த சோலைப்புறத்து வீசுகொம்பர்நின்று மளிந்துவீழ்ந்து நனைந்த பலவி னினியசுளையைத் திருநாங்கைமாயோன்வரையிற் சேவற்கிளியானது என்றவாறு. அனையபேடைவாய்..........கண்டு என்பது தனதுயிரனைய பெடைவாயிலன்பினலருத்தியின்பமெய்துநீதியைக் கண்டு என்றவாறு,

ஓர்நினைகலான்...........மானே என்பது ஒருவராலுநினைத்தற்கரிய பெருமையானொருவ னிரங்கு மிரக்கத்தின்மிகுதியை நினது கண் காணி னுற்றுவாயல்லே, மான்போலுங்கண்ணினையுடையா யென்றவாறு. ஒருவ ராலுமென்பதும், உயிரென்பதும், பேடையென்பதனாற் சேவலென்பதும் வருவிக்கப்பட்டன. பகுதி - குறைநயப்பித்தல். துறை—விரவிக்கூறல்.

மாமடந்தைகுடிபுகுந்தவன்பிலுறுமன்பிலுறுமாயோன்வெற்பிற்
காமருவண்டினமேநீர்தாந்தாந்தாமெனவாழ்கமலவைப்பிற்
பூமடந்தைமுகமலர்போன்றொருகமலத்திருகுவளைபூத்தவாகத்
தாமருவிக்குமுதமும்வெண்முல்லையுமுல்லையுமுளவோசாற்றுவீரே. (652)

இஃ தீற்றயலடியொழித் தேனைமூன்றடியும் இடைமடக்கு.

(இ-ள்) மாமடந்தைகுடிபுகுந்த வன்பிலுறுமன்பிலுறு மாயோன் வெற்பில் என்பது பெரியபிராட்டிகுடிகொண்ட அன்பிலென்னுந்திருப் பதியின் மிக்கஅன்பிலெய்திய மாயவனதுவெற்பில்வந்த என்றவாறு. காமருவண்டினமே........கமலவைப்பின் என்பது அழகிய வண்டுகாள்! நீங்கடாம் தாந்தாந்தாமென்றபாட்டோடும்வைகும் மருதநிலத்தின் கண்ணேயுள்ள தாமரையோடையின்கண் என்றவாறு. பூமடந்தை........ சாற்றுவீரே என்பது இந்தப் பூமகள் முகத்தாமரையையொப்பதா யொருதாமரையினிடத் திரண்டுகுவளைபூத்தனவாக நிலைபெற்று மவற் றுட னொருசேதாம்பலும் முல்லையரும்பும் முல்லையாகியபண்ணுங் கண்ணிற்கண்டனவுஞ் செவியாற்கேட்டனவு முளவாகிற் சொல்லுவீராக வென்றவாறு. பகுதி - இயற்கை. துறை - வண்டொடுநன்னய முரைத்தல்.

உருவளர்மாத்தினமகலத்து முதிறத்திற்பயோதரங்க
ளொருங்குதோய்ந்து
பொருவருநன்பரிமளங்கூர்வனமாலைவனமாலை
பொருந்திச்செய்ய
பருதியுடன்பனிமதியுமிருபாலுமிருபாலும்
பயின்றுதோன்றுந்
திருநெடுமால்பொருவருமிவ்வடமலையும்வடமலையு
முலைச்செந்தேனே. (653)

இது முதலடியொழித் தேனைமூன்றடியும் இடைமடக்கு.

(இ-ள்) முத்துவடங்கிடந்தசையுமுலையொடுங்கூடிய தேன்போலு மொழியினையுடையாய்! ஒளிதழையாநின்ற பெரியபிராட்டி நாளுந் திருமார்பிற் குடிகொண்ட கூறுபாட்டால் அவளது திருமுலைச்சுவடுகளைத் தழீஇயதுடன், ஒப்பில்லாமணத்தைப்பெருப்பித்துக் காடாகியவியல்பையுடைய துளபமாலையையும் பொருந்தி, செம்மையுடையநேமியாகிய ஆதித்தனுடன் பாஞ்சசன்னியமாகிய குளிர்ந்த மதியையும் வலமிடமென்னு மிரண்டுபக்கமுந் தரித்திருக்குமுறையும் இடைவிடாத தோற்றப்பொலிவுண்டாந் திருவொடுங்கூடிய மாயோனையொக்கும்; சினையோடும்வளராநின்றமாமரத்தின்கூட்டந் தன்னிடத்துற்ற கூறுபாட்டோடுங் காளமேகங்களொக்கத்தவழ்தல்பொருந்தியும் ஒப்பில்லாத நல்ல மணத்தைப்பெருக்குங் காடாகியவியல்பையுடைய துளபமாலைபொருந்தியும், ஆதித்தனுடன் சந்திரனும் இரண்டுபக்கமுமிருக்குமுறையும் பொருந்தியுந்தோன்றுமிவ் வடவேங்கடமாகிய மலையுமென்றவாறு. இதனுள் வனமாலைவனமாலையென்பது அத்தச்சிலேடை. பருதியும் பனிமதியுமென்பது மாட்டேறில்லாவுருவகம். ஒழிந்தன சத்தச்சிலேடை. பகுதி—குறைநயப்பித்தல். துறை - அறியாள்போறல்.

முளைநிலாவினைநேர்நுதனேர்நுதன்முகிணகையணைமென்றோ
ளிளையளாமிவட்கேமமேமமதுறவேதிலாரணிவானற்
கிளையினீண்டினர்கேளினிக்கேளினிக்கெழுதகையுறல்வேண்டிற்
களைகணுநிறைகடிநகர்க்கடிநகர்காணமன்விரைவாயே. (654)

இது நான்கடியும் இடைமுற்றுமடக்கு.

(இ-ள்) இளம்பிறையை யுவமைகுறிக்கப்பட்ட சிறியநுதலினையும், முல்லைமுகைபோன்ற பல்லினையும், அணைபோன்ற மெல்லிய தோளினையும், இளமைத்தன்மையையுமுடையளாமிவளுக்குப் பொன்னையின்பமுறவணிவான் அயலவர் மகட்பேசித் தமரொடுமெமதுமனையிடத்துக் குழுமினராகையாவினிக் கேட்பாயாக மன்னனே! உனதுசுற்றத்தோடும் எம்மோடுண்டாகிய இந்த நட்பு மிகுதல்வேண்டினையே லுலகத்துயிர்கட்குக் காவலாகிய இறைவனும் மாயோன் திருக்கடிநகரிடத்துத் திருமணம் நகரிலுள்ளார்காண அயலவர்க்குமுன்னே யிவளை வரைந்துகொள்வான் விரைவாயாகவென்றவாறு.

நேர்நுதல்-சிறுநுதல். "சிறுநுதற்பேரமர்க்கட்செய்யவா" யென்றார் பிறரும். பகுதி - உடன்போக்கு. துறை - மகட்பேச்சுரைத்தல். இவை கரு-ம் இடைமடக்கு.

இனி அடியிறுதிமடக்கு வருமாறு:—

கூன்பிறையவெண்கோட்டிற்கொன்னாகங்கொன்னாகந்
தான்பதைத்துமூலமெனத்தாழா துதவியமால்
வான்புகழுந்தென்னாகைமானனையீர்வண்டழைபிங்
கேன்புரிந்துகொள்ளாதிருப்பதிசைப்பீரே. (655)

இது முதலடியிறுதிமடக்கு.

இதனுள், கூன்பிறைய வெண்கோட்டிற் கொன்னாகங் கொன்னாகந் தான்பதைத்தென்பது வளைந்த பிறைபோன்ற வெண்கோட்டினாற் கொல்லும் யானை பெரியவுடம்பு நடுக்கமுற்று என்பதாம். தான்—அசை. மூல........மால் என்பது மூலமென்றுகூறத் தாமதியாதுதவிய மாயோனென்றவாறு. ஒழிந்தனவும் உரையிற்கொள்க. பகுதி - சேட்படை. துறை - தழைகொண்டுசேறல்.

தோலாதநேமிமுதலைம்படையுஞ்சூழ்ந்திறைஞ்சப்
பாலாழியுட்டுயில்கூர்பன்னகத்தான்பன்னகத்தான்
மேலாமவுணனூரங்கிழித்தவிண்ணகரான
காலானதென்றலைமேல்வைத்துக்களித்தேனே. (656)

இஃதிரண்டாமடியிறுதிமடக்கு.

இதனுள், பன்னகத்தான் - பாம்பணையான். பன்னகத்தான் மேலாமவுணனூரங்கிழித்தான் என்பது பலநகங்களால் வெற்றியான் மேம்பட்ட விரணியனுரத்தமார்பைப் பிளந்தானென்றவாறு. ஒழிந்தனவும் உரையிற்கொள்க. துறை - கடவுள்வாழ்த்து.

சூழித்தறுகட்கடயானைதோலாத
பாழிப்பருவாயிடங்கரின்கைப்பட்டநா
ளாழிப்படையுடன்சென்றுளரியையாளரியைக்
காழித்திருமாலைக்கண்டுட்களித்தேனே. (657)

இது மூன்றாமடியிறுதிமடக்கு.

இதனுள், ஆளரியையாளரியை..............களித்தேனே என்பது ஆண்ட அரியென்னுந் திருநாமத்தையுடையானை, நரனுஞ் சிங்கமு மானானை, சீகாழியில்வாழுந் திருமாலைக் கண்களாற்கண் டுள்ளங்களித்தே னென்றவாறு. துறை - கடவுள்வாழ்த்து.

அண்ணாந்தெழுந்ததுணைமுலையார்க்காருயிர்தங்
கண்ணாங்கொழுநரெனுங்கட்டுரைகேட்டுற்றுணர்ந்துந்
தண்ணார்வகுளத்தமிழ்மாறர்க்கன்பிலர்போன்
றெண்ணாதகன்றனராலென்சுகமேயென்சுகமே. (658)

இது நாலாமடியிறுதிமடக்கு.

இதனுள், என்சுகமேயென்சுகமே என்பது எனக்கு என்னுடைய கிளியே! என்னமகிழ்ச்சியுள்ள தென்றவாறு. பகுதி — பொருள்வயிற் பிரிதல். துறை - பறவையொடுபரிவுற்றுரைத்தல். இவை நாலும் ஓரடி யிறுதிமடக்கு. இனி ஈரடியிறுதிமடக்கு வருமாறு:—

மூன்றாயமைந்ததொழின்முன்னானைமுன்னானை
தான்றாழ்தடத்தழைத்தசங்கரியைச்சங்கரியைத்
தோன்றாதிடத்தமைத்தசூழ்ச்சியனைத்தொல்லைநா
ளீன்றானையீன்றானையென்னுளத்தேவைத்தேனே. (659)

இது முதலிரண்டடியும் இறுதிமடக்கு.

(இ-ள்) சிருட்டி திதி சங்காரமென்று தன்னாலமைக்கப்பட்ட மூன்றிற்கு மங்கங்கு முன்னாயிருக்கப்பட்டவனை, முதலைமுன்னையானை தாழ்ந்ததடத்துநின்று மூலமென்றழைத்த சங்கினையுடைய அரி யென்னுந் திருநாமத்தையுடையானை, உமையை வேறுபட்டுத்தோன் றாது தனதிடப்பாகத்தடக்கின விசாரத்தையுடைய அரனை முற்காலத் தீன்ற பிரமனையீன்றவனை முத்தியளிக்கவல்ல பிரமமென வுட்கொண்டே னென்றவாறு. திணை - பாடாண். துறை - கடவுள்வாழ்த்து.

கோதறவில்வாங்கியுடக்குஞ்சாத்தாற்குஞ்சாத்தாற்
கேதமிழைத்தவிராவணியையன்றுதவ
சாதனத்தாற்கொன்றபிரான்றம்முன்னைத்தம்முன்னைப்
பாதகந்தீரப்புகழ்வார்பாதம்பணிந்தேனே. (660)

இது முதலடியும் மூன்றாமடியும் இறுதிமடக்கு.

(இ-ள்) குற்றந்தீரத் தனுவைக் கைக்கொண்டு தொடுக்கும் அம்பி னால் ஐராவதப்பாகனை இந்திரனுக்கு மானபங்கத்தையுண்டாக்கின இந்திரசெயித்தை, முற்காலத்துத் தவசரிதையாற்கொன்ற இலக்குமண னென்னு மெனதுசுவாமிக்குத் தமையனே, யாவரேயாயினுந் தங்கள் கழிபிறப்பிற் பாவந்தீரப் புகழாநின்றார் அவர்பாதத்தை யெனதுபிறவித் துன்பம்நீங்க வணங்கினே னென்றவாறு. திணை - பாடாண். துறை— பழிச்சினர்ப்பணிதல்.

பொன்பொற்றிலங்குமலர்ப்பூவையேபூவையே
மண்பொற்றிருமேனிமாயோன்வடமலைமேன்
மின்பொற்றொடித்தடக்கைகூப்பாதவீறென்னோ
நின்பொற்றிருநுதற்குநேர்மதிக்குநேர்மதிக்கும். (661)

இது முதலடியும் ஈற்றடியும் இறுதிமடக்கு.

இதனுள், மலர்ப்பூவையேபூவையே மண்பொற்றிருமேனி என்பது தாமரையிலிருக்குந் திருமகளேயொப்பாய்! காயாம்பூவையொத்த மிக்க பொலிவினையுடைய திருமேனி என்றவாறு. நின்பொற்றிருநுதற்கு நேர்மதிக்கும் நேர்மதிக்கும் என்பது உனது அழகியநெற்றிக் குவமை குறிக்கும் நேரிய பிறைக்கு மென்றவாறு. ஒழிந்தனவு முறையிற்கொள்க. பகுதி - நாணநாட்டம். துறை - பிறைதொழுகென்றல்.

அந்தமுதலாயமைந்தானையெம்மனோர்
பந்தமறுத்தாள்பரனைச்சுமித்திரைதன்
மைந்தனெடுங்காான்போந்தமாதவனைமாதவனை
யெந்தையையல்லாதிறையுண்டென்னுவேயென்னுவே. (662)

இது கடையிரண்டடியும் இறுதிமடக்கு.

இதனுள், மாதவனைமாதவனை என்பது திருமகள்காந்தனை, பெரிய தவசரிதையுடையானை யென்றவாறு. எந்தையை - எம்முடைய சுவாமியை. அல்லாதிறையுண்டென்னுவேயென்னுவே என்பது அவனை யன்றிவேறு பரப்பிரமமுண்டென்றுகூறுதென்னுடையநா வென்றவாறு. ஏகார மிறுதிய நீற்றசை. துறை - கடவுள்வாழ்த்து.

தாவாதபேரின்பஞ்சார்வதற்குச்சிற்றின்பத்
தேவாமலென்னைமதனெய்யாமையெய்யாமை

மாவாதனைமறந்துவாமனனேவாமனனே
தேவாதிதேவனெனச்சந்ததமுஞ்சிந்தித்தே. (663)

இஃ திடையிரண்டடியும் இறுதிமடக்கு.

(இ-ள்) என்னைமதனெய்யாமையெய்யாமை என்பது என்னைக் காமன் சிற்றின்பத்திலேவேண்டிமூட்ட என் மேற் பஞ்சபாணங்களை யிடைவிடாமைத்தொடுத்திடாமல் என்றவாறு. வாமனனே............... வாமனனே என்பது வாமனவதாரமாகியநாராயணனே தேவர்க்கெல்லாம் முதலான தேவனென அனவரதமுஞ் சிந்தித்துக் கழிந்தபிறப்பிலு மிப் பிறப்பிலு முண்டான பொல்லாத வார்த்தைகள்யாவும் மறந்து என்னோ டொத்துவா என்னுடையமனனே! என்றவாறு. திணை - காஞ்சியைச் சார்ந்த பொதுவியல். துறை—பொருண்மொழிக்காஞ்சி. திணை—பாடாண். துறை—கடவுள்வாழ்த்தெனினு மாம்.

காண்டகுபொற்பூமடந்தைநற்பாரிகண்ணன்பே
ராண்டபழம்பதியுமந்தாமமந்தாமங்
கூண்டளிபண்பாடுதுழாய்கூராழிகைவலத்தே
பூண்டதவன்சீருளத்தேபூரியார்பூரியார். (664)

இது நாலாமடியும் இரண்டாமடியும் இறுதிமடக்கு

இதனுள், ஆண்டபழம்பதியும்........துழாய் என்பது அவன்புரந்த தொன்மைப்பதமாவது பரமபதம், அழகிய மாலையாவதும் வண்டுகள் தேனையுண்டு பண்களைப்பாடும் வனமாலையாம் என்றவாறு. அவன்சீருளத்தேபூரியார் பூரியார் என்பது அவனதாந் திருமேனியிற்காந்தியைத் தீயமக்கள் உள்ளத்தாற் றியானித்து அகத்தே நிறையா ரென்றவாறு. எனவே யெப்படியீடேறுவ ரென்பது குறிப்பு. திணை—பாடாண். துறை—புகழார்ப்பழித்தல்; கடவுள்வாழ்த்தெனினு மாம். இவையாறும் ஈரடி யிறுதிமடக்கு. இனி மூன்றடியிறுதிமடக்கு வருமாறு:—

முன்னிலங்கொள்ளாதபிலமுன்பரையுமுன்பரையுந்
தன்னாணுலீந்தவரந்தாவுறவேதாவுறவே
மன்னிலங்கேசன்முதலாமைந்தரையுமைந்தரையு
மின்னுயிருண்டான்குணங்கற்றின்பம்பயின்றேனே. (665)

இஃ தீற்றடியொழித் தேனைமூன்றடியும் இறுதிமடக்கு.

(இ-ள்) மன்னிலங்கேசன்முதலா மைந்தரையு மைந்தரையும் என்பது இராவணன்முதலாய மிடுக்குள்ளாரையும், அவர்கள்புதல்வரையும் என்றவாறு; மூன் னிலங்கொள்ளாத பிலமுன்பரையு முன் பரையுந் தன்னரணுலீந்தவரந் தாவுற வேதா வுறவே என்பது முன்னுளிற் பூமியிடங்கொள்ளாத பாதாலத்தின் மூலபெலப்படையாய்வந்த வலியுடையாரையும் முன்னுளுமை தனதுபுமானுன சிவனுற்கொடுப்பித்த வரமும், பிறர்கொடுத்தவரமும் அழிவுறப் பிரமாவும் போராண்மையிருந்தபடியோ வென்று மனத்திலே விசாரிக்க என்றவாறு; இன்னுயிருண்டான்........பயின்றேனே என்பது அவர்க ளினியவுயிரையுண்ட தெசரதராமன் கலியாணகுணங்களைக்கூறிப் பேரின்பமெய்தினேன் என்றவாறு. திணை— இதுவுமது. துறை - கடவுள்வாழ்த்து.

கண்படையுண்கண்சிறிதுங்கண்ணகன்றகண்ணகன்றவ்
வொண்பொருள்செய்வார்பிரிவினுண்ணிறையுமுண்ணிறையும்
பண்புறநில்லாதினியீங்கென்செய்வேன்பாமாறன்
றண்பொருநைத்தண்டுறைவாழ்தாராவேதாராவே. (666)

இது கடையயலடியொழிந்த வேனைமூன்றடியும் இறுதிமடக்கு.

(இ-ள்) பாமாறன்றண்பொருநை...........தாராவே! என்பது திருவாய்மொழியாகிய பனுவலைச்செய்த காரிமாறப்பிரான்பொருநைத் தண்டுறையினிடத்துத் தாராவாகியபறவையே! என்றவாறு. கண்ணகன்ற..................பிரிவின் என்பது இடம்விரிந்தநாட்டின்கணீங்கிச் சுத்ததிரவியத்தை யீட்டவேண்டிப் பிரிந்தார்பிரிவினுல் என்றவாறு; உண்ணிறையுமுண்ணிறையும் பண்புறநில்லாது என்பது எனதுள்ளத்து ணிறைந்ததொன்றுய மகளிர்க்குச்சிறந்ததென வுலகம் விசாரிக்கப்பட்ட எனது நிறையானதும் எனது குணத்தின்வழிநில்லாது; அதுவேயுமன்றி என்றவாறு; கண்படை யுண்கண் சிறிதுந் தாரா என்பது எனது மையுண்கண்களானவை கணப்பொழுது முறங்குவதுஞ் செய்கின்றில என்றவாறு. இனி யீங்கென்செய்வேன் என்பது மேலிவ்விடத் தியான்செய்வது யாதுதா னென்றவாறு. இது கொண்டு கூட்டுப்பொருள்கோள். பகுதி—பொருள்வயிற்பிரிதல். துறை—பறவையொடுபிரிவுற்றிரங்கல்.

பாழிமருப்பேனமதாய்ப்பாரிடந்தான்பாரிடந்தான்
சூழியல்புற்றுடுபுலித்தோலுடையான்றோற்றஞ்சால்
காழ்வயிரக்குன்றெடுத்தகண்டகனைக்கண்டகனை
யூழறக்கொன்றுனகர்பூந்தேனிலுறையூருறையூர். (667)

இது முதலயலடியொழித் தேனைமூன்றடியும் இறுதிமடக்கு.

(இ-ள்) ஏனமதாய்ப் பாரிடந்தான்—வராகமாகிப் பூமியை யுழுதெடுத்தான் ; பாரிடந்தான்...............தோற்றஞ்சால் - பூதகணங்கள் சூழுமியல்புபொருந்தச் சுடுகாடரங்காக நடஞ்செய்யும் புலித்தோலுடையுடையானது தோற்றஞ்சான்ற ; காழ்வயிரக்குன்றெடுத்தகண்டகனைக் கண்டகனை யூழறக்கொன்றுனகர் — மிகவுந்திண்ணியகயிலையையெடுத்த விராவணனாகியபாதகனைச் செருக்களத்துக்கண்டு திருவுள்ளத் திரக்கத்தின்முறையின்றிக்கொன்றவனது நகரமானது ; பூந்தேனிலுறையூருறையூர் கோட்டிலுங் கொடியிலு நீரிலுமுண்டாகிய பூவிற்றேன்றுளி திசைதிசைபரக்குந் திருவுறையூரா மென்றவாறு. திணை - பாடாண். துறை - நகரவாழ்த்து ; கடவுள்வாழ்த்துமாம்.

ஏற்றமாம்வெள்ளோதிமத்தான்மழவிடையூர்
தோற்றமார்வெய்யபுலித்தோலுடையான்றேலுடையான்
போற்றவாழ்வுற்றவிருப்புள்ளேறுபுள்ளேறு
மாற்றலானன்பிலார்க்கன்பிலானன்பிலான். (668)

இது முதலடியொழித் தேனைமூன்றடியும் இறுதிமடக்கு.

இதனுள், புலித்தோலுடையான் றேலுடையானென்பது புலியினதுதோலை யுடையாகவுடையானும், ஐராவதத்தையுடையானும் என்பதாம். விருப்புள்ளேறுபுள்ளேறு என்பது தன்னிடத்தன் புள்ளத்திருக்கும் கருடனிலேறும் என்பதாம் ; அன்பிலார்க்கன்பிலானன்பிலான் என்பது தன்னிடத் தன்பிலாரிடத் தன்பிலாதானவன்யாவனெனிலன்பிலென்னுந்திருப்பதியின் மாயோ னென்பதாம்.

எனவே அயனும் அரனும் இந்திரனும் பரவும்படிக்கு வாழ்வுபெற்ற கருடவாகனத்திலேறும் பெருமையையுடையான் அவன் யாவனெனில் அன்பிலாதாரிடத் தன்பிலாதான், அன்பிலென்னுந், திருப்பதியின்

மாயோன்; அவனுக்கன்புசெய்வீராயிற் புலவிர்காள்! நுமக்கு முத்தி பெறலாமென்பது குறிப்பு. திணை - வாகை. துறை - பொருளொடு புணர்தல்.

வாமவெங்கதிர்மண்டிலமண்டில
நாமநேமியினான்மறைநான்மறைப்
பூமன்றந்தையொண்பொற்கழற்பொற்கழற்
காமன்பாரடிப்போதென்றலைத்தலை. (669)

இது நான்கடியும் இறுதிமடக்கு.

(இ ள்) ஆதித்தன்மண்டிலத்தை வட்டத்திருவாழியான் மறைக்கப் பட்டவன், நாலுவேதத்தையு மோதியுணர்ந்தவனுந் தாமரைப்போதிற் பிறந்த பிரமனுக்குப் பிதா, அவனதாம் பொன்னின்வீரக் கழல்புனைந்த பொலிவினையுடையதிருவடிகளிடத்துண்டாம் அன்புடையார் திருவடித் தாமரைப்பூவை என துசிரத்தின்கட்புனைந்தே னென்றவாறு.

கழற்கு என்பது ஏழாவது நான்காவதாயிற்று. மண்டிலம் ஆதித்தன்மண்டலத்திற்கும், வட்டத்திற்கும் பேர். திணை - இதுவுமது. துறை - பழிச்சினர்ப்பணிதல்.

இவை பதினைந்தும் அடியிறுதிமடக்கு. ஆகமடக்கு-சரு. இவை நாற்பத்தைந்து மோரடியு மீரடியு மூவடியு நாலடியுமாகி யடிதோறு மோரிடத்தைமடக்கியது.

இனி யடிதோறு மீரிடத்தனவா மூவகைமடக்கினுள் முதலொடிடைமடக்கு வருமாறு:—

கட்காவிகட்காவினைவதும்வண்டிமிர்காமன்காமன்வாளிக்
குட்காவைவுறநிறையுமுற்றுணர்ந்துமுறுதியெனக்குறுகிலீராற்
புட்காமன்வடமதுரைப்புரிகுழலீர்காமவலைபுள்புக்காழ்ந்து
மட்காநின்றதற்குறுதிப்புணைமடலென்றேயுளத்தேமதிக்கின்றேனே. ()

இது முதலடி முதலொடிடைமடக்கு.

இதனுள், கட்காவிகட் காவினைவதும் என்பது கண்ணாகியசெங்கழுநீர்களுக் கெனதாவி வருந்துவதும் என்பதாம். காமன் காமன்வாளிக்கு என்பது காவினிடத்துநிலைபெற்ற காமன்பஞ்சபாணங்களுக்கு என்பதாம். ஒழிந்தனவு முறையிற்கொள்க. பகுதி—மடல். துறை—தன்றுணிவுரைத்தல்.

அலேயோடுயர்பாற்கடல்கடைந்தானன்பிலனேயீர்திருவயிறு
விலேயோவிலேயோவிடைநினேவிங்கென்ருேவென்ருேவறியீர்போன்
மலேயோமூலேவாணுதல்சிலேயோமையுண்கருங்கட்குவளேயுள்வன்
கொலேயோகுடிகொண்டதுசிறிதுங்குடிகொண்டிலவோகருணேயுமே. ()

இஃ திரண்டாமடி முதலோடிடைமடக்கு.

இதனுள், வயிறுவிலேயோ விலேயோவிடையென்பது நுமது அழகிய வயிறுவினிலேயோ இடையென்னுமுறுப் புமக்கில்லேயோ என்பதாம். நினேவிங்கென்ருே வென்ருேவறியீ ரென்பது இவ்விடத்து நுமது விசாரம் யாதோ? எனது காமப்பிணியையுந் தெளிகிலீர் என்பதாம். ஒழிந்தனவு முரையிற்கொள்க. பகுதி-..........துறை-இடைவினுதல்.

இரவிற்குப்படருழந்திவ்விரவொழிப்பாயெனவிரங்கியிடதுபாகம்
புரவிற்குங்களிவரவன்றிரப்பொழித்ததுநிலாங்கபொருணீயன்றே
காவெற்புக்காவெற்புக்கவினணியான்கங்கையன்கங்கையனுமந்த
வரவெற்பன்மலரயனுமகிழ்ந்திடச்சென்றுதவியதூஉமதிக்குங்காலே. ()

இது மூன்ருமடி முதலோடிடைமடக்கு.

(இ-ள்) பிரமசிரத்திலிரந்ததற்குத் துன்பமிருந் தவ்விரப்பினேத் தவிர்ப்பாயாகவென்று சிவன்வேண்டற்குக் கருணேகூர்ந்து, அவனதிடப் பாகத்தை யச்சிவன்கொடுப்பத் தனதாகவாண்ட அவன் பாரியா மூமைக்கும் மனத்துட்களிப்புண்டாக முற்காலத் தவ்விரப்பைத் தவிர்த்தகருணேயை விசாரிப்பாருண்டாகி லப்பரப்பிரமம் அரங்க நாதனே! நீயேயாம்; அதுவுமன்றி, கைபடைத்தமலேயென்பதாங் கெசேந்திரன் மூலமேயென்ன அதற்கும், அரவும் எலும்பும் அழகுசெய்யு மாபரணமாகப் புனேந்தான், பிரமசிரத்தைக் கையிலேந்தினுன், கங்கை யாற்றை வேணியிற்கட்டினுன், அந்தச் சேட்டமான வெள்ளிமலேயானும் மலருளானும் பிரமனு மகிழும்படிச் சென்றுதவியதூஉம் விசாரிக்கி லென்றவாறு.

ஒழித்ததும் என்னு மும்மை செய்யுள்விகாரத்தாற் றெக்கது. வெற்பன் மலரயனும் என்பது "எஞ்சுபொருட்கிளவிசெஞ்சொலாயிற், பிற்படக்கிளவாமுற்படக்கிளத்தல்" என்பதனுல் வெற்பனும் என்னுஞ் சொல் வெற்பனென வும்மையில்சொல்லாயிற்று. திணே — பாடாண். துறை - கடவுள்வாழ்த்து.

அருண்மாலையின் றகெழுதகையிருளைவேண்டலிற்சென்
றறையாண்மாரன்
பொருமாலைக்கிடுகரும்புச்சிலைவளைத்தித் துயர்க்கடற்கோர்
புணையுங்காணேன்
மருண்மாலைவரும்வருமென் றிடைவேற்காயெவன்செயன்மேன்
மனனேமல்லைத்
திருமாலைத்திருமாலைக்கண்டளியாயளியாய்நின்
றிருத்தாரென்றே. (673)

இது நாலாமடி முதலோடிடைமடக்கு.

(இ-ள்) மனனே! இருண்ட மாலை வரும்வருமென் றுண்டியு முறக்கமுந்தவிர்ந் துடம்புமுயிரு மெலியாநின்றவெனக் குடலு முயிருமாக்கமெய்த என்னிடத்துவைத்தகருணையியல்பாக இடைவிடாத உரிமையையுடைய எனதுயிர்த்தோழியானவள், திருக்கடன்மல்லை மாயோனைச் சென்றுகண்டு, நினது தாமத்தைவிருப்புற்றமையா லென்னுயிரானபொலிவினையுடையாள் பொலிவிழப்ப அவளிடத் துண்டான மயக்கத்தை நினது திருவுளத்தாற்கண்டு நினதுதிருமார்பிற் புனைவதாய வண்டுகள் நல்லதென்றூதாயும் அழகியதிருமாலிகையைத் திருவருள் புரிந்து தாராயென்று வேண்டிக்கோடலோடுங் கூறுள்; அஃதறிந்து காமனவன் ஆலையினிடத்திடும்படிக்குண்டானகரும்பைச் சிலையாக வளைத்துப் பூப்பாணங்களையுடக்கிப் போர்செய்யாநின்றான்; ஆதலால் இத்துன்பமாகியகடலைக் கடக்க அவன்றூமமாகியபுணையையன்றி வேறு புணையுங் காணேன், இனிமேல் யாதுசெய்வதென்றவாறு.

இதனுள், திருமாலைத் திருமாலையென்பது திருவினோடுங்கூடிய மாலை, பொலிவினையுடையாண்மயக்கத்தை யென்பதாம். கண்டென்பதனைத் தோழி சென்றுகண்டு, திருவுளத்தாற்கண்டு என இரண்டிடத்துங் கூட்டுக. அளியாயளியாயென்பவற்றுள் முன்னையது ஒருதொழிலினை மேற் செய்யாயென்னு மெதிர்மறையாகியமுன்னிலைவினைச்சொல், அத் தொழிலைச்செய்யென்ன எடுத்தலோசையாற்கூறி வேண்டிக்கோடற்கண் ணுடம்பாட்டுமுன்னிலைவினைச்சொல்லாயிற்று; என்னை "செய்யாயென்னு முன்னிலைவினைச்சொல், செய்யென்கிளவியாகிட னுடைத்தே" என்றூ ராகலி னறிக. பின்னையது வண்டுகள் நல்லதென்றூதாயும் என்பதாம். திருமாலையென்பது பிறள்போற்கூறியதாம். தலைவிகூற்று. முன்னிலை-

தோழி. மனனே என்பது முன்னிலைப்புறமொழி. பொருள்கோள் - கொண்டுகூட்டு; மாட்டுறுப்பெனினுமாம். திணை - பெண்பாற்கூற்றுக் கைக்கிளை. துறை - மெலிவொடுகூறல். இவைநாலு மோரடியிடத்து முதலுமிடையு மடக்கியது. இனி யீரடியிடத்து முதலுமிடையு மடக்குதல் வருமாறு:—

பொருந்தார்பொருந்தார்வரைமார்பிற்புதைபப்புதையப்புதைவரிவில்
வருந்தாவருந்தாபதன்மனது களிக்கக்களிக்கமிதிலைபுகுந்
திருந்தாரணியோர்புகழவளைத்திறுத்தானிமையோரிடுக்கணுறு
தருந்தாரமுதன்றருள் குடந்தையாராவமுதென்னகத்தமுதே. (674)

இது முதலிரண்டடியும் முதலோடிடைமடக்கு.

(இ-ள்) சத்துருக்களாயுள்ளார் சமர்முகத்துப் புறங்கொடாது போர்செய்யும் வெற்றிமாலைபுனைந்த வரைபோன்றமருமத்திற் புதையும் படிக்குக் கட்டிலம்பைத்தொடுக்கப்பட்ட நாரிவரிந்த தனுவை இந்திரியங் களில் வியாபரிக்குஞ் சத்தாதிகளுக்குச் சற்று மீடுபடாத அரியதவத்தை யுடையோனாகிய விச்சுவாமித்திரன்மனத்துட்பிரியமோங்கப் பிராட்டி திருவுள்ளமுஞ் சனகராசன்மனதுங் களிக்க மிதிலையுட்புகுந்து பெரிய தாரணியோர்கொண்டாட வளைத்துமுறித்தான், அவன் யாரெனில் விண் ணோர்துன்பமெய்தாமை யாராவமுதைக் கடைந்துகொடுத்த திருக் குடந்தையாராவமுதம், அவன் என்னுள்ளத்துக்குத் தித்திக்கு மமுதமா மென்றவாறு. துறை - கடவுள்வாழ்த்து.

உமையாளுமுமையாளும்பசுபதியுமும்பரினும்
பரின்வாழ்வெய்துஞ்
சுமையாகநிலைபெறுமீங்கிதுகிளையேயெலனந்தி
சொன்னபோது
ம்மையாதுன்னமையாதுன்னக்கயிலைகிளைகிளைக்கை
யரக்கனுதி
கமையர்லெய்தியவாங்கள்காட்கரையாய்களைந்திலையேற்
களைகண்யாரே. (675)

இது முதலடியும் மூன்றுமடியும் முதலோடிடைமடக்கு.

(இ-ள்) உமையாளும்..............வாழ்வெய்தும் என்பது உம்மை யாட்கொள்ளும் உமையாளவளுஞ் சிவனும் உச்சிமலைபின்கண் தேவர்க

ளோடுங்கூடிச் செல்வமெய்தும் என்பதாம்; சுமையாக..........போதும் என்பது அவர்களைத் தனதுசென்னியிற்கொண்டுநிற்கும் இவ்விடத் திந்த மலையை யெடாதேகொள்வாயென நந்திசொன்னகாலத்தும் என்பதாம்; அமையாதுன்...............அரக்கன் என்பது அவனுரைக்குமடங்காதே உன்னமரமும் மூங்கிலும் ஆச்சாவும் நெருங்கின அந்தக் கயிலையைக் கிண்டியெடுத்த விருபதாகியகையையுடைய விராவணன் என்பதாம்; ஆதி...........யாரே என்பது ஆதிகாலத்து இந்திரியங்களையடக்கின பொறையாலெய்தியவாங்களைத் திருக்காட்கரையாய்! அழித்து அவனைக் கொன்றிலையெனி னுலகுயிர்கட் கியாவர் காவலென்றவாறு. துறை-இதுவுமது.

இமையவரையிமையவரைமகிழ்விப்பான்பொருவில்பொரு
வில்லாயேந்திச்
சமையவுடக்குபுசரந்தொட்டெயிலொருமூன்றெரிகதுவத்
தலைநாள்வென்ற
வுமையுவருமதிப்பவெயிலேழுடையான்பஃறலைக்கு
முறையூராய
டமையமைவில்வினைவளைத்தன்றேவினையேவினைநினைப்போன்
றளியார்யாரே. (676)

இது முதலடியும் நாலாமடியும் முதலோடிடைமடக்கு.

(இ-ள்) இமையவரை யிமையவரைமகிழ்விப்பா னென்பது இமவானென்னுமலையைத் தேவர்களைக் களிப்பிக்கவேண்டி யென்பதாம்; பொருவில் பொருவில்லாயேந்தி என்பது ஒப்பற்ற போர்பொருதற்குரிய வில்லாகவெடுத் தென்பதாம்; சமையவுடக்குபு...............மதிப்ப என்பது குறைவறவுடக்கி யம்பைத்தரந்து மூன்றுகோட்டையினும் அனல்பற்ற முன்னைநாண் முப்புராதிகளைவென்ற வுமைபாகரும் மதிப்பதாக என்பதாம்; எயிலேழுடையான்.......உறையூராய் என்பது ஏழுகோட்டையோனாகிய விராவணன்பத்துத்தலைக்குந் திருவுறையூராய்! என்பதாம்; ஆடமை யமைவில்வினை...........யேவினை என்பது வெற்றிபொருந்தின மூங்கில்வில்லைவளைத்து முன்னாள் அம்பினைவிட்டனை என்பதாம்; நினைப்போன்றளியார்யாரே என்பது ஆதலால் நின்னைப்போ லுலகுயிர்களைக் காக்குங்கருணையுடை யகடவுளர் இல்லையென்றவாறு. துறை-இதுவுமது.

சுந்தரத்தோளிணையழகர் துணையடிசேர்மகிழ்மாறன்
றுடரிநீடுஞ்
சந்தனச்சோலையுளுறைவார்க்கிறைவாசங்கர
னுதற்கட்டழலான்மேனாள்
வெந்திறல்வெந்திறல்வேளுமிரதியிரதியுமாண்மை
விழைமென்கொங்கை
மந்தரமந்தரமிடைவிற்கரும்புருவங்கரும்புருவ
மதிக்குங்காலே. (677)

இது கடையிரண்டடியும் முதலோடிடைமடக்கு.

(இ-ள்) இறைவனே! அழகியதிருத்தோளிணையையுடைய அழக ருபயதிருவடிகளை மனோவாக்குக்காயங்களாற்பொருந்தின வகுளாபரண மாறன்றுடரிமலையினிடத் தோங்கின சந்தனச்சோலையுளுறைவார் கொங்கைக் குவமைகூறிக்குங்கால் மந்தரபருவதமேயாம், இடை ஆகாய மாம், கரியபுருவம் காமனுக்குவில்லாகிய கரும்பினதுருவமா மென்ற வாறு.

சிவனுடைய நெற்றிக்கண்ணினுண்டாகியதழலினால் முன்னைக் காலத்து வெவ்வியவீரம் வெந்ததனோடும் உருவமுமிழந்த காமனும் விரும்புவதா மிரதியும் ஆணுந்தன்மையையுவப்பதாங் காந்தியையுடைய கொங்கைக்கெனக் கூட்டுக. பகுதி - பாங்கற்கூட்டம். துறை—செவ்வி செப்பல்.

பொய்யாதபேரின்பம்வேண்டினர்கள்போரண்டம்பூத்தவுந்திச்
செய்யாசெய்பாள்விரும்பியுறையுறையூராவெனவேதிளைப்பக்கண்டு
மெய்யாமைமெய்யாமையேத்திலரஞ்சிலர்சிலரவ்வியமதண்ட
மெய்யாகமதிக்கிலரந்தோவந்தோநரகத்தேவீழ்கின்றாரே. (678)

இஃதிடையிரண்டடியும் முதலோடிடைமடக்கு.

(இ-ள்) அழிவில்லாதபேரின்பத்தைவிரும்பின அறிவுடை யோர்கள், எண்ணில்பல்கோடியண்டங்களைப்பெற்ற திருவுந்தியாகிய செழுமையுடையவனே! திருமகள்விருப்புற்றுக்குடியிருக்குந் திருவுறை யூரையுடையவனே யென் றொழிவில்லாதுகூறிப் போாணந்தமெய்துவ தனைக் கண்டுங் கேட்டும், விட்டுநீங்காத அறியாமையாற் சிலர் அவன்றிரு வடிகளை யேத்துகின்றிலர், அவ்வியமதண்டத்தைநினைந் தஞ்சுவது ஞ் செய்கின்றிலர், அதனை மெய்யென்பதுந் தெளிகின்றிலர், ஐயோ ஐயோ நாகின்கண்ணேவீழாநின்றன ரென்றவாறு.

எனவே எங்ஙன மீடேறுவ ரென்பது குறிப்பு. எய்யாமை எய்யாமையால் என மூன்றாவது தொக்குநின்றுவிரிந்தது. அந்தோ அந்தோ என்பது இரக்கத்தின்கட்குறிப்பு. திணை - பாடாண். துறை - வாயுறை வாழ்த்து.

கைம்மலைக்கன்றுதவியமால்காட்கரைமான்கற்புநிலை
காட்டவேண்டி
யம்மனையம்மனைவிரும்பிக்கிளைகிளைபோலயர்ந்திடவைத்
தகன்றகாலை
நம்மனையைக்காண்டொறுமெய்ந்நடுங்குதன்மேலுணர்வழிக்கு
நயந்தக்கிள்ளை
யெம்மனையெம்மனைபுக்காளினியினியபாலளிப்பா
ரெமக்காரென்றே. (679)

இது முதலயலடியோடு நாலாமடி முதலோடிடைமடக்கு.

(இ-ள்) கையையுடைய மலையென்பதாம் யானைக்கு, அது முதலை கைப்பட்டநாண் மூலமேயென்றழைப்பச் சென்றுதவிய மாயோன் றிருக் காட்கரையின் மான்போலும்விழியினையுடையாள், நாணினுங் கற்புச் சிறந்ததென்று நூல்சொல்லக் குடிப்பிறந்தார்கண் ணிலைபெற்றதனை யெமக்கறிவிக்கவேண்டி, அழகியமன்னனை எம்முடைய ஆய் விரும்பிக் கிள்ளையான தெமது கிளைபோலவருந்தும்படிக்குத் தோழிகைப்படவைத் துடன்போனகாலத் தியா னெமதுமனையினது பொலிவழிவைக் காணுந் தோறும் மெய்ந்நடுக்குறுதன்மேலும், முன்னங்கூறிய அக்கிள்ளை, தன்னைவளர்த்த அன்னையைக் காணவிரும்பி அவ்வையே! எம்முடைய அன்னை யிம்மனையைவிட்டெந்த மாளிகையிலேபுகுந்தா ளென்று மெமக் கினியபாலினை யேற்றருவார்யாவ ரென்று மென்னுணர்வை யழியாநிற்கு மென்றவாறு. பகுதி - உடன்போக்கு. துறை - நற்றாயிரங்கல். இவை யாறு மீரடி யாதியொடிடைமடக்கு. இனி மூன்றடி முதலொடிடை மடக்கு வருமாறு:—

றூறுறூறுபோன்றாமுமாரமு
நொய்தினிங்வெதும்பாசீ
ரூறுமூறுமாமதன்படைபடைத்திட
வுபயகண்மலரந்தோ

வேறுமேறுமாபதிபதிகிளைத்திடு
மிருபதுகரத்தானைக்
கூறுசெய்கணையரங்கன்மெய்தோய்ந்திடாக்
கொம்மைவெம்முலையாட்கே. (680)

இஃ தீற்றடியொழித் தேனைமூன்றடியும் முதலோடிடைமடக்கு.

இதனுள், நூறு நூறுபோன்றாரமுமாரமு மென்பது துகள்படும், சுண்ணம்புபோல முத்துவடமுஞ் சந்தனச்சேறு மென்பதாம். நீரூறு மூறுமாமதன்படைபடைத்திட வுபயகண்மல ரென்பது துன்பக்கண்ணீரூறுநிற்கும்; விரணங்களைக் கரியமதனன் பூப்பாணங்களுண்டாக்குகையா விரண்டுகண்மலர்களினிடத்து மென்பதாம். ஏறுமேறுமா பதிபதி கிளைத்திடு மிருபதுகரத்தானை யென்பது இடபத்தையும் பூதத்தையும் வாகனமாகவேறும் உமைக்குப்புமானானவன்பதியாகிய கயிலையை யெடுத்த இருபதுகையுடைய இராவணனை யென்பதாம். கூறு செய்கணை யரங்கன்மெய் தோய்ந்திடாக் கொம்மைவெம்முலையாட்கே யென்பது துண்டஞ்செய்த பாணத்தையுடைய அரங்கநாதனைத் தழுவாத கொம்மைவெம்முலையாட் கென்பதாம். கொம்மைமுலையாட்கு, நூறும் ஆரமும் ஆரமும்; கண்கள் நீரூறும் என்று முடிக்க. திணை - பெண்பாற்கூற்றுக் கைக்கிளை. துறை - கண்டுகைசோர்தல்.

மின்னுமின்னுநுண்ணிடையிடைந்தனளினிமேதகுமின்னோடு
மன்னுமன்னுமெம்மனைவயின்வயினுறத்தினையொடுதேனார்ந்தே
துன்னுகக்குவிற்றுயின்றெழுந்திறையுறைதுவரைமாநகர்க்காலை
முன்னுமுன்னுமுண்டுண்டிவணிவணிகர்முறையொடும்பதிந்தாரே. (681)

இஃ தீற்றயலடியொழித் தேனைமூன்றடியும் முதலோடிடைமடக்கு.

இதனுள், மின்னு மின்னு நுண்ணிடை யிடைந்தன ளென்பது ஒளிரும் மின்னுப்போன்ற சிறிய இடையினையுடையாள் வருந்தின ளென்பதாம். மேதகுமின்னோடு மன்னு மன்னு மெம்மனைவயின் வயினுறத் தினையொடு தேனார்ந் தென்பது பெருமைபொருந்தின மின்னை யொப்பாளுடன்பொருந்திய மன்னனே! நீயும் நமக்குரிய எம்மில்லி னிடத்துக் காலம்பெறத் தினையுந் தேனு மருந்தி யென்பதாம். துவரை மாநகர்க் காலை முன்னு முன்னு முண் டுண் டிவ ணிவணிகர்முறையொடும் பதிந்தா ரென்பது துவராபுரியினிடத்துக் காலையிற்செல்வாயாக;

நுமக்குமுன்னே தினையொடுந் தேனைக்கூட்டியுண்டு இவ்விடத் திவளை யொத்த கற்புங் காந்தியும்பெற்றமுறையொடும் புமான்களை நீங்காது தங்கினர் பலருமுண் டென்பதாம். மின்னு - உகரவிகுதி அல்வழிக்கண் மிக்கது, இயல்புகணம்வரலாலென்றறிக. மன் அண்மைவிளி. நீ யென்னும் முன்னிலைப்பெய ரெஞ்சிநின்று விரிந்தது. ஒழிந்தனவும் உரையிற்கொள்க. பகுதி - உடன்போக்கு. துறை - நெறிவிலக்கல். விருந்துவிலக்கென்பது மிது.

தோலாததோலாதபனைநோக்குநோக்குபயசுடரைக்கூட்டி
மேலாகமூன்றுடையசிவனயன்கேட்பவுமழைப்பவிரைந்துமேனாட்
பாலாழிப்பாலாழிப்படையுடனேவந்துவந்து படிறுதீர்நீ
யாலாலநுண்டுளைப்பற்பணியணையாயணையாயென்னனந்தையானே. (682)

இது முதலயலடியொழித் தேனைமூன்றடியும் முதலோடிடை மடக்கு.

இதனுள், தோலாத தோல் - சிங்கவேற்றிற்குந் தோற்றிடாத கெசேந்திரன். நோக்குநோக்கு - அழகியகண்கள்; பார்க்குங்கண்க ளென்றுமாம். ஆதபன் - சூரியன். உபயசுடர் - ஒழிந்த இந்துவும் அக்கினியும். மேலாக மூன்றுடைய வென்பதனை ஆகமேன் மூன்றுடைய என மாறி, சொரூபத்தின்மேல் நோக்கு மூன்றுகவுடைய வென வியைக்க. சிவனயன் கேட்பவும் என்பது சிவனும் அயனும் கேட்கும் படிக்கும் (உம்மையால்) யாவருங் கேட்பவும் என்பதாம். அழைப்ப— மூலமேயென் றொருகாற் கூப்பிட. மேனாள் - பண்டு. பாலாழிப்பால்- திருப்பாற்கடலுட் கடவுள்; "பாலதாணையி" னென்பதா லறிக. வந்து வந்தென்பதை உவந்துவந்து என மாறுக. படிறுதீர்நீ - இடுக்கண் டவிர்த்த நீ. ஆலால நுண்டுளைப்பற் பணியணையாய்—துளும்புநஞ்சினைக் கக்குஞ் சிறியதுளைப்பற் பாம்பணையையுடையாய். அணையாயென் னனந்தையானே யென்பது - என்னை அனந்தபுரத்தானே! அணைவாயாக வென்பதாம்.

(இ-ள்) பாலாழியுட்கடவுளாகிய அனந்தபுரத்து மாதவனே! கெசேந்திரன், சிவனும் அயனுங் கேட்க மூலமேயென்றழைப்பச் சக்கராயுதத்துடன்வந்துதவிய கருணையையுடைய நீ, யான் பலகாலும் நினது திருமார்பைநினைந் திரங்கவு மென்னை யணையாதது என்ன

தறுகண்மையோ வென்றவாறு. பொருள்கோள் - கொண்டுகூட்டு; மாட்டுறுப்பெனினு மாம். திணை—பெண்பாற்கூற்றுக் கைக்கிளை. துறை- மெலிவொடுகூறல்.

வயவாற்றவழ்சூல்வளையுயிர்த்தமணிவெண்டாளநிலவெறிக்குங்
கயவாய்க்கயவாய்க்கருமேதிகமலக்கமலக்கழிநறவுண்
டுயவாற்றுயவாற்றிடையுழக்கத்தூநீர்க்கயலேகயலேய்திவ்
வியவாவியவாமரங்கேசனெய்தானெய்தான்மதனம்பே. (683)

இது முதலடியொழித் தேனைமூன்றடியும் முதலோடிடைமடக்கு. இதனுள், வயாவென்பது வயவாயிற்று.

(இ-ள்) சூலுளைந்தவருத்தத்தோடுந் தவழுஞ் சூல்வளையீன்ற அழகிய வெண்முத்தம் நிலவுபோலச் சுடர்விடுங் கயத்தினிடத்துப் பெரியவாயையுடைய கரிய எருமைச்சாதி, தண்ணீரிடத்துத் தாமரையுக்க மிக்கதேனையுண் டதனு லறிவுதிரிந்து துய்யவாற்றி னடுவேபுகுந்து கலக்கத் தூயநீரின்கரையருகே கயலுகண்டுசேரும் நல்லவாவியையுடையவா மிரண்டாற்றினடுவே வாழ்வுபெற்ற அரங்கநாத னென்னைத் தழுவுகின்றிலன், அதனையறிந்து காமன் றனது மலர்ப்பாணங்களைத் தொடுத்தன னென்றவாறு. எனவே, இதற் கினிச் செயல் யாதென்பது குறிப்பு. திணையுந் துறையு மிதுவுமது.

நாதனுதனூர்விளங்கிறையெண்ணிலாவெண்ணிலாநகுபோத
வேதன்வேதனைபுரிந்திடமறைதருமறைதரும்விறன்மாயன்
பாதபாதபந்தனையுணர்ஞானமாம்பலன்பலன்றருமாபோ
லோதியோதியினுறுநர்பாற்றருவதுதருவதுமுளதாமே. (684)

இது நான்கடியும் முதலோடிடைமடக்கு.

(இ-ள்) நாத னுதனூர்விளங்கிறை யென்பது சகலதேவன் மார்க்குஞ் சுவாமியாவான், திருவாதனூரின்கண் டோற்றமெய்தின சோதி யென்பதாம். எண்ணிலா வெண்ணிலா நகு போத வேதன் வேதனைபுரிந்திட மறைதருமறை தரும் விறன்மாய னென்பது அலகிறந்த வெண்ணிலாவைப்போலமிளிரும் ஞானத்தையுடைய பிரமன் றுன்புற மதுகைடவரான்மறைந்த வேதத்தை மீளவும் அன்னமாகி ஓதி அவனுக்குபதேசிக்கும் ஞானவென்றியையுடைய மாதவனுமலையிடத்

தென்பதாம். பாதபாதபந் தனையுணர் ஞானமாம்பலன் பலன்றருமாபோ லென்பது திருவடிகளாகிய கற்பகதரு, தன்னைப் பிரமமென்றுணரும் ஞானமாகியகனியை யுலகத்துயிர்கட்குதவு மிலாபம்போ லென்பதாம். ஓதி யோதியினுறுநர்பாற் றருவது தருவது முளதாமே யென்பது எல்லாநூல்களையுங் கற்று மலைகளினிடத்திருக்கும் பெரியோரிடத்து அம்மலைகளென்பவற்றினுளுண்டாகியமரங்கள் தரு மான்மலாபங்கள் இல்லை யென்றவாறு. மாதவனுமலை யென்பது மாட்டேறில்லா வுருவகம். திணை - பாடாண். துறை - கடவுள்வாழ்த்து. ஆக முதலோடிடை மடக்கு-கரு.

இனி முதலோடுகடைமடக்கு வருமாறு:—

அருங்காயமருங்காயமருந்தனங்கள்வடமேரு
வன்னவன்ன
விருங்காவித்துணைநெடுங்கட்கிணையெனலாந்துணைமென்றோட்
கிணையென்சொல்வேன்
கருங்காவண்புகழ்த்திருமால்வடமலைமானெழில்புணர்ந்து
துறந்தாராவி
யுருங்காமெய்ந்நிறைதளர்வித்திடுபுணராதிகழ்ந்தனனென்
னுயிரைமன்னே. (685)

இது முதலடி முதலோடுகடைமடக்கு.

(இ-ள்) அளவிடற்கரிய ஆகாயம் இடையாகவமாநிற்கும்; அதன் மேன் முலையிரண்டு மிரண்டுமேருவையொத்தன; நிறத்தையுடைய பெருமைபொருந்தின நீலோற்பலமிரண்டும் நெடியகண்ணிணையென்று சொல்லப்படுவதாம்; இவையன்றி இணையாகிய மெல்லியதோள்கட் குவமை யாதென்றுகூறுவேன்? ஆகையால் இம்மானின தவயவி யவயவங்களின்காந்தி, இவளைப்புணர்ந்துநீங்கினான்மாவை யுருக்கி, நிறையைத் தளர்வித்திடுமென்பதனையறியாதே மிகவு மென்னுயிரனை யானை யிகழ்ந்தன னென்றவாறு.

எனவே, இகழ்ந்தது தகாதென்பது பயன். இதனுள், உருக்கா வென்னும் வினையெச்ச எதிர்மறைவாய்பாடு, உருங்காவென மெலிக்கும் வழிமெலிந்துநின்று, தளர்வித்திடுமென்னுந் தன்வினைகொண்டது. மன் ஆக்கம். ஓகாரம் ஈற்றசை. பகுதி - பாங்கற்கூட்டம். துறை-பாங்கன் றலைவனையிகழ்ந்ததற் கிரங்கல்.

வயல்வாய்மென்முறுக்கவிழ்ந்ததாமரைவாய்க்களைகடிவார்
வதனராசிக்
கயல்வாவிக்கயல்வாவித்துணையுடனேயமைவரக்கண்
டப்பாலப்பால்
வியல்வாய்தண்செறுவுழுநர்மகளிர்துணைவிழிமுகமும்
வெய்யபோதுந்
துயவாலங்கறிவரிதாங்*குறுங்கேசனெனும்பிறவித்
துயர்போமன்றே. (686)

இஃதிரண்டாமடி முதலோடுகடைமடக்கு.

(இ-ள்) வயலினிடத்து மெல்லியமுகையாய்ப் பிணியவிழ்ந்த தாமரைக்கண், அந்த வயல்வாய்க் களைகடியு மகளிர்முகசமூகத்துக்கயல், வாவியினிடத்துக் கயல்கள் பாய்ந்து இரண்டாகத்தங்க, அந்த வயற் கடுத்த அவ்விடத்து, தண்ணீர் துளும்பும்பரப்புடைய குளிர்ந்த வயலின் கண் ணுழு மள்ளர், வயலிற் களைகடியும் முற்கூறிய மகளிர் துணைவிழி யோடுகூடிய முகத்தினையும், கண்டார்விரும்புங் கயல்தங்கு தாமரைப் போதினையும் மயக்கத்தாற் பகுத்தறிவரியதன்மையராய் வாழுஞ் செய்கையையுடைய குறுங்காபுரிக்கீசனேயென் றுலகத்துள்ளீர் சொல்லு மின்; நுமது பிறப்பாயதுயர் நும்மைவிட்டு நீங்குமென்றவாறு. திணை— பாடாண். துறை - ஓம்படை. செவியறிவுறூஉ, வாயுறைவாழ்த்தினுஞ் சாரும்.

மாந்தரிலொன்றெனலாயமனுராமனேவலிற்போய்
வாரிதாவி
யேந்தெழிற்பொன்னாழியினைச்சானகிகைக்கொடுத்தருள்பெற்
றிலங்கைமூதூர்
வேந்தனையும்வேந்தனையும்விண்ணிடைவைத்தேமீட்டும்
வேலைவேலை
பாய்ந்தெளிதிற்கண்டனன்றேவியையென்றாற்கிணையெவரே
பகருங்காலே. (687)

இது மூன்றாமடி முதலோடுகடைமடக்கு.

இதனுள், அருள்பெற் றிலங்கைமூதூர் வேந்தனையும் வேந்தனை யும் விண்ணிடைவைத் தென்பது பிராட்டியருள்பெற்றபின்ன ரிலங்கை

* குறுங்கை - திருக்குறுங்குடி.

யாகிய பெரியவூரை யெரிகொளுத்தி யது வெந்துகூடுமளவும் அந்நகர்க் கரசனாகிய இராவணனையும் அவன்சேனாபதித்தலைவரையும் ஏழுநாள் விசும்பிலிருத்தி யென்பதாம். வேலைவேலைபாய்ந் தென்பது பாரந்தகடலைக் கடந்தென்பதாம். கண்டனன் றேவியை யென்றாற் கிணை யெவரே பகருங்கா லென்பது சீதையைத் தரிசித்தன னென்ற திருவடிக்கு விசாரித்துச்சொல்லுங்கா லுலகத் தொப்பா ரொருவருமில்லை யென்பதாம். ஒழிந்தனவு முரையிற்கொள்க. திணை—வாகையைச்சார்ந்த பொதுவியல். துறை - தூதுவென்றி.

ஓவாதகருங்கடன்மொண்டெழுபருவப்புயல்பெயலோடுபயகண்ணீர்
தூவாநின் றுறுபுணரிக்கிடைவலவாகொடிநெடுந்தேர் தூண்டுமாற்றாற்
றேவாதிதேவனெனுந்திருநெடுமால்புவிமகள்கோன்சிறந்தசெல்வ
நாவாயினுவாயினடைவதல்லாலடைவதிடனாமேநாமே. (688)

இது நாலாமடி முதலோடுகடைமடக்கு.

இதனுள், நாவாயி னுவாயினடைவதல்லா லென்பது திருநாவாயென்னுந் திருப்பதியினிடத்துக் கப்பலிற்சென்றடைவதல்லாதே யென்பதாம். அடைவதிடனாமேநாமேயென்பது நாமடைவ துண்மை யாமோ வென்பதாம். விரைவிற்சென்றடைவ துண்மையாகா தென்றவாறு. ஏகார மிரண்டனுள், முதலது எதிர்மறை. ஏனைய தேற்றசை. பகுதி பொருள்வயிற்பிரிதல். துறை - பாகனைவெறுத்தல். இவை நாலு மோரடி முதலொடுகடைமடக்கு. இனி யீரடி முதலொடுகடைமடக்கு வருமாறு:—

விண்டுவிண்டுவீழ்தரும்படிமுருகவேள்விடவேல்வேல்
வண்டுவண்டுவீழ்காவிமாவடுவுமைபூமான்மான்
அண்டாரமிர்தமர்விழிமலைமுலையவளாடக்
கண்டகாவாங்கேசர்தங்கனவரைக்கடிகாவே. (689)

இது முதலடியிரண்டும் முதலோடுகடைமடக்கு.

(இ-ள்) விண்டுவிண்டு.......விடவேல்வே லென்பது மலைபிளந்து வீழும்படி குமாரனெறிதற்குப்பொருந்தின வேலு மென்பதாம். வண்டு வண்டுவீழ்...............பூமான்மா னென்பது அம்பும், வண்டுகள் தேனை யுண்ணவிரும்பு நீலோற்பலமும், மாவடுவின்பிளவும், உமாபதிகாத்தின்

மானு மென்பதாம். அண்டாராமிர் தமர்விழி..................கடிகாவே யென்பது அமிர்தும் போன்ற அமர்செய்யும்விழியையும், மலைபோன்ற மூலையையுமுடையா ளவள் விளையாடக்கண்டகா, நண்பனே! அரங்கேச ரது மேகந்தவழும்வரையினிடத்துக் காவலையுடையசோலையென்றறிவா யாக வென்பதாம். எண்ணும்மைகள் தொக்குவிரிந்தன. ஏல்வேல் - வினைத்தொகை நண்பனே யென்னும் முன்னிலை தோன்றுதுநின்றது. பகுதி - பாங்கற்கூட்டம். துறை - இயல்பிடங்கூறல்.

அண்டமண்டமூண்டகிலமுநிலையழிந்ததனுலால்
பண்டுகண்டுயிலணையுளானவன்மகன்படைபெளவ
முண்டமுண்டமாமுனிநிகர்காதிகான்முளைமுன்மூன்
கண்டவில்லினைக்கண்டவில்லாக்கினனெமர்கண்ணே. (690)

இது முதலடியும் மூன்றுமடியும் முதலோடுகடைமடக்கு.

(இ-ள்) அண்டமண்டமூண்டகிலமுநிலையழிந்ததனு லென்பது அண்டத்தை மேலேயோங்கி யோடாநின்ற பிரளயம், எல்லாவுலகத்தையு முண்டதனுலே யென்பதாம். ஆல் பண்டு கண்டுயி லணையுளா னவன் மகன் படை பெளவ மென்பது ஆலாகிய அமளியுள்ளான்மகனுகிய பிரமன்படைத்த உப்புக்கடலை யென்பதாம். உண்ட முண்டமாமுனி நிகர் காதிகான்முளை முன் மு னென்பது உண்ட குறுமுனியையொத்த காதிசேயாம் விச்சுவாமித்திரன்முன்னே முன்னு னென்பதாம். கண்ட வில்லினைக் கண்டவில்லாக்கின னெமர்கண்ணே யென்பது அவன்கண்ட வில்லினைக் கையினுற் றுண்டப்பட்டவில்லாக்கின னெவ னவ னெம் போல்வார்கண்போல்வா னென்பதாம். ஒழிந்தனவு முறையிற்கொள்க. திணை - பாடாண்; துறை - கடவுள்வாழ்த்து.

கற்றவர்கற்றவர்வியப்பான்வளைத்தவன்மூவெயின்முருக்கக்
கணையானுன
னற்றவர்தம்மகர்ழறப்பதற்றவன்வெள்ளியங்கிரியை
யடியோடேந்தப்
பெற்றவளங்கெழுமதுகையிருபதுகையுடைவயிரப்
பிறங்கல்போன்ற
கொற்றவன்கொற்றவன்சிரத்தைக்குறைத்தவனூர்தமிழ்மறைசங்
கோவில்கோவில். (691)

இது முதலடியும் நான்காமடியும் முதலோடு கடைமடக்கு.

இதனுள், கற்றவர் கற்றவர்வியப்பான் வளைத்தவன் மூவெயின் முருக்கக் கணையானுன் நானற்றவர்தம்மகந் துறப்பதற்றவன் என்பது கல்லை வில்லாகத் தனுசாத்திரங்கற்றவ ராச்சரியமுற வளைத்தவன் பொன்னும் வெள்ளியும் இரும்புமான மூன்றுகோட்டையையுமழிக்க அவனுக்குக் கணையானவன், நானென்னு மாங்காரமில்லாதாரிதயத்தை விட்டுநீங்காதவன் என்பதாம். கொற்றவன் கொற்ற வன்சிரத்தைக் குறைத்தவனூர் தமிழ்மறை சங் கோவில் கோவி லென்பது இலங்கைக் கரசன் வெற்றிபொருந்தின வலியசிரத்தைக் கணையாற்குறைத்தவனுறையும்பதி, திருவாய்மொழியாகிய தமிழிஞெலியுஞ் சுருதியாகிய வடமொழியொலியுந் திருச்சங்கொலியும் ஒழிவில்லாத திருவரங்கம் பெரியகோவி லென்பதாம். ஒழிந்தனவு மூரையிற்கொள்க. திணை - பாடாண். துறை - நகாவாழ்த்து.

குன்றலைக்குமிருபதுகைக்குன்றினைக்கொன்றுலகளித்த
குறுங்கைக்கோமான்
கன்றலைக்குங்குணிலெனச்செங்கனியுதிர்த்தோனணைகிலன்மேற்
களைகண்யாதோ
தென்றலைத்தென்றலைத்தோாய்வருமதன்விற்கரும்பாய்நாண்
டேனுய்தேனுய்
மன்றலைமன்றலைக்காவின்மலரம்பாய்வருமதிகொல்
வானில்வானில். (692)

இது கடையீரடியும் முதலோடுகடைமடக்கு.

(இ-ள்) கயிலையாகியகுன்றினை யெடுத்தசைக்கு மிருபதுகையை யுடையனுங் குன்றுபோன்ற இராவணனைப் பாணத்தாற்கொன்றுலகத் துயிர்களைக் காத்த குறுங்கைக்கரசனுகிய கன்றைக் குறுந்தடியாகக் கொண்டு கனியுதிர்த்த மாயோன், தன்னை விரும்பப்பட்ட என்னைத் தழுவுகின்றிலன், ஆதலால், தென்றிக்கிற் றென்றலானதைத் தோாகவும், கரும்பை வில்லாகவும், பூவிற்றேனையாராயப்பட்ட வண்டை நாணாகவும், மணத்தைப்பொருந்தின தலைப்பட்ட காவின்மலர்களை அம்பாகவுங் கொண்டு மதனன் வாராநின்றனன்; வானில் மதி யமனைப்போல் மேல் வரும்; இனி இதற்கு மேற் களைகண் யாதோ அறிகிலே னென்றவாறு. கொல்வான் - நமன். திணை - பெண்பாற்கூற்றுக் கைக்கிளை. துறை - மெலிவொடுவைகல்,

கோட்டுநித்திலக்குவையொடுங்குங்குமத்தொளிமீதே
பூட்டுபூட்டுவெம்முலைமலையிடைபொறுதேவீவீ
நாட்டுநாட்டுதலின்றுநீஇநாங்கைமால்வரையார்யார்
மீட்டுநீள்குழற்காட்டின்மேற்பன்மலர்வேய்ந்தாரே. (693)

இஃது திடையீரடியும் முதலோடுகேடைமடக்கு.

இதனுள், கோட்டுநித்திலக்குவை யென்பது சங்கீன்ற முத்தின் றிரளென்பதாம். பூட்டுபூட்டு வெம்முலைமலை யென்பது பூட்டப்பட்ட பூணையுடைத்து, விருப்பத்தைத்தரும் முலையாகியமலை யென்பதாம். இடைபொறுதே வீவீ யென்பது முலையாகியமலைகள், தம்மைத்தாங்கு மிடையானதற்குத் தம்மைப்பொறுதே இறுதியைக்கொடுக்கு மென்பதாம். நாட்டுநாட்டுதலின்றுநீஇ நாங்கைமால்வரையார்யா ரென்பது நாளையுடைத்தென்று கண்டார்குறித்தலை இக்காலத்தறிந்தும், திருநாங்கைமாயோன்வரையார் யார்தா மென்பதாம். மீட்டு நீள் குழற் காட்டின்மேற் பன்மலர்வேய்ந்தா ரென்பது அதன்மேலே மீளவும் நீண்ட குழலாகியகாட்டின்மேற் பலமலரையும் அணிந்தவ ரென்பதாம். பூட்டு—பூணையுடைத்து. வீவீ—இறுதலைக்கொடுக்கும். நாட்டு—நாளையுடைத்து. நாட்டுதல் — குறித்தல். பகுதி — பாங்கற்கூட்டம். துறை — மருங்கணைதல்.

படுகொலைவாளரக்கனைக்கொன்றுலகளித்தான்வடமலைபோற்
 பணைத்தகொங்கை
யிடுகிடையொன்றிடுகிடையொன்றேனுமதுபொறுக்கலா
 தென்றுலென்றுல்
விடுகதிர்வெவ்வழல்கதுவியடிநிலந்தோயாதெழின்மெல்
 லியலையானே
தொடுகொடுவெஞ்சுரங்குறுகினன்னுதாஅலென்னிருதோட்
 குன்றுங்குன்றும். (694)

இது முதலயலடியும் நாலாமடியும் முதலோடுகேடைமடக்கு.

இதனுள், நன்னுதால் - நல்லநுதலையுடையவளே! வடமலைபோற் பணைத்தகொங்கை யென்பது முலைகளிரண்டும் வடமலைவாணன்மலை போலப் பணைத்தன வென்பதாம். இடுகிடையொன் றிடுகிடையொன் றேனு மதுபொறுக்கலாதென்று லென்று லென்பது சிறுகிய இடையு

மொன்றே ; சேம இடை யில்லை ; இதன்மே லினி இடப்பட்ட கிடைச்சா மெனினு மதுவும் பொருதென்றறிந்தா லதன்மேலும் ஆதித்தனு லென்பதாம். விடுகதிர்வெவ்வழல்கதுவி யடி நிலந்தோயா தென்பது நீட்டப்பட்ட கிரணங்களாலுண்டான வெம்மையையுடைய அழல் பற்றுதலால் நடப்போர்பாதங்க ணிலத்திற் றோயா தென்பதாம். எழின் மெல்லியலை யானேகொடு கொடுவன்சுரங் குறுகி னென்னிருதோட் குன்றுங் குன்று மென்பது அழகிய மெல்லிய சாயலையுடையாளை யான் கொண்டுபோய்க் கொடிய வன்சுரத்தை யணுகில் அவளது மலர் போன்ற தாள்களை என்சொல்லவேணும், எனது இருதோள்களாகிய மலைகளும் மெலிவெய்து மென்பதாம். ஆதலா லுடன்கொண்டுபோகக் கூடாதென்பது பயன். பகுதி - உடன்போக்கு. துறை - அருமை கூறல். இவை யாறு மீரடி முதலொடுகடைமடக்கு. இனி மூன்றடி முதலொடுகடைமடக்கு வருமாறு:—

பொய்யாமைபொய்யாமையுரானுடனைம்புலனவித்த
　　பொற்பார்பொற்பார்
மொய்யாமொய்யாடாக்கர்முரணழிப்பாயெனவிரங்கி
　　முன்பின்முன்பின்
கையாற்கையாற்றினொடும்பொருசரந்தொட்டழித்ததனுற
　　காமர்காமர்
மெய்யானதெரித்தவற்கும்பானயோத்தியினுதித்த
　　வேந்தர்வேந்தன். (695)

இது முதலடிமுதலிய மூன்றடியும் முதலொடுகடைமடக்கு.

(இ-ள்) பொய்யாமைபொய்யாமையுரானுடனைம்புலனவித்த பொற்பார் பொற்பா ரென்பது சத்தியவசன மிடைவிடாத ஞானத்துடன் புலனைந்தையும் வென்ற பொலிவினையுடையோரா முனிவரும், பொன் னுலகின்கண்ணுள்ள விண்ணோரு மென்பதாம். பொற்பார் - இடத்தா னுன ஆகுபெயர். மொய்யா மொய்யாடாக்கர் முரணழிப்பாயென விரங்கி யென்பது திருப்பாற்கடலிற் றிரண்டுசென்று அமர்விளைக்கும் அரக்க ராகியபகையை யழிப்பாயாகவென்று முறையிட்டதற் கிரங்கி யென்ப தாம். முன்பின் முன்பி னென்பது முன்னாளில் மிடுக்கினையுடைய வென்பதாம். கையாற் கையாற்றினொடு மென்பது கைகளாற் காவலா மொழுக்கத்தோடுமென்பதாம். பொருசரந்தொட்டழித்ததனுலென்பது

போரையுடைய பாணத்தை யேவி யந்தப் பகையை யொழித் தவர் துன்பத்தைக் களைந்ததனு லென்பதாம். காமர்காமர் மெய்யானதெரித்த வற்கும் பா னயோத்தியிலுதித்த வேந்தர்வேந்த னென்பது காமனார் அழகியவுடலையெரித்த சிவனுக்கும் அயன்முதலோர்க்கும் பானுவான், திருவயோத்தியில் திருவவதாரஞ்செய்த அரசர்க்கெல்லாமரசனு மிராம னென்றவாறு. திணை - பாடாண். துறை - கடவுள்வாழ்த்து.

அன்றினரன்றினராகிக்கடை துறந்தார்களிலிலங்கை
யாளியாளி
மென்றினைமென்றினை தலைத்தீர்கிளிமொழியைப்பிரித்தவன்றன்
மெய்யின்மெய்யி
னின்றறியாமனமதனிற்குடக்கன்னன்மருமத்தி
னிரலம்பேவிக்
கொன்றையன்கொன்றையன்முதலோரிடர்களைந்தானகர்தமிழோர்
கூடல்கூடல். (696)

இஃ தீற்றயலடியொழித் தேனைமூன்றடியும் முதலொடுகடைமடக்கு.

(இ-ள்) அன்றின ரன்றினராகிக் கடைதுறந்தார்களி லென்பது முற்காலத்து அடிமைத்தமராயினுர் சாபத்தாற் சத்துருக்களாகி வாயில்காக்குந்தொழிலைவிட்டுநீங்கின ரிருவரு ளென்பதாம். இலங்கை யாளி யாளி யென்பது இலங்காபுரியையாண்டவனுஞ் சிங்கவேறு போன்றவனுகிய வென்பதாம். மென்றினைமென் றினைதலைத்தீர் கிளி மொழியைப் பிரித்தவன்றன்மெய்யின் மெய்பினின்றறியா மனமதனி லென்பது மெல்லிய தினையைத்தின்று பசியால்வரும் வருத்தத்தைப் போக்கும் புனக்கிளியினது மொழிபோலு மொழியையுடைய பிராட்டியைத் தன்னைவிட்டுநீக்கினவன் மேனியிலும், உண்மையி னிலை பெற்றறியா மனத்திலு மென்பதாம். குடக்கன்னன்மருமத்தி லென்பது கும்பகருணன்மருமத்திலு மென்பதாம். நிரலம்பேவி யென்பது ஒரு தொடையிற் பல அம்பைத் தொடுத்தேவி யென்பதாம். கொன் றயன் கொன்றையன்முதலோ ரிடர்களைந்தானகர் தமிழோர் கூடல் கூட லென்பது அவ்விருவரையுங்கொன் றயனுஞ் சிவனும் முதலியோ

ரிடும்பையைப்போக்கினு னிருக்கு நகர் தமிழ்ச்சங்கத்தார் கூடியிருத்தலை யுடைய மதுராபுரியா மென்றவாறு. திணை - பாடாண். துறை—நகர வாழ்த்து.

வானைநீவியவரைகளுயர்மரங்களனைத்தையும்வா
னரங்களாய
தானைதானையவாக்கொண்டமர்விளைநாள்வீடணனார்
தம்முன்றம்முன்
னானையானையினுதிவன்கோடுழுமார்பனையுயிருண்
டம்பாலம்பா
லேனையேனையர்வியப்பான்மீட்டவனல்லாற்பொருள்வே
றென்னுவென்னு (697)

இது முதலடியொழித்தேனைமூன்றடியும் முதலோடுகடைமடக்கு.

(இ-ள்) வானைநீவியவரைக ளுயர்மரங்களனைத்தையு மென்பது மேகபடலத்தைத் தைவரு மலைகளு மரங்களுமாகிய அனைத்தையு மென் பதாம். வானரங்களாயதானை தானையவாக்கொண் டமர்விளைநாள் வீட ணனார்தம்முன் றம்முன் னானை யானையினுதிவன்கோடுழுமார்பனை யென்பது மர்க்கடங்களாகிய படைக ளாயுதமாகக் கைக்கொண்டு செருச் செய்யாநின்றகாலத்து வீடணனார்தம்முன்பாக அவர்தமையனானானை, அட்டகசங்களின் கூரிய வலிய கோடுகளழுத்து மார்பானை யென்பதாம். உயிருண்டு அம்பால், அம்பாலேன் ஐ ஏனையர் வியப்பான் மீட்டவ னல்லாற் பொருள் வேறென்னு வென்னு வென்பது அம்பினு லுயிரை யுண்டபின் அழகியநல்வினையுடையேன்சுவாமினியாகிய சீதையைத் தன்னையொழிந்தகடவுள ராச்சரியப்படுவான் சிறையை மீட்டுக்கொண்டு வந்தவனையல்லாதே வேறேசிலபொருளுண்டென்று என னுடைய நா வோதா தென்றவாறு. திணை - பாடாண். துறை - கடவுள்வாழ்த்து

மூன்றினுமூன்றினுந்தொழிலோடொன்றுமீளாநாகத்
தூடுமூடு
மான்றதுயரிழைநன்றிகொல்வினைபோன்றிடரிழைவல்
லாக்கர்தங்கோ

மான்றலைமான்றலையடைந்தவேனையர்வன்றலையுருட்டு
மாலைமாலைத்
தேன்றழைதேன்றழைதுளபத்தொடையானைத்தொழுஞ்சனனந்
தீரத்தீர. (698)

இது முதலயலடியொழித் தேனைமூன்றடியும் முதலோடுகடைமடக்கு.

(இ-ள்) மூன்றினு மூன்றினுந்தொழிலோடொன்று மென்பதனை யொன்றினுந்தொழிலோடொன்றும் மூன்றினு மெனப் பாடமாற்றி, ஒன்றனைக்கொன்றதனுனைத்தினுந் தீயதொழிலோடொத்தகொடுமையையுடைய பார்ப்பார் பெண்டிர் பசுவென்னு மிவரைச்செய்யுஞ் சொல்லொண்ணுத தொழின்மூன்றையும்பார்க்க வென்றுரைக்க. மீளாநரகத்தூடு மூடு மான்றதுயரிழை நன்றிகொல்வினைபோன் றிடரிழை வல்லரக்கர்தங்கோமான்றலை யென்பது ஒருகாலங்களினும் மீட்சியறநரகங்களினடுவேயிட்டு மூடுதலைச்செய்யு மிக்கதுயரையுண்டாக்குஞ் செய்ந்நன்றிகொன்ற தீவினைபோல மூவுலகிற்குந் துன்பத்தைமிகுத்த இராக்கதர்க்கரசனு மிராவணன்றலையையு மென்பதாம். மான்றலையடைந்த வேனையர்வன்றலை யுருட்டும் மாலைமாலை யென்பது மயக்கத்தையடைந்த ஒழிந்த அரக்கர்வலியதலைபையுஞ் சரந்தொடுத்துருட்டும் வெற்றியினதியல்பையுடைய திருமாலை யென்பதாம். தேன்றழைதேன்றழை துளபத்தொடையானைத் தொழுஞ் சனனந் தீரத்தீர வென்பது தேனுமிலையும் வண்டுமிகுதலு முடைய வனமாலையானை, உலகத்துள்ளீர் நுமதுசெனனஞ் சந்தயமறத்தவிரும்படிக்கு வணங்குவீ ரென்றவாறு. இதனுள்ளும், பலவிடங்களினும் எச்சங்களைக் கூட்டியுரைக்க. திணை— பாடாண். துறை - ஓம்படை.

இருந்தாதிருந்தாதரித்துண்ணவரிவண்
டினமேவமலர்மூண்டகந்தாயதாய
மருந்தாமருந்தாமமெய்த்தாயுமெய்து
மங்கைக்குமணிமார்பளித்தாயளித்தாய்
சுரும்பாய்சுரும்பாய்மதங்கக்குகாடத்
துடனன்றுமுதலைத்தொடுப்பானையானை
வருந்தாவருந்தாவில்சக்ராயுதத்தாய்
வரமங்கையாயென்மனத்தாய்மனத்தாய். (699)

இது முதற்கண்ணுங் கடைக்கண்ணும் அடிதோறும் முற்றுமடக்கு.

(இ-ள்) பெருமையையுடைய தாதுக்களைப் பூவின்கண்ணிருந்து அன்புடனுண்ணவேண்டிப் பாட்டினையுடைய வண்டின்கிளை பொருந்த மலர்ந்த தாமரையுந் தாயென்பதாய் இருக்கச்செய்தே, அழகிய அமிர்த மாம் பெறுதற்கரியவொளியையுடைய மேனித்தாயையுந் தாயாகவுடைய பெரியபிராட்டியென்னு மங்கைக்குக் கவுத்துவமணியணிந்த திரு மார்பைக் கிருபையுடைத்தாயளிக்கும் பூமானே! சுரும்புகளாராயப்பட்ட மலையையொப்பதாய் மதத்தினைச்சொரியுங் கடாத்துடன்கூடி முதலையி னதுபிடிப்பினால் மேனிமைப்பட்ட கெசேந்திரன் வருந்த அந்நாளதனிடர்தீர்க்கச்செல்லும் அழிவில்லாத சக்கரத்தையுடையாய்! சீவர மங்கையென்னுந் திருப்பதியினுள்ளாய்! என்மனத்தினுள்ளே குடி புகுந்து நிலைபெறுவாய், பாஞ்சசன்னியத்தையுடையா யென்றவாறு. திணை - இதுவுமது. துறை - கடவுள்வாழ்த்து. ஆக முதலொடுகடை மடக்கு-கரு. ஆக வகை யைந்தான்வந்த மடக்கு-எரு.

இனி இடையொடுகடைமடக்கு வருமாறு:—

தளிநறவப்பொலமலர்கூராவிரையாவிரைவரைதேத்
    தாயர்தாயர்
அளியமடத்தகையசோதையிற்புவனத்தறஞ்செய்தார்
    யாரேயென்ன
வொளியமைந்தமரகதக்குன்றவண்வளர்நாள்வெண்ணெயிற்கட்
    டுண்டுநின்ற
வெளிமையைக்கண்கலுழ்வதைக்கேட்டிரங்குமனங்காண்பவர்க்கன்
    றென்னுமன்றே. (700)

இது முதலடி யிடையொடுகடைமடக்கு.

(இ-ள்) துளிக்குந்தேனையுடைய பொன்போன்றபூவினைத் தன்னிடத்துமிகுத்த ஆவிரையை ஆவானது அருந்தாதுநீக்கும் முல்லை நிலத்தையுடைய ஆயர்க்குத்தாயராயினார், கிருபையுடையமடத்தகையாம் அசோதையைப்போலப் புண்ணியஞ்செய்தா ருலகத் தியாவருளரென்று சொல்லும்படிக்குப் பச்சைநிற மிகுந்த மரகதக்குன்றம்போன்ற கண்ண பிரான் றிருவாய்ப்பாடியி லவண்மனையில்வளர்கின்றகாலத்து வெண்ணெய்கட்டுக் கட்டுண்டுநின்ற வெளிமையையுந் திருக்கண்மலர் கண்ணீர் பனிப்பதனையுங் கேட்டவர்க் குள்ள மின்றிரங்காநின்றதென்றா லன்று காண்பவர்க் குள்ளமென்னும் மிகவு மென்றவாறு.

ஓ - அசை. இதனுள், தேம் - இடம்; அது முல்லைநிலமென்பது ஆவிரைவளைதேத்தென்னுங் குறிப்பினாற்கொள்ளநின்றது. துறை - கடவுள்வாழ்த்து.

வெங்களபமூர்தாவீதியிற்பனித்தமதத்திடைமென்
பிடியிற்செல்வார்
செங்களபந்திமிர்ந்தளறாய்ச்சேந்தனவாஞ்சேந்தனவாஞ்
சிறுவர்தேர்தே
ரங்குறமண்மகளகலத்தளங்குறுகாதுருளுருளா
வரங்கத்தாய்நீ
யெங்குளனென்றவன்முனமற்றங்குளனானதைப்புகழ்வா
ரெமையாள்வாரே. (701)

இஃ திரண்டாமடி யிடையோடுகடைமடக்கு.

(இ-ள்) கோபத்தையுடைய களியானைகளைப் பாகர் வீதியிற்கடாவ அவை கவுளினாற்சொரிந்த கரிய மதப்பெருக்கிற் களிற்றோடுதொடுத்த பிடியிற்செல்லுமவர் மடந்தைமார் தமது முலைச்சுவட்டிற் குங்குமத்தைத் திமிர்ந்திட்டதா லக் கரியமதநீர் சேறுபட்டுச் சிவந்தனவாக, அச் சிவந்த சேற்றிற் செவ்வேளும்விரும்புஞ் சிறார் தமக்கேற்றமாமென விசாரித் தூருஞ் சிறுதேரழுந்தி அவற்றின்வண்டிகள் பூமிதேவிமார்பாகிய இடத் தணுகா தச்சேற்றிற்புதைந் தோடாதுநிற்குந் திருவரங்கத்தானே! நீ நின்னை எங்குளானென் றவினவிய இரணியனோடு மெங்குமுளானென்று புதல்வன்கூற அவ னிங்குளனோவென்றடித்ததூணத் தங்குளனாகித் தோன்றியதைப் புகழ்வா ரெம்மையாட்கொண்ட தம்பிரான்மா ரென்ற வாறு. திணை - பாடாண். துறை - பழிச்சினர்ப்பணிதல்.

புத்தமிர்தந்தனிற்பிறந்தபொன்கொடியையகலாத
புனிதனாகி
யத்திகிரிதனிலுதித்தகைத்திகிரிப்பரன்பரனென்
பதனைநாடி
யுத்தமனான்மறைகண்மதித்தொன்றனைதொன்றனையணங்கே
யோதியோதி
மொய்த்துயர்வன்பாற்கடஞ்சென்றழுந்தவுணர்வதற்கிறைவர்
முயல்கின்றாரே. (702)

இது மூன்றாமடி யிடையோடுகடைமடக்கு.

(இ-ள்) அணங்கே! நமதிறைவர், புதிய அமிர்திற்பிறந்த பொன்னங்கொடிபோன்ற பெரியபிராட்டியைக் கணப்பொழுதும் விட்டு நீங்காத பவித்திரவானுகி யத்திகிரியினிடத்து நித்த திருக்கைத் திருவாழியுடையபரனே பாப்பிரம மென்பதனைச் சுருதிகளுலு முத்தம ஞானத்தாலறிந் துயர்த்தி யொன்றுபோலவுரைத்த பழையவுரையைப் பொற்றைகணெருங்கின வலியபாலையுடைய சுரத்தைக்கடந்து நாட்டின் கட்சென் றுரியருடன் நாவழுந்தவோதி உண்மைதெளிவதற் கேகமுயலா நின்று ரென்றவாறு. இது கொண்டுகூட்டுப்பொருள்கோள். தொன்று— பழமை. ஓதி - பொற்றை. பகுதி - ஓதற்பிரிதல். துறை - நினைவுரைத்தல்.

என்புருகவுயிருருகவவற்றினெடுமீறிலா
　　வின்பம்பெற்ற
வன்புருகப்புணர்ந்தொருநாளகலேமென்றகல்வதுமக்
　　கறமேயென்னுய்
புன்பொருளைப்புறம்போக்கிநன்பொருளென்னாங்கனெனப்
　　புகன்றமாற
னன்பொருநைத்துறையுளிருந்திரையுளிருந்திரையுளவார்
　　நாராய்நாராய். (703)

இது நாலாமடி யிடையோடுகடைமடக்கு.

(இ-ள்) உடலும் உயிரும் உருக அவற்றினேடும் ஒழிவில்லாத பேரின்பத்தைப்பெற்ற வுணர்வுருகக் கலந்து, இனி யொரு கணத்தும் நின்னிற்பிரியே னென் றுரைத்த நீர் இவளை வைத் தகல்வ துமக் கறமன்றென்று கூறிற்றிலே; இதரபுருடார்த்தங்களைவிடுத்து எம்பெருமானே பரமபுருடார்த்தமென்றறுதியிட்ட மாறனது நல்ல பொருநைத் துறையிற் பெரிய திரைநடுவிருந்து இரையாயுள்ள ஆரன் முதலாயுள்ளவற்றை யுண்ணப்பட்ட நாரையே! என்னிடத் தன்புடையையா யென்றவாறு.

என்னிடத்தென்பது சொல்லெச்சம். என்பும் அன்பும் ஆகுபெயர். இருந்திரை - பெரியதிரை. இருந்திரை - தங்கி, இரையை. நார் - அன்பு. பகுதி - பொருள்வயிற்பிரிதல். துறை - பறவையொடு பரிவுற்றுரைத்தல். இவை நாலும் ஓரடி யீரிடத்துமடக்கு. இனி யீரடி யீரிடத்துமடக்கு வருமாறு:—

புக்கிலதாயமைந்ததயனகரமயனகரமெழிற்
பொன்னேபொன்னே
தக்கிலாமலைக்குறவர்குறவர்மனையெனத்தெளிந்த
தாமந்தாமந்
தொக்கமரர்தொழப்புரந்தவரங்கேசர்திருமுகம்போற்
சோதிமேய
வக்கமலந்திறந்தெவனோவரையிருளிற்றமியிவணின்
றடைந்தவாழ்வே. (704)

இது முதலீரடியும் இடையொடுகடைமடக்கு.

(இ-ள்) அழகிய பொன்னையொத்த திருமகளே! உனக் கென் ஞான்றுமிருப்பதோ ருசிதமான இல்லாயமைந்தது பிரமன் அகரமா யுறைந்த தாமரையே; அயலா யொது க்கிருந்த நகரம், பொருந்துந் தகுதி யிலாம் மலைகளுக் குறவுடையாராய குறவர்மனையென வென்னுள்ளந் தெளிந்ததாம்; ஆகையாற் பரமபதத்தினிடத்து நித்தர் கூண்டுதொழ அதனையாண்ட அரங்கேசர்திருமுகம்போற் சோதிமேய பிரமன் அகரமாகிய அக்கமலத்தைத் திறந் தியாதோ நடுச்சாமத்திருளிற் றமி யொருவர் துணையின்றி யிவ்விடத் தடைந்த வாழ் வென்றவாறு.

அகரம் - அந்தணரிருக்கை. அயல் நகரம்—அயலாய மனை. புக்கில்— பின் புறப்படாது புக்கிருக்கும் இல். உனக்கென்பதுமுதலாகியசொற் களைக்கூட்டி விரித் துரைக்க. பகுதி - இரவிற்குறி. துறை நலம் பாராட்டல்; தளர்வகன் றுரைத்த லென்பது மிது.

இட்டமணிப்பாற்சிலம்புசிலம்புதளிரேய்ந்தவிரு
தாளந்தாளம்
வட்டமுலைத் துவரிதழ்க்கோமளக்கொடியுமணமகளும்
வாணுதா அல்போய்ச்
சிட்டர்தொழுமரங்கேசர்காவிரிகாவிரியிதன்முன்
செல்வர்செல்வர்
நட்டிறந்திருமா துந்திருமாலுமெனும்படித்தா
னவிலுங்காலே. (705)

இது முதலடியும் மூன்றாமடியும் இடையொடுகடைமடக்கு.

(இ-ள்) உள்ளிடுமணியாகிய பரலையுடைய சிலம்பு ஆரவாரிப் பனவாய், மாந்தளிர்போன்ற தாள்களையும், அழகியவாந் தாளம்போன்ற

வட்டமுலையையும், பவளம்போன்ற இதழினையுமுடைய இளைய பொன்னங்கொடியும், மணக்கோலத்தையுடைய காளையும் ஒளிபொருந்தின நுதலினையுடையாய்! தொண்டராயுள்ளார்தொழும் அரங்கநாதாது, சோலைகள் மலரை மலர்த்தப்பட்ட காவிரித்துறையின்கண் ணிதற்கு முன் செல்வர்; அச்செல்வத்தையுடையார் தம்முட்கொண்ட நட்பின் கூறுபாடும், பிராட்டியும் மாதவனுமென்று கூறப்படு முவமையுடைத்து, சொல்லுமிடத் தென்றவாறு. எனவே, நீ போவதாற் பயனில்லை யென்ப தாயிற்று. பகுதி - உடன்போக்கு. துறை - மீளவுரைத்தல்.

குலத்தநுவாழ்வாசவனம்பதிவாசவனம்பதிமென்
கோதைக்கோதைக்
கிலக்கணமாம்பதியெனிற்பொன்னலங்காவுமுலகுமர
விந்தமென்னிற்
சொலத்தகுகைத்தலநான்கினிதிபமுமாதுளங்கனியுந்
துணைமென்போது
நலத்தகைக்கண்களிதரக்காண்கிலமீதோவிலமீதோ
நாட்டிநாட்டின். (706)

இது முதலடியும் நாலாமடியும் இடையோடுகடைமடக்கு.

(இ-ள்) மனனே! மெல்லிய மாலைசூட்டப்பட்டகுழலையுடைத்தா யிங்ஙனநின்ற இவட்கு நல்லபதி, ஐந்தருவு மாக்கம்பெற்ற பரிமளக்காக் குடிகொண்ட இந்திரனது நல்லபதியென்று விசாரிப்பேமாகில் அக்காவும் இவ்வுலகமும் பொன்மயமல்ல; அஃதன்றிப் பதி தாமரையென்று விசாரிப்பேமாகில், இவட்கு, நூல்கள்கூறத்தகுவதாங் கரங்கள் நான்காய், அவற்றின்கண் ஐச்சுரியமும், மாதுளங்கனியும், தாமரைப்பூக்களும் இன்பத்தைப்பெற்ற நமது அழகிய கண்கள் களிதரக் காண்கின்றிலம்; இவட்குச் சொன்னவையன்றி இல்ல மிவ்வுலகமோ? விசும்போ? (பரம பதமோ?) இவ்விரண்டிடத்திற் குறிக்கில் யாதோ அறிவரிதென்றவாறு.

யாதோ அறிவரிதென்பதனைப் பயனிலையெச்சமாக்கி விரித்துரைக்க. மனனே யென்பது தோன்றா எழுவாய். இல்லமென்பதனை மத்திம தீபமாக்கிக் கூட்டுக. ஒழிந்த அரும்பதங்களுங் குறித் துட்கொள்க. பகுதி - இயற்கை. துறை - ஐயுறல்.

மின்னிய னுண்ணிடைகளபப்புளகபடாமுலேகளிணேமேருவாகுந்
தன்னிகர்மற்றில்லாதவிழிக்குவமையரங்கர்துணைத்தாமமான
பொன்னியிடத்தின்பானலின்பானல்வாயிலவம்பூவேபூவே
கன்னிநுவரிதழ்க்குவமையுவமைகுழலுரைக்கவடங்காதேகாதே. (707)

இது கடையீரடியும் இடையோடுகடைமடக்கு.

(இ-ள்) பூமியைப்போலப் பொறையுடையாய்! அழியாத கற்புடையாட்கு, மின்போன்ற இயல்பையுடையது சிறிய இடை; மான்மதக் குழம்போடும் புளகிக்கப்பட்ட முலைகள் உபயமேருவொப்பன; தனக்கு வேறுநிகரில்லாத கண்களொப்பன அரங்கனுக் கிணை மாலையான காவிரியிற்றோன்றிய நீலோற்பலமே; நல்ல மொழியானது இனிய பாலே; சிவந்த இதழ் இலவம்பூவே; குழலானது உவக்குந்தன்மையையுடைய மேகமே; காதானது உவமைகூறுதற் கடங்குவதல்ல என்றவாறு. உவமை - கண்டார்விரும்பப்பட்ட மேகம். ஒழிந்த அரும்பதமுங் குறித்துட்கொள்க. இறுதியேகார மீற்றசை. பகுதி - சேட்படை. துறை - தலைவன் பாங்கிக் கவயவங்கூறல்.

கிளர்பைப்பணிமேற்றுயிலரங்கர்கெழுதண்கடற்கானலிற்பான
லுளர்பொற்சுரும்பேபொருநர்முனையுள்ளாருள்ளாரென்கேள்கேள்
வளர்பைச்சடம்பேசடம்பேயின்வடிவாயதுவேவாயதுவே
தளர்வுற்றதுமன்னுயிரெவனோதான்மேலுறுமென்றறியேனே. (708)

இஃ திடையீரடியும் இடையோடுகடைமடக்கு

இதனை, கிளர்பைப்பணிமேற்றுயிலரங்கர் கெழுதண்கடற்கானலிற் பானலுளர் பொற்சுரும்பே! வளர் பைச்சடம்பே! கேள், என்கேளாகிய பொருநர் முனையுள்ளார் உள்ளார், என்சடம் பேயின்வடிவாயது, வாயதுவே தளர்வுற்றது, மன்னுயிர் எவனோதான் மேலுறுமென்றறியேனென இங்ஙனம் பாடமாற்றி மாட்டுறுப்பென்னும் பொருள்கோள் கொள்க.

இதனுள், முனையுள்ளா ருள்ளாரென்பது பாசறையுள்ளா ரென்னை நினையா ரென்பதாம். பைச்சடம்பே—பசுத்த அடம்புகாள். கேள்—கொழுநரான. கேள் - கேளும். கேளுமென்பது கேளென உம்மைதொக்கது. உள்ளா ரென்கேளென்பது "என்னீரறியாதீர்போலவிவைகூற, னின்னீரவல்லநெடுந்தகாய்" என்பதுபோல ஒருவரைக்கூறும் உபசாரப்பன்மைப்

பாலோடு ஒருமைப்பான் மயங்கியது. சடம் பேயின்வடிவாயது - மெய் பேயின்வடிவாயிற்று. வாயதுவே தளர்வுற்றது - வசனம் குழறியது. ஒழிந்தனவும் உரையிற்கொள்க. பகுதி—வினைவயிற்பிரிதல். துறை-........

மருள்பயில்வல்லவுணரைக்கொன்றரக்கரைக்கொன்றளித்ததல்லால்
வாழ்நாளெண்ணித்
திருவரங்கத்திடைதுயின்றவமுதமேயமுதமே
தேத்ததேத்த
வுருவளர்வான்புனற்குதரத்துயிர்களைவைத்தளித்தநின்னை
யுவந்திடாதே
யிருணரகத்திடைவீழ்வார்வீழ்வார்மற்றொருதெய்வ
மென்னேயென்னே. (709)

இஃ திரண்டாமடியும் நாலாமடியும் இடையோடுகடைமடக்கு.

(இ-ள்) சிறப்புடையுயிர்கள் பெற்றயாக்கையோ டிருக்குநாள்கழிந்து, இன்னும் ஓரீனயாக்கையுட்புகுதுநா ளெய்தாதே சோதிச்சொரூபமான யாக்கையுட்புக்குப் பாமபதப்பேரின்பத்தை அனுபவித்துவாழுநாள் பெறவேண்டுமென்று திருவுளத்துற்று, அர்ச்சாவதாரமாகி, அரங்கத்தி னடுவே கண்வளர்ந்த அமுதே! முன்னாள் நீ அறியாமை யிடைவிடாத அவுணரைக் கொன்று காத்ததோடும், அரக்கரையுங்கொன் றுலகுயிர் களைக் காத்ததல்லாமலும், ஏகோதகப் பிரளயமிகுந்தவேயத்துட் கர சரணுதிகளிழந்த வுயிர்களை அக் கழிபெரும்புனலுள் அழியாது திரு வுதரத்துள்வைத்துக் காத்த நினது செய்ந்நன்றியறிந்து, நின்னை விரும்பாதே, இருண்டநாகத்துள் மேல் விழுவார், பிறிதொருதெய்வத்தை விரும்பாநின்றனர்; இஃதென்ன செய்ந்நன்றியறிதல்! அந்தோ? என்றவாறு.

பின்னர்வந்த அமுதம் ஏகோதகம். தேத்த - மிகுந்த. தேத்து— இடத்து. அவ் - சுட்டு. வீழ்வார் - விழுவார். வீழ்வார் - விரும்புவார். என்னே - என்ன. என்னே - அந்தோ. திணை - பாடாண். துறை— பாவார்ப்பழித்தல். இவை யாறும் ஈரடி ஈரிடத்துமடக்கு.

மன்னுயிரைக்குறித்துளனைந்துளவத்தாதுளவத்தா
மாயாமாயா
பொன்னிநடுத்துயில்பாமாபாமாகாயத்தும்விருப்
புள்ளாய்புள்ளாய்

பன்னருமூன் றுடனமையஞ்சக்கரத்தாய்சக்கரத்தாய்
பாராய்பாராய்
நன்னிலைபெற்றெழுபூதமீற்றனவாயைவரெனை
நலியாவாறே. (710)

இஃ தீற்றடியொழித் தேனைமூன்றடியும் இடையொடுகடைமடக்கு.

(இ-ள்) நிலைபெற்றவுயிர்களைக் காப்பதுகருதித் திருவுள்ளங் குழைவதுள்ள அந்தனே! துளவமாலையுடையவனே! ஒருகாலமும் அழியாத மாயவனே! பொன்னிநடுவே துயில் பரமனே! பரமபதத்திலும் லீலாவிபூதியினும் அன்புள்ளவனே! கருடவாகனத்தையுடையவனே! சொல்லிப்புகழ்தற்கரிய ஐந்தும் மூன்றுமாகிய திருவட்டாக்கரத்தையுடையவனே! சக்கரத்தையுடையவனே! பூமியென்பதாய் நல்ல நிலைபெற்றுத்தோன்றும் பூதமீறாகவுடையனவாம் ஐந்துபூதவாயில்களில் ஐந்துபுலன்களும் என்னை வருத்தாவண்ணம் உனது திருக்கடைக்கண்ணாற் பார்ப்பாயாக என்றவாறு. திணை — இதுவுமது. துறை - கடவுள்வாழ்த்து.

உரங்காயுமன்னாவைமன்னரவையுவப்பவுதைத்
தாடலாட
லரங்காய்முன்னடியாரங்காவடியாரங்காதரித்திடவோ
ரம்பாலம்பா
லிரங்காழிவளைத்தவெயிலிலங்கையர்கோனையும்வதைசெய்
யெந்தாய்நின்னைப்
பரங்காணென்றிருந்தவிருந்தவர்தமைச்சுற்றுறுதியம
பாசம்பாசம். (711)

இஃ தீற்றயலடியொழித் தேனைமூன்றடியும் இடையொடுகடைமடக்கு.

(இ-ள்) சத்துருக்கள்பிடிக்கைக்கெடுக்கும் நிலைபேறுடைய பாம்பைத் தெய்வ அரசர் விருப்பமுறத் தாளினாலுதைத்து வெற்றியுடனாடும் அரங்காக முற்காலத் தாடும் அரங்கனே! அடியாராகிய தேவர் தேவருலகத்தினிலிருந் தன்புற்றிட ஓரம்பினாலே, புனலலைதலுடனே ஆரவாரிக்குஞ் சமுத்திரம் வளைக்கப்பட்ட மதிலையுடைய இலங்கையிலுள்ளார்க்கரசனாகிய இராவணனையும் வதைத்த எம்முடைய தாயே! நின்னை, நெஞ்சமே! இவன்காண் பரத்துவமென்று காண்பாயாக

வென்று யோகித்திருந்த பெரியதவத்தையுடையோரை இயமபாசமும், மண் பெண் பொன் னென்ற பாசத்தளையும் வளையா தென்றவாறு. நெஞ்சேயென்பது முதலியன சொல்லெச்சம். துறை - இதுவுமது.

கெடலருமெய்த்தாணிதரணிகளழுங்கமறைந்ததுபோய்க்
கேளீர்கேளீ
ரடலருமாளியினிரைத்தாறலைப்பவருண்டிரவிவண்வை
கலுந்தேனுர்ந்தே
மடலவிழ்தண்டுளபத்தாருங்கையிருங்கையினளிப்ப
வதுவையாயாய்
தொடலைநறுங்குழற்குழற்றேமொழியொடும்வைகுறுமறுகிற்
றோன்றறோன்றல். (712)

இது முதலயலடியொழித்தேனைமூன்றடியும் இடையோடுகடைமடக்கு.

(இ-ள்) கேடில்லாத மெய்ம்மையையுடைய ஆதித்தன் குடகடற் புகக் கிரணம், பூமியிலுள்ளா ரிரங்க மறைந்தது; எமக்குக் கேளாகுவீர்! யாங்கூறுவதனைக் கேட்பீராக; ஒருவராலும் அடுத்தற்கரிய சிங்கம்போன் றாவாரித்து, வழிபறிப்பவரு முண்டு; ஆகையால் இரவின்கண் ணெம்மிடத்து வைகுதலோடும், தேனும் விருந்தாக அருந்தி, நாங்கள் கைப்பிடித்துத்தரக் கலியாணமு மெய்தி, ஆராயப்பட்ட மாலையைச்சூட்டும் நறுவிதாங் குழலையும், குழலிசைபோலும் தேன்போலும் மொழியையுமுடையாளோடும் வைகறையிற் றுயிலொழிந்தெழுந்து துளபத்தானது திருநாங்கைமறுகிடத்திற் பெரியோனே! தோன்றுவாயாக வென்றவாறு.

கேளீரென்பது இருவரையும். தோன்றலென்பது அண்மைவிளி. பொருள்கோள்—சொண்டுகூட்டு. பகுதி—உடன்போக்கு. துறை—நெறிவிலக்கிக்கூறல்.

அலம்வருசெங்கதிராழிகணிச்சியிலுங்கொடி துணரா தனுகாதேநீ
நிலனிடைமன் னுயிர்பிரிக்குநடுக்கற்றாய்நடுக்கற்றாய்நின்னினின்னி
னலனுடைவானவர்துதிக்கைத்துதிக்கைமலையலைத்தவனென்றுதனுமா*
மலர்மகள்சேர்மணிமார்பன்வைகலும்வைகலுமறுகில்வண்டூர்வண்டூர். ()

இது முதலடியொழித் தேனைமூன்றடியும் இடையோடுகடைமடக்கு.

* இக் கடைமடக்கு, அயலடிமுதலெழுத்துள்ளும் மெய்யெழுத்து, பொருளொழியப் பிரிந்துசேர்ந்து ஆம் ஆம் என வந்ததுபோலும்.

இதனுள், நடுக்கற்றாய் நடுக்கற்றாயென்பது நடுவுநிலைமைகற்றவனே! நடுக்கமற்றவனே! என்பதாம். நடுவுநிலைகற்றவன் - சமன். நில் நில்— நிற்பாயாக, நிற்பாயாக. நின்னில் - நின்னினும். வானவர்துதிக்கைத் துதிக்கைமலை—தேவர்களேத்துந் துதிக்கையையுடைய யானை. நாதனும்- சுவாமியாம். மா மலர்மகள்சேர் மணிமார்பன் - பெரிய தாமரையாளைத் தழுவும் மார்பினையுடையான். வைகலும்வைகலும்—எல்லாநாளுந் தங்குதலும். மறுகில் வண்டூர் வண்டூரென்பது வீதிதோறுஞ் சங்குதவழும் திருவண்வண்டூரென்றவாறு. துதிக்கைமலையழைத்தவன் என் நாதனும்; அவன்கையிற் சுற்றுதலையுடைய கதிராழி உன்கணிச்சியினுங் கொடிது; இதனை யறியாதே என்னிடத்தணுகாதே; நமனே! நிற்பாயாகவெனக் கூட்டுக. எனவே, உனக் கென்னிடத்துவருதல் கூடாதென்பது கருத்து. திணை - வஞ்சி. துறை - நெடுமொழிவஞ்சி.

மாறர்குருகூர்குருகூர்வடிவேலவேல
நாறுமளகத்தளகத்துணைவிகையிகை
யாறினகலாதகலாததாமாகமாக
நீறணிலவானிலவாநினைத்தேகலேகல். (714)

இது நான்கடியும் இடையோடுகடை முற்றுமடக்கு.

(இ-ள்) காரிதரும் மாறருடைய சங்குகள் தவழப்பட்ட குருகூரினிடத்துக் கடைந்தவேலையுடையவனே! ஏலம் பரிமளிக்கும் அளகத்தையுடையாளுள்ளத்துட் டுன்பம், நீ பொன்னைக்கொண்டுவந்து தரும்வழியால் நீங்காது; தக்கதல்லவாம்; இவள்மேனியும், ஆகாச நீறும்படிக் கிரவிலெழும் நிலவினாலே அழகழியும்; ஆகையால் இவற்றை நினைத் தேகலையுடைய கடங்கடந்து பொருள்செய்யப்போவதை ஒழிவாயாக வென்றவாறு. பகுதி - பொருள்வயிற்பிரிதல், துறை—ஆற்றாமை கூறிச் செலவழுங்குவித்தல்.

இவை பதினைந்தும் இடையொடுகடைமடக்கு. இவை நாற்பத்தைந்தும் ஓரடியும் ஈரடியும் மூவடியும் நாலடியுமாக அடிதொறும் ஈரிடத்தைமடக்கியது. ஆக மடக்கு-௬௦,

இனி அடிதோறு மிடைவிடாது மூன்றிடத்துமடக்கு வருமாறு:—

முன்னினை முன்னினை மிடல்வல்லிடங்கரிடங்கரி நொந்த
மூலமூல
மென்னுரைசென்றடங்கா முன்னவ்வுழியவ்விடங்கருயி
ரினையேயுண்பா
னின்னிலையிவ்வுழியுளதோவெனக்கனகனுருத்தடித்த
நெடியதூணின்
மன்னிலைபெற்றவனுயிருண்டனையரங்கா நினக்கிணையார்
மதிக்குங்காலே. (715)

இது முதலடி மூன்றிடத்துமடக்கு.

இதனை மிடல்வல்லிடங்கரிடம் நொந்தமூலம், முன் நினை கரி மூல மென்னுரை சென்றடங்காமுன்ன ரவ்வுழி அவ்விடங்கருயிரினை யுண்பான் முன்னினையெனச் சேர்க்க.

(இ-ள்) மிடுக்கையுடைய வலிய முதலையின்கையி லகப்பட்டு நொந்ததேதுவாக, முன்னொளி லுன்னை நினைத்த யானை சொல்லிய மூலமே யென்னு முரையிரொலி நினது திருச்செவியுட்புக் கடங்காதமுன்னம் அக்கயத்தினிடத் தந்த முதலையினுயிரை யுண்ணவேண்டிச் சென்றனை; அஃதன்றியும், அரங்கனே! நீ அந்தரியாமியாகநின்ற திங்குமுளதோ வென் றிரணியன் கோபித்தடித்த நெடியதூணினிடத்து மிகவுநின்று அவ்விரணியனுயிரையு முண்டனை; ஆகையால் விசாரிக்குமிடத்து நின்னோ டிணையானகடவுள ரில்லை யென்றவாறு. இதன்கண் அகப்பட் டென்பது சொல்லெச்சம். உரை ஆகுபெயர். திணை - பாடாண். துறை - கடவுள்வாழ்த்து.

வெளியதாயமைந்த இடைமேருவதாமுலையுயிரோவியத்தைப்பெற்ற
வளியதாயளியதாய் மலர்மாதேமாதேவராருமாரு
மொளியதாமமுதமொழிகருங்குவளைவிழியெனலாமுறையுணண்பா
வெளியதாயிருபதுகைக்குன்றினைவென்றுனிடபகிரியாமன்றே. (716)

இஃதிரண்டாமடி மூன்றிடத்துமடக்கு.

(இ-ள்) நண்பனே! உயிரோடுங்கூடிய ஓவியம்போல்வாளைப்பெற்ற கிருபையையுடைய தாய், வண்டு மதுவுண்ண வாராயப்பட்ட தாமரை மலரே; மாது அம்மலரிற் செய்யவளே! சந்தயமில்லை. முலை மேரு; இடை ஆகாயம்; வானோர்யாவருமுண்ணும் அமிர்தம் மொழி; விழி

கருங்குவளை யென்பனவாம். உறையுமிடம், இராவணனுகிய இருபது கைக்குன்றை யெளிதாகப் போர்க்களத்துவென்ற சுந்தரத்தோளழக சோலைமலையா மென்றவாறு. பகுதி - பாங்கற்கூட்டம். துறை - இயம் பிடங்கூறல்.

ஏதுகொண்டுமானிடர்தமைப்பாடுதலிழிபென்றெப்
போதுமாறனைப்போற்றுதற்கென்னொடின்புறுநெஞ்சே
யாதுமாதுமென்முல்லைமுல்லையினிறையாவான்வா
னீதியாய்ந்தனமாகையான்முத்திநிச்சயமன்றே. (717)

இது மூன்றுமடி மூன்றிடத்துமடக்கு.

(இ-ள்) ஏது......................நெஞ்சே—யாதாயினு மொரு மிகுந்த பொருளை முந்த வாங்கிக்கொண்டாயினும், அதன்முன்னாயினும் மனிதரைப்பாடி வாய்மையிழத்தல் இழிந்ததொழிலென்றறிந்து, அவர்களைப்பாடாதெப்போதும் காரிமாறப்பிரானைப்போற்றுதற்கு என்னோடொன்றுய்ப் பேரின்பமெய்தாநின்ற நெஞ்சமே! ஆது மாது மென் முல்லை முல்லையினிறையாவான் : நாம் மேலு மாகக்கடவோம்; பசுக்கள் பொசிப்பாகமெல்லும் முல்லைக்கொடியையுடைய முல்லைநிலத்திற் கிறைவனுகிய கண்ணபிரானது. வான்நீதி யாய்ந்தனமாகையால் - பரம பதத்தினதொழுக்கத்தை மாறனால்கூற ஆராய்ந்தனமாகையால். முத்தி நிச்சயமன்றே - இருவழியாலும் நாம் முத்தியைப்பெறுதற்குச் சந்தய மில்லை யென்றவாறு.

ஆது மென்பது மே லாகக்கடவோமென்னும் உளப்பாட்டுத் தன்மையின்வந்த எதிர்காலமுற்றுவினைச்சொல்; என்னை? "ஓஒதல் வேண்டு மொளிமாழ்குஞ் செய்வினை, ஆஅது மென்னு மவர்" என்பதனு லறிக. திணை - வாகை. துறை - அறிவன்வாகை.

வீடாளிவீட்டினுக்குவீடாயதனைநிலையாய்விழுமிதாக்குங்
கேடாளர்கேண்மையினைப்பிரித்தெனையுந்தனதடியார்கேண்மையாக்கும்
வாடாதமகிழ்மாலைப்பெருமானைத் துணைநெஞ்சமதித்துவிண்மே
னடாளநாடாளரியையுநினைநினையினித்தென்னுட்டானுட்டான். (718)

இது நாலாமடி மூன்றிடத்துமடக்கு.

(இ-ள்) பாமபதத்தினையாளுமவன் குடிகொண்டிருக்கும் ஆன்மாவாம் வீட்டினுக்கு வீடாகிய யாக்கையையும் நிலையிற்றாகும் முக்கியமென வுட்கொள்ளும் ஞானதெரித்திருறவினை யென்னைவிட்டுநீக்கி, அறிவிலியாகிய வென்னையுந் தன்னடியார்க்குச் சுற்றமாக்கும் வாடாத வகுளமாலிகையையுடைய சுவாமியை, எனக்குத்துணையாகிய நன்னெஞ்சமே! இவனே பாமாசாரியனென வுட்கொண்டு, விண்ணுக்குமேலாய பாமபதத்தினை ஆளுநினை ; அவனோடு நரனுஞ்சிங்கமுமானவனையும் நினை ; நினைத்தால் நின்பேரைத் தெற்கின்கண்ணுண்டாகியநாட்டினையுடைய நமன் றன்கணக்கின்கண் ணெழுதா னென்றவாறு.

நம்பேரை மனத்துட்குறியா னென்றுமாம். எனவே இயமதண்டமுமில்லை, செனனமுமில்லை, முத்தியையு மெய்தலா மென்பது பயனும். திணை—காஞ்சி. துறை—பொதுவியற்பாலுட் காஞ்சியைச்சார்ந்த பொருண்மொழிக்காஞ்சி. இவைநாலு மோரடி மூவிடத்துமடக்கு. இனி யீரடி மூவிடத்துமடக்கு வருமாறு:—

தாம்பரியதாம்பரியதிரைதிரைத்தபொனங்கொடியிற்
சங்கஞ்சங்கந்
தேம்பணைத்தேம்பணைத்தெறியும்விண்ணகராய்விண்ணகராய்
செல்வாசெல்வா
யாம்புகழ்செண்பகமாறன்மொழித்ததமிழ்மறையினைக்கற்
றிறைவனீநீ
யாம்பரிசுற்றவரிதயத்தினிற்குடிகொண்டிருப்பதற்கென்
னுகத்துள்ளே. (719)

இது முதலடியும் இரண்டாமடியும் மூன்றிடத்துமடக்கு.

(இ-ள்) பாயும் பரியையொப்பனவாம் பெரியதிரைகள், சுருட்டியெடுத்த பொலிவினையுடைய அழகியகொடியினோடுஞ் சங்கமென்னு மிலக்கத்தையுடைய சங்குகளையும் பூவிற்றேன் பாயும் வயலினிடத்துகளித்தெறியுந் திருவிண்ணகரின்கண் ணுறைபவனே! பாதத்துவமென்று தேவர்களாராய்ந்த வுபயவிபூதியையு முடைய செல்வனே! எம்மனோர்புகழ்பவனுஞ் செண்பகமாறன் வேதசாரத்தைக் கோதறத்தெள்ளியுரைத்த திருவாய்மொழியினைக் கற்று, நீயே பாப்பிரமமென்பதாஞ் சுபாவமுணர்ந்தவ ரிதயதாமரையிற் குடிகொண்டிருக்கச் சென்ற நீ என்னிதயத்துள்ளுங் குடிகொண்டிருப்பதற்கு வருவாயாக வென்றவாறு.

இதனுள், பின்னர்வந்த செல்லென்பதனை வினைத்தொகையாக்கிப் பின்னர்நின்ற நீ யென்பதனோடுஞ் சென்ற நீ யெனக் கூட்டுக. பொருள் கோள் - கொண்டுகூட்டு. திணை - பாடாண். துறை - கடவுள்வாழ்த்து.

முன்னைமுன்னைநாட்டுறந்தவனவனியைமுதலானுன்
றன்னைவந்தடைக்கலம்புகக்கொடுத்தமெய்த்தண்காவா
னென்னையென்னையெண்ணுவதினியினியவரென்கேள்கேள்
உன்னையந்தகாமதிக்கிலன்பிறருளருனக்கன்றே. (720)

இது முதலடியும் மூன்றாமடியும் மூன்றிடத்துமடக்கு.

(இ-ள்) முன்னைமுன்னைநாட்டுறந்தவன்--தமையனை முற்காலத்து விட்டுநீங்கின வீடணன். தன்னைவந் தடைக்கலம்புக முதலானு னவனியைக் கொடுத்த மெய்த்தண்காவான் - தன்னிடத்துவந்து சரணு கதியென்ன அந்த மூத்தவனான இராவணனிலங்கையை அந்த வீட ணற்குச் சொன்னபடியே கொடுத்த சத்தியவசனத்தையுடைய திருத் தண்கா வென்னுந் திருப்பதியுள்ளான். என்னை - என்னுடையசுவாமி. இனியவரென்கேள்--அவனுக்கினிய அடியவரு மென்சுற்றம். ஆகையால், கேள் அந்தகா - அந்தகனே! கேட்பாயாக. என்னை? எண்ணுவதினி - என்னைக்குறித்து நீ மேலெண்ணத்தகுங் கொடுவினைகள் யாது மில்லை. உன்னை மதிக்கிலன், பிற ருள ருனக்கு - உன்னை நான் மனத் தச்சப் பட்டு மதிப்பது மில்லை; உன்கொடுவினைக்குத் திருத்தண்காவானடிய ரல்லாத பிறருண் டென்றவாறு.

அன்று - அசை. முன்னை - தமையனை. என்னை - என்சுவாமி. என்னை - யாதுமில்லை. இனி - மேல். முதலானுன் - மூத்த இராவணன். வீடணனாகிய அவனுக்கெனக் கூட்டுக. துறந்தவன் - வினைப்பெயர். திணை - வஞ்சி. துறை - நெடுமொழிவஞ்சி.

முண்டகமுண்டகநெருகோடுறுமேதிமேதிகளே
  முற்றுமுற்றும்
வண்டிமிர்காவியுமேயுமரங்கத்தானருட்கிலக்கா
  மகிழ்நர்வாய்மைத்
தொண்டமைபாணரைக்கன்னுவாயிலின்கட்கரிக்கலம்போற்
  றுன்றநம்மிற்
கண்டனங்கண்டனம்புரைமென்மொழிநடையெங்கையயர்தற்
  காதகாத. (721)

இது முதலடியும் நாலாமடியும் மூன்றிடத்துமடக்கு.

(இ-ள்) தாமரையைமேய்ந் துள்ளமகிழப்பட்ட கொம்பினை மிக்க வாயுதமாகவுடைய எருமைகள், அதன்மேலு மின்புற்று, எல்லாநாளும் வண்டுக ளாரவாரிக்கு நீலோற்பலத்தினையும் மேயுந் திருவரங்கத்தா னருட்கிலக்காம் நம்முடைய தலைவர்க் குண்மையாகத் தொண்டுபா டமைந்த பாணரை, இன்று கன்னவாசலிற் கரிப்பானைபோல நம் மில்லத்துவாயிலின்கட் டோன்றவுங் கண்டனம்; இங்ஙனங் கண்டது நமக்குத்தக்கதாயினும், தோழீ! பாகினையும், அன்னத்தினையும்போன்ற மெல்லிய மொழியினையும் நடையினையு முடைய எங்கையர்காணில் அந்தோ! வருந்துதற் கேதுவாதலா லிது தகாததா மென்றவாறு. இன்று என்பதனோடு பிறவுஞ் சொல்லெச்சங்கள் வருவித்துரைக்க. பகுதி - பரத்தையிற்பிரிதல். துறை - பாணனைப்பழித்தல்.

பத்தர்தீவினைப்பற்றறுத்தருள்பரம்பரன்மாயோ
னித்தனின்றவூர்வரைமயிற்களிநிரைத்தெழுகாந்த
ளத்தமத்தம்வம்படர்முலைமுலைமொழிநகைவேய்வேய்
முத்தமுத்தமவிலவிதழிதழ்குழன்முருகார்கார். (722)

இது கடையிரண்டடியும் மூன்றிடத்துமடக்கு.

(இ-ள்) பத்தரிடத்துப் பழையதீவினையாலடைந்த ஆசைகளைத் தீர்த்துக் கருணைசெய்யும் மேலாகிய பரமனாகிய மாயோன் அழிவில்லா தான அவனது நின்றவூரென்னுந்திருப்பதியைச் சார்ந்த வரையிடத்து மயில்போலுஞ் சாயலையுடையாட்கு, தோழீஇ! வண்டுகள் கூண்டெழு தலையுடைய காந்தள்போலும் கை; பொன்மலைபோலும் கச்சையறுக்கப் படாநின்ற முலை. முல்லையென்னும் பண்போலும் மொழி; வடத்தி னிரைத் தணியப்பட்ட வேய்முத்தம்போலும் நகை; நல்ல இலவம்பூப் போலும் அதரம்; பரிமளிக்கப்பட்ட முகில்போலும் குழ லென்றவாறு.

இதனுள் அத்தமென்றது பொன்மலை; "அத்தம்மனையகளிற்றந் நகர்" என்றார் முனிவரும். முலையென்பது இடைக்குறை; "முலை யணிந்தமுறுவலாள்" என்பதுபோலக் கொள்க. முருகார்கார் அற்புத வுவமை. தோழீயென்னும் முன்னிலை எச்சம். பகுதி - சேட்படை. துறை - தலைவன் பாங்கிக் கவயவங்கூறல்.

கண்டனனெண்பொருளேமெய்ப்பொருளெனலுமுயிருளதாக்
  கழிந்தயாக்கை
மண்டலமண்டலம்பரந்தமாவலிமாவலிமுழுது
  மாற்றமாற்றங்

கொண்டறல்கொண்டறவிமையோருறவுறவேசிறைவைத்த
கொண்டல்கொண்டல்
வெண்டிரைமுத்தெறிமயிலைமடமயிற்கெப்படிபிரிவை
விளம்புவேனே. (723)

இஃ திடையிரண்டடியும் மூன்றிடத்துமடக்கு.

(இ-ள்) பொன்னாகியநல்லபொருளே பொய்யில்லாப் பரப்பிரம மாகிய பொருளென்று வியந்து கூறலும், உடனே உயிருண்டாயிருக்கவும் உயிர்நீங்கப் பொலிவுநீங்கியிருக்கும் யாக்கையாக அவள்யாக்கையைக் கண்டனனென்றால், வட்டத்தையுடைத்தாய் அணுச்செறிந்தபூமியை யாண்ட மாவலியுடைய பெரியவலிமுழுதும் மாற்றும்படிக் கவனோடு மாற்றங்கொண்டு, அவன்பெய்யு முதகத்தையேற்றுத் தேவர் கலியாண மெய்த மிகவும் அவனைப் பாதாளத்திற் சிறைவைத்த காளமேகம்போலு நிறத்தையுடையானது, கீழ்காற்றானது கடலிற் றிரையெடுத்த சங்கு மிப்பியு மீன்ற முத்துக்களைத் திரையோடுங்கூடிக் கானலிலெறியுந் திரு மயிலாபுரியில் மடப்பத்தோடுங் கூடிய மயில்போலுஞ்சாயலையுடையாட் கென்பிரிவை, தோழீஇ ! யா னெவ்வாறுரைப்ப லென்றவாறு.

இதனுள், மாவலி - அவுணன். மாவலி - பெரிய பெலம். மாற்ற- நீக்க. மாற்றங்கொண்டு — மாறுபாடுகொண்டு. அறல்கொண்டு — உதகத்தைக் கையிலேற்று. அற விமையோருற - தேவர்கள் கலியாண மெய்த. உற - மிகவும். கொண்டல் - மேகம். கொண்டல் - கீழ்காற்று. தோழீ யென்னு முன்னிலை எச்சம். பகுதி - பொருள்வயிற்பிரிதல். துறை - வாட்டங்கூறல்.

குவளக்கரிக்கன் றுதவியமால்கடிகைச்சிலம்பிற்கடிபொழில்வாய்த்
துவளத்துவளத்தளவ முகையாம்பலாம்பல்சமண் வாய்வாய்
துவளத்தனிநுண்ணிடையமிர்தந்துடியேய்மடந்தாய்நின்கருங்கட்
குவளைத்துவளைக்குலஞ்செறிகைக்கைக்காந்தளிற்கூட்டமதென்னென். ()

இஃ திரண்டாமடியும் நாலாமடியும் மூன்றிடத்துமடக்கு.

(இ-ள்) கசேந்திரனுக் குதவிய மாயோன் றிருக்கடிகைச்சிலம்பில் விளங்கிய சோலைவாய் வெண்மைநிறத்தோடுங்கூடிய அழகாகிய வளத்தை யுடைய முல்லைமுகைபோலப் பல்லையும், சேதாம்பல்போல வாயையும்,

அமிர்தத்தையுந் துடியையும்போல மொழியையு மிடையையு முடைய மடந்தையே! நினது கரிய கண்ணாகிய குவளைக்கு, வளையினது கூட்டஞ் செறியுஞ் செய்கையையுடைய கையாகிய காந்தளோடுங் கூட்ட முண்டானகிரியைக் கேது யாதென்று கூறுவாயாக வென்றவாறு.

யாதென்பது ஐயவினாவாகலால், காமனது அறுதிப்பாணமாகிய கண்ணென்னும் நீலம் என்னுயிரைக் கொல்லாமைக்கெண்ணியோ பிறிதொன்றுகருதியோ வென்றவாறு. பகுதி - பாங்கற்கூட்டம். துறை— நாணிக் கண்புதைக்க வருந்தல். இவையாறு மீரடி மூன்றிடத்து மடக்கு. இனி மூன்றடிமூவிடத்துமடக்கு வருமாறு:—

குன்றுவின்குன்றுவின் றுயர்க்குயர்நன்குடைக்குடைக்கொள்
கோமான்கோமா
னன்றுமன்னன்றுமன் னுலகமுழு தழுதுயர்தீர்
நாதன்வார்வார்
நின்றுனைநின்றுனையுடன்வருகவருகவென
நேமிநேமி
யொன்றுல்வல்லிடங்கரைக்கொன்றருள்புரிகாரரங்கனென
துள்ளத்தானே. (725)

இஃ தீற்றடியொழித் தேனைமூன்றடியும் மூன்றிடத்துமடக்கு.

(இ-ள்) குறைதலில்லாத இனிமைகளைத்தரும் மலையைப் பசுக்களின் றுன்பத்திற் குயர்த்திய நன்மையுடைய குடையாகக் கைக்கொள்ளுந் தலைமையையுடையோன், பூமிதேவியிடத்து நட்புடைத்தாங் கொழுநன், பிரமகற்பங்கூடும் அந்தியகாலத்து ஏகோதகப்பிரளயம், நிலைபெற்ற உலகமனைத்தையும் கிளைத்தெழ அதனு ளழுந்தலந் துயரத்தைத் தீர்த்துத் திருவுதரத்துள் வைத்த சுவாமி, நீண்டொழுகிய நீரின்கண்ணின் று ஆனை நின்கைச்சக்கரத்தோடும் வருக என்னையுடையவனே யென்றழைப்பச் சென்று, வட்டத்திகிரியொன்றினான் மிடுக்கையுடைய முதலையைக் கொன்று யானையினுயிரைக் காத் தருள்செய்த காளமேகம் போலத் திருமேனியையுடைய அரங்கன் என்னிதயத் திருப்ப னென்றவாறு.

எனவே, எனக் கியாதுகுறை? ஒருதுன்பமு மில்லை யென்பது பயனும். இனிமை - காட்சிக்கினிமையும், பலமூலாதிகளைத் தருதலும். கோமான் - தலைமையையுடையோன். கோமான்—பூமிதேவி, நன்றும்—

நட்பாம். வார்வார்—ஒழுகும்நீர். நின்றனே—நினது சக்கரப்படை. அருக—உடையவனே. நேமி — வட்டம். திணை - பாடாண். துறை - கடவுள் வாழ்த்து.

வாக்கிஞல்வாக்கிஞலாரணஞரணன்மலராண்மன்னன்மன்ன
ஞக்கம்பாவையும்புகழ்செந்தமிழ்மாறன்றடரியிலென்னன்பாநண்பா
தாக்கர்தாக்கரந்தையுறத்தாக்கணங்குமணங்குறுதித்தாரைதாரை
நோக்கிஞேக்கிஞணேயகன்றதகன்றதுளஞேயுநோயும். (726)

இது முதலயலடியொழித் தேனைமூன்றடியும் மூன்றிடத்துமடக்கு.

(இ-ள்) என்னிடத் தன்பாம் நண்பனே! தனது திருப்பவளத்தினி லுண்டான நாலுகவிகளாலும், வேதாந்தத்துட்பொருளாம் நாராயணனாகிய தாமரையாள்தழுவும் நல்லமன்னன்செல்வமுழுவதும் வாழ்த்துஞ் செம்மையையுடைய திருவாய்மொழியாகிய தமிழையுடைய காரிமாறப்பிரான் றடரிமலேயினிடத்துப் பொருவார்போர் துன்பமுறும்படி பொரும் வீரமாகாளியுங் கண்டால் வருத்தத்தையெய்தும் வாளின் வாய்க்கூறுபோலக் கொலைபுரியுங்கண்ணேடுங்கூடிய அழகினையுடையாளுக்கத்தாலெனது நிறையினது தலைமை யென்னைவிட்டுநீங்கியது; எனதுள்ளம் தளராநின்றது; காமநோயும் மிகுந்ததென்றவாறு.

வாக்கு-திருப்பவளம். நாலுவாக்கு-ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரமாகிய நாற்கவி. மன் நன் - தழுவும் நல்ல. மன்னன்—தலைவன். ஆக்கம். சொரூப ரூப குண விபூதிகள். தாக்கு - படை. அரந்தை - துன்பம். தாரை - கண் நோக்கு - அழகு. ஆண் - தலைமை நுதி—ஆகுபெயர். தாக்கரந்தையுற எனப் பொருந்தாரெய்துந் துன்பம் போரின்மே லேற்றப்பட்டது. என்னை? "வேண்டும்பனுவற்றுணிவு" என்பதுபோலக் கருத்தாமயக்கம் பகுதி—பாங்கற்கூட்டம். துறை—உற்றதுரைத்தல்.

மருணயனமருணயனம்பாலளித்தவளித்ததல்லான்மழலேவாய்வாய்
தருநகையீதருநகையீதருஞ்சோலைமலைமலைநத்தான்றஞன்றன்
முருகவிழ்பூமகளுலகிற்கருஞேக்குநகையுமெனுமூறைபோலென்று
லொருதலையன்றெருதலையன்றிங்காமிக்காமிக்கையுள்ளேயுள்ளே. (727)

இஃ தீற்றயலடியொழித் தேனைமூன்றடியும் மூன்றிடத்துமடக்கு.

(இ-ள்) நெஞ்சமே! இம்மழலைமொழியையுடையாளது மருட்பார்வையோடுங்கூடிய கண்கள் அருட்பார்வையோடும் ஆனந்தத்தை நம்மிடத்திலே தந்த கருணையையுடைத்து; அதுவுமன்றியே இவள் வாயிலுண்டாகிய இக் குறுநகையும் பெறுதற்கரிய மகிழ்ச்சியைத் தாநிற்கும்; இவையிரண்டும், திருமாலிருஞ்சோலைமலையில்வாழ்பவனும் போரையுடைய பாஞ்சசன்னியத்தையேந்துவான்றன் பாரியாகிய மிகுந்த மதுவைச் சொரியுந் தாமரையாள் உலகத்துயிர்கட் குதவும் அருணோக்கும், திருநகையும் கொடுக்கும் பேரின்ப மெப்படியோ அப்படியென்னும் முறையேபோலென்று மும்மைதொடுத் திவ்வுலகின்கண்ணு மிவளைவிரும்பும் இவ்விருப்பம், ஒருதலையினுள்ளதல்ல, இருதலையினுமுள்ளதென்பது நிச்சயமென்று விசாரிப்பாயாக என்றவாறு.

உள்ளே - நெஞ்சமே. உள் - விசாரிப்பாயாக. அருணயன் - அருட்பார்வையோடுங்கூடியஆனந்தம். அளித்த அளித்து - தந்த கருணையையுடைத்து. ஈது - இதுவும். தருநகை - உண்டாய புன்முறுவல். அருநகை - பெறுதற்கரியமகிழ்ச்சி. அன்று - கழிபிறப்பில். இருதலையுமுள்ளதென்பது எதிர்மறைச்சொல்லெச்சம். ஏகார மீற்றசை. பகுதி- இயற்கை. துறை - குறிப்பறிதல்.

மானனையாளிணைமென்றோளணியிழாயரக்கேசன்
மலரோன்றன்பரற்
பானலம்பானலம்புரிவோருயிருயிர்ப்பானிகல்விளையாப்
பாலன்பாலன்
பானிரையானிரைக்கடுக்கல்கவிகவிகைப்புயலரவி
னடியாடி
தேனிறைதேனிறைத்தெழுபொன்னியுட்போதுபோதமுகஞ்
சிவணுவேய்வேய். (728)

இது முதலடியொழித் தேனைமூன்றடியும் மூன்றிடத்துமடக்கு.

(இ-ள்) அழகியபூணிணையுடையாய்! என்னால் விரும்பப்பட்ட மான்போலுநோக்கினையுடையாளுடைய மெல்லிய தோள்களானவை, துளைபொருந்தா மூங்கில்போலும்; முகம், திருவரங்கத்தீசன், பிரமனாகிய மூத்தபிள்ளையிடத்தும், பூலோகத்தின்பத்தை விரும்பினோரிடத்துத் தாமரைமுதலிய பூப்பாணநான்கினையுந் தொடுத்தபின்னர் நீலோற்பல

மாகிய அறுதிப்பாணத்திற் கைவைப்பதல்லால் அப்பாணத்தை விரும்பியவின்பம்பெறாது வருந்துவாருயி ருடலைவிட்டுநீங்கும்படிக்குத் தொடுத்துப் போர்செய்தறியா மன்மதனாகிய இளையபிள்ளையிடத்தும் அன்புசெய்வான், கன்மாரியாற்கதறப்பட்ட பசுக்களினிடரைத்தீர்த் தற்கு மலையைக் குடையாகக்கவிக்கப்பட்ட காளமேகம், பாம்பினை யரங்காக நாடி யாடப்பட்டவனது (பொன்னியுட்போது தேனிறை தேனிறைத்தெழுபோது) காவிரியுளுண்டான வண்டுகள் தங்கு மதுவை யொழுக்கியோங்குந் தாமரைப்பூப்போலு மென்றவாறு.

இது, வேய்சிவணுவேய் எனவும், பொன்னியுட்போது, தேனிறை தேனிறைத்தெழுபோது எனவும் பாடமாற்றினவாற்றாற் கொண்டு கூட்டுப்பொருள்கோளாயிற்று. ஒழிந்த அரும்பதங்களு முறையிற் கொள்க. என்னால்விரும்பப்பட்டவென்பது சொல்லெச்சம். பசுநிசேட்படை. துறை - அவயவங்கூறல்.

மதுமதுகையினுணவளிமகிழ்மகிழ்முனிவரைமயில்குழல்வான்வான்
விதுவிதுவெனவொளிதருமுகமயிலயில்விழிமொழிகுயில்வாய்வா
யதுவதுவையமரைமுகைமுலைமுலைநகையறனுரைதெளிவாயாய்
முதுமுதுவருமிலவிதழிதழெனலொடுமொழிவதுவயிறுலால். (729)

இது நாலடியும் மூன்றிடத்தும் முற்றுமடக்கு.

(இ-ள்) தேனை யுரனுடனுண்ண வண்டுகள்விரும்பும் வகுள மாலிகைமுனிவன் றடரிமலையினிடத்து மயில்போலுஞ்சாயலையுடை யாட்கு நண்பனே! குழலானது விசும்பின்கண்ணுறையுங் காளமேக மென்பதாம்; முகமானது உதயமதியை இதுவென்று கண்டார் கூறும்படிக் கொளியைத் தருவதாம்; விழியானது கூரிய வேலையொக் கும்; மொழியானது குயிலின்வாயில் மொழியதனை யொக்கும்; முலை யானது மணத்தையுடைய தாமரைமுகுளத்தையொக்கும்; நகையானது முல்லையரும்பையொக்கும்; அதரமானது, அறத்தைக்கூறு நூல்களி னுரையைச் சந்தயமற ஆராயுந் தலைமையையுடைய அறிவினான்மூத்தோர் இலவம்பூப்போலு மென்பதனோடும், வயிற்றிற் குவமைசொல்வது கொம்பரினின்றசையு மாலிலையேயா மென்றவாறு.

மதுகை - உக்ரம். வான் - மேகம். இது - சுட்டு. அயில் - கூர்மை. வாய் - வசனம். அது - சுட்டு. வதுவை - மணம். மரை - தாமரை,

முலை - முல்லை. ஆய் - ஆராய். முதுவரும், உம்மை சிறப்பு. இதழ்—பூவின்றோடு. ஆல் - அசையப்பட்ட. முல்லை, ஆல் முதலியன ஆகு பெயர். பகுதி—பாங்கற்கூட்டம். துறை—இயல்பிடங்கூறல். முன்னிலை தோன்றா எழுவாய். ஆக வகை யேழினால் இடைவிடாமடக்கு நூற்றைந்தும் அடைவே வந்தவாறு கண்டுகொள்க. வகையேழாவன:— அடிமுதன்மடக்கு-௧௫. அடியிடைமடக்கு-௧௫. அடியிறுதிமடக்கு-௧௫. ஆக அடிதொறும் ஓரிடத்துமடக்கு-௪௫. முதலொடிடைமடக்கு-௧௫. முதலொடுகடைமடக்கு-௧௫. இடையொடுகடைமடக்கு-௧௫. ஆக அடிதொறு மீரிடத்துமடக்கு-௪௫. அடிதொறு முதலிடைகடை மூன்றிடத்துமடக்கு-௧௫. ஆக வகையேழினால் மடக்கு நூற்றைந்தும் இடைவிடாமடக்கு. (௧௦)

262. ஏனையதாமுமிதனதெண்பெறுமே.

(எ-ன்) ஒழிந்த இருவகைமடக்கிற்கும் தொகையுணர்—ற்று.

(இ-ள்) ஒழிந்தனவாம் இடைவிட்டுவருமடக்கும், இடைவிட்டும் விடாதும்வருமடக்கும் ஆகிய இரண்டுங் கூறிய இவ் விடைவிடாமடக்கே போல எழுவகையாய் ஒரோவொன்று நூற்றைந்து நூற்றைந்தாந் தொகைபெறு மென்றவாறு.

ஆக மூவகைத்தா யெழுதொடையான் மூன்றிடத்தான் மடக்கு முந்நூற்றொருபத்தைந்தா மென்பதூஉ பெற்றன. அவையு மிம்முறையே கூறுகிற் பெருகும். அவற்றுள்ளுஞ் சில வருமாறு:—

வாமனன்மழவிடையினன்பாற்கடல்வழங்கு
வாமனன்புகழ்கள்வனவைகுந்தைமாதவனும்
வாமனன்றனையிடைவிடாதுணர்வினுள்வைப்பான்
வாமனன்னமக்கெளியதாமும்பர்வைகுந்தம். (730)

இஃ திடைவிட்டுவந்த அடிமுதன் முற்றுமடக்கு.

(இ-ள்) பறந்துபாயும் அன்னத்தையுடைய பிரமனும், இளைய இடபத்தையுடைய சிவனும், திருப்பாற்கடல்பெற்றுத்தரப்பட்ட அயிராவதத்தையுடைய இந்திரனும் என்னும் மூவரும் வழுத்துங் கள்வனென்னுந் திருநாமத்தோடும் வைகுந்தையாதவனாகிக் குறளுருவானவன்றன்னை விட்டுநீங்காது ஞானத்தினா னினைக்கும்படிக்குப் புலாதிகளிற்போகாது என்னோடுங்கூடி வருவாயாக மனனே! அங்ஙனம்

நினைத்தாற் பெறுதற்கரியவா மெல்லாப்பதத்திற்கும் மேலாய பாமபதம் நா மெய்துதற் கெளியதா மென்றவாறு. திணை-பாடாண். துறை-கடவுள்வணக்கம் ; ஓம்படையுமாம்.

> வாசநாண்மலர்வண்டுகள்வாய்விடாவகையுண்டு
> மூசியேழிசைவண்டுகள்களிமுகிற்குழலாளைப்
> பூசன்மாமதன்வண்டுகள்பொரத்துழாய்புல்லாணி
> யீசனல்கிலன்வண்டுகளிறைதுறந்தெழுமன்னே. (731)

இஃ திடைவிட்டுவந்த இடைமுற்றுமடக்கு.

இதனுள், நாண்மலர்வண்டுகள் என்றது, பருவத்தின்மலர்ந்த பூவின் வளவிய தாதுக்கள் என்பதாம். பூசன்மாமதன்வண்டுகள் எ-து பஞ்சபாணங்கள் என்பதாம். வண்டுகளிறைதுறந்தெழும் எ-து சங்குகள் முன்கையைவிட்டு நீங்கும் என்பதாம். ஒழிந்தனவு முறையிற் கொள்க. திணை - பெண்பாற்கூற்றுக் கைக்கிளை. துறை - கண்டு கைசோர்தல்.

> மறைபயின்றவண்டமிழ்முனிகுருகையின்மன்காவெ
> யிறைவர்பின்னர்நெஞ்சகன்றதுகன்றிடத்திரங்காவே
> யறையிலிங்கிணையாமெனவுயிருணவங்காவே
> யுறைபுரந்தகண்மலர்களுமொல்லையுமுறங்காவே. (732)

இஃ திடைவிட்டுவந்த கடைமுற்றுமடக்கு.

(இ-ள்) சுருதிகூறியவுரையொடும்பொருந்திய திருவாய்மொழியைப் பாடித்தந்த சிபராங்குசமுனிவன்குருகாபுரியினிடத்து நிலைபெற்ற சோலைகளே! நின்னிற்பிரியேனெனப் பிரிந்த தலைவர்பின்னே யென்னெஞ்சமானது, ஈன்றணிமைப்போதில்விட்டுநீங்கின கன்றின்பின் செல்லு மீற்றுவே சொல்லுமிடத் தொப்பென்பதாக அகன்றது ; அதனாற் றனியிருந்தவுயிரையுண்பான் றனது துளையாகிய வாயை அங்காக்கப்பட்ட ஆயர்வேய்ங்குழல் தருவதாந் துளிகளையுடைய கண்ணாகிய குவளைகளு மெனதுவசமாகச் சிறுவரையுந் துயில்கில வென்றவாறு. ஆதலான் மேல் யாதுசெய்வே னென்பது பயன். பகுதி - இரவிற்குறி. துறை - காமமிக்க கழிபடர்கிளவி.

தாமாலமாலமருமென்றமாலமால
நாமாலமாலநளிநீர்கடமாலமால
தேமாலமாலகரிசேர்மலர்மாலமால
மாமாலமாலமலதாளுளமாலமால. (733)

இஃ திடைவிட்டும் இடைவிடாதும்வந் திடையு மிறுதியும் நாலடியும் முற்றும் மடக்கியது.

(இ-ள்) தாமாலம் - அண்டத்தையெல்லாந் தட்டழித்துண்டு கடக்கும் மிக்க பிரளயத்தில். ஆல் அமரும்—ஆலமரத்தினிடத் துறப்பவித்துத் தங்கும். மென்றமாலமால—மெல்லியஇலையிற் றுயிலுதலுடைய. நாமால மால - அச்சத்தைத்தரப்பட்ட நஞ்சம்போலுங் கருமையையுடைய. நளி நீர்கடமாலமால - செறிந்த நீராங் கடலைக் கடக்கப்பட்ட பெருமையொடுங் கூடிய மற்கடமாருதத்தையுடைய. தேமால - தேன்றுளும்ப. மா — வண்டுகள். லகரிசேர்- அதனையுண்டு களிப்பைப்பொருந்தும். மலர்மால— தாமரைப்பூவிருப்பமாக. மால - பெரிய இல்லமாகவுடைய. மாமால்-திருமகள் மயக்கும் அமால்—அழகையுடைய மாயோன். அமலதாள்—அழுக்கற்ற திருவடிகளை. உளமால்—உள்ளத்திலேயுடையேமாகையால். அமால— அங்கப் புதனுக்கு, நெஞ்சமே! யாஞ் சரி யென்றவாறு.

ஆலம் - மீமிசை. நளிநீர்கடமாலமால் - திருவடி. லகரி—ஆரியம். மால்—துயில்; இஃ தாகுபெயர். ஒடுக்கத்தில் அகரம் அசை. புதனுக்குச் சரியெனவே, ஞானமுடையேம் என்பதாயிற்று. திணை........ துறை........

பொருநற்புனற்சங்கணித்துறையான்
புல்லர்களச்சங்கணித்துறையான்
வருநற்றுடரியுரிஞ்சென்றாழ்
வைகுந்தலைக்காவினுஞ்சென்றாழ்
நெருனற்றருமவ்வணங்குளவே
னெஞ்சேநினைத்துவணங்குளவே
தருநட்புளதுவருந்தேனே
தானேமறித்துவருந்தேனே. (734)

இஃ தோரடியை யிரண்டாகப்பகுத் தடிதோறும் நான்கடியும் ஈரிடத் திறுதி முற்றுமடக்கு.

(இ-ள்) பொருநையிடத்துப் புனல்வளமருத சங்கணித் துறையை யுடையவன், அறிவில்லாதார் பொல்லாச்சடத்து ளணித்தாகக் குடி கொண்டறியாதவன், அவனதங்கமாகிய துடரிமலைக்கொடுமுடி சென்று பரிசிக்கப்பட்ட ஆதித்தன் றங்கியேகு முச்சியையுடைய சோலையினிடத் தின்னமுஞ் சிறிது முயற்சியொடுஞ்செல்ல நேற் றூமொழொடுங்கூடி யவளைத் தந்த தெய்வ மின்று மிறவாதிருப்ப துண்டென்று லதனை நெஞ்சமே! நினைத் தகனுள்ளத் துரும்படி வணங்குவாயாக; நேற்றைப்போலே என் னிடத்துக் கூட்டித்தரு நட்புடையதாம்; அத்தேன்போலு மொழியை யுடையாளு மாயத்தைவிட்டுநீங்கிக் கூடுவள்; மீள வருந்துவேனல்ல வென்றவாறு.

இதனுள், சென்று என்பது செல என ஒருவினையெச்சம் மற்றொரு வினையெச்சமாயிற்று. இதன்வேறுபாடும் அறிந்துகொள்க. பகுதி-இடந் தலை. துறை - பொழிவிடைச்சேறல்.

எட்டுமாதிரமாதிரமாதிரம்
வட்டமாறினுமாறினுமாறினும்
விட்டுவாமனன்வாமனன்வாமன
னிட்டர்மால்கடிமால்கடிமால்கடி. (735)

இது முதற்சீரொழித் தேனைமூன்றுசீரும் நான்கடியும் முற்றுமடக்கு.

(இ-ள்) அட்டகுலபருவதத்தையும், அட்டகயத்தையும், அட்ட திக்கையும், அவற்றையுடைய பூமியையும், இதன்கீழாயவுலகங்களையும், மேலாயவுலகங்களையும் ஏகோதகம் விழுங்குமாற்று வின்னு மழியினும் (அழியாதகாலத்திற்கும்) விண்டுவாகிய வாமனன், வாவும் அன்னத்தை யுடையவன், அழகிய மனத்தினுள்ளான், தன்னைவிரும்புவார் சித்தப் பிராந்தியைநீக்கும் மேகம்போன்ற திருமேனியன்; விளக்கத்தையுடைய மாயோன், அவனே யுலகிற்குக் காவலாவா னென்றவாறு.

ஆல்—வெள்ளம். தின்னுமாறு—விழுங்குமாறு. இன்னும்—இன்ன மும். மாறினும் - அழியினும். வாமனன் - வாவும் அன்னத்தை யுடையவன். வாமனன் - அழகியமனன் (விகாரம்). இட்டர் - தன்னை விரும்புவார். மால் - பிராந்தி. கடி - நீக்கும். மால் - மேகம், கடி - விளக்கம். மால் - மாயோன். கடி - காவல். அழியினும் என்னு மும்மையால் அழியாக்காலத்திற்கும் அவனே காவலென்பது தானே போதரும். எட்டென்பதனை முதல்விளக்காக்கி மூன்றிடத்து மேற்றுக.

எண்ணும்மை செய்யுள்விகாரத்தாற் றொக்குநின்று விரிந்தன. இதன் வேறுபாடும் அறிந்துகொள்க. திணை - பாடாண். துறை - கடவுள் வாழ்த்து. (கக)

263. பாதமனைத்து மடக்குதல்பழிதீர்த்
தோதியவனைத்தினுமழகுடைத்தே.

(எ-ன்) இன்னும் மடக்கலங்காரத்தையே யொருவழி வேறுபடுத்துக்கூறுகின்றது.

(இ-ள்) அடிக்கண்ணுள்ளசீர்முழுதும் மடக்கிவருதன் முன்னர்க் குற்றமறுத்துக்கூறியமடக்கனைத்தினும் மிக்கஅழகுடைத்தென்றவாறு.

அவை இரண்டடிமடக்கு, மூன்றடிமடக்கு, நான்கடிமடக்குமெனப்படும். அவற்றுட் சில வருமாறு:—

மறைகடந்தசொன்மாமகிழ்மாலைமான்
மறைகடந்தசொன்மாமகிழ்மாலைமா
னிறைசிலம்பினி லொண்ணுதனேத்திரத்
தறையுமங்கைக்கறைவலென்காதலே. (736)

இது முதலடியும் இரண்டாமடியும் முற்றுமடக்கு.

(இ-ள்) வேதத்தினந்தத்தைக்கடந்த (சொல்) கீர்த்தியையுடைய (மாமகிழ்மாலைமால்) பெரியபிராட்டிவிரும்பும் சொருப ரூப குணங்களினியல்பையுடைய மாயோன், அவனது ரகசியங்களைச் சொல்லித்தந்த (சொல்) திருவாய்மொழியையும், (மாமகிழ்மாலைமால்) வண்டுசெறியும் வகுளமாலிகையையுமுடைய பெருமையையுடையான் (நிறைசிலம்பினில்) சகலவளங்களு மல்கின துடரிமலையின்கண் ஒள்ளியநுதலினையுடையாள் தன்கண்களாற்சொல்லித்தந்த மங்கைக்குக் கூறுவ லெனதுவிருப்பத்தையென்றவாறு. பகுதி—மதியுடன்படுத்தல். துறை—குறையுறத்துணிதல்.

அஞ்சுவாளிவளைத்தழுவான்மதன்
மஞ்சுதோய்குழலீரெய்யமல்லைமால்
அஞ்சுவாளிவளைத்தழுவான்மத
னஞ்சமோமதியென்றடனையவே. (737)

இது முதலடியும் மூன்றாமடியும் முற்றுமடக்கு.

(இ-ள்) மேகத்தினது கருமையைப்பொருந்தின குழலையுடையீர்! வலியகஞ்சமோ சந்திரகிரணங்களென் றடனையசநிற்ப வுள்ளம் அச்ச

முறுவாளாகிய இவளை அதன்மேலுந் துன்பக்கண்ணீரொழுகும்படிக்குக் காமன் பஞ்சபாணங்களையும் வில்லைவளைத் தெய்யவுந் திருக்கடன் மல்லையின்மாயோன் றழுவுகில னென்றவாறு.

ஆகையா லிவனைக் கருணாகரனென் றுலகங்கூறுவ தியாதுதா னென்பது பயன். பொருள்கோள் - கொண்டுகூட்டு. மதி - ஆகுபெயர். மதன் நஞ்சம் - கொல்லும்வலியையுடைய நஞ்சம். ஓகாரம் வினா. இறுதிப்பயனிலை சொல்லெச்சம். திணை - பெண்பாற்கூற்றுக் கைக்கிளை. துறை - கண்டுகைசோர்தல்.

ஐயப்புகுமதனலங்கஞ்சலித்துயர்வா
னுய்யும்படிக்கருள்கூருத்தமனுமாதவன்சீர்
வையம்புகழச்சிலர்வழுத்தாவாறென்னோ
ஐயம்புகுமதனலங்கஞ்சலித்துயர்வான். (738)

இது முதலடியும் நாலாமடியும் முற்றுமடக்கு.

(இ-ள்) (நாலாமடி) பஞ்சபாணங்களைச்சொரியுங் காமனால் மேனி மெலிந் துள்ளத்தில் வருத்தமுற்ற சிவன்; இது வினைப்பெயர். (முதலடி) பிச்சைக்கு மனைதொறுஞ்செல்லு மஃதேதுவாகக் காசிக் கங்கைவடகரை யாகிய அவ்விடத்துத் தன்னை யஞ்சலித்தபெருமையா லவனதுசாபந் தீரக் கருணையை மிகுத்த வுத்தமகுணத்தையுடைய மாதவனது கீர்த்தியை யுயர்ந்தோர்புகழச் சிலமானிடர் வழுத்தாத தியாதுதா னென்றவாறு.

இதனுள், உள்ளமென்பனமுதலாயின சொல்லெச்சம். அஞ்சலித்த வுயர்வா னென்னுமிடத்துச் செய்தவென்னும் பெயரெச்சவாய்பாட் டீற்றின் அகரம் செய்யுள்விகாரத்தாற் றொக்கது ; என்னை? "புகழ்புரிந் தில்லிலோர்க்கு" என்பதுபோலக் கொள்க. பின்னர் வந்த வுயர்வு - வருத்தம் ; "உயர்வறவுயர்நலம்" என்பதனு லறிக. திணை - பாடாண். துறை - பரவார்ப்பழித்தல்.

தளைவிட்டார்மகிழ்மாறன்றன்வெற்பில்வான்
முளைவிற்போனுதலீருங்கண்முன்றில்வாய்
வளைவிற்கோமன்மதனம்படுக்கவோ
வளைவிற்கோமன்மதனம்படுக்கவோ. (739)

இது கடையீரடியும் முற்றுமடக்கு.

(இ-ள்) தனை......................விற்கோ — பாசமாகியவிலங்கைவிட்டு நீங்கினார்விரும்பும் மாறனென்னுந் திருநாமத்தையுடையவன் வெற்பினிடத்து வானிற்றோன்று மிந்திரதனுப்போன்ற நுதலையுடையீர் ! உங்கள் முன்றிலின்கண், சங்குவளைவிற்கவோ? மன்மதனம்படுக்க - என்னிடத்துநிலைபெற்ற விருப்ப மெனதறிவை யகப்படுத்தாநிற்ப. வளைவிற்கோ—வளைக்குங் கருப்புவில்லையுடையபகையாகிய. மன்மதனம் படுக்கவோ — காமன்றொடுக்கும் பூப்பாணங்களை நுமது குழற்கணியும் மாலையாகத் தொடுக்கவோ வென்றவாறு.

ஓகாரம் முதலு மீறும் வினா. இரண்டாவது அசை. கோ - பகை. பகுதி - குறையுறவுணர்தல். துறை - குறையுற்றுநிற்றல் ; பணிவிடை இளத்தலு மாம்.

கார்வானமால்வரையாய்கட்டுரைகூறானொருவன்
சூர்வாரணத்தான்பொற்சூழியினாற்றோற்றஞ்சார்
சூர்வாரணத்தான்பொற்சூழியினாற்றோற்றஞ்சார்
போர்வாங்குசேயகலான்பூம்புனமென்செய்வதே. (740)

இஃ திடையீரடியும் முற்றுமடக்கு.

(இ-ள்) கார்வான................னொருவன் — திருக்கார்வானத்துத் திருமால்வரையினுள்ளாய் ! ஒருவன் கட்டுரையுங்கூறுகின்றலன். சூர்வாரணத்தான்—பகைவர்க்குநோயைச்செய்யுங் கோழிக்கொடியனுமாய். பொற்சூழியினாற்றோற்றஞ்சார்—பொன்னினாற்செய்த முகபடாத்தோடும் பெருமைபெற்ற. சூர்வாரணத்தான் — அஞ்சாத யானையையுடையனுமாய். பொற்சூழியினாற்றோற்று — பொலிவுபெற்ற சரவணப்பொய்கையினிடத்துப் பிறக்கப்பட்டவனுமாய். அஞ்சார்போர்வாங்குசேய்—சத்துருக்கள்போரைநீக்கும் முருகனையான். பூம்புனமகலான்—பூவையுடைய புனத்தைவிட் டகல்வதுஞ்செய்கின்றிலன். என்செய்வதே-இதற்கியான் யான் செயத்தகுவ தியா தென்றவாறு.

கட்டுரை - அழகியவுரை. வாங்கும் - நீக்கும். ஆல் அசை. பகுதி- குறையப்பு. துறை - குறிப்பறிதல்.

ஒருத்தல்வெற்புடையானும்பர்துற்றுறை
வருத்தமன்கடன்மாவனமேபுக

லருத்திநாண்மலர்கொய்தறலாடியோ
வருத்தமன்கடன்மாவனமேபுகல். (741)

இஃ திரண்டாமடியும் ஈற்றடியும் முற்றுமடக்கு.

(இ-ள்) ஒருத்தல்வெற்புடையான் — அத்திகிரியினையுடையான். உம்பர்துற்றுணவருத்த — தேவர்கள்பொசிக்கு மமிர்தத்தை யுண்டாக்கும்படிக்கு. மன்கடல் — நிலைபெற்றகடலிற் கடைந்துபிறந்த. மா — திருமகளே! வனமேபுகல் - புனலே புகலிடமாகிய. அருத்திநாண்மலர் கொய்தறலாடியோ—கண்டார்விரும்பும் பருவமலர்களைக்கொய்தோ? புனலாடியோ? அன்றி யாதனாலோ? வருத்தமன்கடன் - உனது திருமேனிக்குத் தளர்ச்சியெய்தியமுறை. மாவனமேபுகல்—பெருமைபெற்ற அன்னம் போலு நடையினையுடையாய்! கூறுவாயாக வென்றவாறு.

துற்றுண வினைத்தொகை. வருத்த - உண்டாக்க. மா அண்மை விளி. வனம் - தண்ணீர்; நந்தவனமுமாம். புகல் - புகலிடம். அருத்தி- விருப்பம். நாண்மலர் - பருவமலர். ஓகார மிரண்டிடத்துங் கூட்டுக. கடைந்தென்பதும், திருமேனியென்பதும் முதலாயின சொல்லெச்சம். பகுதி - மூன்றுறவுணர்தல். துறை - வாட்டம்வினாதல். இவையாறும் ஈரடி முழுதுமடக்கு.

இனி மூன்றடி முழுதுமடக்கு வருமாறு:—

காவியங்கணல்லார்படிகாவிரி
காவியங்கணல்லார்படிகாவிரி
காவியங்கணல்லார்படிகாவிரி
வாவியும்புடைசூழரங்கேசனென்மனத்தான். (742)

இஃ தீற்றடியொழித் தேனைமூன்றடியும் முற்றுமடக்கு.

(இ-ள்) வாவியும் - வாவிகளும். விரிகாவியங்கணல்லார்படி காவிரி- மலர்ந்த நீலோற்பலம்போலும் அழகிய கண்ணையுடைய மகளிர் புனல் குடையுங் காவிரியும். விரிகாவியங்க ணல்லார் படி கா—அறமுதலிய நாற் பொருளுங் குறைபாடின்றிப் பரந்த காப்பியங்களை நல்லோ ரிருந்து கற்பனசெய்யுங் காவும். படிகா - ஊரைக்காக்கப்பட்ட. காவியம் — வாரிநாற்கட்டித் தோளிற் காவிய வாச்சியங்கள். அல் ஆர் கண்-இரவின் கண் ஆரவாரிக்குமிடங்களும். புடை........மனத்தான்—பக்கமெல்லாஞ் சூழப்படாநின்ற திருவரங்கேச னென்மனத்துளா னென்றவாறு.

இதனுள், சூழ், படி, படி, விரி, விரி என்பன இறந்தகாலமு நிகழ் காலமுங் கரந்துநின்ற பெயரெச்சவினைத்தொகைவாய்பாடு. "எஞ்சு பொருட் கிளவி செஞ்சொ லாயிற், பிற்படக் கிளவா முற்படக் கிளத்தல்" என்பதனுற் காவிரியும் காவும் அல்லார்கண்ணும் என்பனவற்றிற் கும்மைகொடாராயினர். திணை - பாடாண். துறை - கடவுள்வணக்கம். பா - கலித்தாழிசை ; என்னை? "அந்தடி நீண்டிசைப்பிற், கடிதலில் லாக்கலித் தாழிசை யாகும்" என்பவாகலான். (செய்யுள்) "வாள்வரி வேங்கை வழங்குஞ் சிறுநெறிபெங், கேள்வரும் போதி னெழால்வாழி வெண்டிங்காள், கேள்வரும் போதி னெழாலாய்க் குறுலியரோ, நீள்வரி நாகத் தெயிறே வாழி வெண்டிங்காள்" என்பதிற் காண்க. இது விதலை யாப்புப்பொருள்கோள். "அணியுமமிழ்தும்" என்னும் பாட்டில் மின் னும், பணியும் புரை மருங்குற் பெருந்தோளி படைக்கண்கள், பிணியு மதற்கு மருந்தும் பிறழப்பிறழ என்பதனு லறிக.

ஆமோதமுந்துவரிவண்டுகணீர்
தாமோதரான்றஞ்சையர்க்கோதில்வண்டேன்
ஆமோதமுந்துவரிவண்டுகணீர்
ஆமோதமுந்துவரிவண்டுகணீர். (743)

இது முதலயலடியொழித் தேனைமூன்றடியும் முற்றுமடக்கு.

(இ-ள்) ஆம் ஓதம் உந்து உவரிவண்டு உகள் நீர் - (இது முதலடி முற்றும்) ஆக்கஞ்செய்வதாந் திரை கரையிலெறியும் சமுத்திரத்திற் சங்குதவழும் புனலையுடைய வாவியில். வண்தேன் ஆமோதமும் துவளியதேனையும், பரிமளத்தையு முண்ணும். வரிவண்டுகணீர் - பாட்டையுடைய வண்டுகளே! நீர். மோதமுந்து உவர் இவ்வண்டுகள் என்னைப் பொர என்முன்னெதிர்ந்த (உவராகிய) காமனும், இப் பஞ்ச பாணங்களும் என்னை வருத்து மிதனை. தாமோதரான் றஞ்சையர்க் கோதில் - தாமோதரானது திருத்தஞ்சையிலுள்ளாராய தலைவர்க் குரைப்பீராகில், நீராம் - (நாலாமடியீறும் முதலும்) உமக்கு நல்லதா மென்றவாறு.

ஆம் - ஆக்கஞ்செய்யும். ஓதம் - திரை. உந்து - எறியும். உவரி - சமுத்திரம். வண்டு உகள் - சங்குதவழ். நீர் ஆகுபெயர். ஆமோதம் - பரிமளம். து - உண். "எஞ்சுபொருட் கிளவி செஞ்சொ லாயிற், பிற் படக் கிளவா முற்படக் கிளத்தல்" என்பதனுல் வண்டேனென்பது

உம்மையில்சொல்லாய் முன்னின்றது. வரி - பாட்டு. வண்டுகள்! அண்மைவிளி. உவர் முன்னிலைச்சுட்டுப்பெயர். வருத்துமிதனை யென்பது சொல்லெச்சம். பொருள்கோள் - மாட்டுறுப்பு. பகுதி - இரவுக்குறி. துறை - காமமிக்ககழிபடர்கிளவி.

நாகவரையானளியமலருள்ளா
ளுகவரையானளியமலருள்ளான்
பாகவதர்தம்பிரான்பாமாறன்றம்பிரா
ளுகவரையானளியமலருள்ளான். (744)

இஃ தீற்றயலடியோழித் தேனைமுன்றடியும் முற்றுமடக்கு.

(இ-ள்) புலவீர்காள்! பாம்பையணியும் அரையையுடையசிவன், வண்டுறுதலையுடைய தாமரையையிடமாகவுடைய பிரமன், பொன்னுலகினதெல்லையையுடைய இந்திரன், கருணையையுடைய அழுக்கற்றோ ரென்னு மிவர்களுள்ளத்திற் குடிகொண்டிருப்பான்; (நளியமலருள்ளான். நாலாமடியீறு) செறிந்த அழுக்குடையோரைத் திருவுளத்தாளினையான்; அவன் யாரெனில்? பாகவர்தம்பிரானாகிய பாமாறனுக்குத் தம்பிரானாகிய அத்தகிரிநாத னென்றவாறு.

புலவீர்கா ளென்னு மெழுவாய்முன்னிலை யெச்சம். அவனை மனமொழிமெய்களி னினைந்து வாழ்த்தி வணங்க அறமுதலிய நாற்பொருளும் பயக்கு மென்பது கருத்து.

சிலைநுதாலொழிதேடுதல்பார்சுலா
மலையுமாரமணியாவரிவளை
மலையுமாரமணியாவரிவளை
மலையுமாரமணியாவரிவளை. (745)

இது முதலடியொழித் தேனைமுன்றடியும் முற்றுமடக்கு.

(இ-ள்) (நாலாமடியீறும் முதலடிமுதலும்) வரிவளைசிலைநுதால்—நாரினால்வரிவதனவாய் வளையப்பட்ட விற்போலு நுதலினையுடையாய்! (முதலடியீறு மிரண்டாமடிமுதலும்) பார்சுலாம் அலையும் — பூமியை வளைக்கும் கடலும். (இரண்டாமடியீறும் மூன்றாமடிமுதலும்) அரிவளைமலையும் - குரங்குகள் சூழப்பட்ட பருப்பதமும். (இரண்டாமடி

மூன்றுஞ்சீரிறுதி) ஆ - தம்மிடத்துண்டாக்கப்பட்ட. இரண்டா மடியில் ஆரமணி, மூன்றுமடியீற்று வரிவளை, நாலாமடியில் ஆரம்-முத்தையும் மாணிக்கத்தையும் சங்குகளையும் சந்தனத்தையும். அணியா அணியா-அழகுபெற அணிவனவல்ல. ஆகையால், நீபெற்ற இவளு முனக் கந்நீர்மையளென்பதறியாதே தேடிப் பின்றொடர்ந்து வருதல், (மலையுமார என்பவற்றை ஆரமலையுமெனப் பாடமாற்ற) உலகியற்கு மிக மாறுபடுமென்றால். (முதலடி) தேடுதலொழி - தேடுதலை யொழிவாயாக வென்றவாறு.

இதுவும் மாட்டுறுப்பு. இதனுள்ளுஞ் சொல்லெச்சங்கள்வந்தனவுங் காண்க. பகுதி - உடன்போக்கு. துறை - உலகியலுரைத்தல்.

ஆனகமலனயனத்தானத்தா
வானகமலனயனத்தானத்தா
வானகமலனயனத்தானத்தா
வானகமலனயனத்தானத்தா. (746)

இது நான்கடியும் ஏகபாதமாக முற்றுமடக்கு.

(இ-ள்) ஆல் நகம் மலல் நயனத்தானத்தா - ஆலந்தளிராகிய பாம்பினை வளப்பத்தையுடைய திருக்கண்டுயிலிடமாகவுடையவனே! ஆல் நகு அமல நத்து ஆன அத்தா - வெள்ளத்தினிடத்துமிளிரும் அழுக்கற்ற சங்கிருப்பான திருக்கையையுடயவனே! ஆனகமலன் அயன் நதானத்தா - உனதுந்தியிற்றோன்றின தாமரையானாகிய ஆதிப்பிரமனில்லையாக மீளவும் பெற்றளித்த கொடையினையுடையவனே!* வான கமல னயன் - ஆகாயத்தாகிய கங்கையைத்தரித்தவனுஞ் சிவன் மூதாதையே! நத்தானத்தா - சிறப்புடைய முக்கியத்தானமாகிய பரமபதத்தையுடையவனே! இடைச்சொல் ந-சிறப்புப்பொருட்டு. (இரண்டா மடியில்) நய - என்னை ஆட்கொள்ள விரும்புவாயாக வென்றவாறு.

ஆல் ஆகுபெயர். நகம் - பாம்பு (விகாரம்). மலல் இடைக்குறை. நயனத்தானம் - ஆயிலணை. ஆல் - வெள்ளம். நகு - மிளிர். அமலம் - அழுக்கற்ற. ஆன - இருப்பான. (மூன்றுமடியில்) ந-இல்லை. ஒழிந்தனவு முறையிற்கொள்க. திணை - பாடாண். துறை - கடவுள்வாழ்த்து. (கஉ)

---

* இவ்வடிக்கு, ஆனகமலனயன் நத்து ஆன் அத்தா - பிரமன்விரும்பிக் கவர்ந்த ஆன்வடிவெடுத்த அத்தனே! எனினு மமையும்.

264. ஒருசொலின்மடக்கலு முளவெனமொழிப.

(எ-ன்) இதுவும் அம்மடக்கினதுபேதமுணர்-ற்று.

(இ-ள்) ஒருபாவினது நான்கடியு மொருசொல்லானே முற்றும் மடக்குவது முண்டென்றுகூறுவர் பெரியோ ரென்றவாறு. யமயமக மென்பது மிது.

அரியாரரியார்
அரியாரரியார்
அரியாரரியார்
அரியாரரியார். (747)

இஃ தொருசொல்லினுன்மடக்கல்.

(இ-ள்) அரியார் - யாவராலும் அளவிடற்கரியார். அரி ஆர் — சத்துருக்களுயிரைப் பருகும். அரியார் — சக்கராயுதத்தையுடையார். அரியார் - பாம்பை மிக்க. அரியார் - சயனமாகவுடையார். அரியார்- ஏனமாக அவதரித்தவர். அரியார் - அனுமானையுடையவர். அரியார்- அவர்யாரெனில்? அரியென்னுந்திருநாமத்தையுடையா ரென்றவாறு.

எனவே அவரே பரப்பிரமமாவா ரென்பதூஉ மவரே முத்திக்கு வித்தாவா ரென்பதூஉ மாயிற்று. துறை—கடவுள்வாழ்த்து. பா—குறளடி வஞ்சித்துறை. (கரு)

265. பதத்தொடுபதமடக்குதல்பதமடக்கே.

(எ-ன்) இன்னும் அம்மடக்கினையே வேறுபடுத்துக்கூறுகின்றது.

(இ-ள்) ஒருசெய்யு ணான்கடியாய்வருவதனுள் இரண்டடி யொரு நோக்கமாக மடக்குதல் பாதமடக்கெனப் பெயர்பெறு மென்றவாறு.

சக்கரநாகணைத்தகைத்தலத்தின
சக்கரநாகணைத்தகைத்தலத்தின
விக்கரைத்தென்குருகூர்மன்னேமவா
விக்கரைத்தென்குருகூர்மன்னேமவா. (748)

இது முதலிரண்டடியும் கடையிரண்டடியும் முற்றுமடக்கு.

(இ-ள்) கடலிற்றுயிலும் பாம்பணையாகிய அழகிய இடத்தை யுடையவனே! சக்கரத்தையுஞ் சங்கையுந் தரித்த கையையுடையவனே! கரும்பினடியிலே அழகிய சங்குதவழு மாக்கத்தோடு மின்பந்தரும் வாவிக்கரையையுடைய பொருநைத்தென்கரைக் குருகூர்க்கு மன்னவனே! என்னைக் காக்கவருவாயாக வென்றவாறு. துறை - இதுவுமது.

தாணிகுடையாவெழுமைவராக
மூரணரிவாமனனத்தன்முன்பான்
றாணிகுடையாவெழுமைவராக
மூரணரிவாமனனத்தன்முன்பான். (749)

இது முதலடியும் மூன்றாமடியும் இரண்டாமடியும் நாலாமடியும் முற்றுமடக்கு.

(இ-ள்) பூமியானது பிரளயத்து ளாழ (அதனையெடுத்தற்குத்) தோன்றும் அழகிய ஏனம்; பெருமையையுடைய நரசிங்கம்; வாமனரூபமானவன்; பாஞ்சசன்னியத்தையுடையான்; கோவர்த்தன கிரியைக் குடையாகவெடுத்து நிமிரும் மிடுக்கினையுடையான்; (இதன் கண் முன்பான் என்னு மிரண்டடியி னிறுதியைச் சேர்க்க). பஞ்ச பாண்டவர்களுள்ளத்துக்கு மாறுபாடான நூற்றுவர்க்குக் கூற்றுவன்; தாவும் அன்னத்தையுடைய பிரமனுக்குப் பிதா; எல்லாக்கடவுளர்க்கு முன்னுனவ னென்றவாறு.

மூரண் - பெருமை. நாரி - நரசிங்கம். முன்பு - மிடுக்கு. அரி - யமன். ஒழிந்த அரும்பதமு முரையிற்கொள்க. துறை - இதுவுமது.

இலங்கொண்மூவெயில்குன்றவில்லேற்றுவா
னலங்கல்வாரியமைந்திறப்பெய்தவே
ரலங்கல்வாரியமைந்திறப்பெய்தவே
ரிலங்கொண்மூவெயில்குன்றவில்லேற்றுவான். (750)

இது முதலடியும் நாலாமடியும் தம்மிலும், இடையி லிரண்டடியும் தம்மிலும் முற்றுமடக்கு.

(இ-ள்) முதலேநின்ற இலங்கொண்மூவெயில் என்பவற்றுள் இல்லை யீறுக்கி அங்கொண்மூவெயிலில் எனச் சேர்த்து, செலத்தைத் தரித்த மேகம் ஒவ்வியிலினு மிருந்து என்க. நாலாமடியில் இல் நிற்பு

அம் கொள் மூவெயில்குன்ற — அழகுகுடிகொண்ட மூன்றுமதிளும் அழியும்படிக்கு. (முதலடியிறுதியிருசீரும் நாலாமடிமுதல் இல்லும்) குன்றவில்லேற்றுவானில் - இமவானுகிய குன்றவில்லிற் பாம்பாகிய நாணையேற்றுஞ் சிவனைப்போல. (நாலாமடியீறு) வில்லேற்று வான்— மின்னுதலைப் பொருந்தி வானினின்றும். (இரண்டாம் அடியில்) அலம் கல் அமைந்து—நிறைவையுடைய மலையினுச்சியிற்பதிந்து. (இரண்டா மடியி லிரண்டாஞ்சீர்) வாரி - மழைத்தாரையை. (அதன் கண்ணீற்று வேர் மூன்றுமடிமுதல் அல் அதன்கணீற்று வேர் இவற்றை அடைவே கூட்ட.) வேரல்வேர் - மூங்கில்வேரையும். (மூன்றுமடியில்) அம் கல் வாரிய மைந்து - அழகிய மாணிக்கத்தையுங் கிளைத்து முகந்தெடுத்த மிடுக்கினேடும். (இரண்டாமடி) இறப்பு எய்த - வெள்ளமாயோடுதலைப் பொருந்தும்படி. (மூன்றுமடியில்) இறப் பெய்த - தண்ணீர் தன்னிடத் தில்லையாம்படி முழுதும் பெய்த வென்றவாறு.

பொருள்கோள், முதலும் நாலும் தம்மிலும், இடையிரண்டுந் தம்மிலும் மாட்டுறுப்பாகக்கொண்டது ; (குருகாமான்மியம்). திணை— பாடாண். துறை - மலைவருணனை. (கசு)

266. அந்தாதிப்பதந்தாதிமடக்கே.

(எ-ன்) இன்னும் அம்மடக்கினை வேறுபடுத்துக்கூறுகின்றது.

(இ-ள்) அடிதொறு மிறுதிச்சொல்லை யதன்மேல்வருமடிக் காதி யாகத்தொடுப்ப தந்தாதிமடக்கென்பதா மென்றவாறு.

நாகமுற்றவுங்களிதாநிருதர்கோனுக
நாகமையிரண்டொருங்கறப்பொருதமைந்நாக
நாகமூலமென்றழைத்தகார்துயிலிடநாக
நாகமொய்த்தபூம்பொழிற்றிருநாகையென்னுகம். (751)

இஃ தந்தாதிமடக்கு. இதனைச் சந்தோட்டியமகமென்றுஞ் சொல் லுப. அல்ல திடைவிட்டு முதலுமிறுதியுமடக்கிய முற்று மடக்கெனவுங் கொள்க.

இதனுள், நாகம் — துறக்கத்துள்ளார். முற்ற — அனைவரும். ஐயிரண்டுநா கம் — பத்துநாக்கும் பத்துத்தலையும். ஒருங்கற — ஒரு

தொடை யொருவாளியி லொக்கவற. மைந்நாகம் - நீலமலே. நாகம் - யானே. நாகம் - திருவனந்தாழ்வான். நாகம் - சுரபுன்னே. என் ஞகம் - என் னுள்ளம். நா கம் என்பது "ஆ பயன்" என்பதுபோல ஒற்றுத்தோன்றுஞ் சந்தி ஒற்றின்றி இயல்புசந்தியாய்நின்றது. துறை - கடவுள்வணக்கம்.

தேனேகமழ்நறுந்திருமகிழ்மாறன்
மாறன்சேவடிவணங்கிறைவரைவாய்
வரைவாயன்றெனில்வல்லேநீயிறைவா
விறைவால்வளேயைநீப்பினும்வருந்தேனே. (752)

இது முதலு மீறு மொருசொல்லா யிடையிடை பலசொல்லாய் நிகழ்ந்த அந்தாதிமடக்கு.

இதனுள், மால்தன்சேவடி - மாயன்றனது சிவந்ததிருவடித் தாமரை. வரைவாயன்றெனில் - வரைந்துகொள்வாயாக, அஃதல்ல வெனில். வல்லேநீயிறைவா - விரைந்து தலேவனே. இறைவால் வளேயைநீப்பினும் வருந்தேன் - முன்கையிலணியுஞ் சங்கினேயுடையா ளொடுநீங்கினும் வருந்தேன். வளேயினேயுடையாளொடு நீங்கல் உடன் கொண்டுசேறல். ஏகார மீற்றசை. நீப்பினுமென்றவும்மையாற் சிறிதுநா ளிவளேயனேதற்குவாராதுநீங்கினும் வருந்தே னென்பதாம். பகுதி - ஒருவழித்தணத்தல். துறை - அகன்றணேவுகூறல். (கடு)

267. அம்மனேகைக்கொண்டாடுநர்தம்மையு
மம்மனேயாய்மதித்தாங்கோர்கர்த்தாவினே
நிந்தாத்துதி துதிபெறநிகழ்த்து தலு
மந்தாதித்திடையடிமடக்காகவு
மீற்றடியிரட்டுறவிசைத்ததைத்தாயித்
தாற்றலினமைக்குமம்மனேமடக்கொன்றுள.

(எ - ன்) இஃ திலக்கியங்கண்டதற் கிலக்கணங்கூறலென்பதனுல் அம்மனேமடக்குணர்-ற்று.

(இ - ள்) அம்மனேகைப்பற்றியாடு மிருமகளிர் தம்மைத்தாமே யம்மனேயாகப்பெயர்குறித்ததாக வதற்குப்புணர்த்த கலித்தாழிசை யிடத் தோர்கருத்தாவினே நிந்தாத்துதியானுதல் துதியானுதல் முதலே யொருவரொருபொருள்பெறக்கூறலு மதற்கு முன்னிருந்த மகளிர்

செய்யுளினிடைப்பட்ட அடியை யடிமடக்கா யந்தாதித்து வினவுதற்கு முன்னர்க்கூறியமகளிர்தாமே பின்னுந் தாங்கூறியது தப்பாதுதாபித்த தாம் பெருமையொடுங்கூறு மீற்றடி சிலேடைவாய்பாட்டாற்புணர்க்கும் அம்மனைமடக்கு மொன்றுள தென்றவாறு.

ஆற்றலினமைக்குமென்றதனால் முதலடி யிரட்டுறவருதலு மாமென்றறிக. இது பொருளணியுஞ் சொல்லணியுங்கூடியதென வுணர்க.

தெண்டிரைப்பார்போற்றுந்திருவெள்ளறைமாயன்
கண்டளவினீடுகஞ்சக்கண்ணாளனம்மானை
கண்டளவினீடுகஞ்சக்கண்ணாளனேலமுதுட்
கொண்டபரிகலமுன்கொட்டினனோவம்மானை
கொட்டினதுமுண்டுகுழிதாலமம்மானை. (753)

இது நிந்தாத்துதி. கஞ்சக்கண்ணாளன் என்பது தாமரைபோலுங் கண்களையுடையானென்றும், வெண்கலங்கொட்டுங் கன்னுவனென்றும் சிலேடைநிந்தாத்துதியாயிற்று. கண்டஅளவி லென்பது கண்டளவி லெனவிகாரத்தாற்றொக்கது. கொட்டினது என்பது உண்டதுமிழ்தலும் தட்டுதலும். குழிதாலம் - உண்டுகுழிக்கப்பட்டபூமியும், குழிதாலமான உண்கலனுமாம். ஒழிந்தனவு முரையிற்கொள்க. துறை - கடவுள்வாழ்த்து.

வண்டமிழோர்கொண்டாடுமன்குருகூர்வாசமகிழ்க்
கொண்டலெழின்மேவுதமிழ்க்குன்றங்காணம்மானை
கொண்டலெழின்மேவுதமிழ்க்குன்றமதானாலதன்கண்
ணெண்டிசையுஞ்சந்தனக்காவில்லையோவம்மானை
யில்லாமற்சாந்தமணமெய்துமோவம்மானை. (754)

இது துதி. சாந்தமணம் - சந்தனப்பரிமளமும் சாந்தசம் பொருந்துதலுமாம். தமிழ்க்குன்றம் - பொதியமும், தமிழுக்கு மலை போலும் பெருமையுடையோன் என்பது மாம். திணை - பாடாண். துறை - பழிச்சினர்ப்பரவல். (கசு)

268. தொடர்ச்சொற்பலபொருட்சிலேடைமூன்றுறவே
பிடர்ப்பாடின்றியீற்றுறுமிணைமடக்குள,

(எ-ன்) இதுவும் இலக்கியங்கண்டதற்கிலக்கணங்கூறலாக இன்னும் அம்மடக்கினுட் சிலேடைமுன்னிட்டனவாய் வருவதோர்மடக்குணர்—ற்று.

(இ-ள்) ஒருசெய்யுளின்முதற்கட் டொடர்ச்சொல்வாய்பாட்டாற் பலபொருளைக்காட்டுஞ் சிலேடைவந்து அதன்பின்ன ரிடைவிடாதனவாயீரிடத்துவரு மொருசார்மடக்குகளு முளவென்றவாறு.

இடர்ப்பாடு - இடைவிடுதல். இன்றி - அஃதில்லாமை. பலபொருளாவன: ஒருதொடர்ச்சொ லிருபொருண்முதலாக அஞ்சீருயபொருளைக் காட்டுதல் எனக்கொள்க. எனவே இதுவும் பொருளணியுஞ் சொல்லணியுங் கூடியதெனவுணர்க.

> மூவுலகெண்முத்தரைப்போன்முந்நீர்முகிற்பெயல்போற்
> காவலர்கள்வீழ்வேங்கடவெற்பே—தேவர்
> பெருமான்பெருமான்கட்பெய்வளைக்கையார்மூ
> வருமால்வருமாலின்வைப்பு. (755)

இஃது திருபொருட்சிலேடை யிணைமடக்கு.

(இ-ள்) தேவர்பெருமான் - கடவுளர்க்கெல்லாஞ் சுவாமி. பெருமான்கட்பெய்வளைக்கையார் - பெரியவாய மானினதுகண்ணோக்கம்போலு நோக்கமைந்த கண்ணிணையும், இடப்பட்ட வளையோடுங்கூடிய கையிணையுமுடைய. மூவருமால்வருமாலின்வைப்பு—திருமகள், மண்மகள், நீளையென்னு மூவருள்ளத்தும் வேட்கையுண்டாம் மாயோன்வாழுமிடம். மூவுலகெண்.........காவலர்கள்வீழ் வேங்கடவெற்பு—பூமி யந்தா சுவர்க்கமென்னு மூவுலகின்கண்ணுள்ளாரு மதிக்கப்பெறும் பரமபதத்து முத்தரைப்போல நெருங்கிப் பூலோகமன்னர் சேவிக்கவிரும்புந்தன்மையவாய், அதனொடுங் கடலிற்படிந்த மேகத்தினிழியுமழைபோலக் காவினிடத்துமலர்களிற் றேன் றுளித்துவீழும் வேங்கடவெற்பா மென்றவாறு.

கள் - தேன். வீழ் - வினைத்தொகை. இதனைச் செய்யுமென்னும் பெயரெச்சமாகவிரித்துக் காலமூன்றினு மேற்றுக. திணை — பாடாண். துறை - மலைவருணனை.

> மாயன்சேய்வில்லுமலர்ப்பொழிலுங்கஞ்சனையுங்
> காயம்புதைதிறங்கூர்கச்சியே—நேய

மகத்தாரகத்தாருவினையாட்செய்யு
மகத்தார்மகத்தார்தம்வாழ்வு. (756)

இது மூன்றுபொருட்சிலேடையிணைமடக்கு.

(இ-ள்) கேயம் அகத்தாரகத்தார்—கருணையைத் திவ்யாத்மாவுக்குத் தாரகமாகவுடையார். அருவினையாட்செய்புமகத்தார் — நீக்குதற்கரிய வினைக ளடிமைத்தொழில்செய்யு மகத்துவத்தையுடையார். மகத்தார் தம்வாழ்வு-யாகத்தின்கட்டோன்றின போருளாளர் வாழுமிடம். மாயன் ....கஞ்சனையும்—திருமால்புதல்வனுகிய காமனது கருப்புவில்லும், பூவோடுகூடியசோலைகளும், கண்ணாடிகளும். காயம்புதைதிறங்கூர் கச்சி என்பதற்கு, கூடிப்பிரிந்தபுமான்கள் மகளிரறிவை நிலை திரிக்கும் பூவாளியைச் செலவிடுந்தொழில்புரியும், ஆகாயத்தைமூடுங் கூறுபாடு மிகும், கண்டோர்மெய்யை யுட்கொள்ளுந்திறமிகும்-கச்சிஎன அடைவே கொள்க. வாழ்வு - ஆகுபெயர். திணை - இதுவுமது. துறை - நகர வாழ்த்து.

கொம்பாஞ்சொன்மின்னார்குயம்பொன்னியன்பருள
மம்பாந்தோயுந்தென்னரங்கமே—தும்பி
யுரைத்தானுரைத்தானுயர்திரைநீர்தட்டீ
னரைத்தானரைத்தானகம். (757)

இது நாலுபொருட்சிலேடை யிணைமடக்கு.

(இ-ள்) கொம்பர் — பூங்கொம்புகள். அம்பரந்தோயும் — ஆகாயத்தைத்தோயும். குயம் — முலை. அம்பரந்தோயும் — கூறைவிட்டு நீங்காதிருக்கும். பொன்னி — காவிரி. அம்பரந்தோயும் — கடலைப் பொருந்தியிருக்கும். அன்பருளம், அம்பரந்தோயும் - அழகியபரப் பிரமத்தை அநுபூதிசெய்துகொண்டிருக்கும்; தென்னரங்கம், நுரைத்தா னுயர்திரைநீர் — நுரையையுயர்த்துந் திரையையுடைய கடலை. (உயர் திரை வினைத்தொகை. நுரைதான், நுரைத்தான் என ஒற்றுத் தோன்றுதுந் தோன்றியுநிற்கும்.) தட்டு — அடைத்து. ஈனரைத்தா னரைத்தானகம்—அறிவில்லாதவீனராகிய இராவணுதிகளை ஆயுதத்தாற் கண்டஞ்செய்து பூமியின்கட்போட் டரைத்தான்பதி யெனக் கூட்டுக. துறை — இதுவுமது.

சூழிமறுகாடவர்தோள்விரல்பொழிற்றே
ஞுழிபயிலுமரங்கமே—யூழி
திரிநாட்டிரிநாட்டினவுயிருய்க்கொண்ட
வரிநாட்டரிநாட்டகம். (758)

இஃ தைந்துபொருட்சிலேடை யிணைமடக்கு.

(இ-ள்) சூழி - வாவி, ஆழிபயிலும் - வட்டம்பொருந்தும்; மறுகு - வீதி, தேர்வண்டிமுதலாயின பொருந்தும்; ஆடவர்வலது தோள் திருச்சக்கரப்பொறிபொருந்தும்; மகளிர் புமான்கள் கைவிரல்கள் நவமணியாழிபொருந்தும்; பொழிலிற் பூந்தேனும் வைத்ததேனும் முகைவிண்டொழுகியும் உடைந்தும் நதிவாய்ச் சமுத்திரத்தைப் பொருந்துமென்க. ஊழிதிரிநாட்டிரிநாட்டினவுயிருய்க்கொண்ட - கற்பவந்தியத்தில் உகங்கள் மீளவருநாள் மூன்றுலகின்கண்ணுமுள்ள வுயிர்க்கணத்தைத் திருவுதரத்துள்வைத்துப்பிழைக்கக்கொண்ட. அரிநாட்டரிநாட்டகம் - பாற்கடலென்னுமிடத்தையுடைய அரியென்னுந் திருநாமத்தையுடையா னிலைபெறுத்தின பதி என்றவாறு.

ஒழிந்த அகல முறையிற்கொள்க. அறை - இதுவுமது. இவற்றிற்கெல்லாம் "எழுத்தோ ரன்ன பொருடெரி புணர்ச்சி - யிசையிற் றிரிதனிலைஇய பண்பே" என்பதனால் ஒலியெழுத்துக்கள் எடுத்தல் படுத்தலென்னுமோசைவேற்றுமையாற் புணர்ச்சியிடத்துப் பொருள்வேறுபடுதல் நிலைபெற்றபண்பாக அறிந்துகொள்க; செம்பொன்பதின்றொடி, குன்றேறுமா என்பனபோல. பிறவுமன்ன. (கள)

269. மதித்தோரெழுத்தினைமடக்கலுமடக்கே.

(எ-ன்) இன்னும் மடக்கிற்கோர்வேறுபாடுணர் - ற்று.

(இ-ள்) ஓரெழுத்தினைச் செய்யுளின்கண் ணடிதொறு முதலேவந்தபொருளினையுட்கொண்டு வேறுமொருபொருடுருவதாகமடக்கலு மடக்கின்பாற்படு மென்றவாறு.

எனவே மேலே முதற்சூத்திரத்தின் மடக்கலுமென்றவும்மையாற் றொடரெழுத்துமொழியேயன்றி யோரெழுத்தானுமொழிகளைப்பெயர்த்துமோர்பொருடா மடக்குவது மப்பெயராமென்றுராதலாற் றொடரெழுத்துமொழிகளானு மடக்குகளுணர்த்தி யதன்பின்னர் ஓரெழுத்தானுமடக்குணர்த்துவான்றொடங்கினானெனக் கொள்க.

மாமாமா தின்புறு திருமார்பான்மகிழ்வெய்திக்
காகாகாமர்மல்லையின்மோ துங்கடலேமுன்
ஞானுமெய்தாமுயிரென்றூர்நகர்மீள
வாவாவாய்மைதந்தது மூளதோபகர்வாயே. (759)

இஃ தோரேழுத் தடிமுதன்முற்றுமடக்கு.

(இ - ள்) மாமாமா தின்புறு திருமார்பான்மகிழ்வெய்தி என்பது பெரிய திருமகளாகியமாது விரும்புந் திருமார்பையுடையான் மகிழ்ச்சி பொருந்தி என்றவாறு. காகாகாமர்மல்லையின்மோதுங்கடலே என்பது காவல்பூண்ட காவினோடுங்கூடிய அழகிய திருக்கடன்மல்லையென்னுந்திருப்பதியிற் கரைதொறுமெற்றுங் கடலே யென்றவாறு. முன்ஞானுமெய்............மீள் - பிரியுமுன்னர் நான் நீங்காதமெய்யாகவுந் தா மதன்கண்வைகு முயிராகவு மெனக் குட்கொளக்கூறினா ரிந்நகர்க்குமீளும். அவாவாவாய்மை......வாயே - என்பது அன்புண்டாம்வசனம் நின்னுடன்கூறியதுளவாகி லென்னுடன்கூறுவாயாக வென்றவாறு.

இதனுள், இடைநின்ற மா - திருமகள். கா-சோலை. ஆறு - நீங்காத. மீள் (மீளும்) என்பது வினைத்தொகை. அவாவா - அன்புண்டாம். வாய்மை - வசனம். இது நெடிலெதுகை. பகுதி-பொருள்வயிற்பிரிதல். துறை - கடலொடுவரவுகேட்டல்.

"ஓரெழுத்தினைமடக்கலு" மென்றவும்மையா லீரெழுத்துமுதலாக நாலெழுத்தீறாக வுயிரும் உயிர்மெய்யுமாகியவை யொரோசெய்யுண் முழுதுங்கோடலு மொரோ அடிமுழுதுங் கோடலு முரியவெனக் கொள்க. அவற்றுள் ஒருயிர்மடக்குவருமாறு :—

அரவமகாசலசயனபடவரவ
கரசரணநயனவதனகமலதர
வரதசரதமகவரதசாதமக
பாமபரமமலவனகபரமபத. (760)

இஃது அகரக்குற்றுயிர்மடக்கு.

(இ - ள்) ஆரவாரத்தையுடைய மகாலயமாஞ்சமுத்திரத்திற் றுயிலுஞ்சயனமாகிய படத்தோடுங்கூடிய பாம்பையுடையவனே! காமுங் காலுங் கண்ணும் முகமுங் கமலமொத்தவனே! வரதனே! சாத

னே! மகத்துவமான வரத்தைப்பெற்ற தசரதன்மகனே! ராமனே! அமலனே! அனகனே! பரமபதத்தையுடையவனே! உனக்கேபரம் என்றவாறு. துறை - கடவுள்வணக்கம்.

ஆயாபாலாகாராபாராராலாலா
மாயாமாயாமாமாதாகாவாளா
காயாகாயாவாளாவாளாநாகாளா
தாயாநாதாநாதாகாகாதாளாளா. (761)

இஃது ஆகார நெட்டுயிர்முற்றுமடக்கு.

(இ - ள்) ஆயா - கோபாலனே! பாலாகாரா - பாலைப்பருகப்பட்டவனே! பாராராலாலா - பூமியையுண்ட பிரளயத்தின்மேலான ஆலிலையிற் றுயின்றவனே! மாயாமாயா - அழிவிலாத மாயோனே! மாமாதாகா - திருமகள்தங்குமார்பனே! வாளா - பரமபதத்தையாள்வானே! காயா காயா - காயாமலர்போலுந் திருமேனியையுடையவனே! வாளா - வாளினையுடையவனே! வாளாநாகாளா - வெளுப்பான சங்கினையுடையவனே! தாயாநாதா - எமக்குத் தாயா நாதனே! காதாளாளா - சர்வலோகத்தையுங்காக்கு முயற்சியுடையவனே! நாதா - நின்னைப் புகழும்படிக்கு நாவைத் தருவாயாக; கா - பிறரைப் புகழாவண்ணம் என்னைக் காப்பாயாக வென்றவாறு.

முன்னின்ற நா தா கா என்பவற்றைப் பாடமாற்றித் தாளாளா வென்றதன்முன்னர்ச்சேர்க்க. துறை - இதுவுமது.

கூக்குக்கிக்கர்க்காகா
கூக்கக்குகைக்கொக்கோ
கூக்கொக்காகைக்காகா
கூக்காக்கைக்கேகாகா. (762)

இது ககரமெய்வருக்கம்.

(இ - ள்) கூ - பூமியை குக்கிக்கு - திருவுதரத்துக்கு. ஆக்காகா - இரையாக்குந் திருமேனியையுடையவனே! கூக்கக்குகைக்கொக்கோ - பூமியை மீளப் புறத்தேயுமிழ்தற்கொத்த கோவே! கூக்கொக்காகைக்காகா - கூவினிடத்து மேற் குதிரையாகைக்கிருக்குந் திருமேனியையுடையவனே! கூக்காக்கைக்கேகாகா - பூமியைக்காப்பதற்குப் பரமு

பதத்தினின்றும் லீலாவிபூதியில் வரப்பட்டவனே!* என்றவாறு. எனவே என்னைக் காப்பாயாக வென்பது பயன். இது குருகாமான்மியம். பா - வஞ்சித்துறை. துறை - இதுவுமது.

தத்தோதத்தத்திதா தத்தைது திதிதா
தத்தோதத்தத்தத்திதா திதித்தே—துத்தூத்
ததிதித்தித்தேது த்து த்து த்து த்தத்தாதி
துதிதாதைதாதைதுதித்து. (763)

இது தகரமெய்வருக்கம்.

(இ - ள்) தத்தோதத்தத்தி - கரைமீதுபாயுந்திரையையுடைய திருப்பாற்கடல். தாதத்தை - பெற்றுத்தரப்பட்ட கிளியைப்போலு மொழியையுடைய திருமகள். துதி திதா - துதிக்கப்பட்ட வுண்மைப் பொருளே! தத்தோது -- தனக்கு முதலையாலுண்டானதத்தினிடத்து மூலமேயென்றுகூறும். அத்தத்தத்தி - துதிக்கையையுடையயானையை. தாதித்தே - (காத் ததனுடையவுயிரைத்) தரப்பட்ட காவற்கடவுளே! துத்தூ - உண்ணும் தூய. ததிதித்தித்தே-† தயிரை வாயாலினிமை யாகக்கொண்டு. துத்துத்துத்து - உணவாகவுண்டு. தத்தாதி - கூத் தாடுங் கண்ணனாகியகாரணனே! துதிதாதை - சருவலோகமுந்துதிக் கும் பிதாமகனுக்கு. தாதை - பிதாவே! துதித்து-உன்னைத் துதிக்கிறே னென்றவாறு.

இதில் இறந்தகாலம் நிகழ்காலமாயிற்று. என்னைக்காப்பாயாக வென்பது பயன். துறை - இதுவுமது.

மாலைமலைமூலைமேலம்மாலைமாலை
மாலைமலைமாலைமாலுமோ—மூலமா
மெல்லைமாலாலாவிலைமேலாமாவில்ல
மல்லைமாலாமாமைமால். (764)

இஃது இரண்டெழுத்தான்வந்தது.

---

*ஜகத்ரக்ஷைக்கேகாகா என்பதற்கு, ஜகத்ரக்ஷணத்துக்கு அத்விதீயனானவ னே என்னை நீ காப்பாயாக எனினு மமையும்.

† தித்தித்து என்பது சுவைத்து என்பதன் பரியாய வினையெச்சம்.

(இ - ள்) முத்தமாலையணியு மலைபோன்ற முலைகளின்மீதே யுனது துளபமாலைவேட்டதனாலே பசலையாகிய பொன்னுப்பூணுமியல்பினை யுடைய பூமாலைபோல்வாள் போரைச்செய்யும் மாலைக்காலத்தான் மயங்குவாளோ? சகலதேவர்மார்க்கு முதலாகிய காலவளவையுடைய பெரியவனே! பிரளயத்தின்மேலாய ஆலிலைமேற் கண்வளர்வதான விருப்பத்தையுடையவனே! இல்லந் திருக்கடன்மல்லையாங் காளமேகம்போலு நிறத்தையுடைய திருமாலே! என்றவாறு. மால் - அண்மைவிளி. திணை - பெண்பாற் கைக்கிளை. துறை - கண்டுகைசோர்தல்.

சூலமலைமைம்மாமைமாலிசுமாலிசலச்
சீலமலைசூலிசெலச்செல்லச்—சாலமலை
சோலைமலைமாலைச்சொல்லச்சொல்சொல்லானம்
மாலைமலைசீலமாம். (765)

இது மூன்றெழுத்தான்வந்தது.

(இ - ள்) சலச்சீலமலைசூலி - தீயவினைகளைச்செய்யுஞ் சீலத்தையுடையளாய்ப் போர்புரிசூலத்தையுடைய தாடகையும், சூலமலை மைம்மாமைமாலிசுமாலி - சூலினோடுகூடி யாரவாரிக்குங் காளமேகம்போலு நிறத்தையுடைய மாலியுஞ் சுமாலியும். செல - போர்க் கெதிர்செல்ல. செல்ல - அவர்களுயிர் கூட்டைவிட்டுநீங்க. சால - மிகவும். மலை-பொருத. சோலைமலைமாலை - சோலைமலையிலுள்ள திருமாலானவனை. சொல்லச்சொல் - நெஞ்சமே! சொல்லினாற் றோத்திரஞ்செய்யென்று நாவிற்குச் சொல்லுவாயாக. சொல்லால் நம்மாலைமலை சீலமாம் - அத்தோத்திர மேதுவாக நம்மிடத் தறிவின்மையைப் பொருதுபோக்கப்பட்ட நல்லுஞான நமக்குண்டா மென்றவாறு.

சூல் - கற்பம். அமலை - ஆரவாரம். மை - மேகம். மாமை - நிறம். சலம் - தீயவினை. சீலம் - புத்தி. சூலி - சூலத்தையுடையதாடகை; காளியனையாள் எனினுமாம். செல - எதிர்செல்ல. செல்ல - நீங்க. சொல்லச்சொல் - தோத்திரஞ்செய்யச்சொல்லுவாயாக. மலைதல் - மாறுபடுதல். சீலம் - நல்லுணர்வு. ஆம் - உண்டாம். நெஞ்சேயென்பது தோன்றாஎழுவாய். இது தன் னுணர்வைப் பிறிதொன்றாக்கிக் கூறாதவற்றைக் கூறெனை அகத்திற்கூறுவனபோலக் கூறும் மயக்கம். என்னை?

"ஆம்புடைதெரிந்துவேந்தற் கறிவெனுமமைச்சன்சொன்னான்" "ஓதிய பொறியற்றுயோரரும்பொறிபுனேவியென்றான்" என்பதனு லறிக. திணை- பாடாண், துறை - ....

கோகிலமாலேக்கேகொலேமல்கக்கோலமூலேக்
காகுலமாமோகமிகலாகுமோ—சோகமிகு
மேமாசலமாமிகலமைமாச்சொல்லுமிசை
மாமாமலிகச்சிமால். (766)

இது நாலெழுத்தான்வந்தது.

(இ - ள்) முதலேயாற்றுன்பமிகாநின்ற பொன்மலேபோலப் பெருத்ததாய்ப் போருக்கமைந்த யானே மூலமேயென்னும்பொருளுரையையுந் திருமகளேயும் மாமரமிருந்த திருக்கச்சியையு முடைய மாயோனே! குயில்களானவை மாலேக்காலத்திலே (காமா கூகூவென்று காமனேயழைத்துக்) கொலேத்தொழிலே மிகுப்ப, அழகிய முலேயினேயுடையாட்கு வருத்தத்தைச்செய்யும் மிக்க காதன் மேன்மேலு மிகுதலுன்கருணைக்கு முறையாகுமோ வென்றவாறு.

எனவே யிவளேத் தழுவுவதே நீ பேருளாளனென திருநாமத்திற்கு முறையென்பதாயிற்று. சோகம் - துன்பம். இசை - பொருளுரை; அஃதாவது மூலமந்திரம். மா - பெரியபிராட்டி. மா - மாமரம். மலிதல் - மிகுதல். மால் - அண்மைவிளி. கோகிலம் - சாதியொருமை. ஆகுலம் - வருத்தம். மாமோகம் - மிக்ககாதல். மிகல் - பெருத்தல். ஓகாரம் ஒழியிசை. திணை - பெண்பாற் கைக்கிளே. துறை—கண்டுகை சோர்தல். (கஅ)

மடக்கு முற்றும்.

சித்திரகவி.

உஎ0. வல்லினமெல்லினமிடையினப்பாட்டே
நிரோட்டியமோட்டியமோட்டியநிரோட்டிய
மக்கரச்சுதகமதன்வருத்தனேயே
வக்கிரவுத்திவினுவுத்தரமே
சக்கரபெந்தம்பதுமபெந்த
முரசபெந்தநாகபெந்த

மிரதபெந்தமாலைமாற்றே
காந்துறைசெய்யுட்காதைகரப்பே
பிரிந்தெதிர்செய்யுட்பிறிதுபடுபாட்டே
சருப்பதோபத்திரங்கூடசதுர்த்தம்
கோமூத்திரிசுழிகுளந்திரிபங்கி
யெழுகூற்றிருக்கையொடிருபாறும்
பழிதீர்மடக்குடைச்சித்திரப்பாவே.

(எ-ன்) இன்னு மம்மடக்கலங்காரங்களுட்படுவனவாஞ் சில மிறைக் கவிகளுணர்த்து தலுதலிற்று. மிறைக்கவியெனினுஞ் சித்திரபா வெனினு மொக்கும்.

(இ-ள்) வல்லினப்பாட்டுமுதலாக எழுகூற்றிருக்கையீறுகச் சொன்ன விருபத்தாறும் முன்சொல்லிப்போந்த சொல்லொடு மெழுத் தொடுங்கூடிய குற்றமற்ற சொல்லணியினுண் மடக்கின்பாற்படுஞ் சித்திர கவியா மென்றவாறு.

இதனுட் பாட்டென்பதனை மூன்றிடத் துங்கூட்டுக. எண்ணும்மை தொக்கு எண்ணேகார மிடையிட்டு வந்தன ; என்னை? "எண்ணேகார மிடையிட்டுக்கொளினு, மெண்ணுக்குறித்தியலுமென்மனர்புலவர்" என்பதாகலின். இருபாறும் என்னு மும்மை எச்சவும்மையாதலால் மாத்திரைச்சுருக்கமும், மாத்திரைவருத்தனையும், ஒற்றுப்பெயர்த்தலும், திரிபதாதியும், சதுரங்கபெந்தமும், கடகபெந்தமும் என்னுமித்தன்மை யனவெல்லா முரைத்துக்கொள்க. (௧௯)

வல்லினப்பாட்டு.

271. அவற்றுள்,
வல்லினமுழுதுறல்வல்லினப்பாட்டே.

(எ-ன்) வைத்தமுறையானே வல்லினப்பாட்டாமா றுணர்-ற்று.

(இ-ள்) வல்லினவெழுத்தாறும்வந்து ஒழிந்தவினமிரண்டும் வாராதேபாடுவது வல்லினப்பாட்டா மென்றவாறு.

பொற்றொடிகற்சட்டகத்தைப்போக்கிப்புறத்திறுத்த
கற்புறத்தற்காட்சிக்கதிகொடுத்த—சிற்றடிப்போ
துச்சிப்பதிக்கத்தாகூற்றச்சுறுத்தாது
கச்சிப்பதிக்கத்தாகை. (767)

இதனுள் வல்லினவெழுத்தாறும்வந்து பிறவினவெழுத்துக்கள் வாராதது கண்டுகொள்க.

(இ-ள்) திருக்கச்சிப்பதிக்குக் கத்தனே! என்னை யமன்வந் தச்சமுறுத்தாது, நீ பொன்னினாற்செய்த தொடியினையுடையாள்கற்படிவத்தைப்போக்கி யவளைவிட்டுப் புறமாறினகற்பு மீட்டு மவளிடத்தெய்தவும் பண்டைச்சரீரத்தினதழகெய்தவுங்கூட்டுஞ் சாபவிமோசனத்தைக் கொடுத்த சிறிய திருவடிகளாகிய தாமரைப்போதை யென்சென்னியிலே சூடத் தருவாயாக, அதனோடும், அஞ்சாதேயென்னும் அபயத்தமுந் தருவாயாக வென்றவாறு.

அச்சமுறுத்தாது என்பது அச்சுறுத்தாதெனத் தொகுக்கும் வழித்தொகுத்தலென்னும்விகாரத்தானின்றது; "குணமாலையைச் சுறுத்த" வென்பதுபோலக்கொள்க. துறை—கடவுள்வணக்கம். (உ0)

மேல்லினப்பாட்டு.

272. மெல்லினமுழுதுறன்மெல்லினப்பாட்டே.

(எ-ன்) மெல்லினப்பாட்டாமாறுணர்—ற்று.

(இ-ள்) மெல்லினவெழுத்தாறும்வரப்பாடுவது மெல்லினப்பாட்டாமென்றவாறு.

மனமேநினைஞானமன்னுமைமீன
மனமேனமெங்ஙனெனினங்ஙன்—முனமானு
னேமிமான்மாமானினிநீண்மனமான
நேமிமானன்னுமநீ. (768)

இது மெல்லினமாறினலும்வந்த மெல்லினப்பாட்டு.

(இ-ள்) மனனே! மீனமும் அன்னமும் ஆமையும் ஏனமும் எப்படியேயிருக்குமென்னி லப்படியே முன்னந் திருவவதாரமானவன், பூமிதேவியாகிய மான்போலும்விழியையுடையாளுக்குந் திருமகளாகிய பெண்ணுக்கும் அவர்கள்மனமெப்படி யப்படியான ஞானமன்னன், சக்கரத்தையுடையான், அவனது நல்ல திருநாமங்களை யிடைவிடாது நீ நினைப்பாயாக வென்றவாறு. எனவே அந்நினைவே யான்மலாபத்தைத் தருமென்பது கருத்து. துறை - இதுவுமது. (உக)

இடையினப்பாட்டு.

273. இடையினமுழுதுறவிடையினப்பாட்டே.

(எ - ன்) இடையினப்பாட்டாமாறுணர்—ற்று.

(இ - ள்) இடையினமாறும்வரத்தொடுப்ப திடையினப்பாட்டா மென்றவாறு.

வேயாலலையால்வில்வேளாலயலவரால்
யாயாலுயிர்வாழ்வாரியாவரே—யோய்விலராய்
வாழ்வாருயிர்வழியேவாழ்வாருளாள
ராழ்வாருளிலரேயால். (769)

இஃது இடையினமாறும்வந்தபாட்டு.

(இ - ள்) ஒழிவில்லாதவாழ்வினையுடையார், உயிரின்கண்ணே நீங்காதுவாழும் வாழ்வினையுடையார், கிருபையை யாட்சியாகவுடையார், அவர்யாரெனில்? ஆழ்வாரென்னுந்திருநாமத்தையுடையார் (எமக்குத் தாரு மார்புந் தாவேணுமென்னுங்) கிருபையிலர்; ஆனபடியாலே தோழீ! வேய்ங்குழல்முதலாகியபகைகளாற் புமான்களையெய்தாது தனியிருந்தவரு ளுயிர்வாழ்வா ரொருவருமில்லை யென்றவாறு.

முன்னிலை யெஞ்சிற்று. திணை-பெண்பாற்கூற்றுக்கைக்கிளை. துறை—மெலிவொடுகூறல். (உஉ)

நிரோட்டியம்.

274. இதழ்குவிந்தியைபாதியல்வது நிரோட்டியம்.

(எ - ன்) வைத்தமுறையானே நிரோட்டியமாமா றுணர்-ற்று.

(இ - ள்) அதரமு மதரமுங் குவியாதுங் கூடாதும் நடப்பது நிரோட்டியமா மென்றவாறு. உம்மை யிரண்டிடத்துந் தொக்கன.

நாதனரங்கநகர்நாராயணனறைசேர்
சீதநளினத்தினிற்சிறந்த—காதற்
கனிநாளிலக்கிழத்திகட்கினியகாந்தித்
தனிநாயகன்றாள்சரண். (770)

இது நிரோட்டியம்.

இதனுள் நறைசேர்சீதநளினத்தினிற்சிறந்தகாதற்கனி - திருமகள். நானிலக்கிழத்தி - பூமிதேவி. கட்கினியகாந்தி - கண்ணிற்கு விருப்பத்தைத்தரு மழகு. துறை - கடவுள்வணக்கம். (உரு)

ஓட்டியம்.

275. இதழ்குவிந்தியைந்தியல்வதுவேயோட்டியம்.

(எ - ன்) வைத்தமுறையானே யோட்டியமாமா றுணர்—ற்று.

(இ - ள்) அதாமுமதாமுங் குவிந்துங் கூடியு நடப்பதுவே யோட்டியமா மென்றவாறு.

குருகுகுருகுகுருகொடுகூடு
குருகுகுருகூருறுகோ. (771)

இஃது இதழ்குவிந்தவோட்டியம்.

(இ - ள்) மனனே! சங்கு சங்கொடுங் குருகென்றபறவைகள் குருகுகளோடுந் திரண்டியங்குங் குருகாபுரியுட்கோவை நினை யென்றவாறு.

மூன்றுமுருபின்மே லும்மை தொக்கு விரிந்தன. ஒடு இடைநிலைத்தீபகம். கோவை என்னு மிரண்டாவது இறுதியிற் றொக்கது. உறு என்றது நினையென்றாயிற்று. மனனேயென்னு மெழுவாயுருபு முன்னிலையெச்சமாயிற்று. பா - குறள்வெண்பா. துறை - கடவுள் வணக்கம்.

பம்மும்பம்மும்பம்மமம்மமைமாமை
பம்முமம்மமும்மேமம்பாம். (772)

இஃது இதழியைந்தவோட்டியம்.

(இ - ள்) மை பம்மும்- (வலவனே யுனதுதேரைப்பின்னிட்டு விரைந்த) மேகம், (இதன்முன்சென்று தேர்வரும்வழிமேல்விழி வைத்த இல்லறக்கிழத்தியிருந்த நகரின்கட்) படியும். பம்மும்பம்மும்- அதனுல், வான்மீன்கணங்களும் மறையும்; இருள்செய்யும் என்றபடி. (அங்ஙன மிருள்செய்யுமிடத்து) அம்மம்ம - ஐயோ! ஐயோ! மாமைபம்முமம்மமும்மேமம்பாம் - அழகியமுலை பசலைதழைவதாம் என்றவாறு.

எனவே என் சத்தியவசனமென்றுமென்பது பயனிலை. அடுக்கு அவலப்பொருணிலைக்கண்வந்தன. பகுதி — பொருள்வயிற் பிரிதல். துறை - வலவனொடுகூறல். பா - இதுவுமது.

குருகுமடவூடுகுழுமுகுருகூரு
ளொருபெருமானேவாமையூறு—மூருகொழுகு
பூமாதுவாழும்புவிமாதுமேவுமொரு
கோமானுவா*வோதுகோ. (773)

இஃ திருவகையோட்டியமும்வந்த வோட்டியம்.

இதன்பொருளுரையிற்கொள்க. அவன்றிருவடிகளேகதியென் பது பயனிலை. துறை - கடவுள்வணக்கம். (உச)

ஓட்டியநிரோட்டியம்.

276. இருமையுமொன்றினுளிருவகைத்தாயுறும்
பெருமிதமோட்டியநிரோட்டியமெனப்பெறும்.

(எ - ன்) இதுவு மவ்வோட்டியநிரோட்டியங்கட் கோர் சிறப்பு விதிகூறுகின்றது.

(இ - ள்) ஓட்டியம், நிரோட்டியமென்னு மிரண்டுதன்மையு மொரு செய்யுளகத்தா யிரண்டுகூறுபாட்டானடைபெறுதலுறும் பெருமையுடை யது ஓட்டியநிரோட்டியமெனப் பெயர்பெறு மென்றவாறு. இரண்டுகூறு பாட்டானென்னுமவை மேற்காட்டுதும்.

மதிமடவார்வேலைவேய்மாரவேள்சோலை
பதிகுயிலோடேவன்பகைகூர்—விதியுங்
குறிதோநாகூராகுறிதுளவக்கோதை
மூறிகூயருளேமுற. (774)

இஃது ஓட்டியமும் நிரோட்டியமும் முறைதடுமாறாது முறையே வந்த ஓட்டியநிரோட்டியம்.

இதனுள், குறிதோ - ஓரொன்று குறியதுன்பத்தைச்செய்வதோ வென்க. ஓகாரம் எதிர்மறை. மூறி - தளிர். ஒழிந்தபொருளுரை யிற்கொள்க. திணை - பெண்பாற்கூற்றுக் கைக்கிளை. துறை - துய ரறிவுறுத்தல்.

* உவா - நிறைவு.

வதுவையொருபோதுவழுவாதுவாழும்
புதுவைவருமாதுருவம்பூணு——மூதுமைபெறு
நாதனரங்கனையேநன்றறிந்தார்க்கேயடியேன்
ருதனெனநெஞ்சேதரி. (775)

இது முன்னடியிரண்டு மோட்டியமும் பின்னடியிரண்டு நிரோட்டியமுமாகவந்த வோட்டியநிரோட்டியம். இவ்விரண்டுதாரணமு மிங்ஙன மிரண்டுகூறுபாட்டான்வந்த வோட்டியநிரோட்டியம். இதன் பொருளுரையிற்கொள்க. திணை - பாடாண். துறை - சமயவணக்கம். உறுமென்ற விதப்பினானே நிரோட்டியவோட்டியமுமுள. அவை வருமாறு:—

கற்றைச்சடையார்கயிலைக்கிரிகளைந்தான்
செற்றைக்கரங்கள்சிரங்கணிறைந்——தற்றழிய
வேவேவுமெவ்வுளுறுமேமமுறுபூமாது
கோவேமுழுதுமுறுகோ. (776)

இது முதலீரடியுந் தனிச்சொல்லும் நிரோட்டியமும் பின்னிரண்டடியு மோட்டியமுமாகவந்த நிரோட்டியவோட்டியம். இவற்றின் வேறுபாடுகளெல்லாம் வந்தவழிக் கண்டுகொள்க. துறை - கடவுள் வாழ்த்து. (௨௫)

அக்கரச்சுதகம்.

277. ஒருபொருள்பயந்தவொருதொடர்மொழியாய்
வருவதையோரெழுத்தாய்க்குறைவகுப்பிற்
சுருங்குபுபலபொருடோன்றுவதாய
வருங்கவியக்கரச்சுதகமாகும்.

(எ - ன்) வைத்தமுறையானே யக்கரச்சுதகமாமா றுணர் - ற்று.

(இ - ள்) ஒருபொருளைத்தருவதொருதொடர்மொழியாய்த்தோன்றுதொட்டுவருவதைப் புலவனு லோரோவெழுத்தாகக்குறைத்துக்கூறுங் கூறுபாட்டாற் றொடர்ச்சொ லீரெழுத்துப்பதமு மோரெழுத்துப்பதமுமாகச் சுருக்கமெய்திப் பலபொருடோன்றுவதாய அரியகவி அக்கரச்சுதகமாமென்றவாறு. சுதகம் - அழிவு.

ஒளிகொண்டபுத்தூருறைகோதைதீந்தேன்
றுளிகொண்டபூந்துளபத்தோன்றலாற்கிந்த
தளிகொண்டதையணிந்ததன்றதனைப்பற்றல்
களிவண்டியிர்தேங்கமழ்வாசிகைசிகைகை. (777)

இஃது அக்கரச்சுதகம்.

(இ - ள்) கீர்த்தியைக் கைக்கொண்ட வில்லிபுத்தூருறைபுங் கோதை சூடிக்கொடுத்தா ளினிய தேன்றுளிக்குஞ்செய்கையைக் கைக்கொண்ட பூவோடுகூடிய துளவமாலிகையையுடைய பெரியோனுக் களித்ததுவு மதனைச் சூடியதும் அதனைப் பற்றியதும் புலவீர்காள்! கூறுங் காலத்துத் தேனையுண்டுகளித்தலையுடைய வண்டுக ளாரவாரிக்கும் வாசிகை சிகை கையா மென்றவாறு.

வாசிகை - மாலை. சிகை - திருக்குழற்கற்றை. கை - திருக்கை. இதனு ளெவ்வாறுநின்ற கூறுபாடு கண்டுகொள்க. திணை-பாடாண். துறை-வள்ளிவாழ்த்து. (உசு)

அக்கரவருத்தனை.

278. ஒருதொடர்மொழியீற்றேரெழுத்தினைப்பிரித்
தொருபொருடாவைத்தோரொன்றாக
மிக்கபல்பொருடாமேல்வைப்பனவே
யக்காவருத்தனையாகுமெனப.

(எ - ன்) வைத்தமுறையானே யக்கரவருத்தனையாமா றுணர்த்து.

(இ - ள்) ஒருபொருடருவதொருதொடர்மொழியீற்றின் ஓரெழுத்தினைப் பிரித்துப் பிறிதொருபொருடாவைத் ததன்மேல் ஓரோவெழுத்தாகப் பலபொருடோன்றவைப்பது அக்காவருத்தனை யென்றுகூறுவர் பெரியோ ரென்றவாறு.

எந்தைதிருத்தாளெழுகங்கையீறுமா
விந்தமலராட்கிசைந்தவீறினுக்கு—மூந்தெழுத்துஞ்
சித்தசனன்வாண்முதலுஞ்சேபிழையாய்ச்சேர்த்தக்கா
லத்தமெழிலோலைப்பூவாம். (778)

இஃது அக்கரவருத்தனே. அப்படி யிதனுட்சேர்க்கும்படி யெப்படி யென்னில், எம்முடையசுவாமியாகிய ஸ்ரீமந்நாராயணன் றிருவடிகளி லெழுந்த கங்கையென்றதொடர்மொழியீற்றினின்ற ககரவைகாரத்தைப் பிரித்துக் கையெனக்கொண்டு, அரவிந்தமலராட்கிசைந்த வீறென்ப தனைத் தகையென்றாக்கி, அதற்குமுதலெழுத்தாகிய தகரத்தைப்பிரித் துச்சேர்த்துத் தகையென்றாக்கி, சித்தசனன்--காமன்; அவனுடைய வாளாகிய கேதகையென்றதிற் ககரவேகாரத்தைப் பிரித்துச்சேர்த்துக் கேதகையென்றாக்கி அத்தம், எழில், ஓலைப்பூ என முடிக்க. வீறு - அழகு. அதனைத் தகையெனக் கூட்டினமையுங் காண்க. (௨௭)

வக்கிரவுத்தி.

279. வெளிப்படைவிளியினும்வினுவினுமெய்ம்மை
யொளித்துமற்றொன்றினையுரைப்புழிமறித்து
நிரைத்தபன்மொழிதொறுமிசைதிரிநிலைத்தா
யுரைப்பதுதானேவக்கிரவுத்தி.

(எ - ன்) வைத்தமுறையானே வக்கிரவுத்தியாமா றுணர் - ற்று.

(இ - ள்) வெளிப்படையாகவிளிக்குமிடத்தும் வினுவுமிடத்தும் முன்னின்றபொருண்மையை மறைத்துப் பிறிதொன்றாக வெதிர்மொழி கொடுத்தவிடத்து மீட்டுந் தெளிவிப்பனவாய்நிரைத்த தொடர்மொழி தோறும் அம்முன்னின்றவ ிரட்டுற விசைதிரிநிலைத்தாயுரைப்பதே வக் கிரவுத்தியா மென்றவாறு.

வெளிப்படை யீரிடத்துங் கூட்டுக. இரட்டுற - சிலேடையாக. முன்னிலையோ ரெச்சமாக விரித்துரைக்கப்பட்டது.

ஏற்றமுறமோதிமத்தாவென்றேன்விண்ணோர்க்
கின்னமுதன் றளித்தவன்பேரென்றான்வெற்பிற்
றோற்றமுறுமெகினவாகனத்தாவென்றேன்
றொன்மறையோன்பெயரென்றான்சாரங்கவிண்ணோர்
போற்றவருமன்னவாகனத்தாவென்றேன்
புரந்தரனேர்பெயரென்றான்பொன்னேயென்னே
மாற்றமுறப்பகர்ந்தமகிழ்மாறற்கென்றன்
மையலுரைத்தெவ்வாறுமருவுவேனே. (779)

இது வக்கிரவுத்தி.

(இ - ள்) பொன்னையொப்பாய்! நமதுவீதியி னுலாப்போந்த மகிழ்மாறனைத் தொழுத யான், ஒருதலைபற்றியகாதலாலே யேறுதற் குண்டான வேதிமத்தையுடையவனேயென்றேன்; அப்பொழுது மலையை மத்தாகவுடையவ னெனும்பெய ரென்பெயரன்று, திருப்பாற் கடலைக் கடைந்து இனிய வமிர்தத்தைத் தேவர்களுண்ணும்படிக்குக் கொடுத்த திருமால்பெய ரென்றான். மீட்டும் வெள்ளிமலைபோன்று பிரகாசிக்கு மெகினவாகனத்தாவென்றேன்; அப்பொழுது அதற்கு மிமவானிடத்துப்பிறந்த அன்னம்போனடையையுடைய வுமையை வாமபாகத்திலுடைய சிவனது அத்த னென்னும்பெயர் பழைய மறையையுடைய பிதாமகன்பெய ரென்றான். மீட்டும், சாந்துவிண் ணோர்போற்றவருமன்னவாகனத்தாவென்றேன்; அதற்குந் திரண்டு தேவர்கள்போற்று மன்னவனே! மேகத்தையுடையவனே யென்னு மிருபெயரும் புரந்தரனதுபெய ரென்றான்; ஆகையா லென்னே? யான் கொண்ட மையலை யவனொடுகூறி யவன்றிருமார்பைத் தழுவுவ தெவ்வா றென்றவாறு.

பொன்னேயென்றது தோழியை. திணை - பெண்பாற்கூற்றுப் பெருந்திணை. துறை - மெலிவொடுகூறல்.

அஞ்சக்கரனேவென்றேன்சங்
கரனுமென்றான்றனியாழி
மிஞ்சத்தரித்ததிருத்தேர்வெய்
யவனேவென்றேன்வெயிலென்றான்
செஞ்சொற்பரிதிவலம்பயில்விண்
டோவென்றேன்பொற்சிலம்பென்றான்
வஞ்சர்க்கிரங்காவரங்கனுக்கென்
மாலெப்படியேமொழிவேனே. (780)

இதுவுமது.

(இ - ள்) அழகிய சக்கரத்தையுடையானேவென்றேன்; அப் பொழுது அஞ்சக்கரங்களையுடையவ னுருத்திரனு மென்றான். ஒப் பற்ற திருவாழியை வலதுகையிற் றரித்தவனுமாய்த் திருமகளைச் சிந்திக் கிறவனுமாய்த் திருமகளாற் சிந்திக்கப்பட்ட விருப்பத்தையுடையானே

வென்றேன் ; அப்பொழுது மது வெயிலோனென்றான். மீளவுஞ் செம்மையொடுகூடிய கீர்த்தியையுடைய பரிதியை வலதுகையிற்றரித்த விண்டுவோவென்றேன் ; அதற்கும் அது பொற்சிலம்பென்றான் ; ஆகையால் வஞ்சத்தையுடையோரிடத்துக் கருணைசெய்யாத் திருவரங்கேசனுக் கியான்கொண்ட காதலை யெப்படியேகூறுவே னென்றவாறு.

துறை - இதுவுமது. முன்னது வெளிப்படைவினியினும் பின்னது வெளிப்படைவினாவினும் அடைவே வந்தவாறு காண்க. (உஅ)

வினாவுத்தரம்.

280. துதித்திடுமொருபொருட்டொடர்ச்சொலைப்பிரித்து
மதிப்படவினாயவகைக்கெதிர்மொழியாய்
விதிப்படவுரைப்பது வினாவுத்தரமே.

(எ - ன்) வைத்தமுறையானே வினாவுத்தரமாமா றுணர்-ற்று.

(இ - ள்) உலகம் புகழ்வதா மொருபொருளைக் காட்டு மொரு தொடர்மொழியினைப் பிரித்துப் பிரித்த பதந்தொறு மனத்துட்கொள ஒருவர் வெளிப்படையாகவினாய பலவேறுவகைத்தாங்கூறுபாட்டிற்கு முன்னின்றவன்மாற்றமில்லாதமுறையொடு மெதிர்மொழியாவுரைப்பது வினாவுத்தரமா மென்றவாறு.

வண்டுளபத்தான் றுயிலும்வாழ்வேது தெள்ளமுதம்
பண்டுகடைநாட்டறியாய்ப்பற்றியதென்—றுண்டமுனி
போசனமாய்க்கொண்டதெவன்போதிலானுக்குவந்த
வாசனமதென்னரவிந்தம். (781)

இது வினாவுத்தரம்.

இதனுள், போதிலான் - பிரமன். அவனாசனமென் னரவிந்தம் என உலகந்துதிப்பனவாய ஒருபொருட்டொடர்மொழியை அரவு + இந்து + அம் எனப் பிரித்து, துளபத்தான்றுயிலும்வாழ்வு அரவு, அமுதம் பண்டுகடைநாட் டறியாய்ப்பற்றியது இந்து, றுண்டமுனிபோசனமாய்க்கொண்டது அம் என முறையே நிறுத்தி, போதிலானுக் குவந்த வாசனமதென் னரவிந்தமென்னச் செவ்வனம்விரியாது அருமை தோன்ற விரித்துக்காட்டியது காண்க. இது வாகைத்திணையுட் புலமை வென்றி.

(உகூ)

சக்கரபெந்தம்.

281. சக்கரத்துட்டடுமாறுதருனே
சக்கரபெந்தமெனச்சாற்றினரே.

(எ - ன்) வைத்தமுறையானே சக்கரபெந்தமாமா றுணர்-ற்று.

(இ - ள்) சக்கரத்தினுள் அக்கரந் தடுமாறப் பெந்திப்பது தானே சக்கரபெந்தமெனச் சாற்றினர் பெரியோ ரென்றவாறு. பெந்தம் - சம்பந்தம். (௩௰)

282. அதுவே,
நாலிருமுன்றிருநாலெனநாட்டுஞ்
சார்பினிலார்புனைதன்மையவாகும்.

(எ - ன்) இதுவும் சக்கரத்தினது கூறுபாடுணர் - ற்று.

(இ - ள்) அக் கூறப்பட்ட சக்கரம், நாலார் ஆறார் எட்டாரெனப் புனையப்பட்டதன்மைகளை யுடையவா மென்றவாறு.

சக்கரமென்பது தேரினதுருள். ஆர் என்பது அதனகத்துச் செறிக்கப்பட்ட கதிர். புனைதல் - செய்தமைத்தல்.

வானமாதியவானவா
வானவாமனுவானவா
வானவாமனமானவா
வானமானிறமானவா (782)

இது நாலாரச்சக்கரம்.

இதனுள், நடுவு வா வென்னு மெழுத்து நின்று எட்டாகியும், நாலார்மேலும் நாலு னகாரம்நின்று எட்டாகியும், சூட்டின்மேனின்ற எழுத்துப் பன்னிரண்டினுள் நாலுதிக்கினுநின்ற மகரஆகார மிரண்டும் வகர ஆகார மிரண்டும் ஆக நாலும் எட்டாகியுந் தடுமாறி ஆக ௰௭-ம் ௩௰௨ எழுத்தாகி, சிந்தடிநான்கான்வந்த வஞ்சிவிருத்த மமைந்தவாறு காண்க.

(இ - ள்) வானுதியாய பஞ்சபூதமானவனே! தேவர்கள்விரும்பும் மனுகுலமானவனே! பெருமையையுடைய வாமனரூபமானவனே! விசும்பினிடத்து மேகம்போலுநிற மாக்கஞ்செய்தவா! என்றவாறு.

எனவே யென்னைக் காப்பாயாக வென்பது கருத்து. திணை - பாடாண். துறை - கடவுள்வாழ்த்து.

தேவாமோகூராதிதமகிபாமாமோக
பூவாளிஓஒபொருதலைக்க—வோவாது
துங்கமுராசாயதேதுன்பமெனும்பூமகட்கு
வெங்கனலாவானேன்விது. (783)

இதுவும் நாலாரச்சக்கரம்.

இதனுள், நடுவு தகரநின்று அதனைச்சூழ்ந்த குறட்டின்மேல் திருமலையென்னும்பெயர் நின்று ஆர் நாலினும் நாலுநாலாகப் பதினு றெழுத்து நின்று சூட்டின்மே லிருபத்தெட்டெழுத்து நின்று ஆக எழுத்து நாற்பத்தொன்பதும் ஐம்பத்தஞ்சாக மாறுடின. அவை மாறுடினவகை:—நடுவு தகரம் இரண்டாகவும், சூட்டின்மையுங்களில் முதன்மையத்தில் து மூன்றுகவும், ஒழிந்தமையத்தில் தே பூ க மூன்றும் ஆருகவும் மாறுடினவாறு காண்க.

(இ-ள்) தேவா - சகலதேவன்மாருக்குந் தேவனே! மோகூரா திருமோகூரானே! திதமகிபா - உண்மைப்பொருளானமகிபனே! மாமோக - பெரியபிராட்டியைமோகிக்கப்பட்டவனே! பிராட்டியால் மோகிக்கப்பட்டவனே! எனினுமாம். என்னை? "தடுமாறு தொழிற் பெயர்க் கிரண்டு மூன்றுங், கடிவரை யிலவே பொருள்வயி னான" என்ப தனு னறிக. பூவாளி ஓஒ பொருதலைக்க - காமன் மிகவும் பாணங்க ளாற் பொருது அறிவினது நிலையைக் குலைக்க அதனேடும், ஓவாது - ஒழிவின்றியே. துங்கமுராசாயதேதுன்பமெனும்பூமகட்கு - காமனது வெற்றிமுரசான கடலே துன்பமதெனும் பூமடந்தைபோல்வாளுக்கு, அவற்றிேேடும், வெங்கனலாவானேன்விது - குளிர்ந்தசந்திரனும் வெம்மையைச்செய்யுந் தழலாவானே னென்றவாறு.

பூவாளி - பூவைப்பாணமாகவுடைய காமன். இதனைப் பெந்திக்கு மாறு:— இடதுபக்கத்துச்சூட்டின்மையத்துத் தேவாவென்றெடுத்து மோகவென முடித்து, வலமாக அதற்கடுத்தசூட்டின்மையத்துப் பூவாளியென் றெடுத்து ஓவாது என்று முடித்து இறுதிநின்ற துவ் வென்பதுமுதலாகச் சூட்டின்வலமேறி விதுவென முடிக்க.

இதனுள், ஓஒ வென்னு மோகார வளபெடை சிறப்பின்வந்தது. என்னை? "தெளிவினேயுஞ்சிறப்பினோவு, மளபினெடுத்தவிசையவென்ப" என்பதனு னறிக. "இசைகெடின் ...குறியே" என்பதனால் இரண்டு மாத்திரையான ஓகாரம் செய்யுட்கண் ணோசைசிதைந்தவிடத்து மூன்று மாத்திரையாய் நீண்ட குறிக்குத் தனக்கினமாகிய குற்றெழுத்தினொடு நின்றதல்லது இரண்டெழுத்தல்லவென்ப தறிக. திணை - பெண்பாற் கூற்றுக் கைக்கிளை. துறை - கண்டுகைசோர்தல்.

மாதவனேதென்னரங்கேசமான்மருளாகமிகு
போதனுமன்பிற்றொழுகேசவபுரைகூர்பவமே
வாதிதமாகுதற்கிங்கேயெனுருயிர்காபொதுவே
வேதநமாநமபோதனைவார்க்குள்ளமேதகவே. (784)

இஃது ஆறாரச்சக்கரம்.

இதனுள், நடுவு கே யென்னுமெழுத்து நின்று அதனைச்சூழ்ந்த குறட்டில் ஆறக்கரம்நின்று சூட்டிற் பதினெட்டெழுத்து நின்று குறட்டுக்குஞ் சூட்டுக்கு நடு ஆராறில் ஆர்தோறும் ஏழெழுத்துநின்று ஏழெழுத்தில் நடுவெழுத்தாறும் தென்குருகூர் என்னும் பேராகநின்று ஆக அறை அறுபத்தேழில் எழுத் தறுபத்தேழும் ஒற்றுள்பட ஒன்பதெழுத்து மாறுடினமுறையாலேறி எழுபத்தாறாக நோசைக்கலித்துறை நின்றவாறு காண்க.

நடுவிற் கே மூன்றாகவும், முதற்சூட்டின்மையத்து வே மூன்றாகவும், ஒழிந்தசூட்டின்மையத்துநின்ற மா கு பொ மே வா ஐந்தும் ஓரோவொன்று இவ்விரண்டாகவும் நின்றன. இதனைப் பெந்திக்கு மாறு:-இடதுபாகத் திரண்டாஞ்சூட்டின்மையத்து மாதவனே யென்றெடுத்து நேரே மிகு என முடித்து, அதற்கடுத்த மூன்றாஞ்சூட்டின் மையத்துப் போதன் என எடுத்து மே யென நேரே முடித்து, நாலாஞ் சூட்டின்மையத்து வாதிதமாகுதற்கென எடுத்து, பொதுவே என முடித்த, முடித்த வே நாலாமடிக்கு முதலெழுத்தாகப் பின்னும் மேதகவேயென அதனின்முடிக்க.

(இ - ள்) திருமகள்காந்தனே! அழகிய அரங்கேசனே! மேகம் போன்ற திருமேனியனே! பெரிய பிரமனு மவன்முதலாங் கடவுளரு னன்பினொடுந்தொழுங் கேசவனே! சகலான்மாக்களுக்கும் பொது

நின்றவனே! என்றன்னை நினைந்து மிகவுங்குழைவார்க் கிதயத்தாமரை யகத்தோனே; வேதமுதல்வனே; நின்னைக்குறித்து நமாநம என்று நின்றேன்; அதற்குத்தகுவதாகவென்றனுயி ரின்னும் பொல்லாங்கை விளைக்கப்பட்ட செனனத்தை யிவ்வுலகத்தெய்தாது இன்பமெய்துதற்கு என்னைக் காப்பாயாக வென்றவாறு.

போதனும் என்னு மும்மை எச்சவும்மை. இதனுள், இரண்டா மடியீறுதொடங்கி யொழிந்தன மாட்டுறுப்பாக நிகழ்ந்தன. துறை - கடவுள்வணக்கம்.

தண்மதிநிகர்வதயங்கியவதனம்
பொன்னணிமுலைநிடதப்புரைவரைநிகர்
மடிசேர்தருதாமதபத்தர்க்கெட்டா
மாறன்றடமிமலைதன்மின்போன்றொளிர்
தண்ணென்பொற்சுனைமன்னியமாமல
ரம்மடவார்மையுண்டாட்டமர்கண்ணே. (785)

இஃது எட்டாரச்சக்கரம்.

இதனுள், நடுவு தகரம் நின்று சூழ்ந்தகுறட்டில் வடமலையப்பன் என்னும் பெயர் நின்று ஆர்மேல் நாற்பத்தெட்டெழுத்தாய்ச் சூட்டின் மேன் மூப்பத்திரண்டாய்நின்றவாறு காண்க. நடுநின்ற தகரம் நாலெழுத் தாய் மூதற்சூட்டின்மையந்தொடங்கிநின்ற த பொ ம மா ம் ர் டா ர் எட்டும் பதினாறாய், குறட்டில் வடமலையப்பன் என்னும் எட்டும் பதினாறாய், பத்தொன்பதெழுத்து மாறடி அறை எண்பத்தொன்பதினின்ற எண்பத்தொன்பதுக்கு நூற்றெட்டெழுத்தால் ஆறடி நிலைமண்டிலவாசிரி யப்பாவாய்முற்றியது.

இதனுள், நிடதப்புரைவரைநிகர் - நிடதமாகியவுயர்ந்தமலையை யொத்த. மலைதன் - மலைதன்னில். மின்போன்றொளிர் - மின்னைப் போன் றொளிராநின்ற. தண்ணென்பொற்சுனை-குளிர்ந்த பொன்னோடு கூடிய சுனை. மன்னியமாமலர் - நிலைபெற்ற நீலோற்பலம்போல்வ. அம் மடவார்மையுண்டாட்டமர்கண் - அழகியமடவார் மையெழுதப்பட்டுக் களிப்போடுகூடிய கண்கள். உண்டாட்டு - களிப்பு. நண்பனே! பத்த ரல்லாத தாமதத்தினைவிரும்புவோர்க் கெட்டா மாறன் றடமிவெற்பிடங் தன்னி லெனக் கூட்டுக; நண்பனே யென்னு முன்னிலை எச்சம். பகுதிப் பாங்கற்கூட்டம். துறை - இயல்பிடங்கூறல்.

சேடுறுதட்பச்சீரிமகிரிக்கைவிலின்
போர்பொருவீரபுராரிசெற்றத்தடர்த்
தின்பமதுறவமரியலருணிருதனோர்
முன்புமேத்தமாரிம்பர்நம்பாலுறு
சேர்மழைபோனிறத்திருவுறைமுதல்வன்
தாரிணைத்தாளெதிர்தாளுற்றுன்னெஞ்சே. (786)

இதுவும் எட்டாரச்சக்கரம்.

இதனுள், நடுவு ரி என்னு மெழுத்துநிற்க, குறட்டிற் சீராமராம சேயம் என்னும் ராமதோத்திரநின்று, ஆர்மேற் குறட்டுடன் அஞ்சா மறையில்நின்றும் வலமாக, தருமமேகைதரும் என்னும் பழமொழி நின்று, ஆர்மேல் நாற்பத்தெட்டெழுத்தாய்ச் சூட்டின்மேன் முப்பத் திரண்டெழுத்தாய் முதலடியின் முதலெழுத்தாகிய சே அஞ்சாமடிக்கு முதலெழுத்தாய் ஆறுமடிக்கு நெஞ்சேயென்ன முடிந்தமொழிக்கிறுய் மூன்றெழுத்தாயவாறுங் காண்க. இதனைப் பெந்திக்குமாறு:—தன் முன்னர்ச் சூட்டுமையத்துநின்றுஞ் சேடுறு என நேரோட்டிக் கை விலின் என அஞ்சாமாரின் முடித்து, வலமாக இரண்டாமார்தொடங்கி நாலாமார்வரைக்கும் லுறு என முடித்து, மீட்டும் முதலடியிற் சே என்றவெழுத்தை யெடுத்துச் சேர்மழைதொடங்கி நெஞ்சேயெனச் சூட்டின் வலமாகச்சுற்றி முடிக்க.

(இ - ள்) நெஞ்சே - நெஞ்சமே! சேடுறு......விலின் - பெருமை யெய்துங் குளிர்ந்த சீர்பொருந்திய விமவானென்னுங் கிரியைக் கைவில் லாக்கி அதனால். போர்........அடர்த்து - திரிபுராதிகளுடன் போரைப் பொரும் வீரத்தையுடைய புராரியென்னுஞ் சிவன் கைலையை யெடுத்தலைத்ததனாற்கோபித்து விரலையூன்றி மதுகையையழிப்ப வீடுபட்டு. இன்பமது........முன்பும் - அவன் பாடிய பாட்டினுக்குருகி மீள வின்பமுறும்படி சமர்க்கு வேண்டு மாயுதமுதலிய வியல்பினை யெல்லா மடர்த்த சிவன் றான்கொடுப்பவெய்திய மழைபோனிறநிருதன் சமர்க்கு நேர்பட்ட முதனுளுநங் கும்பகருணன்முதலியோர் பட்டபின் னும், எதிர்தாளுற்று - அவனெதிர்தாத் தானும் போர்க் கெதிரு முயற்சியையுற்று. இம்பரேத்தமர் - இவ்வுலகின்கண்ணே யாவரு மெத்துந் தனதுபோரால். ஆர் - அவனதுயிரையுண்ணும். திருவுறை

............தாள் - திருமகள் விட்டுநீங்காத முதல்வனது தாமரைப்பூப் போன்ற இரண்டு திருவடிகளையும். உறுநம்பால் - மிக்க விருப்பத்தால். உன் - சேர் - நினை - தியானத்தாற் கூடுவாயாக என்றவாறு.

இங்ஙனந் தியானிக்க வீடேறலா மென்பது பயன். அவனுயிரை என்பது சொல்லெச்சம். மூன்றும் என்னும் உம்மை யெச்சமாதலாற் பின்னுமென்ப தாயிற்று. அமரால் மூன்றுவது தொக்குநின்று விரிந்தது. ஆர் உண்ணும் என வினைத்தொகைவாய்பாடு செய்யுமென்னும் பெயரெச்சவாய்பாடாக விரிந்து தன்னெச்சமான திருவுறைமுதல்வனென்னும் பெயர்கொண்டு முற்றியது. திணை - பாடாண். துறை - கடவுள் வணக்கம். (ருக)

பதுமபெந்தம்.

283. எண்ணிரண்டிதழாய்க்கோணிருநான்கின்
கண்ணுறநடுவணப்பொகுட்டதுகாட்டிப்
பண்ணமைப்பதுவும்பதுமபெந்தம்.

(எ - ன்) வைத்தமுறையானே பதுமபெந்தமாமாறுணர்-ற்று.

(இ - ள்) ஒரு தாமரையை எட்டுக்கோணினு மிவ்விரண்டாகப் பதினாறிதழெழுதி நடுவே யொரு பொகுட்டினையுங் காண்பதாக்கிச் செய்தமைப்பதும் பதுமபெந்தமா மென்றவாறு. உம்மையான் மகாபதும பெந்தமு மொன்றுள,

மாறுமாலாலேமாறுமா
மாறுமாவேளேமாறுமா
மாறுமாகோவாமாறுமா
மாறுமாவாதேமாறுமா. (787)

இது பதுமபெந்தம்,

(இ - ள்) முதலடியிற்று மா - திருவன்னாள், மாறுமாலா லா ல் நீங்காத மாலாசல். ஏமாறு - வருந்தும்படிக்கு. (இரண்டாமடி) மாறுமாவேளேமாறுமாம் - மாயோன் றாப்பட்ட கரிய வேளம்பு மாற்றமாம். மூன்றாமடியில் மகாவொற்றைப்பிரித்து, ஆறுமா - ஆறுபோல வாம் ஐயோ என்றாக்கி, (மூன்றாமடியி லிறுதியில் மா என்னும் எழுத்தைப்போட்டு) கோவாமாறு என்பதனைக் கூட்டி, கண்ணீர்தாரு

ஐயோவெனச் சேர்த்து, மூன்றாமடியினின்ற மாவை நாலாமடியின் முதன்மாவொடுங்கூட்டி, மாமாறு என்றாக்கி, பெரிய மாறனே; என்க. மாவாதேமாறுமா - வண்டுகள் தேனையுண்ணவரும் தேன்றாளும்புந் தாமத்தனே யென்றவாறு.

பெரியமாறனே! திருவன்ஞுள்வருந்தும்படிக்குக் கரிய வேளம்பு மாற்றமாகாநின்றன; கண்ணீர் தீராது; ஐயோ! இனி எங்ஙனமுய்யு மென்னும் பயனிலைகூட்டி முடிக்க. மகாபதுமபெந்தம் வந்தவழிக் கண்டு கொள்க. திணை - பெண்பாற் கைக்கிளை. துறை - கண்டுகைசோர்தல்.

இனிப் பதுமபெந்தத்தினுள் நடுவிற்பொகுட்டினின்ற மா என்ற எழுத்தொன்றும் எட்டெழுத்தாகவும், அதனைச்சூழ்ந்த நாற்கோணங் களினின்ற எட்டெழுத்தும் பதினாறாகவும், இடையிற்கோணுவினுநின்ற எழுத்தெட்டுந் திரிந்து மாறாடாதுநிற்கவும் பாடினவாறு காண்க (௯௨)

முரசபெந்தம்.

284. எழுதியவரிநாலினுண்முதலீறன
பழுதறமந்திரிச்செலவாய்ப்படர்ந்தய
லொழுகியுங்கீழ்மேற்றனதீற்றுற்றபின்
னறைதொறுமேனையவடைவேபாதியின்
முறைதடுமாறுதன்முரசபெந்தம்.

(எ - ன்) வைத்தமுறையானே முரசபெந்தமாமாறுணர் - ற்று.

(இ - ள்) நாலடியான்வரு மொருசெய்யுளை நாலுவரியாக வெழுதி அவற்றுண் முதலடியுமீற்றடியுமாகியவிரண்டின்முதலடி கீழ்மூன்றுவரியி னும் மந்திரிச்செலவாகச் சென்று நாலாமடியி லஞ்சாமறையி லேறி யந்தவார் மேனோக்கி மீள வப்படியே முதலடியீற்றின்முற்றியும், இறுதி வரியும் மந்திரிச்செலவாய் மேனோக்கி நாலாமடியுற் றஞ்சாமறையிலேறி யந்தவார் கீழ்நோக்கி யவ்வண்ணமே யிறுதியடியீற்றின் முற்றியும், ஏனையிரண்டனுள் இரண்டாமடி முற்பாதியினின்றுங் கீழ் வலமாக மூன்றாமடியின்முதலே முற்றியும், மூன்றாமடி யிரண்டாமடிப்பிற்பாதியி னின்றுழிநின்றுங் கீழிடமாக மூன்றாமடி யிறுதியின்முற்றியும், இரண்டடியும் முத லீறென்னும் முறைதடுமாறப் பாடுவது முரச பெந்தமா மென்றவாறு. இங்ஙனம் மேல்வருஞ் செய்யுளை எழுதிக் கண்டுகொள்வது.

போதவானதுவாதரா
மாதவாதணவாதநா
நாதவாணதவாரவா
வேதவானதுவாரகா. (788)

இது முரசபெந்தம்.

(இ - ள்) போத- ஞானவானே! வானதுவாதரா - வானவராதரிக்கப்பட்டவனே! மாதவா-திருமகள்காந்தனே! (மூன்றுமடி முதலீறாக) நா தணவாத நாத - நாவைவிட்டுநீங்காத வென்றதனே! வாண - உலகினைக் காக்கப்பட்டவனே! தவாரவா - அழிவில்லாத அரவையுடையவனே! வான வேத துவாரகா - (எனப் பாடமாற்றுக) பரமபதமிடமாக நின்றும் பூமியில்வருதற்குப் பெருமையையுடைய வேதத்தை வாயிலாகவுடையவனே! என்னைக் காப்பாயாக வென்றவாறு. துறை - கடவுள் வாழ்த்து. (௫௫)

நாகபெந்தம்.

285. வரியரவிரண்டாய்வால்வயிறிரண்டாய்த்
தெரிமூலைநான்காய்ச்சிறந்துமும்மூன்றுட
னிலைபெறுமொருபானிருபானிறீஇத்
தலையிரண்டெழுத்தாய்ச்சார்தரச்சந்தியிற்
கவினுறுத்தெழுத்துக்கலந்துறப்பாக
நவிலிருபாவேநாகபெந்தம்.

(எ - ன்) வைத்தமுறையானே நாகபெந்தமாமா றுணர் - ற்று.

(இ - ள்) வரியையுடையபாம்புக ளிரண்டாக, அவற்றிற்கு வாலிரண்டாக வயிறிரண்டாகத் தோன்றப்பட்டமூலைக ணான்காகச் சிறப்பெய்தி, வாலிரண்டி னிலைபெறுமெழுத் தொன்பதுடன், வயிறிரண்டிலெழுத்துப் பத்தாய், மூலைநான்கி லெழுத் திருபதாய்த் தலையிரண்டிலெழுத் திரண்டாய்ப் பொருந்த நிறுத்தி, சந்திகளில் அழகுதருவனவாமெழுத்துக்க ளிரண்டிற்குங் கூடிநிற்பனவா முறுப்பாகப் புலவனுலுரைக்கப்படு மிரண்டுபாவென்பதுதானே நாகபெந்தமா மென்றவாறு.

நிறுத்தியென்பது மத்திமதீபம். மும்மூன் றொருபானிருபானென்பன நிரனிறை. புலவனு லென்பது எச்சம். தெரிமூலை - தோன்றப்பட்ட மூலை.

மாறன்சடகோபன்வண்குருகூர்வாழ்பொருநை
யாறனளிமேயவன்னமே—யேறுத்
தமனுமாமாசாதன்றாண்மொழிதற்பாமன்
னெமர்யாயெமையாளிறை. (789)

அறமுமறமமைந்தவன்பென்பதுவும்
பெறனன்னலமதுண்மைபோரா—துறுபாற்கோர்
மாணமனமேநினைமாண்மாமேகத்தந்தமே
யேனமெமையாளியை. (790)

(இ - ள்) மாறனென்றுஞ் சடகோபனென்றுந் திருநாமத்தை யுடையான், வளவிய குருகூரின்கண்வாழும் பொருநையாற்றையுடைய வன், கிருபையோடுகூடிய அன்னத்தையேறு முத்தமன், நாவினால் திருமகளையுடைய பெரிய சாதனும் மாயோன் றிருவடிகளைப்பாடும் பாவினையுடைய மன்னன், எம்மனோர்க்கு மாதா, எம்மையாளு மிறைவ னென்றவாறு. எனவே, யமனு மெம்மிடத்து வாரான்; எமக்குச் செனனமு மில்லை, சித்திப்பதும் முத்தியேயா மென்பது பயன்.

அறத்தினது பகுதியு மறத்தினாலமைவெய்திய அன்பென்று கூறப் படுவதும் நமக்குண்டாதலும் நல்ல பேரின்பத்தையெய்துவ துண்மை யாக வது நம்மைவிட்டு நீங்கா தவற்றையுறும்பகுதிக்கு ஒப்பற்ற பெரிய மனனே! காளமேகத்தினது அழகிய நிறமேவிய திருமாலை, ஏனமாக வடிவெடுத்தவனை, எம்மையாளப்பட்டவனை நினைப்பாயாக வென்றவாறு.

ஆக வெண்பா விரண்டினால் எழுத்து நூற்றொருபத்தெட்டும் அறை தொண்ணூற்றாறனுண் மாறாடி யடங்கினவாறு கண்டுகொள்க. திணை - பாடாண். துறை - கடவுள்வணக்கம். (௫௪)

இரதபெந்தம்.

286. தேரெனமந்திரிச்செலவெனச்செய்யுளை
யோர்தரவடக்குவதிரதபெந்தம்

(எ - ன்) வைத்தமுறையானே இரதபெந்தமாமா றுணர்-ற்று.

(இ - ள்) சதுரங்கவறையுட் டேர்செல்வது எனவும், மந்திரி செல்வதெனவு மொருசெய்யுட்குண்டான வெழுத்துக்களைத் தேரின தறைக்குநடுவே ஒரு திருநாமமாதல் ஒரு பழமொழியாதல் லழுதுபெற்று நிற்க விரதத்திலே பெந்திப்பது இரதபெந்தமா மென்றவாறு.

சதுரங்கவறையினுளென்பது சொல்லெச்சம். செய்யுளையென்ப தாகுபெயர். அறைக்கு நடுவே திருநாமமாதல் பழமொழியாத னிற்க வென்பது ஏர்தர என்பதே ஞாபகமாக விரிந்தது.

நாராராராயநயனயணாவிண்ண்
ணாராமணாயனிலமாயவா—சீராய
நன்காநமநமநன்காநமநம
மன்காமன்றாதாய்நம. (791)

இஃது இரதபெந்தம்.

(இ - ள்) நாரார் - அன்பினையுடையார். ஆராய் அ நயன் - ஆராயப்பட்ட அந்தப் பேரின்பத்தினிடத்து. அயணா - வியாபரிக்கப்பட்டவனே! விண் - ஆகாயமும். ஆராம் - மிகுந்த செலமும். மண் - நிலமும். ஆய் - ஆகி. அனிலம் - காற்றும். ஆயவா - ஆனவனே! சீராய - பொலிவினையுடைய நந்தகோபாலனே! நன்காநமநம - நன்மையையுடையவனே! உன்னை நமக்கரிக்கிறேன். நன்காநமநம - முன்னைப்போலவுரைக்க. மன்காமன் - மகளிராடவர்க் கரசனாகிய மன்மதன். தாதாய் - தந்தையே! நம - உன்னை மீளவு மென தான்மாவைக் காத்தற்பொருட்டு நமக்கரிக்கிறே னென்றவாறு.

நார் - அன்பு. அ சுட்டு. நயன் - சுகம். அயணம் - வியாபாரம். ஆம் - செலம். மண்ணாய் என்பது மணாய் என இடைகுறைந்துவந்தது. ஆயவா - ஆனவனே. நன்கு - நன்மை. மன் - அரசன். தாதை என்னும் ஐகாரவீறு விளிக்கண் ஆயாயிற்று. நமநம நமநம என்பது இசைநிறையசைநிலை. விண்ண் என்னு மொற்றளபெடை, வெண்பாவினது செப்பலோசைசிதைந்தவழி யோசையை நிறைத்தற்பொருட்டு வந்தது. என்னை? "குன்றுமே லொற்றளபுங் கொள்" என்பதனா லறிக. இதனுள் நடுவும் இருபக்கமும் நாராயணாயநம வென நின்றவாறு காண்க. துறை - கடவுள்வணக்கம்.

மாயவனேவேதமதியேவயநாக
பாயவனேதேநளினபாதாபராபரா
தூயவனேகாரணாபூரணாதோணிலமா
ணயகனேசீராகநாராயணாயநம. (792)

இதுவும் இரதபெந்தம்.

சீர்-திருமகள். தோள்நிலமான்-தோளிவிருக்கும் பூமிதேவி. இத னுள், நபிவே நாராயணாயநமவென்னுந் திருநாமம் நின்றவாறு காண்க ()

மாலைமாற்று.

287. ஒருசெயுண்முதலீறுரைக்கினுமஃதாய்
வருவதைமாலைமாற்றெனமொழிப.

(எ - ன்) வைத்தமுறையானே மாலைமாற்றுமா றுணர் - ற்று.

(இ - ள்) ஒருபாட்டை யீறுமுதலாக வாசிக்கினு மப்பாட்டேயாகி வருவதனை மாலைமாற்றென்னுஞ் சித்திரக்கவியென்றுகூறுவர் பெரியோ ரென்றவாறு.

வாமனுமானமா
பூமனுவானவா
வானவானுமபூ
மானமானுமவா (793)

இது மாலைமாற்று.

(இ - ள்) வாமனு - வாமனனேயென்று. வானவாவானவானும - தேவர்களால் விரும்பிச்சொல்லுவதாய பெரியதிருநாமத்தை யுடையவ னே! மானமா பூ - பெருமையையுடைய திருமகளுக்கும் பூமிதேவிக்கும். பூமானமனு - பூமானாகியமன்னனே! மானும - மாலாகிய திருநாமத்தை யுடையவனே! வா - என்முன்னேவந்துதோன்றுவா யென்றவாறு.

இஃது இரண்டுவிகற்பத்தான்வந்த வஞ்சித் துறை. துறை - இதுவுமது. (கூ-சு)

கரந்துறைசெய்யுள்.

288. முதலொருசெய்யுண்முடித்ததனீற்றிற்
பதமதனிறுதியிற்பயிலெழுத்துத்தொடுத்
திடையிடையிட்டெதிரேறுய்முதலய
லடைதரப்பிறிதொருசெய்யுள்காந்தங்
குறைவதுகரந்துறைசெய்யுளென்றுரைபெறும்.

(எ - ன்) வைத்தமுறையானே கரந்துறைசெய்யுளாமாறுணர்-ற்று.

(இ - ள்) முதலே யொருசெய்யுளை எழுதிமுடித்து, முடித்த பிறுதிமொழியினீற்றெழுத்துத்தொடங்கி, எதிரேறாக இடையிடை

யோரெழுத்தாக இடையிட்டு முதன்மொழிமுதலெழுத் தயலடைய முடிக்கப் பிறிதோர்செய்யுளாக வதனகத்துக் காந்துறைவது காந்துறை செய்யுளென் றுரைக்கப்பெறு மென்றவாறு.

போர்வைவாயூராரலாளிபொருகாம
நீர்மையாழ்வாரயலணைதருமிக
வேர்தவாவாழ்தலாமயில்கைமுருகுகு
தார்தாராமூதாமணிதகவுருவமும். (794)

இது கரந்துறைசெய்யுள்.

(இ - ள்) ஆரலாளி என்பதை அளியாரலரென மாற்றி, வண்டுக ளாரவாரிக்கப்பட்ட பூவாளியால் என்க. பொருகாம - பொரவந்த காமனே! நீர்மையாழ்வார் - நற்குணத்தையுடைய ஆழ்வார். மயில்கை - எமது மயில்போலுஞ்சாயலையுடையாள்கையில். மூதாவுருவமுமணிதக வாழ்தலாம் - பெருமையையுடையவா முருவங்களு மழகினது பெருமை யெய்த உயிர்வாழ்தலாம்படிக்கு. ஏர்தவா முருகுகு தார்தாரா - அழகு கெடாத தேனொழுகும் வகுளமாலிகையைத் தந்து. வாயூர் - (ஊர்வாய் என மாறுக) எமது பதியிடத்து. அயலணைதருமிக - அய லெம்மோடு மிக நட்புச்செய்யாநின்றாராதலால். போர்வை - உனதுபோரை யொழிவாயாக வென்றவாறு. இது மாட்டுறுப்பு. அப்படி யிதனுட் காந்த செய்யுள்:—

முருகணிதாரார்
குருகையிலாழ்வார்
கருணையவாயார்
மருளிலாரவார். என்பதாம். (௩௭)

காதைகரப்பு.

289. காதைகரப்பது காதைகரப்பே.

(எ - ன்) வைத்தமுறையானே காதைகரப்பாமாறுணர் - ற்று.

(இ - ள்) புலவராற்குறிக்கப்பட்டசெய்யுளுட் பிறிதொருசெய்யுட் குக்கூடுவதானவெழுத்துக்கள்புகுதாதே தாங்குறித்த பழையசெய்யுட் காந் தெழுத்துப் பிறக்கிக்கொள்ளலாம்படி பாடுவது காதைகரப்பா மென்றவாறு.

கொல்யானைமூலமெனக்கூப்பிடமூன்காத்தானை
யெல்லாவுயிர்க்குமுயிரெனலாம்—புல்லாணித்
தோடார்நறுந்துளபத்தோண்மாலைக்கைதொழுதா
ளுடாரொருநாணமன். (795)

இது காதைகரப்பு.

இதனுட்போந்தசெய்யுள், "கொல்லான் புலாலை மறுத்தானைக் கை கூப்பி, யெல்லா வுயிருந் தொழும்" என்பது. இதனைப் பழம்பாட்டெனவே மேலன நவமாமென்றுணர்க. இவற்றை மாறுவோரு முளர். (ரு௭)

பிரிந்தெதிர்செய்யுள்.

290. பிரிந்தெதிர்வனவேபிரிந்தெதிர்செய்யுள்.

(எ - ன்) வைத்தமுறையானே பிரிந்தெதிர்செய்யுளாமா றுணர்-ற்று.

(இ - ள்) ஒருசெய்யுள் முதலேமுடிந்தா லச்செய்யுளீற்றெழுத்துத் தொடங்கி யெதிரேறுகடந்து வேறோர்செய்யுளாக நிகழ்தல் பிரிந்தெதிர் செய்யுளா மென்றவாறு.

நீரநாகமா
தாரமாகமே
வாரமாகமா
ணூாணுககா. (796)

இது பிரிந்தெதிர்செய்யுள். இதனுள், பிரிந்தெதிர்செய்யுளாவது:-

காகணூரணு
மாகமாரவா
மேகமாரதா
மாகநாரநீ,

என்பதாம். இவற்றுள், முதலேநடந்தசெய்யுளின்பொருள்:—நீரநாக - நற்குணத்தனே! அனந்தசயனத்தனே! மா தாரமாக - திருமகளைப் பாரியாக, மேவாரமாக - பொருந்து மாரங்கிடக்கு மார்பனே! மாணூர ணுக - பெருமையையுடைய வேதசொரூபனே! கா - என்னைக் காப்பாயாக வென்றவாறு.

எதிரேற்றின்பொருள்:—மாகமாரவாம் - துறக்கத்துள்ளார்பெறுக விரும்பும். நார - நற்குணத்தையுடையவனே! மேகமாக - மேகத்தைப் போலுந் திருமேனியையுடையவனே! மாரதா - சத்துருக்களை வெல்லு முழுத்தவீரனே! நாரணா - நாராயணனென்னுந் திருநாமத்தனே! நீ கண் - நினது சொருபரூபகுணவிபூதிகளை மயக்கமறவறிதற்கு நீயே யெமக்கு ஞானக்கண்ணானதால். கா - எம்மைக் காப்பாயாக வென்ற வாறு.

இவையிரண்டும் வஞ்சித்துறை. துறை - கடவுள்வாழ்த்து. அநுலோமப்பிரதிலோமமென்பது மிது. (௩௯)

பிறிதுபடுபாட்டு.

291. பிறிதொன்றுதல்பிறிதுபடுபாட்டே.

(எ - ன்) முறையே பிறிதுபடுபாட்டாமா றுணர் - ற் - று.

(இ - ள்) பிறிதுபடுபாட்டென்பது ஒருசெய்யுளைத் தொடையு மடியும் வேறுபடவுரைத்தாலுஞ் சொல்லும் பொருளும் வேறுபடாமற் பிறிதொருசெய்யுளாய்முடிவது என்றவாறு.

> பார்மகளைத்தோயும்புயத்தாய்பதுமநறுந்
> தார்மகளைநீங்காத்தகைசான்றவாகத்தா
> யாரியனேயாரணத்தந்தியனேவாரி
> வாரியுளாகணைமன்னா. (797)

இது பிறிதுபடுபாட்டு.

இது முதலே யொருவிகற்பத்தின்னிசைவெண்பா பின்னர்க் கலி விருத்தமாகநிகழ்ந்தவாறு காண்க. தார் - பூ. ஆரியன் - பரமாசாரியன். வாரி - கடல். வாரி - மிகுதி. (௪0)

சருப்பதோபத்திரம்.

> 292. இருதிறத்தெழுதலுமெண்ணுங்கெழுத்துடை
> யொருசெய்யுளெண்ணெண்ணரங்கினுளொருங்கமைந்
> தீரிருமுகத்தினுமடிமாறாய்ச்
> சார்தருமாறியுஞ்சருப்பதோபத்திரம்.

(எ - ன்) வைத்தமுறையானே சருப்பதோபத்திரமாமா றுணர்-ற்-று.

(இ - ள்) எவ்வெட்டெழுத்தோரடியாய் நான்கடியாய்வரு மெண்ணான்கெழுத்துடையதொருசெய்யுளை யறுபத்துநாலறையினி லிரண்டுகூறுபாட்டானெழுத வவற்றுண் முழுதுமடங்கி நாலுமுகத்தினு முதன்முதலாகியு மீறு முதலாகியு மாலைமாற்றாகிவருமது சருப்பதோபத்திரமா மென்றவாறு.

இரண்டுகூறுபாடாவது நான்கடியும் மேனின்று கீழிழியவுங் கீழ்நின்று மேலேறவும் எழுதுவதாம். இது மாட்டுறுப்புப்பொருள்கோள்.

தேமாபூமாமாபூமாதே
மாதாகாவாவாகாதாமா
பூகாவாலாலாவாகாபூ
மாவாலாநீநீலாவாமா. (793)

இது சருப்பதோபத்திரம். இதனகத் தவ்வாறுநிகழ்ந்தமை கண்டுகொள்க.

(இ - ள்) தே மா பூ - தேனும் வண்டும் பொருந்திய பூவினிடத்து. மாமா - பெரிய திருமகளும். பூமாதேமாது - பூமிதேவியு மாகிய அழகு பொருந்தின மாதர்கள். ஆகாவாவாகா - (வா ஆகா வாகா எனப் பாடமாற்ற) வந்து தங்கு மார்பினையும் புயத்தினையு முடையவனே! தாமா - துளவமாலிகையையுடையவனே! பூகாவாலாலா — பூமியையெடுக்கப்பட்ட பிரளயத்தின்மே லாலிலையிற் றுயிலப்பட்டவனே! பூமாவாலா - பொலிவினெடுங்கூடிய மிகுந்த பாலத்தன்மையோனே! நீலா வாமா - நீலநிறத்தினனே! வாமனரூபமானவனே! மூன்றுமடியிலிறுதி வாகா நாலாமடியின் முந்தவந்த நீ என்னுமவற்றொடுங்கூட்டி, நீ வா கா வெனச் சேர்த்து, நீ வந் தென்னைக் காப்பாயாக வென்றவாறு.

இதனுள், ஏமம் ஏம் என நின்றது. உம்மை வேற்றுமை பண்பு என்பன முதலிய தொகைகளும் ஒருமைபன்மைமயக்க வழுவமைதியும் வந்து மாட்டுறுப்பாகப் பொருளுரைத்தவாறு காண்க. ஆல் - பிரளயம். வா - வந்து. மாது - மாதர்கள். பூ - தாமரை. பூ - பொலிவு. (சக)

கூடசதுர்த்தம்.

293\. பாடலினெலாம்பதம்பொறிவரியிடைக்
கூடமுற்றதுவேகூடசதுர்த்தம்.

(எ - ன்) கூடசதுர்த்தமாமாறுணர் - ற்று.

(இ - ள்) நாலடியாய வொருசெய்யுளி னுலாம்பதம் ஏனைய மூன்று பதத்தையு மேனின்று கீழுங் கீழ்நின்று மேலுமாக எழுதிமுடித்த வரி மூன்றி னிடைவரியின் மறைந்துநிற்பது கூடசதுர்த்தமா மென்றவாறு.

நாதாமானதாதூயதாருளா
ணீதாணுவாசீராமனுமனு
போதாசீமானுதாவிராமா
தாதாதாணீவாமனுசீதாா. (799)

இது கூடசதுர்த்தம். இதனை யவ்வா றெழுதிக் கண்டுகொள்க.

(இ - ள்) நாதா மானதா - சுவாமியே! என்மனத்திலுள்ளானே! தூயதாருளா ணீதா ணு வா - பவித்திரம்பொருந்தின தாமரையிலுள்ளா ளாக, நீயாக என்னுடைய நாவிலேவந் துறைவீராக. அதுவுமன்றி, சீராமனுமனு - சக்கவர்த்திதிருமகனாகிய மன்னனே! சீமான் - அழகுடையவனே! ஆதாவிராமா - சகலரும்விரும்பு மிராமனே! வாமனு சீதா போதா - போதத்திலுள்ளானே! வாமனனே! சீதானே! தாதா தாணீ - உனது திருவடிகளைத் தருவாயாக வென்றவாறு. துறை-இரண்டுங் கடவுள்வாழ்த்து. (௪௨)

கோமூத்திரி.

294. கோமூத்திரநடைபெறல்கோமூத்திரி.

(எ - ன்) வைத்தமுறையானே கோமூத்திரியாமா றுணர் - ற்று.

(இ - ள்) நடைபெறுஞ் சேவினதுமூத்திரவொழுக்கம்போன்று நடப்பி னது கோமூத்திரியா மென்றவாறு.

அஃதாவது ஒருசெய்யுளை இரண்டுவரியாக வெழுதி மேலுங் கீழு மொன்றிடைவிட்டு வாசிக்கவு மச்செய்யுளாய் நடத்தல்.

மாயாமாயாநாதாமாவா
வேயாநாதாகோதாவேதா
காயாகாயாபோதாகாவா
பாயாமீதாபேதாபேதா. (800)

இது கோமூத்திரி. இதனை யவ்வாறெழுதிக் கண்டுகொள்க.

(இ - ள்) மாயாமாயா - அழியாத மாயையையுடையவனே! நாதா - சுவாமியே! மாவா - திருமகளையுடையவனே! வேயாநாதா - வேய்ங்குழலிலுண்டாக்கும் கானத்தையுடையவனே! கோதாவேதா - பசுவைக் காத்தளித்த வேதசொரூபனே! காயாகாயா - காயாம்பூப் போலுந் திருமேனியையுடையவனே! போதா - ஞானத்தையுடையவனே! பேதாபேதா - பேதமும் அபேதமுமானவனே! பாயாமீதா - பரந்த பிரளயத்தின்மேலானவனே! காவா - என்னைக் காக்க வருவாயாக வென்றவாறு. பா - கலிவிருத்தம். துறை - கடவுள்வாழ்த்து. (சங)

சுழிகுளம்.

295. தெழித்தெழுநீர்குளத்தினுட்செறிந்ததைக்கொடு
சுழித்தடங்குவபோன்றடங்குதல்சுழிகுளம்.

(எ - ன்) சுழிகுளமாமா றுணர் - ற்று.

(இ - ள்) ஆரவாரித்தெழாநின்ற புனல் குளத்தினுட் டனதிடத் தடைந்ததியாதொன் றதனைக் கைக்கொண்டு சுற்றி யுள்ளேயடங்குவது போலச் சுற்றிப் பாவினகத்துப் பொருளைக்கொண்டடங்குதல் சுழிகுளமா மென்றவாறு.

சதிதகனடனுட
திதகிதிகாண்ஞாஞ
தகிதாகார்கண்ட
கதிகாகிளர்கான. (801)

இது சுழிகுளம். இஃ தவ்வாறுத லெழுதிக் கண்டுகொள்க.

(இ - ள்) தாளவொத்துக்குப்பொருந்தக் கூத்தாடாநின்றவனே! உண்மையான காவற்றொழிலை யுனதாகக் கைக்கொண்டவனே! தயிரைத் தாகித்துண்ட கண்டத்தையுடையவனே! கிளர்ந்தகானத்தையுடையவனே! நீயே கதி, காப்பாயாக வென்றவாறு. பா - வஞ்சித்துறை. துறை - இதுவுமது. (சச)

திரிபங்கி.

296. தனியொருபாவாய்நடந்தது தானே
தனிதனிமூன்றுஞ்சால்புறுபொருண்மையிற்
பகுப்பநிற்பது திரிபங்கியதாகும்.

(எ - ன்) திரிபங்கியாமா றுணர் - ற்று.

(இ - ள்) முதலே மிக்கதொருபாவாய்நடந்தவது தானே பின்னர்க் குறைவுடைத்தாய் மூன்றுபாவா மொழுக்கமுறும்படி பொருளினது தன்மையிற் பகுத்துக்காட்டநிற்பது திரிபங்கியென்பதா மென்றவாறு.

வாரிதிபார்மன்மதன்பூசல்பார்வெய்யமாமதிபா
ரூரலர்பாரன்னையிங்கேசல்பாருய்யுமாறிலைபார்
சோர்குழல்பார்பொன்னிறஞ்சேர்தல்பார் துய்யமான்மயல்பார்
நாரணனேதென்னரங்கேசனேதெய்வநாயகனே. (802)

இது திரிபங்கி. இதனை மூன்றாகப் பகுத்த பா வருமாறு:—

வாரிதிபார்	மன்மதன்பூசல்பார்	வெய்யமாமதிபார்
ஊரலர்பார்	அன்னையிங்கேசல்பார்	உய்யுமாறிலைபார்
சோர்குழல்பார்	பொன்னிறஞ்சேர்தல்பார்	துய்யமான்மயல்பார்
நாரணனே. (க)	தென்னரங்கேசனே. (உ)	தெய்வநாயகனே. (ங)

எழுகூற்றிருக்கை.

297\. ஒன்றுமுதலாவோரேழீறாச்
சென்றவெண்ணீரேழ்நிலந்தொறுந்திரிதா
வெண்ணுவதொன்றாமெழுகூற்றிருக்கை.

(எ - ன்) இறுதிநின்ற வெழுகூற்றிருக்கையாமா றுணர் - ற்று.

(இ - ள்) செய்யுளகத்தெண்ணப்பட்ட ஒன்றென்னுமெண் ணொன்றுமுதலாக வோரேழீறாக நிகழ்ந்த வெண்களைப் பதினாலுநிலந் தொறு மீளவெண்ணுவதொன்றாகு மெழுகூற்றிருக்கை யென்றவாறு. செய்யுளகத்தென்பது சொல்லெச்சம். (௪௬)

298\. அவைதாம்,
இரதபெந்தத்தினிலிடையறையிரண்டாய்ச்
சரதமதுறநடைசார்தருபான்மையி
னொன்றுபன்னொன்காயொருபன்னிரண்டாய்
நின்றயலேனவுநிலந்தொறுமுபயம்
குன்றுவதாய்த்தொகைகூடியொன்றிலிறும்.

(எ - ன்) இதுவு மதற்கோர் சிறப்புவிதி கூறுகின்றது.

(இ-ள்) அங்ஙன மெண்ணப்படு மெண்கடா மிரதத்திற் பெந்திக்கு மிடத்துமையத்திற்பத்தி யிரண்டுபத்தியாய்க்கீறி வலமே யிடமே நடத்தலைத்தரும்பகுதியில் மையத்திலொன்று பன்னொன்றாகவு மதனயலிரு பத்தியி லிரண்டும் பன்னிரண்டாகவும் ஒழிந்த மூன்றுமுதலிய வெண்ணும் பத்திதோறு மிரண்டுகுறைந் தேழென்னுந்தொகைபொருந்தி முதலேநின்ற வொன்றில்வந்து முடியு மென்றவாறு.

அயலென்பதனை முன்னும் பின்னுங் கூட்டுக. இரதபெந்தம் — தேரிலே எழுதிக் கூட்டுதல். (௪௭)

299. இரட்டுறமொழிதலோ டீறுதிரிந்தெண்
டிரட்டவும்பெறாஉந்தெரியுங்காலை.

(எ-ன்) இதுவு மவ்வெண்ணிற் கோர் ஒழிபுகூறுகின்றது. இரட்டுறல் - சிலேடை. ஈறுதிரிதல் - ஈற்றெழுத்து வேறொன்றாதல்.

ஓருதனித்திகிரியினிருவிசும்பொழுக்கத்
தொருஞான்றொருபகலொடியாவுழப்பிற்
பதமிரண்டுமிலாப்பாகுடையூர்தியின்
மூந்நீர்வரைப்பினிருபால்வியப்பா
னொருபிணர்த்தடக்கையொன்றியவிருகவுண்
மும்மதநால்வாய்க்கரியுரிமுக்கட்
செம்மலினிருகணுமிமையாத்தேவர்க
ளொருபேழ்தகலாதொருவழிப்படநின்
றிருகையுங்கூப்பிமுப்போதினுமிறைஞ்சு
நான்முகமுதல்வனினைசைஇயநல்கு
ணைமந்தருநீழலினறமுதனான்கினுண
முந்தியமுப்பான்முழுநலமெதிர்கொள
ளிருமருங்கினுமின்றொருமருங்காம்பையு
ரொருதிறத்திருபதாடீஇநின்றொழுகு
மும்மூரசாணுமூன்றிவினிரட்டத்
தெம்மூரண்முருக்கித்திசையவைநான்கினு
மைம்பொறியதனகத்தாறைந்தவித்துச்
செம்பொருளுண்மறைதெற்றெனத்தேர்ந்து
மூக்கோற்புதவர்முறைமுறைபிறழா

விருவினையொருங்குவென்றிறைநிலையிஃதென
வொருதலைபற்றினரிருமையுமுணர்ந்தோர்
முக்குணமவற்றுண்முற்குணனமைந்தவருட
னுலாங்கடவுள்வீற்றிருக்குநற்றிசைவரு
மிளங்கதிரகிலத்தின்னுயிரஞ்ச
வாழ்நாளறுதியில்வௌவுதற்கமைத்த
நமன்றிசையெழுதிறனிறும்பூதென்ன
வறுகாலஞ்சிறையளிக்குலநான்குளர்
முருகவிழ்நறுந்தார்முந்நூன்மார்பத்
திருபிறப்பாளரோரிடத்தெதிருபு
நலங்கிளரொருதனிமுதலெனநாடிப்
பொலங்கழலிரண்டையும்புலனுறுமேதகு
முப்பொறிகளினுன்முயற்சியிற்போற்றலு
நாற்பொருள்பயக்கநற்கனிவாயினைத்திறந்
தேற்புடைச்செய்யுளைந்தினுக்கிலக்கணமென
வாறறியந்தணருமறைப்பொருளா
லெழுகடற்புவனத்தெழுந்திறைவெளிவா
வறுசுவையினுளதிமதுரமுக்கியச்சுவை
யுறுபொருளைந்துடனுயர்தமிழ்மொழியா
னல்வகைப்பனுவன்மூவுலகமுமளந்தவ
னிருசெவிக்கமுதாமெனவினிதளித்த
வொருபேராண்மையினுயிர்கடாமனைத்தும்
பிறந்திறந்துழலுமப்பெரும்பிணிதவிர்த்தருள்
ஞானபூரணசுகோதயநாவீற
மானபூடணகுருகாபுரிவரோதய
மறுசமயத்தவர்மத்தமால்யானையைத்
தெறுமொருசிங்கமாந்திருப்பெரும்பூதூர்
வருமெதிராசனைமனமகிழ்ந்தாண்ட
விருசரணம்புயத்தென்னையுமொன்று
மருள்புரிந்தாண்டதற்காதிக்காலத்
திம்மாநிலத்தென்பொருட்டாற்
கைம்மாறிவணீகைக்கொண்டதுவே. (303)

இஃது, ஏழுகூற்றிருக்கை.

(இ - ள்) (முந்நீர்.........வியப்பான்) சமுத்திரத்தையெல்லையாக வுடையநிலத்தின்கண் ணுயர்திணையிடத் தாண் பெண் ணென்னு மிரண்டு பாலு மதிக்கும்படிக்கு (இருவிசும்பொழுக்கத்து) பெருமையையுடைய ஆகாசவீதியினிடத்து (ஒருஞான்று..........வழிப்பின்) ஒருநாளின் கண் ணொருகணப்பொழுது மொழிவில்லாத முயற்சியோடும் (ஒருதனி ....யூர்தியின்) ஒன்றென்னப்பட்ட ஒப்பற்றவுருளோடு தாளிரண்டு மில்லாதபாகனையுடைய தேரின்மீதே (ஒருபிணர்..........செம்மலின்) ஒன்றாய சற்சரைவடிவினையுடைய பெரிய கையினையும், பெருகாது சிறு காது தம்மி லொத்த புழையொடுகூடிய விரண்டு கரடத்தினையும், மூன்று மதத்தினையும், நான்ற வாயினையு முடைய யானையை யுரிக்கு முருத் திரனைப்போலச் சிவந்து, (இருகணுமிமையாத்தேவர்கள்.............. நாலாங்கடவுள்வீற்றிருக்கும் நற்றிசைவரு மிளங்கதிர்) இரண்டுநயனமு மிமையாத வானோ ரொருகாலமும் விட்டுநீங்காது திரிவிதகரணங்களு மாத்மஞானத்துடனொருநெறிப்பட விரண்டுகரங்களையுங்குவித்து மூன்று பொழுதுந் தலைவணக்கஞ்செய்ய, நான்குமுகங்களையுடைய பிரமனைப் போல விரும்பியதெல்லாங்கொடுக்கு மைந்துவிருக்கமாகிய கற்பகாடவி நீழலிலே அறமுதலாய நாலுபொருள்களுள் முன்னேநின்ற மூன்றுபாலுந் தம்மாலாய பெரியவின்பத்தைக் கைக்கொள்வாயாகவென் றெதிர்கொண்டு நிற்ப, விரண்டுபக்கமு மின்போன்றதொரு மருங்குலையுடைய வானவர் மகளிர் தாளமுங் கானமும் வாச்சியமு மபிநயமு மொருகூறுபாடெய்த விரண்டுபதங்களினாலு நாடகத்தைநடித் தொழுகாநிற்ப, நாலுதிக்கிலு முள்ள சத்துருக்கள்மாறுபாட்டைக்கெடுத்து மூன்றுமுரசமும் நீங்கா மன் மூன்றிலின்கண் ணாரவாரிப்ப, செவியாதிய பொறியைந்தினுந் தங்கப்பட்ட சத்தாதிக ளைந்தினையு மடக்கி யுண்மைப்பொருளைக்கூறு நாலுவேதத்தினையுந் தெளியுவாராய்ந்த முக்கோற்பகவராகி யெடுத்தசெ னனந்தோறு மிழைத்தமுறையே யடைவுதப்பாமல்வரு நல்வினை தீவினை யென்னு மிரண்டையு மொக்கவென்று பரத்துவ மொருபெருங்குணவிபூதி களினிலைமை யித்தன்மைத்தென நிச்சயமாகவுட்கொண்டோ ரிம்மை மறுமை யிரண்டுந் தெளிந்தோர் சாத்துவிக ராசத தாமதமென்னுங் குண மூன்றனுள் முதற்குணங் குடிகொண்டோராகிய எதிகளுடனாற்பெருங் கடவுளென்னும் இந்திர னொரு பாக்கற வீற்றிருக்குங் கிழக்கென்னு நல்லதிக்கினி லுதிக்கு மிளஞாயிறு, உலகின்கண்ணுள்ள இனியவுயிர்க்கு

ளஞ்சுவதாக அவரவர்வாழ்நாளற்றஅந்தியத்தி லுயிரை யுண்ணும்படிக்கு விதித்த நமன்றிக்கி லெழுந்த கூறுபாடு ஆச்சரியமென்று, நினது திருமேனியிற் சுடர்ச்சோதியைக்கண் டுட்கொண் டதுவிளங்கும்படிக் குத்தரகங்கையினின்றும் ஆறுதாரையு மழகியசிறையையு முடைய வண்டின் சாதிநான்குங் குடையத் தேனைபொழுக்கு நறுவிதாங் தாமரைத்தாரும் முப்புரிநூலுங் கிடக்கு மார்பினையுடைய இருபிறப்பாளனாகிய மதுரகவி, யொருதானத் தெதிர்ந்து, பேரானந்தந் தழையாநின்ற மூவரா மொருதனி முதலாகிய ஸ்ரீமந்நாராயணனென ஞானத்தா லுட்கொண்டு, பொன்னாற் செய்த வீரக்கழலையுடைய நினது திருவடிகளிரண்டையுங் கட்புலனுறவும் பெருமையெய்திய மனோவாக்குக்காயங்களின்முயற்சியாற் போற்றலும், அறமுதலிய நான்குபொருளும் பயப்பதாக நல்ல கனிபோன்ற திருப்பவளத்தினைத் திறந்து, வெண்பா ஆசிரியம் கலி வஞ்சி மருட்பாவெனப் பெயர்பொருந்துத லுடைய யாப்பைந்தினுக்கு மிலக்கண மென்று சொல்வதாக, ஆறங்கத்தையுந் தெளிந்த வந்தணர்க்குரியவா யறிதற்கரியவா நால்வேதப்பொருளினாற் பரமபதநாதனாகிய இறை கருடவாகனத் தேறி யெழுகடலுஞ்சூழ்ந்த பூலோகத்தில் வெளிவரும்படிக்குச் சுவையாறனுள்ளு மதிமதுரமென்னு முக்கியச்சுவை மிகுவதாக, ஐந்துபொருளொடுங்கூடிய தமிழ்மொழியால், திருவிருத்தம் திருவாசிரியம் திருவந்தாதி திருவாய்மொழி யென்னு நான்குகூறுபாடுடைய நாலுபிரபந்தங்களையு முலகமூன்றுமளந்த வவன் றிருச்செவிகட்கு அமிர்தமென்று சொல்லும்படி யினிமையெய்தவூட்டிய வொப்பற்ற வரியசெயலொடு முலகின்கண்ணுள்ளவுயிர்கள் யாவும் பிறந் திறந் தலம்வரு பிறப்பாகிய பெரியபிணியைத் தீர்த்துக் கிருபைசெய்த ஞானபூரணனே! ஆனந்தத்திற்குப் பிறப்பிடமானவனே! நாவீறுடையானே! அபிமானபூஷணனே! குருகைமாநகரிடத்துதித்த பலவரங்களு முதயமானவனே! பாசமயிகளான மதயானைத்திரளை வெல்லும் ஒருசிங்கமான திருப்பெரும்பூதூரடிகளாகிய வெதிராசனைத் திருவுளமகிழ்ந் தினிதாகவாண்ட இரண்டென்னுஞ் சரணதாமரையால் அறிவில்லாத என்னையும் ஒருபொருளாகக் கருணைபுரிந் தடிமைகொண்டதற் கிந்தப் பெரியநிலத்து முற்காலத் தெனது வேதுவாக நீ கைக்கொண்ட கைம்மா றியாதென்று சொல்லுவாயாக வென்றவாறு.

இதனுள ஒருபகலென்றது கணப்பொழுதை; "ஒருபகலுள்ளே யுருப்பவிர்" என்பதனு லறிக. ஒடியா வுழப்பு-ஒழிவில்லா முயற்சி. பாகன் பாகுடையென அன்விகுதி கெட்டது. பிணர் - சற்சனைவடிவு. செம்மல் - பெரியோன். இன் உவமவுருபு. நசைஇய - விரும்பப்பட்டன. முழுநலம் - பேரானந்தம். தெற்றென - தெளிய. பிறழாது - மாருடாது. ஒருங்கு - ஒக்க. ஒருதலை - நிச்சயம். இருமை - இம்மை மறுமை. முற்குணம் - சாத்துவிககுணம். நாலாங்கடவுள் - இந்திரன். அமைத்த - விதித்த. இறும்பூது - ஆச்சரியம். உளர்தல் - குடைதல். அவிழ்த்தல் - ஒழுக்குதல். நலம் - ஆனந்தம். நாற்பொருள் - அறம் பொருள் இன்பம் வீடு. உறுபொருளோங்குடன் என்பது "மிக்க விறைநிலையு மெய்யா முயிர்நிலையுந், தக்க நெறியுந் தடையாகித் - தொக்கியலு, மூழ்வினையும் வாழ்வினையும்" என்னும் பொருளோங்குடன் என்றவாறு. பேராண்மை - அரியசெயல். பொருட்டு - ஏது. கைம்மாறு - உபகாரங்கொண்டு உபகாரஞ்செய்கை. எவன் - யாதென்றவாறு.

முந்நீர்வரைப்பி னிருபால்வியப்பா னிருவிசும்பொழுக்கத்து ஒரு தனித்திகிரிப் பதமிரண்டிலாப் பாகுடையூர்தியின் முக்கட்செம்மலி னுலாங்கடவுள்வீற்றிருக்கு நற்றிசைவரு மிளங்கதிர், நமன்றிசையெழு திற னிறும்பூதென்ன, விருபிறப்பாளனேரிடத்தெதிருபு முதலெனநாடிப் போற்றலுங் கனிவாயினேத்திறந் தருமறைப்பொருளா லெழுகடற்புவனத் தெழுந்திறைவெளிவர வுறுபொருளோங்குட னுயர்தமிழ்மொழியா னல் வகைப்பனுவல் மூவுலகமுமளந்தவனிருசெவிக் கமிர் தா மென வினி தளித்த பேராண்மையி னுயிர்கடாம் பிறந்திறந்துழலும் பிணிதவிர்த் தருள் ஞானபூரண! நாவீற! குருகாபுரிவரோதய! எதிராசனையாண்ட விருசாணும்புயத் தென்னையு மொன்ரு யருள்புரிந்தாண்டதற் கென் பொருட்டாற் கைம்மா றெவனீ கைக்கொண்டதுவே எனக் கூட்டுக.

பஞ்சாயுதங்களெனப்பாற்கடலான்பற்றியவைக்
கெஞ்சாதசாதிப்பேரிட்டெழுத—நெஞ்சே
கணக்காயர்புள்ளியிட்டகாலத்தேயோகம்
பிணக்காதவர்பேர்பெறும். (804)

இது மாத்திரைச்சுருக்கம்.

திலகநுதலாய்திலங்குறியென்னேவ
லலகெண்பொருட்பதத்திற்கஃதி—நிலவெழுத்தின்
புள்ளிபிரித்தாற்பொருணிலைமைத்தாமென்பார்
தெள்ளியநூல்கற்றோர்தெளிந்து. (805)

இது மாத்திரைப்பெருக்கம்.

இவற்றுள் (முன்னையது) * மாத்திரைச்சுருக்கமென்பது, ஒரு பொருள்பயந்து நிற்கு மொருசொல்லாயினும் பலபொருள்பயந்து நிற்குந் தொடர்ச்சொல்லாயினு முதலெழுத் தொருமாத்திரைகுறையப் பிறி தொருபொருள்பயப்பதாயும் பலபொருள்பயப்பதாயும் பாடுவது. அவ்வாறு அதனுள் வந்ததாவது: ஆயுதங்களுக்குச் சாதிப்பேர் எதிகள். அவற்றை எதிகளெனப் புள்ளியிட்டு, மாத்திரைகுறைய இருடிகள் பெயராய் எதிகளென நின்றவாறு காண்க.

மாத்திரைப்பெருக்கமாவது முன்புபோலவருஞ்சொற்களுள் முதலெழுத் தொருமாத்திரையேறப் பிறிதுபொருள் பயப்பது. அவ்வாறு இதனுள்வந்ததாவது:—எண்ணென்பது எள்ளும், இதனைக் கருதெண்

* உம்மையான் விதந்தோதிய மாத்திரைச்சுருக்க முதலிய ஆறுக்கும் இந்நூன் மூலப்பிரதியொன்றின்மட்டும் மூலசூத்திரங்கள் காணப்படுகின்றன. அவையாவன:—

"மாத்திரைசுருங்கமறுபொருளுணர்த்துவை
மாத்திரைச்சுருக்கமெனவகுத்தனரே" (௪௯)

"மாத்திரைபெருகமறுபொருளுணர்த்துவை
மாத்திரைப்பெருக்கமெனவகுத்தனரே" (௫௦)

"ஒற்றினைப்பிரிக்கமற்றொருபொருளுணர்த்துத
லொற்றுப்பெயர்த்தலென்றுரையுணர்த்தும்" (௫௧)

"மூன்றெழுத்தொருமொழிமுதலீறிடையீ
ரூன்றபொருள்பிறவாந்திரிபதாதி" (௫௨)

"சதுரங்கவறையிற்சதிர்பெறவமைப்பது
சதுரங்கபெந்தமென்றறைதருந்தன்மைய" (௫௩)

"பெருவகன்றறையிற்பெந்திப்பதுவுங்
கருதுகிற்கடகபெந்தமாகும்" (௫௪)

என்பனவாம்.

னும் ஏவற்பொருளும், கணிதமும் என்னும் மூன்றுபொருள்பயக்கும் பதத்தின் முதலெழுத்தாய எகரத்தை யொருமாத்திரைபெருக்க ஏண் என்ன நிலையுடைமைப்பொருளைக் காட்டினவாறு காண்க.

> மூன்று தனித்தன்மைமொழியையொடுபுணர்ந்திட்
> டந்தமுதல்புள்ளியழிந்தக்கால்—செந்தேன்
> வழிந்தமகிழ்த்தார்மாறன்வண்புலவீர்சொல்லி
> யொழிந்தவற்றின்பேராயுறும். (806)

இதுவும் மாத்திரைப்பெருக்கம்.

இதனுள், தனித்தன்மையென்பது யான். அதனை என் எனத் திரித்து, அதனை யிரண்டாவதனைப் புணர்த்து, எனையென்றாக்கிப் புள்ளியை யழிக்க ஏனையெனச் சொல்லியொழிந்தனவாயபொருளைக் காட்டினவாறு காண்க. திணை......துறை............

> ஓராழிவையத்து தயம்புரிந்து தினம்
> போராவிருடுணிக்கும்பெற்றியா—றீராறு
> தேசுற்றநாமஞ்சிறந்தோர்பரிதியொடு
> மாசற்றெழுமாதவர். (807)

இஃது ஒற்றுப்பெயர்த்தல்.

இதனுள், மாதவர் என்றுநின்றது மகரவொற்றைப் பெயர்க்க ஆதவர் என நின்றவாறு காண்க. முதலேநின்றமொழியின்முதலெழுத்தி லொற்றைப்பெயர்த்தலால் ஒற்றுப்பெயர்த்தலாயிற்று. இதனுள் ஓராழி வையம் - ஒப்பற்ற சமுத்திரஞ் சூழ்ந்த பூமி எனவும், ஒற்றைவண்டி பூண்ட தேர் எனவும், போராவிருடுணித்தல் - தன்னைநினைந்த அடியாரிடத்து எடுத்தசெனனந்தோறும்விட்டுநீங்காத அகவிருளையறுத்தல் எனவும், உலகத்தைவிட்டுநீங்காத அந்தகாரத்தையோட்டுதல் எனவும், ஈராறுநாமம் - கேசவாதி துவாதசநாமம் எனவும், தாதுருமுதலிய துவாதசாதித்தியநாமமெனவும், பரிதியொடும்-சக்கரத்தோடும் எனவும் விளக்கத்தோடும் எனவும், மாசற்று ஆசற்று எனவும் சிலேடைவாய் பாட்டான் வந்தன. திணை.........துறை.........

> முந்தமாயன்பதியாய்முற்றியபேர்மூன்றெழுத்தில்
> வந்தமுதலீறிசையாய்மற்றிடையீ—றந்தச்

சுதரிசனத்தான்றுணைத்தாள்சூழ்சிலம்புள்ளீடாய்
வதரிவரிதரியாமாம். (808)

இது திரிபதாதி. இதனுள் வதரியென்பது திருப்பதி. அதனை முதலு மீறும் வரியாக்கி இடையு மீறுந் தரியாக்கி அவ்வாறுதல் கண்டுகொள்க.

எந்தையிராமற்கிமையோர்சரண்புகுத
முந்தநகரிமுதலெழுத்தில்லாநகரி
யுந்துதிரட்கிள்ளையிடையொற்றிலாக்கிள்ளைகடேர்
சிந்தமுழுதுமிழந்தான்றெசமுகனே. (809)

இஃது அக்கரச்சுதகத்தி லோர்பேதம்.

மானவனுமேவலாமாறனித்தமாமாலை
யானதவபோதனுமாயாய்ந்தகோ—மானவடி
நாதனின்மேனன்கலன்பூணென்முனைநீவந்தெதவனென்
றுதயமாவன்புலமாய. (810)

இது சதுரங்கபேந்தம். இதனுள் நாலுபக்கமும் மையங்களினுனன்கு பதினறைறையிலும் நடுவிலுலறையிலும் மாதவன் என்னுந் திருநாமம் நின்றவாறு கண்டுகொள்க.

(இ-ள்) ஒன்றுதயமா - சருவான்மாக்களோடும் பொருந்தாத நமனே! மானவனு - மனுகுலங்காவலனுக. மேவலாமாறன் - நங்கையார்க்கும் காரியார்க்கும் புத்திரமோகந்தீரப் புத்திரனும் மாறனென்னும் பிள்ளைத்திருநாமத்தையுடையவன். நித்தமாமாலை - அழிவில்லாத பெரிய பிராட்டியாருடன்கூடிய பெரியோனை. ஆன - தன்னிடத் தாக்கம்பெற்ற. தவபோதனுமா - மெய்த்தவத்தினுடுங்கூடி ஞானவானுமாகி. ஆய்ந்தகோ-அவனேபரத்துவமென்றுதெளிந்த தெரிசனராசன். மானவடி - பெருமையையுடைய திருவடிகளை. நாதனின்மேல் - எனது நாவினிடத்தும் அதற்குமேலான சிரத்தினிடத்தும். நன்கலன்பூண் - நல்ல ஆபரணமாகப் பூண்ட. என்முனைநீவந்தெவன் - என்முன்னேவந்து நீ சாதிப்பதெதுதான்? ஒன்றுமில்லை. வன்புலமாய - என்னிடம் நீவருதற்கெளிய இடமன்று, வலியஇடமாகப்பட்டன; ஆதலா லுனக்கு வரப்போகா

தென்றறிந்துகொள் என்றவாறு. மேல்-இடம்பற்றிய ஆகுபெயர். திணை-வாகை. துறை - அறிவன்வாகை.

கோலநிலமேலழகுகூடுநெடுவீடுறமா
மூலமெனச்சென்றுதவுமுன்னோனே—நீலமணி
வண்ணாவடமலையாமாதவாகஞ்சமலர்க்
கண்ணாசரணாகதி. (811)

இது கடகபெந்தம். நெடுவீடு-பரமபதம். திணை-பாடாண். துறை-கடவுள்வணக்கம்.

நாகநகராகநிதிநாகரிகாரகநிறை
யேகநகராகியிணையில்லா—தாகநிகழ்
தென்னரங்கனாளாயசீராளராஞான
நன்னரங்கர்க்கேயடியேனான். (812)

இதுவும் கடகபெந்தம். ஆக மாத்திரைச்சுருக்கமுதற் கடகபெந்தமீறாகச் சித்திரகவி யாறு மடைடவே காண்க. திணை - .... துறை - சமயவணக்கம். (சஅ)

சித்திரகவிமுற்றும்.

சொல்லணியியலுரை முற்றும்.

தருகாளமேகங்கவிராயராயன்சடையனன்பாற்
குருகாபுரேசர்புனையலங்காரக்குவலயத்தே
கருகாதசெஞ்சொலுரைவிரித்தான்கற்பகாடவிபோல்
வருகாரிரத்னகவிராயன்பேரைவரோதயனே.

நான்காவது

எச்சவியலுரை.

300. மொழிந்ததைமொழிதன்மாறுபடுபொருண்மொழி
பிரிபொருட்சொற்றொடர்கவர்படுபொருண்மொழி
*நிரனிரைவழுவேயதிவழுச்சொல்வழுச்
சந்திவழுவொடுசெய்யுள்வழுவென
வந்தவொன்பதுமொருவழிக்கடிவழுவே.

என்பது சூத்திரம். இவ்வோத் தென்னபெயர்த்தோவெனின் எஞ்சி நின்ற வழுவணி யுணர்த்தினமையான் எச்சவியலென்னும் பெயர்த்து. ஆயி னித் தலைச்சூத்திர மென்னுதலிற்றோவெனின் முன்னரோதப்பட்ட வணிபெறுஞ்செய்யுள்கட்குப் பொருந்தாத வழுக்களு ளொருவழிக் கடியப்பட்ட வழுக்களைத் தொகுத்துணர்-ற்று.

(இ-ள்) மொழிந்ததைமொழிதன்முதலாகச் செய்யுள்வழுவீறாகச் சொல்லப்பட்டுத் தோன்றதொட்டுவந்த வொன்பதுஞ் செய்யுளகத்துவருமெனி லோரிடங்களிற் களையப்பட்ட வழுவா மென்றவாறு.

வழி - இடம். ஓரிடங்களிற் களையப்படுமெனவே சிலவிடங்களில் வழுவமைதியாகக் களையப்படாதென்பதூஉ மாயிற்று. அவையெல்லாம் மேற்காட்டுதும். (க)

301. அவற்றுள்,
பழியறவொருபொருண்மொழிபரியாய
மொழியொடுதொடர்வதுமொழிந்ததைமொழிதல்.

(எ-ன்) வைத்தமுறையானே மொழிந்ததைமொழிதலென்னும் வழுவாமா றுணர்-ற்று.

(இ-ள்) அங்ஙனந் தொகுத்துக்கூறப்பட்ட வொன்பதுள், மொழிந்ததைமொழிதலென்னும்வழு ஒருபொருளைக்காட்டு நிலைமொழி யப்பொருளைக்காட்டும் பரியாயமொழியொடுதொடர்வதா மென்றவாறு.

---

* 309-ம் சூத்திரத்திலும், நிரனிறையென இடையின ரகரவைகார ஈருணை பாடங்கொண்டு நிரை - கூட்டமென வுரையெழுதப்பட்டிருக்கிறது.

உடுத்தாரகைபோன்றொளிர்மலர்ப்புன்னைகத்
தடுத்தாள்விழிகடுத்தானன்பா—நடுத்தா
னிலையென்பதாகுமிணைமேருவாகு
முலையென்பனதேமொழி. (813)

இது மொழிந்ததைமொழிதல்.

இதனுள், உடுத்தாரகைபோன்றொளிர்மலர் என்றதனை லவ்வா றுதல் காண்க. நடு - இடை. தேம் - தேன். அஃதேற் சொற்பின்வருநிலையும் பொருட்பின்வருநிலையும் சொற்பொருட்பின்வருநிலையு மவ்வாறல்லவோவெனின் அற்றன்று, அவற்றிற்குப் பொருள் வேறென்க. என்னையெனின், சொற்பின்வருநிலையென்பது மொழிந்தசொல்லே வரினும் பொருள் வேறுபடும். அது "மானைப் பொருகயற்கண் மானைப் புவனமட, மானைக் கமல மலர்மானை - மானை" என்பதனை லறிக. பொருட்பின்வருநிலையென்பது மொழிந்தபொருளேமொழியினும் சொல் வேறுபடப் பொரு ளொன்றுவதோ ரலங்காரம். அது "மாய்த்தேன் செனனம் வதைத்தேனென் வல்வினையைத், தேய்த்தே னறிவின் சிறுமையினை" என்பன. சொற்பொருட்பின்வருநிலையென்பது சொல்லும் பொருளும் பெயர்த்து வேறுவேறாகிச் சொல்லொன்றாய் வருவது. அது "மாதர் மாதர்கூர் வாளம ருண்கண்மா னிலத்து, மாதர் மாதர்கூர் வண்டிமிரளியதா மரைப்பூ, மாதர் மாதர்கூர்" என வரும். (உ)

302. அதுவே,

சிறப்பினும்விரைவினுஞ்சிதைவின்றாகும்.

(எ - ன்) இதுவும் முன்பெய்திய திகந்துபடாமற் காக்கின்றது.

(இ - ள்) அங்ஙன மொருபொருண்மேற் பலசொல்வருதல் சிறப்பின்கண்ணும் விரைவின்கண்ணும் வருமெனி லிலக்கணவழுவின்றாமென்றவாறு. என்னை "ஒருபொருட் பன்மொழி சிறப்பினின் வழாஅ" என்பதனை லறிக.

மீமிசைத்தாய்த்தோன்றுமழல்வெண்மதிவந்தாவிறைவா
யாமிசைப்பதொன்றுளதாயெய்யேமாற்—றூமிசைவாழ்
பொன்னனங்கொடிநோய்புடைபெயர்போழ்துற்றுணர்ந்த
நின்னன்பிது வாணினைந்து. (814)

இது சிறப்பின்கண் ணொருபொருட்பன்மொழி வந்தது. கள்ளர் கள்ளர் பாம்புபாம்பு தீத்தீத்தீ போபோபோ விரைவின்கண் இரண்டும் மூன்று மொருபொருட்கு வந்தன. என்னை? "அசைநிலை பொருணிலை யிசைநிறைக் கொருசொ, லிரண்டு மூன்றுநான் கெல்லைமுறை யடுக்கும்" என்பதனு லறிக. பொருணிலை, விரைவு வெகுளி யுவகை யச்ச மவல மென்னு மைந்துபொருண்மைக்கண்ணும் வருமெனினும் இவை விரைவு. (௩)

303. பகர்ந்தமுன்மொழிப்பொருளொடுமுரண்பான்மையிற்
புகன்றிடுமதுவேமாறுபடுபொருண்மொழி.

(எ-ன்) மாறுபடுபொருண்மொழியாமாறுணர் - ற்று.

(இ-ள்) முன்னர்மொழிந்தமொழிப்பொருளொடு மதன்பின்னர் வருமொழிப்பொருள் மாறுபடுபகுதியையுடைத்தாகக் கூறுமது மாறுபடு பொருண்மொழியா மென்றவாறு. பின்னர்வரு மொழிப்பொருளென் பது எதிர்மறையெச்சம்.

முற்றவுரைத்தமுதுவேதநுட்பமெல்லாங்
கற்றுணர்ந்துமெய்ஞ்ஞானங்கைக்கொண்டீர்—தெற்றெனவே
தத்துவங்கண்மூன்றினையுஞ்சந்தயந்தீரீரினிமே
னித்தமநித்தந்தெளியீர்நீர். (815)

இது மாறுபடுபொருண்மொழி. என்னை? இதனுள், 'முதுவேத நுட்பமெல்லாங் கற்றுணர்ந்து மெய்ஞ்ஞானங் கைக்கொண்டீர்' என்று கூறி, 'தெற்றெனவே தத்துவங்கண்மூன்றினையுஞ் சந்தயந்தீரீர்' என்றத னுன் மாறுபடுபொருண்மொழியாயிற்று. தெற்றென - தெளிய. தத்து வங்கண்மூன்றென்பன - சித் தசித் தீச்சுரம். (௪)

304. அச்சமுங்காமமுமகமிகினுரித்தே.

(எ-ன்) இதுவு மெய்தியதிகந்துபடாமற் காக்கின்றது.

(இ-ள்) அச்சமகத்து மிகினுங் காம மகத்து மிகினு மவ்வா றுரைக்கப்படு மென்றவாறு. அகம் - உள்ளம். காமம் - விருப்பம்.

வாசமலர்மெல்லணைமேல்வைத்தாலுமண்டழல்போற்
கூசுமலர்ச்சிற்றடிக்குக்கொற்றவா—நேசமது

நெஞ்சத்தடங்காதநேரிழைநின்னோடுவரிற்
கஞ்சத்தடங்காண்கடம். (816)

இது காமமிகுதியான்வந்த மாறுபடுபொருண்மொழி. அச்ச மிகுதியான்வருவனவும் வந்தவழிக் கண்டுகொள்க. (ரு)

305. உரியசொற்பலபொருளொன்றினொன்றுதன
பிரிபொருட்சொற்றொடரெனும்பெயருடைத்தே.

(எ - ன்) முறையானே பிரிபொருட்சொற்றொடரெனும் வழூ வாமாறுணர் - ற்று.

(இ - ள்) செய்யுளகத்துப் புலவனுற்சேர்த்தற்குரிய பலசொற் களினது பலபொருள்களுமொன்றினோடொன்று பொருந்தாதனவாகச் சொல்லப்பட்டது பிரிபொருட்சொற்றொடரெனும் பெயரினையுடைத் தென்றவாறு.

எனவே வேறுவேறுநோக்கப் பொருளுடையனவாய்க் கூட்டிநோக்க வொருபொருளாக வுரைக்கப்படா தென்றவாறு. இதனுள் ஒன்றென் பது சொல்லெச்சம்.

கங்கைக்குக்கன்னிநெடுங்காதங்கஞ்சமலர்
மங்கைக்குமாயோன்மணவாள—னங்கைக்கு
ளெட்டாவுறுப்புடலுள்யாதுமிலைக்காமனெனப்
பட்டானிரதிபதி. (817)

இது பிரிபொருட்சொற்றொடர். இதனுள், பலசொல்லுந் தனித் தனிநோக்கப் பொருளுடைத்தாய்க் கூட்டிநோக்கப் பொருளன்றாதல் கண்டுகொள்க. (சு)

306. அதுவே,
கள்ளுண்மாந்தர்பித்தரிற்கடிவரையில.

(எ - வ்) இதுவும் முன்பெய்திய திகந்துபடாமற் காக்கின்றது.

(இ - ள்) முன்மொழிந்த பிரிபொருட்சொற்றொடர் கள்ளுண்டு களித்தமாந்தரற் கூறுமிடத்தினும் பித்தினன்மயங்கப்பட்டார் கூறு மிடத்தினும் வழுவென்றுநீக்கப்படா தென்றவாறு.

கள்ளிதனிற்பிறந்தகள்ளிற்கடுந்தேறல்
வள்ளிதனைப்பெற்றபுளிமாந்தேறல்—வெள்ளிமலை

பெற்றபதிவானோர்பெருமான்புரந்தபதி
புற்றாவின்பிள்ளைபுதன். (818)

இது கள்ளுண்டுமயங்கினான்மொழிந்தது. பித்தர் கூறுவனவும் வந்தவழிக் கண்டுகொள்க. வரையிலவென்றது கடிவரையிலவென்றதனால், பிள்ளைமையான்மொழியுங்காலு மாம். அஃதே லிக்குற்றங்களெல்லாஞ் செய்யுளுக்கிவருவனவாதலாற் செய்யுட் கிலக்கணங்கூறு நூலினுளன்றே யுணர்த்துவது ; ஈண்டுரைத்தல் பிறிதெடுத்துரைத்தலென்னுங் குற்றமாமெனின், நன்றுசொன்னாய்! அச்செய்யுளென்பன சட்டகம் அலங்காரமென இரண்டாம்; அவற்றுள் அலங்காரமென்பன அச்சட்டகத்தைப் பொலிவுசெய்வனவாமாதலாற் செய்யுட்குப் பொலிவு செய்வன வீண்டு மூற்கூறி யதன்பின்ன ரொழிபிற் செய்யுட்குப் பொலிவழிவுசெய்வன செய்யுட்குவாராமற் புணர்க்கவென வீண்டுரைக்கப்பட்டதாதலாற் பிறிதெடுத்துரைத்தலென்னுங் குற்றமாகாதென் றறிக. (எ)

307. உவர்ப்பறத்துணிந்தொருபொருள்குறித் துரைத்தசொற்
கவர்த்திருபொருட்குறல்கவர்படுபொருண்மொழி.

(எ - ன்) வைத்தமுறையானே கவர்படுபொருண்மொழியாமாறுணர் - ற்று.

(இ - ள்) ஒருபொருளைக் குற்றமறத்தெளிந் துட்கொண்டுரைத்த சொற்குப் பொருள் கவர்த்துப் பிறிதுமொருபொருளைக்காட்டுவதாகி யிரண்டுபொருளைக்காட்டுதல் கவர்படுபொருண்மொழியென்னும் வழுவா மென்றவாறு.

பற்றற்றிடுதிடத்தாற்பற்றியதேபற்றியபன்
மற்றொன் றுதன்னைமதியாதாங்—கொற்றமிகும்
வேல்விட்டெறிந்தனையவெய்யவிழிநோக்கத்தாய்
மால்விட்டுநீங்கார்மனம். (819)

இது கவர்படுபொருண்மொழி.

இதனுள், மால்விட்டுநீங்கார்மனம் என்பது ஸ்ரீமந் நாராயணன் விட்டுநீங்காதார் மனமெனவும் பித்துவிட்டுநீங்காதார் மனமெனவும் முதலே தெளிந்துகொண்டுரைத்தபொருளைக்காட்டுவதுட னிருபொருட்குக் கவர்த்தவாறு காண்க. பத்தர்மேற்சொல்லுங்காற் பற்றற்றிடுதிடத்தாலென்பது அயனரன் மண் பெண் பொன் னென்னு மாசைகளைவிட்டு

நீங்கிய வுண்மைஞானத்தால் என்பதாம். பற்றியதேபற்றி என்பது அந்தரியாமியாகநின்ற அவனது சொரூபரூபகுணவிபூதியையுட்கொண்டு அதுவே தியானமாக என்பதாம். அயல் மற்றொன்றுதன்னை மதியாதாம் என்பது அவைநாலுமேயன்றி வேறொன்றினையு முட்கொள்ளாதா மென்றவாறு. பித்தர்மேற்சொல்லுங்கால், பற்றியதேபற்றி யயன் மற்றொன்றுதன்னை மதியாதாம் என்பது சான்றோர் தெருட்டத் தெருளுறாது தான்பற்றியதேபற்றிக்கொண்டு உண்மையாக வொன்றினையும் பற்றாததாம் என நின்று கவர்த்தது காண்க. (அ)

308. வசைபொருந்தாவழிவரினது மரபே.

(எ - ன்) மேற்சொன்ன கவர்படுபொருண்மொழி வழுவல்லவாமிட முணர் - ற்று.

(இ - ள்) அக் கவர்படுபொருண்மொழி குற்றம்பொருந்தாவிடத்துப் பொதுப்படவுரைப்பின் வழுவன்று, இலக்கணமா மென்றவாறு.

> பாப்பமர்கண்ணுட்கிடும்பைபாலிக்குமென்றே
> னிரப்பிடும்பையார்க்கெதிர்சென்றீயா—நிரப்பே
> பெருநிரப்பென்கின்றாய்பெருமானேயெண்ணி
> யிருநிதிக்குப்போவேனெனல். (820)

இதனுள் எனல் என்னும் அல்லீற்றுவியங்கோள், விதியும் விலக்குமாகநின்றும் வழுவன்றாயிற்று. என்னை? யா னவ்வண்ணங்கூறவு நீயதனையுட்கொள்ளாயாகிக் கூறாநின்றாய்; நினது திருவுள்ள மதுவே யானு மிரண்டையு மனத்தாலெண்ணித் துணிந்தென்னுடனே பொருண்மேற்செல்வேனென்று கூறுதொழிவாயாக வெனவும், அதுவல்லது செல்லத்துணிந்தாயெனில் எம்பெருமானே! இறைவியோடும் நின்செலவை நீயேசென் றியான் பொருண்மேற்செல்வேனென்று கூறுவாயாகவெனவும் இரண்டாய கவர்படுபொருண்மொழி விதியினும் விலக்கினுங் குற்றமல்லவாயிற்று. பகுதி - பொருள்வயிற்பிரிதல். துறை - நின்செலவை நீயேகூறென்றல். (கூ)

309. முன்னரெண்ணிற்குமொழிமாற்றிக்கொளப்
பின்னரெண்ணிரல்பிறழ்வது நிரனிரைவழு.

(எ - ன்) வைத்தமுறையே நிரனிரைவழுவாமா றுணர் - ற்று.

(இ - ள்) செய்யுளகத்து முன்னரெண்ணப்பட்ட பெயர்வினைக ளானமுறைக்கு மொழிமாற்றிக்கொள்ளும்படிக் கதன்பின்னரெண்ணப் பட்டுவரும் பெயர்வினைகள் முறைபிறழவைக்கப்படுமேது நிரனிரைவழுவா மென்றவாறு. பெயர்வினையென்பது சொல்லெச்சம். நிரல் - முறை. நிரை - கூட்டம். பிறழ்தல் - தானமாறுடுதல்.

கலவமயில்சாபங்கழுநீர்குமுத
மிலவநுதல்சாயலிதழ்வா—யுலவுவிழி
நண்பாபொனங்கொடிதானண்ணுமிடநாவீறன்
பண்பார்துடரியிலோர்பால். (821)

என வரும். இதனுள், மயில் சாபங் கழுநீர் குமுதமென முதலே யெண்ணப்பட்ட பெயர்முறைக்குப் பின்னர் இயல் நுதல் நோக்கம் வாய் என்னாது, நுதல் சாயல் வாய் நோக்கமென முறைபிறழவைத்தமையால் நிரனிரைவழுவாயிற்று. (௧௦)

310. உய்த்துணரிடமெனி லுரிமையுடைத்தே.

(எ - ன்) அம்முறைபிறழ்ச்சி யாமாறுணர் - ற்று.

(இ - ள்) அங்ஙனஞ் சொல்லப்பட்ட முறைபிறழ்ச்சி உய்த்துக் கொண்டுணரப்படுந்தானமாகில் வழுவன்றென்றுகொள்ளு மிலக்கண முறைமையுடைத் தென்றவாறு.

அங்ஙனஞ்சொல்லப்பட்ட முறைபிறழ்ச்சியென்பது அதிகார நோக்கத்தா லெச்சமாக விரிந்தது.

மந்தன்கதிர்மழைக்கோள்வானோர்குருமேதை
யிந்துநிலமகன்பாம்பென்பவற்றுட்—பைந்தொடியாய்
தேறுமிடைநான்குந்தெரிசுபக்கோளேனையவாய்க்
கூறியவைபாவக்கோள். (822)

என வரும். இதனுள், உய்த்துணர்ந்துகொள்ளப் பிழையாமல் வைத்தவிடமாவன : மந்தன்முதலாகப் பாம்பீறாக வடைவேயெண்ணி, மழைக்கோள் வானோர்குரு மேதை யிந்து வென்னு மிடைப்பட்ட நான்குஞ் சுபக்கோளென்றும், மந்தன் கதிர் நிலமகன் பாம்பு என முத லினு மீற்றினுநின்ற நான்கும் பாவக்கோளென்று முய்த்துணரவைத்த வாறு கண்டுகொள்க. பாம்பு - சாதியேகவசனம். (௧௧)

311. நசைதீர்யதிவழுநாடுகிலோசை
யிசைதாநிகழாதிழுக்குவதாகும்.

(எ - ன்) முறையே யதிவழுவாமா றுணர்-ற்று.

(இ - ள்) விரும்பப்படாத யதிவழுவென்பதனை யாராயுங்காலத்துச் செய்யுட்கமைத்த புணர்ச்சியிசைபொருந்துவதாய்நடவாது மரபு வழுவுவதா மென்றவாறு.

பார்க்கும்பொழுது நிலம்பார்த்துப்பார்வையையா
நீக்கும்பொழுது நிலம்பாரா—நோக்கு
வடைவடைவேவந்தவவற்றுண்முதனோக்கந்
தடையறபரம்வாழ்வதற்கோர்சார்பு. (823)

இதனுள், நோக்கடைவடைவேவந்தவென்புழி நோக்குவடைவடைவே வந்த வெனச் சொற்கூடா தறுத்திசைத்து வழுவாயிற்று. (கஉ)

312. அதுவே,
வழுவின்றாமெனல்வகையுளிக்காகும்.

(எ - ன்) மேலெய்திய திகந்துபடாமற் காக்கின்றது.

(இ - ள்) அங்ஙனம் வரப்பட்ட யதிவழு வழுவில்லையென்று சொல்லப்படுவது வகையுளியாகச்சேர்த்துக்கொள்ளுமிடத்துக் குற்றமில்லையா மென்றவாறு.

வாளிவேல்சேலாமதர்நோக்கமேருமூலை
வேளினடல்விற்போன்மிளிருநுத—லாளிநிகர்
காவலவனுற்றலது காய்ந்தகனிவாய்பவளம்
யாவருணர்வுட்காதிவட்கு. (824)

இதனுள் வகையுளிசேர்த்தேகொள்ளக் குற்றமின்றாயிற்று. துறை குறிவழிச்சென்றபாங்கன் றலைவனைவியத்தல். (கங)

313. திணைமுதலாகச்செப்பியவழுவினொன்
றணைதருமாயினுமது சொல்வழுவே.

(எ - ன்) முறையே சொல்வழுவாமா றுணர் - ற்று.

(இ - ள்) திணைமுதலாகச் சொல்லப்பட்ட சொல்வழுவேழினுள், பலவேயன்றி யொருவழுச் செய்யுளகத்துப்பொருந்துமாயினு மது சொல்வழுவா மென்றவாறு.

அருட்குணத்துக்கூடாதென்றாய்ந்துரைத்தபின்னும்
பொருட்ககல்வலென்றேபுகன்றீர்—மருட்கைமிகுங்
கொன்னுனைவேல்போன்றவிழிக்கோதைபொருட்டாற்குறித்திங்
கென்னுனையான்சொல்வேனினி. (825)

இதனுள், புகன்றீரென்ற வுபசாரப்பன்மைக் கென்னுமையான் சொல்வே னென்றாது என்னுனையான்சொல்வே னென்றதனாற் பால் வழுவாயிற்று. (கச)

314. மருஉக்கட்டுரைச்சொலின்வழுவின்றதுவே.

(எ - ன்) சிறுபான்மை கடியப்படாதென்ப துணர் - ற்று.

(இ - ள்) அச்சொல்வழு மருஉமொழியாய்வரும் கட்டுரைச் சொல்லோடுங்கூடிவருமெனின் வழுவில்லையா மென்றவாறு.

மன்றல்கமழுமலைநாட்டும்வண்டமிழ்தேர்
நன்றிபயில்பாண்டிநாட்டகத்தும்—வென்றிபயில்
சோணாட்டகத்துந்துயின்மாயனைத்துதிப்பார்
காணார்பிறவிக்கடல். (826)

இதனுள், மலையமானுடென்பது மலைநாடென்றும், பாண்டியனு டென்பது பாண்டிநாடென்றும், சோழனுடென்பது சோணாடென்றும் மருவா யடிப்படவந்த வழக்காற்றால்வந்து வழுவின்றாயிற்று. துறை - கடவுள்வாழ்த்து. (கரு)

315. ஆற்றல்சாலெழுத்தினுளமைத்தசந்தியின்வகை
மாற்றமதுறவழுவுதல்சந்திவழுவே.

(எ - ன்) வைத்தமுறையானே சந்திவழுவாமா றுணர் - ற்று.

(இ - ள்) பெருமையொடுகூடிய வெழுத்திலக்கணத்தினுள் விதிக் கப்பட்ட சந்திகளின்கூறுபாடு நூல்கூறிய கூறுபாட்டானன்றி வாராது செய்யுளகத்து வழுவுதல் சந்திவழு வென்னுங் குற்றமா மென்றவாறு.

பொய்யில்பொருண்மேற்புரிந்தினிநீயோதிலவண்
மெய்யிலெழினலமும்வேறுபோம்—தொய்யிலுறுந்
தோள்பைங்கழையெனலாந்தொல்கவின்போகத்துயில்போம்
வாள்கண்ணிணைக்கெழுதாண்மை. (827)

இதனுள் வாள்போன்றகண்ணிணை வாட்கண்ணிணையென "ளஎ வேற் றுமையிற் றடவு மல்வழி, யவற்றோ டுறழ்வும் வலிவரி னும்" என்னுஞ் சூத்திரத்தான், ளகாரம் டகாரமாக மெய்பிறிதாகமுடியற்பால வழி வாள்கண்ணிணையென வியல்பாய்முடிந்தமையாற் சந்திவழு வாயிற்று. (கரு)

316. ஐயெனுருபுதொகினஃதியல்பாம்.

(எ-ன்) அத்திரிபு திரியாது இயல்பாமிட முணர்-ற்று.

(இ-ள்) இரண்டாம்வேற்றுமைதொக்கபுணர்ச்சியில் வல்லெழுத்து முதன்மொழிவந்துழித் திரியா தியல்பாய்முடியவும்பெறு மென்றவாறு.

அஞ்சொன்மடவாயரங்கத்தமுதமெனு
மஞ்சனையசெவ்விமழைவண்ணன்—கஞ்சமலர்த்
தாள்கண்டார்மான்றனக்கிலக்கானுற்றுளபத்
தோள்கண்டாரென்படார்சொல். (828)

இதனுள், தாள்கண்டார் தோள்கண்டாரென "இயற்கை மருங்கி னியற்கை தோன்றலு, மெய்பிறி தாகிடத் தியற்கை யாதலும்" என்பதனு வியல்பாய்முடிந்தன. திணை - பெண்பாற்கூற்றுக் கைக்கிளை. துறை........... (கஎ)

317. பழுதறப்பகர்ந்தபாட்டினதியல்பு
வழுவுதல்செய்யுள்வழுவெனமொழிப.

(எ-ன்) செய்யுள்வழுவாமா றுணர்-ற்று.

(இ-ள்) அகத்தியன்முதலோர் செய்யுளியலுட் குற்றமறப்பகர்ந்த செய்யுளிலக்கணத்தோடுகூடாது வழுவும்பகுதியாய்வருதல் செய்யுள் வழுவென்றுகூறுவர் பெரியோரென்றவாறு.

முல்லைவெண்ணகைமொய்குழனுமர்வாழ்
மல்லன்மால்வரைக்கெமர்வரைகல்விணையாற்
கூடலருண்மங்கையரைக்கூடிப்பிரிந்துவருந்
தாடவர்க்குவேள்போன்றனித்து. (829)

இஃது ஆசிரிய முதல்வந்து வெண்பாவாய்முடிந்தது. அவ்வாறு முடிதற் கோத்திலாமையால் வழுவாயிற்று. பகுதி - இயற்கை. துறை— இடமணித்துக்கூறி வற்புறுத்தல். (கஅ)

318. தவமுறுபவரவர்போலுனர்சாற்றலு
ணவமுறப்புனைசெயுணடைநவையிலவே.

(எ - ன்) மேற்சொல்லப்பட்ட செய்யுள்வழுச் சிறுபான்மை யொரோவிடங்களுள் வருவன வுளவாமென்று வழுவமைப்புணர்—ற்று.

(இ - ள்) தவசரிதையெய்துமிருடிகளும் அவர்போல்வாருமாகிய முற்றவுணர்ந்த முதறிவுடைப் புலவோரா னவமாகப்பாடப்படுவனவாஞ் செய்யுணடை யாசிரியரால் நீக்கப்படுங் குற்றமில்லையா மென்றவாறு.

நாராயணனேநமவென்றுரைப்பவர்பால்
வாராதொருநாளும்வல்வினைதான்
சாராணெருதலையாய்த்தண்டதரன்சாராவாம்
போதமரயப்பிறப்பு. (830)

இது சவலைவெண்பாட்டு; என்னை? இதனுள் முதலே காசு நாள் மலர் பிறப்பு என்னும் வாய்பாட்டாலிறுது மூவசைச்சீராயிற்ற குறள்வெண்பாவா யதன்பின்னரும் பிறப்பென்னும்வாய்பாட்டாலிற்ற குறள்வெண்பாவாய்த் தனிச்சொலின்றிமுடிந்தமையா லென வறிக. இதற்கு முன்னோர்கூறியசூத்திரம் யாதோவெனின் "தனியிரு குறளாய் நான்கடி யுடைத்தாய்த், தனிவா வில்லது சவலைவெண் பாட்டே" என்ப தென வுணர்க. அன்றியும், "அட்டாலும் பால்சுவையிற் குன்று தள வளாய், நட்டாலு நண்பல்லார் நண்பல்லர், கெட்டாலு மேன்மக்கண் மேன்மக்க ளேசங்கு, சுட்டாலும் வெண்மை தரும்" என்னுஞ் செய்யு ளாலு முணர்க.

எனவே மொழிந்ததைமொழிதன்முதலாகச் செய்யுள்வழுவிருகச் சொல்லப்பட்ட வொன்பதும் பொதுவகையான் வழுவெனக்கூறிய வற்றைத் தனித் தனி விதிச்சூத்திரத்தா னிவ்வாறுவரின் வழுவென விதித்துச் சிறப்புவிதியா னிவ்வாறுவரின் வழுவமைதியா மென்றவா றாயிற்று. (கக)

319. உலகிடங்காலங்கலையெதிரா
மாகமமலைவென்றுரொருவகையுள,

(எ - ன்) இதுவு மொருவகை வழுவாமா றுணர் - ற்று.

(இ - ள்) உலகமலைவு மிடமலைவுங் காலமலைவுங் கலைமலைவும் நியாயமலைவு மாகமமலைவு மென்றுகூறப்படுவனவா மொருவகைமலைவு மாறுளவா மென்றவாறு.

ஏகார மீற்றசை. மலைவென்பதனை யிறுதிவிளக்காக வெங்கு மொட்டுக. மலைவென்பது மாறுபடுதல். எனவே யவையு மொரு வகைவழுவாயிற்று. அஃதேல் ஒழிந்த வழுவுணர்த்துமாறெடுத்த தொகைச்சூத்திரத் தொருவகைப்படப் பதினைந்தெனக்கூறாது இரு வகைத்தாகப் பிரித்துக்கூறியவா றென்னையோவெனின் முன்னரோன்ப துங் குற்றமாதல் பெரும்பான்மையாய்ச் சிறுபான்மை யோரோவிடத் துக் குணமாதலுமுடையவென் றுரைக்கப்படும்; பின்னராறும் ஒருதலை யாகவேகுற்றமாய்ப் பொருந்துமிடத்துப்புணர்துரைவகையா னன்புலவ ராற் சிறுபான்மை மொழியப்படுமென்ப தறிவித்தற்குக்கூறியவா றென வுணர்க. (உ0)

320. ஒழுக்கநடையேயுலகமதாகும்.

(எ - ன்) வைத்தமுறையானே உலகமலைவாமா றுணர் - ற்று.

(இ - ள்) அவ்வாறனுள், பெரியோரா லெடுத்துவழங்கு மொழுக்க நடையே யுலகமென்றுகூறப்படுவதா மென்றவாறு.

எனவே உலகமென்பது மக்கண்மேலு நிலத்தின்மேலு மொழுக்கத் தின்மேலு நிற்கும் பலபொருளொருசொல்லாதலா னிவ்விடத் தொழுக் கத்தையேகோடற் குலகென் றெடுக்கப்பட்டது. அவ்வொழுக்க மெல் லாரும் அறிவுறக்கிடந்தமையா னின்னதென் றெடுத்துரைக்கவேண்டுவ தில்லை. அது மலைதலென்பது உலகத்தொழுகலாற்றோடு மாறுபட்ட வொழுக்கநிகழ்வதாகக் கூறுதல்.

பூமிநடுநின் றுபுணரியேழுந்தாவி
நேமிவரைதனினேர்நின்றமரர்—கோமகிழ்வுற்
றுண்டது றக்கமதைப்பார்த்தவனிபோதுமென
மீண்டவனிவ்வேந்தர்க்குவேந்து. (331)

என வரும். இதனுள் ஒருதீவினுள்வேந்த னெழுதீவையு மெழுகடலையு மேற்பூமியையுங் கடக்கப் பாய்ந்து, சக்கரவாளகிரியி னிமிர்ந்துநின்று,

தேவர்கோனாகிய விந்திரன் களித் தாண்டிருக்குந் தேவலோகத்தையெட்டிப்பார்த்துத் தனக்குப் பூலோகமொன்றுமாண்டிருப்பதேபோதுமென மீண்டுவந்தவனாகு மிந்த வேந்தர்க்குவேந்த னென்று மாறுபடக்கூறினமையா னுலகமலைவாயிற்று. (உக)

321. இடமது மலைநாடியாறெனமூன்றே.

(எ - ன்) வைத்தமுறையானே இடமென்பதனை விரித்துணர்ற்று.

(இ - ள்) இடமென வொன்றாய்நின்றவது மலையும் நாடும் யாறுமென மூன்றா மென்றவாறு.

மலையென்பன : பொதியமு மிமயமு முதலாயின. நாடென்பன : பதினெண்பாடைக்குமுரிய நிலங்கள். யாறென்பன : கங்கையும் பொருநையுங் காவிரியு முதலாயின. இவற்றுள் ஒன்றினுளுரியவாகச்சொன்ன பொருள் பிறிதொன்றனுளுரியவாகச்சொல்லுதல் வழுவாம். அவை,

காரகிலும்பொன்னுங்கவின்செய்மலயத்தினிற்பெண்
ணாரமுதின்மெல்லடிகட்கையனே—பார்பாலாய்ச்
செந்தழல்பாரித்தகடஞ்செப்பினசும்பூரிமயச்
சந்தனச்சோலைத்தடமாந்தான். (832)

எனவும்,

பருவமாமழையுகுபஃறுளிதிரண்டுநீ
ரருவிபாடிமிழ்வளனமர்சிலம்பாநின்
னறைகழல்பணிந்தெழுகலிங்கத்தரசர்
திறைதருகலினத்திரள்வாம்பரிகளு
மாளுவராரியர்மாட்டர்சோனகரோமை
யாளுகவெனத்தாழ்ந்தருள்கடாக்களிற்றுட
னறக்கழிவினராயருஞ்சமத்தெதிர்ந்து
புறக்கொடைபுரிந்தோர்புரந்தநன்னகர்களுங்
கங்கையுள்வலம்புரிகான்றவெண்டாளமுந்
துங்கவண்பொருநைத்துறையுண்மாமணிகளு
மெண்ணிலாதளிப்பினுமிடைவிலையலவாற்
பெண்ணியல்பெருக்கியபோழுதாமெனத்
திருமகளாமெனச்சிறந்தவள்
வருமுலைக்கெவனீவிலைவழங்குவதே. (833)

எனவும் வரும். இவற்றுள், இமயத்திற்குரியன பொதியிலகத்துளவாக வும் பொதியிலகத்துளவானவை யிமயத்துளவாகவும்புணர்த்து மலையிட மலைவாயிற்று. தண்பொருநைக்குரியன கங்கையொடுபுணர்த்துங் கங்கைக்குரியன தண்பொருநையொடுபுணர்த்து மாற்றிடமலைவாயிற்று. மாளுவ மாரியமுதலாயினவற்றிற்குரிய கலிங்கத்தொடுபுணர்த்துங் கலிங் கத்திற்குரிய மாளுவ மாரியமுதலியவற்றொடு புணர்த்தும் நாட்டிட மலைவாயிற்று. (உஉ)

322. சிறுபொழுதொடுபெரும்பொழுதெனக்கால
மறுவகைத்தாமெனவறைந்தனர்புலவர்

(எ - ன்) காலமாமாறு மதன்பகுதியு முணர் - ற்று.

(இ - ள்) காலம், சிறுபொழுதுடன் பெரும்பொழுதென இரண்டு கூறு யொரோவொன் றறுவகைத்தா மென்றுஆசிரியர்கூறினு ரென்றவாறு.

அவற்றுள், சிறுபொழுது: விடியல் உச்சி எற்பாடு மாலை யாமம் வைகறை என ஆறு. பெரும்பொழுது: கார் கூதிர் முன்பனி பின்பனி இளவேனில் வேனில் என ஆறுமாம். அவற்றொடு மலைதலாவது: ஒன்றற்குரிய பூவும் புள்ளும் பொழுதும் தொழிலும் வேறொன்றிற்குரிய வாகப் புணர்த்துரைப்பது.

உம்மையினிரங்தோர்க்கொன்றீயாதோ
ரிம்மையின்வறுமையெண்பவற்றினுக்கிடமென
விரப்பவராயிலமெனவிசைத்ததற்கெதிர்
புரப்பவரிலமெனப்புகலும்வெவ்வுரையினு
நிரப்பெவனெனநிகழ்த்துதனிமித்தமதாய்க்
காப்புரையிஃதெனக்கலுழ்ந்தகண்ணீரினைத்
தடுப்பவர்போற்றுயிலையுந்தடுத்திருகையி
னெடுத்தணைத்தினையலென்றெனையும்வற்புறுத்திப்
போர்வேலவர்தாம்போமுனங்குறித்த
கார்காலத்தினிற்கார்வருமாலையிற்
குயிற்குலங்காமகூகூவெனுநிலை
வெயிற்குலமெனவிருள்வெருளவெண்ணிலவெழப்
புரவலர்முகம்போற்பொற்புமிக்கதுவா
யிரவலர்தாமரையேமகன்மலரே

நின்னிற்பிரியலன்பிரியினாற்றலனென று
மன்னர்பொய்ம்மொழியினுமடங்கலுமடங்கலுஞ்
சுடுஞ்சுடுந்தொடர்ந்துமன்னுயிரை
யடுங்கொடுமையவெனுமவரறிவிலரே. (834)

என வரும். இதனுள், வேனிற்காலத்திற்குரியகுயிலைக் கார்காலத்துடன் புணர்த்தும், பகன்மலர்தாமரையை இரவுமலர்ந்ததாகப் புணர்த்தும், பெரும்பொழுதுஞ் சிறுபொழுதுமாகிய விரண்டுகாலமு மலைவாயிற்று. ()

323. பொருளுமின்பமும்புணர்பொருட்டாகிய நூ
லருளுமெண்ணான்கிரட்டியகலைய துவே.

(எ - ன்) பொதுவகையாற் கலைக ளின்னதுக்குங்கருவியாய்த் தோன்றுமென்பதூஉ மவற்றது தொகையு முணர் - ற்று.

(இ - ள்) கலையென்றுசொல்லப்பட்டவது பொருளு மின்பமு மெய்துதற்கேதுவாய வேதமுதலியநூல்களுட் கூறப்பட்ட வறுபத்து நாலா மென்றவாறு.

ஏகார மீற்றசை. அவற்றொடுமலைதலாவது அவ்வந்நூல்களுட் கூறியபடிகூறாது பிறழக்கூறுதல்.

நாணமில்செய்கைநாடகக்கணிகையர்
மாண்மரபினிலொருவனிதைதன்மைந்தர்க்
குற்றவெண்ணிரண்டடனோங்கியவுருவம்
பெற்றவந்நிலைத்தண்டியம்பிடித்தனளா
யாடலும்பாடலுமமைவிலன்கொளூத்த
நீடலிலயணமொன்றினினிரப்பின்னாய்ப்
படிபுரந்தருளும்பார்த்திபன்முன்னர்க்
கடியாங்கேற்றியகாலைபிற்பிண்டியிற்
பிணையலுங்களையாள்பிணையலிற்பிண்டியு
மணைதரல்களையாதாடலுந்தாள
மெய்யிற்பயிலவுமேதகவுடையிசை
கையிற்பயிலவுங்காலியல்பயிலவு
நடித்தனணடத்துடனுதமுமுன்னூல்
வடித்திடுபான்மையின்மலைத்திடநடத்தின
ளாடல்சான்றோவருடன்
பாடல்சான்றோர்பயிலவைக்களத்தே. (835)

இதனுள், ஐயாண்டிற் றண்டியம்பிடித்து ஏழாண்டியற்றிப் பன்னீ ராண்டினி லவையரங்கேறினாளென்றது மைந்தர்க் கிந்திரியகலின முறுவதென்றுவிசாரிக்கப்பட்ட பதினாறுமாண்டிற் றண்டியம்பிடித்து ஆடலும் பாடலு முற்றக்கல்லா வாசானுடனவை யோராயணத்தின் முற்றக்கற்றனளாய்க் கடியரங்கேறின ளெனவுங் கூறியதன்மேல் ஒற்றை யிற்செய்த கைத்தொழி லிரட்டையிற்புகாமலு மிரட்டையிற்செய்த கைத் தொழி லொற்றையிற்புகாமலுங் கைத்தொழில்காட்டாது மலையக் காட்டினா ளெனவும், இசையை மெய்யினு மிபலைக் கையினுந் தாளத்தைப் பாதத்தினுங் காட்டாது மயங்க நடித்தனளெனவும், அவடானே பின் னொருநாள் நாதமும் நூல்சொன்னபடிநடத்தாது பிறழநடத்தின ளெனவுங் கூறினமையானுங் கலைமலைவாயிற்று. கலையென்பது வித்தை. இசையைப் பிறழநடத்தினாளென்பது நின்றநரம்பிற் கைந்தாவது கிளை யாதலா னதனைப் பகையென்றும், ஆறாவது பகையாதலா னதனைக் கிளையென்றும், நான்காவது நட்பாதலா னதனை யிணையென்றும் இரண் டாவதனைத் தொடுத்தல். என்னை? "ஐந்தா நரம்பிற் பகைவிரவா தாறாகி, வந்த கிளைகொள்ள நான்காகி - முந்தை, யிணைகொண்ட யாழெழுவு மேந் திழைதன் னாவித், துணைவன் புகழே தொடுத்து" எனத் தெண்டி எச்ச வியலிற் கூறியவதனா லறிக. அஃதேல் இந்நூலுட்கூறிய தொனிக்குத் தெண்டிகூறிய வுதாரணமே யுதாரணமாகக்காட்டியவா றென்னையெனின் இந்நூற் கது முதனூலாயதாற் காட்டியதென வுணர்க. அவடானே பின்னொருநா ளென்பது சொல்லெச்சம். அஃதன்றித் தோரியமடந்தை யுவளாடியவவைக்களத் தங்ஙனம் பாடினா ளெனினு மாம். தோரிய மடந்தையாவாள் ஆடிச்செலவுவைத்தவளா யங்ஙன மாடினவள்காலுக்குப் பாடினவள். (உச)

324. அளவையினையபல்பொருட்கமைவினைத்திற முளமுறமதித்துரைப்பதுவேநியாயம்.

(எ-ன்) நியாயமாமாறுணர் - ற்று.

(இ-ள்) ஓரோகாரணங்களா லுலகத்துண்டாயபொருள்கட் கமைக் கப்பட்ட வினையினது கூறுபாட்டைக் காட்சிமுதலாய நால்வகையளவை களாற் குறித்துக் கேட்டோருள்ளத்தமும்படி யுரைப்பது நியாயமா மென்றவாறு.

அவை யறுவகைப்பட்ட சமயங்களோடுங்கூடிய வுலகத்துப்பொருள் களினது தோற்றமு மழிவு மின்னவகையவென்று கூறுதல், அவற்றை

யவரவர்கூறியவாறு கூறாது மாறுபாடாக வுரைத்தல் மலைதலையாம். அது,

அன்றாலிலைத்துயின்றவச்சுதனையல்லாது
பொன்றாப்பொருளெப்புவியினுள்ள—தென்றான்
றனதகத்தாயெவ்வுலகுந்தானடக்கிக்கொண்ட
புனலகத்தாய்நீர்தம்புயன். (836)

என வரும். இதனுள், ஆதிப்பிரமகற்பாந்தத்திற் சகலகடவுளருஞ் சகலான்மாக்களுமழியச் சகலான்மாக்களையு மகிலாண்டகோடிகளையுந் திருவுதரத்தடக்கி யழிவிலாதிருந்தது ஸ்ரீமந்நாராயணனென்று மார்க்கண்ட னுரைத்தா னெனற்பாலதனைப் புனலகத்தாய்நீர்தம் பிரமா வுரைத்தானென்றமையான் நியாயமலைவாயிற்று. அச்சுதன் - அழிவிலாதான். அக்காலத்துப் புனலகத்தாய் நீந்திக் கண்டது மார்க்கண்டன். ஒழிந்தனவு மிவ்வாறே யொட்டிக்கொள்க. (௨௫)

325. அறம்பகர்மனுமுதலாயினவாகமம்.

(எ-ன்) ஆகமமாமாறுணர் - ற்று.

(இ-ள்) அறத்தினதுமார்க்கத்தைக்கூறாநின்ற மனுமுதலாய பதினெண்வகை யறநூலுமே யாகமமா மென்றவாறு.

அவற்றோடு மலைவாவது ; இன்னாரின்னதுசெய்த லற மென்று விதிக்கப்பட்ட விதியிற் பிறழவருவது. அது,

ஒட்டினொடும்பொன்னையொருநிலையாயுட்கோடல்
வீட்டினதின்பத்தைமிகவிரும்ப—லேட்டிருண்மென்
கூந்தலாரின்பமதுட்கொள்ளாமையில்லறத்திற்
றோய்ந்துளார்க்குண்டாஞ்சுகம். (837)

என வரும். இதனுள், துறவறம்பூண்டார்தொழிலை யில்லறம் புரிந்தாரோடுபுணர்த்தமையா னாகமமலைவாயிற்று. (௨௬)

326. நாவலர்நாடகவழக்கினுணர்ந்து
மூவிருமலைவுமொழிவதற்குரிய.

(எ-ன்) எய்திய திகந்துபடாமற் காக்கின்றது.

(இ-ள்) மேற்கூறிய வாறுவகைவழுவு நாடகவழக்கத்தாற் கூறுங்கால் நாவலர்க்குரியவாகக்கொள்வதா மென்றவாறு.

நாடகவழக்கென்பது "நாடக வழக்கினு முலகியல் வழக்கினும், பாடல் சான்ற புலனெறி வழக்கம்" எனத் தொல்காப்பியத்துரைக்கப் பட்ட மூன்றனுள்ளு முதல்வழக்கு. அஃதாவது : இல்பொருளாய்ப் புகழ்ச்சியிடத்துப் புனைந்தவுரையாய்த் தோன்றுவது. என அவ்வாறு புகழ்ச்சியிடத்து நீக்கப்படாவலங்காரமாயே வருமென்பதாம். அவை வருமாறு :—

மேலைமலையிற்புகுதருமாதவனைநிற்றியென
மீளவருவித்துலகின்வாய்
மாலைமதியத்தினுடனேடநியமிப்பனுரு
மாறிவருவிப்பனிமையோ
ராலையநிலத்திடுவன்வேலைவலயத்தையவ
ணாகவுமமைப்பனழகார்
சோலைமலையிற்குடிகொளாதியைநிகர்த்ததொரு
சோதியைவிதிப்பனெளிதே. (838)

இதனுள், சம்பிரதமாதலி னுலகமலைவுப்பொருள்வந்தும் அலங் காரவழுவின்மையாயிற்று. இந்திரசாலமென்பது மிது.

காழகிற்பொழிலுஞ்சந்தனப்பொழிலுங்
கமழ்நறுஞ்சண்பகப்பொழிலுங்
கோழரைக்கமுகுநாளிகேரமும்பொற்
கோங்கும்வேங்கையுமலர்க்குருந்து
மாழையஞ்சுனைமுட்புறக்கனிப்பலவு
மாவுநாகமும்பணைமருதுந்
தாழையுமகிழும்வாழையுங்கரும்புந்
தனித்தனிதழைத்ததெம்மருங்கும். (839)

இது தண்பொருநையுண் மலையிரண்டிற்கும் பிறநிலங்கட்குமுரிய அகிலுஞ் சந்தனமுங் கோங்கும் வேங்கையுங் குருந்தும் புன்னையும் வந்திடமலைவாயும் புகழ்ச்சியிடத்துப் பொருந்தின அலங்காரமாயிற்று.

காவியங்கண்ணியர்காலைபின்மலர்கொய
வாவியுட்குறுகலும்வதனமண்டலத்தினை
மதியெனச்செழுந்தாமரைமலர்குவிதரப்
புதியதண்புனல்படிந்திடப்புகுமாலைபி

லாடவர்முகத்தையுமருஞேதயமென
வேடவிழாம்பலினத்தொடுமுகிழ்க்கும்
பாடல்சான்மருதப்பார்த்திபர்தலைவ
பொழுதுமாறுதனின்புலக்கருப்பொருட்கு
முழுதமுண்மையதான்மொழிபலகிளைத்தெவன்
புலந்தெவன்பொதுவுணின்மார்வங்
கலந்தெவன்றீண்டலெங்காமர்மெல்லணையே. (840)

இதனுள் மாலையிற்குவியுங் கமலங் காலையிற் குவிந்ததாகவும், காலையிற் குவியும் ஆம்பல் மாலையிற்குவிந்ததாகவுங்கூறியது காலமலை வாயினும் புனைந்துரைவகையா னலங்காரமாயிற்று. பகுதி-பரத்தையிற் பிரிதல். துறை - பள்ளியிடத்தூடல்.

வெயினுழைந்தறியாப்பணைமரச்செறிவுள்
வெறிவரிவண்டினமிரைத்துப்
பயின்முகையவிழ்ந்து பனிற்றுதெண்ணறவைப்
பருவமாமழைப்பெயலெனவே
குயிலடங்கலுந்தாம்பொதும்பருளொளிப்பக்
குறிப்பொடுவெளிப்படவிருந்து
மயிலடங்கலுந்தாமகவலுங்களிப்ப
வருந்தனீமதர்மழைக்கண்ணய். (841)

இதனுள், கார்க்குரியன வேனிற்குப்புணர்த்தும் புனைந்துரை வகையா னலங்காரமாயிற்று.

செறியுமிற்றெருறும்புனன்மலர்முதலியசிறப்பின்
குறியமந்திரத்தமைந்துளவுறுப்பினிற்கொடுபோழ்
தறிவிழுந்தவைமுறைதடுமாறினுமவையே
நெறியவாயிறையுட்கொளநிறைக்குநன்னீரார். (842)

இது கலைமலைவாயினும் புனைந்துரைவகையா லலங்காரமாயிற்று.

வண்டுலவுந்தண்டுளபப்பெம்மானையனைத்துயிர்க்கும்வசதியாய
வண்டாண்டபகிரண்டமகத்தடக்குமுழுமுதனீயாயிற்றென்றுற்
டண்டுலகமனைத்தையுமோரடலெயிற்றுவிடந்களந்தபான்மையல்லா
துண்டுமிழ்ந்தபடியயல்கண்டிருந்தவாரெவணிருந்தன்றுண்டவாறே. ()

இது நியாயமலைவாயினும் புனைந்துரைவகையா லலங்காரமாயிற்று.

*இறந்தபல்செனனத்திளைத்ததீவினைநின்
றிடங்கொள்புல்லறிவினரோனுஞ்
சிறந்தவங்கரத்தினியொருபிறவி
சிறக்கவிங்கெமக்கெனத்தியானம்
பிறந்தவணுதித்தோர்வினையுமப்பொழுதே
பிறக்கிடுமவரையென்றாத
ரறந்தவாவுலகத்திருத்துவர்நமனுக்
கழலகத்தமைப்பாக்கணத்தே. (844)

இஃது ஆகமமல்லவாயினும் புனைந்துரைவகையா லலங்காரமாயிற்று.(27)

327. ஆறெனத்தொகைவகையினில்விரித்தவற்றைத்
தேறமெய்பெறுநான்கெனத்தெரிசெய்யுளும்
பாகமோர்மூன்றும்பயில்குணம்பத்து
மாகவெண்ணுன்கிரட்டியபொருளணியு
மடிமொழியெழுத்தினடுக்கினவாக
முடிவுறவகுத்தமூவகைமடக்கு
மூவினப்பாடன்முதலாமுறைமையின்
மேவினவிருபானுறன்மேலாறென
விழுமியமிறைக்கவிவிரித்தபின்னெஞ்சிய
வழுவழுவமைதியுமிவையெனவகுத்து
மொழிந்தவைம்மூன்றுடன்முற்று
தொழிந்தவுங்கோடலொள்ளியோர்கடனே.

இச்சூத்திரம் இந்நூலுளுரைத்தவிலக்கணமனைத்துந்தொகுத் திவ்வணியிலக்கணத்திற்குப் பிறவாறுவருவனவுளவெனினு மவற்றையுந் தழீஇக்கொள்கவெனப் புறநடையுணர்த்துகின்றது.

---

*இச்செய்யுள் பின்வருமாறு குருகாமான்மியத்துக் காணப்படுகிறது.

"இறந்தபல்செனனத்திளைத்ததீவினைநின்றிடங்கொள்புல்லறிவினோரெனினுஞ்
சிறந்தபேரறிவின்மேலொருசெனனஞ்செறிகவாங்கெமக்கெனத்தியானம்
பிறந்தவணுதித்தோர்வினையுமப்பொழுதேபிறக்கிடுமவரையென்றாத
ரறந்தவாவுலகத்திருத்துவர்நமனுமழலகத்தமைப்பனக்கணக்கே."

